தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஒன்று

ஆங்கில மூலம்
எட்கர் தர்ஸ்டன்
தமிழாக்கம்
முனைவர் க. ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

தமிழ்நாடு

அச்சகம்

தென்னிந்தியக்
குலங்களும் குடிகளும்

தொகுதி ஒன்று

CASTES AND TRIBES

OF

SOUTHERN INDIA

அபிசேகர் முதல் பயகர வரை

(Abhisēka to Bayagara)

ஆங்கில மூலம்:

எட்கர் தர்ஸ்டன்

தமிழாக்கம்:

முனைவர் க. இரத்னம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81-7090-079-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 72

திருவள்ளுவராண்டு 2017 ஐப்பசி - நவம்பர் 1986

நூல்	:	தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி ஒன்று
ஆசிரியர்	:	எட்கர் தர்ஸ்டன்
மொழிபெயர்ப்பு	:	க. ரத்னம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மானிடவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 1986 மறுபதிப்பு 2004 - ஜூன் 2010
பக்கம்	:	610
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	- 270.00
படிகள்	:	500
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்

மொழிபெயர்ப்பாசிரியர்

முகவுரை

எட்கர் தர்ஸ்டன் 1885—ஆம் ஆண்டில் சென்னை அருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளராகப் பணியில் அமர்த்தப்பட்டார். கால் நூற்றாண்டுக்காலம் அப்பணியினை அவர் சிறப்புற ஆற்றி வந்துள்ளார் என்பதனை அவர் பணிக் காலத்தில் சென்னை அருங்காட்சியகத்தில் அவர் தொகுத்து வைத்துள்ள காட்சிக்குரிய பொருள்களை நேரில் சென்று காண்பவர் புரிந்துகொள்வர். அக்காலக்கட்டத்தில் இந்திய அரசு, மாநிலங்கள் தங்கள் தங்கள் மாநிலங்களில் இன இயல் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என ஆணை பிறப்பித்தது. சென்னை மாநிலத்தில் அப்பணியின் பொறுப்புக்குரிய அலுவலராக எட்கர் தர்ஸ்டன் நியமிக்கப்பட்டார். அவர் தம்முடைய வழக்கமான பணியோடுகூட இந்த இன இயல் ஆய்வுப் பணியினையும் ஏற்றுத் திறம்பட முடித்ததன் பயனாக விளைந்ததே 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஏழு தொகுதிகளாக 1909 ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூல்.

இன இயல் ஆய்வாளர்களால் பெரிதும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மத்திய இந்தியாவைச் சேர்ந்த கோண்ட் பழங்குடிகள் தொடங்கி, இன்றளவும் இன இயல் ஆய்வாளர்களுக்குப் புதிரானவர்களாக உள்ள தென் தமிழ் நாட்டைச் சேர்ந்த கோட்டை வேளாளர் வரையான இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பழங்

குடியினரையும் சாதியினரையும் பற்றிய விவரங்கள் இதனுள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பணி தொடர்பாகத் தர்ஸ்டன் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று ஆய்வு நடத்தியுள்ளார். பலரோடு கடிதங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு தமக்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்கிக் கொண்டுள்ளார். தம் காலத்திய இன இயல் ஆய்வாளர்களான சர் ஹெர்பர்ட் ரிஸ்லெ முதலியவர்களோடு நேரில் உரையாடிப் பல செய்திகளைக் கேட்டுத் தெளிந்துள்ளார். வழக்கு வரலாறுகள், நாட்டார் கதைகள், புராண இதிகாசங்கள், பண்டை இலக்கியங்கள், கல்வெட்டுகள், பட்டயங்கள், அரசு ஆவணங்கள், மாவட்ட விவரக் குறிப்புகள், கையேடுகள், யகைகள் கணக்கெடுப்பு அறிக்கைகள், வெளிநாட்டார் பயணக் குறிப்புகள், நாளேடுகள், ஆய்வு இதழ்கள் ஆகிய அனைத்திலிருந்தும் இன இயல் மற்றும் சாதிகள் தொடர்பான குறிப்புகளை மிக முயன்று தொகுத்துள்ளார் என்பதனை நூலில் ஆங்காங்கே அடிக்குறிப்பாக அவர் தந்துள்ள மேற்கோள்களே தெளிவுபடுத்தும். ஆங்கிலத்தில் அமைந்துள்ள இந்த நூலினைத் தமிழர் அனைவரும் கற்றுப் பயன்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதன் சில பகுதிகளை மட்டும் சுருக்கித் தமிழில் தி ந ந. சி. கந்தையா பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ளார்.

பழங்குடிகள், மலைவாழ் மக்கள் ஆகியோர் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசும் மாநில அரசுகளும் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வரும் இன்றைய சூழலில் அவர்களைப் பற்றி ப முழு விவரங்களையும் வரலாற்றியல், சமூகவியல், இனஇயல் நோக்கில் அறிந்து கொள்ளுதல் அப்பணிக்குப் பேருதவியாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு உதகமண்டலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மலையின மக்கள் ஆய்வு மையத்தைத் தொடங்கியுள்ள துணைவேந்தர், முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் அத்திட்டத்தின் ஒரு பகுதியாக இத் தொகுதிகளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பொறுப்பினை

என்னிடம் ஒப்படைத்ததோடு பணியினை விரைந்து முடிக்கும்படியும் ஊக்குவித்தார். அவர் என்னிடம் கொண்ட நம்பிக்கைக்கும் இப்பணிக்கு உதவியாக அவ்வப்போது மொழிபெயர்ப்பினைப் பார்வையிட்டு வழங்கிய கருத்துரைகளுக்கும் நன்றியுடையேன்.

இம் மொழிபெயர்ப்புப் பணியில் எனக்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்கிக் கொள்ள நான் நெருங்கியபோதெல்லாம் இன் முகத்தோடு ஐயங்களை நீக்கி உதவிய பேராசிரியர் கே.ஜி.சேஷாத்திரி அவர்கள், நூல்கள் பலவற்றைப் பயன்படுத்திக் கொள்ள உதவியதோடு அவ்வப்பொழுது என்னை ஊக்குவித்த நூலகர் திரு கே.சுப்ரமணியம் அவர்கள், மொழிபெயர்ப்பினை ஆங்காங்கே படித்துப் பார்த்து அது மேலும் செப்பம் பெற நல்ல கருத்துரைகள் வழங்கிய முனைவர் கா.வே.வீராசாமி அவர்கள், இந்த மொழி பெயர்ப்பினை அச்சிடுவதில் பெரும் ஆர்வங்காட்டிக் குறைகளை அங்காங்கே சுட்டிக் காட்டிக் களையச் செய்தபின் மொழிபெயர்ப்பினைப் பதிப்பித்து முடித்துள்ள பதிப்புத் துறை துணை இயக்குநர் திரு கோவை. இளஞ்சேரன் ஆகியோர் என் நன்றிக்கு உரியர்.

தஞ்சாவூர்.
28-11-1986

க.ரத்தினம்

முன்னுரை

1884-இல் வங்காளத்திலுள்ள ஆசியக் கழகத்தினரிடமிருந்து கடனாகப் பெற்ற மனித உடற்கூறினை அளக்க உதவும் கருவிகளுடன் நீலகிரி மலையில் வாழும் தோடர்கள், கோத்தர்கள், படகர்கள் ஆகிய பழங்குடிகளைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டேன். சென்னையில் வெப்பம் நூறு டிகிரியைக் கடக்கும் போதெல்லாம் உயர்ந்த மலைப் பகுதிகளில் மனித இன ஆய்வு தொடங்கிவிடும் எனச் சிலர் இதனைக் கேலி செய்ததும் உண்டு. இத்தகைய சிறு முயற்சியாகத் தொடங்கிய ஆய்வு பின்னர்,

1. சென்னையில் வாழும் பல இனத்தவரைப் பற்றிய ஆய்வு;
2. குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பு வாய்ந்த பழங்குடிகளைப் பற்றி ஆராயும்பொருட்டு அவ்வப்போது சென்னை மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் பயணம்;
3. எனது ஆய்வுகளின் முடிவுகளைத் தெரிவிக்கும் சிறு பிரசுரங்களை வெளியிடுதல்;
4. மனித இன ஆய்வுக்கான ஆய்வுக்கூடம் அமைத்தல்;
5. இப்பகுதிக்குரிய பல இன மக்களின் ஒளிப்படங்களைத் தொகுத்தல்;
6. சொற்பொழிவுகளின்போது விளக்கத்திற்கு உதவும் ஒளி நிழற் படங்கள் (Slides) தயாரித்தல்;
7. பழங்குடிகளின் பாடல்களும் இசைகளும் அடங்கிய ஒலிப்பதிவுகளைத் தொகுத்தல்

எனப் பலதிறப்பட்டனவாக வளர்ந்தது.

1901-இல், இந்திய அரசு, இந்தியா முழுவதிலும் மனித இனவியல் ஆய்வினை விரிவாகவும் முறையாகவும் மேற்கொள்ள அரசின் உரிய ஆணையினைப் பிறப்பித்தது.

ஒவ்வொரு மாநிலத்திலும் தங்களுடைய மற்றப் பணிகளோடு மனித இயல் ஆய்வினை மேற்கொள்ள மேற்பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டனர், எனக்குரிய மற்றப் பணி இங்குள்ள பெரிய அருங்காட்சியகத்தை இயக்குவது. மனித இன இயல் தொடர்பான எனது கண்டாய்தலோடு இது இனிதே இயைந்து செல்லும் பணியாகும். அருங்காட்சியகத்திற்கான மனித இன இயல் பகுதிக்கு வேண்டிய காட்சிப் பொருட்களைச் சேகரிப்பதோடு அத்துறையில் ஆய்வும் ஒருங்கே மேற்கொள்ளப்பட்டது. முதலில் ஐந்தாண்டுகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுப் பின்னர் எட்டாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட இந்தக் கண்டாய்வுக்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ரூ.5,000 ஒதுக்கப்பட்டது. ஒப்புக் கொள்ளப்பட்ட தனி வரைவு நூல்களை வெளியிடவும், ஒரே தன்மைத்தான அனைத்து மாநிலத்தாரிடமும் அடுத்தடுத்துத் தொடுக்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தலுக்குமான ரூ.2,000 உம் இதனுள் அடங்கும். இந்த வினாக்களுக்குரிய விடை முழுதும் திருப்தியாக அமையவில்லை. பின்னர் அவற்றில் கருத்துப் பிழைகளும் கணிப்புப் பிழைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. உரசித் தீ உண்டாக்குவது பற்றிய பின்வரும் தவறான விளக்கம், தவறுகள் எப்படி நிகழ்கின்றன என்பதனை விளக்கும். 'கற்களையும் மரக்கட்டைகளையும் உரசி எப்படி நெருப்பு உண்டாக்குவது என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் முக்கோண வடிவமான ஒரு கல்லையும் நீள் வட்ட வடிவமான ஒரு கல்லையும் எடுத்து அவற்றின் இடையே தேங்காய் நார் அல்லது செம்பினை வைத்து அவற்றை ஒன்றோடு ஒன்று தட்ட உடனே நெருப்பு பற்றிக் கொள்கிறது. மேலும் இரண்டு மரப்பட்டைகளை ஒன்றோடு ஒன்று உரசியும் நெருப்பு உண்டாக்குகிறார்கள்.'

இந்தத் தொகுதிகளை உருவாக்குவதில் எனக்கு உதவிய திரு கே. ரங்காச்சாரி அவர்களின் உழைப்பை மனதாரப் பாராட்டுகிறேன். நான் .ஐரோப்பா சென்றிருந்த சமயம்

கண்டு ஆராயும் இப்பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்தல், மொழி பெயர்ப்பாளராக உதவுதல், நிழற்படமெடுத்தல், ஒலிப்பதிவு செய்தல் ஆகிய பல பணிகளிலும் அவர் பெரிதும் உதவியுள்ளார்.

கொச்சி, திருவாங்கூர் பகுதிக்குரிய பழங்குடிகளும் சாதிகளும் பற்றிய செய்திகளுககு அந்தப் பகுதிகளின் இனவியல் மேற்பார்வையாளர்களான திருவாளர்கள் எல்.கே. அனந்த கிருஷ்ண அய்யருக்கும், என். சுப்ரமணிய அய்யருக்கும் மிக்க நன்றியுடையேன். கொச்சி மாநிலத்திற்குரிய குறிப்புக்கள் கொச்சியிலுள்ள எர்ணாக்குளம் அச்சகத்தில் தனியே பிரசுரிக்கப் பட்டுள்ளன.

இனவியல் கண்டாய்வுத் திட்டத்தில் மேற்பார்வையாளர்கள், ஆய்வாளர்கள் வழியாகவும், நேரிடையாகவும் கேட்டறியும் செய்திகளோடு, 'அலுவலகக் குறிப்புகள், கல்விக் கழகங்களின் இதழ்கள் ஆகியவை தரும் செய்திகளையும் ஆராய்ந்து தொகுக்க வேண்டும்' எனச் செயல் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. பெரும் அளவில் நூலின் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் இந்தக் கட்டளை எவ்வாறு முழுதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்பதனைத் தெளிவாக்கும்.

எனக்கு இப்பணியில் பரந்த மனப்பான்மையோடு உதவிய பெரும் அளவிலான ஐரோப்பிய இந்தியச் செய்தி சேகரிப் பாளர்களுக்குத் தனித்தனியே என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுதல் என்பது இயலாத ஒன்று. எனினும் சர் எச். எ. ஸ்டுவர்ட் ஐ.சி.எஸ். அவர்கள் தொகுத்த மாவட்டக் குறிப்பேடுகளும், அண்மையில் திருவாளர்கள் டபிள்யூ. பிரான்சிஸ், ஐ.சி.எஸ்., எப்.ஆர். ஹெமிங்வே, ஐ.சி.எஸ்., எப்.பி.ஈவான், ஐ.சி.எஸ். ஆகியோரால் தொகுத்து வெளியிடப்பட்ட மாவட்ட விவரத் தொகுதிகளும் எனக்குப் பெரிதும் உதவின என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்ட விவரக் குறிப்பேடுகளைத் தொகுக்கும்போது

செய்திகளைத் தெரிவித்ததுடன் அச்சுப் பிரதிகளைத் திருத்தம் செய்து உதவியமைக்காகத் திரு சி. ஹயவதனராவ் அவர்களுக்கு என் நன்றி உரியது.

உதகமண்டலத்தில் வாழும் திரு எ.டி. டபிள்யூ. பென் தந்துதவிய படகர்கள், குறும்பர்கள், தோடர்கள் தொடர்பான ஒளிப்படங்களுக்கும் நன்றியுடையேன்.

மனிதவியல் உடற்கூறுக் கணக்கெடுப்புக்கள் அனைத்தையும் நானே என் பொறுப்பில் மேற்கொண்டேன். அதனைப் பலர் செய்ய நேரிடின் பிழைகள் மிக ஏதுவாகும் என்பதே அதற்குக் காரணம் என்பதனையும் இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

E.T.

அறிமுகம்

தென் இந்தியாவில் என்னுடைய இந்த இனவியல் கண்டாய்வு மேற்கொள்ளப்பட்ட பெரும் நிலப்பரப்பு சென்னை மாநிலம் எனப் பொதுப்படவும், போர்ட் செயிண்ட் ஜார்ஜ் மாநிலமும் அதைச் சார்ந்த பகுதிகளும் என அரசு முறையிலும் வழங்கப்படுகிறது. இது புதுக்கோட்டை, . பங்கனப்பள்ளி, சாண்டூர் போன்ற சிற்றரசுகளையும், திருவாங்கூர், கொச்சின் அரசுகளையும் உள்ளடக்கிய நிலப்பரப்பாகும். பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டதும், அதனைச் சார்ந்த சிற்றரசுகளுடையதுமான இப்பகுதி 1901-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின் படி 1,43,221 சதுர மைல்களும், 3,86,23,066 மக்கள் தொகையும் கொண்டதாகும். அதே கணக்கெடுப்பின் படி சுதேச அரசுகளான திருவாங்கூர், கொச்சி ஆகியவற்றின் பரப்பும் மக்கள் தொகையும் வருமாறு:–

	பரப்பு சதுர மைல்களில்	மக்கள் தொகை
திருவாங்கூர்	7091	29, 52, 157
கொச்சி	1361	5, 12, 025

சுருக்கமாகக் கூறினால் நான் 1901-இல் மேற்கொண்ட பணியானது 15000 சதுர மைலுக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் வாழும் 40,000,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையும் 300-க்கும் மேற்பட்ட சாதியினரதும், பழங்குடியினரதுமான பழக்கவழக்கங்களையும், உடலமைப்பையும் பற்றிய விவரங்களைத் தொகுத்து எழுதுதலாகும்.

என்னுடைய இப்பணியில், பம்பாய் மாநிலத்தினை மேற்கில் ஒரு பகுதியில் மட்டும் எல்லையாகக் கொண்டு, மற்ற பக்கங்களில் சென்னை மாநிலத்தினால் சூழப்பட்டுள்ள சுதேச அரசான

மைசூர் மாநிலம் மனித இனவியல் ஆய்வு நோக்கில் உள்ளடக்கப் படவில்லையெனினும் மனித உடல் அளவு தொடர்பான ஆய்வு நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் மைசூர் மாநிலத்தில் வாழும் பெரும்பாலான சாதியினரும், பழங்குடியினரும் இரு மாநிலங்களுக்கும் பொதுவானவர்களாக இருப்பதால் மைசூர் மாநில மக்கள் தொடர்பான மனித இனவியல் செய்திகளை இடையிடையே கூறவே செய்துள்ளேன்.

பயிற்சி பெற்ற ஆய்வாளர் பலர் பணி மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கு இடம் தரத் தக்க மேற்கூறிய பெருநிலப்பகுதியில் நானும், எனது உதவியாளரும் மேற்கொண்ட எங்கள் பயணத்தில் ஒரு சிறு பகுதியிலேயே தனிக் கவனம் செலுத்தி எங்கள் ஆய்வினைச் செய்வதைத் தவிர வேறெதுவும் செய்ய இயலாது என்பது தெளிவானதாகும். அண்மையில் தென்னிந்தியாவில் வாழும் மனித இனம் பற்றி மனித இனவியல் நோககிலும் உடற்கூறியல் நோக்கிலும் ஆய்வினை மேற்கொண்ட எனது நண்பர்களான முனைவர் ரிவர்ஸையும், திரு லாபிக்கியூவையும் போல மேலும் பலர் இப்பகுதிக்கு வந்து முக்கியமான சாதிகளையும் பழங்குடிகளையும் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன். அவ்வாறு வருபவர்களுக்கு ஆய்வுக்குச் சாதகமான சூழலினை உருவாக்கித் தர எல்லா உதவிகளையும் நான் செய்து தருவேன். அவர்களுக்குத் தக்க காலநிலையை அமைத்துத்தர இயலாது என்றாலும், நீலகிரியிலும் மற்ற மலைப் பகுதிகளிலும் 112° (F) அளவினதான ஆங்கில நாட்டுக் காலநிலையினை உள்ளிருந்து பணியாற்றும் போது அவர்கள் அனுபவிக்க உதவிட முடியும்.

அன்றாடப் பணிகளில் ஈடுபட்டவனாக ஆண்டில் ஒன்பது மாதங்கள் நான் தலைமை அலுவலகத்தில் சிறைப்பட்டுத் தவித்தபடி இருப்பேன். ஆனால் எஞ்சிய மூன்று மாதங்கள் நான் எனது அலுவல் தொடர்பாக வெளியூர்களில் தங்க வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வேன். அச்சமயத்தில்தான் மனிதஇனப் பரப்பியலும், மனித உடற்கூறு அளவைகளும் தொடர்பான புள்ளி விவரங்கள், அமைதியான தனிமைச் சூழவில் ஒரு காட்டிலோ ஒரு சிற்றூரிலோ தொலைதூரத்திலுள்ள

சிறு நகரத்திலோ திரட்டப்படும். இத்தகைய பயணங்கள், இப் புள்ளி விவரங்களைத் திரட்டுவதில் காலம் கடத்திக் கொண்டு போனால் அதன் விளைவுகள் பின்னர் பெரும் பாதகமாக அமையும் என்பதனைப் புலனாக்கின. பசிபிக் கடல் சார்ந்த பகுதிகளிலும், பிறவிடங்களிலும் போலவே இந்தியாவிலும் நாகரிக வளர்ச்சி மக்களின் தொன்றுதொட்டு வந்த பழக்க வழக்கங்களிலும், வாழ்க்கை முறையிலும் பெரும் மாறுதல்களை நிகழ்த்தியபடி உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டுதான், 'மனிதவியல் ஆய்வுக்குப் பெரும் பொருளும் பலரது உதவியும் கிட்டும் காலம் வரும்போது உலகில் தொன்முது மக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். காட்சியகங்கள் மனிதவியல் தொடர்பான சேகரிப்புக்களை நிறைவு செய்து முடிப்பதில் காலதாமதமின்றிச் செயல்படுவது அவற்றின் பெருங்கடமையாகும்' என்ற நல்லறிவுரை கூறப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும், எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, காட்டில் கிடைக்கும் இலைதழைகளை ஆடையாக அணிந்து, காட்டுப் பன்றிகளையும் கரடிகளையும் போலக் கிழங்கு, தேன் முதலிய காட்டில் கிடைக்கும் இயற்கைப் பொருள்களையே உண்டு, காடுகளில் கண்காணாத வகையில் வாழ்ந்து வந்த பழங்குடிக்ள், இப்பொழுது ஐரோப்பியர்களோடு கொண்ட தொடர்பின் செல்வாக்கால் நாட்டு மனிதர்களாக மாறி வாழ்க்கை நெறி, ஒழுக்க முறை ஆகியவற்றை மாற்றிக் கொண்டதோடு, பேசும் மொழியிலும் கூட மாறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். வயநாட்டைச் சேர்ந்த பணியன்களும், நீலகிரியைச் சார்ந்த இருளர்களும் இன்று மலைத் தோட்டங்களில் கூலிகளாகப் பணி புரிகின்றனர். எருமைகளை மேய்ப்பதை விட்டுப் பள்ளியில் மூன்றாம் வகுப்பில் பயிலும் தோடர் சிறுவன் ஒருவனை நான் பார்த்தேன். தோடர் குல இளமங்கை ஒருத்தி ஜெர்மன் முகம் பார்க்கும் கண்ணாடியால் தன் தலைமுடியைச் சுருளாக்கிக் கொண்டிருந்தாள். தோடன் ஒருவன் இந்துக்களுக்குரிய சமயச் சின்னங்களோடு இந்துக் கோயில் ஒன்றில் ஆண் பிள்ளை வரம் வேண்டி வழிபட்டுக் கொண்டிருந்தான். இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி ஆடையை உடுத்திப் பழகிவிட்ட இவர்கள் இலை ஆடைகளை ஒதுக்கிவிட்டனர்; கூரைகள் தகரத் தகடுகளால்

வேயப்பட்டுள்ளன; தோடர்களுக்கே உரிய உருமாலையின் இடத்தைத் தட்டையான தொப்பிகளும், வண்ணக் குல்லாய் களும் பிடித்து வருகின்றன; நாட்டுத்தாவரச் சாய வகை களைக் கைவிட்டு டின்களில் வரும் 'அனிலின்', 'அலிசாரின்' சாய வகைகள் பயன்படுத்தப்படுகின்றன; எளிமையான நாட்டுப்புற அணிகளை விட்டு, இறக்குமதி செய்யப்பட்ட பாசி களையும், ஐரோப்பாவில் செய்யப்பட்ட போலி மணி வகை களையும் பயன்படுத்துகின்றனர். இவையெல்லாம் மேற்கத்திய, மற்றும் பிற நாகரிகத் தாக்கத்தால் நிகழ்ந்துள்ள மாற்றங்களுக் கான சில சான்றுகளாம்.

மெரியாச் (Meriah) சடங்கு இன்றும் பலருக்கு நினைவில் இருக்கும். அச்சடங்கில் மக்களைப்பலிகொடுக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு அதே பயனைப் பெற இன்று எருமைகளை யும், ஆடுகளையும் பலி கொடுக்கின்றனர். பலி கொடுக்கப்படும் ஆடு, ஓரளவு மனித உருவினை ஒத்ததாகத் தோற்றம் தரும்படி யாக மயிர்நீக்கம் செய்யப்பெறுகின்றது. பின், அதன் நெற்றி யில் இந்து சமயச் சின்ன வண்ணம் தீட்டித், தலையில் தலைப் பாகை கட்டி, உடலை மூடித் துணி அணிவித்துப் பலியிடும் பழக்கம் போன்றவை பற்றிய குறிப்புகளும் என்னிடம் உள்ளன. பார்க்கப் ப்ரவசமூட்டும், ஆனால் காட்டுமிராண்டித் தனமானதான கொக்கியை முதுகில் குத்தித் தேர் இழுக்கும் பழக்கத்திற்குத் தற்போது அரசின் ஆதரவு இல்லை. ஒரு மனித னுக்குப் பதிலாக, உறுதியான இரும்புக் கொக்கிகளை மரத்தா லான மனித உருவத்தின் முதுகில் பொருத்தி, அது ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டுக் கையில் கேடயமும், பட்டாக் கத்தியும் தரப்பட்டு இழுத்துச் செல்லப்படுவதைக் கொஞ்ச காலத்திற்கு முன்பு நான் கண்டேன்.

மனித உடல் சார்ந்த அளவையின் கணக்கெடுப்பின்போது நான் ஓர் அரசு அலுவலர் என்ற உண்மையை மறைக்க இயலாது போனதால் மக்களின் கோழைத்தனம் காரணமாகப் பல இடை யூறுகளை எதிர்ப்பட வேண்டியதாயிற்று. அதிக வரி விதிப்புக்கு ஆளாக்கவும், கொள்ளை நோய்த் தடுப்பு ஊசி குத்தவும், வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தவுமே இது போன்ற அளவுகள்

மேற்கொள்ளப்படுகின்றன - என மக்கள் மருண்டு அஞ்சினர். வய நாட்டைச் சேர்ந்த பெண்கள் அவர்களுள் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்துச் சென்னையில் உள்ளபொருட்காட்சிச் சாலையில்வைக்கப் 'பாடம்' செய்யப் போவதாகக் கருதி அஞ்சினர். காவல் துறையினரால் பழைய சிறு குற்றத்திற்காகத் தேடப்பட்டு வந்த நீலகிரியைச் சார்ந்த இருளன் ஒருவன், அளவைக்காக வந்தானாயினும், உயரத்தை அளக்கும் கருவியினைத் தூக்குப் போடுவதற்கான கருவியாக எண்ணி, அளவினை எடுத்துக் கொள்ள முன்வரவில்லை. போயன் என்ற சொல்லுக்கும் போயர் என்ற சொல்லுக்கும் உள்ள ஒற்றுமை என் பணிக்குப் பெருந் தொல்லையாகிவிட்டது. போயன் என்ற குலப்பட்டப் பெயர் சூடும் ஒட்டர்களிடம் நான் சென்றசமயத்தில் தென் ஆப்பிரிக்காவில் போயர் போர் முடிவுற்றிருந்தது. போரில் இறந்துபட்ட போயர்களின் இடத்தை நிரப்ப நான் அவர்களை அங்கு அனுப்ப வந்திருப்பதாக அவர்கள் அஞ்சினர். மேலும் என் துஷ்டிப் பார்வை பட்டுவிடும் என அஞ்சிக் கோயமுத்தூரில் உள்ள சங்கக் கட்டிடத்திற்காகச் செங்கல் சூளையில் இருந்த கற்களைச் சுடுவதற்காக நான் அங்கிருந்து புறப்படும்வரை சூளையைப் பற்ற வைக்காமல் அதனைத் தள்ளிப் போட்டு விட்டனர். மைசூர் மாநிலத்தில் நான் நெடும் பயணம் மேற்கொண்ட சமயம், அப்பகுதி மக்கள் என்னைத் தென் ஆப்பிரிக்காவில் வேலைக்கு ஆள் சேர்த்து அனுப்பும் படை அதிகாரி எனத் தவறாகப் புரிந்து கொண்டு நான் அவர்கள் ஊர்களுக்குப் போகும் முன்பே தங்கள் ஊர்களைவிட்டு ஓடிவிட்டனர். மூக்கு பொருந்துமிடத்தையும், புருவ மத்தியினையும் குறிக்க 'ஆஸ்பினால்' வெள்ளை வர்ணத்தால் நான் ஒரு சிறு அடையாளம் வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தேன். அந்த அடையாள வர்ணம் கொப்புளத்தை உண்டாக்கும் சக்தி வாய்ந்தது. ஆகையால் நெற்றியில் பல கொப்புளங்களாக உருவாகிப் பின்னர் ஆட்களைக் கடத்திச் செல்ல அடையாளமாக வைக்கப்படுவது என்ற எண்ணம் மக்களிடையே உலவத்தொடங்கியது. என்னைப் போர்ப் படையைச் சேர்ந்த தையல்காரன் என நினைத்துச் சிப்பாய்களுக்கு உடை தயாரிக்கவே நான் தலை, மார்பு, பாதம் ஆகியவற்றின் அளவுகளை எடுப்பதாகவும் கருதினர்.

நகரத்திற்குப் புறத்தே எதிர்பாராது ஒருவன் செத்துவிட்டதானது அப்போது நகரத்தில் தங்கியிருந்த என் கெட்ட பார்வையின் விளைவே எனவும் எண்ணினர். உணவுப் பண்ட விற்பனையாளர்கள் வழக்கமான வாடிக்கையாளர் ஊரைவிட்டு ஓட்டம் பிடித்ததால், பொருள்களின் விலையைக் கூட்ட ஒரு கிறித்துவ சமய போதகர் என்னால் வெண்ணெய் விலை கூடிவிட்டது எனக் குறைபட்டுக் கொண்டார். ஒரு பெருநகருக்கு ஆண்டுத் திருவிழாச் சமயத்தில் நான் சென்றதால் தேரினை ஊர்வலமாக இழுக்க அங்குப் போதிய கூலியாட்கள் கிடைக்கவில்லை. எனவே நான் அந்த ஊரினைவிட்டுப் பிராமணர்கள் தலை அளவினை எடுத்துக்கொள்ளாமலே முன்கூட்டியே புறப்படும்படி நேர்ந்தது. இன்னொரு நகரின் தலைமை அதிகாரி, உள்ளூர் அம்பட்டன் ஊரைவிட்டு ஓடிவிட்டதே தன் முக அலங்கோலத்திற்குக் காரணம் எனக் கூறி, என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். 'லோவிபாண்டின்' நிற அளப்பியில் ஆய்ந்தறியத் தானாகவே முன் வந்த ஒருவன் ஆய்வின் இடையில் அச்சம் மேலிட்டு மேலாடையினை என் காலடியில் வீசிவிட்டுக் கண் காணாதபடி ஓடிவிட்டான். வயதான நகரசபை ஊழியன் ஒருவன் அளவெடுக்கும் சமயத்தில் கதறி அழுதான். எனது தற்காலிக ஆய்வுக்கூடத்தினுள் தன் கணவன் புகும்போது இனித் தன் கணவன் உயிரோடு மீளத் திரும்பான் என்ற பாவனையில் அவன் மனைவி அவனுக்கு இறுதி விடை கொடுத்தாள். முகத்தின் கோணத்தை அளக்க உதவும் கோணமானியை அனைவரும் வெறுத்தனர். சாதியில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி அனைத்துச் சாதியினர் வாயினுள்ளும் வைத்து அளவெடுப்பதால் ஒவ்வொரு முறை பயன்படுத்திய பிறகும் அதனைக் கழுவக் குளத்திற்குத் தூக்கிப்போக வேண்டும். சில சாதியினர் நான் அவர்களைத் தொடுவதால் வரும் தீட்டு நீங்கப் பொழுது விழுமுன் குளித்து முடிக்க வசதியாகப் பிற்பகல் நான்கு மணிக்கு முன்னதாகவே அளவெடுத்து முடிக்கும்படி வேண்டினர்.

அரசுத் துறை சார்ந்த ஒரு மனித இன ஆராய்ச்சியாளனின் பணியின்போது ஏற்பட்ட வருந்தத்தக்க நிகழ்ச்சிகளே மேற்கூறியவை. அளவெடுத்தல் தொடர்பாக நான் பயணம்

மேற்கொண்ட நாள்களில் தொடர்ந்து பணியேதுமின்றி வீணே கழித்த நாள்கள் பல. இதற்கு மாறாகப் பல சாதிகளையும் சேர்ந்த ஐம்பதும் அதற்கும் மேறபட்டவர்கள் கூட்டமாகக் கூடி நான் வழக்கமாகக் கூட்டம் சேர்க்க உடன் கொண்டு செல்லும டாட்டும், அமெரிக்கப் படக்கூத்தும் முடிந்தவுடன் ஒரு சேர கலைந்து சென்றுவிட அவசரப்படுவார்கள். இது போன்ற சமயங்களில் மனித இனவியல் ஆய்வுக்கான குறிப்பு களிலும், வினாக்களிலும், மற்றவற்றிலும் விதிக்கப்பட்டுள்ள முக்கியமான அளவுகளையும், தேவையான சிறு அளவுகளையும் கூட எடுக்க முடியாது போனதும் உண்டு. அச்சமயங்களில் வேறுவழியின்றி அனுபவம் எனக்குக் கற்றுத்தந்ததின் அடிப் படையில், பணிமேற்கொண்டுள்ள அப்பகுதியில் இன்றி யமையாதனவாகத் தேவைப்படும் உடல் வாகு, உயரம், மூக்களவு, தலையின் நீள அகலம் ஆகிய அடிப்படை அளவுகளை மட்டும் எடுத்துக் கொள்வேன். இவற்றிலிருந்து பின்னர்த் தலையினுடைய நீள அகலத் தகவு அளவினைக் கணக்கிட்டுக் கொள்ளுதல் கூடும். சுருட்டுக்களையும், வழக்கில் உள்ள நாணயங்களையும் தாராளமாக வழங்குவதோடு மிகப் பொறு மையுடன் நடந்து கொண்டாலும்கூட மிக அற்பமானதொரு சிறிய அளவை எடுப்பதில்கூட நான் மேற்குறிப்பிட்ட நடை முறைச் சிக்கல்கள் தோன்றிவிடுவதுண்டு. அவ்வாறு வழங்கப் படுபவை பெரும்பாலும் ஏதோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசின் கட்டுப் பாட்டினுள் கொண்டுவர வழங்கப்படுவதாகச் சந்தேகத்தோடே பெற்றுக் கொள்ளப்பட்டன. தனக்கு வழங்கப் பட்ட காசினைத் தேங்காய், பழம், பூவோடுகூடக் கிராம தேவதையின் கோயிலில் காணிக்கையாகச் செலுத்தியதோடு என்னுடைய தீட்டுப்பட்ட காசைச் செலுத்தியதால் கிராம தேவதைக்கு ஏற்பட்ட கோபத்தைத் தணிக்க மற்றுமொரு காசினை மீண்டும் அதே கையோடு காணிக்கை வைத்த ஒருவனைப் பற்றியும் எனக்குத் தெரியும்.

தென்னிந்தியாவிற்குரிய தொன்முதுகுடிகளின் தோற்றமும் பிறப்பிடமும் பற்றி நூல்களிலும், கையேடுகளிலும், அறிக்கை களிலும் பரந்துபடக் காணக்கிடக்கும் பல திறத்தனவான

கருத்துக்களையும் ஒரு சேரத் தொகுத்துக் காண்பது மிக உதவியாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

திராவிடக் குடும்பத்திற்குரிய பண்டைய பெயர் 'தமிழுக்' என்பதனை மனத்திற் கொள்ள வேண்டும். திராவிடம் என்ற ஆட்சியினைக் கால்டுவெல் பயன்படுத்தியதற்குக் காரணம் தமிழ் என்ற சொல்லாட்சி தமிழ் மொழிக்கு உரியவர்களின் மொழிக்காகத் தனித்து ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தினாலேயே ஆம். திராவிட என்பது இந்தியத் தீபகற்பத்தில் (ஐரோப்பிய எழுத்தாளர்களால் தக்காணம் எனக் கூறப்படுவது)[1] வாழும் மக்களைக் குறிக்கும் திரவிட என்ற சமஸ்கிருதச் சொல்லின் பெயரடை வடிவமாகும்.

ஹயேக்கெல் (Haeckel) கூற்றுப்படி[2] பன்னிரண்டு வகைப்பட்டவர்களாக உள்ள மனிதர்களுள் மூன்று பிரிவினர் - திராவிடர்கள் (தக்காணர், சிங்களவர்), நுபியன்கள், மத்திய தரைக்கடற்பகுதியினர் (காக்காசியன்கள், பாங்குகள், செனமட்ஸ், இந்தோ - ஜெர்மானியப் பழங்குடிகள்) – 'பல கூறுகளில் ஒப்புமையுடையவர்களாகக் காணப்படுவது அவர்களிடையே உள்ள நெருங்கிய உறவை உறுதிப்படுத்துவதோடு அவர்களை மற்ற பிரிவினரிடமிருந்து வேறுபடுத்துகின்றது. அக்கூறுகளில் சிறப்பானது மற்றப் பிரிவினரிடம் அடர்த்தியற்றதாகவோ முற்றும் இல்லாததாகவோ உள்ள தாடி இவர்களிடம் நன்கு வளர்ச்சி பெற்றுக் காணப்படுவதாகும். இவர்களுள் பெரும் பகுதியினர் தலைமுடி சுருள்முடியாகும். வேறு கூறுகளும் நாம் இவர்களை ஒரு பெரும்பிரிவில் சுருட்டை முடியினர் (யூப்லோகோமி) என வகைப்படுத்தத் துணை செய்கின்றன. இன்று திராவிடக் குழுவின் பிரதிநிதிகளாக உள்ளவர்கள்

---

1 "Deccan, Hind, Dakhin. Dakhan, dakkina, the Prakr. form of Sskt. dakshina 'the south'; The southern part of India, the Peninsula, and especially the table-land between the Eastern and Western Ghants." Yule and Burnell. Hobson-Jobson.

2 படைப்பு வரலாறு. (History of Creation).

இந்துஸ்தானத்தின் தென் பகுதியிலும் அதனை அடுத்த ஈழத்தின் வடகிழக்கு மலைகளிலும் வாழும் திராவிடப் பழங்குடிகளேயாவர். ஆனால், பண்டைய காலத்தில் இந்த இனம் இந்துஸ்தானம் முழுவதும் பரந்துபட்டுக் கிடந்ததோடு, அதற்கு அப்பாலுள்ள பகுதிகளிலும் வாழ்ந்ததாகத் தெரிகிறது. ஒருசார் அது ஆஸ்திரேலிய மலேசிய இனத்தவரோடு ஒப்புமையுடைய கூறுகளைப் பெற்றிருப்பதோடு, மங்கோலிய இனத்தவரோடும், மத்தியதரைக்கடற் பகுதியினரோடும் ஒப்புடைய கூறுகளையும் கொண்டுள்ளது. இவர்களின் தோல் நிறம் பழுப்பாகவோ கரும் பழுப்பாகவோ உள்ளது. சில பழங்குடிகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தோலைப் பெற்றுள்ளனர். மத்தியதரைக்கடற் பிரிவினரது யூத்திகோமி (Euthycomi) இனத்தவர் முடிபோல் மென்மையாகவோ, உலோடிரிச்சி (Ulotrichi) இனத்தவர் முடிபோல் கம்பளி போன்றதாகவோ இவர்கள் முடி இல்லை. மத்திய தரைக் கடற்பகுதியினரைப் போலவே இவர்களுக்கு நன்கு வளர்ந்த தாடியும் உள்ளது. இவர்கள் முன்தலை பொதுவாக உயர்ந்து காணப்படுகின்றது. மூக்கு நீண்டு பருத்துள்ளது. சற்றே வெளிப்பட்டதாகக் காணும் உதடுகளையும் பெற்றுள்ளனர். தற்போது இவர்கள் மொழி இந்தோ ஜெர்மானியக் கூறுகள் கலந்ததாக இருப்பினும் முதலில் மிகப் பழமையான ஒரு மொழியின் வழிவந்ததாகவே இருந்திருப்பதாகத் தெரிகிறது.'

'உயிரினங்களின் பரப்பும் புலம் பெயர்தலும்' என்ற தலைப்பிலான அத்தியாயத்தில் பூமியின் மேற்பரப்பில் நீரும் நிலமும் மாறி மாறி இடம் பெயர்தலைப் பற்றிக் குறிப்பிடும் போது ஹயேக்கெல், இந்தியப் பெருங்கடல், சுந்தா தீவுகள் தொடங்கி, ஆசியாவின் தென் எல்லையைச் சார்ந்து ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைவரை பரந்துபட்ட கண்டமாக விளங்கியது. பழமையான இந்தக் கண்டத்தினை ஸ்க்லேட்டர் அங்கு வாழ்ந்த குரங்குகளை ஒத்த விலங்குகளைக் குறிககும் வகையில் லெமூரியா எனப் பெயரிட்டழைத்தார். மனித இனத்தின் தோற்றத்தின் தொட்டில் எனக் கருதும் வகையில் இப்பகுதி அதே போது மிகச் சிறப்பானதாகக் கருதப்பட்டது. இது தொடர்பாகக் காலமுறை அடிப்படையில், வாலஸ் (Wallace) மலேசியத் தீவுகள் சார்ந்த பகுதி உண்மையில் இரு வேறுபட்ட இயல்புடையது எனத் தரும் சான்றுகள்

கருதத்தக்கவை. போர்னியோ, ஜாவா, சுமத்திரா ஆகிய பெருந்தீவுகளை உள்ளடக்கிய இந்தோ - மலேயன் தீவுக் கூட்டத்தின் மேற்குப் பகுதி முன்னர் மலாக்கா வழியாக ஆசியாவுடன் தொடர்புடையதாக இருந்திருப்பதோடு சற்று முன்னர் குறிப்பிட்ட லெமூரியாக் கண்டத்துடன்கூட இணைந்ததாக இருந்திருத்தல் சாத்தியமானதே. சிலிபஸ், மோலுக்கா, நியூசினி, சாலமன் தீவுகளை உள்ளடக்கிய அதன் கிழக்குப் பகுதியான ஆஸ்திரேலிய மலேயன் தீவுக் கூட்டம் முன்னர் ஆஸ்திரேலியாவுடன் இணைந்ததாக இருந்திருக்கவேண்டும்."

வாலஸ்[1] போர்னியோவிற்குரிய மரம் ஏறும் டையக்ஸ்கள் பற்றித் தந்துள்ள விளக்கமானது தென்னிந்தியாவிலுள்ள ஆனைமலைக்கும் பொருத்தமானதாகும். அம்மலையில் வாழும் காடருக்கும் அந்த விளக்கம் முழுவதுமாகப் பொருந்துகின்றது[2]. இது குறிப்பிடத்தக்க சிறப்பான மனித இனப் பரப்பியல் பற்றிய உண்மையாகும். காடர்களிடையேயும் திருவாங்கூரைச் சார்ந்த மலை வேடர்களிடையேயும் விசித்திரமான ஒரு பழக்கம் காணப்படுகிறது. இது முன் வெட்டுப் பற்களை ரம்பம் போல வெட்டாது கூர்மையாக உருள் வடிவினதாக வெட்டி விடும் பழக்கம் ஆகும். எனக்குத் தெரிந்தவரை இந்தியத் தீபகற்பத்தில் இந்தப் பழக்கம் வேறு பழங்குடியினரிடையே காணப்படாததாகும். பதினெட்டு வயதை அடைந்த இளைஞர்களுக்கும் பதினாறு வயதினை அடைந்த பெண்களுக்கும் உளி அல்லது புல்லரிவாள் கொண்டு இவ்வாறு பற்களைக் கூர்மையாக்கிவிடும் பழக்கம் காடர்களிடையே மேற்கொள்ளப் படுகிறது. ஸ்கியாட்டும் பாலக்டெனும் மலாய்த் தீபகற்பத்தில் வாழும் ஜாகுன்களிடையே இவ்வாறு பற்களைக் கூர்மையாக்கும் பழக்கம் உண்டெனக் குறித்துள்ளனர்[3]. மலாய்த் தீவுக் கூட்டத்தினரிடையே இது போலப் பற்களைக் கூர்மையாக்குவதும்,

1 மலாய்த் தீவுக் கூட்டம், *1890*. (Malay Archipelago, *1980.*)
2 காடர் என்ற தலைப்பில் பார்க்கவும். (*See:* Kadir.)
3 மலாய்த் தீவுகளில் பிற இனத்தவர், *1906*. (Pagan Races of the Malay Peninsula, *1906.*)

கருமைப்படுத்துவதும் திருமணத்திற்கு முன் இன்றியமையாது நடைபெற வேண்டியதெனத் திரு கிராவ்போர்டு கூறியுள்ளார். ஒரு பெண் பருவம் அடைந்துவிட்டாள் என்பதை அனைவருக்கும் உணர்த்தும் ஓர் உத்தியாக இந்த நிகழ்ச்சி அவர்களிடையே உள்ளது. முனைவர் கே. ட்டி. ப்ரீயூஸ் 'Die Zawherbilder schriften der Negrito in Malaka' என்ற தலைப்பிலான கட்டுரையில்[1] மலாக்காவைச் சார்ந்த நெக்ரிட்டோகளின் மூங்கிலால் செய்யப்பட்ட சீப்புக்களின் மேல் உள்ள உருவ வரைவுகளைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். அவர் அவற்றின் அமைப்பு தென்னிந்தியாவில் வாழும் காடர்களின் சீப்பின் அமைப்போடு வியக்கத்தக்க முறையில் ஒத்திருப்பதை ஒப்புமை காட்டியுள்ளார். அச்சீப்புகளின் அமைப்புப் பற்றி விரிவாக விவரிக்கும் அவர், அவற்றுக்கு நான் விளக்கம் கூறுவது போல அவற்றின் அமைப்பு அலங்காரமாகச் செய்யப்பட்ட வடிவ உருவமைப்புக்கள்[2] எனக் கூறாது அவை தொடரான மறைபொருள் குறியீட்டு வடிவங்கள் எனக் கருதுகின்றனர். ஸ்கியாட்டும் பாலக்டெனும், 'சீமாங் பெண்கள் தங்கள் கூந்தலில் ஒரு குறிப்பிடத்தக்க சீப்பை அணிகின்றனர். அது நோய் நொடி வராமல் பாதுகாக்கும் கவசம் போல அணியப்படுகிறது. இந்தச் சீப்புக்கள் முழுதும் பெரும்பாலும் மூங்கிலாலேயே செய்யப்பட்டுள்ளன. அவை எண்ணிலடங்கா அலங்கார வடிவ உருவமைப்புக் கொண்டவை. இரண்டு சீப்புக்கள் ஒரு போதும் ஒன்றுபோல இரா. ஒவ்வொரு நோய்க்கும் அதற்குரியதான வடிவ உருவ அமைப்பு உண்டு. அதே வடிவ அமைப்பை உடைய சீப்புக்களைப் பங்கள், சீமாங், பேரக்கைச் சார்ந்த சாகய் மற்றும் சீமாங் சகாய் கலப்பினப் பழங் குடிகள் அணிவதாகவும் கூறப்படுகிறது' எனக் குறித்துள்ளனர். திரு வின்சென்ட் என்னிடம் தனக்குத் தெரிந்த வரை காடர் பழங்குடிகளின் சீப்புகள் நோய்நொடிக்குக் காப்பாகக் கருதப் படுவதில்லை எனவும், அவற்றில் பொறிக்கப் பட்டுள்ள அடையாளங்களுக்கு மறை பொருளான குறியீடுகள் ஏதுமில்லை எனவும் கூறியுள்ளார். காடர்குல ஆடவன் சீப்பினைச்

---

1 குளொபஸ், *1899*. (Globus, *1899*.)
2 சென்னை அருங்காட்சியக மடல், (Madras Museum Bull., II 3. 1899)

செய்து, திருமணத்திற்கு முன்போ திருமணச் சடங்கின் இறுதியிலோ தன் மனைவிக்கு அளிப்பது கட்டாயமானதாகும். அழகான சீப்பினைச் செய்து பரிசளித்தவன் எனப் பெயர் பெறுவதில் அந்த இளைஞர்கள் மிக்க ஆர்வம் காட்டுவர். சிலபோது சீப்பில் விசித்திரமான பொருள்களைச் செதுக்குவர். ஒரு கடிகாரத்தின் முன்பக்கத் தோற்றம் தெளிவாகச் செதுக்கப்பட்ட ஒரு சீப்பினைத் திரு. வின்சென்ட் பார்த்துள்ளதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

சகாய் பழங்குடிகளின் இனத் தொடர்புகளைப் பற்றி ஆராயும் ஸ்கியாட்டும், பாலக்டெனும் பின்வருமாறு எழுதுகின்றனர்.[1] "விர்ச்சோ (Virchow) போன்ற மூதறிஞர் தரும் மற்றுமொரு கோட்பாடும் உள்ளது. அவர் அதனைத் தற்காலிகக் கோட்பாடாகக் கொள்ளலாம் என்றே கூறுகின்றார். அது சகாய்ஸ் பழங்குடிகளை, ஈழத்தைச் சார்ந்த வேடர், தமிழக்குறும்பர், மற்றும் ஆஸ்திரேலிய இனங்களின்......... வழிப்பட்ட புறக்கிளையாகலாம் என்பதாகும். இவர்களிடையே உயரத்தில் வேறுபாடு உண்டு. எனினும் இந்நான்கு பிரிவினரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர்கள் உயரம் நீக்ரோட்டா இனத்தவரின் உயரத்தை விட அதிகமானதே. தோலின் நிறமும் இவர்களிடையேகுறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்டதாகவே உள்ளது. ஆனால் தலைமுடியின் பொது இயல்பு ஒரு படித்தாக நீண்டு, கருத்து, அலை அமைப்புடையதாய் உள்ளது. மண்டையோட்டின் அளவோ ஒரு படித்தான நீள் வடிவினதாகவே உள்ளது. இதே அறிஞர்கள் சகாய்ஸ் இனத்தவரைப் பற்றிக் கூறும்பொழுது, "இவர்கள் வேடர்களோடு குறிப்பிடத்தக்க உருவ ஒற்றுமையுடையவர்கள் என்பதற்குச் சான்றாக, வேடர்களோடு நெருங்கிப் பழகி அவர்களோடு வாழ்ந்த சாரசின் சமயச் சகோதரரிடம் சகாய் இனத்தவன் ஒருவன் ஒளிப்படத்தைக் காட்டியபோது முதலில் அதனை வேடன் ஒருவனின் ஒளிப்படமென்றே அவர் கருதினார்" எனக் கூறியுள்ளார். ஸ்கியாட்டும், பாலக்டெனும் வெளியிட்டுள்ள சகாய் இனத்தவர்கள் ஒளிப்படத்தை முதல் முதல் பார்க்க நேர்ந்தபோது காடர்கள், பணியன்கள்,

1 முந்து நூல் (Op. cit.)

குறும்பர்கள் அல்லது பிற தென்னிந்தியக் காட்டுவாசிகள் படத்தைப் பார்ப்பதாகவே நான் எண்ணினேன்.

சென்னை மாநிலத்தின் தென் பகுதியிலிருந்து மலாய் பகுதிக் குடியேற்ற நாடுகளுக்குச் சென்றேறுவோர் பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டியதாகின்றது. 1906-ஆம் ஆண்டில் புறப்பட்ட பயணிகள் பற்றிய விவரங்களைப் பின்வரும் புள்ளிவிவரம் தெரிவிக்கும்:-

சென்னை மாநிலம்		புறப்பட்ட பயணிகள்
தென் ஆர்க்காடு மாவட்டம்	போர்ட் நோவா	2,555
	கடலூர்	588
	பாண்டிச்சேரி................	55
தஞ்சாவூர் மாவட்டம்	நாகப்பட்டினமும் நாகூரும்	45,453
	காரைக்கால்	3,422

'கிலிங் அல்லது கேலிங் என்ற பெயர் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மலேயா சார்ந்த நாடுகளுக்கு வந்து வணிகம் செய்பவர்களுக்கும் அங்கு நிலைத்து விட்டவர்களின் சந்ததியினருக்கும் வழங்கப்படுகிறது. மலாய் மொழியில் இச் சொல் தமிழர்களையே குறிக்கின்றது. இப்பெயர் வங்காள விரிகுடாக் கடற்கரை சார்ந்த தெலுங்குப் பகுதியான வட சர்க்கார் வட்டாரத்தைச் சார்ந்த கலிங்க தேசத்தின் பெயரின் திரிபாகும். முனைவர் என். அனன்டேல், ஒரங் கிலிங் இஸ்லாம் (மதராஸ் கடற்கரை சார்ந்த முஸ்லீம்) என்ற வழக்கு பட்டாணி மலாய் மொழியில் உள்ளதாகக் குறித்துளளார். மதுரை மாவட்டக் கடற்கரை சார்ந்த லப்பை முஸ்லீம்களுள் சிலர் ஊது குழல் (Blow-guns) கொண்டு புறாக்களை வேட்டையாடி வீழ்த்தி வாழ்க்கை நடத்தி வருவதாக அவரே மேலும் குறித்துள்ளார். புகிஸ் வியாபாரிகளிடம் சிங்கப்பூரில் இவர்கள் இந்த ஊது குழல் துப்பாக்கியை வாங்கியதாகச் சில லப்பைகள் என்னிடம் இதுபற்றித் தகவல் தெரிவித்துள்ளனர். இன்னமும் சிறிய அளவில் கீழக்கரைக்கும் பர்மா, குடியேற்ற பகுதியான மலேய, சிங்கப்பூரில் உள்ள துறைமுகங்களுக்கும் இடையே வணிகம்

நடந்தபடி உள்ளது. அது முழுதுமாக முகமதியர்களாலேயே நாட்டுக் கப்பல்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. கீழக் கரையில் உள்ள முகமதியர்களில் பலர் சிங்கப்பூர், பினாங்கு சென்று திரும்பியவர்கள். அவர்களிடையே மலாய் மொழி பேசுபவர்களைச் சாதாரணமாகக் காணலாம். அப்பகுதியில் ஊதுகுழல் துப்பாக்கி 'செங்குத்தான்' எனத் தமிழில் வழங்கப் படுகிறது. இது 'சென்' 'குத்து' எனற தமிழ்ச் சொற்களிலிருந்து மேலே குத்துவது என்ற பொருளில் அமைந்ததாகலாம். மலாய்ச் சொல்லான 'சும்பிட்டன்' என்பதிலிருந்து இச்சொல் வந்த தாகலாம் என ஐயத்திற்கிடமின்றி நான் துணிந்து கூறுவேன்.'

இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் காணப்படும் விலங்கு களுக்கும், செடிகொடிகளுக்கும் இடையே உள்ள மிக நெருக்க மான ஒற்றுமையைச் சான்றாகக் கொண்டு திரு ஆர்.டி,ஓல்தம் (R.D. Oldham) ஒரு காலத்தில் தென் ஆப்ரிக்காவையும்,இந்தியா வையும் இணைத்ததான தொடர்ந்த நிலப்பகுதி இருந்திருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளார். "நேட்டாலில் கடற்கரையில் உள்ள காரு படிவங்களில் பதிந்துள்ள 35 சிப்பி, முள் முட்டைக் கடற்சிப்பி இனங்களுள் 22 தென்னிந்தியச்சீமைச் சுண்ணாம்பு ஊழிக்குரிய பாறைப் படிவங்களில் காணப் படுபவையோடு—பெரும்பாலானவை திருச்சிராப்பள்ளிப் பகுதி யில் காணப்படுபவையோடு—ஒப்புமையுடையன்வாக உள்ளன. மடகாஸ்கரிலுள்ள சீமைச் சுண்ணாம்புப் பாறைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஆறு புதைந்துபோன படிவங்களை 1899-இல் ஆராய்ந்த திரு ஆர்.பி.நீயூட்டன் அவை அரியலூர் பகுதிக்குரிய புதைந்த உயிரினங்களோடு ஒப்புமையுடையன எனக் கூறி யுள்ளார். தென் ஆப்பிரிக்கப் பாறைப் படுகைகள் இந்தியாவில் காணப்படுவன போன்ற கடற்கரை சார்ந்தனவாகவோ, ஆழ மில்லாக் கடற்பகுதிக்குரியனவாகவோ உள்ளன. உயிரின வகை களுள் காணப்படும் அரிய இவ்வொப்புமை இவ்விரண்டு கடற் கரைப் பகுதிகளுக்குமிடையே இருந்த தொடர்பை உறுதிப் படுத்துகின்றது. முன்பே காட்டியபடி தென் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவிற்கும் இடையே மேல், கீழ்க் கோண்ட்வனக் காலப் பகுதியிலிருந்த நிலத் தொடர்பு தொடர்ந்து சுண்ணாம்புக்

கால ஊழியிலும் நீடித்தது என்று கூறவும் இது துணை செய்கின்றது '[1] என அவரே மேலும் எழுதியுள்ளார்.

ஹக்ஸ்லி[2] மனித இனத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்தியுள்ளார். உறுதியான ஆட்டு ரோமத் தன்மை வாய்ந்த முடியை உடைய நீக்ரோக்களைக் கொண்ட உலோட்ரிச்சி; மென்மையான மயிர்கொண்ட லியோட்ரிச்சி என்பனவே அப்பிரிவுகள். ஆஸ்திரேலியப் பிரிவைச் சார்ந்த லியோட்ரிச்சிப் பிரிவினில் திராவிடர்கள் அடங்குவர். 'கறுத்த தோலும், முடியும், கண்களும் அலை அமைப்பிலான கறுத்த மயிரும், நன்கு வளர்ச்சியடைந்துள்ள கண் குழிகளோடு கூடிய மிக நீண்ட மண்டையோடும் உடையவர்கள் ஆஸ்திரேலியாவிலும் தக்காணத்திலும் காணப்படுகின்றனர்' என்பார் அவர். அரசர் கல்லூரியைச் சார்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கான அருங்காட்சியகத்தில் தென்னிந்தியாவைச் சார்ந்த இந்து ஒருவரின் வியக்கத்தக்க மண்டையோடு உள்ளது. அது, கண்டவுடன் அறிந்து கொள்ளும்படியாக நீண்ட வடிவினைக் கொண்டிருப்பதோடு நன்கு வளர்ச்சிபெற்ற கண்விழிக் குழிகளையும் கொண்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள அந்த மண்டையோட்டின் அளவு விவரங்கள் வருமாறு:-

நீளம்	19. 6 செ. மீ.
அகலம்	13. 2 செ. மீ.
மண்டையோட்டின் நீள அகல விகிதம்	67. 3
மூக்கின் உயரம்	4. 8 செ. மீ.
மூக்கின் அகலம்	2. 5 செ மீ.
மூக்கின் நீள அகல விகிதம்	52. 1

சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள தொகுப்பில் காணப்படும் மற்றொரு இந்து சமயத்தவனுடைய நன்கு வளர்ச்சியுற்ற கண்குழிகளையுடைய மண்டையோட்டின் அளவு விவரங்கள் வருமாறு:-

---

1. இந்திய மண்ணியல் கையேடு. இரண்டாம் பதிப்பு, 1893. (Manual of the Geology of India, 2nd Edition, 1893.)
2. Anatomy of Vertebrated Animals, 1871.

நீளம்	...	18. 4 செ. மீ.
அகலம்	...	13. 8 செ. மீ.
மண்டையோட்டின் நீள அகல விகிதம்	...	75
மூக்கின் உயரம்	...	4. 9 செ. மீ.
மூக்கின் அகலம்	...	2. 1 செ. மீ.
மூக்கின் நீள அகல விகிதம்	...	42. 8

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் இறந்துபட்ட சாதி தெரியாத தமிழன் ஒருவனின் மண்டையோட்டினை (ஒளிப்படம் 1–அ.) ஒத்த மண்டையோடுகள் சென்னை அருங்காட்சியகத்தின் தொகுப்பில் இயல்புக்கு மாறாகச் சான்று தரும் வகையில் இருப்பினும் தென்னிந்தியாவைச் சார்ந்த திராவிடப் பழங்குடியினரோ காட்டு வாசிகளோ நீண்ட தாடையுடையவர்கள் என்பதனை நான் ஏற்றுக் கொள்ளேன். பல சாதியினரதும் பழங்குடியினரதுமான சராசரி முகக் கோண அளவு 67°-க்கும் 70°-க்கும் இடைப்பட்டதாகும். எனவே, தென்னிந்தியாவில் வாழ்பவர்கள் செங்குத்தான தாடையுடையவர்கள் என்ற பிரிவிலேயே அடக்கப்பட வேண்டியவர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரில் புதைபொருள் ஆய்வுத் துறையைச் சார்ந்த திரு எ. ரியா (A. Rea) தோண்டியெடுத்த மண்ணாலான தாழிகளில் புதைபட்ட மனிதர்களின் எலும்புகளும் மண்டையோடுகளும் பெரிதும் நல்ல நிலையிலேயே உள்ளன[1]. சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள இவற்றுள், இரண்டு மண்டையோடுகள் நீண்ட தாடைகளையுடையனவாக உள்ளன (ஒளிப்படம் 1–ஆ.) - இந்தப் புதைகுழிகளைப் பற்றி எம். எல். லாபிக்யூ (M. L. Lapicque) பின் வருமாறு எழுதுகிறார்[2]. 'நான் புதைதாழிகளின் மாதிரியாக ஒரு புதைதாழியினை அதனுள்ளே பெரும்பாலும் முழுவதுமாக அப்படியே காணப்படும் சவ அடக்கத்தின் போது உள்ளே இடப்பெறும் பிற பொருள்களுடனும கொண்டு வந்துள்ளேன். மேலும் மிக நல்ல நிலையில்

1 தொல்பொருள் துறை மதிப்பீட்டின் ஆண்டறிக்கை, 1902-03 (Annual Report, Archaeological Survey of India 1902–03.)

2 இயற்கை இயல் அருங்காட்சியக மடல், 1905. (Bull. Museum d' Histoire Natuelle, 1905.)



படம் 1 அ

படம் 1 ஆ

உள்ள, சரியாகக் கணித்தறிய உதவக் கூடிய மண்டை ஓடு ஒன்றையும் உடன் கொண்டு வந்துள்ளேன். அது சென்னையில் உள்ள தொல்பொருளியல் மதிப்பீட்டுத் துறையினரால் முன்பே சேகரிக்கப்பட்டுள்ள தொகுதிகளோடு பொருத்தம் உள்ளதாக மிக நீண்ட மண்டை ஓட்டினை உடையதாக உள்ளது. ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த இனம் திராவிடர்களின் ஆதி முன்னோராதல் வேண்டும் என்பதே என் கருத்து.' ஆதிச்சநல்லூரில் கிடைத்த மிக நல்ல நிலையில் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள ஆறு மண்டையோடுகளின் அளவுகள் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

மண்டை யோட்டின் நீளம் செ. மீ	மண்டை யோட்டின் அகலம் செ. மீ.	மண்டை யோட்டின் நீள அகல விகிதம்
18. 8	12. 4	66. 0
19. 1	12. 7	66. 5
18. 3	12. 4	67. 8
18. 0	12. 2	67. 8
18. 0	12. 8	77. 1
16. 8	13. 1	78. 0

என்னுடைய அளவுக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் விவரங்கள் இன்றும் தமிழ்நாட்டில் நீண்ட மண்டை யோட்டினை உடைய மக்களிடையே மிக நீண்ட மண்டை யோட்டினையுடைய மக்களும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதனைக் காட்டுவனவாம். ஒவ்வொரு சாதியிலும் 40 பேர் அளவெடுக்கப்பட்டதால் பின்வரும் சாதியாருள் 70 - க்கும் குறைவாக உள்ள மண்டையோட்டின் நீள அளவு விகிதங்கள் வருமாறு:-

பள்ளி ... ... 64. 4; 66. 9; 67; 68. 2; 68. 9; 69. 6.

பறையன் 64. 8; 69. 2; 69. 3; 69. 5
வேளாளர் ... ... 67-9. 69. 6.

பிளவர், லைடெக்கர் ஆகியோர் கருத்துப்படி[1] காக்காசியன் அல்லது யூரா ஆப்பிரிக்கன் என அழைக்கப்படும் வெள்ளைப் பிரிவு மனிதன் ஹக்ஸ்லியின் ஜான்தோராய் மெலனொசிராய் (கறுத்த முடியும் கண்களும், வெள்ளையிலிருந்து கறுப்பு வரையான பல நிறத்தோலையும் உடையவர்கள்) பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 'தென் ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையினராக வாழ்வோர் ஆரிய, செமிடிக், ஹமிட்டிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. இந்தியாவைச் சேர்நத திராவிடர்களும் ஈழத்தைச் சேர்ந்த வேடர்களும் இப்பிரிவினரே. ஜப்பானைச் சேர்ந்த அயினாக்களும் சீனாவைச் சேர்ந்த மாத்தீஸ்களும் கூட இப்பிரிவினராகலாம். இந்தோ சீனாவையும், பாலினீஷியத் தீவுகளையும் சேர்ந்த சில பழங்குடிகள் கலப்பினத்தவர்களாகக் காணப்படுவதற்கும், நீக்ரோய்டு இனத்தவர்களாக உள்ள ஆஸ்திரேலிய பழங்குடிகள் வேறுபட்ட தலைமுடி பெற்று விளங்குவதற்கும், மேற்கூறிய இனத்தவர்களோடு கொண்டிருந்த உறவே காரணமாகலாம். தென்னிந்தியப் பழங்குடிகளிடையே பெருமளவிலான நீக்ரோய்ட் கூறுகள் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் நீக்ரோக்களின் வாழ்விடங்களின் எல்லை சார்ந்த பகுதிகளை மேற்கூறிய இனத்தவர்கள் வாழ்விடமாகக் கொண்டதால் அந்த எல்லைப் பகுதிகளில் பல கலப்பினங்கள் தோன்றியுள்ளன' என மெலனொசிராய் பிரிவினர் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்துக்களின் அமைப்பைப் பற்றி விளக்கும் டாபினார்ட்[2] இந்தியத் தீபகற்பத்தின மக்கள் கறுப்பர், மங்கோலியர், ஆரியர் என்ற மூன்றடுக்கு நிலையினராக உள்ளனர் எனக் கூறி

1 வாழ்கின்ற மறைந்த விலங்குகளின் ஆய்வுக்கான முன்னுரை, 1891. (Flower and Lydekker - Introduction to the Study of Mammals living, and extinct, 1981.)
2 Topinard - Anthropology, Translation, 1894.

யுள்ளார். 'முதலாவதான கறுப்பர் இன்று மத்திய இந்திய மலைப்பகுதிகளில் பிகில்ஸ், மகயர்ஸ், காண்ட், கோண்ட் என்ற பெயர்களோடு அடைபட்டுக் கிடக்கின்றனர். தெற்கே ஏனாதியர், குறும்பர்கள் எனப் பெயர் பெற்றுள்ளனர். கறுத்த நிறமும் குள்ளமான உயரமும் தவிரப் பிற பழங்குடிக் கூறு களை இவர்களிடையே காண்பது அரிது. . இந்தியாவில் பயணம் மேற்கொள்பவர்கள் தலைமுடியின ரோம இயல்பு பற்றிப் பேசுவதேயில்லை.[1] இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பழங்குடியினரின் ஒரு பிரிவு மத்திய இந்தியப் பீடபூமியின் வட கிழக்காகவும் மற்றொன்று வடமேற்காகவும் இரு வழிகளில் பரந்துள்ளது. முதற் படையெடுப்பில் எஞ்சியவர்களைத் திராவிட அல்லது தமிழ்ப் பழங்குடிகளிடையேயும் இரண் டாவதில் எஞ்சியவர்களை ஜாட்களிடையேயும் காணலாம். அண்மையில் நடந்த மூன்றாவது ஆரியர்களின் படை யெடுப்பு முன்னைய இரண்டினைக் காட்டிலும் தன்மையில் சிறப்பு வாய்ந்ததாகும்.' தொடர்ந்து நீக்ரோக்களின் உடலமைப்பும், மென்மையான முடியும் கொண்ட ஆஸ்திரேலிய வகையினைப் பற்றிக் குறிப்பிடும் டாபினார்ட் பின்வருமாறு கூறுகின்றார். "ஆஸ்திரேலியப் பழங்குடிகள் வேறோர் இடத்த வரான மென்மையான தலைமுடியைக் கொண்ட ஓர் இனத் திற்கும், உண்மையான நீக்ரோக்களான மண்ணோடு தோன்றிய இனத்திற்கும் உண்டான கலப்பினப் பழங்குடியினராவர். இந்தக் கருதுகோளோடு ஹக்ஸ்லி கொண்டுள்ள கருத்துக்களும் பொருந்துவனவாக உள்ளன. அவர் ஆஸ்திரேலியப் பழங் குடிகள் தக்காணத்தின் பழங்குடிகளோடு ஒத்தமைந்தவர்கள் எனக் கூறுகின்றார். இன்று இந்தியாவில் வாழும் கறுப்பினத் தவர்களின் உடலமைப்பும், திராவிட ஆஸ்திரேலிய மொழிகள் அவற்றுக்கிடையே கொண்டுள்ள பொதுப் பண்புகளும் அவர் களை ஒன்றுபடுத்தி இணைக்கக் கூடிய பாங்கு வாய்ந்தனவாக உள்ளன. இவ்விரு நாடுகளிலும் வழக்கிலுள்ள வளைதடியும், ஆஸ்திரேலியர்களிடையே எஞ்சியுள்ள சாதிப் பிரிவு முறையும் இக்கருத்தை வற்புறுத்த மேலும் உதவுகின்றன."

1. I have only seen one individual with woolly hair in Southern India, and he was of mixed Tamil and African parentage.

தஞ்சாவூர் போர்க்கருவிகள் கிடங்கிலிருந்து பெற்ற தந்தத்தாலான இரண்டு வளைதடிகளும், மரத்தாலான ஒரு வளைதடியும் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன (நிழற்படம் -2). அவை தொடர்பாகப் புதுக்கோட்டை அரசின் திவான் எனக்குப் பின்வருமாறு எழுதித் தெரிவித்துள்ளார். 'வளரி அல்லது வளை தடி பொதுவாகச் சேகேறிய மரத்தால் செய்யப்படும் குறுகலான போர்க் கருவியாகும். சிலபோது அதனை இரும்பாலும் செய்வர். ஒரு முனையை விட மற்றொரு முனை பெருத்துக் கனமாகிக் கூர்மையாக்கப்பட்ட பிறைவடிவமான கருவி அது. அதைப் பயன்படுத்துவதில் பயிற்சி பெற்றவர்கள் அதன் சிறுத்த முனையினைப் பிடித்து அதற்கு வேகம் சேர்ப்பதற்காகச் சில முறை தலைக்குமேல் தூக்கிச் சுழற்றிக் குறிவைத்து வீழ்த்த விரும்பும் பொருளின் மீது விட்டெறிவர். ஒரே வீச்சில் சிறு விலங்குகளை - சில சமயங்களில் மனிதர்களைக்கூட - வீழ்த்தக் கூடிய வளைதடி வீச்சில் பயிற்சி பெற்றவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் தற்பொழுது புதுக்கோட்டையில் அது போன்ற திறமையாளர்கள் இல்லை. இன்னமும் முயல், காட்டுக் கோழி போன்றவற்றைச் சில சமயங்களில் வளைதடியால் வேட்டையாடுகின்றனர். எனினும் அதனுடைய காலம் முடிந்துவிட்டதாகவே கொள்ளவேண்டும். சென்ற நூற்றாண்டில் பாளையக்காரரோடு நடைபெற்ற போரில் இக்கருவி குறிப்பிடத்தக்க பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது. மறக் குடியினரான கள்ளர், மறவர் ஆகியோர் வழிவந்தவர்களின் இல்லப் பொருட்களோடு இன்று அது அவர்களுடைய பழைய வீர மரபின் அடையாளமாக மரியாதைக்குரிய சின்னமாகப் பிற போர்ப்படைக்கலங்களுடன் வழிபாட்டு அறையில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. தொழிற் கருவிகளுக்கும் போர்க் கருவிகளுக்கும் வழிபாடாற்றும் ஆயுதபூசை போனற நாள்களில் வெளியே எடுத்துத் துருப் போகச் சுரண்டிக் கழுவி வழிபாட்டில் வைத்தபின், மீண்டும் அது உடனே உரிய இடத்தில் சேர்க்கப்படுகிறது. கள்ளர்களின் திருமணத்தின்போது மணமகனும் மணமகளும் மணமகன் இல்லத்தை அடைந்தவுடன் இரு குடும்பத்தினரும் வளைதடியை மாற்றிக் கொண்டபின் திருமண விருந்து நடத்தப்படுகிறது. இப்பொழுது இந்தப் பழக்கமும் வேகமாக மாறி வருகின்றது.



படம் 2

எனினும், 'வளைதடியை அனுப்பி மணமகளை அழைத்துவா.' என்ற பழமொழி இன்னமும் மக்கள் வழக்கில் உள்ளது.

மடகாஸ்கருக்குச் சற்று மேற்கே ஆப்பிரிக்காவில் ஏடன் முனைப் பகுதியில் மென்மையான தலைமுடியோடு கூடிய பழங் குடிகள் இருப்பதாகவும், அல்லது அத்தகைய முடியையுடைய பலர் சோமலிகளுடனும், காலாக்களுடனும் கலந்திருப்பதாகவும்' டாபினார்ட் (Topinard) கூறுவதுமுக்கிய மானதொரு சான்றாக வும் காட்டப்பட்டுள்ளது.[1] அப்பகுதி எம். ப்ரோகா (M. Broca) நீக்ரோக்கள் அல்லாத, இப்பொழுது அழிந்துபட்டு விட்ட கறுப்பு நிறமுடைய பழங்குடிகள் ஒரு காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்ற பகுதியாகலாம். 1898-இல் பிரிட்டீஸ் அசோசியேசன் கூட்டத்தில் பேசிய திரு டபிள்யூ. க்ருக்கெ (W. Crooke) திராவிடர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறிய இனத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர் எனக் கூறியுள்ளார். ஆரியர்கள் இந்திய மண்ணுக்குரிய பழங்குடி களைக் காடுகளுக்கு ஓட்டியவர்கள் என்ற கோட்பாடு அவருக்கு உடன்பாடில்லை. ஆரியர்கள் இந்தியாவில் இன அடிப்படையில் புகுந்து வேரூன்றவில்லையென்றும், சமூகத்தாக்கத்தையே நிகழ்த்தியுள்ளனர் என்றும், இந்தியா ஆரியர்களிடமிருந்து பழக்கவழக்கங்களையே ஏற்று கொண்டுள்ளதென்றும் அவர் கருதுகின்றார். இக்கண்ணோட்டத்தின்படி பார்த்தால் பழங்குடி களின் பழக்க வழக்கங்களை மாற்றி உயர்த்தியதால் இந்தியா வில் பழங்குடிகளே மேனிலையடைந்தனர் எனக் கொள்ள வேண்டியதாகின்றது. தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாது பழமையை இறுகப் பற்றியிருந்தவர்களாயிருந்த பழங்குடி இனத்தவர்களே வாழ்க்கைப் போரில் இன்று பின் தங்கியவர்களாக உள்ளனர்.

ஆஸ்திரேலியர்களைப் பற்றிய ஒரு கட்டுரையில் பேராசிரியர் ஆர்.சீமோன் (R. Semon) பின்வருமாறு எழுதுகின்றார்:- 'ஆஸ்தி ரேலியப் பழங்குடிகளின் முன்னோர்கள் இந்தக் கண்டத்தில் குடிபுகுந்த காலத்தில், இன்றைய அவர்களுடைய சந்ததியினர் இருப்பதைக் காட்டிலும் தாழ்ந்த நாகரிகப் படியிலே இருந்

---

1 முந்தநூல். (Op.cit.)

திருக்க வேண்டுமெனக் கொள்ளலாம். எப்பொழுது, எப்படி அந்தக் குடியேற்றம் நிகழ்ந்தது என்பதைக் கணித்தல் கடினமானதாகும். ஆஸ்திரேலியர்களோடு நெருங்கிய உறவுடைய இனத்தவர் யாரும் அந்தப் பகுதியின் சுற்றுப் பக்கத்து நிலப் பகுதிகளில் வாழ்வதாகத் தெரியவில்லை. நியூகினியைச் சேர்ந்த பப்யுனான்கள், சுந்தரத் தீவுகளைச் சேர்ந்த மாலாய்கள், நியூஜிலாந்தைச் சேர்ந்த மாக்ரீஸ் ஆகிய அவர்களுடைய பக்கத்து நாட்டவர்கள் அவர்களோடு எந்த வகையிலும் தொடர்புடையவர்களாக இல்லை. இதற்கு மாறாகத் தொலைதூரத்தில் வாழும் திராவிடப் பழங்குடிகளிடையே ஆஸ்திரேலியர்களை மனித இன இயல் நோக்கில் நினைவுபடுத்தும் கூறுகள் கொண்டவர்களைக் காண்கிறோம். தக்காண மலைகளில் வாழும் பழங்குடிகளுக்கும், ஆஸ்திரேலியர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைப் பற்றி ஹக்ஸ்லி, கூறுவதாவது:- புதிதாகத் துறைமுகத்தை அடையும் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த கப்பலின் மாலுமிகளிடையே எதிர்ப்படும் சாதாரணக் கூலியொருவனின் மேலாடைகளைக் களைந்துவிடின்-அவன் மண்டையோடும், கீழ்த்தாடையும் பருங்கூறு இயல்பு சற்றுக் குறைந்ததாயிருப்பினும்-அவன் ஆஸ்திரேலியன் எனச் சுலபமாகக் கருதக் கூடியனவாகத் தோற்றம் தருவான்.' இரு இனத்தவர்களின் இடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும் ஹக்ஸிலியின் இக்கூற்றுச் சற்று மிகைப்பட்டதாகும். மண்டையோட்டின் அமைப்பு, உடலியற் கூறுகள், அலை வடிவிலான சுருண்ட தலைமுடி போன்ற பல பொதுப் பண்புகள் ஆஸ்திரேலியர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை நாம் சந்தேகப்பட இயலாதபடி நம் முன் நிலைநிறுத்துவனவாயுள்ளன. நோரிஸ், பிளீக், கால்டுவெல் போன்றவர்களின் ஆராய்ச்சியால் ஆஸ்திரேலிய மொழிக்கும், திராவிட மொழிகளுக்கும் இடையே உள்ள பலதிறப்பட்ட ஒற்றுமைக் கூறுகள் கண்டறியப்பட்டுள்ளதால் இது மேலும் சிறப்பு வாய்ந்த கோட்பாடாகின்றது. இவ்விரு மொழி பேசுவோர் வாழும் பகுதிகள் ஒன்றுகொன்று தொலை தூரத்ததாய், இடையே இவ்விரு மொழிகளோடும் எவ்வகையிலும் தொடர்பில்லாத பிறமொழி வழங்கும் பகுதிகளையுடையதாய் இருப்பதும் இங்குக் கருதற்குரியது. ஆஸ்திரேலி

யர்களும், திராவிடர்களும் ஒரு பெருங்கிளையில் பிரிந்த இரு இனத்தவர் என்ற கோட்பாட்டினை இவையெல்லாம் வலி யுறுத்துவனவாம். பால் (Paul), பிரிட்ஜ் சராசின் (Fritz Sarasin) ஆகியோரது தீவிர ஆய்வின்படி திராவிடர்களுக்கு முந்தைய பழங்குடிகள் எனக் கருதப்படும் ஈழத்தைச் சேர்ந்த வேடர்கள் இந்தப் பெருங்கிளையிலிருந்து பிரிந்த இனத்தவரே. அவ்வாறு பிரிந்தபோது அவர்கள் வளர்ச்சிப்படிநிலையில் மிகத் தாழ்ந் தவர்களாக இருந்ததோடு பின்னர் குறிப்பிடத்தக்க எத்தகைய நாகரிக வளர்ச்சியும் அடையவில்லை.'

ஆஸ்திரேலியர் பற்றிய சிக்கலினை ஆராயும்போது திரு ஏ. ஹெச். கியானி[1] (Keane) ஆஸ்திரேலியா ஆப்பிரிக்காக் கண்டத்துடன் இணைந்து ஒரே நிலப்பகுதியாக அதன் வடக்கு, வடமேற்குப் பகுதிகளை இந்தியாவிலிருந்தும், பாபுவாசியா விலிருந்தும் தரை வழியாக அடையக்கூடியதாக இருந்த காலத் தைக் குறிப்பிடுகிறார். "அத்தகைய தரைவழியான குடியேற்றம் நிகழ்ந்ததென்பதில் ஐயப்பாடு ஏதும் இல்லை. மறைத்திரு ஜான் மாத்யூ[2] அக் கண்டம் முதலில் நியூசினியிலிருந்தோ அல்லது மலேயாவிலிருந்தோ வந்த பப்புவான் இனத்தைச் சார்ந்த மண்ணுக்குரிய மக்களைக் கொண்டதாயிருந்தது என்றும், இவ் வாறு முதலில் அங்குப் புகுந்த பழங்குடிகள் பின்னர் அப்போது ஆஸ்திரேலியாவோடு தொடர்ந்து நிலப்பகுதியாக இணைந் திருந்த டாஸ்மேனியாவிற்குச் சென்றுவிட்டவர்களாதல் வேண் டும் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு இன்று முற்றும் அழிந்து போய்விட்ட டாஸ் மேனியர்களே ஆஸ்திரேலியாவின் தொல் பழங்குடியின் பிரதிநிதிகள் ஆவர். இந்தியாவிலிருந்து பின்னர் ஊடுருவிய பழங்குடிகளால் ஆஸ்திரேலியாவில் தங்கிவிட்ட பகுதி யினர் நிலையில் மாற்றம் பெற்றனரேயன்றி முழுவதுமாக அழிக் கப் படவில்லை. இவ்வாறு மாற்றம் பெற்ற இன்றைய ஆஸ்தி ரேலியப் பழங்குடிகளே வேறு பல மனித இன இயல் அறிஞர்

1 மனித இன இயல் நூல் – 1896. (Ethnology, 1896.)

2 நியூசௌத்வேல்ஸ் ராயல் கழகத்தின் நடைமுறைக் குறிப்புகள், XXXIII, பகுதி III. (Proc. R. Soc. N. S. Wales XXIII, Part III.)

கள் ஒப்புமை கண்டது போலத் திராவிடர்களோடு ஒப்புமை யுடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். 'ஆஸ்திரேலியப் பழங் குடிகள் இன்றும் காட்டுமிராண்டிகளாக இருக்கத் திராவிடர்கள் நாகரிகத்தில் நெடுங்காலமாகவே பெரிதும் வளர்ச்சியடைந்தவர் களாக இலக்கியமும் பெற்றிருக்கும் நிலை காணப்படினும், இவ்விரு இனத்தவர்களிடையேயும் வளைதடி பெற்றிருத்தல் போன்ற சமூக வரையறை சார்ந்த பல பண்புகளில் நெருக்கமான ஒற்றுமை காணப்படுவது தன்னியல்பில் உருவாக்கப்பட்டிருந் தால் அன்றி, இந்தியாவிலிருந்து புகுத்தப்பட்டிருக்கக் கூடும் எனப் புலனாகின்றது என அவரே குறிப்பிடுகின்றார். எனினும், உடற்கூறுகளில் அவர்களிடையே காணப்படும் மாறுபாடுகள் தனித்த ஓர் இனத்தொடு நிகழ்ந்த இனச்சேர்க்கையால் நிகழ்ந் தவை என்று முடிவு கூறமுடியாத வகையில் பெரும் அளவின தாக இருப்பதால், கிழக்குத் தீவுக் கூட்டங்களிலிருந்து மலாய் இனத்தவர்களும் வந்து இவர்களோடு கலந்தவர்களாதல் வேண் டும் எனக் கொள்ளலாம். அவ்வாறு கொள்ளும்போது பல மாவட்டங்களில் பழங்குடிகள் சுருளற்ற நீண்ட முடியுடைய ராதற்கும், பல மலாய்ச் சொற்கள் பழங்குடிகளின் மொழிகளில் புகுந்திருப்பதற்கும் விளக்கம் பெற்றவர்களாவோம்." என்று கூறும் திரு எ. ஹெச். கியானி பின்னர்த் திராவிடர்களின் இனவியல் தொடர்பு பற்றிக் கூறும்போது, "அவர்கள் ஆரியம் பேசும் இந்துக்களுக்கு முற்பட்டவர்களாயினும், தக்காணத்தின் மண்ணில் தோன்றிய மக்களாக அவர்களைக் கொள்ள முடியாது. அவர்களுக்கு முன்பே நீக்ரோ இனத்தின் சிதைந்த வடிவினரெனக் கருதத் தகும் கறுப்பு மக்கள் அப்பகுதியில் புகுந்துள்ளனர்" எனக் கூறியுள்ளார்.

சென்னை மாநில நிர்வாகக் கையேட்டில் முனைவர் சி. மெக்லீன் (C. Macleane) பின் வருமாறு எழுதுகிறார்:-"தென்னிந் தியாவின் தெளிவான வரலாறு ஆரிய, திராவிட அரசு முறை களிடையே நல்ல கலப்பு தோன்றிவிட்ட காலத்திற்குப் பிறகே தொடங்குகின்றது. அதற்கு முன்னர் மூன்று கட்டங்களில் வர லாற்று உணர்வினைக் கண்டறியக்கூடியதாயுள்ளது. அவற்றுள் முதலாவது திராவிடர்களுக்கு முற்பட்ட மண்ணுக்குரிய மாந்தர்

களின் காலப் பகுதி; இரண்டாவது ஆரியர்கள் தங்களுடைய சமயத்தையும் பழக்க வழக்கங்களையும் திராவிடர்கள் மேல் திணிக்கத் தொடங்கிய காலப் பகுதி- தொன்மையான அரசுகள் குலமரபுகள் குறிக்கும் காலக்கட்டம் இக்காலப் பகுதியைச் சார்ந்ததாகாது. மனித அறிவுக்கு எட்டிய கால எல்லைப் பகுதியிலேயே தென்னிந்தியா ஆசியாவுடன் இணைந்த பகுதி யாக விளங்கவில்லையென மண் நூலும் களத்துறைக் கருப் பொருள் நூலும் ஒருசேர உறுதிப்படுத்துகின்றன. இப்பகுதி யைத் தன்னோடு இணைத்துக் கொண்டதாக இருந்த ஒரு பெரிய தென் கண்டம் இத்தகு மாற்றத்தோடு கூடிய சூழலை நிலைநிறுத்த இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ள வேண்டிய வர்களாகின்றோம். வடமொழிப் புராணப் படைப்பாளர்களின் படைப்புக்கள், ஈழத்துப் பௌத்தர்கள் கதைகள், மேற்குக் கடற் கரை சார்ந்த பகுதிகளில் மக்களிடையே வாய்மொழியாக வழங் கும் வழக்குகள் ஆகிய அனைத்தையும் ஒரு சேர எண்ணிப் பார்க்கும்போது தீபகற்பத்தின் முனையில், ஈழத்திற்கு இடைப் பட்ட பகுதியில் அண்மைக்கால எல்லையில் ஒரு பெரும் மாற் றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டுவன வாக உள்ளன[1]. இனவியல் தொடர்பான ஆய்வுகள், ஒரு காலக் கட்டத்தில் வடநிலப் பகுதியையும், மத்தியதரைக் கடற்பகுதி யையும் சார்ந்த மூதாதையர் இன்று தாங்கள் வாழும் நிலப் பகுதிக்குச் செல்லத் தென்னிந்தியாவை வழித்தடமாகக் கொண் டனர் என்று கொள்ள இடம் தருகின்றன. உலகத்தின் பிற பகுதிகளில் காணப்படுவது போலவே இந்நிலப் பகுதியிலும் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்டனவான எச்சங்கள் இங்கு வாழ்ந்த மக்கள் திருத்தம் பெறாக் கற்கருவிகள், திருத்தம் பெற்ற கற்கருவிகள், தொடக்ககாலத்தவையான உலோகக் கருவிகள் ஆகியவற்றை அடுத்தடுத்துப் பயன்படுத்தியுள்ளனர்

1 மூன்றாம் ஊழிக் காலத்தில் ஈழமும் தென்னிந்தியாவும் நெடுங்காலம் பெருங் கடற்பரப்பினை வட எல்லையாகக் கொண்டு பெரியதொரு தென் கண் டத்தின் அல்லது தீவின் பகுதியாக இருந்திருத்தல் கூடும். மலேசியாவுடன் இவை கொண்டுள்ள பல திறப்பட்ட குறிப்பிடத்தக்க ஒற்றுமைக் கூறுகள் பின் னொரு காலத்தில் மலேசியா இவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கக் கூடும் என்பதனை உணர்த்துவதாகும் - வாலஸ், விலங்குகளின் புவிப் பரப்பியல்-1876.

என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன[1]. இப்பழங்குடிகள் புதைகுழிகள் உள்ள இடங்களைக் காட்டும் கற்குவியல்களை யும், கல்வட்டங்களையும் விட்டுச் சென்றுள்ளனர். இவை திரா விடர்கள் காலத்துக்கு முற்பட்டவை எனப் பொது வரையறை செய்யப்பட்டுள்ளது. பழமனாயிர் (Palmanair) மேட்டு நிலத்தவர் களான மலைக் குறும்பர்களான மிகப் பழங்காலத்தவர்க ளாகக் அறியப்படும் தமுழியன்களிலிருந்து பிரிந்து சென்றவர்க ளான இவர்கள், இன்றுங்கூடக் கல்லால் மூடும் புதைதழிகளை அமைக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். திருநெல்வேலி யைச் சார்ந்த இறந்தாரைப் புதைக்கும் தாழிகள் திராவிடர் காலத்தனவாகவோ அதற்கு முற்பட்ட காலத்தனவாகவோ இருக்கலாம் ....ஓரின மக்களின் தனித்தன்மையை விளக்கும் வகையில் அவர்கள் பேசும் மொழியின் இலக்கண . அமைப்பு பல சான்றுகளைத் தரும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே என்றாலும், இக்கோணத்திலிருந்து பார்க்கும்போதும் இவர்க ளுக்கு முன்பு வாழ்ந்தஇனத்தவர்களுக்கும், இவர்களுக்குமிடையே நெடுங்காலம் கழிந்திருக்க வேண்டுமெனக் கருதவேண்டி யுள்ளது. தென்னிந்திய மக்கள் மொழியின் இலக்கணப் பாங்கு திராவிடர்களுக்கே உரிய தனித்தன்மை வாய்ந்ததாயிருப்பதோடு அதில் வேற்றுமொழிக் கூறுகள் கலந்திருந்தன என்று கூறுவ தற்கான தடயங்கள் ஏதும் காணப்படவில்லை. மலைகளிலும், காடுகளிலும் வாழும் பழங்குடிகளும், பறையர்களும் திராவிட மொழிக்குரிய இலக்கணத்தையும் வினைவிகுதிகளையுமே பயன் படுத்துகின்றனர். ... . மிகத் தொன்மை வாய்ந்த இனத்தவரான திராவிடர்கள் மனித இன ஊக வரலாற்றில் தாழ்வற்றதொரு இடத்தையே பெறுகின்றனர். ஆஸ்திரேலிய மண்ணுக்குரிய மாந்தர்களோடு அவர்கள் உறவு கொண்டுள்ள னர். அது அவர்கள் அத் தொல்குடியினரோடு உடன் தோன் றிய தொன்மை உடையவர்கள் என்பதனைக் காட்டும்.

---

1 *See* Breeks, Primative Tribes and Monuments of the Nilgiris;
Phillips, Tumuli of Salem District;
Rea, Prehistoric Burial Places in South India;
R. Bruce Foote, Catalogues of the Prehistoric - Antiquities in the Madras Museum, etc.

புதுமையானதொரு பகுப்பு முறையைக் கையாண்டு முனைவர் மெக்லீன் தென் இந்தியாவில் திராவிடர்களுக்கு முற்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் யாரும் இன்று இல்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில், திராவிடர்களைத் தமிழருக்கு முற்பட்டவர்கள், தமிழர்கள் என்று ஒரு குடும்பத்தின் இரு கிளைகளாகப் பிரித்து, அதில் ஒன்று மற்றதைவிடத் தொன்மையுடையதாக அல்லது நாகரிக முதிர்ச்சி அற்றதாகக் கொண்டுள்ளார்.

நான் மேலே எடுத்துக் காட்டிய பகுதிகள், அறிஞர் பலர் ஆஸ்திரேலியர்களுக்கும், திராவிடர்களுக்கும் இருந்த தொடர்பு பற்றிய கோட்பாட்டினை எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாகக் கருதினார்கள் என்பதற்குப் போதுமான சான்றுகளாகும். இதனை விட்டு மேலே செல்லும் முன் இது தொடர்பான முக்கியமானதொரு சான்றாகத் திராவிட, ஆஸ்திரேலிய இனத்தவர்களை மண்டையோட்டியல் வழிநின்று ஆராய்ந்த சர் வில்லியம் டர்னர் அவர்களின் கருத்துக்களையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.[1] 'தகுதி வாய்ந்த பல மனித இனவியல் அறிஞர்கள், ஆஸ்திரேலியா மண்ணுக்குரிய மாந்தர்கள் திராவிடர்களோடு தொடர்புடையவர்கள் என்று கருதுகின்றார்கள். சிலர் திராவிடர்களைக் காகசியப் பெரும்பிரிவிலிருந்து பிரிந்த கிளை வழியினராகக் கருதி அவர்களை ஐரோப்பியர்களோடு தொடர்புடையவர்களாகக் கொள்கின்றனர். இந்த இரண்டு கருதுகோள்களும் தகுந்த அடிப்படையில் அமைந்தவையாகக் கொண்டால் ஆஸ்திரேலிய மண்ணின்மாந்தர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே இந்தியாவைச் சார்ந்த திராவிடர்களைப் பாலமாக வைத்துத் தொடர்புடையவர்களாகக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இரு இனத்தவர்களும் பொதுவான வேர்ச் சொற்களிலிருந்து பெற்றுப் பயன்படுத்தும் பொதுச் சொற்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும், ஆஸ்திரேலியருக்குரித்தான பூமராங்கை ஒத்த வளைதடியைத் திராவிடப் பழங்குடிகளும் பயன்படுத்துவதைக் கொண்டும்,

---

1 இந்தியப் பேரரசு சார்ந்த மக்களின் மண்டையோட்டியல் தொடர்பான கட்டுரைகள். பகுதி இரண்டு. சோட்டாநாக்பூர், மத்திய இந்தியா, ஒரியர், வேடர், நீலகிரி வாழ் பழங்குடி மக்கள், 1900.

முந்தைய கடல் ஊழியில் இந்திய தீபக்குறை ஆஸ்திரேலியாவோ டும் மலேசியாத் தீவுக்கூட்டங்களோடும் நிலவழித் தொடர்பு கொண்டிருக்கக் கூடும் என்பதன் அடிப்படையிலும் இவ்விரு இனத்தவர்களின் உடலமைப்பிடையே காணப்படும் சில ஒற் றுமை கூறுகளைக் கருதியும் திராவிடர்களுக்கும் ஆஸ்திரேலியர் களுக்கும் இடையே உறவு இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆஸ்திரேலியர்களும், திராவிடர்களும் கறுப்பு என்று கருதக் கூடிய பழுப்பு நிறத் தோலும், கறுத்த கண்களும், அலை போலவோ சுருண்டோ கறுத்து, நீண்டு, வளர்ந்த தலைமுடி யும், தடித்த உதடுகளும், தாழ்ந்து அகன்ற மூக்குப் புழைகளும், - ஆஸ்திரேலியர்கள் திராவிடர்களைக் காட்டிலும் சற்று உயர மாயினும் - பொதுவாகக் குறுகிய வடிவமும் உடையவர்களாகத் தங்களிடையே பல ஒற்றுமைக் கூறுகளைக் கொண்டுள்ளனர். அவர்களுடைய மண்டையோடுகளை ஒப்பிடும்போது அவை சில கூறுகளில் ஒற்றுமையுடையனவாகவும், மற்றவற்றில் வேறுபட் டும் காணப்படுகின்றன. இரு இனங்களிலும் மண்டையோடு, அமைப்பிலும், நீள அகல விகிதத்திலும் நீண்டே காணப்படு கிறது. எனினும் ஆஸ்திரேலியர்களின் மண்டையோடு பரும னாக இருப்பதோடு, புறவெளி திராவிடர்களுடையதைக் காட்டிலும் முரடாகவும் ஒழுங்கற்றதாயுமுள்ளது. முன் மண்டை பின்னோக்கியதாகத் தாழ்ச்சியுற்றுள்ளது. பின் மண்டை யோட்டின் இணைவு பள்ளமுடையதாகப் பக்க மண்டையின் வெளிப்புறச் சரிவு செங்குத்து இயல்புடையத்தாகவும் இருக்கும். ஆஸ்திரேலியர்களின் பொதுவான முக அமைப்பு நெற்றிப் பொட்டும் நெற்றிப் பக்கங்களும் புடைப்பாகவும், மூக்கு விட்டம் அழுந்தியும், தாடைகள் பருத்திருப்பதோடு மேல் தாடை சில போதுகுறிப்பிடத்தக்க வகையில் சற்று முன் நோக்கி நீண்ட தாயும் இருக்கக் காணலாம். சர் வால்டர் டர்னர் அளவெடுத்த பன்னிரண்டு திராவிடர்களின் மண்டையோடுகளில் ஏழில் தாடைகள் செங்குத்து அமைப்புடையனவாகவும், நான்கில் இடைப்பட்ட தாடைக் கூறுகளைக் கொண்டனவாகவும், ஒன்று மட்டும் தாடை நீண்டும் காணப்பட்டது. எனவே திராவிடர் கள் பொதுவாகச் செங்குத்தான தாடைகளை உடையவர்க

ளென்பது தெளிவாகின்றது.[1] சர் வில்லியம் டர்னர் முடிந்தமுடி பாக, "ஆஸ்திரேலியர்களதும் திராவிடர்களதுமான மண்டை யோடுகளைக் கருததோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததில் ஒன்றை மற்றதினின்றும் வேறுபடுத்திக் காண்பதில் எத்தகைய இடர்ப் பாட்டினையும் எதிர் நோக்கத் தேவையிருக்கவில்லை. இரு இனத்தவர்களின் மண்டையோடுகளின் பண்புகளைத் தொட ராக ஆராய்ந்த நான் அவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு டைய இனத்தவர் என்று கூற எத்தகைய சான்றுகளையும் அந்த ஆய்வின் வழிக் கண்டேனில்லை" எனக் கூறுகின்றார்.

தென்னிந்தியத் திராவிடர்களைச் சர் ஹெர்பர்ட் ரிஸ்லே[2] சித்தியத் திராவிடர்கள், திராவிடர்கள் என இரு பெரும்பிரி வினராகப் பிரித்து அப் பிரிவுகளைப் பற்றிப் பின்வருமாறு தொகுத்துக் கூறுகிறார்:-

'சித்தியத் திராவிடர்கள் மேற்கிந்தியாவைச் சார்ந்த மராட்டிய பிராமணர்கள், குண்பிகள், குடகர்கள் ஆகிய சித்திய திராவிட இனக் கூறுகளின் கலப்புடையவர்கள். இவர்களுள் மேல்சாதிப் பிரிவினர் சித்தியக் கூறுகள் மிக்கவர்களாகவும், கீழ்ச்சாதியினர் திராவிடக் கூறுகள் மிக்கவர்களாகவும் உள்ள னர். இவர்கள் அகன்ற தலையும், சிவந்த உடல் நிறமும், முகத்தில் அடர்த்தியற்ற முடியும், சராசரியான உடல்வாகும், குறிப்பிடத்தக்க அளவு நீளாது ஆனால் ஓரளவு செம்மையாக அமைந்த மூக்கும் உடையவர்கள்.

'திராவிடப் பிரிவினைச் சார்ந்தவர்கள் ஈழம் தொடங்கிக் கங்கையாறுவரை, சென்னை, ஹைதராபாத், மத்திய மாகா ணம், மத்திய இந்தியா, சோட்டா நாகபூர் ஆகிய பகுதிகள் அனைத்திலும் காணப்படுகின்றனர். இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் தென்னிந்திய மலைகளைச் சார்ந்த பணியன்களும்,

1 சர் வில்லியம் டர்னரின் பிறமண்டையோட்டுப் பண்புகளுக்கு நான் வாசகர்களை மூலக்கட்டுரையைப் பார்க்குமாறு பரிந்துரைக்கிறேன்.

2 இந்திய மக்கள், 1908. (The people of India, 1908.)

சோட்டா நாகபூரைச் சார்ந்த சண்டாளர்களுமாவார். ஆரிய, சித்திய, மங்கோலியக் கூறுகளின் கலப்பால் இந்தியாவிற்குரிய மக்களின் அடிப்படை அமைப்புகளில் பல்வேறு நிலைகளில் மாற்றங்கள் நிகழ்ந்திருத்தல் கூடும். குறிப்பிடத்தக்க முன்மாதிரி களில் உடல்வாகு குட்டையாகச் சராசரிக்குக் குறைவாகவும், தோலின் நிறம் 'நல்ல பழுப்பாகக் கறுப்பு எனக் கொள்ளத் தக்கதாகவும், தலை முடி அடர்ந்து சிலபோது சுருளும் இயல்பு டையதாயும், கண்கள் கறுத்தும், தலை நீண்டும், மூக்கு பருத்தும் சிலபோது அடிப்பகுதி அழுந்தியும் இருப்பினும் முகம் தட்டை யாகத் தோற்றம் தராத தோற்றத்துடன் இருக்கவும் காண லாம்.'

சித்தியத் திராவிடர்கள் தலை அகன்றும், திராவிடர்கள் தலை நீண்டும் இருப்பதாக ரிஸ்லே கண்டு குறித்துள்ளார். சில ஆண்டு களுக்கு முன்பு டெய்லர், 'ஆரியர்களின் தோற்றம்[1] என்ற கட்டு ரையில் கூறியிருந்தது தொடர்பாகத் திராவிடர்களின் தலை பற்றித் தோடர்கள்குறுகிய தலையையுடைய திராவிடர்களோடு முற்றும் மாறுபட்டவர்களாக நன்கு நீண்ட தலையுடையவர் களாக உள்ளனர்' என எழுதப்பட்டுள்ளது. சென்னை மாநிலத் தின் தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் அளவுகளின் அடிப்படையில் நான் சில புள்ளி விவரங்களைப் பிரசுரித்துள் ளேன்.[2] அந்தப் புள்ளி விவரங்களின்படி, '19 வேறுபட்ட சாதி களையும், பழங்குடிகளையும் சார்ந்த 639 பேர்களின் சராசரி மண்டையோட்டின் விகிதத் தகவு அளவு 74.1 ஆகும். 639 பேர் களுள் 19 பேர்களின் அளவே 80-க்கும் அதிகமாக உள்ளது. இதுகாறும் திராவிடர்கள் அவர்களுடைய மண்டை யோட்டின் விகிதத்தகவு அளவு எண்ணின் மிகை காரணமாகத் தோடர் களிலிருந்தும் வேறுபட்டவர்களாகக் கருதப்பட்டார்கள். இந்தத் தகவு அளவு எண்களின்படி தோடர்கள் திராவிடர் களைவிட மிகையானதகவு அளவு எண்ணுடையவர்களா கின்றனர்.' தமிழ், மலையாள மக்களிடையே நான் வழக்கமாக மேற்கொள்ளும் பயணங்களில் மண்டையோட்டின் விகிதத்

---

1 தற்கால அறிவியல் பற்றிய தொடர் கட்டுரைகள். (Comtemporary Science Series.)

2 சென்னை அருங்காட்சியகச் செய்தி மடல் II 3,1899 (Madras Museum Bull.II, 3, 1899.)

தகவு அளவு குறைந்தவர்களோ மிகுந்தவர்களோ பெரும் எண்ணிக்கையினராக இருக்கக் காண்பதுண்டு. கன்னட மொழி பேசும் மக்கள் வாழும் பெல்லாரி வட்டத்தில் நான் மேற்கொண்ட பயணத்தின் போது திராவிட இனத்தவர்களின் தலையளவுகளின் அமைப்பு என் எதிர்பார்ப்பைப் போல எளிமையாக முடிவு மேற்கொள்ளக் கூடியதாக இல்லை. தலையளவுகளின் கணக்கெடுப்புகள் இப்பொழுது துளு, கன்னட, தெலுங்கு, மலையாள, தமிழ்ச் சமவெளிப் பகுதிகளிலும் தொகுக்கப் பெற்றவற்றை உள்ளடக்கியுள்ளதோடு திராவிடரல்லாத சில மராட்டிய இனத்தவர்களையும் கொண்டுள்ளது. பட்டியலில் (பக்கம் 6) காணும் ஒப்பு நோக்க உதவக் கூடிய வகையில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதிகளையும் சேர்ந்த மக்களின் மாதிரித் தலை அளவு விவரங்களைத் தந்துள்ளேன்.

மண்டையோடுகளிடையேயுள்ள வேறுபடு பண்புகளை மேலும் தெளிவு படுத்தும் வகையில் ஐந்து மொழி பேசும் பகுதிகளில் தொகுக்கப்பட்ட மண்டையோட்டின் தகவு அளவுகள் அடுத்து வரும் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன:-

(அ) துளு – பில்லவர்

71 X X
72 X X
73 X
74
75
76 X X X
77 X X X X X
78 X X X X X X
79 X X
80 X X .... சராசரி
81 X X X
82 X X X X X
83 X X X X X X X X
84 X X X X

சாதிப் பிரிவு	பேசும் மொழி	அளவெடுக்கப் பட்டோர் எண்ணிக்கை	தகவு அளவு விகித எண்			தகவு அளவு 80 உம் அதற்கு மேலும் பெற்றிருந்தோர் எண்ணிக்கை
			சராசரி செ. மீ.	மேலளவு செ. மீ.	கீழளவு செ. மீ.	
சுகுன் சாலே	மராத்தி	30	82.2	90.0	73.9	21
சுக சாலே	,,	30	81.8	88.2	76.1	22
வக்கலிகர்	கன்னடம்	50	81.7	93.8	72.5	27
பில்லவர்	துளு	50	80.1	91.5	71.0	27
ரங்காரி	மராத்தி	30	79.8	92.2	70.7	14
அகசர்	கன்னடம்	40	78.5	85.7	73.2	13
பண்டர்	துளு	40	78.0	91.2	70.8	12
காபு	தெலுங்கு	49	78.0	87.6	71.6	16
தோட்ட பலிசர்	,,	39	78.0	86.0	73.3	10
போயர்	,,	50	77.9	89.2	70.5	14
தாச பணசிகர்	கன்னடம்	40	77.8	86.2	72.0	11
காணீகர்	,,	50	77.6	85.9	70.5	11
கோல்லர்	தெலுங்கு	60	77.5	89.3	70.1	9
குருபர்	கன்னடம்	50	77.3	83.9	69.6	10
பெஸ்தர்	தெலுங்கு	60	77.1	85.1	70.5	9
பள்ளர்	தமிழ்	50	75.9	87.0	70.1	6
முக்குவன்	மலையாளம்	40	75.1	83.5	68.6	2
நாயர்	,,	40	74.4	81.9	70.0	1
வேளாளர்	தமிழ்	40	74.1	81.1	67.9	2
அகமுடையார்	,,	40	74.0	80.9	66·7	1
பறையன்	,,	40	73.6	78.3	64.8	–
பள்ளி	,,	40	73.0	80.0	64.4	1
தியன்	மலையாளம்	40	73.0	88.9	68.6	–

85 X X X X
86 X
87
88
89
90 X
91 X

(ஆ) கன்னடம் - வக்கலிகர்

73 X
74
75 X X
76 X X X X X
77 X X
78 X X X X X
79 X X X X X X X
80 X X
81 X X X
82 X X X ... சராசரி
83 X X X
84 X X
85 X X X
86 X X X
87 X X
88 X X
89 X
90
91 X
92 X
93 X
94 X

(இ) தெலுங்கு - காபு

72 X

73 X X X X X X X
74 X X
75 X X
76 X X X X X X X
77 X X X X X X
78 X ... ... சராசரி
79 X X X X
80 X X X X
81 X X X X X X X
82 X X
83 X X X
84 X
85 X
86
87
88 X

(ஈ) வேளாளர் – தமிழ்

68 X
69
70 X
71 X X X
72 X X X X X X X X X X
73 X X X X X X X
74 X X ... ... சராசரி
75 X X X X X X
76 X X X
77 X X X X
78
79
80 X X
81 X

(உ) மலையாளம் – நாயர்

70	X X	
71	X X X X X	
72	X X X X X	
73	X X X X X X	
74	X	சராசரி
75	X X X X X X	
76	X X X X	
77	X X X X	
78	X X X	
79	X X	
80		
81		
82	X	

இந்த அட்டவணைகள் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட வகுப்பாரின் மண்டையோட்டின் தகவு அளவு களிடையே உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துவதோடு தமிழ், மலையாளப் பிரிவுகளைச் சேர்ந்த வகுப்பாரிடையே துளு, கன்னடம், தெலுங்கு பிரிவைச் சேர்ந்த வகுப்பாரிடையே இருப்பதைக் காட்டிலும் மிகுதியான சீர்மைத்தானதாக இருப் பதைத் தெளிவுபடுத்துவனவாம். முதலிரு பிரிவுகளிலும், சரா சரியை இரு மருங்கிலும் சார்ந்திருப்பவர்கள் எண்ணிக்கை பின்னுள்ள மூன்று பிரிவுகளில் உள்ளதைக் காட்டிலும் அதிக மாக இருக்கின்றது. இங்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதி களிடையே காணப்படும் குறிப்பிடத்தக்க மண்டையோட்டு வேறுபர்ட்டு அளவுகளுக்குக் காரணமாக நான் புதிய கோட் பாடு எதையும் கூறும் நெருக்கடியை ஏற்படுத்தப் போவதில்லை. எனினும் இதனால் பெறப்படும் பின்வரும் கருத்தறிவிப்பினைக் கூறுதல் கடனாகும். வடபகுதி மக்களின் மண்டையோட்டு அளவுகளைத் தற்போதுள்ளதான குறுகிய தலையுடையவர்களா

கக் கருதும்படி செய்த செல்வாக்கு எதுவாயினும், அது தமிழ் மலையாளம் ஆகிய மொழிகள் பேசும் தென் பகுதி நாடுகளில் தன் ஆற்றலைச் செலுத்த இயலவில்லையாகையால் அப்பகுதிகளில் திராவிடர்கள் நீண்ட அல்லது நீண்ட அளவினைச் சார்ந்த அளவுடையவர்களாகவே உள்ளனர்.

போகிற போக்கில் மண்டையோட்டமைப்பின் தகவு அளவின் நிலைத்த தன்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக நீலகிரியில் வாழும் தோடர்களிடையே எடுத்த அளவுகளின் விவரங்களைக் கீழே தருகின்றேன்:–

69 X X
70 X X X X X X X
71 X X X X X X X X X X X
72 X X X X X X X
73 X X X X X X X X X X X X X X ......சராசரி
74 X X X X X X X X X X X X X X X X X X X X
75 X X X X X X X X X
76 X X X X X X
77 X
78 X
79 X
80
81 X

பல பிரிவினைச் சேர்ந்த பிராமணர்களின் மண்டையோடுகளின் வகை பற்றிய விவரங்களையும் தெளிவின் பொருட்டு அடுத்துத் தருகின்றேன். பக்கம் 41–இல் உள்ள அட்டவணையில் துளு, கன்னடம், மராத்தி, தமிழ், மலையாளம் பிராமணர்களின் மண்டையோட்டு அளவு விவரங்களைத் தந்துள்ளேன்.

பிராமணர்களின் வகுப்பு	மொழி	ஆய்வுக்குள்ளானோர் எண்ணிக்கை	மண்டையோட்டுத் தகவு அளவு எண்			தகவு அளவு எண் 80 - க்கும் மேற்சென்ற தடவைகள்
			சராசரி	மேலளவு	கீழளவு	
சிவாலியர்	துளு	30	80.4	96.4	69.4	17
மண்டையர்	கன்னடம்	50	80.2	88.2	69.8	31
கர்நாடகர்	,,	60	78.4	89.5	69.8	19
ஸ்மார்த்தர் (தேசஸ்த்தர்)	மராத்தி*	43	76.9	87.1	71.0	9
தமிழர் (சென்னை நகரம்)	தமிழ்	40	76.5	84.0	69.0	3
நம்பூத்ரிகள்	மலையாளம்†	–	76.3	–	–	–
பட்டர்	தமிழ்‡	25	74.5	81.4	69.1	2

* பம்பாய் மாநிலத்தைச் சேர்ந்த பல்வேறு பிராமணர்களின் மண்டையோட்டுத் தகவு அளவு எண் சர். எச். ரிஸ்லே தந்துதவியபடி:- தேசஸ்த்த 76.9, கொங்கஸ்தர் 77.3 சேன் (அ) சரஸ்வட் 79, நாகர் 79.7

† Measured by Mr. F. Fawcett.

‡ பட்டர்கள் மலபாரை வாழ்விடமாகக் கொண்ட தமிழ்ப் பிராமணர்கள்.

(அ) துளு - சிவாலி

69	X
70	
71	
72	X
73	X
74	
75	
76	X X X X
77	
78	X X X
79	X X X
80	X X . . . . சராசரி
81	X X X
82	X X X X
83	X X
84	X X
85	
86	X
87	X
88	X
89	X
90	
91	
92	
93	
94	
95	
96	X

(ஆ) கன்னட - கர்நாடக ஸ்மார்த்தர்ம்

70	X
71	X X
72	X X
73	X X

74 X X X X X X
75 X X X
76 X X X X
77 X X X X X
78 X X X X X X X X X X......சராசரி
79 X X
80 X X X X X
81 X X X X
82 X X X X
83 X X
84 X X
85 X
86 X
87 X
88 X X
89 X

(இ) தமிழ் - சென்னை நகரம்

69 X
70 X X
71 X
72 X
73 X X
74 X X X
75 X X X X
76 X X X X .... சராசரி
77 X X X X X X
78 X X X X X
79 X X X X X
80 X X
81
82 X X
83 X
84 X

(ஈ) தமிழ் - பட்டர்

69 X X
70 X
71 X X X

72 X X
73 X X X
74 .... சராசரி
75 X X X X
76 X X X X X
77
78 X
79 X X
80 X
81 X

மேற்கண்ட எண்ணிக்கைகளின் அடிப்படையில் நோக்கும் போது அதன் முடிபுகள் பிராமணர்களும முன்பு கணிப்புக் குள்ளான பிற பிரிவினரைப் போலே தென் மாவட்டப் பகுதி களைக் காட்டிலும் வட மாவட்டப் பகுதிகளில் உயர்ந்த மண்டையோட்டுத் தகவு அளவினைப் பெற்றுள்ளார்கள் என்ப தனை உறுதிப்படுத்தக் காணலாம்.

சிவாலி பிராமணர்கள் அகிக்ஷேத்திராவிலிருந்து துளு நாட் டிற்கு வந்தவர்கள் என்ற வழக்கு உள்ளது. ஆண்கள் மட்டுமே தங்கள் ஊரைவிட்டு வெளியேறிய காரணத்தால் அவர்கள் பிராமணரல்லாதவர்களை மனைவியராகக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஸ்ரீ மத்வாச்சாரியரின் காலத்தில் இத் தகைய சாதி மாற்றங்களால் இவர்களுடைய எண்ணிக்கை மிகப் பெருகியது. சிவாலி பிராமணர்கள் பண்டர் சாதியினரால் 'மதுமகளு' அல்லது 'மத்மளு' என்று அவர்கள் மனைவியர் தங்கள் சாதியிலிருந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற கருத்துப் பட வழங்கப்படுகின்றனர். சிவாலியர்களோடு அண்மைக் காலத்தில் துளு பிராமணர்களாக மாறிய வேறு பிரிவினரும் உளர். சிவாலி பிராமணர்கள் மாத்தி பிராமணர்களைத் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதி முன்பெல்லாம் அவர் களை உணவுக் கூடங்களில் தங்களோடு ஒன்றாக அமர்ந்து உண்ண விடுவதில்லை. ஒரே கூடத்தில் அமர்ந்தாலும் சிவாலி களின் வரிசையில் இடம் தராமல் தனியே குறுக்கு வரிசையில் அவர்கள் அமர்த்தப்பட்டனர். இதற்குக் காரணம் துறவியான வாதிராச சுவாமிகள் மீன் பிடிக்கும் சாதியைச் சேர்ந்த மோகர் களான இவர்களைப் பிராமணர்களாக உயர்த்திவிட்டார் என்பதே. பிராம்ணர்களான பின் அவர்களால் தங்களுடைய

சாதித் தொழிலைத் தொடர முடியவில்லை. அவர்கள் வாழ்க்கை நடத்த உதவியாக அத்துறவியார் அவர்களுக்குக் கொஞ்சம் கத்தரி (*Solanum Melongena*) விதைகளைக் கொடுத்து அச்செடியைப் பயிரிடும்படி கூறினார். இதன் காரணமாகவே மாத்தியில் பயிரிடப்படும் கத்தரிக்காய் 'வாதிராச குல்லா' என வழங்கப் படுகிறது. இந்த மாத்தி பிராமணர்கள் சிவாலி பிராமணர்களோடு ஒப்ப மதிக்கப்படுவதோடு உடுப்பியில் உள்ள சொத்தி மடத்தின் சீடர்களாகவும் ஆகிவிட்டனர். பிராமணர்கள் பற்றி எழுத்தில் நிலைபேறுடையனவாக வழங்கும் வரலாறுகளில் கடம்ப குலத்லைச் சார்ந்த மயூரவர்மனுடைய ஆட்சிக் காலத்தில் சில ஆந்திர பிராமணர்கள் தென் கன்னடத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள் என்ற செய்தி காணப்படுகிறது. யாகத்திற்குப் போதுமான அளவு பிராமணர்கள் கிடைக்காத காரணத்தால் அவ்வாறு அழைத்து வரப்பட்ட ஆந்திர பிராமணர்கள், பிராமணரல்லாத சாதியாரிடையேயிருந்து பல குடும்பங்களைத் தேர்வு செய்து அவர்களைப் பிராமணர்களாக்கி, அவர்களுக்குக் குடும்பப் பெயர்களையும் தந்துள்ளனர். அவ்வாறு தரப்பட்ட பெயர்களுள் சில மானோலி (*Cephalandra India*) பேராலம் (*Psidium Guyava*) குதிரை, ஆனை என்பனவாம்.

தென் இந்தியாவில் பல சூழல்களில் பலதரப்பட்ட மக்களின் மண்டையளவுகளை எடுக்கும்போது எனக்கு நன்கு அறிமுகமான ஒரு மனிதரின் தலையின் இரண்டாவது மண்டையோடும் மூன்றாவது மண்டையோடும் இணையும் இணைப்பு வளைநது சரிவுடையதாக அமையாமல் இருக்கக் கண்டுள்ளேன். இவ்வாறு அமைவதின் விளைவாகப் பின் மண்டை படம் 3 - அ இல் உள்ள ஐரோப்பியரது போல உச்சியிலிருந்து பின்னோக்கி வளைவோடு கூடிய சரிவுடையதாக அமையாது, படம் 3-ஆ இல் உள்ள இந்துவின் மண்டையோட்டினைப் போலத் தட்டையான அமைப்புடையதாகக் கிட்டத் தட்ட நேர் கோணத்தில் ஒன்று சேர்ந்து அமைந்துள்ளதைக் காணலாம். கன்னடப் பகுதியைச் சேர்ந்த வளம் வாய்ந்த ஒரு லிங்க பணசிகாவினுடைய தான மண்டையோடு (படம் - 4) இத்தகைய தலையமைப்பைத் தெளிவாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.



படம் 3 அ

படம் 3 ஆ



லிங்க பணசிகா

இனங்களின் கலப்புப் பற்றி ஆராயும் க்வார்டரிப்பேச் (**Quaterefages**) பின்வருமாறு எழுதுகின்றார்[1]:- 'பெரும்பாலும் முழுக்க முழுக்கப் பாதுகாக்கப்பட்ட நிலையில் தங்கள் இனக் கூறுகள் அனைத்தையும் கொண்டு விளங்கும் சில பழங்குடி இனத்தவர்களை இப்போதும் சில சமயங்களில் காணுதல் கூடும். மலபாரையும், குடகையும் சேர்ந்த குறும்பர்கள் இன்னும் தங்கள் இனப் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளைக் - வயநாட்டில் உள்ள காடுகளில் - காப்பாற்றிக் கொண்டவர்களாக முழு உரிமையுடனும் மனித இயல் பண்புகளைப் பேணியவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.' காட்டில் வாழும் பல பழங்குடிகளின் தனித்ததான உடற்கூறும், மனித இன இயல் சார்ந்த பண்புகளும், காடுகளைத் தோட்டங்களுக்காக அழித்து நாகரிகத்தின் முன்னேறிய வெள்ளையர்களும், பிற பழுப்பு இனத்தவர்களும் அவர்களோடு தொடர்பு கொண்டமையால் உண்டான அவர்களே அறிந்து கொள்ளமுடியாதபடி மெல்ல நிகழும் மாற்றத்தால், வருந்தத்தக்கவகையில் சீர்குலைந்து வருகின்றன. இதனை விளக்கும் வகையில் திருவாங்கூரைச் சார்ந்த காணிக்காரர்களைப் பற்றிக் கூறுகிறேன். அண்மைக் காலம்வரை இவர்கள் தங்கள் குடியிருப்புக்கு அருகில் வெளியார் யாரேனும் வர நேர்ந்தால் பெண்கள் அனைவரையும் காட்டினுள்ளே ஒதுங்கிப் போய் இருக்கும்படி செய்யும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். இப்பொழுது இவர்கள் அப்பழக்கத்தை விட்டுவிட்டார்கள் என்றே சொல்லலாம். மேலும் காணிக்காரர்கள் சிலர் இன்று நகர்ப்புறங்களிலேகுடியேறிவிட்டதோடு மற்றவர்களோடு நன்கு கலந்து பழகவும் முற்பட்டுவிட்டனர். தொன்மைக் கூறுகளாகக் குள்ள உருவமும், கரும்பழுப்பு நிறமும், பருத்தகன்ற மூக்கும் இருக்கக் காண்பினும் அவை மாற்றத்திற்கு ஆட்படவில்லை எனக் கூறவியலாது. இடைப்பட்ட உயரமுடைய குறுகிய அல்லது குவிந்த மூக்கமைப்பினை உடையு காணிக்காரர்களைக் காணுதல் கூடும். காட்டிலே வாழும் சில காணிக்காரர்களையும் திருவாங்கூருக்குச் சிலமைல் தூரத்திலுள்ள சிற்றூரில் வாழும் சில காணிக்காரர்களையும் அளவெடுத்தமையால் பெறப்பட்ட முடிவுகள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

---

1 Historic Génévale des Races Humaines, 1889.

	உடல்வாகு செ.மீ.			மூக்களவு விகித எண்		
	சராசரி	மேலளவு	கீழளவு	சராசரி	மேலளவு	கீழளவு
காட்டவர்	155.2	170.3	150.2	84.6	105	72.3
நாட்டவர்	158.7	170.4	148	81.2	90.5	70.8

கர்நூல் மாவட்டத்தில் உள்ள நல்லா மலையினைச்சார்ந்த காட்டு செஞ்சுக்கள் இன்னும் தங்கள் இனத்திற்குரிய குள்ள உருவமும், உயர்ந்த மூக்களவு விகித எண்ணிக்கையும் உடையவர்களாகக் கலப்படமில்லாத காட்டுப் பழங்குடிகளின் இயல்பினைப் புலப்படுத்துகின்றனர். ஆனால் அவர்களுடைய உடல்வாகு ஒரே சீரானதாக அமையவில்லை என்பது மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குங் கூடப் புலனாகக் கூடியதாகவுள்ளது. நடுத்தர உடல்வாகிற்கு மேற்பட்ட உயரமோ அலலது நெட்டையான வடிவமோ கொண்டு நீண்டு குறுகிய மூக்கினையும் பெற்றவர்களாக உள்ள பலரைக் காணக்கூடியதாகின்றது. செஞ்சு இனப் பெண் ஒருத்தி செங்கல் போடும் ஒருவனைத் திருமணம் செய்து கொண்ட விவரம் குறிக்கப்பட்டுள்ளது. போயன் ஒருவன் செஞ்சுக்களோடு மண உறவு செய்து கொண்டு அவர்கள் குடியிருப்பில் வாழ்ந்து வருவது பற்றியும் எனக்குத் தெரியும்.

உடல் வாகு செ.மீ.			மூக்களவு விகித எண்		
சராசரி	மேலளவு	கீழளவு	சராசரி	மேலளவு	கீழளவு
102.5	175	149.6	81.9	95.7	68.1

பிற பகுதிகளைச் சார்ந்த வேறு பழங்குடியினரைப் போலச் செஞ்சுக்களும் நீண்ட தலையோட்டை உடையவர்களாக இன்றும் தொடர்ந்து காணப்படினும் பின்வரும் அட்டவணையில் கண்டபடி அவர்கள் நல்லாமலையை அடுத்த சமவெளிகளில் வாழும் குறுகிய தலையோட்டினையுடைய மக்களின்றும் வேறுபட்டவர்கள் என்பது தெளிவாகும்.

		மண்டையோட்டுத் தகவு அளவு எண்	தகவு அளவு எண் 80 தோ அதற்கு மேலோ இருந்த எண்ணிக்கை
40	செஞ்சுக்கள்	74.3	1
60	கோல்லர்	77.5	9
50	போயர்	77.9	14
39	தோட்டப் பலிசர்	78.0	10
49	காபுகள்	78.8	16
19	உப்பரர்	78.8	4
16	மங்கலர்	78.8	7
17	எருக்கலர்	78.6	6
12	மேதரர்	80.7	8

சில ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவில் மனித உடல் சார்ந்த அளவைகளில் ஆய்வு மேற்கொண்ட எம். லூயிஸ் லாப்பிக்யூ காட்டில் வாழும் பழங்குடிகள் பற்றிய குறிப்பில்[1] பின் வருமாறு எழுதியுள்ளார்:-

திராவிடர்களின் வாழ்விடத்தின் உயிர்நிலையாக உள்ள நீலகிரி, மற்றும் ஆனைமலைப் பகுதிகளில் நெடுங்காலமாக நீக்ரோக்கள் என வகைப்படுத்தக் கூடிய முரட்டு இயல்பினதான முடியோடு கூடிய சிறிய உருவினை உடைய காட்டுவாசிகள் வாழ்ந்து வருகின்றனர். எனினும் அவர்களை நீக்ரோக்கள் என அறுதியிடப் போதுமான சான்றுகள் இல்லை. நீக்ரோ இனத்தொடு தொடர்புடையவர்கள் இந்த மலைகளில் அல்லது இந்தியாவின் வேறு பகுதிகளில் காணப்படுவதில்லை, அந்தமான்வாசிகளோடு அல்லது மற்ற நீக்ராய்ட்டு இனத்தவர்களோடு, தொடர்புடையவர்களாக நாம் காண்பது பறையர்களில் தொடங்கித் தொடர்ந்து கலப்பினமாக உருமாறிச் செல்கின்ற ஒரு கூட்டுக் கலவை இனமாக உருவாகியுள்ள இனமே எனக் கூறலாம். காடுகளின் எல்லைப் புறங்களிலும், காடுகள் அழிக்கப்பட்ட குன்றுகளிலும்

1 Les Nègres d'Asie, et la race Nègre en général. Revue Scientifique, VI JULY, 1906.

யாதி பறையர் இனக் கூறுகளும், பாதி காட்டுவாசி இனக் கூறுகளும் கொண்ட சாதியினர் காணப்படுகின்றனர். சமூகப் படிநிலை வரையறையில், இவர்களைப் பறையரினும் தாழ்ந்தவ ராகவே வரையறைப் படுத்துகின்றனர். நீக்ரோ இனப் பண்பு கள் தெளிவாகப் படிந்துள்ள குழுக்கள் இவர்களிடையே மிகுதி யாக முற்பட்டுத் தோன்றக் காணலாம். இக்குழுக்களில் தலை முடி பொதுவாகச் சுருட்டையாகவும், சிலபோது முரட்டுத் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கத்தான் செய்கின்றது. இப்படி யாக நாம் கற்பனையைத் தொடர்ந்து நீட்டித்துப் பின்னோக்கி இந்தியச் சாதிகள் வழியே ஆதிகால இனம் வரை (அவனை அவ்வாறு மீட்டுருவாக்கிக் காண ஒரு படிநிலை மட்டுமே பின்னோக்கிச் செல்ல வேண்டி இருக்கும்) போனால் அவனே ஒரு நீக்ரோ ....

நீக்ரோ கூறுகள் கொண்ட அழிந்து மறைந்து போன இனத் தைப் படிப்படியாக நாம் பல கலப்பினங்கள் வழியே மீட்டுரு வாக்கியபடி சென்று அடைந்தோம். அதே முறையில் நாம் இந்த இனத்தின் மண்டையோட்டு அமைப்பையும் கொள்கை அடிப் படையில் மீட்டுருவாக்கிக் காணலாம். முறைப்படியான பல அளவுகள் எடுத்த பின், இந்தியாவைச் சார்ந்த ஆதி நீக்ரோ சுமார் 75 அல்லது 76 மண்டை ஓட்டு விகித அளவு எண் கொண்ட, மிக நீண்ட தலைக்குச் சற்றே குறைந்த தலையினை உடையவர்கள் என நான் கருதுவது பெரும்பாலும் சரியாக இருக்கும் என்றே நினைக்கின்றேன். வாழ்க்கைச் சூழல் உடல் கூறினை மாற்றும் ஆற்றல் உடையதாகையால் அவனுடைய உயரத்தைச் சரியாகக் கணித்தல் கடினமானது. அவன் குறுகிய உயரம் உடையவனாயினும், அந்தமான் மக்களைவிட எப்படியும் உயரத்தில் மிக்கவனே. அவனுக்குரிய பொருத்தமான பெயர் என்ன என்று பார்க்கும்போது சமுதாய, மொழியியல் ஆய்வின் பயனாக அமைந்து விட்டதான திராவிடன் என்ற பெயரை அவனுக்கு உரியதாகத் தொடர்பு படுத்திக் கூறப்பட்டு வந்தாலும், இந்த நீக்ரோ கூறு கொண்டவன் திரா விடர்களுக்கு முற்பட்டவன் என்பதனை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எனவே நாம் அவனைத் திராவிடருக்கு முற் பட்டவன் என அழைக்கலாம்; அல்லது அவனுக்கு வேறொரு

மக்கள் இனத்தவர்களுடைய செல்வாக்கின் தாக்கம் இல்லாத தொரு பெயரைத் தரவிரும்பினால் அவனை நாம் அழைத்தற் குரிய பொருத்தமான பெயர் நீக்ரோ பறையன் என்பதாகும்.'

மேற்கூறப்பட்ட எம்.லாப்பிக்யூ அவர்களின் கூற்றினை உறுதி செய்யும் வகையில் தொல்பழங்குடியினர் நீண்ட மண்டை யுடையவர்களா அல்லது குறுகிய மண்டையோட்டையுடையவர் களா என்பதனை நான் தமிழ், மலையாளம், தெலுங்கு வழங் கும் பகுதிகளைச் சேர்ந்த பல காடுவாழ் பழங்குடிகளின் மண்டையோட்டுத் தகவு அளவினை ஆராய்ந்து அளந்து தந்துள்ளேன்.

மண்டையோட்டுக் குறியீட்டுத் தகவு அளவு எண்

	சராசரி	மேலளவு	கீழளவு
காடர்	72.9	80.0	69.1
இருளர் (செங்கல்பட்டு)	73.1	78.6	68.4
காணிகர்	73.4	78.9	69.1
மலைவேடர்	73.4	80.9	68.8
பணையர்	74.0	81.1	69.4
செஞ்சு	74.3	80.5	64.3
சோழகர்	74.9	79.3	67.8
பள்ளியன்	75.7	79.1	72.9
இருளர் (நீலகிரி)	75.8	80.9	70.8
குறும்பர்	76.8	83.3	71.8

ஹயேக்கெல் (Haeckel) திராவிடர்களுடைய மூக்கு, பருத்த குறுகிய உறுப்பு என்று குறிப்பிடுவது கருதத்தக்கது. ரிஸ்லே திராவிட வகையில் மூக்கு தடித்தும் அகன்றும் இருக்கும் எனக் குறித்துள்ளார்.[1] திராவிடர்களின் மூக்கு விகிதக் குறியீட்டெண் நீக்ரோ தவிர வேறு இனத்தவர் அனைவரையும் விட எண்ணிக் கையில் உயர்ந்ததாகும். மாலே பாகாரியர் குடியினைப் போன்ற

1 வங்காள சாதியினரும் பழங்குடியினரும், 1891. (Tribes and castes of Bengal, 1891.)

முன் மாதிரியாகக் கொள்ளத்தக்க திராவிட இனத்தவரின் மூக்கு நீக்ரோ இனத்தவரைப் போன்றே நீளத்திற்குச் சம மான விகிதமுடையஅகலத்தையும் பெற்றுள்ளது. ஆரியர் வகை யைச் சார்ந்தவர்களின் மூக்களவு மாபினார்டு அளந்து கண்ட அறுபத்தெட்டு பாரிசுவாசிகளின் மூக்களவோடு ஒப்ப அமைந்து சராசரியாக 69.4 விகிதமுடையதாகின்றது. இது தொடர்பாக நான் பல தென்னிந்தியக் காடுவாழ் பழங்குடிகளின் மூக்களவு விகிதத்தினைத் தருகின்றேன்.

	மூக்களவு விகித எண்		
	சராசரி	மேலளவு	கீழளவு
பணியர்	95.1	108.6	72.9
காடர்	89.2	115.4	72.9
குறும்பர்	86.1	111.1	70.8
சோழகர்	85.1	107.7	72.8
மலை வேடன்	84.9	102.6	71.1
இருளர் (நீலகிரி)	84.9	100.0	72.3
காணிக்காரர்	84.6	10.50	72.3
செஞ்சு	81.9	95.7	68.1

பின்வரும் அட்டவணையில் ஒப்புநோக்குதற்கு உதவியா யிருக்கும்படியாகத் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு திராவிட இனத்தவர்களினதும் காடுவாழ் பழங்குடியினரதும் சராசரி உயரத்தையும் மூக்களவு விகிதக் குறியீட்டெண்களையும் தந்துள்ளேன்.

	வாழும் இடம் / பேசும் மொழி	மூக்களவின் விகித எண்	உயரம் செ. மீ.
பணியர்	காடு வாழ் பழங்குடி	95.1	157.4
காடர்	,,	89.8	157.7
குறும்பர்	,,	86.1	157.9
சோழகர்	,,	85.1	159.8
இருளர் (நீலகிரி)	,,	84.9	159.3

மலை வேடர்	,,	84.9	154.2
காணிக்காரர்	,,	84.6	155.2
செஞ்சு	,,	81.9	162.5
பள்ளர்	தமிழ்	81.5	164.3
முக்குவன்	மலையாளம்	81.0	163.1
பறையர்	தமிழ்	80.0	163.1
பள்ளி	,,	77.9	162.5
காணீகர்	கன்னடம்	76.1	165.8
பெஸ்தர்	தெலுங்கு	75.9	165.7
தியர்	மலையாளம்	75.0	163.7
குருபர்	கன்னடம்	74.9	162.7
போயர்	தெலுங்கு	74.4	163.9
தோட்டப் பலிசர்	,,	74.4	163.9
ஆகசர்	கன்னடம்	74.3	162.4
அகமுடையார்	தமிழ்	74.2	163.8
கோல்லர்	தெலுங்கு	74.1	163.8
வேளாளர்	தமிழ்	73.1	162.4
வக்கலிகர்	கன்னடம்	73.0	167.2
தாச பாணசிக	கன்னடம்	72.8	165.3
காபு	தெலுங்கு	72.8	164.5
நாயர்	மலையாளம்	71.1	165.2

இந்த அட்டவணை அகன்ற மூக்கும் குட்டையான உருவமுமுடைய காட்டு வாசிகளில் தொடங்கிக் குறுகிய மூக்குடைய நாயர்கள்வரை மற்ற இனத்தவர்களோடு ஒரே சீரான வரிசை யமைப்புடையதாக அமைந்திருத்தலைத் தெளிவாகக் காட்டுவதைக் காணலாம்.

படம் 5-இல் வரிசையாகச் சில முக்கோண வடிவங்கள் உள்ளன. அவை சென்னை நகரில் வாழும் ஏழ்மையான பிராமணர், தமிழ்ப்பறையர், பணியர் ஆகியோருடைய மூக்களவின் விகிதக் குறியீட்டெண்ணின் மேலளவு, கீழளவு, சராசரி ஆகியவைகளைக் காட்டும் வடிவமைப்புக் குறியீடுகளாகும். பிராமணர்களின் கீழளவுக்கும் பறையர்களின் மேலளவுக்கும் தொடர்பில்லை என்பதனை அவை தெளிவாகக் காட்டுகின்றன.

படம் 5



மூக்களவின் வரைபடங்கள்

ஆனால் பிராமணர்களதும் பறையர்களதும் மேலளவும், பணி யர்களது சராசரியளவும் முன் சொன்னவைகளைக் காட்டிலும் தொடர்புடையனவாயுள்ளன. குறுகிய அகன்ற மூக்கினை உடைய பல பிரிவினர் உயர் மூக்குக் குறியூட்டெண்ணினை மிகுதியும் பெற்றிருப்பதற்கு இந்தத் தொடர்பைக் காரணமாகக் கொள்ளலாம். சர் ஆல்பெர்டு லையால், எங்கோ ஓரிடத்தில் ஆரி யர் அல்லாத மண்ணுக்குரிய பழங்குடி மாந்தர்களும், பழங்குடி களும் மெல்ல மெல்லப் பிராமணப் போக்குடையவராகி வரு கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். "மேல் நோக்கிய முன் னேற்ற மாற்றத்தில் அவர்கள் பிராமணப் போக்குடையவரா கின்றனர். தாங்கள் நிலைத்த வாழ்வினராக உறையும் சமு தாயக் கூட்டமைப்பில் சமுதாயத் தட்டில் தங்களுக்கு அடுத்த மேல்தட்டில் உள்ளவர்களின் சமய ஒழுக்கங்களை மேற்கொள்ள அவர்கள் முற்படுகின்றனர். இத்தகையதொரு மேல் நோக்கிய மாற்றம் பல நூற்றாண்டுகளாகவே நிகழ்ந்து வருகிறது என நாம் ஊகிக்கலாம்" என அவர் கூறுகின்றார். 1891-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு எச். எ. ஸ்டுவர்ட் 'தென்னகப் பிராமணர்கள், ஆரிய திரா விடக் கலப்பினத்தவரே; தூய ஆரிய இனத்தவரல்லர் என்று அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வந்ததும், இப்பொழுது பொது வாக நம்பப்படுவதுமான ஒரு கொள்கை. பழங்காலத்தில் சாதிப்பாகுபாடு இன்றிருப்பதைப் போலன்றி நெகிழ்ச்சியுடைய தாகவே இருந்திருக்கிறது. வேறு சாதியைச் சேர்ந்த ஒருவன் பிராமணர்களுக்குரித்தான அறிவினைப் பெற்று, பிராமணர் இயற்றும் செயல்களை மேற்கொள்வானாயின் அவன் பிராமண னாகிவிடலாம். இன்றுங்கூட நம்பூத்ரி பிராமணர்கள் தங்கள் வாழ்விடத்தைச் சார்ந்த பெண்களோடு தொடர்பு கொள்வதை நாம் பார்க்கின்றோம். அப்படியிருக்க முதன்முதல் இங்கு வந்தேறியபோது அவர்கள் அப்படிப்பட்ட தொடர்பு கொண்டி ருந்திருப்பார்கள் என்று எண்ணுவதில் வியப்பேதும் இருக்க முடியாது. அத்தொடர்பின் காரணமாக அவர்களுக்குப் பிறந்த வர்கள் பிராமணர்களுள் கீழ்நிலைப் பிரிவைச் சேர்ந்தவர்களாக எண்ணப்பட்டாலும் அவர்களும் பிராமணர்களாகவே கருதப் படுகிறார்கள். எப்படியிருப்பினும் கலப்பின இரத்தச் சேர்க்கை

யுடையவர்கள் எனக் கருதப்படும் அப்பிராமணர்கள் சமூகத் தட்டில் கீழ்ப்படியில் இருப்பவர்களாகக் கருதப் படுவதோடு தூய பிராமண வருப்பினரோடு தாராளமாகக் கலந்து பழக அனுமதிக்கப்படுவதில்லை.'

பிராமணர் அல்லாதார் பெரும் எண்ணிக்கையில் ஒரு சேரப் பிராமணர்களாக மாற்றப்பட்டது பற்றிய மக்கள் நன்கு அறிந்த வழக்குகளும் உள்ளன. அவ்வாறு வழங்கும் கதை களின்படி அரசர்கள் சில பாபங்களுக்குப் பரிகாரம் தேடவோ, சமய உலகினரால் மதிக்கப்படவோ, ஓர் இலட்சம் என்ற பெரும் எண்ணிக்கையிலான பிராமணர்களுக்கு உணவளிக்கும் வழக்கம் உண்டு. பெரும் எண்ணிக்கையில் இது போலப் பிராமணர்களைத் திரட்ட அரசர்களின் ஆணைப்படி பிராமணரல்லாதாரும் பிராமணராக்கப்படுவர். அங்கும் இங்கு மாகப் பண்டை நெறிப்பட்ட பிராமணர்களால், பிராமணர்கள் என ஒப்புக் கொள்ளப்படாத, ஆனால் மற்ற பிராமணர்களால் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்படும் பிராமணர்கள் காணப் படுகிறார்கள். இதற்குச் சான்றாக மைசூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாரகர்களைச் சுட்டலாம். இவர்கள் கூறும் நியாயங் களை ஒதுக்குதல் கடினமானதாயினும் அவர்களைப் பிரா மணர் எனக் கொள்ளுவதில் சில தடைகள் இருக்கவே செய் கின்றன.

நல்ல நிறமும், நீண்ட குறுகிய மூக்கும் உடைய உயர் நாக ரிக நிலையிலுள்ள ஒரு பிராமணனுக்கும், பழுப்பு நிறத் தோலும் குட்டையான அகன்ற மூக்கும் உடைய முன்ன வரைக் காட்டிலும் தாழ்ந்த நாகரிகப் படிநிலையிலுள்ள பிராமணனுக்கும் இடையே பல வேற்றுமைகள் உள்ளன. இதன் காரணத்தை இனக் கலப்பின் விளைவு என்ற கருது கோளின் அடிப்படையிலேயே காரணத் தொடுபட விளக்க முடியும். உயர்நிலையிலுள்ள பிராமண வகுப்பாருக்குத் தாழ்ந்த நிலையிலுள்ள தங்கள் வகுப்பைச் சார்ந்தவன் அவ்வாறிருப்ப தற்குப் பழுப்பு நிறத்தோலும், அகன்ற மூக்கும், குட்டையான உருவமுமுடைய இனத்தவரோடுஎன்றோ இரத்த உறவு ஏற்பட் டதுதான் காரணம் என்பதில் இழிவேதும் ஏற்பட்டுவிடப்

போவதில்லை. காடுவாழ் பழங்குடிகளோ, அல்லது நான் கருதுவது போல மிகச் சிலராக எஞ்சி இருந்த திராவிடர்களுக்கு முற்பட்ட இனத்தவர் அல்லது சிலர் கருதுவதுபோல வெற்றி கொண்ட இனத்தவர்களால் தனித்து ஓடும்படி காடுகளுக்கு விரட்டப்பட்ட திராவிடர்கள் அவர்களில் யாராக இருப்பினும் அகன்ற மூக்குடைய அந்த இனத்தவர்களின் செல்வாக்கே தென்னிந்தியாவில் வாழும் பல இனத்தவர்களின் மூக்களவின் விகிதம் அதிகமாக இருப்பதற்குக் காரணமாகின்றது. இக் கூற்றின் விளக்கத்தின் அடிப்படையில் பார்க்கும்போது கீழ்க்கண்ட, நல்ல பழுப்பு நிறமும், குள்ள வடிவமும் 90-க்கும் மேற்பட்ட மூக்கு விகித அளவும் கொண்ட பல்வேறு இனத்தவர்கள் தங்களுக்குள் கொண்டிருந்த தொடர்பு தெளிவாகும்.

	உடல் வாகு	மூக்கின் உயரம்	மூக்கின் அகலம்	மூக்கின் விகித அளவு எண்
	செ.மீ	செ.மீ	செ.மீ	
வக்கலிகர்	156.0	4.3	3.9	90.7
மோகர்	160.0	4.3	3.9	90.7
சியாத் முகமதியர்	160.0	4.4	4.0	90.0
கம்மாளர்	154.4	4.4	4.0	90.9
சக்கலியர்	156.8	4.4	4.0	90.0
வேளாளர்	154.8	4.7	4.3	91.6
மலையாளி	158.8	4.0	3.7	92.5
கொங்கு வேளாளர்	157.0	4.1	3.8	92.7
பட்டர் பிராமணர்	159.0	4.1	3.9	95.1
பள்ளி	157.8	4.1	3.9	95.1
பள்ளன்	155.8	4.2	4.2	100
பெஸ்தர்	156.8	4.3	4.3	100
முக்குவன்	150.8	4.0	4.0	100
அகசர்	156.4	4.3	4.3	100
தமிழ்ப் பறையர்	160.0	4.0	4.2	105

அடுத்து, நான் தென்னிந்திய மக்கள் பேசும் மொழிகள் பற்றிச் சிறிது கூற விரும்புகின்றேன். திரு ஜி. ஏ. கிரியெர்சன் கூற்றுப்

படி[1], 'திராவிடக் குடும்பம் தென்னிந்தியாவில் வழங்கும் எல்லா முக்கிய மொழிகளையும் உள்ளடக்கியதாகும். திராவிடம் என்ற பெயர் மரபு சார்ந்த வழக்கினதே. அது வடமொழிச் சொல்லான திராவிட என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். அதுவும் தமிழ் என்பதனோடு ஒத்த தமிழ், திரமிளா என்பதனோடு தொடர்புடையது. திராவிடன் என்ற பெயர் மேற்கூறியபடி தமிழன் என்பதனோடு ஒன்றாகக் கொள்வதற்குரியதாகும் தமிழன் என்ற இப்பெயரையே ஐரோப்பிய அறிஞர்கள் எல்லா மொழிகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாக வழங்கினர். திராவிட என்ற சொல் ஆந்திரர் மொழியான தெலுங்கைக் குறிக்கும் ஆந்திர திராவிட பாஷை என்ற தொகுதிப் பெயரில் ஒரு கூறாகவும், திராவிடிகள் எனத் தமிழரைக் குறிப்பதாகவும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் குமரிலபட்டரால் திராவிடக் குடும்பத்தைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. இந்தியாவில் திராவிட என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பொருளினைத் தரும் வழக்குடையது. இவ்வகையில் ஐந்து வகைத் திராவிடர்கள் என்போர் தெலுங்கர், கன்னடியர், மராட்டியர், குசராத்தியர், தமிழர் என்போராவர். ஐரோப்பாவில் இதற்கு மாறாகத் திராவிடர் கால்டுவெல் பாதிரியார் தனது ஒப்பிலக்கண நூலில் தொகுத்துக் கூறியுள்ள குடும்பத்தைச் சார்ந்த மொழிகளைப் பேசும் மக்களைக் குறிப்பதாகும். இந்த மொழிகளுக்கான திராவிட மொழியியலின் தந்தையான அவர் ஏற்படுத்திய மரபினை ஒதுக்கிவிடத் தக்க காரணம் ஏதும் இல்லை.'

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா என்ற ஐந்து முதன்மை மொழிகள் இங்கு வழங்குகின்றன. இவற்றுள் கஞ்சம் மாவட்டத்தில் பேசப்படும் ஒரியா இந்தோ - ஆரியா மொழிக் குடும்பத்தின் கிழக்குப் பிரிவைச் சேர்ந்தது. 1901 - ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி இம்மொழிகளைப் பேசுவோர் தொகை வருமாறு:--

---

1 இந்திய மொழிகளின் கணக்கெடுப்பு, IV, 1906. (Linguistic Survey of India IV, *1906*.)

தமிழ்	15,543,383
தெலுங்கு	14,315,›04
மலையாளம்	2,854,145
ஒரியா	1,809,336
கன்னடம்	1,530,688

பின்வரும் மொழிகளையும் கிளை மொழிகளையும் பற்றிய விவரங்களை இந்த மொழிகளின் கணக்கெடுப்பையும் 1901-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கணக்கெடுப்பையும் அடிப்படையாகக் கொண்டு தொகுத்துத் தந்துள்ளேன்.

சவர - **Savara**: கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த சவரர்களின மொழியான இது முண்டா மொழிகளில் ஒன்றாகும். முண்டா மொழிக் குடும்பத்தைப் பற்றித் திரு கிரியெர்சன் பின்வருமாறு எழுதுகின்றார்:- 'மாக்ஸ் முல்லரால் முண்டா எனக் கொள்ளப்பட்ட பெயர் நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. 1866-இல் சர் ஜார்ஜ் காம்ப்பெல் அக்குடும்பத்தைக் கோலாரின் என அழைக்கவேண்டுமெனக் கூறினார். அவர் கோல் என்பது கோலர் என்ற பழைய வடிவு எனக் கருதினார். கோலர் என்பது அவர் கருத்துப்படி திருடர் எனப் பொருள்படும் கள்ளர் என்ற கன்னடத்திலிருந்து வந்ததாகும். இவ்வாறு கொள்ள அடிப்படை உண்மை ஒரு சிறிதும் இல்லை. மேலும் ஆரியன் என்பதோடு ஒப்புமை உடையதாகக் கோலரியன் என்பது இருப்பதால் அதனை ஏற்றுக்கொள்வதற்கில்லை. முண்டா மொழி பேசுவோர் இன்று பெரிதும் சோடா நாகபூர் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். முண்டா இனம் முண்டா மொழிகளைவிட மிகவும் பரந்து பட்டதாக உள்ளது. அது தென்னிந்தியாவில் பொரும்பான்மையதான திராவிட இனத்தோடு தொடர்புடையது என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.'

கடப - **Gadaba**: விசாகப்பட்டினம், கஞ்சம் பகுதிகளைச் சேர்ந்த கடபர்களால் பேசப்படும் மொழி. முண்டா மொழிகளுள் இதுவும் ஒன்று.

கொண்ட், காண்டி, அல்லது *குய்*: **Kond, Kandhi or Kui**: கஞ்சம், விசாகப்பட்டினம் பகுதிகளைச் சார்ந்த கோண்ட்களின் மொழி.

கோண்டி - Gondi:- மத்திய மாநிலத்தை சேர்ந்த கோண்ட்களின் மொழி. இவர்கள் விசாகப்பட்டினம் கஞ்சம் மாவட்டங்களிலும் பரவியுள்ளனர்.

காட்டு - Gattu: கோண்டியின் கிளை மொழி. விசாகப் பட்டினத்தைச் சேர்ந்த சில கோண்டுகள் இதனைப் பேசுகின்றனர்.

கோயா அல்லது கோய் - Koya or Koyi: கோண்ட்டின் கிளை மொழி. விசாகப்பட்டினம், கோதாவரி மாவட்டங்களைச் சேர்ந்த கோண்டுகளால் பேசப்படுவது.

பொரொச, பர்ஜா அல்லது பார்ஜி - Poroja, Parja, or Parji: கோண்ட்டின் ஒரு கிளை மொழி.

துளு - Tulu: பழைய துளு நாடான தென் கன்னட மாவட்டத்தில் பெரும்பாலோரால் பேசப்படுவது. கால்டுவெல் பாதிரியாரால் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுள் நன்கு வளர்ச்சியுற்ற மொழி என விளக்கப்பட்டுள்ளது.

கொரகா - Koraga: தென் கன்னடத்தைச் சேர்ந்த கொரகர்களால் பேசப்படுவது. எச். எ. ஸ்டுவர்ட் இதனைத் துளுவின் கிளை மொழி எனக் கருதுகிறார்.[1]

பெல்லார - Bellara: தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த பெல் (வில்) வீரர்களால் பேசப்படுவது. கன்னடம் அல்லது துளுவின் கிளை மொழியாகக் கருதப்படுகிறது.

தோடா - Doda: நீலகிரியைச் சேர்ந்த தோடர்களின் மொழி. இது பற்றி டாக்டர் டபிள்யூ. எச். ஆர். ரிவர்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்[2] 'பெர்ன்ஹார்ட் ஸ்மிமிட்[3] 1837 இல் தோடர்

---

1 தென் கன்னட மாவட்டக் கையேடு (Manual of South Kanara District.)

2 தோடர்கள், 1906. (The Todas, 1906)

3 சென்னை இலக்கிய அறிவியல் இதழ், V, 1837. (Madras Jorunel, Lit. and Sci. V, 1837;)

மொழியைப் பற்றி எழுதியுள்ளார். அவர் மற்றவர்களைவிட தோடர் மொழியை உண்மையிலேயே நன்கு அறிந்தவர். தோடர் மொழியின் சொற்களில் மூன்றில் இரண்டு பங்கு தமிழைச் சேர்ந்ததெனக் கருதும் அவர் எஞ்சிய ஒரு பகுதிக்குரிய மொழி எது எனக் கண்டறிய இயலவில்லை எனக் கூறியுள்ளார். கால்டுவெல் தோடர்களின் மொழி தமிழோடு நெருங்கிய உறவுடையது எனக் கருதுகிறார்.[1] போப் அவர்கள் இது முதலில் பழங்கன்னடமாக இருந்து பின் சில தமிழ் வடிவங்களை ஏற்றுக் கொண்டது என்பார்[2]. இவர் தன் சொற்பட்டியலில் தோடர், படகர்களிடமிருந்து கடன் வாங்கிய சொற்களையும் சேர்த்துக் கொண்டுள்ளார்.

கோத்தா - Kota: நீலகிரியைச் சார்ந்த கோத்தர்கள் பேசும் கன்னடமும் தமிழும் கலந்த மொழி.

படக - Badaga: நீலகிரி மலையைச் சார்ந்த படகர் பேசும் மொழி. இது பழங்கன்னடத்தை ஒத்ததாகக் கருதப்படுகிறது.

இருள - Irula: நீலகிரியைச் சேர்ந்த இருளர் பேசுவது. தமிழின் கிளைமொழியாகக் கருதப்படுகிறது. திரு ஸ்டுவர்ட் அவர்கள் கருத்துப்படி கசுப அல்ல கசுவ என்ற தமிழின் இன்னொரு கிளை மொழியும் இருளரின் உட்பிரிவினால் பேசப்படுகிறது. அதனையும். இருள எனக் கொள்ளும் வழக்கம் உண்டு.

குறும்ப - Kurumba: நீலகிரி, மலபார், மைசூரைச் சேர்ந்த குறும்பர்களால் பேசப்படும் மொழி. கன்னடத்தின் கிளை மொழியாகக் கருதப்படுகிறது.

கொங்கணி – Kongani: மராத்தியின் கிளைமொழிகளுள் ஒன்று. தென் கன்னடத்திற்கே உரியது. அங்கு வாழும் சரஸ்வத், கொங்கணி பிராமணர்களாலும், ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களாலும் பேசப்படுவது.

---

1 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இரண். பதி. 1875. (Comparative Grammar of Dravidian Languages.)

2 தோடர் மொழி இலக்கணச் சுருக்கம் - மார்ஷலின் 'தோடர்களிடையே ஒரு மண்டையோட்டியல் ஆய்வர்' என்ற நூலின் பின்னிணைப்பு.

மராத்தி - Marathi: தஞ்சாவூர் மாவட்டத்தில் மராட்டிய அரசர்களின் வழித் தோன்றல்கள் இம்மொழி பேசுகின்றனர். மராட்டியர் ஆளுகையின் கீழிருந்த பெல்லாரி மாவட்டத்திலும் மராட்டிய வகுப்பார் பலர் இதனைப் பேசுகின்றனர். சாண்டூர் குறுநில ஆட்சிப் பகுதியிலும் பேசப்படுகிறது.

பட்டுநூலி அல்லது காத்திரி - Patnali or Khatri: குசராத்தியின் கிளைமொழி. மதுரையில் குடியேறித் தங்கிய பட்டுநூல்காரர்களால் பேசப்படுகிறது. அவர்கள் குசராத்திலுள்ள சௌராட்டிராவிலிருந்து மதுரையை ஆண்ட நாய்க்க மன்னர்களின் அழைப்பின் பேரில் வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

லம்பாடி - Lambadi: நாடோடிகளான லம்பாடிகள், பிரிஞ்சாரிகள் அல்லது சகாலிகளின் மொழி. இதனைச் சேரி மொழி எனக் கருதும் திரு டபிள்யூ. பிரான்சிஸ்[1] "வழக்கமாக ஏதாவது ஒரு இந்திய மொழியை அடிப்படையாகக் கொண்டு, திருடர்களின் கீழ் வழக்குச் சொற்களை வைத்துப் புனைந்தும், நாடோடிகள் தங்கியுள்ள பகுதியிலிருந்து கடன் வாங்கிய தொடர்களையும் சேர்த்தும் பேசப்படுவது. திரு கஸ்ட் லம்பாடிகள் திராவிடக் கலப்பு உடையவர்கள் எனகிறார். எனினும் அதுபற்றிய தெளிவின்மையால் இவர்கள் இந்தோ - ஆரியர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்" எனக் கூறியுள்ளார்.

கொரவா அல்லது எருகலா Korava or Yerukala: இந்தப் பெயர் தாங்கிய நாடோடிகள் பேசும் தமிழின் கிளை மொழி. லம்பாடிகளைப் போலவே இவர்களும் திருடர்கள் வழங்கும் தனி மொழியை உடையவர்கள்.

வதாரி - Vadari: கல்லுடைக்கும் நாடோடிகளால் பேசப்படும் கீழ் வழக்குடைய தெலுங்கின் கிளைமொழி. பம்பாய் மாநிலத்திலும் பேரார் பகுதியிலும் பேசப்படுகிறது. இம்மொழி பேசுவோர் தெலுங்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த ஒட்டர்களாவர்.

---

1 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, 1901. (Madras Census Report, 1901.)

அட்டவணை—அ

தலை அளவுகள்

க – கன்னடம் ம – மலையாளம் த - தமிழ் ப - பழங்குடிகள் மரா – மராத்தி
தெ - தெலுங்கு து - துளு ச – சராசரி மே - மேலளவு கீ - கீழ் அளவு
எண் - அளவெடுக்கப்பட்டோர் எண்ணிக்கை.

	எண்	சாதி அல்லது பழங்குடியினும்	நீளம் செ.மீ.			அகலம் செ. மீ.			விகித அளவு			விகித அளவு 80 உம் அதற்கு மேலும் உள்ளோர்
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	
–	40	படகர், நீலகிரி	18.9	20.2	18.0	13.6	14.5	12.8	71.7	77.5	66.1	0
ம	18	காணிக்காரர்	18.8	19.5	18.2	13.6	14.2	13.0	72.5	76.1	68.1	0
ம	40	மாப்பிள்ளா - முகமதியர்	18.9	20.0	18.0	13.7	14.6	13.0	72.8	78.5	68.0	0
ப	23	காடர்	18.4	19.4	17.2	13.4	13.8	12.5	72.9	80.0	69.0	1
ம	40	தியர்	18.9	20.3	17.8	13.7	14.9	12.6	73.0	80.3	68.5	1
த	40	பள்ளி	18.6	19.6	17.4	13.6	14.6	12.1	73.0	80.0	64.4	1

த	40	இருளர்	18.5	19.6	17.0	13.5	14.4	12.8	73.1	78.6	68.4	0
-	82	தோடர், நீலகிரி	19.4	20.4	18.2	14.2	15.2	13.3	73.3	81.3	68.7	1
ப	20	காணிக்காரர்	18.5	19.4	17.8	13.6	14.2	13.0	73.4	78.9	69.1	0
த	28	அம்பட்டர்	18.6	19.2	18.0	13.7	14.6	12.5	73.4	76.6	67.2	0
ப	25	மலை வேடர்	18.5	19.6	17.4	13.6	14.6	13.0	73.4	80.9	68.8	1
த	40	பறையர்	18.6	19.7	17.0	13.7	14.5	13.0	73.6	78.3	64.8	0
ம	25	செறுமார்	18.3	19.3	17.1	13.5	14.2	12.3	73.9	80.1	67.7	1
ம	25	பணியர்	18.4	19.3	17.5	13.6	14.9	13.0	74.0	81.1	69.4	1
த	40	அகமுடையார்	18.8	20.0	17.8	13.9	14.6	12.8	74.0	80.9	66.7	1
-	25	கோத்தர், நீலகிரி	19.2	20.2	18.3	14.2	15.1	13.4	74.1	79.1	69.9	0
த	40	வேளாளர்	18.6	19.6	17.7	13.8	14.6	13.1	74.1	81.1	67.9	2
த	20	ஸ்மார்த்த பிராமணர்	18.8	19.2	17.8	14.0	14.8	13.0	74.2	80.4	67.8	1
த	50	மலையாளி	18.3	19.3	17.0	13.6	14.4	12.8	74.3	82.8	61.0	2
ப	40	செஞ்சுகள்	18.2	19.6	17.2	13.5	14.4	12.4	74.3	80.5	64.3	1
ம	40	நாயர்	18.7	19.8	17.4	13.9	15.0	13.2	74.4	81.9	70.4	1
த	25	பட்டர் பிராமணர்	18.8	20.3	17.2	14.0	15.1	13.1	74.5	81.4	69.1	2
த	23	மலசர்	18.2	19.2	17.3	13.5	14.4	12.4	74.6	80.0	70.0	1
ப	57	ஊராளியர்	18.2	19.3	17.2	13.5	14.4	12.8	74.6	81.9	69.8	1
த	50	சக்கிலியர்	18.6	19.8	17.6	13.9	15.2	13.0	74.9	80.9	70.4	1
ப	20	சோழகர்	18.2	19.4	17.2	13.6	14.6	12.2	74.9	79.3	67.8	0

	எண்.	சாதி அல்லது பழங்குடியினம்	நீளம் செ.மீ.			அகலம் செ.மீ.			விகித அளவு			விகித அளவு 80 உம் அதற்கு மேலும் உள்ளோர்
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	
தெ	30	மாதிகர், ஆதோனி	18.6	20.2	17.0	13.9	14.6	13.0	75.0	82.2	71.3	2
த	40	கம்மாளர்	18.4	19.7	17.3	13.7	14.7	13.1	75.0	81.5	68.4	5
ம	40	முக்குவர்	19.0	20.4	17.6	14.2	15.2	13.4	75.1	83.5	68.6	2
த	40	சேக் முகமதியர்	18.3	20.0	16.7	13.8	14.5	12.8	75.6	81.6	71.5	2
க	50	தாயரே முகமதியர்	18.5	19.7	17.0	14.0	15.0	13.0	75.6	83.3	68.5	8
த	40	சியாட் முகமதியர்	18.5	19.6	17.2	14.0	15.0	13.1	75.6	84.9	68.2	2
ப	26	பள்ளியர்	17.8	18.6	17.1	13.5	14.0	13.0	75.7	79.1	72.8	0
ப	25	இருளர்	18.0	19.1	17.0	13.7	14.3	13.1	75.8	80.9	70.8	1
த	50	பள்ளர்	18.3	19.6	17.2	13.9	14.9	12.6	75.9	87.0	70.1	6
த	42	இடையர்	18.3	10.0	16.8	14.0	14.6	13.2	76.0	81.9	71.3	5
த	49	பட்டாணிய மகமதியர்	18.5	19.6	17.2	14.2	15.2	13.3	76.2	83.1	71.1	2
ம	42	புலையர்	18.3	19.3	17.0	13.9	15.0	13.0	76.3	83.0	72.3	5
ப	22	குறும்பர்	17.9	18.7	16.9	13.7	14.5	13.0	76.4	83.3	71.8	2
தெ	40	மாதிகர், ஹோஸ்பெட்	18.3	20.0	17.2	14.0	15.4	13.0	76.5	83.3	68.0	8

க	50	சேடர்	18.4	19.4	17.0	14.1	14.8	13.2	76.6	82.6	72.6	7
க	40	தொரையர்	18.3	19.2	17.2	14.1	15.2	13.0	76.6	86.4	70.2	5
மரா	24	தேசஸ்த்த பிராமணர்	18.7	20.2	18.0	14.4	15.2	13.2	77.0	83.4	71.0	3
தெ	30	மாலர்	18.4	19.8	16.8	14.2	14.8	13.4	77.1	85.9	70.3	6
தெ	60	பெஸ்தர்	18.4	19.4	16.6	14.2	15.6	13.2	77.1	85.1	70.5	11
க	50	குருபர் மைசூர்	18.1	19.4	17.2	14.0	15.0	12.8	77.3	83.0	70.3	90
தெ	40	ஒட்டர்	18.2	20.4	17.2	14.1	15.2	13.4	77.3	83.1	70.1	10
தெ	60	கோல்லர்	18.2	19.6	16.4	14.1	15.1	13.2	77.5	89 3	70.1	12
க	40	தாச பணசிகர்	18.6	19.8	17.3	14.4	15.6	13.4	77.8	85.5	72.0	11
தெ	25	கோமட்டி, ஆதோனி	18.2	19.4	17.0	14.3	15.2	13.3	77.9	88.2	72.7	8
	40	ஒக்கிலியர், கோயமுத்தூர்	18.2	19.4	17.0	14.2	15.2	13.2	77.9	88.2	71.9	9
க	50	போயர்	18.0	19.2	16.8	14.0	15.2	13.0	77.9	89.2	70.5	14
து	40	பண்டர்	18.5	20.0	17.0	14.4	16.6	13.1	78.0	91.2	70.8	12
தெ	49	காபு	18.2	19.8	16.8	14.2	15.6	13.2	78.0	87.6	71.6	16
தெ	39	தோட்ட பலிசர்	18.1	19.0	17.0	14.1	15.1	13.0	78.0	86.0	73.3	10
க	60	மாத்வ பிராமணர்	18.4	19.8	16.6	14.3	15.2	13 2	78.0	88.5	68.0	18
க	40	பேடர், ஹொஸ்பெட்	18.4	20.0	16.8	14.3	15.2	13.2	78.1	85.3	70.8	13
தெ	38	உப்பாரர்	18.0	19.0	16.2	14.0	15.2	13.2	78.1	87.8	71.7	9
க	25	லிங்கபணசிகர், சாண்டூர்	18.2	19.4	16.6	14.2	15.0	13.4	78.3	87.9	73 7	7
க	60	கர்நாடக ஸ்மார்த்த பிராமணர்	18.5	20.7	17.0	14.4	15.8	13.4	78.4	89.5	69.8	19

	எண்	சாதி அல்லது பழங்குடியினம்	நீளம் செ.மீ.			அகலம் செ. மீ.			விகித அளவு			விகித அளவு 80 உம் அதற்கு மேலும் உள்ளோர்
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.	
தெ	30	பத்ம சாலே	17.8	19.0	16.5	14.1	15.1	13.2	78.7	86.2	72.8	10
க	50	குருபர், ஹோஸ்பெட்	18.1	19.6	17.0	14.2	15.4	13.4	78.9	88.4	72.9	19
தெ	50	தெலுங்கு பணசிகர்	18.4	19.2	16.6	14.5	15.4	13.2	79.0	89.5	71.9	18
க	50	பாஞ்சாலர்	18.3	19.4	17.2	14.4	15.6	13.0	79.0	89.5	71.3	23
க	50	ஹொலையர்	17.9	19.6	16.6	14.1	15.2	13.2	79.1	87.4	70 0	20
க	50	பேடர் – ஆதோனி	18.1	19.2	17.0	14.4	15.0	13.6	79.4	85.9	74.1	12
மா	30	ரங்காரி	18.1	19.8	16.8	14.5	15.4	13.8	79.8	92.2	70.7	14
தெ	25	தோகடர்	17.7	19.0	16.2	14.2	14.8	13.6	80.0	88.1	73.7	13
து	50	பில்லவர்	18.2	20.6	16.4	14.6	15.6	13.2	80.1	91.5	71.0	28
து	50	லிங்க பணசிகர், ஆதோனி	18.1	19.4	16.7	14.4	15.2	13.6	80.1	87.4	74.1	14
க	50	ஹெப்பர், பிராமணர்	18.4	19.6	17.2	14.7	16.4	13.4	80.1	92.1	72.8	21
க	50	மண்டய பிராமணர்	18.5	20.2	16.6	14.8	15.8	13.4	80.2	88.2	69.8	31
து	30	சிவாலி பிராமணர்	18.5	19.6	16.8	14.9	16.2	13.6	80.4	96.4	72.3	17
க	20	காணீகர்	18.0	19.1	16.6	14.4	15.2	14.0	80.5	86.7	74.5	11

க	20	தேவாங்கர்	18.0	19.6	17.0	14.5	15.5	13.6	80.8	87.1	74.7	10
தெ	25	கோமட்டி	17.6	18.8	16.4	14.3	14.8	13.4	81.0	87.1	74.5	16
க	50	வக்கலிகர், மைசூர்	17.7	19.5	15.8	14.5	15.7	13.2	81.7	93.8	72.5	27
மரா	30	சுக சாலே	17.7	18.8	16.6	14.5	15.0	13.4	81.8	88.2	76.1	22
மரா	30	சுகூன் சாலே	17.6	19.0	16.0	14.4	15.4	13.6	82.2	90.0	73.9	21

அட்டவணை—ஆ

உடல்வாகும் மூக்கு விகித அளவும்

	எண்	சாதி அல்லது பழங்குடியினம்	உடல் வாகு			மூக்கின் விகித அளவு		
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.
ம	40	நாயர்	165.2	179.0	152.2	71.1	78.7	54.4
க	50	ஹெப்பர் பிராமணர்	163.2	174.4	150.8	71.2	87.2	55.4
க	60	கர்நாடக ஸ்மார்த்த பிராமணர்	164.2	176.0	150.6	71.5	91.5	61.1
க	50	தாயரீ முகமதியர்	166.4	181.8	150.0	71.5	82.6	59.3
மரா	60	மாத்வ பிராமணர்	163.3	176.2	151.8	72.0	93.2	58.8
து	40	பண்டர்	165.7	179.2	155.8	72.2	86.1	61.6
த	40	சேக் முகமதியர்	164.6	174.8	153.8	72.4	87.0	60.0
த	29	அம்பட்டர்	165.7	173.2	153.2	72.4	84.3	57.9
து	50	பில்லவர்	163.2	175.8	149.4	72.6	92.8	60.0
க	50	சேடர்	163.3	177.2	153.2	72.7	92.9	53.3
க	40	தாச பணசிகர்	165.3	177.8	152.0	72.8	82.6	59.3
தெ	49	காபுகள்	164.5	177.6	152.6	72.8	90.5	62.7

க	50	மண்டய பிராமணர்	165.7	177.8	150.6	73.0	97.8	58.4
க	50	வக்கலிகர், மைசூர்	167.2	181.0	155.2	73.0	85.0	62.3
த	40	வேளாளர்	162.4	172.8	153.2	73.1	91.5	60.8
தெ	50	பத்ம சாலே	159.9	171.4	153.8	73.2	83.7	61.5
க	40	ஒக்கலிகர்	166.0	179.6	154.6	73.5	90.7	63.5
க	50	குருபர், மைசூர்	163.6	174.2	152.0	73.5	88.4	64.0
மரா	30	ராங்கிரி	161.3	168.4	154.4	73.6	84.1	63.5
த	42	இடையர்	164.3	178.0	154.6	73.6	91.0	62.7
தெ	25	கோமட்டி, சாண்டூர்	162.5	169.2	153.4	74.1	88.9	62.5
க	30	லிங்க பணசிகர்	163.4	171.2	154.0	74.1	85.7	60.4
தெ	60	கோல்லர்	163.8	173.8	151.0	74.1	83.0	61.5
ம	40	திய்யர்	164.2	171.6	155.2	74.2	85.7	61.5
த	40	அகமுடையார்	165.8	175.6	152.6	74.2	88.9	73.8
தெ	39	தோட்ட பலிசர்	163.9	176.8	149.6	74.4	83.0	65.4
க	25	லிங்க பணசிகர், சாண்டூர்	165.6	173.0	157.8	74.6	86.4	61.5
மரா	30	சுகூன் சாலே	160.3	167.6	152.5	74.8	84.4	61.5
மரா	30	சுக சாலே	161.1	170.0	147.8	74.8	86.1	62.3
க	50	பாஞ்சாலர்	162.3	177.2	151.6	74.8	88.9	62.0
க	50	குருபர் ஹோஸ்பெட்	162.7	175.4	162.2	74.9	92.2	75.8
—	50	தோடர்-நீலகிரி	169.8	186.8	157.6	74.9	89.1	61.2
க	50	போயர்	160.8	171.6	151.9	75.0	86.0	66.0

	எண்	சாதி அல்லது பழங்குடியினம்	உடல்வாகு			மூக்கின் விகித அளவு		
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.
தெ	50	தெலுங்கு பணகர்	164.6	176.2	151.6	75.0	97.7	66.0
ம	40	மாப்பிள்ளா முகமதியர்	164.8	174.4	145.0	75.1	88.1	64.0
க	50	ஹொலையர்	162.8	175.2	151.5	75.1	88.9	64.6
—	40	படகர்-நீலகிரி	164.1	180.2	154.0	75.6	88.4	62.7
மரா	24	தேசஸ்த்த பிராமணர்	163.4	175.0	151.4	75.8	87.2	66.7
தெ	60	பெஸ்தர்	165.7	181.0	155.0	75.9	100.0	63.3
க	30	தொரையர்	164.2	180.6	156.4	76.1	87.2	62.7
தெ	30	மாலர்	169.3	175.0	153.8	76.2	93.2	67.3
த	40	பட்டாணிய முகமதியர்	164.4	177.6	155.6	76.2	83.1	71.1
த	25	பட்டர் பிராமணர்	164.3	175.0	153.4	76.5	95.3	64.7
-	25	கோத்தர்-நீலகிரி	162.9	174.2	155.0	77.2	92.9	64.0
த	40	பள்ளி	162.5	171.6	149.8	77.3	90.5	68.3
த	40	கம்மாளர்	159.7	171.8	146.4	77.3	90.9	63.3
தெ	40	ஒட்டர்	164.4	172.4	155.0	77.3	93.0	65.4

க	40	பேடர், ஹொஸ்பெட்	155.4	176.6	156	77.5	93.0	78.1
தெ	40	மாதிகர் ஹொஸ்பெட்	162.9	173.4	152.2	77.5	90.1	66.7
தெ	30	தொடகர்	160.5	168.9	151.4	77.5	93.9	68.8
த	50	மலையாளி	163.9	173.2	153.2	77.8	100.0	63.8
தெ	25	கோமாட்டி, ஆதோனி	161.0	168.3	153.2	77.8	100.0	65.3
த	40	பள்ளியர்	162.5	169.4	151.0	77.9	95.1	60.8
ம	25	செறுமான்	157.5	166.4	145.8	78.1	88.9	69.6
த	50	சக்கிலியர்	162.2	174.5	150.3	78.9	97.6	64.0
ம	24	புலையர்	153.0	162.6	143.4	79.3	92.7	68.0
க	25	பேடர், ஆதேர்னி	165.4	176.2	156.6	79.4	91.0	65.2
த	40	பறையர்	162.1	171.4	149.4	80.0	91.8	66.0
ப	57	ஊராளியர்	159.5	171.6	147.8	80.1	97.7	66.7
த	40	இருளர்	159.9	166.8	150.2	80.4	90.5	79.0
தெ	30	மாதிகர், அதோனி	163.1	173.2	154.2	80.8	102.6	69.4
ம	40	மூக்குவர்	163.1	177.8	150.8	81.0	104.8	62.5
ம	18	காணிக்காரர்	158.7	170.4	148.0	81.2	90.5	10.8
த	50	பள்ளர்	164.3	177.6	151.5	81.5	100.0	68.8
ப	40	செஞ்சுகள்	162.5	175.0	148.0	81.9	95.7	68.1
ப	26	புலையர்	150.5	158.4	143.1	82.9	100.2	70.8
ப	20	காணிக்காரர்	155.4	170.3	150.2	84.6	105.0	72.3

	எண்.	சாதி அல்லது பழங்குடியினம்	உடல்வாகு			மூக்கின் விகித அளவு		
			ச.	மே.	கீ.	ச.	மே.	கீ.
ப	25	மலைவேடர்	154.2	162.8	14.80	84.9	102.6	71.1
ப	25	இருளர்	159.8	168.0	152.0	84.9	100.0	72.3
ப	20	சோழகர்	159.3	170.4	151.2	85.1	107.7	72.8
ப	22	குருபர்	158.0	167.0	149.6	86.1	111.1	70.8
ப	23	மலசர்	161.2	170.5	152.8	87.2	102.4	75.4
ப	23	காடர்	157.7	169.4	148.6	89.8	115.4	72.9
ப	25	பணியர்	157.4	171.6	152.0	95.1	108.6	72.9

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

அபிசேகர் - Abhishêka

சைவ ஆகமம் தொடர்பான சில சடங்குகள் நிகழ்த்திக் கொண்டவர்களே அபிசேகப் பண்டாரங்கள்.

அச்சுத் தாலி - Acchu Tāli

வாணியர்களின் ஓர் உட்பிரிவினர். இப்பெயர் திருமண மான இச் சாதிப் பெண்கள் அணியும் தாலியினை ஒட்டி யமைந்தது.

அச்சுவார் – Acchuvāru

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பொதிமாடுகளின் உதவியுடன் கூலம் சுமந்து செல்லும் ஒரிய மொழி பேசுவோர் எனவும் கவுடு சாதியின் உட்பிரிவினர் எனவும் பதியப்பட்டுள்ளது. அச்சுவரை ஒரிய மக்கள் என்று கூறுவதற்கில்லை. தேவாங்கர் சாதியாரோடு தொடர்புள்ள இவர்கள் நெசவுத் தொழிலில் பாவு ஒட்டும்பணியில் அவர்களுக்கு உதவியாக இருப்பதால் இப்பெயர் பெற்றனர். கைகோள நெச வாளர்களில் அச்சு வேலை செய்யும் சாதிப்பிள்ளைகளோடு ஒப்புமையுடையவர்கள் இவர்கள்.

அச்சுவேளாளர் - Acchu Vellāla

பட்டணவர் சூடிக்கொண்டுள்ள பெயர்.

அச்சன் - Achan

அச்சன், தந்தை அல்லது தலைவன் எனப் பொருள்படும்

சொல். 1901 கொச்சிக் கணக்கெடுப்பில் நாயர்களின் பட்டப் பெயராகத் தரப்பட்டுள்ளது. திரு வீக்ரம்* (Wigram) அவர்கள் கூற்றுப்படி இப்பட்டம் பின்வருபவர்களால் சூடிக்கொள்ளப் படுகிறது.

1. பாலக்காட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள்.
2. மாங்காட்டு அச்சன் என வழங்கும் கள்ளிக்கோட்டை, அரசரின் அமைச்சர்.
3. பாலியத்து அச்சன் என வழங்கும் கொச்சின் அரசரின் அமைச்சர்.
4. சேணி அச்சன் என வழங்கும் கள்ளிக்கோட்டை இரண்டாம் அரசரின் அமைச்சர்.

அச்சரப்பாக்கம் செட்டி - Acharapākam Chetti

செட்டிகளின் உட்பிரிவுகளுள் ஒன்று. பேரி செட்டிப் பிரிவோடு பொதுவாகச் சேர்த்து வழங்கப்படுவது. (பார்க்க: பேரி செட்டி)

ஆச்சாரி- *Āchāri:*

பார்க்க - **See *Ā*sari** ஆசாரி.

அடபடவா - Adapadava (Man of wallet)

அடைப்பைப் பை தூக்கிச் செல்லும் அம்பட்டர்களைச் சிறப்பாகத் தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைக் குறிப்பது.

ஆடபாபா - *Ā*dapāpa

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பலிசர்களின் உட்பிரிவாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பெயர் சமீன் தார் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்குப் பணிபுரியும் பணிப் பெண்களுக்கு உரியது. இவர்கள் திருமணம் செய்துகொள்ள

---

* மலபார் சட்டங்களும் வழக்குகளும். (Malabar Law and custom.)

உரிமை வழங்கப்படுவதில்லையாகையால் பரத்தையராக வாழ்க்கை நடத்துவர். இவர்கள் பிள்ளைகள் தங்களைப் பலிசர் எனக் கூறிக் கொள்வர். (பார்க்க: காச)

அடவி - Adavi

காடு என்னும் பொருள் தரும் சொல். ஏனாதியரின் உட்பிரிவில் ஒன்று. மைசூரைச் சார்ந்த கோல்லர்களிலும் இப்பிரிவு உண்டு.*

அடவியர் - Adaviyar

அடவியர் அல்லது அதவியர். இது தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் தமிழ் பேசுகின்ற நெசவாளர்க்கு உரிய பெயர்.

அடாகு - Addāku (*Bauhinia racemosa*)

ஜாதபர் சாதியின் ஓர் உட்பிரிவு. ஆத்தி, ஆர் எனப் பெயர் பெறும் மரபு இது. சென்னை நகரிலும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலும் இதன் இலைகள் உண்ணும் கலங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அடாபு சிங்கர் - Addapu Singa

தெலுங்கு நாட்டில் மங்கலர்கள் இல்லங்களில் மட்டும் இரந்து உண்ணும் பிரிவினர்.

அதிகாரி - Adhigāri:

திரு விக்ரம், இவர்கள் கிழக்குப் பகுதிகளுக்குரிய ஊர் மணியக்காரர்களைப் போலவும் தென் கன்னடப் படேல்களைப் போலவும்† மலபாரில் குடிமைத் தலைமைக்காரர்களாக உள்ளனர் எனக் குறித்துள்ளார். அதிகாரி என்ற பட்டத்தை

---

* 'எப். பாவ்செட், மனித இன இயல் கழக மடல். பம்பாய், 1,1888 F. Fawcett. Journal Anth. Soc. Bombay, 1, 1888)

† மலபார் சட்டங்களும் வழக்குகளு (Malabar Law and custom

அகமுடையார்களும் சூடிக் கொள்கின்றனர். படகர் இனத்தின் ஆறு உட்பிரிவுகளுள் அதிகாரி என்பதும் ஒன்று. ஓரியர் சாதியின் ஊர்த் தலைவனும் இப்பட்டம் சூடிக் கொள் கிறான். இது தென் கன்னடத்தில் ஸ்தானிகர் சாதியின் குலங் களில் ஒன்றின் பெயருமாகும்.

ஆதி – Ādi (primative or original)

முதலாவது, தொன்மையானது என்ற பொருளில் வழங்கும் சொல். இலிங்க பலிசரின் ஒரு பிரிவினருக்கும், வெலமர்களின் ஒரு பிரிவினருக்கும் வழங்கும் பெயர். இவர்கள் தங்கள் இனப் பெண்களின் பழக்கமாக இருந்து வந்த முறையைப் பின்னர் கைவிட்டுவிட்டனர். செஞ்சிட்ட என்ற துணைவியை நரசிம்ம மூர்த்திக்கு வழங்கிய செஞ்சுக்களின் பழங்குடியினருக்கும் இப் பெயர் உரியதாயுள்ளது.

அடிச்சன் – Adichchan

நாயர் சாதியின் ஓர் உட்பிரிவு.

அடிகள் – Adikal (slaves and servants)

அடிமைகள், பணியாளர் எனப் பொருள்படுவது. அம்பல வாசிகள் சாதியினைச் சேர்ந்தவர்கள். 1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் இவர்களைப் பற்றிப் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. "பிராமணர்கள் தங்கள் சாதி ஒழுக்கக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்கின்றனரா எனச் சோதிப்பதற் காகச் சங்கராச்சாரியார் கள்ளுக்கடைக்குச் சென்று கொஞ்சம் மது அருந்தினார். சங்கரரைப் போன்ற ஞானிகள் இது போன்ற உலகியல் சார்ந்த கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்என்ப தனையும், அவை ஞானிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தா என்பதனையும் அறியாத அவருடன் சென்ற பிராமணர்களும் அவர் குடித்ததைப் பின்பற்றிக் குடித்தனர். அடுத்துச் சங்கரர் ஓர் உருக்காலைக்குச்சென்று ஒரு கோப்பை உருக்கிய உலோகக் கலவையைக் குடித்தபின், இன்னொரு கோப்பையை ஆச்சாரி யர் செய்வதையெல்லாம் தாங்களும் செய்யத் தகுதி படைத்தவர் கள் என்ற எண்ணத்தோடு அவர் பின் சென்ற பிராமணர்களிடம்

கொடுத்தார். அப்போது அவர்கள் அவரிடம் தாங்கள் அவரது அடிமைகள் என்றும் தாங்கள் செய்த பாபத்திற்குப் பிராயச் சித்தமாகத் தங்கள் உயர் சாதி நிலையை விட்டுத் தாழ்ந்த படிக்குப் போய் விடுவதாகவும் கூறி அவரிடம் மன்னிப்பு வேண்டினர். இப்போது இவர்கள் மதுவகைகளைப் பூசையில் ஏற்றுக் கொள்ளும் பத்ரகாளி போன்ற தெய்வங்களின் கோயில்களில் பூசாரிகளாக உள்ளனர். இவர்கள் பில்லிசூன்ய வித்தை கற்றுப் பேய் பிசாசுகளை ஓட்டுவதில் துணை செய்கின்றனர். உப நயனம் செய்துகொண்டு பூணூல் அணியும் வழக்கம் இவர்களிடையேஉண்டு.சீமந்தச் சடங்கினை இவர்கள் செய்துகொள்வதில்லை. காயத்திரி மந்திரத்தைப் பத்து முறை சொல்வார்கள். சாவுத் தீட்டுப் பதினொரு நாள்களுக்குக் கடைப்பிடிப்பார்கள். இவர்கள் சாதியைச் சேர்ந்தவர்களே சடங்கு செய்யும் குருமார்களாக இருப்பர். அடியம்மமார் நம்பூதிரி வீட்டுப் பெண்கள் போலவே அணிமணி புனைவர். ஆனால் வெளியே செல்லும் போது நம்பூதிரி வீட்டுப் பெண்களைப் போல ஓலைக்குடையில் தங்களை மறைத்துக் கொள்வதோ, தங்களுடன் துணைக்கு நாயர் பணிப்பெண்களை அழைத்துச் செல்வதோ இவர்கள் வழக்கமில்லை.

அடிமிட்டம் – Adimittam

திருவாங்கூரில் கோயில் முற்றங்களைக் கூட்டிப் பெருக்கும் தொழில் செய்யும் மாராான்களின் ஓர் உட்பிரிவு.

ஆதிசைவர் - Ādisaivar

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் 'வேளாளர்களின் உட்பிரிவாகவும் சிவன் கோவில்களில் தேவாரம் ஓதுபவர்களாகவும்' பதியப்பட்டுள்ளனர். இப்பெயர், பின்னர் சைவர்களாக மாறியவர்களிலிருந்து தொடக்கத்திலிருந்தே சைவர்களாக இருப்பவர்களை வேறுபடுத்திக் காட்டுவதாகவும் அமையும். இலிங்காயத நெறியை மேற்கொண்டவர்கள் வீர சைவர் எனப்படுவர். வேளாளர்களின் உட்பிரிவான சோழிய வகுப்பைச் சேர்ந்த சில பண்டாரங்கள் சிவன் கோயில்களில் தேவார திருவாசகங்களை நாள்தோறும் சொல்லும் பணியைச்

செய்கின்றனர். இது அவர்களது தொழிலாகையால் அவர்கள் (படிப்பவர் அல்லது பாராது சொல்பவர் என்ற பொருளில்) ஓதுவார்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ஆதித்திய வ்ாரத்தர் – Āditya Vārada

ஞாயிறன்று கடவுள் வழிபாட்டினை மேற்கொள்ளும் குருபர்கள்.

அடியான் - Adiyān

அடியான் (அடி=பாதம்) அடிமை எனப் பொருள்படும். "இங்குத் தம்புரான் அல்லது செல்வாக்குள்ள செல்வர்களிடம் பணிபுரிபவர்கள் எனப் பொருள்படும். ஒவ்வொரு அடியனும் தான் அடிமை என்பதனை ஒப்பும் வகையில் தன் தலைவனுக்கு ஆண்டிற்கு ஒருமுறை இறை செலுத்துவதோடு அவர்கள் அழைக்கும்போது பணி செய்து உதவவும் முன் வருதல் வேண்டும். ஒன்று அல்லது இரண்டு பணத்திற்கு மேற்படாத இந்த இறை 'அடிமைப்பணம்' எனப் பெயர் பெறும்"* அடிமை என்பது பண்ணையாரைச் சார்ந்துள்ள குடிமகன் என்று இங்குப் பொருள் தருகின்றது.

அடியோடி - Adiyōdi

அடிமை அல்லது குடிமகன் எனப் பொருள்படும் இவ்வினத்தார் கணக்கெடுப்பில் சாமந்தனின் உட்பிரிவாகப் பதிந்து கொண்டுள்ளனர். "இது வட மலபாரைச் சேர்ந்த கதட்ட நாட்டு அரசரின் சாதிப் பெயராகும். கள்ளிக்கோட்டையிலிருந்து சாமூத்ரிகளால் விரட்டப்பட்ட இவ்வரசர் சிரக்கல் அரசரிடம் தஞ்சம் புக, அவர் கதட்ட நாட்டை இவருக்கு வழங்கிக் கப்பம் கட்டிக் குறுநில மன்னராக ஆள அனுமதித்தார். சில அடியோடிகள் தாங்கள் நாயர்களினும் தகுதியில்

---

* விக்ரம், மலபார் சட்டங்களும் வழக்குகளும். (Wigram, Malabar Law and Custom.)

உயர்ந்தவர்கள் எனப் போலிக் கௌரவம் பாராட்டுவதில்லை" எனத் திரு எச். எ. ஸ்டுவர்ட் (H. A. Stuart)* எழுதியுள்ளார்.

அடுத்தோன் - Aduttan

பக்கத்திருப்பவன் எனப் பொருள்படுவது. மலையாளத்தைச் சேர்ந்த காவுதியன் சாதி அம்பட்டர்களுக்கான மற்றுமொரு பெயர் இது. இதேபோலத் தமிழ் நாட்டு மயிர் வினைஞர்களுக்குரிய அம்பட்டன் என்பதும் அம்பா (பக்கம்) ஸ்த்தா (நிற்றல்) என்ற வடமொழி வேர்ச் சொற்களிலிருந்து தங்களிடம் முடிதிருத்தவோ, மருத்துவம் பார்க்கவோ வருவோரின் அருகு இருப்பவன் என்ற பொருளில் அமைந்த சொல் என்பர்.

அகமுடையார் – Agamudaiyan

"அகமுடையார் எல்லாத் தமிழ் மாவட்டங்களிலும் காணப்படும் பயிர்த்தொழில் செய்யும் சாதியார். செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் முப்பது ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விடக் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாகவே உள்ளனர். சமுதாயப்படி நிலையில் உயர்ந்துவிட்ட இவர்கள் தங்களை வேளாளர் எனப் பதிவு செய்துகொண்டது இதற்குக் காரணமாதல் கூடும். அதே காலக்கட்டத்தில் தஞ்சாவூரில் இவர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரட்டிப்பாகி உள்ளது. மறவர், கள்ளர் போன்ற பிற சாதியினர் அகமுடையார் என்ற இந்தச் சாதிப் பெயரைச் சூடிக்கொண்டது இதற்குக் காரணமாகலாம். இவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களில் பெரிதும் வேளாளர்களை ஒத்தவர்களாக உள்ளனர். மதுரை மாவட்டத்தில் இவர்களில் பலர் மறவர் குலச் சமீன்தார்களிடம் வீட்டு வேலை செய்பவர்களாக உள்ளனர்" என இவர்களைப் பற்றித் திரு டபிள்யூ. பிரான்சிஸ் (W. Francis) எழுதியுள்ளார்† வட ஆர்க்

* 1891 சென்னைக் கணக்கெடுப்பு அறிக்கை (Madras Census Report, 1891)

‡ 1901 சென்னைக் கணக்கெடுப்பு அறிக்கை, (Madras Census Report, 1901.)

காடு மாவட்டத்து அகமுடையார்களைப் பற்றிக் கூறும்போது எச். எ. ஸ்டுவர்ட்,* "பயிர்த்தொழில் செய்யும் இனத்தவர்களான இவர்கள் மதுரை மாவட்ட அகமுடையார்களினும் பெரிதும் மாறுபட்டவர்கள். முன்னவர்கள் வேளாளர்களோடு பெரிதும் ஒப்புமையுடையவர்கள். பின்னவர்கள் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்த தெற்கத்திய மறவர்களின் ஒரு பிரிவினராகவே கருதப்படுகின்றார்கள். வட ஆர்க்காட்டைச் சேர்ந்த அகமுடையார்கள் மதுரையிலிருந்து முதலில் வந்துகுடியேறியவர்களின் வழி வந்தவர்களாகலாம். வடக்கில் நீண்ட காலமாகத் தங்கிவிட்ட இவர்கள் பின்னர் தெற்கத்திய, தங்கள் தாயாதிகளோடு முழுவதும் தொடர்பு விட்டுப் போனவர்களாகலாம்" என்கிறார். சில மாவட்டங்களில் அகமுடையார் என்ற சாதிப் பெயர் வேளாளர், பள்ளியர், மேளக்காரர் ஆகியவர்களால் தங்கள் சாதிப் பெயரைவிட உயர்ந்ததாகக் கருதிச் சூடிக் கொள்ளப்படுகிறது.

அகமுடையார் என்ற சாதிக்கு உரியவர்கள் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில், "அகமுடையார் என்ற பெயர் பல பொருள் தரும் 'அகம்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. அகம் என்பதன் பல பொருள்களில் வீடு என்பதும், நிலம் என்பதும் அடங்கும். அச் சொல் உடையார் என்ற விகுதி பெற்று வீடுடையார், நிலமுடையார் என்பது போல உரிமை உணர்த்தும். அகமுடையார் என்ற சொல்லாக்கமும் அத்தகையதே. இச்சொல் 'அகம்' என்பதன் மற்றொரு பொருளான உள்ளே என்பதன் பொருளமைய 'அகம் பாடியன்' எனப் பொருள் கொள்ளப்பட்டு அரசர்களின் அரண்மனை, கோயில்கள் ஆகியவற்றின் உள்ளே காரியம் பார்க்கும் அதிகாரி எனப் பொருள் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது" எனக் கூறப்பட்டுள்ளது.

"ஜி. யு. போப் பாதிரியார் அவர்கள் தம்முடைய

---

* வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு. (Manual of North Arcot District.)



அகமுடையார் - மதுரை மாவட்டத்தவர்

அப்பெதுபைஸ்'* (Abbé Dubois) பதிப்பில் அகமுடையார் என்ற இப்பெயர் அகம் என்பதும், வாசல் எனப் பொருள்படும் படி என்பதும் இணைந்து கோயில் வாயில்களில்பணிபுரிந்தவர்களைக் குறிப்பதாகும் எனக் குறித்துள்ளார். மதுரையில் உள்ள கோயில் களின் வாயில்களில் உயரச் செல்லப் படிகள் இல்லை என்பதோடு கூட, இது மிகவும் வலிந்து பொருள் வருவிக்கப்பட்ட விளக்க மாகவே படுகின்றது. நான், இச்சொல்லைத் தமிழ்ப் பிராமணர் களால் மரியாதை காரணமாக அழைப்பதற்குரியதல்லாதது எனக் கருதப்படும் கணவன் என்ற சொல்லுக்குப் பதிலாக அடிக்கடி எங்கும் பயன்படுத்தும் அகமுடையான் என்ற சொல்லின் கீழான சிதைந்த வடிவம் என்றே கருதுகின்றேன். அல்லது இது நிலம் எனப் பொருள்படும் அகம் என்ற சொல்லும், உரிமையுடையவன் எனப் பொருள்படும் பதி என்பதும் இணைந்து அகமுடையான் என வந்திருக்க வேண்டுமெனக் கருதுகின்றேன்" என்று திரு ஜெ. எச். நெல்சன் (J. H. Nelson) எழுதுகின்றார்‡.

மறவர், கள்ளர், அகமுடையார் (பார்க்க: கள்ளர்) ஆகிய மூவருக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்கும் கீழ்க்கண்ட ஒரு பழைய கதை வழங்கி வருகின்றது. அகல்யாவின் தந்தை அவளை ஆயிரம் ஆண்டுகள் நீரில் மூழ்கி இருப்பவனுக்கே மணம் செய்து கொடுப்பதாக முடிவு செய்திருந்தார். இந்திரனால் ஐந்நூறு ஆண்டுகளே நீரில் மூழ்கியிருக்க முடிந்தது. ஆனால் கௌதமரோ குறிப்பிட்ட ஆயிரம் ஆண்டுகள் நீரில் மூழ்கியிருந்து அகலிகையை மனைவியாகப் பெற்றார். இந்திரன் எப்படியேனும் அவளைக் கூட வேண்டும் என்ற முடிவோடு ஒரு சேவலின் வடிவில் நள்ளிரவில் கௌதமரின் இருப்பிடத்தை அடைந்து கூவினான். விடியற்காலம் நெருங்கிவிட்டதாக எண்ணிய கௌதமர் எழுந்து ஆற்றை நோக்கிக் குளிக்கச் சென்றார். அவர் வெளிச் சென்ற சமயத்தில் இந்திரன்

---

* இந்திய மக்களின் பண்பாடும் பழக்க வழக்கங்களும் பற்றிய விளக்கம். (Description of the character, manners and customs of the people of India.)

‡ மதுரை மாவட்டக் கையேடு. (Manual of Madurai District.)

அவருடைய உருவந்தாங்கித் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டான். மறவர், கள்ளர் குல முதல்வர்களான இரு குழந்தைகள் தனக்குப் பிறந்த பிறகே அகல்யா தான் ஏமாந்து போனதைத் தெரிந்து கொண்டாள். மூன்றாவதாக ஒரு குழந்தை பிறந்தது. அதன் வழி வந்தவர்களே அகமுடையார்கள். இந்த வரலாற்றின் இன்னொரு மாற்று வடிவப்படி முதலில் பிறந்த குழந்தை கௌதமர் முன் அச்சமின்றி நேர் நின்றது. அதனால் அவன் அகம்-உள்ளம்-பெருமிதம்-உடையான் என்ற பொரு ளில் அகமுடையான் என வழங்கப்பட்டு இச்சொல் அமைந்தது எனக் கூறுவர். கள்ளன் மறவனாகி விட முடியும் என்ற தமிழ்ப் பழமொழி வழக்கு ஒன்று உள்ளது. அவனே பின்னர் மரியாதைக் குரியவனாகி அகமுடையானாவான். அடுத்து மெல்ல மெல்ல வேளாளன் ஆகி இறுதியில் முதலியார் என்ற நிலைக்கு உயரு வான்.

கள்ளர், மறவர், அகமுடையார் என்ற மூவருள்ளும் "அகமுடையாரே பிராமணர்களின் செல்வாக்கிற்கு மிகுதியும் ஆட்பட்டுள்ளனர். பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் தொடர்பான சடங்குகளின்போது வேளாளரைப் போலவே இவர்கள் பிராமணக் குருக்களை அமர்த்திக் கொள் கின்றனர்."*

கணக்கெடுப்பின்போது அகமுடையார் தங்களைக் கள்ளர், மறவர் சாதியின் உட்பிரிவினர் எனவும் பதிந்துள்ளனர். சிலவிடங்களில் அகமுடையார் தங்களைச் செம்புநாட்டு மறவர்கள் வழி வந்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் அகமுடையார் தெற்கத்தியார் என அழைக்கப்படுகின்றனர். தெற்கத்தியார் என்ற இப்பெயர் கள்ளர், மறவர், வலையர் ஆகியவரையும் குறிக்கும். சேர்வைக் காரன் என்பதே அகமுடையார் பொதுவாகச் சூடிக் கொள் ளும் பட்டப்பெயர். பலர் தங்களை வேளாளர், பிள்ளை என் றும் அழைத்துக் கொள்கின்றனர். கணக்கெடுப்பின்போது

---

* சென்னை மக்கள் கணக்கெடுப்பு, 1891. (Madras Census Report 1891.)

அதிகாரி, முதலியார் எனத் தங்களைப் பதிந்து கொண்டவர்களும் உளர்.

1891 கணக்கெடுப்பின்போது அகமுடையார்களின் உட்பிரிவுகளாகப் பதிவுபெற்ற பிரிவுகள் ஐவழி நாட்டான், கோட்டைப்பட்டு, மலைநாடு, நாட்டுமங்கலம், இராச்போசா, இராசகுலம், இராசவாசல், கள்ளன், மறவன், துளுவன் (ஒப்பு நோக்குக: துளுவ வேளாளர்) சேர்வைக்காரன் என்பனவாம். இராசவாசல் என்ற பெயர் அரசர்களிடம் பணியில் இருந்தவர்கள் என்பதைக் குறிப்பதோடு, அரசர்களோடு குடியுறவுடையவராக அரசர் ஆதரவு பெற்றவர்களையும் குறிக்கும். கோட்டைப்பட்டு கோட்டையில் வாழ்பவர்களைக் குறிக்கும். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டை வேளாளர்கள் உண்மையில் கோட்டைப்பட்டு அகமுடையார்களே என இவர்கள் நம்புகின்றனர். மறவர்களைப் போலவோ, கள்ளர்களைப்போலவோ அகமுடையாரிடையே கிளைகள் எனப்படும் தனிக்குலங்கள் இல்லை.

"மறவர்களுள், அரசர்களோ மாவட்டத் தலைவர்களோ சிறப்பான தகுதி பெற்றவர்களோ அகமுடையார் சாதியைச் சேர்ந்த பெண்களுக்குத் தாலி கட்டி மணம் செய்து கொள்வதுமுண்டு. இத்தகைய மணங்களின்வழிப் பிறக்கும் பெண்கள் மறவர்களை மணக்கலாம். ஆனால் அவர்கள் அகமுடையார் சாதியினுள்ளே மணந்து கொள்ள இயலாது. இதற்கு மாறாக அவர்களுக்குப் பிறக்கும் ஆண் சந்ததிகள் தாயின் சாதியைச் சேர்ந்தனவாகக் கருதப்பட்டு அகமுடையார்களுக்குள் மணம் புரிந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மறவர் சாதியில் மணம் புரிய அனுமதிக்கப் படுவதில்லை." என மெக்கென்சி (Mackenzie) கையெழுத்துப் பிரதிகளில் குறிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக மறவருக்கும் அகமுடையார்களுக்கும் இடையே நடைபெறும் திருமண உறவில் பிறக்கும் குழந்தைகள் அகமுடையாராகவே கருதப்படுவதாக நான் கேள்விப்பட்டேன். மறவர் சாதியைச் சேர்ந்த கணவன், செல்வமும் செல்வாக்கும் படைத்தவனாயின் பிறக்கும் ஆண்குழந்தைகள் மறவராகக்

கொள்ளப்படுகின்றனர், வயது வந்த பிறகு மணம் புரிவித்தலே அகமுடையாரிடையே உள்ள பழக்கம் எனத் தெரிகிறது. சில சமயங்களில் கள்ளர், மறவர் சாதிகளில் நடைபெறுவதுபோலச் சிறுவர்களுக்கு அவர்களைக் காட்டிலும் வயதில் மூத்த பெண்களைமணமுடித்து வைப்பதும் உண்டு.

ஏழைகளான அகமுடையார் குடும்பங்களில் மணச்சடங்குகள் எளிமையாக நடைபெறும், சில பெண்கள் மணப்பெண்ணுக்குரிய ஆடைகள், சில நகைகள், பூ முதலானவைகளை உடன் எடுத்துவர, மணமகனின் உடன்பிறந்தவள் மணமகள் வீட்டிற்குச் செல்வாள், கொண்டுவரப்பட்ட புத்தாடைகளை அணிவித்து மணமகளைச் சுவரோரமாகக் கிழக்குப்பார்த்துப் பலகையில் உட்காரச் செய்வர். வெற்றிலை பாக்கு, பூ முதலியவற்றை மணமகனின் உடன்பிறந்தவள் அவளுக்குப் பரிசு அளிக்க அவள் அவற்றைத் தன் மடியில் ஏற்றுக் கொள்வாள், மஞ்சள் பூசப்பட்ட கயிறோ, மாலையோ மணமகன உடன் பிறந்தவளால் சங்கும், இசைக்கருவிகளும் முழங்க மணப் பெண்ணின் கழுத்தில் அணிவிக்கப்படும், அதே நாளில் மணமகள் மணமகனின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவாள். அதன்பின் விருந்து நடைபெறும்.

செல்வ வளம் மிக்க அகமுடையார் வைதீக நெறியில் மணத்தை நடத்துவர். பெரும்பாலான தமிழ்ச்சாதியார் சிற்சில மாற்றங்களுடன் வைதீக நெறிப்படியான மணத்தை நடத்துவதே வழக்கமாக இருந்து வருகிறது. கீழே தரப்பட்டுள்ள பொருத்தங்களில் ஒரு சிலவற்றிலாவது ஆணும் பெண்ணும் பொருத்தமுடையவர்களாக உள்ளனரா எனக் காண முதலில் சோதிடம் பார்க்கப்படும். இதற்காக ஆண், பெண் ஆகிய இருவரின் பிறந்த நாள், இராசி, கிரக நிலை, நட்சத்திரம் ஆகியன ஆராயப்படும்.

1. வாரம் (பிறந்த நட்சத்திரம்) நாள்கள் அமாவாசையிலிருந்து எண்ணப்படுகின்றன. பெண் பிறந்த நட்சத்திரத்திலிருந்து எண்ணினால் ஆணின் பிறந்த நட்சத்திரம் நான்கு, ஏழு, பதின்மூன்று, பதினாறு, பதினேழு என அமைவது நல்ல பொருத்தம் எனக் கருதப்படுகிறது.

2. கணம் (பிரிவு): மனிதன், தேவன், இராட்சசன் என மூன்று கணங்கள் உள்ளன. அசுவனி, பரணி முதலான நட்சத்திரங்களில் சில மனித கணத்திற்குரியனவெனவும் சில தேவ கணத்திற்குரியனவெனவும் சில இராட்சச கணத்திற்குரியன வெனவும் வகுத்து அமைத்துள்ளனர். அஸ்தம், சுவாதி இரண்டும் தேவ கணத்திற்குரியன. பரணி, ரோகிணி, பூரம், பூராடம், உத்தி ராடம் முதலியன மனித கணத்தைச் சேர்ந்தவை. இராட்சச கணத்தில் கார்த்திகை, ஆயில்யம், மகம், விசாகம் ஆகியன அடங்கும். முடிந்த அளவு மணம்புரிய இருப்போர் ஒரு கணத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது உத்தமம். மனித கண மும் தேவ கணமுமாக இருப்பது மத்திமமாகும். மனித கண மும் இராட்சச கணமுமாக இருப்பதோ, தேவ கணமும் இராட்சச கணமுமாக இருப்பதோ அதமமானதாகும்.

3. பெண்ணின் தீர்க்காயுசு: மணமகனின் நட்சத்திரம் பெண்ணின் நட்சத்திரத்திலிருந்து எண்ணும்போது பதின்மூன் றுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும்.

4. யோனிப் பொருத்தம்: நட்சத்திரங்கள் பலவகை விலங்குகளுக்கு உரியனவாக வகுக்கப்படுகின்றன. ஒருவன் எந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ளானோ அந்த நட்சத்திரத்திற் குரிய விலங்கைச் சேர்ந்தவனாவான். உதாரணமாக ஒருவன் நட்சத்திரம் அசுவனியாகில் அவன் குதிரையாவான்: உத் திரட்டாதியாயின் பசுவாவான். கணவன் மனைவிக்குரிய விலங்குகள் தங்களுக்குகுள் நட்புரிமை உடையனவாக இருக்க வேண்டுமேயன்றிப் பகையாக இருக்கக்கூடாது. யானையும் மனிதனும், குதிரையும் பசுவும், நாயும் குரங்கும், பூனையும் எலியும் தங்களுக்குள் பகையுடையன. கணவன் மனைவி இரு வருடைய விலங்குகளும் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கவும் கணவனது விலங்கு பெண்ணாகவும், மனைவி யினது விலங்கு ஆணாகவும் இருத்தலுங்கூடாது.

5. இராசிப் பொருத்தம்: பெண்ணினுடைய இராசியிலிருந்து எண்ணும்போது ஆணினுடைய இராசி ஆறுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

6. இராசிக்குரியவன் பொருத்தம்: பெண்ணின் இராசிக்குரிய கிரகமும் ஆணின் இராசிக்குரிய கிரகமும் தங்களுக்குள் பகையாக இருத்தல் கூடாது.

7. வசியப் பொருத்தம்: பெண்ணின் இராசியும் ஆணின் இராசியும் தங்களுக்குள் இணக்கமுடையனவாக இருக்க வேண்டும். மிதுனமும் கன்னியும், சிங்கமும் மகரமும், தனுசும் மீனமும், துலாமும் மகரமும் தங்களுக்குள் இணக்கமுடையவை.

8. இரச்சுப் பொருத்தம்: இரச்சு என்றால் கயிறு. மூன்று முக்கோணங்களின் குறுக்கே வரையப்பட்ட நான்கு இணைக் கோடுகளில் இருபத்தேழு நட்சத்திரங்களும் அமைக்கப் பெறும். இக்கோடுகள் கால், தொடை, வயிறு, கழுத்து இரச்சுக்கள் என அழைக்கப்படுகின்றன. முக்கோணங்களின் மேல் முனைகள் தலை இரச்சாம். மணமக்களின் நட்சத்திரங்கள் ஒரே இரச்சில் அமைதல் கூடாது. கழுத்து இரச்சில் அவை அமைவது மிகக் கெடுதலானது எனக் கருதப்படுகிறது.

9. விருட்சப் பொருத்தம்: ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒரு மரம் உரியது.

அசுவனி	- எட்டி
பரணி	- நெல்லி
கார்த்திகை	- அத்தி
பூரம்	- பலா
அஸ்தம்	- ஆத்தி
திருவோணம்	- எருக்கு
உத்திரட்டாதி	- வேம்பு

சில மரங்கள் வறண்டவை எனவும், சில பாலுள்ளவை எனவும் வகுக்கப்பட்டுள்ளன. மணமகன் நட்சத்திரத்திற்குரிய மரம் வறண்டதாக இருக்க வேண்டும். மணமகள் நட்சத்திரத்திற்கு உரியது பாலுள்ளதாக இருக்கவேண்டும் அல்லது இரண்டும் பாலுள்ளனவாக இருக்கவேண்டும்.

10. பட்சிப் பொருத்தம்: நட்சத்திரங்களுக்கென்று தனியே

பறவைகள் உள்ளன. மணமகன் மணமகள் நட்சத்திரத்திற்குரிய பறவைகள் மயிலும் சேவலும் போலத் தங்களுக்குள் நட்புடையனவாக இருக்க வேண்டும்.

11. சாதிப் பொருத்தம்: பன்னிரண்டு ராசிகளும் பின்வருமாறு சாதி அமைப்பின் பாற்படும்.

பிராமணன்	- கடகம், மீனம், தனுசு
சத்திரியன்	- மேடம், விருச்சிகம்
வைசியன்	- கும்பம், துலாம்
சூத்திரன்	- ரிஷபம், மகரம்
தாழ்ந்த சாதி	- மிதுனம், சிங்கம், கன்னி

பெண்ணைவிட ஆணின் ராசி உயர்ந்த வருணத்ததாக இருத்தல் வேண்டும்.

மணமக்களின் பொருத்தம் பார்த்தபின் மணமகனின் நெருங்கிய உறவினர் சிலர் வடக்கு நோக்கிச் சென்று நிமித்தத்திற்காகக் காத்திருப்பர். நல்ல நிமித்தம் கிடைக்குமாயின் திருப்தியுற்றுத் திரும்புவர். சிலர் இவ்வாறு நிமித்தம் பார்க்கப் போவதற்குப் பதிலாகக் கோயிலுக்குச் சென்று பூக்கேட்பர். அல்லது பூ எத்திசையில் விழுகின்றது எனப் பார்ப்பர். அல்லது பூக்கட்டிப் போட்டு எடுப்பர். கட்டிப் போட்டவைகளிலிருந்து எடுத்த பூவின் நிறம் அவர்கள் மனத்தில் நினைத்த பூவின் நிறமாக இருக்குமானால் அது நல்ல நிமித்தமாகக் கொள்ளப்படும். மண வரைவு (நிச்சயதார்த்தம்) ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும். எல்லோரும் வந்துகூடியபின் மணமகனைச் சேர்ந்தவர்கள் அவர்கள் நடுவே பரிசப் பொருள்களான ஆடைகளையும் நகைகளையும் வைப்பர். சில பெரியவர்கள் அதனைப் பார்வையிட்டு எல்லாம் சரியாக இருக்கிறது எனக் கூறியபின் மணநாள் குறித்த வரைவு எழுதப்படும். இது மண நாளும் நேரமும் குறிக்கப்பட்ட அழைப்பிதழ். பின்னர் அதனைக் கணபதியின் முன் வைத்து வழிபடுவர். இதன்பின் புரோகிதர் நடைபெறப் போகும் திருமணத்தைப் பற்றியும் பரிசப் பணம் பற்றிய விவரங்களையும் அனைவருக்கும் அறிவிப்பார். மணத்திற்காகப்

பந்தலிட்டு அதன் நடுவே களிமண்ணாலும் சல்லியாலும் மணமேடையமைப்பர். பந்தலிட்ட நாளிலிருந்து மணநாள்வரை மணம் செய்துகொள்ளும் மணமக்கள் தனித்தனியாகவோ ஒன்றாகவோ நலங்குச்சீர் செய்துகொள்ள வேண்டும். இச்சடங்கின்போது அவர்களுடைய உடலில் நல்லெண்ணெயும் மஞ்சள் கலவையும் பூசப்படும். மணநாளன்று மணமகன் முகமயிர் களைந்தபின் மணமகள் இல்லம் நோக்கிச் செல்வான். மணமகளின் கை, கால், விரல் நகங்கள் வெட்டப்படும். பின் மணமக்கள் குலதெய்வத்திற்குப் பொங்கல் வைத்து வழிபாடு செய்வர். மண மேடையில் நெருப்புமூட்டச் சதுரமான இடப் பரப்பு தூய்மை செய்யப்படும். இந்திரனை நினைவூட்டும் வகையில் குத்து விளக்கேற்றி அவ்விடத்தின் கிழக்குப்பக்கம் வைக்கப்படும். எமனுக்குச் சமமாக எண்ணப்படும் புரோகிதரும், அக்கினிதேவனாகக் கருதப்படும் பானை மேல் ஏற்றிய விளக்கும் அவ்விடத்தின் தென்கிழக்கு மூலையில் இடம் பெறுவர். நிருதி தேவதையைக் குறிக்கும்படியாகப் பெண்கள் தென்மேற்கு மூலையில் நிறுத்தி வைக்கப்படுவர்.

வருணனின் திசையான மேற்குப் பக்கத்தில் மணமகன் அமர்வான். மணமகன் துணைவன் வாயு தேவனைக் குறிக்கும் வகையில் வடமேற்கு மூலையில் இடம் பெறுவான். குபேரனு டைய திசை வடக்காகையால் அத்திசையில் ஒருவன் பணப் பையுடன் அமர்த்தப்படுவான். சிவனையும் சக்தியையும் குறிக் கும் வகையில் அம்மியும் குழவியும் வடகிழக்கு மூலையில் வைக் கப்படும். அவற்றின் அருகே நவதானியங்களின் முளைப்பாலிகை இடம்பெறும். அம்மிக்கல்லுக்கும் குத்து விளக்குக்கும் இடையே ஏழு பானைகள் வரிசையாக இடம்பெறும். திருமணமான பெண்கள் ஏழிடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து விளக்கின் முன்னுள்ள பானைகளை நிரப்புவர். குத்து விளக்குக்கும் பானைகளின் வரிசைக்கும் இடையே பால் கம்பம் நடப்படும். இந்தக் கம்பம் பிரம்மா, விட்டுணு, சிவன் ஆகிய மூவரையும் குறிக்கும் வகையில் அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்று மரங்களின் கிளைகளை ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்ட கம்பமாகும். சில சமயங்களில் ஒதிய மரக்கிளை யையும் மூங்கிலையும் இவற்றிற்குப் பதிலாகப் பயன்படுத்துவர்.

திருமணச் சடங்குகளின் முடிவில் முருக்கு அல்லது ஒதிய மரக்கிளை நடப்படும். அது வேர்விட்டுத் தழைத்து வளருமேல் அதனை நல்ல அடையாளமாகக் கருதுவர். நெருப்பு வளர்க்கப் பட்ட பின் மணமகனுக்குப் பூணூல் அணிவித்தல் முதலிய சடங்குகள் நிகழ்த்தப்படும். பிறகு மணமகன் பரதேசிக் கோலம் பூண்டு வீட்டைவிட்டு வெளியேறுவான். மணப்பெண்ணின் தந்தை அவனைத் தடுத்துப் பந்தலுக்கு அழைத்து வருவார். பின்னர் மணப்பெண்ணின் தாயும் தந்தையும் அவன் பாதங் களைக் கழுவி விரலில் மெட்டி அணிவிப்பர். புரோகிதர் மண மகனுக்குக் கங்கணம் வழங்குவார். மணமகளின் தாய் தந்தை யரின் பாதங்களைக் கழுவியபின் மணமகன் கங்கணத்தைத் தன் மணிக்கட்டில் அணிவான். மணமகளின் இட மணிக்கட்டிலும் கங்கணம் அணிவிக்கப்படும். பின்னர் மணமக்களைப் புனித நெருப்பின் முன் அமர்த்தி நாந்தி சிரார்த்தம் எனப்படும் குல முதல்வர்களுக்கு வழிபாடு செய்தபின் மணமக்களுக்குப் புத்தாடைகள் வழங்கப்படும்.

அடுத்துத் தாலி கட்டும் சடங்கு நடைபெறும். தாலியை மஞ்சள் பூசிய நூலில் கோத்துத் தேங்காய் மீதுவைத்துக் கூடி யிருக்கும் அனைவரும் வாழ்த்தும்படியாக எல்லோருக்கும் காட்டு வர். பிறகு புரோகிதர் தாலியை மணமகனிடம் தந்து வாத்திய இசை முழங்க மணமகளின கழுத்தில் கட்டும்படி செய்வார். தாலிகட்டும்போது மணமகனின் உடன்பிறந்தவள் மணமகளின் பின் ஒரு விளக்கினை ஏந்தி நிற்பாள். மணமகன் தாலியில் ஒரு முடிச்சிட அவன் உடன் பிறந்தவள் எஞ்சிய இரண்டு முடிச்சு களை இடுவாள். அதன்பின் தங்கத்தாலோ வெள்ளியாலோ, ஆன தகடுகளை நெற்றியில் கட்டும் பட்டம் கட்டுதல் நிகழும். பின் உறவினர்களும் நண்பர்களும் மணமக்களுக்குப் பரிசுகளை வழங்குவர். மணமக்கள் அதன்பின் மணப்பந்தலை ஏழுமுறை வலம்வந்து ஏழாவது சுற்றின்போது அவர்கள் அம்மிக்கல்லின் அருகே நிற்பர். அப்போது மணமகன் மணமகளின் இடப் பாதத்தை எடுத்து அம்மியின் மேல் வைப்பான். பின் அவர்கள் இருக்கையில் அமர மணமகன் மணமகளின் உடன்பிறந்தவர் களிடமிருந்து கொஞ்சம் பொரியை எடுத்துப் புனித நெருப்பில் இடுவான். மணமக்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு

அவர்கள் அவற்றை மூன்று முறையோ ஐந்து முறையோ மாற்றிக் கொள்வர். அவர்கள் அதன்பின் பூமாலையாலான பந்தினை உருட்டுவர். அடுத்து ஆரத்தி எடுக்கப்பட்டு மண மக்கள், மணப்பெண்ணின் தோழி, மாப்பிள்ளைத்தோழன், விளக்கு, தண்ணீர் நிறைந்த குடம், கண்ணாடி, அங்குசம், வெண் சாமரம், கொடி, மத்தளம் ஆகிய மங்கலப் பொருள்கள் உடன் வர மணப்பந்தலை மும்முறை சுற்றி வருவர். முதல் சுற்றின் போது அம்மியின் அருகே தேங்காய் உடைக்கப்பட்டு மண மக்களுக்கு அம்மி சிவனார் என்றும், குழவி சக்தி என்றும், இரண்டும் இணைந்து உருவகமாக அர்த்தநாரீசுவரராக விளங் கும் சிவனையும் பார்வதியையும் உணர்த்துவதாகவும் அறிவுறுத் தப்படும். இரண்டாம் சுற்றின்போது மீண்டும் மணமக்களுக்கு அருந்ததியின் கதை கூறப்படும். வசிட்ட முனிவரின் மனைவி யாகிய அருந்ததி கற்புடைத் தெய்வமாகப் போற்றப்படுபவள். விடிவெள்ளியை அருந்ததியாகக் கருதிப் புரோகிதர் மணமக்க ளுக்கு அதனை மணச்சடங்கின் இறுதியில் காட்டியபின் மூன்று தீ வளர்ப்புக்களோடு திருமணம் முடிவுறும். திருமண நிகழ்ச்சி கள் ஒரே நாளில் முடிவதும் உண்டு; இரண்டு, மூன்று நாள்கள் நீடிப்பதும் உண்டு.

இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோ செய்கின்றனர். பிணத்தை எரிக்கும் அல்லது புதைக்கும் சுடுகாட்டிற்குப் பாடையிலோ, பல்லக்கிலோ கொண்டு செல்வர். அக முடையார் சைவர்கள். ஆகையால் சாவுச் சடங்குகளுக்குப் பண் டாரங்கள் உதவியாக இருப்பர். இரண்டாவது அல்லது மூன்றா வது நாள் இறந்து போனவருடைய மகனும் மற்றவர்களும் பிணத்தைப் புதைத்த அல்லது எரித்த இடத்திற்குச் சென்று இறந்து போனவருக்கு உணவு முதலியன படைப்பர். அவ்வீடத் தில் ஒரு பானையில் தண்ணீர் வைத்து வருவர். சாவுச் சடங்கு களை விரிவாக நடத்த விருப்பமுள்ளவர்கள் இறந்து போன வரின் ஆவிக்குப் பதினைந்து நாள்களுக்குச் சமைத்த உணவு படைத்துப் பதினாறாம் நாளன்று கருமாந்திரச் சடங்கினை நடத்துவர். அப்போது பிராமணர்களுக்குப் பரிசுகள் வழங்கு வர். தூய்மையாக்கும் நீர் தெளித்துச் சாவுத் தீட்டினைப் போக்கிய பின் விருந்து வைப்பர்.

அய்யனார், பிடாரி, கருப்பணசாமி போன்ற பல சிறு தெய்வங்களை அகமுடையார் வழிபடுகின்றனர்.

அகரு அல்லது அவரு - Agaru

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் இது விசாகப் பட்டினம், கஞ்சம் மாவட்டங்களைச் சேர்ந்த காய்கறி, வெற்றிலை விற்கும் சிறு சாதி எனப் பதியப்பட்டுள்ளது. ஒரிய மொழிக் கலப்பினை மிகுதியாகக் கொண்ட 'பாஷா' என வழங்கப்படும் இவர்கள் மொழியில் அகரு என்பது வெற்றிலையைக் குறிக்கும். விசயநகரத்திற்கு அருகிலுள்ள நெல்லிமெர்லாவில் பரவலாக அகருகளின் குடியிருப்பு உள்ளது. ஆணும் பெண்ணுமாக வெற்றிலைக் கொடிக்காலில் உழைத்து இவர்கள் பயிரிடும் பலவகைப்பட்ட வெற்றிலைகளும் விசயநகரம் சந்தையில் நன்கு விலை போகின்றன. பெண் பூப்பெய்திய பின்பே ஓரியப் பிராமணப் புரோகிதரை வைத்துத் திருமணம் செய்கின்றனர். இறந்தவர்கள் எரிக்கப்படுகின்றனர்.

அகர்வால் - Agarwāl

வட இந்தியாவைச் சார்ந்த வணிகர் சாதியினரான இவர்கள் கூலம், நகைகள், வட்டிக்கடை, தகாவட்டி ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருப்பதாகக் கணக்கெடுப்புகளின் பதிவிலிருந்து புலனாகின்றது.

அகசர் - Agasa

தென் கன்னட மாவட்டத்தில் நன்கு அறியப்பட்ட மூன்று வண்ணார் குலத்தவர்கள் வாழ்கின்றனர். (1) கொங்கணக் கிறித்தவர்கள் (2) மைசூரிலுள்ள அகசர்களோடு தொடர்புடையவர்களாகத் தெரியவரும் கன்னடம் பேசும் வண்ணார் (3) துளு பேசும் வண்ணார். இவர்களுள் துளு பேசும் அகசர் பெண் வழிச் சொத்துரிமை தரும் அளிய சந்தானத் தாயமுறையைப் பின்பற்றுபவர்கள். மதிவாலா (மதி - தூய துணி) என்பது அகசர் என்பதோடு ஒத்த பொருளுடையது. அகச என்ற சொல் உருமாலையைக் குறிக்கும் அகசி என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்.

மைசூரைச் சேர்ந்த அகசர் பற்றிய விவரங்கள் வருமாறு*:- "அகசர் ஊர்ப் படிநிலை அமைப்பில் பரம்பரை உரிமையுடைய ஊர் உழவர்களிடமிருந்து தானியத்தைக் கூலியாகப் பெறும் உறுப்பினர். இவர்கள் துணி துவைக்கும் தொழிலோடு கூட அவ்வப்போது தமது கழுதைகளில் தானியங்களைச் சுமந்து கொண்டுபோய்க் கொடுத்து வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதும் உண்டு. திருமணங்களிலும் பிற பொது நிகழ்ச்சிகளிலும் ஒளிப் பந்தம் பிடிக்கும் பணியையும் இவர்கள் செய்வர். அழுக்குத் துணிகளை நனைக்கத் தண்ணீர் கொதிக்க வைக்கும் பானையே இவர்கள் முக்கிய வழிபாட்டுக்குரிய பொருள். வெள்ளாவி வைக்கும் பானையில் துணிகள் வெந்து போகாமல் இருக்கத் தெய்வத்திற்கு விலங்குகளைப் பலியிடுவர். பூமாதேவன் எனப் பெயர்கொண்ட இத்தெய்வத்திற்குப் பேரூர்களில் கோயில்கள் உள்ளன. அங்கு அகசர் சாதியைச் சேர்ந்த பூசாரிகளே வழிபாடு நடத்துகின்றனர். அகசர் வைணவர்கள். விட்டுணு, பட்டாலம்மா, சக்தி ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். இவர்கள் குருமார்கள் சாதானிகள். பூப்பெய்தும் முன் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட ஒரு பெண் பூப்படையின் அச்செய்தியினைச் சில பரிசுகளோடு அவள் கணவன் வீட்டில் சென்று அறிவித்து அங்குத் தக்க பரிசில் பெறும் உரிமை இவர்களுடையதாகவே இருந்து வருகிறது.

தென் கன்னடத்தைச் சேர்ந்தவர் துளு பேசும் மதிவாளர்கள், மற்ற துளு சாதியினரைப் போலப் பல குலப் பிரிவுகளையுடையவர்கள். பில்லவர்களிலும் மேம்பட்ட நிலையிலுள்ள எல்லாச் சாதியாருடைய துணிகளையும் இவர்கள் வெளுப்பர். கல்யாணப் பந்தல், சவ ஊர்வலத் தேர் ஆகியவற்றை அலங்கரிக்கத் துணிகள் வழங்குவதோடு ஒளிப்பந்தமும் பிடிப்பர். இவர்கள் பூதங்களை வணங்குகின்றனர். அவற்றுள் குறிப்பிடத் தக்கது சூமடி. பூதங்களுக்கான திருவிழாக்களின்போது பலி

* மைசூர் மக்கள் கணக்கெடுப்பு, 1891, 1901; மற்றும் மைசூர், குடகு விவரத் தொகுப்பு - ரைஸ் (Mysore Census Report, 1891, 1901; Rice, Mysore and Coorg Gazetteer.)

யிடப் படும் ஆடு, கோழிகளின் தலையை வெட்டிக்கொள்ளும் உரிமையுடையவர்கள் இவர்கள். பலி விலங்குகளைப் பொம்பாடர்களோ, பரவர்களோ பிடித்துக் கொள்ள இவர்கள் தலையை வெட்டி வீழ்த்துவர். குழந்தை பிறந்த ஏழாம் நாள் வண்ணாத்தி குழந்தையின் இடுப்பில் நூலினைக் கட்டுவாள். தீட்டு விலக்குப் போக்கித் தூய்மையாக்கும் சமயத்தில் மதிவாலி துவைத்த ஆடைகளைத் தீட்டுப்பட்டவர்களுக்குத் தர வேண்டும்.

சடங்குகளைக் கடைப்பிடிப்பதில் மதிவாலிகள் பண்டர்களைப் பின்பற்றிச் செயல்படுகின்றனர். சில இடங்களில் இவர்கள் பண்டர்களைப் போலவே கூரிக்காரன் அல்லது கூட்டினியா என்றழைக்சப்படும் ஊர்த் தலைவனைக் கொண்டுள்ளனர். திருமணத்தின்போது மணமகளும் மணமகனும் கைகோத்தபடி இருக்கும்போது தாரை வார்த்துக் கொடுக்கத் தண்ணீர் ஊற்றும் கடமை பெண்ணின் தந்தைக்கோ, தாய்வழி மாமனுக்கோ உரியதேயன்றி ஊர்த் தலைமைக்காரனுக்கு உரியதன்று.

சில மராட்டிய வண்ணார்கள் தங்களைத் தண்டு (படை) அகசர் எனக் கூறிக்கொள்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் வைக்கப்பட்டு உள்ள வண்ணார்களின் அறிகுறி அடையாளச் சின்னம் அவர்கள் வெள்ளாவி வைக்கும் பானையாகும்.

அகத்தியர் - Agastya

அகத்திய முனிவரின் பெயர். கொண்டையம்கோட்டை மறவர்களின் குலப்பிரிவு ஒன்றின் பெயர் இது.

அக்னி – Agni

குருபர், கோல்லர் ஆகிய சாதியாரின் குலப்பிரிவுப் பெயர். பள்ளியர், வன்னியர் சாதிகளின உட்பிரிவுகளுக்கும் இப்பெயர் உள்ளது. இதற்குச் சமமான அக்கி என்பது போயர்களின் குலப் பெயர்களுள் ஒன்றாக உள்ளது. பள்ளியர் தங்களை

அக்கினிகுலத்தைச் சேர்ந்த சத்திரியர் அதாவது அக்கினியின் வழி வந்த சத்திரிய இனத்தவர் எனக் கருதுகின்றனர்.

அக்ரகாரத்தார் - Agrahārekala

பட்ராசுக்ளின் ஓர் உட்பிரிவு. அக்ரகாரத்தில் வாழ்பவர் அல்லது ஊரில் பிராமணர் குடியிருக்கும் பகுதியில் வாழ்பவர் என்ற பொருள் தரும் சொல்.

அகிர் - Ahir

வட இந்தியாவைச் சேர்ந்த மாடு மேய்க்கும் சாதியினரான இவர்களில் சிலர் கணக்கெடுப்புகளில் பதிவு பெற்றுள்ளனர்.

அகமது - Ahmedi

கணக்கெடுப்பில் முகமதியர் என்பதற்குப் பதிலாகப் பதியப் பட்டுள்ள பெயர்.

அய்வது குலத்தவரு - Aivattukuladavaru:

பாகுடர் சாதிக்குரிய மற்றும் ஒரு பெயர்.

அய்யா - Aiya

தந்தை எனப் பொருள்படும் இச்சொல் தாசரி, தேவாங்கர், கோல்லர், ஈதிகர், ஜங்கம், கொண்டதுரை, கோமட்டி, கொப்பல வெலம்மா, லிங்க பலிசர், மங்கலர், முகதொரை, பைதி, சாதானிகர், சேர்வைக்காரர், தம்பலர் முதலான பல சாதியினரும் சூடிக் கொள்ளும் பட்டப் பெயராகும். தங்களைப் பிராமணர்கள் என்று கூறிக் கொள்ளும் பட்டுநூல்காரரும் இப்பட்டத்தைச் சூடிக் கொள்கின்றனர். தமிழ்ப் பள்ளர்களின் உட்பிரிவு ஒன்றின் பெயராகவும் இது உள்ளது.

தமிழ்ப் பிராமணர்களில் பெரும்பாலோர் சூடிக் கொள்ளும் பட்டப் பெயரான இதற்குப் பதிலாகத் தெலுங்கு, கன்னட நாட்டுப் பிராமணர்கள் பட்டர், பந்துலு, சாஸ்திரி என்ற பட்டப் பெயர்களைச் சூடிக் கொள்கின்றனர். எ. மார்கோச்சிஸ் (Rev. A. Margoschis) பாதிரியார், "அய்யர்

என்ற பட்டப்பெயர் முன்பு பிராமணர்களுக்கே உரியதாக வழங்கியது. இப்போது சமயத்துறைத் தலைமை பூண்டுள்ள அனைத்துச் சாதியினரும் இதனைச் சூடிக் கொள்கின்றனர். இப்பட்டப் பெயரின் முன் அமையும் ஒருவரின் தனிப்பெயரே அவர் இந்துவா அல்லது கிறித்தவரா என அறிந்து கொள்ள நமக்கு உதவுகிறது. யேசடியன் அய்யர் என்ற பெயர் யேசுவின் தொண்டரான அய்யர் எனப் பொருள்படுவதாகும்" எனக் கூறியுள்ளார். சிறந்த தமிழறிஞரான ஜி. யு. போப் பாதிரியார் போப் அய்யர் என அழைக்கப்பட்டு வந்துள்ளார்.

அய்யனார் - Aiyanar

கள்ளர் சாதியின் ஓர் உட்பிரிவு. கிராம தேவதைகள் பலவற்றுள்ளும் ஒரே ஆண் தேவதையான அய்யனார் பெயரை ஒட்டி அமைந்தது.

அய்யரகுலர் - Aiyarakula

1901 கணக்கெடுப்பின்படி அய்யரகுலர் தெலுங்கு பேசும் பயிர்த்தொழில் செய்யும் சாதியினரெனப் பதியப்பட்டுள்ளனர். சமய, சமுதாயப் பழக்கவழக்கங்களில் இவர்கள் காபுகளையும் பலிசர்களையும் பின்பற்றுபவர்கள். தெல்லகர், சாதியாருடன் திருமண உறவு கொள்ளும் இவர்கள் கோல்லர்களிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பர். திரு எச்.ஹயவதனாராவின் கருத்துப்படி அய்யரகுலர் காபுகளின் ஓர் உட்பிரிவினராக இருந்து அரசர்களின் ஆதரவால் சமுதாயப்படி நிலையில் உயர்ந்தவராவர். இப்பெயர் அய்ய, ரிகம் என்ற சொற்கள் இணைந்து சிறப்பானவர் என்ற பொருளினைத் தருவதாகும். இக்குறிப்புகளுக்கு நான் திரு ஹயவதராவிற்குக் கடப்பாடுடையேன். அய்யரகுலர் தங்கள் முன்னோர்கள் விசயநகரப் படையில் வீரர்களாகப் பணிபுரிந்து அரசர்களுக்கு அரிய உதவிகள் புரிந்ததாகக் கூறிக் கொள்கின்றனர். கோல்கொண்ட சேனையை எதிர்த்து ஒருமுறை போரிடப் படையெடுத்த இவர்கள், முகமதிய சேனைத் தலைவனுக்குக் கொடுத்த தொல்லைகள் தாங்கமுடியாமல் அவன் இவர்களைப் போரில் வீழ்த்திய பின், இவர்கள் வீடுகளையும் அழிக்க இவர்கள் வாழ்விடத்தை

நோக்கி முன்னேறினான். இச்செய்தியைக் கேள்விப்பட்ட இவர்கள் வீட்டுப் பெண்கள் ஆண்களுக்குரிய ஆடை அணிந்து வேல், கோடரி, ஆகியன ஏந்தி முகமதிய வீரர்கள் குழப்பமடைந்து பின் வாங்கி ஓடும்படி செய்தனர். இவர்கள் வீரச் செயல்களைக் கேள்விப்பட்ட அரசர் இவர்கள் கால்களுக்கு வெள்ளியாலான தண்டைகள் அணிவித்துப் பாராட்டினார் எனவும், இன்று வரை இவர்கள் குலப் பெண்கள் அந்த அணியை அணிந்து வருகின்றனர் எனவும் ஒரு கதை வழங்குகிறது.

அய்யரகுலர், நாகம், ஆமை போன்ற பல கோத்திரங்களாக இன மரபுச் சின்ன முறையில் பிரிந்துள்ளனர். அக் கோத்திரங்கள் மேலும் பல குலங்களாகவும் இல்லங்களாகவும் பிரிவுபட்டு உள்ளன. தாய்வழி மாமன் மகளை மணம் செய்து கொள்ளும் மீநாகரிகம்என்றுபழக்கம்இவர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்கள் பூப்படையும் முன்பே மணம் செய்து கொடுக்கப்படுகின்றனர். பிராமணர் முன்னவராக இருந்து மணச்சடங்கை நடத்துகிறார். வெள்ளியாலான பூணூலை அணியும் மணமக்கள் பின்னர் அவற்றை மோதிரங்களாக மாற்றி அணிந்துகொள்கின்றனர். சில அய்யரகுலர் தங்களை இராசுக்கள் எனக் கூறிப் பூணூலும் அணிந்து கொள்கின்றனர். எனினும் பிற பிரிவினரோடு உண்ணவும் மண உறவு கொள்ளவும் செய்கின்றனர். கைம் பெண்கள் மறுமணம் செய்து கொள்வதோ மணமுறிவு செய்துகொள்வதோ அனுமதிக்கப்படுவதில்லை.

அய்யரகுலரின் முக்கிய தொழில் பயிரிடுதலே. சில பகுதிகளில் பலர் விசாகப்பட்டினச்சமவெளிப் பகுதிகளுக்கும், மேலேயுள்ள சமீன் பகுதிகளுக்குமிடையே வண்டியோட்டிப் பிழைக்கின்றனர். பத்துருடு என்பது இச்சாதியின் முக்கிய பட்டப் பெயராகும்,

ஆகாசம் - Akasam

தேவாங்கர்களின் குலப் பிரிவுகளுள் ஒன்று.

அகட்டு சர்ன - Akattu Sharna

நாயர்களின் ஓர் உட்பிரிவு.

அகத்துள்ளவர் – Akattualavar

வீட்டில் தனிப்பகுதியில் இருக்கும் நம்பூத்ரி, எலயாடு சாதிப் பெண்களைக் குறிக்கும் பெயர்.

அக்சண்டலர் - Akshantala

அரிசி எனப் பொருள்படும் சொல். ஒட்டர், கோல்லர் சாதிகளின் கோத்திரம் ஒன்றின் பெயர். இக்கோத்திரத்தார் மஞ்சள் கலந்த அரிசி முதலிய பிற பொருள்களை ஒதுக்குவர்.

ஆகுலர் - Akula

வெற்றிலை எனப் பொருள்படும் சொல். கம்மவார், பொந்தக சவரர் ஆகிய சாதிகளின் குலங்களில் ஒன்று. காபுகளின் உட்பிரிவில் ஒன்றாகவும் உள்ளது. வெற்றிலையும் பாக்கும் வழங்குவது இந்திய மரபுப்படியான வரவேற்பு உபசாரமாகும்.

ஆல - Ala

கோல்லர்களின் ஓர் உட்பிரிவு.

அலகி - Alagi

பானையைக் குறிப்பது. வக்கலிகர்களின் குலப் பிரிவுகளுள் ஒன்று.

அளவன் – Alvan

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் அளவன்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதன் சுருக்கம் வருமாறு:- 'மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மட்டும் இவர்கள் உப்பளங்களில் பணியாற்றுகின்றனர். பண்ணையன், மூப்பன் என்ற பட்டப் பெயர்களைத் தரிப்பர். இவர்களை இந்துக்களின் கோயிலுக்குள் நுழைய அவர்கள் அனுமதிப்பதில்லை.' 1901 திருவாங்கூர்க் கணக்கெடுப்பில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்தி வருமாறு:- 'அளவன் அல்லது உப்பளவன் என இவர்கள் அழைக்கப்படுவதன் காரணம் இவர்கள் உப்

பளங்களில் பணிபுரிவதாலேயேயாம்.* மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு பாண்டிய நாட்டிலிருந்து ஏழு குடும்பங்கள் திருவாங்கூருக்கு உப்பளங்களில் பணியாற்ற அழைத்து வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர்கள் வந்தேறியது பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் தாமரைக்குளம், புத்தளம் மற்றும் தென் திருவாங்கூரிலுள்ள பிற பகுதிகளிலும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அக்கல்வெட்டுகள் இன்னமும் படியெடுக்கப்பட்டுப் படித்தறியப்படவில்லை. இவர்கள் தமிழ் மொழியே பேசுகின்றனர். ஊன் உண்ணும்பழக்கமுடையவர்கள். இவர்களிடையே குடிப்பழக்கம் மிக அருகியே காணப்படுகிறது. இறந்தவர்களின் பிணத்தைப் புதைப்பதையே முன்பு பழக்கமாகக் கொண்டிருந்த இவர்கள் இப்போது இறந்தவர்களை எரிக்கவும் செய்கின்றனர். பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இவர்களிடையே பொதுவாகக் காணப்படுகிறது. சாஸ்தா, பத்ரகாளி போன்ற தெய்வங்களை இவர்கள் வணங்குகின்றனர். சுறுசுறுப்பாகப் பாடுபட்டு உழைக்கும் இனத்தவர் அளவர். தென்னிந்தியாவில் வேறெங்கும் இவர்களைவிடச் சிறந்த உப்பளப் பணியாளர்கள் இல்லை.'

ஆல்பினொ – Albino

பாண்டு காரணமாக இவர்கள் பிறப்பிலேயே இளஞ்சிவப்பு நிற உடல் வாய்க்கப் பெற்றவர். 'அப்பெ துபைஸ்'* பாண்டுக்களான இந்தியர்களைப் பற்றித் தந்துள்ள பின்வரும் விவரங்கள் வெறுப்பூட்டுவனவாக உள்ளன. 'உடலின் அழகு மிக்க இளம் சிவப்பு நிறம் இயற்கைக்கு மாறுபட்டதாகப் பார்ப்பவர்கள் உள்ளத்தில் வெறுப்பூட்டுவதாக உள்ளது. நல்லூழ் வாய்க்கப் பெறாத இவர்கள் மற்றவர்கள் மனத்தில் திகிலூட்டுவதோடு பெற்றோர்களாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களுமாவர். இவர்கள் தொழுநோயாளிகளாகவே கருதப்படுகிறார்கள். வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில் இவர்கள் கரப்பான்கள் என அழைக்கப்படுகின்றனர். கரப்பான்கள் அச்சமூட்டு

---

* இந்துக்களின் பண்பும் பழக்க வழக்கங்களும் – பதி. 1897. (Hindu manners and customs – Ed. 1897.)

கின்ற நாற்றம் தோற்றுவிப்பனவும், பகல் நேரத்தையும் வெளிச்சத்தையும் வெறுத்துப் பதுங்கிக்கிடப்பனவுமான பூச்சிகள். நலங்குன்றிய இவர்கள் தங்களியல்பினை ஒத்த மாலைக் கண் நோயையுடைய குழந்தைகளையே பெற்றெடுக்கிறார்கள் என்றும் ஐயுறவு கொள்ளப்படுகிறது. அதுபோன்ற குழந்தையை நான் நேரில் காண வாய்ப்பு ஏற்படவில்லை. பாண்டுவான பெண் ஒருத்திக்கும் காமம் மிக்க ஐரோப்பியனொருவனுக்கும் பிறந்த குழந்தைக்கு நான் தீக்கை அளித்துள்ளேன். நல்லூழ் அற்ற இவர்கள் இறந்தபோது முறைப்படி அடக்கம் கூடச் செய்யப்படாமல் பாதையோரப் பள்ளங்களிலே தள்ளப் படுகிறார்கள்.'

மேலே பாண்டுகளைப் பற்றிக் கூறியுள்ளவை, சென்னையிலும் மைசூரிலும் பல பாண்டுகளை நேரில் கண்டு, கேட்டு எடுக்கப்பட்ட குறிப்புகளால் மேலும் தெளிவாக்கப்படினும் இன்று பாண்டுகளின் நிலை முன்புபோல மன வருத்தம் செய்வதாயில்லை என்பதைக் கீழே தரப்பட்டுள்ள பாண்டுகள் சிலரைப்பற்றிய விவரங்கள் உணர்த்துகின்றன.

சின்ன அபபாயி - வயது 35. இடைச் சாதியைச் சேர்ந்தவர் என்பதற்கு அறிகுறியாக மாடுகளை ஓட்டவும் கால்களை அணைத்துப் பால் கறக்கவும் உதவும் கயிற்றினை இடுப்பில் சுற்றியபடி காணப்படுகிறார். குடுமியைப் போல நீண்டு வளர்ந்த வெளுத்த மஞ்சள் நிறத் தலைமுடி. மழிக்கப்பட்ட மண்டையில் வெள்ளை நிற முடி வளர்ந்துள்ளது. கண்ணின் விழிப்படலம் பச்சை கலந்த பழுப்பு நிறமாக உள்ளது. தந்தை இயல்பான கறுப்பு நிறத்தவர். தாயார் இவரைப் போலவே வெள்ளி முடியும் இளஞ்சிவப்பு நிறமுடைய தோலும் கொண்டவர். பாண்டுவான இவரது ஓர் உடன்பிறந்தவன் மணம் செய்து கொண்டுள்ளான். அவனுக்கு மற்றவர்களைப் போன்ற நிறம் அமைந்த ஒரு குழந்தை உண்டு. பகல் நேரத்தில் சூரிய வெளிச்சத்தின் கூசும் ஒளியில் நன்றாகப் பார்க்க இயலாதவன். பொழுது சாயும்போது பார்வையில் தெளிவிருக்கும் கண்ணிமையைக் குறுக்கிக் குவித்து வளைத்து முறுக்கிப் பார்க்கப்

புழையேற்படுத்திக் கொண்டுள்ளார். தாயார் இவரிடம் இரக்க முள்ளவர்.

வேம்பு ஆசாரி - வயது 20. உச்சிக் குடுமி மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தது. மீசையும் புருவங்களும் வெண்மை. இதழ் நல்ல இளஞ்சிவப்பு. உடலின் நிறம் இளஞ்சிவப்பு. விழிப் படலம் இளநீலமாகப் பளபளப்பான இளஞ்சிவப்புக் கோடு களோடு கூடிய ஓரத்தையும் பெற்றுள்ளது. பொழுது சாய்ந்த பின் பார்வையில் தெளிவு தோன்றும். விழி இமைகளை முறுக்கிப் பார்க்க ஏற்ற புழையாக்கிக் கொண்டுள்ளான். தாய், தந்தை, உடன்பிறந்த ஆண், பெண் அனைவரும் இயல்பான நிற அமைப்பு உடையவர்கள். தெரிந்தவரை எந்த உறவினரும் பாண்டு அல்லர். திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவனைப் போன்றவர்களைச் சிவப்பு மனிதன் எனவும், ஏளனமாக 'வெள்ளைக்காரன்' எனவும் அழைக்கின்றனர். சிறுவர்கள் சில போது வேடிக்கை செய்தாலும் பொதுவாக மக்கள் இவரிடம் அன்பு காட்டவே செய்கின்றனர்.

முனுசாமி - வயது 45. நெசவாளர் வகுப்பைச் சேர்ந்தவர், நல்ல வசதியும் படைத்தவர். பாண்டு ரோகியான ஓர் உடன் பிறந்தவளும் இயல்பான நிறங்கொண்ட ஓர் உடன்பிறந்தவ னும் உளர். பத்துக் குழந்தைகளுக்குத் தந்தை. அவர்களுள் ஐவர் பாண்டுகள். இவர்கள் சுற்றத்தைச் சேர்ந்த மற்றவர்களால் இக்குடும்பமும் சமமாகப் பாவித்து நடத்தப்படுகிறது. ஒரு மகள் நல்ல வளமிக்க குடும்பத்தில் வாழ்க்கைப்பட உள்ளாள்.

........., வயது 22. மீனவர் சாதியைச் சேர்ந்த பாண்டு. இவருடைய தாய்வழி மாமனுக்கு ஒரு பாண்டு மகள் உண்டு. நான்கு உடன்பிறந்தவர்களுள் இருவர் பாண்டு. சூரிய வெளிச் சத்தைப் பார்த்தால் கண் கூசும். ஆகையால் வீட்டுக்கு வெளியே எந்தப்பணியும் செய்ய இயலாது. தனது சாதி மக்களிடையே தாராளமாகப் பழகுகிறார். குடும்பம் நடத்த வசதி ஏற்படின் சுலபமாக ஒரு மனைவியைத் தேடிக் கொள்ளவும் முடியும்.

..........., வயது 36. இராச புத்திரர். இரும்புச் சாமான் வியாபாரி. இயல்பான நிறமுடைய இவன் தந்தைக்குப் பன்னி

ரண்டு குழந்தைகள். ஐந்து பேர் பாண்டுகள். அவர் மனைவியும் மனைவியின் உடன்பிறந்தவளும் பாண்டு. இவன் இயல்பான தோற்றமுள்ள மனைவியை மணந்து கொண்டான். ஓர் இயல்பான குழந்தை உண்டு. இயல்பான நிறமுடைய உடன்பிறந்தவளுக்கு இரண்டு பாண்டுக் குழந்தைகள். விழித் திரை மென் நீல நிறமானது. முடி மஞ்சள் நிறம். தோலின் நிறம் இளஞ் சிவப்பு. இடக் கண்ணை மூடியபடி வலக் கண்ணின் இமைத்திரைகளினூடே புழைவழியாகப் பார்ப்பான். மக்கள் இவனைக் கன்னடத்தில் சிவப்பு மனிதன் என்ற பொருளில் 'கெம்புவா' என அழைப்பர். மக்கள் இவனிடம் இரக்கம் உடையவர்கள்.

அளிய- Alia

கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கும்சூர் வட்டத்தில் பயிர்த்தொழில் செய்யும் ஒரியர்கள் இவர்கள். 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் இச் சொல் கலப்பை எனப் பொருள் படும் 'கொலொ' என்னும் வடசொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 'அளோ' என்னும் தானியத்தைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்ததென்றும் 'அளி' (தாலுக்கா) எனப் பொருள்படும் கிள்ள என்ற ஒரிய சொல்லிலிருந்து வந்ததென்ற கருத்துக்களும் உள்ளன. இவர்கள் சமூகப் படிநிலையில் அளிய போந்தாரிகளுக்கும் ஒடியாக்களுக்கும் கீழ்நிலைப்பட்டவர்கள் இவர்களிடம் அவ்விரு இனத்தவரும் தண்ணீர் வாங்கிப் பருகார்.

பிஸ்வாலோ, போன்சோ, பாரிக்கோ, கம்போ, கொண்ட்வாலோ, லெங்கர், மகந்தி, மெல்ல நாகக்கோ, பாத்ரோ, பொதானோ, பொதியாளி, ரவுட்டோ, சிய்யோ, சுவாயி என்பன இவர்களுக்குரிய பட்டப் பெயர்கள். பிற ஒரிய இனத்தவரைப் போலவே அளியாக்களிடையே கோத்திரப் பிரிவுகள் உள்ளன. கோத்திரங்களையும் பட்டப்பெயர்களையும் அடிப்படையாகக் கொண்ட இவர்களுடைய மண விதிகள் விசித்திரமானவை. போதானோ பட்டப் பெயரையுடைய ஒருவன், அதே பட்டப்

பெயரையுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை அவளுடைய கோத்திரம் வேறாயிருப்பின் மணந்து கொள்ளலாம். கோரு கோத்திரத்தைச் சேர்ந்த போதானோ பட்டத்தையுடைய ஒருவன் அதே கோத்திரத்தைச் சேர்ந்த பெண்ணை அவளுடைய குடும்பப் பட்டம் வேறாயின் மணக்கலாம்.

குழந்தைப் பருவத்திலேயே பொதுவாக மணம் செய்விப்பர். ஒரு பெண் பருவம் அடையும் வரை கணவனை அடையவில்லை யாயின் அம்பினையோ பித்தளைப் பாத்திரத்தையோ மணமக னாக வைத்து அவளுக்கு ஒரு போலித் திருமணம் செய்விக்கப் படும். மற்ற ஒரிய சாதியார்களைப் போலவே அளியாக்களும் சைத்யன்யர் போதித்த வைணவ நெறிப்பட்டவர்களாவர். வேறு பல சிறு தெய்வங்களையும் இவர்கள் வழிபடுகின் றார்கள்.

அலிகெ - Alige (Druam)

மத்தளம் எனப் பொருள்படும் சொல் இது. குருப சாதி யாரின் குலப் பிரிவினுள் ஒன்று.

அளிய சந்தானம் - Aliya Santanam

பெண்களுக்குச் சொத்துரிமை செல்லும் தாய முறை. மலையாளிகளின் மருமக்கள்வழித் தாயத்திற்கு ஒப்பான கன்னடப் பகுதிக்குரிய சொத்துரிமை முறை.

அல்லம் - Allam

இஞ்சி எனப் பொருள்படும் சொல். மாலர் சாதியினரின் குலப்பிரிவுகளுள் ஒன்று.

அல்லிக்குலம் - Allikulam

அனப்பன் சாதியாரின் உட்பிரிவாகக் கணக்கெடுப்பில் பதியப்பட்டுள்ள பிரிவு.

ஆழ்வார் - Alvar

தொரெய சாதியாரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு

குலப் பிரிவு. இது விட்டுணுவின் வாகனமான கருடனுக்குரிய பெயருமாகும். ஆழ்வார் தாசரி, வள்ளுவன் சாதியின் ஓர் உட்பிரிவாகவும் உள்ளது. வைணவ ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரடிப் பொடியாழ்வாரின் வழித் தோன்றியவர்கள் என இப்பிரிவினர் கூறிக் கொள்கின்றனர்.

அமராவதியவாரு - Amarāvatiyavaru

கிருட்டிணா ஆற்றங்கரையில் உள்ள அமராவதி நகரைச் சேர்ந்த மக்களைக் குறிக்கும் பெயர். தேசபாக மாதிகர்களுக்குரிய ஓர் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது * அமராவதி. வல்லம்பரின் ஓர் உட்பிரிவு அல்லது நாடாகவும் இடம்பெற்றுள்ளது.

அம்பலக்காரர் - Ambalakkāran:

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் திரு எ. எ. ஸ்டுவர்ட் பின்வருமாறு எழுதுகிறார்:- "அம்பலம் - திறந்த வெளி‡ *கள்ளர், மறவர் வாழும் மாவட்டங்களில் அம்பலக்காரன் என்பது ஊர்த்தலைவனுக்குரிய பட்டப் பெயராகும். இது கள்ளர் சாதியார் சூடிக்கொள்ளும் பொதுவான பட்டப் பெயருமாகும். கள்ளர் சாதியினருக்கும் அம்பலக்காரருக்கும் உள்ள சரியான உறவு முறை என்ன என்பதனை என்னால் கூற முடியாது. எனக்குக் கிடைத்த சில தகவல்களின்படி அம்பலக்காரர்களை ஊர்க் காவலாளிகளான முத்தரையர்கள் (தெலுங்கு முத்ராசா) என்று கொள்ள இயலாதெனினும் இருவருக்கும் நெருங்கிய உறவு உண்டு எனக் கொள்ளலாம். இது கணக்கெடுப்புப் பதிவுகளின் படியும் உறுதி செய்யப்படுகின்றது. 1,09,263 பேருக்கு மேல் அம்பலக்காரர் என்ற உட்பிரிவில் பதிவு செய்துள்ளனரெனினும், பதிவு செய்யப்பட்டுள்ள உட்*

---

* மைசூர் மக்கள் கணக்கெடுப்பு, *1901*. (Mysore Census Report, 1901.)

‡ அம்பலம் என்பது திறந்த வெளி அல்லது திறந்த கட்டிடத்தைக் குறிக்கும். அங்கே நியாயம் வழங்கும் நடவடிக்கைகள் நிகழும். அம்பலக்காரன் அவையின் தலைவன் அல்லது அம்பலத்தில் கூடியிருப்போரின் முடிவை அறிவிப்பவன்.

பிரிவுகளில் பெரும்பான்மையானவர்கள் முத்தரையர் அல்லது முத்துராசாக்களே. இவர்கள் பெண்கள் பூப்படைந்த பின்னரே திருமணம் செய்கின்றனர். இச் சாதியில் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் கள்ளர், மறவர் சாதிகளில் உள்ளதைப் போல மணமுறிவு உரிமை தாராளமானதாக இவர்களிடையே இல்லை. ஊன் உண்டலும், மது அருந்துதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்கங்கள். இவர்கள் வழக்கமாகச் சூடிக்கொள்ளும் பட்டப் பெயர் சேர்வைக்காரன் என்பதாகும். முத்தரையன், அம்பலக்காரன், மழவராயன், முத்தரசன், வன்னியன் ஆகிய பட்டப் பெயர்களையும் சூடிக் கொள்வதுண்டு. இருப்பினும் முத்தரையன்களின் வழக்கமான பட்டப்பெயர்களில் ஒன்று நாய்க்கன் என்பதாகும்.''

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் அம்பலக்காரர் பற்றிப் பின்வருமாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது:– ''பயிர்த் தொழிலைச் செய்யும் ஊர்க் காவலாளிகளான தமிழ்ச் சாதியார் இவர்கள். அண்மைக்காலம் வரை அம்பலக்காரன் என்பது கள்ளர்களின் பட்டப் பெயராகக் கருதப்பட்டு வந்தது. மேற்கொண்டு அதுபற்றிச் செய்த .ஆய்வுகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரும்பான்மையராகக் காணப்படும் ஒரு தனிச் சாதியார் இவர்கள் என்பதனைத் தெளிவுபடுததின. முசிறி வட்டத்தில் உள்ள ஓர் ஊரைச் சேர்ந்த அம்பலக்காரரும் முத்தரையரும் ஒன்றாக இணைந்து தங்களைக் கள்ளர் வகுப்பாராகப் பதிவு செய்யக் கூடாது என விண்ணப்பம் தந்துள்ளனர். எனினும் மதுரையைச் சேர்ந்த கள்ளர்கள் அம்பலக்காரர் வீட்டில் உணவு கொள்ளமாட்டார்கள். அம்பலக்காரர், முத்தரையர், முத்துராசர், ஊராளியர், வேடர், வலையர், வேட்டுவர் ஆகிய சாதியார்களிடையே ஓரளவு தொடர்புள்ளது. இவர்கள் அனைவருமே ஒரு பொதுச் சாதியில் தோன்றிப் பிரிந்தவர்களாகலாம். அம்பலக்காரர் தங்களை வேடர் அல்லது வேட்டைக்காரர் சாதியைச் சேர்ந்த அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான கண்ணப்பநாயனாரின் வழி வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்து வலையர்களும்

இதுபோல உரிமை கொண்டாடுகின்றனர். அம்மாவட்டத்தில் அம்பலக்காரர், முத்தரையர் என்பன வலையர் என்ற பெயரின் மாற்றுப் பெயர்களாகவும் வழங்குகின்றன. (சில வலையர்கள் அம்பலக்காரன் என்ற பட்டப்பெயரையும் வைத்துக் கொண்டுள் ளனர்.) புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது எங்கு அம்பலக்காரர் பெரும்பானமையினராக உள்ளனரோ அங்கு வலையர் சிறுபான்மையினராக உள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இது, சில பிரிவினர் தங்களை அம்பலக்காரர் எனக் கூறிக் கொள்ள முற்பட்டுள்ளனர் என்பதனை உணர்த் துவதாக உள்ளது. சமூகத்தின் மேல்படி நிலையில் உள்ள அம் பலக்காரர்கள் வேளாளர்களுக்கு உரியதான பிள்ளை என்ற பட்டப் பெயரையும் சூடிக் கொள்கின்றனர். ஏனையோர் தஞ் சாவூர் மாவட்டத்தில் மூப்பன் எனவும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அம்பலக்காரன், முத்தரையன், சேர்வைக்காரன் எனவும் அழைக்கப்படுகின்றனர். இச்சாதியின் பஞ்சாயத்து அவையின் தலைவன் காரியக்காரன் என அழைக்கப்படுகின் றான். இப்பதவி, பரம்பரையாகக் குறிப்பிட்ட குடும்பத்தின ருக்கு உரிமையுடையதாக உள்ளது. ஒவ்வொரு ஊர்த் தலைவ னுக்கும் குடிப்பிள்ளை என்ற பணியாளன் உளன். தேவைப் படும்போது ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டுவதும் செய்திகளைப் போய் அறிவிப்பதும் ஊர்ப்பிள்ளையின் கடமையாகும். இதற் காக அவன் ஆண்டுதோறும் ஊரிலுள்ள அச்சாதியினைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்தாரிடமிருந்தும் நான்கணா ஊதிய மாகப் பெறுகிறான். இச்சாதியில் அகமணக்கட்டுப்பாட்டின் வழி நிற்கும் குலப் பிரிவுகளும் உள்ளன. முத்தரையன் அல்லது முத்துராசா,காவல்காரர், வன்னியன், வலையன் என்பன அவற்றுள் நான்கு பிரிவுகளாம். இப்பிரிவைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் தங்கள் குலத்திற்குப் புறத்தே மண உறவு கொள் ளின் அவர்கள் பஞ்சாயத்தாரால் சாதி விலக்கம் செய்யப்படும் தண்டனைக்கு உள்ளாவர். இவர்கள் பழக்கவழக்கங்கள் மேல் படிநிலையிலுள்ள சாதியாரும் கீழ்ப் படிநிலையிலுள்ள சாதியா ரும் பின்பற்றும் பழக்க வழக்கங்களின் வீசித்திரமான கூட்டுக் கலப்புடையனவாகும். சிலர் பிராமணர்களை முன்னிறுத்தித் திருமணம் செய்து கொள்வதோடு சாவுச் சடங்குகளின் போதும்

சிரார்த்தம் செய்யும்போதும் பூணூலும் அணிகின்றனர். எனினும் இவர்கள் ஆடு, பன்றி, கோழி ஆகியவற்றின் இறைச்சியை உண்பதோடு, மது அருந்தும் பழக்கமும் உடையவர்கள். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளவும் பெண்கள் மணமுறிவு பெறவும் உரிமை வழங்குகின்றனர். முத்தரையன், காவலர் என்ற இரண்டுமே காவலாளிகள் எனப்பொருள் படுவன. வன்னியன் த்னித்ததொரு சாதியென உறுதி யாகக் கொள்ளலாம். இவர்களில் சிலர் அம்பலக்காரன் என்ற பட்டப்பெயரைச் சூடிக் கொள்கின்றனர். அம்பலக்காரர், வலையர்கள் என்பது உண்மையாயினும் காலப்போக்கில் வாழ்க்கை வளத்தின் காரணமாகத் தங்களைப் பொதுப் பிரிவி லிருந்து பிரித்துக் கொண்டு தனித்த சாதியார் ஆகிவிட்டனர் எனக் கூறலாம்.

இவர்களைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு எப்.ஆர். ஹெமிங்வே அவர்களுக்கு நன்றியுடையவனாவேன். அம்பலக்காரரும் முத்தரையரும் மாநிலத்தில் வேறெந்தப் பகுதியை வீடவும் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டைப் பகுதிகளி லேயே மிகுதியாக உள்ளனர். இவர்கள் வேறுவேறு சாதியின ராகக் கருதப்படினும் இந்த மாவட்டத்தில் (திருச்சிராப்பள்ளி) இவர்கள் ஒரு சாதியினராகவே தோன்றுகின்றனர். திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் முத்தரையர் என வழங்கப் பெறும் இவர் கள் பிற பகுதிகள் அம்பலக்காரர் என வழங்கப்படுகின்றனர். இவ்விரண்டு பெயர்களில் எதை வேண்டுமானாலும் இவர்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொள்கின்றனர். தாங்கள் வலையர் என வழங்கப்பட்டது உண்டு என்பதனை அவர்கள் ஒப்புக் கொண் டாலும் அந்தப் பெயருடைய சாதியாரோடு தங்களுக்குத் தொடர்பேதும் இல்லை எனக்கூறும் இவர்கள், வலையர் என வழங்கப் பட்டதற்கான காரணம் பற்றி ஒரு கதையும் கூறுகின்றனர். கங்கையில் சிவபெருமானுடைய மோதிரத்தை ஒரு மீன் விழுங்கிவிட, அதனை மீட்கத் தங்களுடைய முன்னோர் களில் ஒருவனே இவ்வுலகத்தில் முதன்முதல் வலையைக் கண்டு பிடித்ததாக அக்கதையின் சாரம் கூறுகின்றது. தங்கள் பழம் பெருமையினை விளக்கும் சான்று களாகச் சீரங்கத்தில் உள்ள

ஆயிரங்கால் மண்டபம் முத்தரசன் குறடு என வழங்கப்படுவதையும், பழனியில் உள்ள முத்தரசரின் பெரிய மடத்தையும் பற்றிக் கூறி, அவை அவர்கள் சாதியைச் சேர்ந்த அரசர்களின் திருப்பணி என்பர். பழனியில் உள்ள மடத்திற்கு இச்சாதியைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பமும் நான்கணா வரி செலுத்துகிறது. இவர்கள் தாங்கள் பரமசிவனுடைய வேர்வைத்துளியின் முத்து ஒன்றிலிருந்து பிறந்ததாகக் கூறிக்கொள்கின்றனர். இச்சாதி பல நாடுகளாகப் பிரிவு செய்யப்பட்டுள்ளதெனினும் அவற்றிற்கான பெயர்கள் வெவ்வேறாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் எட்டரை, கோப்பு, அதவத்தூர், தீராம்பாளையம், வீமநாய்க்கன் பாளையம் என்பன திருச்சிராப்பள்ளி வட்டத்தையும் ஆமூர், செவந்திப்பட்டி, கருங்காலி என்பன முசிறி வட்டத்தையும் சார்ந்தனவாம். இவற்றுள் அமைந்த சில நாடுகளின் பிரிவினர் கைம்பெண்களின் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். இவர்கன் முத்தரையன், அம்பலக்காரன், சேர்வைக்காரன், காவல்காரன், என்ற பட்டப் பெயர்களைச் சூடிக் கொள்கின்றனர். தாங்கள் வேளாளர், கள்ளர், நாத்தமான்கள், ரெட்டிகள் ஆகியோரை விடச் சமுதாயப் படிநிலையில் தாழ்ந்தவர்கள் என்பதனை ஒப்புக் கொள்ளும் இவர்கள், அவர்கள் இல்லங்களிலெல்லாம் உணவு கொள்வர். எனினும் இவர்கள் தங்களைப் பள்ளியர் ஊராளியர், உப்பிலியர், வலையர் ஆகியோரை விடச் சமுதாயப் படிநிலையில் உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். பயிர்த் தொழிலே இவர்களில் பலர் மேற்கொண்டுள்ள தொழில். சிறு வாணிபம், கட்டிட வேலை, காவல் தொழில் ஆகியவற்றையும் மேற்கொண்டு சிலர் வாழ்க்கை நடத்துகின்றனர். திருமணத்தின் போதும் சாவுச் சடங்குகளின்போதும் இவர்கள் பூணூல் அணிந்து கொள்கின்றனர். ஒவ்வொரு ஊருக்கும், நாட்டுப் பிரிவுக்கும் இவர்களிடையே தனிப் பஞ்சாயத்து அவைகள் உள்ளன. இச்சாதியின் மூத்தோர் எனக் கருதப்படும் பத்துநாட்டுச் செட்டிகள் பலர் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நாட்டுப் பிரிவுத் தலைவனோடு சமமாக அமர்ந்து கூடா ஒழுக்க வழக்கு போன்றவற்றில் முடிவு கூறும் உரிமையுடையவர்களாக உள்ளனர்.

அம்பலவாசி - Ambalavāsi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் அம்பலவாசி பற்றிச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளவை வருமாறு:-

'மலபாரைச் சேர்ந்த கோயில்களில் பணிபுரியும் இனத்தவர்களின் சாதிப்பெயர் இது. இவர்களுள் பொதுவாள், சாக்கியர், நம்பியாசன், பிடாரன், பிச்சாரோடி, வாரியன், நம்பி, தெய்யம்பாடி முதலிய பல உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு உட்பிரிவுக்கும் கோயில்களில் மாலை கட்டுதல், கூட்டிப் பெருக்குதல், விறகு கொண்டு வருதல், உற்சவரை ஊர்வலத்தில் தூக்கிச் செல்லுதல், பாடுதல், ஆடுதல் போன்ற தனித்தனிப் பணிகள் ஒதுக்கப் பட்டுள்ளன. கோயில் பணியாளர்கள் பலரைப் போலவே இவர்களும் கீழ்ச்சாதிப் பிராமணர்களான மூசாடுகளுக்கும் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களிடமிருந்து நாயர்கள் கூட உணவு பெற்று உண்பதில்லை.'

1901 திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கை இவர்களைப் பற்றிக் கூறும் செய்திகள் வருமாறு:- 'அம்பலவாசி என்ற சொல் கோயிலில் வாழ்பவன் எனப் பொருள்தரும் ஒரு குழுவிற்குரிய பெயராகிக் கோயிற்பணி செய்யும் சாதியாரைக் குறிப்பதாகும். கேரள மகாத்மியம் இவர்களைக் கோயிலில் வசிப்பவர் என்ற பொருளில் 'க்ஷேத்திர வாசின' எனச் சுட்டுகிறது. இவர்கள் அந்தராளர் எனவும் வழங்கப்படுகின்றனர். பிராமணர்களும், மலபாரைச் சேர்ந்த பிராமணச் சத்திரியர்களும் ஒரு பக்கமாகவும், பிற சூத்திரர் மறுபக்கமாகவும் இருக்க இவ்விருவருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பதால் இவர்கள் அந்தராளர் எனப்படுகின்றனர். ஒரு கோட்பாட்டின்படி இவர்கள் ஒழுக்கத்தில் தாழ்ந்துவிட்ட பிராமணர்கள் எனக் கொள்ளப்பட்டாலும் கேரளோற்பத்தியின் ஆசிரியர் இவர்கள் சமுதாயப் படிநிலையில் மேல்நிலையடைந்த சூத்திரர்கள எனக் கூறுகின்றார். அம்பலவாசி இனத்தைச் சேர்ந்த சாதிகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளவை வருமாறு:-

நம்பியாசன்	பிலாப்பலி
புட்பகன்	நம்பியார்
பூப்பலி	பிச்சாரடி
சாக்கியர்	வாரியர்
பிராமணி (அல்லது)	தெய்வம்பாடி

நாட்டுப்பத்தன்	தீய்யாட்டுண்ணி
அடிகள்	குருக்கள்
நம்பிடி	பொதுவாள்

"இந்தச் சாதியினர் அனைவரும் கோயில்களோடு தொடர்புடையவர்கள் அல்லர். முற்றூட்டுப் பெறும் கோயில் பணிகளில் சிறப்பாகப் பணிபுரியும் ஏவலர்கள் என்ற வரையறைக்கும் இவர்கள் உட்படமாட்டார்கள். இவர்களுடைய பணியின் அடிப்படை நியாயம், இறைவன் பணிக்குத் தங்களை ஆட்படுத்திக்கொண்டு கோயிற் பணிகளில் ஈடுபட்டுத் தங்களை வந்தடைந்துள்ள தங்கள் முன்னோர் செய்த பாவங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வழி பார்ப்பதேயெனத் தெரிகின்றது. கீழ்ச் சாதியிலிருந்து மேல்நோக்கிய வளர்ச்சிக்கான நோக்கு சமயச் சிறப்பைப் பெறுவதற்காகவே எனக் கொள்ள வேண்டியுள்ளது. வீழ்ச்சியுற்ற பிராமணன், தன் சாதியின் நிலையைத் தாழ்த்திக் கொள்ளாமல் பிராமணருக்குரிய பணிகளை மேற்கொள்ள வாய்ப்புப் பெற முடியாது. எனவே, அவனுக்கு வேறு பணிகள் ஒதுக்கப்படுகின்றன, புட்பகன், வாரியர் முதலியவர்களுக்கான மாலை 'புனைதல்' சாக்கியருக்கான கடவுளர் வரலாறு பற்றிய புராணங்களைப் பலருக்கும் புரியும்படி ஆடும் பணி, ஆகிய பல திறப்பட்ட கோயிற்பணிகள், பிராமணர் மேற்கொள்ளும் கோயிலின் அகப்பணிகளுக்கும், பிற சாதியார் செய்யும் புறப்பணிகளுக்கும் இடைப்பட்டனவாகும். இதே அமைப்பில் கோயில்கள் ஒரு சிலருக்கே உரித்தான மறைபொருளான நெறியின் விளக்கமாகின்ற அகமும், அதன் மறுபக்கமாகப் பொதுவில் அனைவருக்கும் உரியதாக உள்ள புறமுமாக இரண்டு பொருட்கூறுகளைத் தெளிவுபடுத்துவனவாக அமைந்துள்ளன. இதன் காரணமாகவே நடுவணதாகிய பணிகளுக்கென நடுவணதாகச் சமூகப் படிநிலையிலமைந்த அந்தராளர் என்று இந்து சமூகத்தில் நடுவணதாக விளங்கும் ஓர் இனத்தினர் தோன்றினர் எனக் கொள்ளலாம். சத்திரியர்கள் பிராமணர்களோடு ஒன்றாக உணவு கொள்ளும் உரிமை பெற்றுள்ளதாலேயே சமூகப் படிநிலையில் அவர்களுக்கு அடுத்த நிலையைப் பெற்றுள்ளனர். தீட்டுக்குரிய காலப்பகுதியின் அடிப்படையில் பார்க்கும்போது அது சமூகப் படிநிலையோடு எதிர் விகிதச் சமச் சீருடையதாக உள்ளது.

பார்ப்பனர்கள் 10 நாள்களும், சத்திரியர் 11 நாள்களும், மலபார் சூத்திரர்களான நாயர்கள் 16 நாள்களும், தீட்டுக்குரிய நாள்களாகக் கொள்கின்றனர். அம்பலவாசிகளால் 12 நாள்கள் பொதுவாகத் தீட்டுக் காலமாகக் கொள்ளப்படுகிறது. சிலரால் அது 10 நாள் அளவினதாகக் குறைத்தும், வேறு சிலரால் 13, 14 நாள்களாக நீட்டித்தும் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் ஒரு போதும் அது 16 நாள்களாக இருப்பதில்லை.''

1901கொச்சி கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப்பற்றி கூறப்பட்டுள்ள மேலும் சில விவரங்கள் பின்வருமாறு:- 'கோயிலில் குடியிருப்போர் எனப் பொருள்படும் அம்பலவாசிகள் கோயில்களில் பணி செய்யும் உரிமை உடையவர்கள். இவ்வினத்தில் பெரும்பாலான சாதிகள் உயர்ந்த, தாழ்ந்த சாதியிடையே நிகழ்ந்த உடலுறவு காரணமாகத் தோன்றியவை. ஆகையால் அவை அனுலோமசக் கலப்பாகவோ பிரதிலோமசக் கலப்பாகவோ கருதப்படுகிறது.* பொதுவாக இவர்களைப் பூணூல் அணிபவர்கள், பூணூல் அணியாதவர்கள் என இரு பிரிவினராகப் பிரிக்கலாம். அடிகள், சாக்கியர், நம்பியார் அல்லது புட்பகன், தீயாட்டு நம்பியார் ஆகியோர் பூணூல் அணியும் பிரிவைச் சேர்ந்தவர்கள். (சாக்கியர், நம்பியார்) பிட்சாரட்டி, வாரியர், பொதுவாள், மாரார் ஆகியோர் பூணூல் அணியாத பிரிவினர். அம்பலவாசிகள் அனைவரும் கோயில்களில் பணி செய்பவர்கள் எனினும் பெரும்பாலான பிரிவினர்களுக்குச் செய்வதற்குரிய பணி எதுவென வரையறை செய்து ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மருமக்கள் தாயமுறை பேணுபவர்கள். எனினும் சில பிரிவினரால் மக்கள் தாயமுறையையும் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரு நம்பியாரோ பிட்சாரட்டியோ, வாரியரோ தனது சாதியையே சேர்ந்த ஒருத்தியை மணந்து கொள்ள வேண்டிய நெருக்கடிநேரும்போது, அவளை மணந்து தனது வீட்டுக்கு அழைத்து வரலாம். அவ்வாறு வந்தவளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் தந்தையின் குடும்பத்தன

---

* அனுலோமன் :- உயர்சாதி ஆண் கீழ்சாதிப்பெண்களோடு கொள்ளும் உறவால் பிறப்பவன்.

பிரதிலோமன்:- கீழ்ச்சாதி ஆண் மேல்சாதிப் பெண்களோடு கொள்ளும் உறவால் பிறப்பவன்.

வாகக் கருதப்பட்டுச் சொத்துரிமைக் குரியனவாகின்றன. பின் அவர்கள் தலைமுறை தொடங்கித் தனியே மருமக்கள் தாயமுறைக் குரிமையுடைய சந்ததியர் தோன்றுவர். தாலிகட்டுத் திருமணம், சம்பந்தம் மணமுறையால் அமையும் திருமணம் ஆகியவற்றில் இவர்கள் நாயர்களுடைய பழக்கவழக்கங்களையே பின்பற்று கின்றனர். பிராமணக் குருக்களை அமர்த்திக் கொள்வதிலும் பிறப்பு, சாவு ஆகியவற்றின்போது தீட்டு நாள்களைக் கணக்கிடு வதிலும் சிறுசிறு வேறுபாடுகள் உள்ளன. பூணூல் அணியும் வகுப்பார் காயத்திரி சொல்லும் உரிமை உடையவர்கள். பிறப்பு இறப்பின் தொடர்பான தீட்டு நீக்கும் சடங்குகளின்போது நம்பூத்ரிகள் புரோகிதம் பார்ப்பார். பிண்டம் கொடுத்தல், சிரார்த்தம் முதலான சடங்குகளில் இவர்கள் வகுப்பைச் சேர்ந் தவர்களே புரோகிதர்களாக இருந்து நடத்தி வைப்பர். மாரார் தவிர மற்ற அம்பலவாசிகளின் இல்லத்தில் பிராமணர்களால் சமைக்கப்பட்டவற்றை நம்பூதிரிகள் உண்ணுகின்றனர். தீட்டுப் போக்கும் உரிமை நம்பூதிரிகளுடையதாக இருக்குமிடங்களில் இவர்கள் இவ்வாறு உண்பதில் எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லை. பொது விருந்துகள் அனைத்திலும் அம்பலவாசிகள் மரக்கறி உணவுப் பழக்கமுடையவர்களாகவே உள்ளனர். இவர்கள் விருந்தின்போது ஒன்றாக அமர்ந்தாலும் ஒருவருக் கொருவர் சற்றுத் தள்ளி அமர்ந்தே உண்பர். இவர்களுடைய பெண்கள் தங்கள் சாதியைச் சேர்ந்த ஆண்களுடனோ பிராமணர் அல்லது சத்திரியர்களுடனோ சம்பந்தத் தொடர்பு வைத்துத் தங்களை இணைத்துக் கொள்வர். பிராமணர்களோ சத்திரியர்களோ அத்தகையவர்களிடம் தண்ணீர் வாங்கிக் குடிக்கமாட்டார்கள். பெரும்பாலான அம்பலவாசிகள் இன்னமும் தங்கள் குலத்தொழிலை மேற்கொண்டிருந்தாலும் இன்று அவர்களில் பலர் அரசுப் பணியில் ஈடுபட்டிருப்பதோடு பொருள் வருவாய் தரும் பிற தொழில்களையும் மேற் கொண்டுள்ளனர்.

அம்பலவாசிகளில் முக்கியமான பிரிவினர்களைப் பற்றிய தனிக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

அம்பட்டர் - Ambattan

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. ஹயவதனராவிற்கு

நன்றியுடையவனாவேன். அம்பட்டர் தமிழ்நாட்டுச் சவரத் தொழிலாளிகளும் நாட்டுபுற அறுவைச் சிகிச்சையாளருமாவர். இச்சொல் வடமொழி வேர்ச் சொற்களாகிய அம்பா (பக்கம்) ஸ்தா (இருப்பவன்) என்பவை இணைந்து தன்னிடம் சவரம் செய்து கொள்பவன் அருகிலோ, மருத்துவம் பார்த்துக் கொள்பவன் அருகிலோ இருப்பவன் என்ற பொருளைத் தருவ தாகும். இதேபோல் மலையாளத்தைச் சேர்ந்த சவரத் தொழிலாளிகளான காவுதியனும் பக்கத்திலிருப்பவன் என்ற பொருளில் அடுத்தோன் என அழைக்கப்படுகின்றான். அம் பட்டர் தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த மங்கலரையும், மல பாரைச் சேர்ந்த விளக்கத்தாளவரையும், கன்னட பிராமணர் களுக்குரிய காசருக்காக்களையும், முகமதியர்களுடைய ஹாஜம் களையும் ஒப்பான சாதியாராவர். இப்பெயர் முதலில் இவர்கள் செய்த மருத்துவத் தொழிலுக்கு உரியதாயிருந்திருக்கலாம். பின் னர் சவரத் தொழிலும், இசைத் தொழிலும் இவர்களுக்கு உரிய தாயிருக்கக்கூடும். இக்கோட்பாடு, வழக்கிலீருந்துவரும் ஒரு கதையினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் உள்ளது. அம்பட்டர் வைசிய குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்திக்கும், மருத்துவத் தொழிலை வாழ்க்கை நடத்துவதற்குரியதாக மேற்கொண் டிருந்த பிராமணன் ஒருவனுக்கும் பிறந்தவனின் சந்ததியர் என்பதே அக்கதை வழக்கு. தமிழ் நாட்டில் அம்பட்டர் சாதி யைச் சேர்ந்த பெண்களே மகப்பேற்றின்போது மருத்துவச்சி களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர் என்பதனையும் நினைவு கூர்தல் வேண்டும். பண்டைய நீதியுரைத்தவரான மனு கூறி யுள்ள, ‘பிராமணன் ஒருவனோடு வைசிய குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி சேர்ந்ததால் பிறந்தவனே அம்ப்ஸதன்’ என்ற செய்யுளின் அடிப்படையிலேயே மேற்கூறிய கதை வழக்குப் புனையப்பட்டிருக்க வேண்டும். இதில் எந்த அளவு உண்மை உள்ளது என்பதனைப் பிரித்தறிந்து கூறுதல் இயலாது. மேற் காட்டிய செய்யுளுக்கு அடுத்த செய்யுளில் மனுவே, பிராமணன் ஒருவனுக்கு மூன்று கீழ்ச்சாதிகளில் ஒன்றைச் சேர்ந்த பெண் ணின் மூலமாகப் பிறந்த ஆறு கீழ்ச்சாதியார் அல்லது ‘அபஸ்த’க் களுள் அம்பஸ்தனும் ஒருவன் எனக் கூறியுள்ளார். அவரே மீண்டும் பிராமணன் அம்பட்டர்கள் உணவை உண்ணலாம்

என ஒரு தேவைப்படாத, யாரும் பயன்படுத்தலில்லாத விதியை யும் கூறியுள்ளார். பூரி சகன்னாதர் ஆலய எல்லையில் அம் பட்டரும் அவர்கள் சமைக்கும் உணவும் எல்லா மேல்சாதியா ராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பிராமணர்கள் கூட அதனைத் தீட்டுப்பட்டதாகக் கருதுவதில்லை. அந்தப் புகழ் பெற்ற கோயிலின் பூசாரியும் அதிகாரபூர்வமான புரோகிதரும் ஓர் அம்பட்டனே. பண்டைய விதிமுறைகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் சில பிராமணர்களைத் தவிர மற்ற அனைவரும், அவர் பொங்கி அங்குள்ள இறைவனுக்குப் படைக்கும் சோற் றினை ஏற்று உண்ணுகின்றனர். இந்த ஓர் இடத்தில்தான் மனு கூறியுள்ளதாக மேலே கூறப்பட்ட விதி வழக்கத்தில் பின் பற்றப்படுகிறது. வடமொழியில் எல்லோராலும் அடிக்கடி வழங்கப் படுவதான 'அம்பட்டன் ஒரு நல்ல சூத்திரன்' என்ற வழக்கத்திற்கு மனுவின் நூலில் எந்த அளவிற்கு ஆதாரம் உள்ளது என்பது தெரியவில்லை. அம்பட்டன் தொடுவதால் தீட்டு ஏற்படுவதாகக் கருதப்படவில்லை என்றும், அவன் சவரம் செய்வதாலேயே தீட்டு ஏற்படுகின்றதென்றும் பண்டைய வழக்கு இருந்ததாக ஒரு சிலர் இன்று கருதுகின்றனர். மனுவால் கீழ்ச் சாதியார் என வரையறுக்கப்பட்டவனும் அவனைத் தொட் டால் தீட்டாகும்; அதனைப் போக்கத் தலை முழுக வேண்டும் எனக் கருதப்படுவனுமாகிய அம்பட்டன் பிராமணீய வழிப்பட்ட கீழ்ச்சாதிக்காரர்களில் ஒருவனாக உள்ளான்.

இவர்களுடைய திருமணச் சடங்குகளில் முழுக்க முழுக்கப் பிராமணன் புரோகிதம் செய்து வைப்பதே இதனைத் தெளிவுப்படுத்துகிறது. முதலிரண்டு நாள்களும் நெய்யூற்றி ஓமம் வளர்க்கப்படுகிறது. மூன்றாம் நாள் தாலியினை வெள்ளி அல்லது பித்தளைத் தட்டில் வைத்து முதலில் பிராமண குருக்கள் தனது வலக் கையின் சுட்டு விரலால் தொட்டு வாழ்த்துகிறார். பின்னர் அங்குக் கூடியுள்ள பிராமணர், மேல்சாதிக்காரர்கள் அம்பட்டர் சாதியைச் சேர்ந்த பெரிய தனக்காரன் ஆகியோரும் மற்றவர்களும் அதே போல் வாழ்த்துகின்றனர். அதன்பின் பல்வகை இன்னியம் முழங்கத் தூய நெருப்பின் முன் மண மகள் கழுத்தில் தாலி கட்டப்படுகிறது. திருமணச் சடங்கின் போது கைம்பெண்கள் யாரும் உடனிருப்பதில்லை. மணமக்

களின் உறவினர்கள் மணமக்கள் முன் தரையில் அரிசியினைப் பிராமணக் குருக்களும் ஊர்த்தலைவனும் தூவியபின் தூவு கின்றனர். மீதம் (சேஷம்) என வழங்கப்படும் இந்த அரிசி வண்ணானுக்கு உரிமையுடையது. ஆனால் அதனைத் திருமண வீட்டுக் குடும்பத் தலைவன் வண்ணானிடமிருந்து விலை கொடுத்துப் பெற்றுப் பெரியதனக்காரனுக்குக் கொடுக்கிறான். பிராமணன் தனக்குச் சேரவேண்டிய கட்டணமும் வேட்டியும் வந்து சேரும்வரை தான் சொல்ல வேண்டிய மந்திரத்தைச் சொல்ல மறுப்பது வழக்கமாகும். முதலில் வெற்றிலை, பாக்கு, பழம் தேங்காய் ஆகியவற்றைப் பெறுபவனும் அவனே. ஒவ் வொரு நாளும் அம்பட்டன் வீட்டில் நுழைந்ததற்கான தீட்டை அவன் குளித்துப் போக்கிக் கொள்ள வேண்டும். நான்காம் நாளும் ஐந்தாம் நாளும் ஓமம் வளர்க்கப்படு கிறது. கூடியிருப்பவர்கள் முன்னிலையில் மணமக்கள் களி யாட்டம் நடைபெறும். அப்போது மணமகள் அதற்காகவே சிறு வயதிலிருந்து தான் படித்துப் பாடம் செய்த பாடல்களைப் பாடுவாள். ஐந்தாம் நாள் மணமக்கள் மணிக்கட்டில் கட்டப் பட்ட கங்கணம் புரோகிதரின் கணக்கு வழக்குகளைத் தீர்த்த பின் அவிழ்க்கப்படும்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகளைச் செய்பவன் அம்பட்டனே. கூடியிருப் பவர்களுக்குத் தாலிகட்டப்போவதாக அறிவித்தபின் தாலியைக் கட்டுபவனும் அவனே. பிராமணர்கள் திருமணத்திற்கு அழைக் கப்படுகிறார்கள். அவர்களுக்கும் தேங்காய், பழம், காணிக்கை ஆகியன கொடுக்கப்படுகின்றன. இங்கு அண்மைக் காலத் திலேயே பிராமணனை நீக்கிவிட்டுத் திருமணச் சடங்குகளை அம்பட்டன் மேற்கொண்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. தாலி கட்டும்போது அம்பட்டன் பிராமணர்களைப் பற்றியும் வேதங்களைப் பற்றியும் மரியாதைக்குரிய வகையில் சில வார்த் தைகளை முணுமுணுக்கிறான். சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக் காலத்தில் ஒரு திருமண விருந்திற்குப் பிராமணனும் அம்பட் டனும் அழைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு வந்து சேர்ந்ததும் பிராமணன் இறந்துவிட்டதாகவும், கூடியிருந்தவர்கள் அதனைக் கெட்ட சகுணமாகக் கருதிப் பிராமணர் இல்லாததால் அம்

பட்டனையே குருவாக ஏற்றுக் கொண்டதாகவும் அன்றிலிருந்து திருமணச் சடங்குகளை நடத்தும் உரிமையை அம்பட்டன் பெற்றதாகவும் ஒரு கதை வழங்குகின்றது.

அம்பட்டர் சாதியில் பூப்பெய்திய பெண் பதினொரு நாள்கள் தீட்டுப்பட்டவளாகக் கருதப்படுகிறாள். அந்நாள்களில் அவள் நாளும் குளித்துப் புத்தாடை அணிவதோடு அவளைத் தொட்டுவிட்ட ஒருத்தியைத் தோழியாகப் பெறுவாள். அவள் உணவு கொள்ளும் முன்போ மற்றவர்களைத் தொடுவதற்கு முன்போ குளித்தாக வேண்டும். ஒவ்வொருநாளும் நல்லெண்ணெயோடு கோழி முட்டையின் வெள்ளைக் கருவினைக் கலந்து அவளைக் குடிக்கச் செய்வர். மேலும் அச்சமயம் அவள் மரக்கறி உணவு மட்டுமே உண்ண வேண்டும். பன்னிரண்டாம் நாள் சடங்குகள் செய்விக்கப்பட்டபின் அவள் குளித்துவிட்டுத் தீட்டுப் போகத் தூய்மையூட்டப் பெற்றிருக்கும் வீட்டினுள் புகுவாள்.

உயர்சாதியைச் சேர்ந்த பிராமணர்கள் வழக்குப் போலவே அம்பட்டர் சாதியிலும் ஒருமுறை கைம்பெண்ணாகிவிட்டால் எப்போதும் கைம்பெண்தான் என்று கொள்வது வழக்கம். கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வதுண்டா எனக் கேட்டால் அவர்கள் உடனே தரும் பதில் 'நாங்கள் வண்ணாரில்லை' என்பதுதான்.

இறந்தவர்கள் எரிக்கப்படுகிறார்கள். சிறுகுழந்தைகள் இறந்தால் மட்டும் புதைப்பர். சாவுச் சடங்குகளைப் பிராமணக் குருக்களே முன்னின்று நடத்துகிறார். அதற்காக அவர் பணமும் துணியும் கூலியாகப் பெறுகிறார். தீட்டு நீங்கும் நாளில் மற்ற பிராமணர்களுக்கும் பணமும் துணியும்அளிக்கப்படுகின்றன. பிராமணர்களைப் போலவே இவர்களும் ஆண்டுதோறும் சிரார்த்தச் சடங்கு செய்கின்றனர். ஊர்ப் புறங்களில் ஆதரவற்றவர்களாக இறந்து போகும் பிராமணர் ஒழிந்த மற்ற பிணங்களை எரிக்கும் உரிமை தங்களுடையதே என்று அம்பட்டர்கள் கருதுகின்றனர். இறந்தோர்க்குச் செய்யப்படும் சடங்குகளின்போது கொள்ளியிடுகின்றவனைக் கையில் பானையோடு பிணத்தைச் சுற்றி அழைத்துச் செல்பவர்களும், கொள்ளியிடுகின்றவர் நெருப்பு மூட்டுவதற்குரிய இடத்தைக் கொள்ளிக் கட்டையால் சுட்டிக்காட்டுபவர்களும் இவர்களே.

அம்பட்டர் சாதியில் சைவர்களும் வைணவர்களும் உளர். பின்னவர் தங்கள் பிராமணக்குருவால் சங்கு சக்கர முத்திரை வைக்கப்பட்டவர்களாயின் மது, மாமிசங்களை விலக்கி விடுகின்றனர். எனினும் இரு பிரிவினர்களிடையேயும் திருமண உறவுகள் நிகழ்கின்றன. இவர்கள் வலக்கைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இடக்கைப் பிரிவினரான கோமட்டிகளோடு இவர்கள் உடன் உண்ணுவதில்லை என்றாலும், கோமட்டிகளுக்குச் சவரம் செய்ய இவர்கள் மறுப்பதில்லை. செங்கற்பட்டினைச் சேர்ந்த அம்பட்டர்கள் நான்கு பிரிவினராக உள்ளனர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு பெரியதனக்காரன் தலைவனாக உள்ளான். இவர்களில் ஒருவன் சென்னையிலும், மற்றவர்கள் பூந்தமல்லியிலும், செங்கல்பட்டிலும், மதுராந்தகம் வட்டாரத்தைச் சேர்ந்த கருங்குழியிலும் வாழ்கின்றனர். இப்போது இவர்கள் சென்னை மாநிலத்தில் தமிழ் வழங்கும் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மாநிலத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்வது முன்பு எளிதானதன்று. புதிய பகுதிகளில் சென்று குடிபுகும் அம்பட்டர்கள் தங்களுடைய சொந்த ஊரின் ஊர்த்தலைவனுக்குக் கட்டுப்பட்டவராகவே இருக்கவேண்டும். முதலில் பழங்குடி இனமாக இருந்த இவர்கள், பின்னர் வட்டார இனத்தவராக வளர்ச்சி பெற்ற போக்கினை இது காட்டுகிறது. ஒவ்வொரு பெரியதனக்காரனுக்கும் கீழே அறுநூறு முதல் ஆயிரம் வரையான குடித்தனக்காரர்கள் இருப்பர். பெரியதனக்காரன் பரம்பரை உரிமை முறையிலேயே அத்தகுதிக்குரியவனாகிறான். அவ்வுரிமை பெறுபவர் சிறுவர்களாயினும் மதிப்போடும் மரியாதையோடும் நடத்தப்படுகின்றனர். திருமணங்கள் தொடர்பான பேச்சு வார்த்தைகள் அவனை முன் வைத்தே நடத்தப்பட வேண்டும். வழக்குகளைத் தீர்த்து வைப்பது போன்ற முக்கியமான நிகழ்ச்சிகளில் பெரியவர்கள் அடங்கிய ஒரு பஞ்சாயத்துச் சபை அவனுக்கு உதவி புரியும். இவ்வகையில் சண்டை சச்சரவுகளும், கூடா ஒழுக்கம் தொடர்பான வழக்குகளும், தண்டம் கொடுக்க மறுப்பவர்கள் மீதான நடவடிக்கைகளும் தீர்க்கப்படுகின்றன. திருமண அரிசிக் கான விலைக் காசையும், ஒவ்வொரு குடும்பமும் தாள தர்ம காரியங்களுக்காக என ஆண்டுதோறும் செலுத்தும் வரியான

இரண்டரை அணாக்களையும் வசூலிக்கும் பொறுப்பும் இவனுடையதே. சத்திரங்களை நடத்துவதும், கோயில் குளங்களில் மக்களுக்கு அன்னதானம் செய்வதும் முக்கியமான தருமப் பணிகளில் அடங்கும். செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப்போரூரிலும் திருக்கழுக்குன்றத்திலும் அம்பட்டர் சாதியினரால் அத்தகைய சத்திரங்கள் நடத்தப்படுகின்றன. இவ்விடங்களில் பிராமணருக்கு அன்னமளிக்கப்படுவதோடு மற்ற இந்து சாதியாருக்குப் பட்டைசாதம் அல்லது அவர்களே சமைத்துண்ண வேண்டிய பொருள்களும் வழங்கப்படுகின்றன. திருவரங்கத்தில் முன்னொரு காலத்தில் அம்பட்டர்கள் கட்டிய கல்மண்டபம் ஒன்று இன்றும் உள்ளது. பெரியதனக்காரனால் ஒரு வழக்கினைப் பஞ்சாயத்தாரின் உதவியோடு தீர்த்து வைக்க இயலவில்லையாயின் கவரை அல்லது தேசாய்ச் செட்டிகளான மேன்முறையீட்டுக்குரியவர்களிடம் அவ்வழக்கு செல்கிறது. ஆங்கில அரசின் வழக்கு மன்றங்களைக் கடைசிக் கட்டமாகவே நாடுகின்றனர்.

அம்பட்டர்கள் பற்றி ஒரு மாவட்ட அதிகாரி பின்வருமாறு எழுதியுள்ளார்.* 'ஊர் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் பணியாளர்கள் அம்பட்டர்கள். இவர்கள் பணி திருமணம், விருந்து, விழாக்கள், சாவு ஆகிய அனைத்து நிகழ்ச்சிகளிலும் தேவைப்படுவதால் இவர்கள் சுறுசுறுப்பாக வாழ்க்கை நடத்துகிறார்கள். முடிதிருத்துவோன், மருத்துவன், இசைக்கலைஞன் ஆகிய மூன்று தொழில்களையும் இவன் ஒருவனே மேற்கொள்கிறான். முற்பகல் நேரத்தில் தன்னை அமர்த்திக் கொண்டிருப்பவர்கள் இல்லங்களுக்குச் சென்று சவரம் செய்யவும், முடி திருத்தவும் செய்யும் இவன், பின்னர் அந்த ஊர் இன்னிசைக் குழுவினைத் திருமண ஊர்வலத்திலோ, கோயில் விழாவிலோ முன்னின்று நடத்துவதைக் காணலாம். மருத்துவன் என்ற வகையில் வழக்கமாக வைத்தியம் பார்க்கும் வீடுகளுக்கு அறுவை மருத்துவத்திற்கான கருவிகளோடும் தோல் தொடர்பான நோய்களுக்குரிய மருந்துகளோடும் சென்று திரும்புவதைக் காணலாம். நீண்ட அனுபவம் காரணமாக அம்பட்டன் ஓரளவு திறமை

* சென்னை மெயில் ஆங்கில நாளிதழ், 1906. (Madras Mail, 1906.)

வாய்ந்த அறுவைச் சிகிச்சையாளனாகத் தனது கத்தியைத் தயக்கமின்றி முரட்டுத்தனமாகப் பயன்படுத்துவது அவன் வழக்கம். புண்களையும் கழலைகளையும் சிலபோது கண் கட்டிகளைக் கூட நோயாளிக்கு இறுதியில் பேராபத்து விளையும்படியாகத் தயங்காது கிழித்திடுவான். பிடிப்பு, சுளுக்கு ஆகியவற்றை நீவித் தீர்ப்பவனும் இவனே. குருதி நீக்கம் செய்யவேண்டியவர்களுக்கான அட்டைகளைத் தேடிக் கொண்டுவருபவனும் இவனே.

'இவன் வேறு வகைகளிலும் நோயாளிகளின் உடல் நோயைத் தீர்க்கின்றான். அம்பட்டன் வீட்டுப் பெண்களும் பேறு காலத்தில் மருத்துவச்சியாகவும் செவிலியாகவும் பணிபுரிகின்றனர். இந்த நாட்டிலுள்ள பல மருத்துவ மனைகளுக்கும் மகப்பேறு மருத்துவப் பகுதிகளுக்கும் கருப்பை தொடர்பான நோய்களுடன் நோயாளிகள் நிறைய வந்து சேர்வதற்குக் காரணம் இம்மருத்துவச்சிகளின் பெரும்போக்கான மருத்துவமே என்று கூறுவது மிகையாகாது.'

அம்பட்டர்கள் தலை, முகம் ஆகியவற்றோடு உடலின் மற்றப் பகுதிகளையும் சவரம் செய்வர். நகமும் வெட்டுவர். ஆனால் தெலுங்குச் சவரத் தொழிலாளர் இடுப்புக்கு மேல்பகுதி வரை மட்டுமே சவரம் செய்வர். பெண்களுக்கு மயிர் நீக்கம் செய்யும் பணியினை அம்பட்டன் வீட்டுப் பெண்கள் மேற்கொள்வர். சவரத் தொழிலாளர் பிள்ளைகள் கரிப்பிடித்த பானையின் கீழ்ப்பக்கத்தை மழுங்கிய கத்தியால் சுரண்டிக் கரி நீக்கம் செய்து சவரத் தொழிலைப் பழகுவர். பின்னர் மயிர் முளைக்கத் தொடங்கியுள்ள இளைஞர்களுக்கு மயிர் நீக்கம் செய்வர். அம்பட்டர் சாதியைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பியருக்கு மயிர் நீக்கம் செய்வதில்லை. முகமதிய சவரத் தொழிலாளியோ, வேறு சாதியைச் சேர்ந்த சவரத் தொழிலாளியோ அப்பணியை மேற்கொள்கிறான். மிக அண்மையில் ஒரு பறையனுக்குத் தெரியாத்தனமாகச் சவரம் செய்வதற்காக ஓர் இளைஞன் தீட்டு நீக்கச் சடங்கிற்கு உள்ளானான். பறையர்கள், மாலர்கள் ஆகிய பிற கீழ்ச்சாதியினர் தங்களுக்கெனத் தனியே முடி திருத்துவோரையும், துணி துவைப்போரையும் பெற்றுள்ளனர். சில

போது அவர்களுக்கு அம்பட்டர்கள் தங்கள் கத்திகளைச் சிறு தொகைக்குக் கடனாகத் தந்து அவற்றைத் திரும்பப் பெற்றபின் நீரில் கழுவித் தூய்மை செய்து கொள்வர். தோல் தொடர்பான தொற்றுநோய் ஒரே கத்தியைப் பல தரப்பட்ட மக்களுக்குப் பயன்படுத்துவதால் வருவதாகக் கூறப்படுகிறது. வசதியுடைய இந்துக்கள் தங்களுக்கென்று தனியே கத்தி வாங்கி வைத்துள் ளனர். அவர்கள் வீட்டுக்கு வரும் சவரத் தொழிலாளி அதனையே அவர்களுக்குப் பயன்படுத்துகிறான். தெற்கத்திய மாவட்டங் களில் தனது வாடிக்கையாளர்களின் இல்லங்களுக்குச் செல்லும் பழக்கம் அம்பட்டர்களிடையே இல்லை. அவர்கள் தங்கள் வீட்டின் பின் உள்ள கொட்டகையிலேயே காலை முதல் நண் பகல் வரை காத்திருந்து வரும் வாடிக்கையாளர்களுக்குப் பணிபுரிகின்றனர். கூப்பிட்டனுப்பினால் சில சமயங்களில் மட்டும் பிராமணர் இல்லங்களுக்கும் உயர்ந்த சாதிக்காரர்கள் இல்லங்களுக்கும் சென்று காத்திருப்பர். பலர் ஆற்றங்கரை களிலும் வாடிக்கையாளர்களுக்குப் பணிசெய்கின்றனர். ஆங்கி லேய முடிதிருத்துவோனைப் போலவே அம்பட்டர்களும் பணி செய்கையில் ஊர்க்கதைகளைப் பேசும் பழக்கமுடையவர்கள். உள்ளூரில் நிகழும் அன்றாட நடவடிக்கைகளைப் பொல்லாப்புக் குள்ளாவோர் பற்றிய பரபரப்பான செய்திகளையும் அவர்கள் தெரிந்து வைத்திருப்பர். பிரிட்டீசாரின் படைப்பிரிவுகளில் பணியாற்றும் சவரத் தொழிலாளர் படையோடு இடம் பெயர்ந்து செல்லும் இயல்புடையவர்கள். எல்லாப் படை இருப்பு களிலும் அவர்கள் சமூகத் தொடர்புடையவர்களாக இருப்ப தோடு நண்பர்களையும் பெற்றுள்ளனர். திருமண விருந்து, சாவு முதலான நிகழ்ச்சிகளைச் சென்று அறிவிக்கும் பணியையும் இவர்கள் மேற்கொள்வர். மேலும் சிற்றூர்களில் மருத்துவத் தையும் அறுவை மருத்துவத்தையும் இவர்கள் மேற்கொள்கின் றனர். நோய் தீர்க்கக் குருதி வடித்தல் மருத்துவ முறை இன்னமும் ஆங்காங்கே வழக்கத்தில் இருப்பதால் குருதி வடிப்புக்கான அறுவையையும் இவர்களே மேற்கொள்கின்றனர். அரசு பொது மருத்துவமனைகளும் மருந்தகங்களும் தோன்றி விட்டதால் சிற்றூரில் குயவர்கள் செல்வாக்கு மங்கியதைப் போல இவர்கள் செல்வாக்கும் குறைந்துவிட்டது. இவர்

களுடைய மருந்து, இவர்கள் வெளியே கூறாதபடி மறை பொருளாகக் காக்கும் நாட்டுப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் வில்லைகளாகும். மயிர் நீக்கப் பயன்படுத்தும் அதே கத்தியே இவர்களுடைய அறுவை மருத்துவக் கருவியு மாகும். கழலைகளை உடைப்பதில் மேற்பூச்சு மருத்துவமுறை பயனளிக்காது போகுமானால்தான் இவர்கள் அறுவை மருத்து வத்தை மேற்கொள்வர்.

ஊராருக்கு அம்பட்டர்கள் செய்யும் பலவகைப் பணிகளுக்கு ஈடாக இவர்களுக்கு விலையின்றியே நிலப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. அதற்காக ஒரு சிறு தொகையையே இன்றும் இவர் கள் வரியாகச் செலுத்துகின்றனர். நில அளவையோ உறுதிப் பாடோ இல்லாத முன்காலத்தில் இவர்கள் தங்கள் கடமைகளில் தவறினால் இவர்களுடைய நிலம் பறிமுதல் செய்யப்படும் என அச்சுறுத்தப்பட்டு வந்தனர். இன்று தங்கள் நிலத்தை விற்க வோ, ஒத்தி வைக்கவோ, பிறருக்கு வழங்கி விடவோ இவர் களுக்கு உரிமை உள்ளது. பல குடும்பங்களாகப் பிரிந்துள்ள இவர்கள், ஓர் ஊரிலுள்ள குடும்பங்களையும் தங்களுக்குள் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு குடும்பமும் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு உரிய பணிகளைச் செய்து அக்குடும்பத்தாரிட மிருந்து சில உரிமைகளைப் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு அம்பட்டன் குடும்பமும் பிற உரிமைகளோடு மூன்று அல்லது நான்கு மரக்கால் நெல்லினைத் திருமணம் செய்து கொண்டுள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனிடமிருந்தும் பெறும் உரிமை யுடையது. ஊர்ச் சமுதாய அமைப்பில் அம்பட்டர்களுக்கே அன்றி ஊர் அலுவலர், கருமார், தச்சர், வண்ணார், சோதிடர் பூசாரிகள், நாட்டிய மாதர் ஆகியோருக்கும் நிலங்கள் வழங்கப் பட்டுள்ளவென அறிகின்றோம்.

முடிதிருத்துபவன் எனத் தொழில் நிலையில் அழைக்கப்படும் அம்பட்டன் நாசிகன் (புனிதமற்றவன் என்ற பொருளில்) என் றோ, கணக்கெடுப்புப் பதிவில் உள்ளபடி நாசுவன் (மூக்கிலிருந்து தோன்றியவன்) என்றோ நாவிதன் என்றோ அழைக்கப் படுகிறான். மருத்துவன் என்ற பொருளில் அவன் பண்டிதன் அல்லது பரியாரி என்றும் அழைக்கப்படுகிறான். குடிமகன் என்ற

பெயரும் அவனுக்கு உண்டு. திருமணம் முதலிய நல நிகழ்ச்சிகளின்போது நாசுவன் என அழைப்பது அபசகுணம் ஆகையால் அந்நிகழ்ச்சிகளின்போது குடிமகன் என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறான். அவனை அடையாளம் காட்டுவது எப்போதும் அவன் தன்னோடு எடுத்துச் செல்லும் சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியாகும். அதனோடு கத்தி, முள்வாங்கி, காதுக்குரும்பை வாங்கி ஆகியவற்றையும் எப்போதும் உடன்கொண்டு செல்வான். தன் மேலாளர்களைக் கீழே விழுந்துவணங்குவதோடு கும்பிட்டுப் பணிவாக அவர்கள் முன் இவன் சற்றுத் தள்ளியே நிற்க வேண்டும். பிராமணர் இல்லங்களுக்கு அமாவாசை, பௌர்ணமியின் போதும் செவ்வாய், சனி ஆகிய நாள்களிலும் ஏகாதசி, துவாதசி போன்ற சிறப்பான வேளைகளிலும் செல்லக் கூடாது. ஞாயிறு, திங்கள் ஆகிய கிழமைகளே அவர்கள் இல்லங்களுக்குச் செல்ல ஏற்றவை. தனிப்பட்ட ஒவ்வொருவனது திறமைக் கேற்பவும் சவரத்தின் தரம் அமையும். 'வயதான அம்பட்டனிடம் செல்; புதிய வண்ணானிடம் வெளுக்கப் போடு' என்ற தமிழ்ப் பழமொழி ஒன்று உண்டு. அரசர்கள் தூங்கும் போதே அவர்கள் விழித்துக் கொள்ளாதபடி திறமையாகச் சவரம் செய்த முடிதிருத்துநர்கள் பற்றிய கதைகள் பல உள. தஞ்சாவூரை ஆண்ட கடைசி அரசர் அம்பட்டர்களுடைய இந்தத் திறமையை அவர்கள் செயல்படும்போது அடிக்கடி நேரில் கண்டு மகிழ்வதுண்டு என்று சொல்லப்படுகிறது. ஓர் அரசன் தூங்கும்போது அவன் விழித்துக் கொள்ளாதபடி அவனுக்குச் சவரம் செய்து அதற்குப் பரிசாகத் தன்னைப் பிராமணனாக ஆக்கும்படி கேட்ட அம்பட்டனுடைய பழைய வரலாறும் அவனுடைய வேண்டுகோளினை அரசவை விகடகவி தெனாலி ராமன் தன்னுடைய சூழ்ச்சியால் எப்படி மாற்றிக் கொள்ளும்படி செய்தான் என்பதும் அண்மையில் இசைப்பாட்டாகப் பாடப்பட்டுள்ளது.* அந்த இசைப்பாட்டில் அந்த அம்பட்டன் எப்படித் தலையைத் தன்னிடம் சோப்பு இல்லாத காரணத்தால் தண்ணீரால் மட்டும் நனைத்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இன்று அம்பட்டர்கள், கடைகளில் கிடைக்கும் மட்டமான

---

* எ. பி. ஸ்மித், சென்னை ரெவியூ, 1902. (A. P. Smit, Madras Review, 1902.)

சோப்பினைப் பயன்படுத்துகிறார்கள். வாடிக்கையாளர்களே வாங்கிக்கொடுக்கும் விலையுயர்ந்த சோப்பினைப் பயன்படுத்துவதும் உண்டு.

சென்னை நகரின் பிரிவுகளான திருவல்லிக்கேணியையும் மைலாப்பூரையும் இணைக்கின்ற ஹாமில்ட்டன் பாலம் அரிதானதொரு சொற் சிதைவினால் அம்பட்டன் வராவதி என்றும் 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்றும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. அந்தப் பாலம் கட்டப்படுவதற்கு முன் அந்தக் கால்வாயில் வடகிழக்குப் பருவமழையால் வெள்ளம் பெருகிய ஒரு சமயத்தில் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த ஓர் அம்பட்டன் மைலாப்பூரில் வாழ்ந்த ஒரு பொறிவலாளருக்குச் சவரம் செய்ய வேண்டிய கடமை உணர்வினனாகத் தொல்லைப் பட்டுக் கால்வாயைக் கடந்து நீந்திச் சென்று அவர் தூங்கிக் கொண்டிருக்கும்போதே அவருக்கு விழிப்பு ஏற்படாதபடி சவரம் செய்துவிட்டு அதற்குப் பரிசாகப் பொது நலத்தை மனத்தில் கொண்டவனாக அக்கால்வாயின் மீது ஒரு பாலம் கட்டும்படி கேட்டுக் கொண்டான் என்ற கதையினை உங்களுக்குச் சவரம் செய்தபடி உங்கள் அம்பட்டன் கூற நீங்கள் கேட்டிருக்கலாம்.

அம்பட்டர் (திருவாங்கூரைச் சேர்ந்த)-
Ambattans of Travancore

பின்வரும் விவரங்களை எனக்குத் தந்து உதவியவர் திரு என். சுப்ரமணிய அய்யர். திருவாங்கூரைச் சேர்ந்த அம்பட்டர்கள் பல பட்டங்களைத் தந்து அழைக்கப்படுகின்றனர். 'க்ஷுரக' என்ற வடசொல்லின் திரிபான 'க்ஷுரகன்' அல்லது 'க்ஷுரக்காரன்' என்ற பெயரால் அழைக்கப்படுவதையே மத்திய, தென் திருவாங்கூரில் வாழ்பவர்கள் விரும்புகிறார்கள். தெற்கில் அம்பட்டன் என்ற வழக்குப் பொதுவழக்கினதாக உள்ளதாகத் தெரிகிறது. திருவாங்கூர்ப்பகுதி முழுவதும் 'ப்ராணோபகாரீ' என்ற அரிய பெயரும் அவர்களுக்குரியதாக உள்ளது. இவர்கள் பல சாதியாருடைய சமயச் சடங்குகளையும் முன்னின்று நடத்திவைத்து அவர்கள் ஆன்மா ஈடேற உதவுகின்றமையால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். இப்பெயரின் சுருக்க வடிவமான 'பிராணு' என்பது தொடக்க கால நில அறுதியீடு ஆவணங்களில் இடம் பெற்றுள்ளது. அரசர்களும் பெருஞ்செல்வர்களும் தங்களுக்கான அம்பட்

டர்களைத் தேர்ந்தெடுத்தற்குரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் விளக்கூட்டாளவன் எனத் தலையை மழிப்பவன் என்ற பொரு ளில் அழைக்கப்படுகின்றனர். வட திருவாங்கூரில் பல குடும்பத் தினர் தங்களுக்குப் பணிக்கர் என்ற பட்டத்தைத் தலைவர் என்ற தகுதியோடு அரசர்கள் தந்ததற்கான பட்டயங்களை வைத்துள் ளனர். வேறுசிலர் தங்களின் பிறிதொரு தொழிலான மருத்துவத் தொழிலுக்கான வைத்தியன் என்ற பட்டத்தைப் பெற்றவரா யுள்ளனர்.

முடிதிருத்துவோரிடையே அகமணக்கட்டுப்பாடுடைய பல குலப்பிரிவுகள் காணப்படுகின்றன. திருவனந்தபுரத்தில் சால வழி, பாண்டிய வழி, அட்டுங்கள் வழி, பெருந்தண்ணி வழி என்ற நான்கு பிரிவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் திருவாங்கூரைச் சார்ந்த அம்பட்டர்களை மூன்று பிரிவுகளாகப் பின்வருமாறு பிரித்துவிடலாம். 1) மக்கள் தாயவழியில் சொத் துரிமை பெறும் மலையாளம் பேசும் அம்பட்டர். 2) மருமக்கள் தாயவழியில் சொத்துரிமை பெறும் மலையாளம் பேசும் அம் பட்டர். 3) பல பகுதிகளில் மலையாளத்தைத் தங்கள் தாய் மொழியாக மேற்கொண்டுள்ள தமிழ் பேசும் அம்பட்டர்கள். இவர்கள் அண்மையிலேயே மலையாளம் பேச முற்பட்டவர்கள் என்பதனை இவர்கள் வீட்டுப் பெண்கள் இன்னமும் தமிழர் வழக்கப்படி ஆடைகளும், அணிகளும் புனைவதிலிருந்து தெரி யலாம். சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டிலி ருந்து பத்மனாதபுரம் வட்டத்தில் குடியேறிய மலையாளம் பேசும் பூலான்கள் என அழைக்கப்படும் அம்பட்டர்கள் வாழ் வதனை இதற்குச் சான்றாகக் கூறலாம். அவர்கள் தமிழ் பேசும் அம்பட்டர்களுடன் பல வழிகளில் ஒப்புமை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். கோட்டயத்திலும், வேறு சில வட திரு வாங்கூர் வட்டங்களிலும் பெரும்பாலான அம்பட்டர்கள் அண்மையில் இவ்வாறு மொழிமாறியுள்ளனர் எனக் கூறலாம். கொள்கை அளவிலாவது மக்கள் தாயமுறை பேணும் அம்பட்டர் களும், மருமக்கள் தாயமுறை பேணும் அம்பட்டர்களும் அக மணக்கட்டுப்பாடுடைய இரு குலத்தினர் எனக் கொள்ளலாம். இவர்களுள் முன்னவர்கள் தங்களைச் சமூகப் படிநிலையில் பின் னவர்களைக் காட்டிலும் மிக உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர்.

சில சமயங்களில் மக்கள் தாய முறை பேணும் அம்பட்டர்கள் தங்கள் பெண்களை மருமக்கள் தாய உரிமை பேணும் அம்பட்டர்களுக்கு மணமுடித்துத் தருகின்றனர். ஆனால் மருமக்கள் தாயவழி பேணும் அம்பட்டர் பெண்களை அவர்கள் பெண் கொள்வதில்லை. இவ்வாறு மணம் செய்விக்கப்படும் பெண்கள் தங்கள் பிறந்தகத்தில் திரும்ப வந்து புகவோ பிறந்த வீட்டாரோடு தொடர்பு கொள்ளவோ உரிமை தரப் படுவதில்லை.

தெய்வத்தன்மையான சுரபி என்ற பசுங்கன்றின் சாபமே தாங்கள் இத்தொழிலை மேற்கொள்ளக் காரணமென இவர் களிடையே வழங்கும் பழங்கதை ஒன்று தெரிவிக்கின்றது. இவர்கள் தோற்றம் பற்றிய வரலாறு எதுவாயினும் இவர்கள் தங்கள் தொழிலை நன்கு பேணுவதோடு, இளமையிலேயே பலர் மருத்துவமும் பயின்று ஊர் மக்களின் நோய் போக்க உதவு கின்றனர். இவர்கள் சாதிப் பெண்கள் மகப்பேற்றின்போது செவிலிகளாகத் துணை நிற்கின்றனர். உயர்சாதி இந்து ஒருவர் இறந்தால் அவர் பிணத்தை எரிக்கத் தேவையான எரி பொருளைத் தேடி உதவுவதும், சுடலைக் கூட்டத்தைப் பிணம் எரியும்போது கண்காணிப்பதும் இவர்கள் கடமைகளாம்.

ஆடை, அணி வகைகளைப் புனைவதில் இவர்கள் நாயர் களை ஒத்துள்ளனர். சிலர் பொன்னாலான முத்துச் சரமணி தோடு, சங்கு வடிவிலான திருமண அணியினையும் கழுத்தில் அணிந்து நாயர் சாதிப் பெண்களிலிருந்து வேறுபட்டுத் தோற் றம் தருகின்றனர். எனினும் தென் திருவாங்கூரினைச் சேர்ந்த பெண்கள் முழுதும் நாயர் சாதிப் பெண்களின் அணிமணி வகைகளையே பின்பற்றுகின்றனர். மற்ற பிரிவினரை விட அம்பட்டர்களிடையே பச்சை குத்திக் கொள்ளுதல் பரவலாகக் காணப்படுகிறது. தற்போது இப்பழக்கம் மெல்ல மெல்ல அருகத் தொடங்கி விட்டதெனலாம்.

இவர்கள் இந்துக்களின் பொதுவான கடவுளர்களை வழி படுவதோடு கூட மூர்த்தி, மாடன், யட்சன் போன்ற தெய்வங்

களையும் வழிபடுகின்றனர். விபத்துக்களிலோ, தொத்து நோய் வந்தோ இறந்து விடுபவர்களின் பிணங்களைப் எரிக்காமல் புதைக்கவே செய்கின்றனர். ஒரு சூனியக்காரனை அழைத்து இறந்தவர்களைப் புதை குழியிலிருந்து எழுப்பிய பின் அவன் அறிவுரைப்படி பிரிந்து போன ஆவிக்காக ஒரு கூரைக் கோயிலோ, கொட்டகையோ அமைப்பர். ஒவ்வொரு ஆண்டும் தை மாத உத்திர நட்சத்திரத்தில் இறந்தவர்களின் ஆவிக்குப் பலி கொடுப்பர்.

கேரளச் சிற்றரசர்களால் ஒவ்வொரு ஊரிலும் சில குடும்பத்தினருக்கு இவர்கள் சாதித் தொடர்பான எல்லா வழக்குகளையும் தீர்த்து வைக்கும் உரிமை வழங்கப் பட்டுள்ளது. சமுதாய குற்றங்கள் அனைத்தையும் அவர்கள் கேட்டுத் தீர்ப்பு வழங்குவர். தீர்ப்பு, 'இனங்கூட்டு' எனப்படும் சாதியைச் சேர்ந்த அனைவரும், ஒருங்கிணைந்து உண்பதற்காகக் குற்றம் புரிந்தோா தங்கள் செலவில் விருந்து வைக்கவேண்டும் என்பதாகவே இருக்கும். இந்த விருந்தில் பந்தியில் அமர்ந்திருக்கும் விருந்தினர் இலையில் முதலில் வைக்கப்படுவது ஒரு குறிப்பிட்ட தொகை பணமாகும்.

தாலிகட்டு, சம்பந்தம் சடங்குகளும் இவர்களிடையே நடைபெறுகின்றன. முன்னது பெண் பூப்படையும் முன்னும், பின்னது பெண் பூப்படைந்த பின்னும் நடைபெறும். முதல் சடங்குகளாக நிச்சயதார்த்தமும், காப்புக் கட்டுதலும் முடிந்த பின் மணமகன் ஊர்வலமாக மணக்கூடத்தை அடைவான். வேத மந்திரங்கள் ஓதுவதோ, இன்னார்தான் முன்னின்று திருமணத்தை நடத்த வேண்டுமென்ற விதிமுறைகளோ இல்லை. அடிக்கடி சங்கு முழக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும். திருமண நிகழ்ச்சிகள் நான்கு நாள்கள் நடைபெறும். அத்தை அல்லது மாமன் மகளோ மகனோ தக்க துணையாகக் கருதப்பட்டு மணம்செய்விக்கப்படுகின்றனர்.

இறந்தவன் பிணத்தை எரித்தோ புதைத்தோ முடித்த பின் உறவினர் இருவர் ஒரு கயிற்றினை இறந்தவரின் எஞ்சியிருக்கும் எச்சத்திற்கும், கருமம் செய்பவருக்கும் இடையே

பிடிப்பர். அக்கயிற்றை வெட்டி இறந்தவர்க்கும் கருமம் செய்பவருக்குமான எல்லா உறவுகளும் அடியோடு துண்டிக்கப் பட்டு விட்டன எனக் குறிக்கப் 'பந்தம் அறுத்தல்' என்ற இச் சடங்கு நடத்தப்படுகிறது. எல்லாப் பிரிவினரும் பதினாறு நாள் கள் தீட்டு மேற்கொள்கின்றனர். ஆனால் தமிழ் பேசும் அம்பட்டர்கள் மட்டும் சாவுக்குப்பின் பதினாறாம் நாள் தீட்டுக் கழிக்கும் சடங்கு நடத்தித் தூய்மையை மீண்டும் அடைகின்றனர்.

அம்பிகா - Ambiga

கப்பேரர்களுக்கான மற்றொரு பெயர்.

அம்போசல (தாமரை) - Ambojala

குறவர்களின் ஒரு குடும்பப் பெயர்.

அம்மா - Amma

பள்ளர், பறையர் சாதியின் உட்பிரிவு இது. எல்லம்மா, மாரியம்மா என கிராமங்களில் அம்மன் கோயில்களில் வழிபடப் படும் தெய்வங்களின் பட்டப் பெயருமாகும்.

அம்முக்குவன் - Ammukkuvan

கடலரையர்*களின் ஓர் உட்பிரிவு. (பார்க்க: வாலன்)

அனபர் (கொள்ளு) - Anapa

கோமட்டிகளின் ஒரு கோத்திரம்.

அனசா (இணைப்புப் பூண்) - Anasa

குர்னிகளின் ஒரு கோத்திரம்.

அன்சு (ஓரம்) - Anchu

குர்னிகளின் ஒரு கோத்திரம்.

---

* கொச்சி மக்கள் கணக்கெடுப்பு, *1901*. (Cochin Census Report, 1901.)

அந்தரர் (பந்தல்) – Andara

குருபரின் ஒரு குலம்; பந்தல் எனப் பொருள்படுவது.

அண்டே (பானை) - Ande

குருபரின் ஒரு பிரிவினர். இது மூங்கில் அல்லது மரத்தாலான ஆட்டில் பால் கறப்பதற்குப் பயன்படுத்தும் பாத்திரம். மேலும் இது கொரக்கர் சாதியின் ஒரு பிரிவினையும் குறிக்கும். இவர்கள் தங்கள் கழுத்தில் ஒரு சட்டியினைத் தொங்கவிட்டபடி இருப்பர். நெடுஞ்சாலைகளை அசுத்தம் செய்யாமல் அவர்கள் எச்சிலை அச்சட்டியில் துப்பும்படி வற்புறுத்தப்பட்டுள்ளனர்.

அண்டேரவுத்தர் - Anderaut

1901 கணக்கெடுப்பில் குறும்பரின் ஓர் உட்பிரிவினராகப் பதியப் பட்டுள்ளனர். அண்டே குருபர்களின் ஒரு பிரிவு ஆதல் வேண்டும். ரவுத் என்பது இலிங்காயதர்களின் ஊர்த்தலைவன் பட்டமாகப் பெரிதும் வழங்கப்படுவது.

ஆண்டி - Andi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில், திரு டபிள்யூ. பிரான்சிஸ் ஆண்டிகள் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:- 'ஒரு பிராமணனுக்கோ ஒரு துறவிக்கோ இரத்தல் எப்பொழுதும் வெட்கப்படத் தேவையில்லாத தொழிலே. 'ஒரு பிராமணன் உலகத்தொடுபட்ட மதிப்பை நஞ்சாகக் கருதி ஒதுக்க வேண்டும். அவன் அமிழ்தத்தைத் தேடி அடைய முயல்வதுபோல் இகழ்ச்சியை இடைவிடாது தேடி ஏற்றுக் கொள்ள வேண்டும்' என மனு விதித்துள்ளார். ஒவ்வொரு பிராமண இளைஞனும் தன் வாழ்வின் ஒரு பகுதியை இரவலனாகக் கழிக்க வேண்டும். சமணர்களும் பௌத்தர்களும் கூட இரத்தல் பற்றி இத்தகைய கருத்தையே கொண்டிருந்தனர். இந்துக்களின் சத்திரங்களும்* ஊட்டுப்புரைகளும், சமணப் பள்ளிகளும். பௌத்த விகாரங்களும் தங்கள் தங்கள் சமயம் சார்ந்த இரவலரை உண்பிப்பதற்காக இந்த நோக்கில் தோன்றியவையே. சமயத்துறை சார்ந்திருப்பவர்களையும் சமயத் துறவிகளையும் தவிர ஏனையோர் இத்தகைய அமைப்புகளில்

* புனிதப் பயணம் மேற்கொண்டவர்களையும் பயணிகளையும் உபசரித்து உண்பிக்கும் இடங்கள்.

உதவி பெறத் தகுதி அற்றவர்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளை உழைத்தே பெறவேண்டும். இத்தகையவர்களிடையே பண்டாரங்களையும் ஆண்டிகளையும் போலச் சமயச் சாயம் பூசிக் கொண்டவர்களைத் தவிர – பிச்சையெடுத்தல் இன்றும் இழிவானதாகவே கருதப்படுகிறது. தமிழ் மாவட்டங்களில் மொத்த மக்கள் தொகையில் பிச்சைக்காரர்கள் 97 சதவீதமாக உள்ளனர். இது தெலுங்கு மாவட்டங்களில் காணப்படுவதைவிட இரண்டு மடங்காகும். மலபாரில் ,09 சதவீதமாக மிகக் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். தெலுங்கர்கள், தமிழர்களைவிட வசதி படைத்த பிரிவினர் என்று கூற இடமில்லை. இவர்களிடையே காணப்படும் இந்த வேறுபாட்டுக்குக் காரணம் வடக்கைவிடத் தெற்கு மிகுந்த சமய ஈடுபாடுடையதாக இருப்பதுதான் எனலாம். தெற்கில் கோயில்களும் அதைச் சார்ந்த சத்திரங்களும் பலவாக உள்ளன. (இந்தியாவில் சமயமும் அறச் செயலும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன.) இதுவே பிச்சையெடுத்தலையே தொழிலாகக் கொள்ளும் மனப்போக்கினைப் பலருக்கு உண்டாக்கக் காரணமாயிற்று எனலாம். ஆண்டிகள் தமிழ்நாட்டுப் பிச்சைக்காரர்கள். இவர்கள் பண்டாரங்களைவிட உண்மையில் தாழ்ந்தவர்களே. எனினும் ஆண்டிப் பண்டாரம் என்ற இரு பெயரையும் அவற்றிடை வேறுபாடு பாராட்டாமல் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இட்டு வழங்குகின்றனர். பண்டாரங்கள் பொதுவாக வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள். சூத்திரர்களின் எல்லாப் பிரிவிலிருந்தும் ஆண்டிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே முதலில் அவர்கள் சார்ந்திருந்த சாதிப் பெயரைக் கொண்ட பல உட்பிரிவினராக அவர்கள் உள்ளனர். ஜங்கம் ஆண்டிகள் ஜங்கம் சாதியைச் சேர்ந்த பிச்சைக்காரர்கள்; ஜோகி ஆண்டிகள் ஜோகி சாதியைச் சேர்ந்த பிச்சைக்காரர்கள் என்பது போன்று இவர்கள் உட்பிரிவுகள் அமைந்துள்ளன. செய்யும் தொழில் முதலிய பிற காரணங்களாலும் இவர்களிடையே பிரிவுகள் உள்ளன. கோயில் ஆண்டிகள் கோயில்களில் பணிபுரிவோர். முடவாண்டிகள் முடமாக உள்ள பிச்சைக்காரர்கள். ஆண்டிகள் எல்லோருமே பிச்சைக்காரர்களாக வாழ்க்கை நடத்துவதில்லை. சிலர் செங்கல் கட்டிட வேலை பார்க்கின்றனர்; சிலர் பயிர்த்தொழில்

செய்கின்றனர்; சிலர் கோயில்களில் பணிபுரிகின்றனர். தங்கள் சடங்குகளை முன்னின்று நடத்த இவர்கள் பிராமணரையே அமர்த்தினாலும் இவர்கள் அனைவரும் ஊன் உண்பவர்களாகவும், குடிப்பழக்கம் உடையவர்களாகவும் உள்ளனர். கைம்பெண்களும், மணமுறிவு பெற்றவர்களும் மறுமணம் புரிந்து கொள்ளலாம். திருநெல்வேலி ஆண்டிகளின் திருமணத்தில் மணமகளின் உடன்பிறந்தவளே மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் புதுமையான பழக்கம் உள்ளது.'

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் ஆண்டிகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளதாவது:- 'இவர்கள் சைவ நெறியை மேற்கொண்டுள்ள பிச்சைக்காரர்கள். தமிழ் மாவட்டங்கள் அனைத்திலும் சேகண்டியைச் சிறு குச்சியால் தட்டி ஒலியெழுப்பியபடி வீடுவீடாகச் சென்று இவர்கள் பிச்சையேற்பதைக் காணலாம். ஆண்டிகள் மற்றச் சாதியாரினும் வேறுபட்டவர்கள். ஆண்டிகளோடு எந்தச் சாதியைச் சேர்ந்தவரும் சேரலாம். பெருமளவில் கோயில்களில் ஆடுகள், எருமைகள், கோழிகள் ஆகியன பலியிடப்படும் சமயங்களில் இவர்களில் சிலர் ஊர்ப்புறக் கோயில்களில் பணி மேற்கொள்கின்றனர். இறந்தவர்களைப் புதைப்பதே இவர்கள் பழக்கம். இவர்களிடையே 105 உட்பிரிவுகள் பதியப்பட்டுள்ளன. அவைகளுள் குறிப்பிடத்தக்கவை வருமாறு:- ஜங்கம், கோவணாண்டி, லிங்கதாரி, முடவாண்டி, உப்பாண்டி. கோவணம் சிறிய இடை ஆடை. இந்த ஓர் உடையால் மானங்காத்தவர்களாக மற்றபடி பிறந்த மேனியராகவே இவர்கள் திரிவர். முடம் என்றால் கால் முடமானோர். முடவாண்டிகள் (த. க.) கொங்கு வேளாளர் சாதியைச் சேர்ந்த உடல் ஊனமுள்ள குழந்தைகளைத் தங்கள் பிரிவில் சேர்த்துக்கொள்ளும் உரிமை பெற்றவர்கள். உப்பாண்டி என்ற சொற்பொருள் விளங்குவதாக இல்லை. எனினும் உப்புக்கும் அந்த சொல்லுக்கும் தொடர்பேதுமிருக்க வாய்ப்பில்லை.''

இவர்களைப் பற்றித் தஞ்சாவூர்க் கையேட்டில் கூறப்பட்டுள்ளதாவது:- ''ஆண்டி என்ற சொல் பொதுவாக வீடற்ற பரதேசி என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இது சைவ நெறி சார்ந்தவர்களுக்கு உரிய பெயர். இவர்கள் நாளும் காலை

வேளையில் அரிசியினைப் பிச்சை கேட்டு இசைப்பாடல்களையும், பக்திப் பாடல்களையும் பாடியபடி செல்வர். சேமக்கலம் எனப்படும் சேகண்டியை இவர்கள் குறுந்தடி கொண்டு அடிப்பதோடு அடிக்கடி தங்களுடன் கொண்டு செல்லும் சங்கையும் முழக்குவர். இவர்களுக்குக் குடிப்பழக்கம் உண்டு."

"தென்னிந்தியப் பரதேசிகள், பஞ்சத்தாண்டி - பரம்பரையாண்டி என இரு பிரிவினராக உள்ளனர். முன்னவர் பஞ்ச காலத்தில் பிச்சையெடுத்தலை மேற்கொள்வர். பின்னவர் பரம்பரை பரம்பரையாக அவ்வழிப்பட்டவர். தக்க சமயம் வாய்க்குமானால் முன்னவர் ஒருவரிடமிருந்து குழந்தையைக் கூடத் திருடிச் செல்வாரென்றும், பின்னவர் கிணற்றில் தவறி விழுந்த குழந்தையைக் கூடக் கிணற்றில் குதித்தெடுத்து அதன் பெற்றோரிடம் சேர்ப்பரென்றும் பொதுவாக இவர்களின் பண்புகள் பற்றிக் கூறக் கேட்கலாம்."*

ஆண்டி (ஒரு கடவுள்) என்ற இப்பெயர் சிறுகுடி கள்ளர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பெயராகவும் உள்ளது.

ஆண்டினியர் – Andinia

திரு எப். பாவ்செட் தோம்புகளினுள் காணப்படும் தாழ்ந்த உட்பிரிவினரெனவும் தவளை உண்பரெனவும் இவர்களைப் பற்றிப் பதிந்துள்ளார்

ஆண்டுரார் – Anduran

மண்பாண்டம் செய்யும் நாயர் பிரிவினரின் ஓர் உட்பிரிவினர். கோயில்களில் பயன்படுத்துவதற்குரிய மண் பாண்டங்கள் செய்பவர். முன்னர் கள்ளிக்கோட்டை சாமுத்திரிகளின் ஆட்சியிலிருந்த ஆண்டூர் என்ற ஊர்ப்பெயரிலிருந்து இப்பெயர் வந்துள்ளது.

---

* கோமட்டிகள் பற்றிய நகைச்சுவை நல்லறிவுக் கதைகள் – சி. ஹயவதன ராவ் 1907.

ஆனை - Āne (elephant)

ஹொலையர், காப்பிலியர், குருபர், காட்டுக் குறும்பர், மொகேர், கங்கதிகார வக்கலிகர் ஆகிய சாதியாரின் புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பெயர். யானைக்குல அல்லது யானுக என்பது காபுகளின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பெயர். இவர்கள் யானைத் தந்தத்தினைத் தொடுவதில்லை. இடையர் களின் ஓர் உட்பிரிவாக 'ஆனைக் கொம்பு' என்பதும் உள்ளது.

அங்காரகுடு (செவ்வாய்க் கிரகம்) – Angārakudu

மங்கலர் சாதியின் மற்றொரு பெயர்.

அஞ்ஜ - Anja

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் அஞ்சர், பள்ளர் சாதியின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. தந்தையைப் பள்ளர்கள் வழக்கமாக அழைக்கும் 'அஞ்ஞா' என்பதன் தவறான வடிவமாகலாம் இது.

அஞ்சு நாள் – Anju Nāl (five days)

சாவுச் சடங்கினை ஐந்தாம் நாளில் நிகழ்த்தும் பள்ளியர் சாதியாருக்குரிய பெயராகச் சேலம் மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது.

ஐந்நூற்றான் – Anjuttān (men of the five hundred)

பாணர்களினுடைய உட்பிரிவாகக் கணக்கெடுப்பில் பதியப்பட்டுள்ள இப்பெயர் வேலன் சாதியாரின் மற்றொரு பெயருமாகும். வேலன்களோடு நெருங்கிய தொடர்புடைய மண்ணான்களின் உட்பிரிவாக மலபார் விவரத் தொகுப்பில் குறிக்கப்பட்டுள்ளது. திருவாங்கூரைச் சேர்ந்த தென்காஞ்சி வேளாளர்களின் மற்றொரு பெயராக ஐந்நூற்றில்லத்தார் என்பதும் உள்ளது.

அண்ணா - Anna (brother)

தாசரி, கவரர், கோல்லர், கொண்டதொரையர், கொப்பலர்

வெலமர், மங்களர், மிலர், பைதர், செகிடியர் போன்ற பல இனத்தவர்கள் சூடிக் கொள்ளும் பட்டப் பெயர்.

அன்னம் - Annam (cooked rice)

சோறு எனப் பொருள்படும் இது காமல்லர், தொகடர் ஆகியோரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பிரிவு.

அண்ணாவி - Annāvi

கோயில்களில் நாகசுரம் இசைக்கும் சவலக்காரர்களின் ஒரு பட்டப் பெயர்.

அண்டலவர் - Antalavar

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

அந்தராளர் - Antarāla

சூத்திரர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடைப்பட்டவர் அம்பலவாசிகள் என்பதனைக் குறிப்பதான அம்பலவாசிகளுக் குரிய ஒரு பெயர்.

அந்தர்சனம் - Antarjanam

உள்ளிருப்போர் எனப் பொருள் படுவது. தனித்து இருக் கும் நம்பூதிரிப் பிராமணப் பெண்களைக் குறிக்கும் சொல்.*

அனுலோம - Anuloma

அனுலோம, வெலோம எனும் சூத்திரர் பிரிவுகள் இரண்ட னுள் ஒன்று. இது உயர்சாதி ஆணுக்கும் கீழ்ச் சாதிப் பெண் ணுக்கும் பிறந்தவர்களைக் குறிப்பது. (எ-டு.) அம்பட்டர்கள் பிராமணனுக்கும் வைசிய குலப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் ஆதலால் அனுலோமர்.

---

* விக்ரம், மலபார் சட்டங்களும் பழக்க வழக்கங்களும். (Wigram, Malabar Law and Custom)

அனுமல - Anumala (Dolichos Lablab)

கொள்ளுக்கு உரிய பெயர். தேவாங்கர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலப்பிரிவு கம்மவாரிடையே புறமணக் கட்டுப்பாடுடைய அனுமொல்லா என்ற இதுபோன்ற குலப் பிரிவுள்ளது.

அனுப்பர் - Annupan

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் அனுப்பர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- "அனுப்பர் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலே காணப்படும் கன்னடம் பேசும் பயிர்த்தொழில் செய்யும் சிறு அளவிலான சாதியார். அவர்களுடைய முன்னோர் மைசூர் அல்லது தென் கன்னடத்தைச் சேர்ந்தவராதல் வேண்டும். மைசூரைச் சேர்ந்தவர் எனக் கருதவே வாய்ப்பு அதிகம் உள்ளது. இவர்கள் கன்னடத்தின் சிதைந்த வடிவையே பேசுகின்றனர். இச்சாதியின் சிறப்பான உட்பிரிவு அல்லிகுலம் என்பதாம். இவர்களுள் சைவம், வைணவம் ஆகிய இரு சமயச் சார்புடையவர்களும் உளர். வைணவச் சார்புடையோரே பிராமணனை முன்னிறுத்திச் சடங்குகள் செய்கின்றனர். சைவர்கள் பிராமணரை நாடுவதில்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் உள்ளது. தவறான நடத்தைக்காக மணமுறிவு செய்யப்பட்ட ஒருத்தி தன் கணவன் உயிருடன் இருக்கும்போது மறுமணம் செய்து கொள்ள முடியாது."

மதுரை மாவட்ட விவரத் தொகுப்பில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது - "அனுப்பர்கள், கம்பம் பள்ளத்தாக்கில் எங்கும் காணப்படுகின்றனர். இங்கு இவர்கள் குடியேறியது பற்றி இவர்களிடையே ஒரு வரலாறு வழங்குகின்றது. காப்பிலியர், தொட்டியர் (பார்க்க: தனிக்கட்டுரைகள்) ஆகியோர் இடையே வழங்கும் கதையினையே இது பெரிதும் ஒத்துள்ளது. ஒருகாலத்தில் அனுப்பர்கள் கம்பத்தில் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தனர் அப்போது ஏற்பட்ட ஒரு சச்சரவில் காப்பிலியர்களின் தலைவனான இராமச்சாக் கவண்டன் கொல்லப் பட்டான். அவன் தன் உயிர்போகையில் அனுப்பர்கள் இனி

விளங்கமாட்டார்கள் எனச் சாபமிட்டதாகவும், அதிலிருந்து அவர்கள் வாழ்க்கை வளம் குறையத் தொடங்கினமையால் தற்போது கம்பம் நகரத்தில் ஒருவர் கூட இல்லையெனவும் கம்பத்தில் ஒரு கதை வழங்குகின்றது": கவண்டன் இவர்கள் பட்டப் பெயர். இவர்கள் சாதி, எல்லைப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆறு 'மேடு' களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றுள் மூன்று இம்மாவட்டத்தில் உள்ள ஊர்ப்பெயர்களையும், மூன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊர்ப் பெயர்களையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு மேட்டுக்கும் தலைவனாக ஒரு பெரியதனக்காரன் உள்ளான். அவர்களுள் மதுரையைச் சேர்ந்த மேட்டுக்குப் பெரியதனக் காரர்களான மூவரும் மதுரைக்கருகில் உள்ள சிறுபாலையில் வாழும் குருவுக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்த மூன்று மேடுகளும் மேலும் பதினெட்டுக் கிளைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கிளைக்கும் திருமண உறவு கொள்வதற் குரிய கிளைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. சாதி வழக்குகள் தொடர்பான பஞ்சாயத்துக்கள் ஒரு விரிப்பின்மீது கூடும். வேப்பிலையோடு கூடிய தண்ணீர்ப் பானை நடப்பின் தூய தன்மையின் உருவகமாகக் கூட்டத்தின் நடுவே வைக்கப்படும். (தொட்டியர் வழக்கத்தோடு ஒப்பிடுக.) பிற சாதியாரோடு தவறான நடத்தையில் ஈடுபடும் பெண்கள் சாதியிலிருந்து விலக்கப்படுவதோடு அவர்களுக்கும் சாதிக்கும் இருந்த தொடர்பு அறுந்துவிட்டதைக் குறிக்க ஆட்டினை உயிருடன் புதைப்ப தோடு வேறு சில சடங்குகளும் செய்யப்படுகின்றன. ஓர் ஆண் மகனுக்குத் தன் தந்தை வழி அத்தை மகள் மீதுள்ள உரிமை காப்பிலியர்கள், தொட்டியர்களிடையே இருப்பதைப் போலவே இவர்களிடையேயும் உறுதிப்பாடுடையதாகும். கணவன் என்ற முறையில் கடமைகளை ஆற்ற இயலாத சிறுவராக இருப்பவர் களை மணக்கும் பெண்கள், அச்சிறுவருடைய நெருங்கிய உறவினர்களோடு காப்பிலியர்கள்,தொட்டியர்களைப் போலவே உடல் உறவு கொண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பிறக்கும் குழந்தைகள் அவளை மணந்து கொண்ட சிறுவனுக்குப் பிறந்த குழந்தைகளாகவே ஏற்றுக் கொள்ளப் படுவர். இவர்களிடையே தாலி கட்டும் வழக்கம் இல்லை. ஏழு முறை வெவ்வேறு சமயங்களில் மணமக்கள் சிறுவிரல்கள்

பிணைத்து வைக்கப்படுவதே மணச் சடங்கில் திருமணத்தை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சியாகும். காப்பிலியர்களிடையே உள்ளதைப் போலவே இவர்களிடையேயும் பல குல தெய்வங்கள் உள்ளன. அவற்றில் பல கணவன் இறந்தபோது உடன் கட்டை ஏறியமகளிரின் நினைவானவை. (பார்க்க: காப்பிலியர்)

அபொட்டர் - Apoto

இது ஒப்பொட்டர் எனவும் வழங்கப்பெறும். இவர்கள் கெவடோ சாதியின் உட்பிரிவினர். பல்லக்குத் தூக்குவது இவர்கள் தொழிலாகும்.

அப்பா – Appa

ஈதிகர், கன்னடியன், இலிங்க பலிசர், தம்பலர் போன்ற பல சாதியினர் தரிக்கும் பட்டப் பெயர் இது.

அரேபியர் - Arab

கணக்கெடுப்பின் போது முகமதியர் ஒரு நிலப்பகுதிக்குரிய பெயரைத் தங்கள் சாதிப் பெயராகப் பதிந்துள்ளனர். 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில் அலைந்து திரிந்து வணிகம் புரிபவர்களாகப் பதியப்பட்டுள்ள இவர்களில் பலர் குதிரை வணிகர்; சிலர் துணி வணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆராத்தியர் - Arādhya

இவர்களைப் பற்றிய பின்வரும் விவரங்களைத் தந்து உதவியவர் திரு சி. ஹயவதன ராவ். இவர்கள் சென்னை மாநிலத்தில் வடகோடியில் உள்ள நான்கு மாவட்டங்களில் வாழும் பிராமணர் சாதியின் ஒரு பிரிவினர். கடப்பை, கர்நூல் மாவட்டங்களிலும் இவர்கள் சிறிய அளவில் காணப்படுகின்றனர். மைசூர் மாநிலத்திலும் ஒரு சிலர் வாழ்கின்றனர். இவர்கள் பிற பிராமணர்களிலிருந்து பல் வேறு வகையில் வேறுபட்டுள்ளனர். இலிங்காயத சமயத்தைத் தோற்றுவித்த பசவர் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவரே. முதலில் அவரைச் சுற்றியிருந்தவர்கள் குழுவாக அவருடைய சமயத்தைத் தழுவினர். திரு. சி. பி. பிரௌன் அவர்கள்

ஆராத்திய பிராமணன்

கருத்துப்படி* 'பசவர் சமயத்தைத் தழுவியவர்கள் அவருடைய நெருங்கிய நண்பர்களாதல் வேண்டும். அவர், அவர்களைத் தங்களுக்குரிய பட்டப் பெயரை விட்டுவிட்டு ஆராதியர் என்ற பெயரைப் புனைந்து கொள்ளும்படி வற்புறுத்தியிருக்க வேண்டும். ஆராதியர் எனின் மதிப்பிற்குரியர் எனப் பொருள்படும்.' ஆராதியர் பிரிவின் ஞானியர் நால்வரையும் இவர்கள் போற்றுகிறார்கள். அந்த ஞானியரைப் பற்றிய விவரங்கள் ஏதும் இன்று தெரியவில்லை. பிறப்பு, திருமணம், தீட்சை, சாவு சடங்கு போன்ற எல்லா வகையான சமூக சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளிலும் நான்கு குவளைகளிலுள்ள நீரில் அந்த நால்வரையும் பெயர் கூறி ஏற்றுவித்து நிகழ்ச்சிகளை நிறைவுற நடத்தித் தரும்படி வேண்டுவர். அவர்களுடைய பெயர்கள் இரேவணாராத்யா, மருலாராத்யா, எகொராமராத்யா, பண்டிதாராத்யா என்பனவாம். நான்கு யுகங்களிலும் அடுத்தடுத்துத் தெய்வத்தன்மை வாய்ந்த பசவர்களின் முன்னோடிகளாகத் தோன்றிய இந்த நால்வரும் பசவரைப் போன்றே பிராமணர்களாவர். பண்டிதாராத்ய சரித்திரம் என்ற புராணம் அந்நால்வரில் நாலாமவர் பெயரில் வழங்குகின்றது. அதிலுள்ள செய்யுட்கள் கன்னடம், தெலுங்கு ஆகிய இருமொழிப் பாடல்களாலியன்றவை. இரேவணாராத்யா, சிவபெருமான் அமைச்சர்களில் ஒருவரின் அவதாரம் என வடமொழிப் பாடலொன்று கூறுகின்றது.

இந்தப் பிரிவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் தீவிரமான சைவர்கள். இவர்கள் பிராமணர்களுக்குரிய பூணூலோடு இன்னொரு நூலில் இலிங்கத்தைக் கட்டிக் கழுத்தில் அணிவர். இவர்கள் தாங்கள் அணியும் இலிங்கத்தைப் பிராணலிங்கம் அல்லது உயிர்லிங்கம் என அழைக்கின்றனர். ஓர் ஆண் குழந்தையோ பெண் குழந்தையோ பிறந்தவுடன் அதற்கு இலிங்கம் அணிவிக்கப்படுகிறது. இவ்வாறு செய்யவில்லையாயின் அது உயிருடையதாகக் கருதப்படமாட்டாது. எதிர்பாராது ஒருவர் தனது இலிங்கத்தை இழக்க நேரிட்டால் அவர் தனது இலிங்கத்தைத்

---

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ் (Madras Journ. Lit. and Science XI 176, 1840.)

திரும்பப் பெறும்வரை உண்ணா நோன்பிருக்க வேண்டும். அவ்வாறில்லையாயின் அத்தகைய பேரிடியை அவரால் வேறு வகையில் தாங்க இயலாது. இது அவர்கள் நெறிமுறையில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடாகும். தனது இலிங்கத்தை இழந்தவர் கழுத்தளவு நீரில் நின்றபடி பல நாள்கள் தொடர்ந்து மந்திரங்கள் செபித்தபடி இருப்பார். அவர் உண்மையிலேயே சமய ஒழுக்கநெறி தவறாதவராயின், இறுதியில் அவருடைய இலிங்கம் அனைவரும் வியக்கும் வண்ணம் அவரை வந்தடையும். அதனை மீட்பதில் அவர் வெற்றி பெறவில்லையானால் பட்டினி கிடந்து சாவதைத் தவிர அவருக்கு வேறு வழியேதுமில்லை. இலிங்கமே ஒருவனுடைய உயிர். அதனை இழப்பவன் உயிரை இழந்தவன் என்பதே இந்நெறி முறையின் அடிப்படைக் கோட்பாடாகும். வியக்கத்தக்க வகையில் இலிங்கங்களைத் திரும்பப்பெற்ற, நம்ப முடியாத பல கதைகள் வழங்குகின்றன. ஒருசமயம் தண்ணீரில் பேரிரைச்சல் செய்தபடி உரியவரிடம் திரும்பி வந்த இலிங்கம் பற்றிய கதையும் உண்டு. இன்னொரு சமயம் பூட்டி வைக்கப்பட்டிருந்த பெட்டியினுள் அது தோன்றியதாகக் கதை வழங்குகின்றது. இது தொடர்பாகப் படைப்பகுதி முதல்வரான வில்க்ஸ் விவரித்துள்ள கதை வருமாறு:- *'தற்போது மைசூரில் அமைச்சராக இருக்கும் பூர்ணய்யா தன்னுடைய இலிங்காயத் நண்பரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியைக் கூறினார். அவர் வருந்தத்தக்க வகையில் தன்னுடைய இலிங்கத்தை இழந்தபின் இறுதி விடை பெறப் பூர்ணய்யாவிடம் வந்திருக்கிறார். பிற நாட்டவரைப் போலவே நல்ல தெளிவான சிந்தனை கைவரப் பெற்ற இந்தியர்களும், தங்கள் சாதியைத் தவிர மற்ற சாதியாரின் மடமைச் செயல்களை எள்ளி நகையாடும் பழக்கமுடையவர்களே. அவ்வகையில் பூர்ணய்யா அந்த நண்பருக்கு ஒரு தந்திரத்தைச் சொல்லித் தந்தார். இலிங்கத்தை இழந்தவனைப் பலியாக்கும் சடங்கின் போது சமயத் துறையின் முன்னவர்கள் அனைவரும் ஒரு புனித ஆற்றங்கரையில் கூடுவர். பின்னர்க் கூடியுள்ள எல்லோருடைய இலிங்கத்தையும் ஒரு கூடையில் ஆற்று நீரில்

* தென்னிந்திய வரலாற்றுச் சித்திரங்கள் (Historical Sketches of the South India.)

தூய்மைப்படுத்தத் திரட்டுவர். அச்சமயத்தில் இலிங்கத்தை இழந்த துயரத்திற்கு ஆளானவர் தன் நண்பர் பூர்ணய்யா சொல்லித்தந்தபடி எதிர்பாராத வகையில் மற்றவர்கள் இலிங் கங்கள் இருந்த கூடையைப் பிடுங்கிக் காவிரி ஆற்று வெள்ளத்தில் கவிழ்த்து விட்டுவிட்டு, 'நண்பர்களே! நாம் எல்லோரும் இப் போது ஒரேமாதிரி இலிங்கத்தை இழந்தவர்களாக உள்ளோம். எனவே அனைவரும் சாகத் தயாராவோம்' எனக் கூறினார். அப் பொழுது அவர்களிடையே எழுந்த விவாதம எதிர்பார்த்தபடியே முடிந்தது. அங்கிருந்த அனைவரும் காதும் காதும் வைத்தாற் போல் தங்கள் இலிங்கம் தொலைந்து போனதை வெளியே கூறாமல் வேறு இலிங்கம் ஏற்பாடு செய்து கொள்வதெனத் தங் களுக்குள்ளாக இரகசியமாகச் சத்தியம் செய்து கொண்டனர்'.

ஆராத்தியர் என்ற இவர்கள் பெயரே, இவர்கள் பழக்க வழக்கங்களில் பிற பிராமணர்களிலும் வேறுபட்டவர்கள் என் பதனைச் சுட்டுவதாக உள்ளது. உணவு கொள்ளுமுன் அதனை முதலில் தாங்கள் அணிந்திருக்கும் இலிங்கத்திற்குப் படைத்த பின்பே இவர்கள் உண்பர். இந்தப் படையலைச் செய்யாமல்இவர் கள் உண்ணமாட்டாாகள். ஆகையால் உண்ணத் தொடங்கும் போதே உணவு முழுவதும் முதலில் படைக்கப்பட்டுவிடும். அதை முழுதுமாக இலிங்கத்திற்குப் படைத்துப் பின்னர் உண்ணத் தொடங்குவர். மற்றப் பிராமணர்களைப் போலக் கோயில்களில் வழங்கும் உணவினை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அது முன்பே கடவுளுக்குப் படைக்கப்பட்டு விட்டதால் அதனை இவர் கள் தங்கள் இலிங்கத்திற்குப் படைக்க இயலாது என்பதே இதற் கான காரணம். பிற இலிங்காயதர்களைப் போலன்றி இவர்கள் வேதங்களை ஏற்றுக் கொள்வதோடு, உருவகமாக வேதத்திற்கு விளக்கமும் தருகின்றனர். வடமொழி பயில்வதில் ஆர்வமுடைய இவர்களுள் சிலர் புகழ் படைத்த தெலுங்குக் கவிஞர்களாகவும் விளங்கியுள்ளனர். கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பால பூரி சோமநாதர் பசவ புராணமும், பண்டிதாராத்ய சரித்திரமும் எழுதியுள்ளார். பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த சகோதரர்களான பிடுபர்த்தி சோமநாதரும் பசவகவியும் பல சமய நூல்களைச் செய்துள்ளனர்.

ஆராத்தியர்கள் தங்களுக்குள்ளாகவே திருமண உறவு மேற்கொள்கின்றனர். சிலபோது, வட. சர்க்கார் பகுதியைச் சார்ந்த நியோகி உட்பிரிவினரிடையே இருந்து பெண் எடுக்கின்றனர். ஆராத்தியர்களாக மாறுமுன் இவர்கள் நியோகிகளாக இருந்தவர்கள் என்பதனை இது காட்டுவதாகும். இவர்கள் ஆறுவேலு நியோகிகளோடு திருமண உறவு கொள்வதில்லை. மற்றப் பிராமணர்களைப் போலன்றி இவர்கள் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் புதைக்கின்றனர். சாவுத் தீட்டினைப் பத்து நாள்கள் கடைப்பிடிக்கும் இவர்கள் இறந்து போன முன்னோர்களுக்கான எகோதிசிட்டா சடங்குகளையும் செய்கின்றனர். ஆண்டுதோறும் சிரார்த்தத்திற்குப் பதிலாக ஆராதனை நடத்துவது இவர்கள் வழக்கம். ஆராதனையின்போது பூணூலை வலப் பக்கமாக இருந்து இடப் பக்கமாக மாற்றி அணியும் அபசவ்விய வழக்கும், அப்போது எள்ளும் தண்ணீரும், தருப்பையும், பிண்டமும் பலியாகத் தரும் வழக்கங்களும், ஓமம் வளர்க்கும் வழக்கமும் இவர்களிடம் இல்லை. கைம்பெண்கள் தலையை மழித்துக் கொள்ளும் வழக்கம் இவர்களிடையேயில்லை.

ஆராதியர் என்ற பட்டத்தையே இவர்கள் எப்போதும் தரிக்கின்றனர்.

அரகலர் - Arakala

கர்நூல் மாவட்டத்தில் சிறப்பாகக் காணப் படுவதாகப் பதியப்பட்டுள்ள பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுபிரிவினர். எருதுகள் பூட்டப்பட்ட கலப்பையான ஏரினைக் குறிக்கும் 'அரக' என்ற சொல்லிலிருந்தோ, பயிர்த் தொழிலாளர் எனப் பொருள்படும் 'அரகடவு' என்ற சொல்லிலிருந்தோ இந்தப் பெயர் வந்திருத்தல் கூடும்.

ஆரம்பூகட்டி - Arambukatti

இந்தப் பெயர் அரும்புகளைக் கட்டுவதையோ, மாலை புனைவதையோ தொழிலாகக் கொண்ட வேளாளரின் உட்பிரிவினருக்குரியது.

அரநாடன் - Arnādan

(பார்க்க: எரநாடன்) - **Eranādan**

அரணை - Arane

காப்பிலியரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஓர் உட்பிரிவு.

அரச்சினர் - Arashina

மஞ்சள் என்ற பொருளினது. அகசர், குர்ணி, குருபர், ஒட்டர் ஆகிய சாதிகளில் புறமணக்கட்டுபாடுடைய குலப் பெயர். இதற்குச் சமமாகத் தேவாங்கர்களின் புறமணக்கட்டுப் பாடுடைய பசுபுல குலத்தைக் கொள்ளலாம். தென்னிந்தியாவில் மஞ்சளைப் பொதுப்படக் குங்குமம் என்றே அழைக்கின்றனர். இந்துக்களின் சடங்குகளில் மஞ்சள் சிறப்பிடம் பெறுகிறது. பெண்களிடையே முகத்தில் மஞ்சளைத் தாராளமாகப் பூசிக் குளிக்கும் பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது. மஞ்சள் தங்கள் கணவன்மாருக்கு நீண்ட வாழ்நாளைத் தரும் என்ற நம்பிக்கையில் பெண்கள் தாராளமாக மஞ்சள் நீரில் குளித்து உடம்பு மஞ்சள் மினுக்கக் காட்சி தருவர். குடும்பப் பெண் களுக்கு உரிய மங்கலச் சின்னமான இது, கைம்பெண்களுக்கு விலக்கப்பட்டுள்ளது*. திருமணங்களில் கண்படுவதைத் தவிர்க்க நீரில் மஞ்சளொடு மற்றவற்றையும் கலந்து மணமக்களுக்கு ஆரத்தி எடுப்பர்; அல்லது அவர்களை மஞ்சள் கலந்த நீரில் குளிக்கச் செய்வர். மணமக்கள் ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரை ஊற்றிக் கொள்வதும் உண்டு. தாலி கோக்கப்படும் பருத்தி நூலினை மஞ்சள் நீரில் நனைத்தே தாலி கோப்பர். மஞ்சள் நூலால் மணமக்கள் கரங்களை இணைத்து வைத்தல் மணமக்களை இணைத்து வைப்பதான மணச்சடங்கின் முக்கிய நிகழ்ச்சியாகும்.

அர்ஸ் அல்லது ராசபிண்டே - Arasu or Rājapinde

இவர்களைப் பற்றித் திரு லூயிஸ் ரைஸ் (1877) எழுதுவ தாவது‡:- "இச்சாதியார் மைசூர் அரசர்களின் உறவினர் களோ, அரசரோடு தொடர்புடையவர்களோ ஆவர்.

---

* எலிஸ் - குறள். (Ellis, Kural.)

‡ மைசூர், குடகு விவரக் குறிப்புகள் 1876, 1878. (Mysore and Coorg Gazetteer, 1876, 1878.)

முந்தைய மகாராசாவின் வாழ்நாளின்போது இவர்கள் இரு எதிரணியனராகப் பிரிந்திருந்தனர். அரசரின் பெண் வழி உறவினரின் தலைவராகிய தளவாயின் கீழிருந்த பதின்மூன்று குடும்பத்தினர் அரசருடைய பரத்தை மகனுக்கு மரியாதை செலுத்த மறுத்து வந்தனர். எஞ்சிய பதினெட்டுக் குடும்பத் தினரும் அரசரின் விருப்பப்படி அவருடைய பரத்தை மகனின் வழிவந்த குமாரபட்ட என்ற பிரிவினைச் சமமாக நடத்தினர். இவ்விரு பிரிவினருக்குமிடையே மண உறவுகள் நிகழும். இவர்கள் ஒன்றாக இருந்தும் உண்பர். இவர்களிடையேயிருந்த பூசல் இடையிடையே தலைகாட்டினாலும் அது நிலைத்த ஒன்றாக என்றும் இருந்ததில்லை. சிறப்பாக அரசுப் பணிகளையே மேற் கொள்ளும் இவர்கள் உழவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அரசுப் பணி பெரிதும் மைசூரிலுள்ள அரண்மனை யைச் சார்ந்ததாகவே இருக்கும். இராச பிண்டேக்களுள் சைவம், வைணவம் ஆகிய இரு நெறிகளை மேற்கொண்டவர்களும் உளர். பிராமணர்களும், இலிங்காயத உடையார்களும் இவர் களுடைய சமயக் குருக்களாக உள்ளனர்.

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் அர்ஸ் (இராசா அல்லது அரசர்) தமிழ்ப் பறையர்கள், பள்ளிகளின் ஓர் உட்பிரி வாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அர்ஸ் என்பது அரசு என்பதின் சுருக்கமாக மைசூர் அரசகுடும்பத்தினரின் பெயரில் வழங்குகிறது. எ-டு. காந்தராச அர்ஸ்.

ஆரத்தி - Ārathi

கண்படுவதைத் தடுக்கக் காட்டப்படுவது. குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

அரதி - Arati

செஞ்சுகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

அரவா - Arava

இது தமிழைக் குறிக்கும் பெயர். கோல்லர், வெலமர் போன்ற தெலுங்கு வகுப்பாரின் உட்பிரிவுகளாகப் பதியப்

பட்டுள்ளது. எனினும் இப்பெயர் தெலுங்குப் பகுதியில் குடியேறியுள்ள தமிழ் இடையர்களையும், வேளாளர்களையும் அரவ கோல்லர், அரவ வெலமர் என அழைக்கவே பயன்படுத்தப் படுகிறது. இச்சொல் தெலுங்குப் பகுதியில் சில இடங்களில் ஐரோப்பியரின் பணியாளர்களாக உள்ள தமிழ்ப் பறையர் களையும் குதிரைக்காரர்களையும் அரவ மாலரு என அழைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. வட் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இருளர் இதேபோல அரவ ஏனாதியர் என வழங்கப்படுகின்றனர். மைசூரில் குடியேறியுள்ள தமிழ்ப் பள்ளிகளான திக்கலர்களின் ஒரு பகுதியினர் அரவர் என வழங்கப்படுகின்றனர். அரை, வாய் என்ற இரு சொற்களும் சேர்ந்து குறைபாடுடைய தமிழ் எழுத்துக் களையும், மெய்யெழுத்துக்களில் முடியும் தமிழ்ச் சொற்களையும் குறிப்பதாகும் என்ற யூகமான கருத்தும் அரவர் என்ற இச் சொல் பற்றி வழங்கப்படுகிறது.

அரவன் - Aravan

திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

அரயன் - Arayan

(பார்க்க: வாளன் - **See: Valan**)

அர்ச்சகர் - Archaka

ஊர்த் தேவதைகளின் கோயில் பூசாரிகளான உவச்சர் களின் பட்டப் பெயர். இவர்கள் உமை அர்ச்சகர் எனவும் படுவர்.

ஆரீ - Ārē

மராத்தியருக்குரிய மற்றுமொரு பெயர். குஞ்சிகர், குடுபிகள் ஆகியோரின் உட்பிரிவின் பெயராகவும் இது உள்ளது. தென் கன்னடத்தில் 'ஆரிய சத்திரி' ஆரீ என்பதற்குச் சமமாக வழங்கு கின்றது. தெலுங்குப் பகுதியில் ஆரீ காபு மராத்தி பேசும் பயிர்த் தொழிலாளரைக் குறிக்கும். ஆரியக் கூத்தாடி என்பது மராத்தித் தொம்பர்களுக்குத் தமிழில் வழங்கும் பெயராகும். ஆரீகள்

பற்றித் திரு எச். ஜி. ஸ்டுவர்ட்* பின்வருமாறு எழுதுகிறார்:- "மொத்தமுள்ள 6808 ஆரீகளில், 4373 பேர் தென் கன்னடம், பெல்லாரி, அனந்தபூர் பகுதிகளில் காணப்படுகிறார்கள். இவர்களே உண்மையில் ஆரீகள். மற்றவர்களைப் பற்றி உறுதியாக எதுவும் நான் கூற இயலாது. ஆரியர் என்ற சொல்லும், ஆரீ என்பதற்குப் பதிலாக மராத்தியைக் குறிக்கப் பயன்படுகிறது. சிலபோது இது மேலும் பரந்துபட்ட பொருளுடையதாகின்றது. உண்மையான ஆரீகள் மராட்டியப் பகுதி சார்ந்த உழவர்களே. இவர்கள் பூணூல் அணிவர். பிராமணரை வைத்துத் தங்கள் சடங்குகளைச் செய்வர். இவர்கள் சிருங்கேரி மடத்தைச் சார்ந்திருப்பவர்கள். இச்சாதியில் பெண்களின் திருமணம் பூப்படையும் முன்போ அதன் பின்போ நடத்தப்படும். கைம் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. நடத்தை தவறிய மனைவியை அவள் கணவன் மணமுறிவு செய்து கொள்ளலாம். ஆனால் அவ்வாறு ஒழுகும் தன் கணவனை அவன் மனைவி மணமுறிவு செய்து கொள்ள முடியாது. ஒருவனுடைய மனைவியின் குற்ற நடத்தை மெய்ப்பிக்கப்பட்டுக் குருவின் உடன்பாடு பெறப்படுமாயின், அவள் கணவன் முச்சந்தியில் ஒருபூசணிக்காயை வெட்டுவதன் மூலம் அவளை மணமுறிவு செய்வான். ஊன் உண்ண அனுமதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு மது அருந்தத்தடை விதிக்கப்பட்டுள்ளது.'' இவர்களைப் பற்றித் திரு, ஸ்டுவர்ட்† மேலும் எழுதியிருப்பதாவது:- 'தென் கன்னடத்தைச் சேர்ந்த ஆரீகள் மராத்தி அல்லது கொங்கணியையே பொதுவாகப் பேசுவர்.பிறவிடங்களில் அவர்கள் கன்னடம் பேசலாம். அவர்களுடைய புறமணக்கட்டுப்பாடு உடையகுலங்கள் மானத்தானங்கள் எனப்படுகின்றன. இவர்கள் 'தாரே' மரபுப்படியான திருமணச் சடங்குகளைச் செய்கின்றனர் (பார்க்க:பண்டர்). மணப்பந்தலில் வைக்கப்படும் பானையில் வெறும் தண்ணீருக்குப் பதிலாகத் தண்ணீர், பால், நெய், தேன், தயிர் ஆகியவற்றை வைப்பர்.

---

* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை. (Madras Census Report.)

† தென் கன்னட மாவட்டக் கையேடு. (Manual of South Kanada.)

தென் கன்னடத்தைச் சேர்ந்த மராத்தி பேசும் ஆரேயவாரு அல்லது ஆர்யவாரு மக்கள் சொத்துரிமை பெறும் தாய உரிமை முறையைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் சடங்குகளைச் சிவாலி பிராமணரை வைத்துச் செய்வர்.[3] மணச் சடங்குகளில் மண மகன் தான் சத்திரிய குலத்தைச் சேர்ந்தவன் என்பதை மெய்ப்பிப் பதற்காகப் போரிடப் போர்க்களம் செல்வதாகப் பாவனை புரியும் நிகழ்ச்சி தனிச்சுவையுடையதாகும். 'பவர்' பிரிவு களில் மணமகன் மணமகள் கழுத்தில் பாசியினைக் கட்டுவான். 'எடர்' பிரிவாயின் வட்டத் தகட்டினைக் கட்டுவான். ஆரியவாரு கோழியும் மீனும் உண்பர். கோழிகள் சில மந்திரங்கள் சொன்ன பின் கொல்லப்படுகின்றன. பூசாரி வருவானாயின் மந்திரஞ் சொல்லிக் கோழிகளைக் கொல்வது அவன் கடமையாகும். 'அம்மனார்' எனப்படும் துர்க்கையே இவர்கள் குலதெய்வம். அவளுடைய வழிபாட்டிற்கு ஆரியவாரு பிற மராட்டியர்களைப் போலக் கொண்டல இரவலரை அமர்த்துகின்றனர்.

அரெ - Are (Bauhinia racemosa)

குர்னிகளின் ஒரு கோத்திரம். அர்ச்சி என்பது பொருள்.

ஆரி - Ari

ஆரிகள் அல்லது தூட்டன்கள் பற்றி 1901 திருவாங்கூர் கணக்கெடுப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:- 'இவர்கள் தொவல வட்டத்தைச் சேர்ந்த குறிப்பிடத் தக்க சிறு பிரி வினர். தர்சனம்கோப்பத்தில் உள்ள சிவன் கோயில் அம்பல வாசிகளாகப் பரம்பரையாகப் பணிபுரியும் இவர்கள் மரக்கறி உணவு மட்டுமே உண்பர். இவர்கள் பூணூல் அணிவதோடு பிராமணர் செய்யும் அனைத்துச் சடங்குகளையும் பிராமணரை வைத்துச் செய்கின்றனர். தங்களை ஆரியப்பட்டர்களுக்குச் சம மானவர்களாக இவர்கள் கருதுகின்றனர். எனினும் இவர் களைப் பிராமணர்கள் தங்களோடு உணவு உண்ணவோ, கோவில் கருவறையின் முன்னுள்ள கூடத்தில் புகவோ அனு மதிப்பதில்லை. இவர்கள் ஆடை அணிகள் தமிழ்நாட்டுப் பிரா மணர்கள் ஆடை அணிகளை ஒத்தவை. இவர்கள் தமிழே பேசு கின்றனர். சாவுத் தொடர்பான தீட்டுக் காலத்தைப் பதினைந்து நாள்கள் நீட்டிக்கின்றனர்.'

ஆரி - Āri

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம் (கருங்காலி மரம் எனப் பொருள்படுவது).

அரிகலர் - Arigala

முத்ராசர்களின் புறமணக்கட்டுப்பாடுள்ள ஒரு குலம். ஊர் வலமாகக் கொண்டு செல்லப்படும் ஒரு கலத்தைக் குறிக்கும் சொல். அரிகல, அரிக என்பன இரண்டும் சடாப்பு, பண்டா ரெட்டி சாதியாரின் குலப்பிரிவுகளாம். இவை வரகினைக் குறிக்கும் பெயர்கள். பண்டா ரெட்டிகள் வரகினை உணவாகப் பயன்படுத்துவதில்லை.

அறிகிறவன் - Arikuravan

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

அரிசி - Arisi

சவரர்களின் ஓர் உட்பிரிவு.

ஆரியர் – Āriyar

ஆரியர் அல்லது ஆரிய நாட்டுச் செட்டி என்பது பட்டணவன் களின் சாதிப் பட்டப் பெயராகத் தரப்பட்டுள்ளது.

ஆரியூர் - Ariyur

ஆரியூர் அல்லது அருவியூர் என்பது நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஓர் உட்பிரிவின் பெயர்.

அர்ளி – Arli

ஸ்தானிகர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஓர் உட்பிரிவு. அரசமரம் எனப் பொருள்படுவது.

ஆருத்ரா - Arudra (lady–bird)

காலிங்கிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். பெடை எனும் பொருளது.

அறுபது கட்சியர் - Arupathu Katchi

வள்ளுவர் சாதியின் ஓர் உட்பிரிவு. அறுபது வீட்டுக்காரர் பிரிவு.

அறுபத்திநாலு தலைக்கட்டு – Arupattanālu Taleikatt

தங்கள் தலையை மூடிக் கட்டியுள்ள அறுபத்தி நால்வர் என்பது பொருள். செட்டிகளின் உட்பிரிவு.

அறுத்துக்கட்டாதார் - Aruththukattātha

இரண்டாம் முறை தாலிகட்டிக் கொள்ளாதவர் எனப் பொருள்படுவது. கைம்பெண்களுக்கு மறுமண உரிமை தராத பறையர்களின் ஒரு பிரிவு.

அருவர் - Aruva

கஞ்சம் மாவட்டத்தின் பெர்கம்பூர் வட்டத்தைச் சேர்ந்த, கடற்கரை ஓரமாகப் பயிர்த்தொழில் செய்யும் கவனத்தைக் கவரும் ஒரு சாதியார் அருவர். ஓரியப் பெண்களுக்கும் முகமதியர்களான பட்டாணியர்களுக்கும் பிறந்தவர்கள் தாங்கள் என இவர்கள் தங்களைப் பற்றிக் கூறிக் கொள்கின்றனர். நாயகோ, பாட்ரோ, பொதோனோ, பொண்ட, மொண்டொலொ, மொல்லன போன்ற பட்டங்களை இவர்கள் பிற ஓரியர்களைப் போலச் சூடிக் கொள்கின்றனர். இவற்றுள் சில புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகள் அல்லது வம்சங்கள். இவர்கள் சாதித் தலைவன் நாயகோ எனப்படுவான். அவனுக்கு உதவியாகப் புலொபையா என்பவன் இருப்பான். இவ்விரண்டு பதவிகளும் பரம்பரையாக மேற்கொள்ள உரியவை. அருவர் தாங்கள் இரண்டு வேதங்களுக்குரியவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். ஆண்கள் அதர்வண வேதத்திற்கும், பெண்கள் யசூர் வேதத்திற்கும் உரியவர்கள். முகமதியர்கள் அதர்வண வேதவாசிகள் என இவர்கள் கருதுகிறார்கள்.

இச்சாதியைச் சேர்ந்த மௌலானாவே இவர்கள் சடங்குகளை முன்னின்று நடத்தி வைக்கிறார். ஓரியச் சாதியாரிடையே

அத்தை மகளை மணந்து கொள்ளும் வழக்கமில்லை, அருவர்கள் இதனைப் பலவிடங்களில் அனுமதிக்கின்றனர். சில வேறுபாடு களைத் தவிர மணச்சடங்குகள் பெரிதும் ஒரியர் மணமுறை களையே ஒத்தமைகின்றன. மணநாளுக்கு முந்திய நாளன்று மூங்கிலாலான பால் கம்பம் நட்டப்படுகின்றது. மணமக்களின் விரல்கள் இணைக்கப்படும்போதும், மணச்சடங்குகளின் போதும் மௌலானா சில மந்திரங்களை ஒப்பிக்கின்றார். அவற்றிடையே பிஸ்மில்லாகி, அல்லா போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன.

இறந்தவர்களை இவர்கள் புதைக்கின்றனர். முன்பு அரபு, ஒரிய மொழிகளில் வரலாறு பொறிக்கப்பட்ட துண்டுக் கற்கள் புதை குழிகளின் மேல் அமைக்கப்பட்டு வந்தன. இப்பொழுது அதற்குப் பதிலாக இரு குச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. இறந்தவர்களின் பிணம் ஒருவகைக் கோணிப் பையில் வைத்துத் தைக்கப்படுகிறது. அதனைப் புதைகுழியில் இறக்கும்போது மௌலானா சில மந்திரங்களை ஒப்புவிக்கின்றார். கூடியிருப்ப வர்கள் புதைகுழியை மூடுமுன் மண்ணினை அதன்மீது தூவு கின்றனர். அவர்கள் கலைந்து சென்றபின் மௌலானா ஒற் றைக் காலில் நின்றபடி மேலும் சில மந்திரங்களைச் சொல் கிறார். அடுத்த நாள் சோறும் வேம்பிலைகளும் கலந்த கசப்பு உணவு தயாரிக்கப்பட்டுப் பங்காளிகளுக்கு வழங்கப்படுகிறது. மூன்றாம் நாள் சுடுகாட்டுக்குச் சென்று புதைகுழியின் மீது நீருற்றி அதன் மீது துணியை விரிப்பர். அதன் மீது இறந்தவர் களின் உறவினர்கள் மண்ணும் சோறும் தூவுவர். பதினைந்தாம் நாள் இறந்தவர்க்கு உணவு படைக்கும் சடங்கினை மௌலானா நடத்தி வைக்கிறார். அவர்கள் முகமதியர் சடங்குகளில் பங்கு கொள்வதோ மசூதிக்குச் செல்வதோ இல்லை. இவர்களுள் பெரும்பாலோர் பரமார்த்திகள். எல்லோரும் இந்துக் கடவுளர் களையும் தாகுராணிகள் எனப்படும் ஊர்த் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவர்கள் தங்கள் இல்லங்களில் கூருளை வடி வில் மண்ணால் உருவம் அமைத்து அதன் உச்சியில் பாக்குப் பதித்து அவற்றைக் கடவுள் உருவங்களாக வைத்துள்ளனர். தற்பொழுது அருவர் குடும்பத்தினர் பலர் மௌலானாக்களோடு கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர்களைத் தங்கள் குடும்பச் சடங்குகளுக்கு அமர்த்தாமல் ஒரிய வழிப்பட்ட சடங்கு

களை மேற்கொள்ளும் வழக்கத்தையும் பின்பற்றுகின்றனர். பிற சமூகத்தினரோடு ஒன்றாக இருந்து உண்பதோ, மண உறவு கொள்வதோ இன்றித் தனித்த ஒரு பிரிவினராகவே இவர்கள் இருக்கின்றனர்.

ஆரியர் - Ārya

உயர்ந்தோர் எனப் பொருள்படுவது. பட்டர் பிராமணர்களின் ஒரு பிரிவினருக்கும், சாமகாரர்களின் ஒரு பிரிவினருக்கும், புறமணக்கட்டுப்பாடு உடைய குருபர் குலம் ஒன்றுக்கும் இப் பெயர் வழங்கப்படுகிறது. பட்டணவர் சிலர் தங்களை ஆரிய நாட்டுச் செட்டிகள், ஆரியர் அல்லது ஐயாயிரத் தலைவர் என அழைத்துக் கொள்கின்றனர்.

ஆசாடியர் - Āsādi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசாடிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளதாவது:- 'பெல்லாரி மாவட்டத்தில் மாலர் என்றோ ஹொலையர்என்றோ தங்களிடையேவேறுபாடுபாராட்டாதசாதியாரின் உட்பிரிவினர் இவர்கள். பரத்தையராகவும் நாட்டிய மகளிராகவும் இவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். மாதிகர்களுள் ஆசாடிகள் எனப்படும் ஆண்கள் ஒரு சடங்குக்குப் பிறகு மாதங்கிப் பரத்தையருடன் மேளங்கொட்டிச் செல்லும் தொழிலை மேற்கொள்கின்றனர். இவர்கள் எல்லம்மாவின் புகழினையும் கதைகளையும் பாடுவர்' (பார்க்க: மாதிகர்).

ஆசான் - Āsan (teacher)

ஆசிரியர் எனப் பொருள் தரும் இது வாரியர்களின் பட்டப் பெயர். இவர்கள் உயர்குடிக் குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்குக் கற்பிக்கும் தொழிலைப் பரம்பரையாக மேற்கொண்டு வருபவர்கள். பிசாரட்டியர், கணிசர் ஆகியோரும் இப்பட்டம் தரிப்பதுண்டு.

ஆசாரி - Āsāri

இவர்கள் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் பின்வருமாறு எழுதுகிறார்:- 'சென்னை மாநிலத்தின் பெரும்பாலான பகுதி

களில் ஆசாரி (அல்லது ஆச்சாரி) என்பது கம்மாளர் என்ற பெயருக்குப் பதிலாக வழங்குகின்றது. இது ஐந்து வகைக் கொல்லு வினைஞர்களுள் எப்பிரிவினரை வேண்டுமாயினும் குறிப்பதற்குரியது. மலபாரில் இது தச்சுத் தொழில் புரியும் வினைஞர்களுக்கு மட்டுமே உரியது. மலபாரைச் சேர்ந்த ஆசாரி, கம்மாளர்களுள் பிராமணராகக் கருதப்படுகிறான். கம்மாளர்கள் நாயர்களைப் பன்னிரண்டடி எல்லைக்குமேல் நெருங்கினால் தீட்டுப் படுத்துபவர்களாகின்றனர். பிராமணர் களை முப்பத்தாறடி எல்லைக்கு மேல் நெருங்கினால் தீட்டுப்படுத்துகின்றனர். ஆனால் ஓர் ஆசாரி தன் கையில் பிடித்த அடிக்கோலுடன் உயர் சாதியாரைப் பக்கமாக நெருங்க வும், அவர்கள் இல்லங்களினுள் அவர்களுக்குத் தீட்டு உண் டாக்காமல் நுழையவும் உரிமை பெற்றுள்ளான். இந்த விதி விலக்கு தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்டதாகலாம்.' 1901 கணக்கெடுப்பில் தமிழ் நாட்டுச் சாயக்காரர்கள் சிலர் தங்களை ஆசாரிகள் எனப் பதிந்துள்ளனர்.

ஓர் அரசு அலுவலகத்தில் சில நாள்களுக்கு முன்பு தலை மைக் கணக்கரான 'ரங்காச்சாரி' என்ற ஒரு பிராமணர், கம்மா ளர் பிரிவைச் சேர்ந்த வேலாயுத ஆச்சாரி என்பவருடைய பெய ரின் எழுத்துக்களை வேலாயுத ஆசாரி என்று அலுவலக ஏடு களில் மாற்றியுள்ளார். இதற்கு அவர் கூறிய காரணம் முன் னைய வேலாயுத ஆச்சாரி என்ற பெயர், பிராமணர் பெயர் போலத் தோன்றுகின்றது என்பதாம்.

அஷ்டாச்சரத்தார் - Ashtākshari

எட்டு எழுத்தர் எனப் பொருள்படும் இது சாதானிகளின் உட்பிரிவு ஒன்றின் பெயர். இவர்கள் ஓம்-ந-மோ-நா-ரா-ய ணா-ய- என்ற மந்திரத்தின் சிறப்பால் வரும் பேரின்பத்தில் நம்பிக்கை வைப்பவர்கள். அஷ்டபுக்குலு அல்லது எட்டினைப் பேரார்வத்தோடு புசிப்பவர் என்ற பெயரும் இவர்களில் ஒரு உட்பிரிவினருக்கு உரியதாக உள்ளது.

அஷ்டலோகி - Astalohi

எட்டு உலோகங்களில் பணிபுரிபவர்கள் என்ற பொருளில்

இது ஒரியக் கைவினைஞர்களுக்குரிய பெயராக வழங்குகின்றது. ஒரு கூற்றுப்படி அந்த எட்டு உலோகங்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம், செம்பு, ஈயம், தகரம், இரும்பு, பித்தளை என்பன வாம். அவை பொன், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம், காந்தக் கல். இரும்பு, உருக்கு என்பனவாம் எனக் கூறுவோரும் உளர்.

அஸ்திக்குரிச்சி - Ashtikurisri

அஸ்தி-எலும்பு; அட்டி குருசி எனவும் இவர்கள் வழங்கப் படுவர். நாயர், மாரான் சாதியாரிடையே உள்ள தொழில் தொடர்பான உட்பிரிவு. இவர்கள், நம்பூத்ரி பிராமணர்கள், நாயர்கள் ஆகியோர் ஈமச்சடங்கில் பிணத்தை எரித்த பின் சுடு காட்டில் எலும்புகளைப் பொறுக்க உதவும் தொழில் புரிவோர்.

அசிலி - Asili

கடப்பை மாவட்டத்தில் தெலுங்கர்களான கள் இறக்கு வோருக்கான பெயர். (பார்க்க: ஈதிகர்)

ஆசுபாணி - Āsupāni

கோயில்களில் ஆசு, பாணி எனப்படும் வாத்தியங்கள் இசைக்கும் மாரான்களுக்குரிய தொழில் முறை காரணமாக அமைந்த பெயர்.

அசுவம் - Asvo (horse)

காசிகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின் பெயர். குதிரை எனப் பொருள்படும்.

அடகரர் அல்லது ஹடகரர் - Atagara or Hatagara

தேவாங்கர்களின் ஓர் உட்பிரிவு.

அத்தி - Āththi (*Ficus glomerata*)

ஸ்தானிகர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப் பிரிவு.

அடிக்குண்ணன் – Atikunnan

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

ஆத்ரேயர் - Ātreya

பட்ராசுகளின் ஒரு பிராமணக் கோத்திரம். ஆத்ரேயர் ஆத்ரி முனிவரின் வழி வந்தவர்கள். சிலர் இவரை மனுவின் பத்துப் பிரஜாபதிகளில் ஒருவர் எனக் கருதுகின்றனர்.

ஆத்தா - Ātta (mother)

பள்ளர்களின் ஓர் உட்பிரிவு.

ஆத்தங்கரை - Āttangarai (river-bank)

கொங்கு வேளாளரின் ஓர் உட்பிரிவு.

அட்டிக் கங்கணம் - Attikankana (cotton marriage thread)

குருபர்களின் ஓர் உட்பிரிவு. இவர்கள் மணத்தின்போது மணிக்கட்டில் ஒரு நூல் கயிற்றைக் கட்டிக்கொள்ளும் பழக்கம் உடையவர்கள்.

ஆடும்பாத்திரம் - Atumpātram

நாட்டியம் செய்யும் பாத்திரம் எனப் பொருள்படும் இது, திருவாங்கூரில் தேவதாசிகளைக் குறிக்க வழங்குகின்றது.

ஆன்வல்லூர் - Aunvallur (possessors of cattle)

கால்நடை வைத்திருப்போர் எனப் பொருள்படும் இடையர்கள் விரும்பி வைத்துக் கொள்ளும் பெயர்.

அவரு – Avaru

அகரு என்பதற்கான மற்றுமொரு பெயர்.

அவிரி - Aviri (*Indigofera tinctoria*)

பத்ம சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

இவர்கள் வண்ணத் துணி தயாரிக்க அவுரிச் சாயத்தைப் பயன் படுத்துகின்றனர்.

அவிசர் - Avisa (*Sesbania grandiflora*)

அகத்தி எனப் பொருள்படுவது. மீதரர் சாதியின் ஒரு கோத்திரம்.

ஆவு – Avu (snake)

பாம்பு எனப் பொருள்படும் இது குருபர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலப் பிரிவு.

ஆவுலர் - Āvula (cow)

பசு எனப் பொருள்படும் சொல், பலிசர், போயர், கோல்லர், காபு, குறவர், முத்ராசர், எருக்கலர் ஆகிய சாதிகளில் காணப் படும் புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பிரிவு.

ஆயர் – Ayar (Cow-herd)

இடையன், கோலாயர் ஆகிய சாதியாரின் உட்பிரிவு. அச் சாதிக்குரிய வேறு பெயராகவும் கொள்வதற்குரியது.

அயோத்தியர் - Ayodhya (Oudh)

காபுகளின் ஓர் உட்பிரிவு. இவர்கள் தாங்கள் முதலில் அயோத்தியில் வாழ்ந்ததாகச் சொல்கின்றனர்.

ஆழாதி – Āzhati

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் பிசாரட்டி களுக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

படகர் - Badaga

நீலகிரி மலையில் வாழும் பழங்குடிகளான தோடர் மேய்ச் சல் தொழிலிலும், கோத்தர்கள் கைவினைத் தொழிலிலும் ஈடுபட்டிருப்பதைப் போல நீலகிரியில் பயிர்த்தொழிலை மேற் கொண்டிருப்பவர்கள் படகர். இவர்கள் சிலபோது பர்கர்கள் எனவும் வழங்கப்படுவர். 1901 கணக்கெடுப்பின்படி இவர்

களின் எண்ணிக்கை 34,178 ஆகும். ஆனால் கோத்தர்கள் 1267 பேராகவும், தோடர்கள் 807 பேராகவுமே அக் கணக் கெடுப்பில் பதியப்பட்டுள்ளனர். படகர்களில் பலரும் உழவுத் தொழிலையே மேற்கொண்டிருந்தாலும் அவர்களுள் பள்ளி ஆசிரியர், எழுத்தர், பொதுப்பணி ஒப்பந்தக்காரர், கட்டிட வேலை செய்வோர், வண்ணம் அடிப்போர், தச்சர், இரம்பக் காரர், தையல்காரர், வனக்காவலர், முடிதிருத்துவோர், துணி வெளுப்போர், துப்புரவாளர் எனப் பிற தொழில் செய்கின்றவர் களும் உளர். பலர் தேயிலை, காப்பித் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். மலைப் பாதைகளில் படகர் கூட்டம் கல்லுடைத்துக் கொண்டிருப்பதையும், பாதை பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் எப்போதும் காணலாம். வெல் லிங்கடனிலுள்ள வெடி மருந்துத் தொழிற்சாலையில் இன்று பலர் நல்ல ஊதியம் பெற்று வருகின்றனர். வளம் படைத்த சிலர், காப்பி, தேயிலைத் தோட்டங்களின் உரிமையாளராக உள்ளனர். பழங் கன்னடத்தை ஒத்தது எனக் கூறப்படும் தங்கள் மொழியோடுகூட இளந் தலைமுறையினர் ஓரளவு ஆங்கிலமும், தமிழும் கற்று வருகின்றனர். ஆடு மேய்த்தபடி இருந்த ஒரு படகர் குல இளைஞன், தவறு புரிந்த தன் கூட் டாளியை நோக்கிப் 'பில்லிங்கேட்டினுக்' குரிய கொச்சை ஆங்கிலத்தில் தடையின்றி வைததை நான் கேட்டேன். 1904-1905-இல் 122 மாணவர்கள் பயிலும் முப்பத்தொன்பது படகர் பள்ளிகள் இருந்தன. 1907-இல் ஒரு படகன் சென்னைப் பல்கலைக் கழக மெட்ரிக்குலேசன் தேர்வில் வெற்றி பெற்று உதகமண்டலம் துணை நடுவர் வழக்கு மன்றத்தில் எழுத்தராகி விட்டான்.

படகர்களைப் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிக்கை களில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இவர்கள் மிகக் கீழ் நிலை அடைந்துவிட்ட பழங்குடி இனத்தவர் எனவும், அனைத்தை யும் இழந்து வறுமையுற்றிருக்கும் இவர்களின் நிலை மேம் படக் காலந்தாழ்க்காமல் ஏதேனும் செய்தாக வேண்டும் என வும் கருத்துக்கள் கூறப்பட்டன. வயநாடு, விசாகப்பட்டினம் போன்ற பகுதிகளுக்கு அவர்களைக் குடியேறும்படி தூண்டுவது தான் இவர்கள் இனம் அடியோடு அழியாமல் காக்கச்

செய்வதற்குரியது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. சென்ற சில ஆண்டுகளாகச் சிலர் ஆனைமலையில் தொடங்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களில் வேலை செய்யச் சென்று அங்குக் குடியேறியுள்ளனர். 'ரூபாய் 250 முதல் 500 விலை பெறக் கூடிய ஓட்டு வீடுகள் இவர்கள் வளத்திற்கான சான்றுகளாம். 'லப்பை'களிடமிருந்து இவர்கள் அடிக்கடி வீடு கட்டக் கடன் வாங்கலாம். ஆனால் லப்பை ஒரு வீட்டையாவது கடனுக்குப் பதிலாகக் கைப்பற்றி விற்றதாக நான் கேள்விப்பட்டதில்லை. வாங்கும் கடனை இவர்கள் விரைவில் அடைத்து விடுகிறார்கள் என நான் நம்புகிறேன். வேலி அமைக்கப்பட்டு, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கு நிலமாக ஊரைச் சுற்றி அமைந்திருக்கும் பார்லி முதலியன தானியங்கள் பயிரிடப்படும் அவர்கள் நிலங்கள் முறையாக உரமிட்டு, நன்கு உழைத்துத் திருத்தம் செய்வதற்குரியன. படகர்களுள் பலர் அணிந்திருக்கும் மேற்சட்டையும், நல்ல கெட்டிப் போர்வையும், தங்கக் கடுக்கன்களும் இவர்கள் வளத்திற்கு அடையாளங் களாம். அடிக்கடி விருந்து வைப்பதும், ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்ய மனமில்லாதிருப்பதும் காரணமாக ஏற்படும் சில நாள் ஊதிய இழப்பு இவர்களைப் பாதிப்பதில்லை என்பதற்குச் சான்றாகும்.' என்று ஓர் எழுத்தாளர் கூறியுள்ளார். இதற்கு மாறாக நீலகிரியில் முன்பு பணியாற்றிய ஓர் இந்திய அதிகாரி எனக்குப் பின்வருமாறு எழுதியுள்ளார்:- 'சாதாரணமாகப் படகர்கள் சிக்கனமும் கடின உழைப்பும் உடையவர்கள் என்றாலும் அடுத்த வேளை உணவு நிச்சயம் என்றால், சோம்பி இருந்துவிடும் குணம் இவர்களிடம் உள்ளது. வேறொரு ஊரில் ஒருவன் நோய் வாய்ப்பட்டால் அவனுடைய உறவினர்கள் அதைச் சாக்கிட்டு அவனைப் பார்க்கப் புறப்பட்டு விடுவர். அவ்வாறு செல்பவர்களுக்கு அங்கு உணவளித்தாக வேண்டும். முதல் பருவ வேளாண்மை அறுவடை முடிந்ததும் சோம்பேறியான படகன் வயலில் பூச்சி புகுந்து விட்டதாகவும், கடவுள் கோபத்தை ஆற்ற வேண்டும் எனவும் கூறி விருந்து வைப்பான். திருமணமாயினும், சாவாயினும் உணவளிக்க வேண்டிய அளவு கூட்டம் கூடிவிடும். இவை எல்லாம் வழக்கமானதைவிட அதிகமான செலவுக்குக் காரணமாவதோடு ஏற்கனவே குறை

வானதாக உள்ள குடும்ப வருவாயை முழுவதுமாக விழுங்கி விடுகின்றன. தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள முகமதிய வணிகனான இராவுத்தர் பக்கத்திலேயே கடன் கொடுக்கக் காத்திருப்பார். இராவுத்தர்களின் கடைகள் படகர் சிற்றூர்கள் எங்கும் ஊடுருவி விட்டன. முதலில ஒரு மூட்டை இராகியும், சவப் பெட்டியின் மீது போடும் துணியோ சில ரூபாய் மதிப்பு உள்ள அரிசியும் கறி வகைகளுமோ இராவுத்தர் பெரிய மனம் வைத்துக் கொடுத்துதவுவார். இவற்றின் விலை சந்தை விலைக்கு மிக மேற்பட்டதாக இருக்கும். கடனாகத் தரும் இவற்றிற்கு அங்கு வாங்கும் வட்டி ரூபாய்க்கு ஆறு காசிலிருந்து பன்னிரண்டணா வரை இருக்கும். எப்பொழுதும் பணமுடையுடைய படகனால் கடனைச் செலுத்தப் போதுமானதாக இல்லாத தனது சிறு வருவாயின் காரணமாகத் தன்னைக் கடனிலிருந்து மீட்டுக் கொள்ள இயலாதவனாகின்றான். காலாண்டுக்கும், அரையாண்டுக்குமாக ஒவ்வொரு முறை கடன் பத்திரம் புதுபிக்கப்படும்போதும் கடன் வேகமாகப் பெருகி அவனுடைய நிலம் உட்பட அனைத்துச் சொத்துக்களையும் விழுங்கி விடுகின்றது. மலைப்பகுதிகளில் வழக்குரைஞர்கள் வந்து சேர்ந்த பின் படகர்கள் வழக்கு மன்றம் சென்று வழக்காடும் இனங்களில் முன்னணியினராகி விட்டனர். இதனால் பொருட்செலவு ஏற்படுவதோடு பயிர்த்தொழிலும் கவனிப்பற்றதாகி விடுகின்றது.' திரு கோவர்* மொழி பெயர்த்துள்ள படகர்கள் ஒப்பாரிப் பாடலில் இறந்தவர் செய்துள்ள பாவங்களைக் கூறி மன்னிப்புக் கேட்கப்படுபவைகளில் ஒன்று அரசிடம் வழக்கை கொண்டு போனதாகும். அவர்களுடைய பழமொழிகளில் ஒன்று இதே கருத்தை, 'நீ குற்றவியல் நடுவரிடம் ஒரு வழக்கு தொடுப்பாயாகில் அது உன் எதிரியின் சோற்றில் நஞ்சினைச் சேர்த்ததாகும்' என எடுத்துக் கூறுகிறது. ஆனால் திரு கிரிக், 'அரசினைப் பற்றிய அச்சமோ இக்கருத்துரையின் விளைவோ ஏற்றுக் கொள்ளப் படாமல் புறக்கணிக்கப்பட்டதாகவே கொள்ள வேண்டும். உதக மண்டலத்திலுள்ள வழக்குமன்றக் கட்டிடத்தில் எப்போதும் படகர் கூட்டமிருப்பதைப் பார்க்கும்போது, அவர்கள் இப்போது

* தென்னிந்திய நாட்டுப் பாடல்கள். (Folk songs of Southern India)

வழக்காடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது ' என எழுதுகிறார்.*

பிஷப் வைட்ஹெட் அவர்கள் என்னிடம் தந்துள்ள குறிப்புகளிலிருந்து படகர் பற்றிய பின்வரும் விவரங்களைத் தருகிறேன்:- 'படகர் ஆணையிட்டுச் சொல்ல விரும்பும்போது சிகூரிலுள்ள மாரியம்மன் கோயிலுக்குச் செல்கின்றனர். அங்கு அருவியில் குளித்த பின் ஒற்றை ஆடையோடு தேங்காய், பழம் முதலியவற்றைப் படைத்து ஆட்டையோ, கோழியையோ பலியிடுவர். பலியிட்ட அதன் தலையைக் கோயில் வாயிற்படியின்மீது வைத்து அதன் முன் தலையில் கோடு கிழிப்பர். பின்னர் ஆணை செய்பவர் ஏழடி தூரத்திற்கு அப்பாலிருந்து ஓர் அடியை அடுத்து மற்றொரு அடியை வைத்து ஏழடி தூரம் நடந்து கோட்டினை அடைந்து அதனைத் தாண்டிக் கோயிலினுள் புகுந்து தெய்வத்தின்முன் எரியும்விளக்கை அணைப்பார். ஆணை இடுவது உண்மையாயிருப்பின் ஆணையிடுபவன் தடுமாற்றமின்றி நேரே நடந்துகோயிலினுள்புகுவான். ஆணை பொய்யாயின் அவன் கண்கள் இருண்டு நேரே கோயிலை நோக்கி நடக்கவோ விளக்கு இருக்குமிடத்தைக் காணவோ இயலாதவனாவான். ஒருவன் பொய் சொல்வானாகில் படகர்கள், 'சிகூருக்கு வந்து ஆணையிடத் தயாரா?' என்று கேட்பது வழக்கம். உதகமண்டலத்திலிருக்கும் மாரியம்மன் கோயிலிலும் மேற்கூறியது போல ஆணையிடுவது உண்டு. உதகமண்டலம் வழக்கு மன்றத்தில் சான்றுரைக்க வரும் இந்துக்களை நடுவர் மாரியம்மன் கோயிலில் ஆணையிடத் தயாரா என்று அடிக்கடி கேட்பதுண்டு. அதற்கு வந்தவன் உடன்படில் ஒரு வழக்கு மன்ற அலுவலருடன் அவன் கோயிலுக்கு அனுப்பி வைக்கப்படுவான். அவன் யாருக்காகச் சான்றுரைக்க வந்துள்ளானோ அவன் ஆடோ, பன்றியோ கொண்டுதர அதனைப் பலியிட்டு அதன் தலையையும் உடலையும் கோயில் தெய்வத்தின் முன் வைப்பர். சான்றுரைப்பவன் அந்த உடலைத் தாண்டுவான். இதுவே ஆணையிடுவதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவன் சொல்லும்

---

* நீலகிரி மாவட்டக் கையேடு. (Manual of Nilgiri District.)

சான்று பொய்யாக இருப்பின் அவ்வாறு உரைப்பவனுக்கு ஏதேனும் தீங்கு நிகழும் என நம்பப்படுகிறது.'

படகன் அல்லது வடுகன் என்ற சொல் வடக்கத்தியான் எனப் பொருள்படும். படகர்கள் கன்னடப் பகுதியிலிருந்து வந்து குடி புகுந்த மைசூராரின் வழித் தோன்றல்கள் என நம்பப்படுகிறது. இவர்கள் தங்கள் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், அரசியல் குழப்பம், சுற்றியிருப்போரால் நசுக்கப்படுதல் ஆகிய காரணங்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்குக்குடிபுகுந்தனர் எனக் கருதப்படுகிறது. எனினும் இது தொடர்பாகப் படகர்களுடைய தலை, தோடர்களுடையதையும் கோத்தர்களுடையதையும் போல் நீண்ட வடிவுடையதாக உள்ளதேயன்றி, மைசூரில் எங்கும் காணப்படுவதுபோல் செங்குத்தான பக்கங்

நீலகிரியாரின் சராசரி அளவுகள்

	மண்டையின் நீளம்	மண்டையின் அகலம்	விகித அளவு
	செ. மீ.	செ. மீ.	
படகர்	*18.9*	*13.6*	*71.7*
தோடர்	*19.4*	*14.2*	*73.3*
கோத்தர்	*19.2*	*14.2*	*74.1*

மைசூராரின் சராசரி அளவுகள்

	மண்டையின் நீளம்	மண்டையின் அகலம்	விகித அளவு
	செ. மீ.	செ. மீ.	
காணீகர்	*18.5*	*14.3*	*77.6*
பேடர்	*18.3*	*14.3*	*77.7*
ஹொலையர்	*17.9*	*14.1*	*79.1*
மண்டையா மணர்	*18.5*	*14.8*	*80.2*
வகலிகர்	*17.7*	*14.5*	*81.7*



கோத்தகிரி அருகே உள்ள கல்லறை மாடங்கள்



படகர் கோயில்

களையுடையதாகவோ, குறுகியதாகவோ இல்லை என்பதனை இங்குக் கருத்தில் கொள்ள வேண்டும்.

படகர்களின் தோற்றம் பற்றிய பின்வரும் வரலாறு வழக்கிலுள்ளது:- 'தலைமலைக் குன்றுகளில் ஏழு சகோதரர்களும் அவர்களோடு பிறந்த ஒருத்தியும் வாழ்ந்து வந்தனர். ஒரு முகமதிய அரசன் அவளை வன்முறையில் கவர்ந்து செல்ல முற்பட்டபோது அங்கிருந்து தப்பியோடியவர்களாக அச் சகோதரர்கள் தங்கள் உடன்பிறந்தவளைக் காப்பாற்றினர். பெத்தல் காடா என இன்று வழங்கும் ஊரருகே அவர்கள் வந்து தங்கினர். சிறிது காலத்திற்குப் பின் அந்த ஏழு சகோதரர்களும் பிரிந்து சென்று நீலகிரியின் பல பகுதிகளில் குடியேறிக் குடிப்பெருக்கம் செய்யத் தலைப்பட்டனர். அவர்களுள் இரண்டாவது சகோதரனான கேத்தப்பனுக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். அவன் வீட்டிலில்லாதபோது, ஒரு சமயம் இரண்டு தோடர்கள் அவன் வீட்டினுள்நுழைந்து அவன் மனைவியைக் கற்பழித்ததோடு அவனது பொருள்களையும் கவர்ந்து கொண்டனர். என்ன நடந்தது என்பதனைக் கேள்விப்பட்ட கேத்தப்பன் தோடர்களைப் பழிவாங்கப் பலயாரு இனத்தைச் சேர்ந்த இருவரின் உதவியை நாடினான். அவர்கள் கேத்தப்பன் தன் பெண்களைத் தங்களுக்கு மணம் செய்து கொடுப்பதாயின் அவனுக்கு உதவுவதாகக் கூறினர். அதற்கு அவன் உடன்பட்டு அவர்கள் உதவியோடு தன் குடும்பத்தைச் சீரழித்த தோடர்களைக் கொன்றான். குள்ளிகல்லு ஊரில் வாழும் இன்றைய தலைமுறையினர் அவ்வாறு உதவிய பலயாருகளுக்கும் படகப் பெண்களுக்கும் பிறந்தவர்கள் வழி வந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கேதப்பர் அல்லது கேதா என்ற பெயரில் இன்றும் அந்த ஏழு சகோதரர்களும் வழிபடப்படுகின்றனர்'.

நீலகிரி மாவட்டக் கையேட்டில் படகர்கள் குடியேற்றம் பற்றித் தரப்பட்டிருக்கும் குறிப்பு வருமாறு:- 'எப்பொழுது அவர்கள் இங்கு ஓடி வந்தார்கள் என்பதனைக் காட்டச் சான்றுகள் இல்லை. படகர்களில் பலர் இலிங்காயதர்களாக இருப்பதால் இது இலிங்காயதப் பிரிவு ஏற்பட்ட பன்னிரண்டாம் நூற்றாண்

டின் பிற்பகுதிக்குப் பின்னரே நிகழ்ந்திருத்தல் வேண்டும். 1602-இல் மேற்குக் கரையிலிருந்தும் வந்த கத்தோலிக்க பாதிரி மார்கள் இவர்கள் இங்குக் குடியிருப்பதையும், தோடர்களோடு இன்று இருப்பது போன்றதான உறவையே கொண்டிருந்ததையும் கண்டுள்ளார்களாகையால் இது பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்பே நிகழ்ந்ததாதல் வேண்டும். இன்றுள்ள சான்றுகளின் அடிப்படையில் இவர்கள் குடிபெயர்ந்து வந்த சரியான காலத் தைக் கணிக்க இயலாதவர்களாக உள்ளோம். படகர்கள் பேசும் கன்னடத்தின் ஒரு வகை அதனுடைய மூல மொழியிலிருந்து பெரிதும் மாறுபட்டுத் தனிக்கிளை மொழி எனக் கூறும்படியாகத் திரிபு பெற்றுள்ளதால் இவர்கள் இடப் பெயர்ச்சி பதினாறாம் நூற்றாண்டை ஒட்டியமையாது பன்னிரண்டாம் நூற்றாண்டை ஒட்டி நிகழ்ந்திருக்கலாம் எனக் கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு மாறாக முனைவர் ரிவர்ஸ் எடுத்துக் கூறியுள்ளபடி* தோடரின் கடவுளர்களைப் பற்றி வழங்கும் கதைகளில் ஒன்றில் கூடப் படகர்களைப் பற்றிய குறிப்பு இல்லை. கோத்தர், குறும்பர், இருளர் ஆகிய பழங்குடியினர் அக்கதைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளில் இடம் பெற்றுள்ளதை நோக்கத் தோடர்களோடு மற்றப் பழங்குடியினருக்கான உறவு போலன்றிப் படகர்களின் உறவு மிக அண்மைக் காலத்ததாக இருக்க வேண்டும் என்றே கொள்ள வேண்டியுள்ளது. படகர் பேசும் மொழி பற்றிய மொழியியல் நோக்கிலான ஆய்வுகள் இவர்கள் இடப் பெயர்வின் காலத்தை ஒரளவு சரியாகக் கணிக் கத் துணை புரியலாம். இன்று பேச்சு வழக்கில் உள்ளபடி இம் மொழியில் பழைய நூல்களில் மட்டுமே காணப்படும் எழுத்துக் களையும், சொற்களையும் கொண்டதாக இரண்டு 'ர' கரங்கள் இருக்கக் காண்கின்றோம். இன்றையதலைமுறையினரான கன்ன டியர் செவிகளில் அது பழக்கமற்றதாகவே ஒலிப்பதாக உள் ளது. இந்த எழுத்துக்கள், சொற்கள் ஆகியவை வழக்கற்றுப் போன காலத்தைக் கணிப்போமாயின் படகர்கள் சமவெளியை விட்டுக்குடி பெயர்ந்த காலத்தை முடிவு செய்யலாம். பதின்

---

* தோடர், 1906. (The Todas, 1906.)

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கண ஆசிரியரான கேசி ராசாவின் காலத்திலேயே இரண்டு 'ர' கரங்களின் வழக்கு வீழ்ந்துபட்டது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. மலையைக் குறிக்கும் 'பெட்டு' என்ற இன்று வழக்கிலுள்ள சொல்லுக்குப் பதிலாகப் படகர் வழங்கும் 'பெட்டா' என்ற சொல் பதினமூன்றாம் நூற்றாண்டதான 'சப்தமணிடர்ப்பணம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.'

நீலகிரி மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ள ஒரு செய்தி வருமாறு:– 'தீவாலாவிலிருந்து குறுக்காக எட்டு மைல் தொலைவில் இருக்கும் நெல்லியாலம் என்ற ஊர் அரசு (அர்ஸ்) களின் வாழ்விடம். இவர் முன்னநாட்டு அம்சத்தில் பரந்த நிலப்பரப்புக்கு உரிமையுடைய நிலக்கிழார் (ஜன்மி) ஆவார். இவர்கள் இலிங்காயத்தைப் பின்பற்றும் கன்னடம் பேசுகின்ற மரபின் வழி வந்த இந்துக்களுக்குரிய சொத்துரிமை முறையை மேற்கொண்டுள்ளவர்களேயன்றி, வட நாட்டையோ, மலபாரையோ சேர்ந்தவர்களல்லர். இவர்களுடைய குடும்பப் பின்னணி இன்று தெளிவற்றதாக உள்ளதெனினும் சதாசிவராச அர்ஸ், புசங்கராச அர்ஸ் என்ற பெயருடைய இரு சகோதரர்கள் (தெளிவாகக் குறிப்பிட முடியாத ஒரு காலக்கட்டத்தில்) மைசூரிலுள்ள இன்றைய சாம்ராஜ்யநகர் வட்டத்திலிருந்து பழைய கோட்டையான கல்கட்டிக்கருகில் உள்ள மலைக்கோட்டையில் வந்து தங்கினார்கள் எனத் தெரிய வருகின்றது. புஜங்கேசுவரரும் உம்பத்தூர் உரகாட்டியுமே இன்றுவரை இவர்கள் வழிபட்டுவரும் குல தெய்வங்கள். இவர்கள் தங்களோடு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பேடர்களையும், படகர்களையும் உடன் அழைத்து வந்ததோடு தொடர்ந்து கன்னடம் பேசுபவரகள் இப்பகுதியில் வந்து குடியேறவும் ஆதரவு காட்டினர். கல்கட்டிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கும் பண்ணிமர் என்ற ஊரில் இன்னமும் அந்தச் சகோதரர்களோடு உடன் வந்தவர்களான பேடர்கள் வழி வந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இன்றும் கூடத் தீர்க்க இயலாத வழக்குகள் ஏற்படின் படகர்கள் கையில் காணிக்கையுடன் நெல்லியாலம் சென்று அரசுகளிடம் தங்கள் வழக்கைக் கூறித் தீர்த்து வைக்கும்படி கேட்பதாகக் கூறப்படுகிறது. மேலும் குல முன்னோர் வழிபாடு

போன்ற வழக்கமான சடங்குகளின் போது அரசுகளின் சார்பிலான விருந்தினரை அழைத்துவர அழைப்பும் அனுப்புகின்றனர்.'

பெத்தல்கடா ஊருக்கு மிக அருகே கல்லால் வேலியமைக்கப்பட்ட இடத்தினிடையே சூரியன், சந்திரன், மக்கள், விலங்குகள் முதலியவை பொறிக்கப்பட்ட வட்டக்கல் வரிசைகள் உள்ளன. அவை தங்கள் முன்னோர் அமைத்தவை எனக் கூறும் படகர் இன்றும் அவ்வப்போது அங்கு வழிபாடு நடத்துகின்றனர். நான் அங்குச் சென்ற போது அந்த வட்டக்கற்களில் ஒன்றினுள்ளே ஒரு சங்கு, இலிங்கம், மணி, மலர்கள் ஆகியன வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். நீலகிரியில்சோலூர், மேலூர் ஆகிய இடங்களிலும் பிறவிடங்களிலும் காணப்படும் இது போன்ற சிற்ப வடிவங்கள் செதுக்கப்பட்ட வட்டக் கற்களைப் பிரீக்ஸ்* அவர்கள் வரைந்து வெளிப்படுத்தியுள்ளதோடு அவற்றைப் பற்றி விளக்கமும் தந்துள்ளார். ஜகடகம்பேயில் உள்ள வட்டக்கல் ஜகனேரி கிராமத்தினரான காணிக் குறும்பர்களான படகர்களால் ஆண்டுதோறும் பலியிட்டு வழிபாடு நடத்தப்படுவதால் குறிப்பிடத்தக்கதாகின்றது என அவர் கூறுகின்றார். படகர்கள் மேலூர், ககூசி, ஹலைரு, துடுர், ஜகதாடபோன்ற தங்கள் கோயில்களை இதுபோன்ற வட்டக்கற்கள் உள்ள இடங்களுக்கு அண்மையிலேயே அமைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கதென அவர் கூறுகிறார்.

நீலகிரி மாவட்டக் கையேட்டில் படகர்களிடையே வழங்கும் ஒரு வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.- 'தொட்டூர் வட்டக கறகளுக்கு அருகேயுள்ள பனகுடி சோலையின் நடுவே, கரைராயருக்கான தனித்தன்மை வாய்ந்த சிறு கோயில் உள்ளது. இது பாழடைந்த கற்குடிசையாகத் தாழ்ந்த மதிற்சுவரால் சூழப்பட்டுப் புலி, குதிரை வீரன், நாய்கள் ஆகிய மண்ணாலான

---

*நீலகிரியில் காணப்படும் பழங்குடிகளும் வரலாற்றுச் சின்னங்களும் பற்றிய விவரங்கள், 1873. (Account of the Primative Tribes and Monuments of the Nilagiris, 1873, Breeks.)

உருவங்களைக் கொண்டுள்ளது. இது புலியோடு போராடி உயிர் துறந்த ஒரு படகனின் நினைவாக அமைக்கப்பட்டது எனக் கூறி, ஆண்டுதோறும் விழாக் கொண்டாடி மீண்டும் புதிய மண்ணுரு வங்களை அங்கு வைத்து வருகின்றனர். ஒரு குறும்பன் தீக் கடைந்து தூபங்கள் போடுகிறான். பின்னர் பலியிடக் கொண்டு வரப்பட்ட ஆடுகளின் மீது தீர்த்தம் தெளித்து அவை பலியிடத் தகுதியுடையனவாக உடல் சிலிர்க்கின்றனவா எனப் பார்த்து ஒவ்வொன்றாக வெட்டிப் பலியிடுகின்றான். பொதுவாகத் 'துருக்' என்றே வழங்கப்படும் புலிக்கல் (ஹுலிகல்) துர்க்கம் தெற்கே குன்னூர்வரை நீண்டு கிடக்கும் மலைச்சரிவில் மலை யிடுக்கில் துருத்திக் கொண்டிருக்கும் பாறையின் முனையில் அமைந்த கோயிலாகும். அருகே உள்ள புலிக்கல் என்ற ஊரின் பெயரில் அக்கோயில் பெயர் பெற்றுள்ளது. அவ்வூர் அப்பெயர் பெறக் காரணம் அங்கு மனிதரைத் தின்று பழக்கப்பட்டுவிட்ட தாக எங்கும் பெயர்போன ஒரு புலியைப் படகன் ஒருவன் கொன்றதேயாகும். அவன் கொன்ற புலியைப் புதைக்கப்பட்ட இடமாகப் புலிக்கல்லுக்குச் சற்றுத்தெற்கேயுள்ள பிள்ளையார் கோயிலினருகே மூன்று கற்கள் நிறுத்தப்பட்டுள்ள ஓரிடம் காட்டப்படுகிறது. அங்கு முன்பு கொல்லப்பட்ட புலியின் கல்லு ருவம் இருந்ததாகப் பர்டன் (Burton) கூறுகிறார். கோணக் கரைக்கும் தென்கிழக்கே இரண்டாவது மைலில் கோட்டை ஹாட (கோட்டை மேடு) என்ற இடத்தில் பழைய உதயராய கோட்டை யின் சின்னங்கள் உள்ளன. அங்கு ஆண்ட உதயராயர் பற்றிய செய்திகளைப் படகர் வழக்கு வழியான வரலாறு விரிவாகக் கூறுகிறது. உம்மத்தூர் ராசாக்களுக்காக வரி வசூலிக்கும் தலைவ ரான சிறுமுகைக்கு அருகிலுள்ள குள்ளன்துறையிலும் ஒரு கோட்டை உண்டு. அதன் அழிபாடுகளை இன்றும் காணலாம். நெடுகுலாவைச் சேர்ந்த நெடிலிங்கச் சிற்றூரைச் சேர்ந்த முட்டு கவரி என்பவளை அவர் மணந்து கொண்டார். வழக்கமாகக் கோட்டைக்கு அரை மைல் தூரத்திலிருக்கும் மகாலிங்கசாமி கோயில் முன் நடக்கும் கொண்டம் தீமிதி விழாவை அங்கிருந்து மாற்றிக் கோட்டைக்கு முன் நடத்தச் செய்ததால் அவள் கடவு ளரின் கோபத்திற்கு ஆளாகி உயிர் துறந்தாள் என்பர். மோயாறு பள்ளத்தாக்கில் அமைந்துள்ள சிற்றூர் ஆனைக்கட்டி

பீமமலையிலிருந்து விரைந்தோடி அழகிய அருவியாக விழுகிறது. மோயாறு, படகர்கள் அதனைக் குதிரை ஹல்லா அல்லது குதிரை மலையிடுக்கு என அழைக்கின்றனர். ஒரு படகனுடைய மனைவி அவனுக்குத் தரமான அரிசிச் சோற்றையும், அவனோடு வாழும் அவன் தம்பிக்கு மட்டமான அரிசிச் சோற்றையும் போட்டதால் மானமுள்ள அந்தப் படகன் அதனைத் தாங்காமல் தன் குதிரையோடு அந்த அருவியில்விழுந்து தற்கொலை செய்துகொண்டமையால் அதற்கு அப்பெயர் வந்ததெனக் கூறுகின்றனர்.

திரு கிரிக் அவர்கள் படகரிடையே பதினெட்டுச் சாதிகள் அல்லது பிரிவுகள் உள்ளனவாகக் கூறுகிறார். இவற்றை எளிமைப் படத் தொகுத்துத் திரு எஸ். எம். நடேச சாஸ்திரி* ஐந்து மேல் சாதியும், ஒரு கீழ்ச் சாதியுமென ஆறு சாதிகளாகப் பின்வருமாறு தருகின்றார்.

1.	உதயர்	- மேல்சாதியினர்
2.	ஆருவர்	,,
3.	அதிகாரி	,,
4.	கனகர்	,,
5.	படகர்	,,
6.	தொரையர்	கீழ்ச்சாதி

'உதயர் இலிங்காயத சமய நெறியினர். தங்கள் கழுத்தில் சிவலிங்க வடிவைக் கட்டித் தொங்கவிட்டிருப்பர். மற்ற எல்லாப் படகர்களையும் விட இவர்கள் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். மற்றவர்களும் அவ்வாறே இவர்களை மதிக்கின்றனர். மரக்கறி உணவையே உண்ணும் இவர்கள் மற்ற மேல்சாதிப் படகர்களோடு திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. உதயர் என்பது மைசூர் அரசர்கள் சூடிக் கொள்ளும் பட்டம். இப்படகர் தங்களை இவ்வாறு அழைத்துக் கொள்வதால் தங்கள் உடம்பில் உயர்குடிக் குருதி ஓடுவதாகக் கருதுகிறார்கள்' இலிங்காயதப் படகர்கள் பொதுவாக இலிங்கங்கட்டி என்று அழைக்கப்படுகின்றனர். 'இவர்களுக்கு அடுத்த நிலையில் இருப்பவர் ஆருவர். மதிப்பிற்குரியவர் எனப் பொருள்

* சென்னை கிறித்துவக் கல்லூரி இதழ், 1892. (Madras Christian College Magazine, 1892.)

படும் ஆரியர் என்ற சொல்லோடு இவர்கள் பெயர் ஒப்புமை உடையதாயிருப்பதும், பிராமணர்களுக்குரிய பூணூல் அணியும் பழக்கமுடையவர்களாக இவர்கள் இருப்பதும், படகர்களோடு சேர்ந்து இங்கு (நீலகிரியில்) வந்து குடியேறுவதற்கு முன்பு படகர்களுக்குரியவர்களான பிராமணக் குருமார்களாக இவர் கள் இருந்திருக்கலாம் என நாம் எண்ணச் சான்றுகளாகத் துணை நிற்கின்றன. இப்பொழுது இவர்கள் படகர்களோடு முழுவதுமாகக் கலந்து விட்டவர்களாகவே உள்ளனர். இவர் களும் மரக்கறி உணவையே உண்கின்றனர். மேலும் குருக்க ளாகவும் செயல்படுகின்றனர்.' ஆருவர் (குதிப்பவர்) என்ற பெயர், இவர்கள் அடிக்கடி நடத்தும் தீ மிதித்து நடக்கும் சடங்கின் அடிப்படையில் தோன்றியதாதல் வேண்டும் என்ற கருத்தும் கூறப்படுகிறது. ஆருவர் என்ற சொல் இரத்தல் அல்லது வழிபடல் என்ற பொருள்தரும் கன்னடச் சொல்லி லிருந்து வந்ததால் வேண்டும் என்ற கருத்து என்னிடம் கூறப் பட்டது. அப்படியாயின் அது இரத்தலும் வழிபாடு செய்தலு முடைய பிராமணரைக் குறிப்பதாகலாம். கன்னட பசவ புராணம் இச்சொல்லினை அடிக்கடி இப்பொருளில் பயன் படுத்துகிறது. 'அதிகாரிகளும் பெரிதும் மரக்கறி உணவு உண்பவர்களே. மற்ற இரு பிரிவினரும், கீழ்ச்சாதியாரான தொரையரும் எல்லா வகை ஊனையும் உண்கின்றனர். மரக் கறி உணவாளனாக இருக்கும் அதிகாரி ஊன உணவு உண் போர் பிரிவிலே திருமண உறவு கொள்ள நேரின், தயக்கமின்றி ஊன் உணவு மேற்கொள்கின்றான் என்றும் கூறப்படுகிறது.' திரு கிரிக், இம்மலைப் பகுதி தமிழ்ச் சிற்றரசர்களின் ஆளுகை யின் கீழ்வந்தபோது கனகர்கள், அவர்களால் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனக் கருதுகி றார். ஆனால் இது நடந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கு இடமில்லை என்றே தெரிகின்றது. ''தொரையர் மேல் சாதியினராகக் கூறப்பட்ட படகர் ஐவருக்கும், சிறப்பாக ஆருவருக்கு, மக்க ளாகவும், பணியாளராகவும் கருதப்படுகின்றனர். சமூகப் படி நிலையில் கீழ்த்தட்டினராக உள்ள இவர்கள் பிற உயர் சாதிப் படகர்களோடு திருமண உறவு வைத்துக் கொள்ள இய லாது. இவர்களை அவர்களுக்கு மக்களாக உறவு சொல்லித் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அதற்கு இடமில்லாதுபோகின்றது.

தொரையர் படகர் இனத்துக்குக் குற்றேவல் பணிபுரி கின்றவராக உள்ளனர். ஊர்ப்பணியாளனாக உள்ள இவன், பிணங்களைச் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்வது, சாவுச் செய்தியினை ஊர்ஊராகச் சென்று உரைப்பது, ஊரில் சாவு நிகழ்ந்தவுடன் முதலில் முகம் மழித்துக் கொள்வது, பெண்கள் தொலைவிலுள்ள தாய் வீட்டிற்கோ, புகுந்த வீட்டிற்கோ செல்லும்போது துணையாக உடன் செல்வது ஆகிய பணிகளை எல்லாம் செய்கின்றான். "உதயர், அதிகாரிகள், கனகர் ஆகிய முப்பிரிவினரும் இலிங்காயத சமய நெறி சார்ந்தவர்கள். ஆருவர், படகர், தொரையர் ஆகிய மற்ற மூவரும் சைவ சமயம் சேர்ந்தவர்கள். மேலே குறிப்பிட்ட ஆறு பிரிவினருள் உதயரும் தொரையரும் அகமணக்கட்டுப்பாடுடையவர்கள். மற்ற நான்கு பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு வைத்துக் கொள்ள உரிமையுடையவர். 1891 கணக்கெடுப்பில் மைசூரைச் சார்ந்த பயிர்த்தொழில் புரியும் சாதியினர் எனப் பொருள் படும் படகர்களில் பலர் தங்களை வக்கலிகரெனப் பதிந்துள்ளனர்.

குன்னூருக்கு மேற்கே ஏழாவது மைலில் அத்திகாரிகட்டி என்ற ஊர் உள்ளது. அத்திகாரி என்ற ஊர்ப்பெயராகவும் அதிகாரி என்ற படகர் பிரிவினருக்கு உரிய ஊராகவும் அதனைக் கொள்ளலாம். 'அந்த ஊரில் வாழும் மக்கள், கரி பெட்டராயர் என்ற தலைவரின் கீழ், மைசூரிலுள்ள சரிகூரிலிருந்து வந்து முதலில் மேட்டுப்பாளையத்திற்குத் தென்மேற்கில் சற்றுத் தொலைவில் உள்ள நெல்லித்துறையில் தங்கிய பின், குலக்கம் பிக்கு மேற்கேயுள்ள தூடுருக்கு மறுபடியும் குடிபெயர்ந்து, பின் அங்கிருந்து மேலூருக்கு வடமேற்கேயுள்ள தடசிம்மரஹட்டியில் குடியேறி, இறுதியில் அங்கு வந்து சேர்ந்தவர்களாவர். இவர்களே தூடூர், மேலூர் என்ற ஊர்களிலுள்ள சிலை உருக்கள் அமைந்த வட்டக் கற்களை அமைத்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. இப்போது தூடூர், தடசிம்மரஹட்டி ஆகிய இரண்டும் பாழடைந்த ஊர்களாக உள்ளன. தூடூரில் ஒரு கால்நடை அடைக்கும் பட்டியும், ஒரு பழைய கோவிலும், தீமிதி குண்டக் குழி ஒன்றும் இன்னமும் காணக்கிடக்கின்றன. தடசிம்மரஹட்டியில் மற்றொரு கால்நடை அடைக்கும் பட்டியும், படகர்களால் மண்டைக்கல் என அழைக்கப்படும் கல்மேடையும் உள்ளன.

படகர்கள் இந்த ஊர்களைவிட்டு அதிகாரிஹட்டிக்கும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களுக்கும் குடியேறியதற்குச் சுற்றிலுமுள்ள குறும்பர்கள் தொடர்ந்து தொல்லைகள் தந்ததே காரண மாகும். குறும்பர்கள் படகர்களுக்குப் பில்லிசூன்யம் போன்ற சூழ்வினைகள் வைத்துப் படகர்கள் சமூகத்தில் தலைவர்களாக இருந்த பலரைக் கொன்றுவிட்டனர் என்று பழைய வழக்கு ஒன்று வழங்குகின்றது.''

கன்னடக்காரர்களைப் போலவே படகர்களிடையேயும் புறமணக்கட்டுப்பாடு உடைய பல குலப் பிரிவுகள் உள்ளன. மாரி, மதவி, கத்தூரி, பெள்ளி என்பன அப்பிரிவுகளின் பெயர் களுள் சிலவாம். பெரும்பாலான குடும்பங்கள் மாரி, மதவி என்ற குலங்களைச் சார்ந்தவை. நான் கேட்கும் பொழுதெல்லாம் இப்பெயர்களையே ஒவ்வொருவரும் பதிலாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். பெள்ளி என்ற குலப்பெயர் வக்கலிகர், தொரையர், குருபர் ஆகிய கன்னட இனங்களுக்கும் உரியது, கத்தூரி, வக்கலிகர்களுக்கும், தெலுங்குக் கம்மர்களுக்கும் உரிய குலப் பெயராக எனது குறிப்புகளில் பதியப்பட்டுள்ளது.

பொதுவாகத் தாழ்வான குன்றின் உச்சியில் அமைந்த பரந்துபட்ட ஊர்களிலேயே படகர்கள் தங்கி வாழ்கின்றனர். கூரை வேயப்பட்ட அல்லது ஓடுகள் வேயப்பட்ட வசதியான வீடுக்ள், விளைவு தரும் வயல்களின் நடுவே வரிசையாக அமைந் துள்ளன. வீடுகள் தனித்த குடியிருப்புகளாக அன்றி ஒரே கூரையின் கீழ் வரிசையாக அமைக்கப்பட்டு நடுவே சுவர்களால் தடுக்கப்பட்டிருக்கும். சிலபோது பல வரிசைகள் தெருவமைப்புக் கொண்டவையாக இருக்கும். ஒவ்வொரு வீடும் புறமனை, அகமனை, என்ற இருபிரிவுகள் கொண்டிருக்கும். ஒரு குடும் பத்தில் பால் தரும் பசுவோ, எருமையோ இருப்பின் அகமனை யின் ஒரு பகுதி பால் வைத்திருக்கும் பால்மனையாகத் தடுக்கப் பட்டிருக்கும், அதற்குள் பெண்கள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். கோத்தர் அல்லது பறையரைத் தொட்டதாலோ, அவர்கள் அருகே சென்றதாலோ, வேறுகாரணங்களோ தீட்டுப் பட்ட ஆண்கள் கூடக் குளித்துத் தீட்டுத் தீர்ந்த பின்னரே பால்மனையில் நுழைவர். சில வீடுகளில் மூங்கிலாலான

பரண்கள் பொருள்கள்வைக்க அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு படகர் ஊரிலும் ஒரே பாறையாலான அல்லது கற்களாலான சூத்துக்கல்லு எனப்படும் உயர்ந்த மேடை இருக்கும். செங்கல், சேறு வைத்துக்கட்டிய மண்டைக் கல்லு எனப்படும் வேலையற்ற படகர்கள் ஓய்வாக உட்கார்ந்திருக்கும் மேடையும் இருக்கும். அவர்களுடைய நாடோடிக் கதைகளில் இதுபோல உட்கார்ந் திருப்பவர்களே ஊருக்குப் புதியதாக வருபவர்களைப் பற்றிய செய்தியை ஊராரிடம் வந்து உரைப்பவர்களாக இடம் பெற்றுள்ளனர். படகர்களல்லாத புதியவர்கள் ஹொலையக் கள் என அழைக்கப்படுகின்றனர். ஜி. ரிட்ச்டெர் பாதிரியார் படக ஹொலெய என்பவர்கள் மைசூரிலிருந்து குடகுக்கு வந்த ஹொலையர்களின் தாழ்ந்த பிரிவினர் எனக் குறித்துள்ளார்.* படகர்கள் வீட்டுக்கு முன் தானியங்களை அடிப்பதும் காய வைப்பதுமான செயல்கள் நடைபெறும். கால்நடைகள் கல்லால் வேலியமைத்த பட்டிகளில், அல்லது குடியிருப்புக்கு அருகே கொட்டகைகளில் அடைக்கப்படும். அவற்றின் சாணம் முதலியன கணுக்கால் அல்லது இடுப்பளவு வரும்வரை சேரும் படியாக விடப்படும். பின்னர் படகர்களின் நிலங்களுக்கோ மலைத் தோட்டங்களுக்கோ வாரி எடுத்துச் செல்லப்படும்.

''அன்னை பூமியை அவள் ஆற்றல் முழுவதையும் வெளிப் படுத்தும்படியாக விளைவைத் தரும்படி செய்வதில் படகனைச் சீன தேசத்துத் தோட்டக்காரன் ஒருவனாலேயே விஞ்ச முடியும். இன்று மலையின் ஒரு பக்கப் பகுதிப் பாறை களாலும் குண்டுக் கற்களாலும் செறிந்திருக்கக் காணலாம். படகர்கள் நில உரிமை பெற்றவுடன் நூற்றுக் கணக்கில் அப் பகுதியில் புகுந்து பணியாற்றி ஒரு சில வாரங்களுக்குள் கரடு முரடான அப்பகுதியை ஒழுங்கான நிலமாக்கி விடுவர். பெரிய குண்டுக் கற்களை உருட்டி அப்புறப்படுத்திக் கால்நடைப் பட் டிக்கு வேலிக் கற்களாக்கிடுவர். மண்ணை நன்றாகக் கொத்திப் புழுதியாக்கி விளைநிலமாக்குவர். விரைவில் அப்பகுதியில் பசும்பயிர்கள் காற்றில் தலை அசைத்தபடி நிற்பதைக் காண

---

* குடகு கையேடு. (Manual of Coorg.)

படகர் சிறுமியர்



படகர்

லாம். மலைவாழ் பழங்குடிகளில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள படகர், எந்தப் புதிய பயிர் முறையையும் சோதித்துப் பார்க்கத் தயங்குவதில்லை. நீலகிரி, தோட்டக்கலையியல் கழகம் அறிமுகப்படுத்தும் புதுப் பயிர்களையும் உடனே ஏற்றுப் பயிர் செய்வார்.''*

ஹார்க்னஸ்† 1832-இல் படகர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:- ''காலையில் வீட்டை விட்டுப் புறப்படும் பர்கொ(படகர்) அன்றைய தினத்திற்குரிய தெய்வத்திற்கு வழிபாட்டினைச் செய்தபின், கால்நடைகள் அடைத்திருக்கும் பட்டிக்குச் சென்று சிவனுடைய அடையாளமாக விளங்கும் ஞாயிற்றை வழிபட்டு, அவருடைய வாழ்த்தினை வேண்டிப் பின் கால்நடைகளை வெளியே திறந்து விடுவான். அவன் கால்நடைகளை மேய்ச்சலுக்காக ஊரருகே அதற்காக ஒதுக்கியுள்ள வெளியில் திரியவிட்டுத் தன் காலைக் கடன்களை முடித்தபின் பால் கறக்கும் பணியினைத் தொடங்குவான். அதற்கு முன்பும் ஞாயிற்றை வணங்கி வழிபாடு செய்யப்படும். மாலையில் வீடு திரும்பியபின் அச்சமயத்தில் ஒரே ஒளியாய் உள்ள தெய்வத்தின் காட்சிப் புலனாக விளங்கும் விளக்கினை நோக்கி, 'இந்த உலகத்தையும் பிற உலகங்களையும் படைத்தவரே! பெரியவற்றுள் எல்லாம் பெரியவரே! எங்களுடன், மலைகளிலும் இயற்கை வனங்களிலும் ஒரு சேர இருப்பவரே! தலையினில் அணிந்த கண்ணி வாடாமல் காப்பவரே! பாதங்களை முள்ளிலிருந்து காப்பவரே! நூற்றில் ஒன்றான கடவுளே! எங்கள் வாழ்வு வளமுடையதாகட்டும்'' எனக் கூறுவான்.

நிலத்தில் மாற்றுப் பயரிட வேண்டியது பற்றிப் படகர் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். தன் நிலத்தில் அவன் சம்பாக் கோதுமை, பார்லி, வெங்காயம், பூண்டு, உருளைக்கிழங்கு முளைக்கீரை, சாமை, தினை முதலியவற்றைப் பயிரிடுகின்றான்.

---

* பயனீர், அக்டோபர், 4, 1907. (Pioneer, 4th October, 1907.)

† நீலகிரி மலைவாழ் மண்ணின் மாந்தர் இனம் பற்றிய ஒரு விளக்கம். (Description of a singular Aboriginal Race inhabiting the summit of Neilgherry Hills.)

"படகர்களிடையே பெண்களின் நிலை மற்ற இனத்தவரிடையே காணப்படுவதைவிட மாறுபட்டதாக உள்ளது. ஒவ்வொரு படகனுக்கும் சில ஏக்கர் நிலம் உரியதாயிருக்கின்றது. ஆனால், அதில் உழைப்பதிலே அவன் தன் முழு நேரத்தையும் செலவிடுவதில்லை. அவன் மனைவியே வீட்டுக்கு வெளியே எல்லாப் பணிகளையும் மேற்கொள்கின்றாள். அவன் உடனடியாகக் கையில் காசு கிடைக்கும் வேலைகளில் ஈடுபடுகின்றான். எனவே, ஒரு படகனுக்கு அவன் மனைவியே மூலதனம். ஒரு நாளில் அவள் நிலத்தில் உழைக்கும் உழைப்பு ஒரு ரூபாய் மதிப்புடையதாகும். அப்போது சராசரிப் படகன் ஒரு நாளைக்குச் சம்பாதிக்கும் கூலி மூன்றணா மட்டுமே. உழைக்கச் சொந்த நிலமில்லாத படகப் பெண் மற்றவர்களுடைய நிலத்தில் வேலை செய்கிறாள். இப்படியாகத் தன் கணவனுக்காகவும், குடும்பத்திற்காகவும் கடின உழைப்பில் ஈடுபடும் அவள் தினை மாவின் களியினை உண்பதிலேயே திருப்திப்பட்டவளாகக் குடும்பத்து ஆண்களுக்கு நல்ல உணவு படைக்கின்றாள். இதுவும், படகப் பெண்கள் மேற்கொள்ள வேண்டியுள்ள கடின உழைப்பும் படகர் இனத்தவரின் உடல் வாகு மெலிந்ததாக அமைந்திருப்பதற்கு ஒரு காரணமாகலாம். படகர் இன ஆண்களும் தங்கள் நிலத்தில் உழைக்கவோ தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலில் ஈடுபடவோதான் செய்கின்றனர். ஆனால், உடனுக்குடன் கையில் கிடைக்கும் காசே அவர்கள் முதற் காதலுக்குரியது. வயலில் மறுநாள் அறுவடை வேலையிருந்தாலும்கூட இரண்டணாக் கூலிக்கு யாரேனும் கூப்பிட்டால் அவன் அங்கே ஓடிவிடுவான்" எனத் திரு நடேச சாஸ்திரி எழுதியுள்ளார். மேலும் திரு கிரிக் கூறுவதாவது:– "ஆண்கள் மலைத் தோட்டங்களில் வேலை பார்க்க ஊரைவிட்டுப் போய் விட வேண்டியிருப்பதால் அவர்கள் சொந்த நிலங்களில் உழைப்பதிலும் அன்றாட வீட்டுப் பணிகளிலும் பெண்களே ஈடுபட்டு உழைக்க வேண்டியுள்ளது. அவர்களின் சுறுசுறுப்பையும் கணவர்களுக்காக அவர்கள் செய்யும் பணியின் மதிப்பையும் அறிந்தே சிலபோது படகர்கள் ரூபாய் 150 அல்லது 200 வரை தன் மனைவிக்குப் பரிசமாகத் தருகின்றார்கள்" வயலில் வேலை இல்லாத பருவங்களில் படகர் பெண்கள் வீட்டு உப

யோகத்திற்காக விறகு சேகரிப்பதோடு வயலைப் பயிரிடுவதற் காகக் களைபிடுங்கியும் கொத்தியும் எருவிட்டும் தயார் செய்து வைக்கின்றார்கள்.

நீலகிரிக்கான அரசுக்குரிய வரித் தீர்வு தொடர்பான தனது 1885-ஆம் ஆண்டு அறிக்கையில் சர் ஆர். எஸ். பென்சன் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:- ''மலபாரிலிருந்து நீலகிரிக்கு 1860 -இல் மாற்றப்பட்ட குந்தா நாட்டில் அதுவரை வழக்கிலிருந்த தான ஒரு தனிப்பட்ட முறையினோடுகூடப் பாத்தி எனப்படும் மாற்றுப் பயிர் முறை வழக்கத்தினையும் ஒரு சேரத் திரு கிராண்ட் ஒழித்துவிட்டார். அந்த முறை 'ஏற்காடு', 'கொத் துக்காடு' என்ற பெயரில் நடைமுறையில் இருந்தது. அந்த முறைப்படி ஓர் ஏரினை வைத்திருப்பவன் ரூ. 1 இலிருந்து ரூ. 1-8-0 வரை அந்த ஏரினைப் பயன்படுத்தச் செலுத்த வேண் டும். ஒரு கொத்தினை வைத்திருப்பவன் கொத்தினைப் பயன் படுத்திக் கொள்ள 4 முதல் 8 அணாவரை வரியாகச் செலுத்த வேண்டும். பயிரிடுவோருக்கும் இம்முறையில் வழங்கப்பட்ட பட்டா என்று சொல்லப்படுவது கொத்தினைப் பயன்படுத்த விதிக்கப்பட்ட கட்டணமேயாகும். ஒரு கருவிக்குச் செலுத்த வேண்டிய தொகை இவ்வளவு என்ற வரையறை இருந்ததே ஒழிய எவ்வளவு பரப்பு நிலத்தில் பயிரிட்டுக் கொள்ளலாம் என்ற வரையறை ஓரிடத்தும் செய்யப் படவில்லை. பயிரிடு வோன் தன் கருவியினை எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். காட்டு மரங் களை வெட்டி வீழ்த்த எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்கப்பட வில்லை. எனவே, பயிரிடுவோர் தங்கள் விருப்பம் போல் மலைப் பள்ளத்தாக்குகளிலும்கூடக் காடுகளை அழித்துப் பயிரிட்ட னர். இம்முறை 1862-இல் கைவிடப்பட்டது. வருவாய்த் தீர் வின்போது, நான் ஏற்காடு, கொத்துக்காடு முறை படகர்கள் வாழ்ந்த சின்னக்கொரை என்ற ஊர்களில் சுமார் ஐம்பது குடும்பத்தினரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கண்டேன்.''

படகர்களின் ஊராட்சி அமைப்பு நடைமுறைபற்றித் திரு எ. இராச பகதூர் முதலியார் எனக்குப் பின்வருமாறு எழுதியுள்

ளார். "ஆட்சி முறையின் கட்டுக்கோப்பினை அமைத்தாளுபவ ரான மணியக்காரரே முன்பு பெரிய மனிதராக இருந்தார். இத் தலைமை பெரும்பாலும் பரம்பரை உரிமையாகச் செல்வமும் வாழ்க்கை வசதியும் படைத்தவர்களுக்கே கிடைத்து வந்தது. அவர் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் எழும் எல்லா வழக்கு களுக்கும் அவர் கூறும் தீர்ப்பே இறுதியானது. பாகப்பிரிவினை, கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடு போன்ற சாதா ரண வழக்குகளை மணியக்காரரே தீர்த்து வைத்து விடுகிறார். வழக்குகள் சிக்கலானவையாக இருக்குமாயின் அப்போது ஊரி லுள்ள மற்றவர்களைத் தனது பணியில் பங்கு பெறச் செய்து ஊர்ப் பெரியவர்களின் கூட்டுச் சிந்தனையின் துணையோடு சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறார். ஒரு வேப்ப மரத்தின் அடி யிலோ, அரச மரத்தின் அடியிலோ இதற்காக என்றே அமைக் கப்பட்டுள்ள மேடையில் அனைவரும் கூடுவர். ஊர் மணியக் காரராக இருப்பவரே எப்போதும் கூட்டத்திற்குத் தலைவராக இருக்கும் உரிமை படைத்தவர். அவரும் குழுவினரும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டம் விதிக்கவோ, அவர்களைச் சமூகத்திலிருந்து விலககி வைக்கவோ, விலக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவோ ஆணையிடும் உரிமையுடை யவர்களாவர். பெற்றோர் தங்கள் பெண்களுக்கும், பிள்ளை களுக்கும் உரிய துணைவரைத் தேட மணியக்காரர் உதவி யையே நாடுகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளில் மணியக்காரர் கருத்தைப் புறக்கணிக்கும் தெம்பு படைத்தவர்களின் திருமணம் ஏற்பாடுகளுக்கு மணியக்காரர் பலவித இடையூறுகளை உண் டாக்கி வைப்பார். மணியக்காரர் தன் தலைமையின் காரணமாக மிகவும் ஆற்றல் வாய்ந்தவராக ஊரைத் தன் விருப்பப்படி ஆட்டிவைப்பார்." முன்பு தன் ஆளுகைக்குட்பட்ட ஊருக்குச் செல்லும் போது அந்த ஊரிலுள்ள அழகிய பெண்ணையோ, கன்னியையோ தன் விருப்பம் போலத் தன்னோடு இரவில் உறவு கொள்ள அழைத்துக் கொள்ளும் உரிமை மணியக்கார ருக்கு இருந்தது. தன் அதிகாரத்தின் சின்னமாக முன்பு மணியக் காரர்கள் வெள்ளி மோதிரம் அணியும் பழக்கமுடையவரா யிருந்தனர். சில படகர்கள் இன்றும் அத்தகைய மோதிரங் களைத் தங்கள் பரம்பரையின் பெருமைச் சின்னமாகப் பாது காத்து, விழாக்களின் போது அவற்றை வழிபட்டு வருகின்றனர்.

இன்று மணியக்காரர் என்ற சொல், ஊர் வருவாய் அதிகாரிக்கும், முன்சீப்புக்கும் உரிய சொல்லாக வழங்கி வருகின்றது.

புறமணக்கட்டுப்பாடு உடைய ஒவ்வொரு குலமும் கவுடா என அழைக்கப்படும் ஒரு தலைவனைப் பெற்றுள்ளது என நான் அறிய வருகின்றேன், அத்தலைவனுக்குப் பர்பட்டிக்காரன் என்ற உதவியாளன் உளன். அக்குலத்தாரிடையே தோன்றும் வழக்குகள், மணமுறிவுகள் முதலியவற்றை அவன் தீர்த்து வைக்கிறான். தண்டம் விதிக்கப்படும் பணம் இனத்தவர்களுக்கு விருந்து வைக்கவோ, கடவுள் வழிபாட்டிற்கோ பயன்படுத்தப்படுகிறது. இரண்டு குழுவினரிடையே வழக்கு மூளுமாயின் ஒரு குழுவினர் மற்றொரு குழுவினரை ஊர் அவையோர் முன்னிலையில் கோயிலில் ஆணை இடும்படி வேண்டுவர். ஆணை இட்டபின் ஒருவர் தரும் வாக்குமூலம் உண்மை என ஏற்றுக் கொள்ளப்பட்டுக் குழுவினர் அதனையே முடிவாக ஏற்று நடக்கின்றனர். ஹத்தேசுவாமி, தேவ்வீ, பைரக்கன்னி ஆகிய தெய்வங்களின் திருவிழாவிற்கும் கொணக்கரையில் எருமை பலியிடு விழாவிற்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது பர்பட்டிக்காரன் கடமையாகும். குலத்திலிருந்து விலக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கான சடங்குகளில் பட்டபர்த்திக்காரன் முன்னிற்பான். சிறை சென்று திரும்புவர்களும் இது போன்ற சடங்குகளுக்கு உட்படுவர். குற்றத்துக்கு உட்பட்டவன் நாக்கினைச் சூடான சந்தனக் கட்டையால் சுட்டபின் அவனுக்குப் புதுப் பூணூல் அணிவிப்பர். பின் அவனைக் கோயிலுக்கு அழைத்து செல்வர். அங்குக் கூடியிருக்கும் படகர்களிடையே அவனை நிறுத்தி ஒரு பிரம்பினால் அவன் தலையைத் தொடுவர். பிறகு அவன் பர்பட்டிக்காரனைக் கீழே விழுந்து வணங்குவான். பர்பட்டிக்காரன் அவன் நெற்றியில் விபூதி பூசுவான். கன்னிக்கட்டு எனப்படும் தாய்மைப்பேறு அடைந்துள்ள பெண்களுக்கு நடத்தப்படும் சடங்கின்போதும் உடனிருப்பது பர்பட்டிக்காரன் கடமைகளில் ஒன்றாகும்.

கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு நீலகிரியின் மற்றப் பழங்குடிகளிலிருந்து ஒரு படகனை அவன் அணிந்திருக்கும் தலைப்பாகையை வைத்து எளிதில் வேறுபடுத்தி அடையாளம் கண்டு

கொள்ளலாம். இன்று பழங்குடிகள் அடைந்துள்ள முன்னேற்றத்தால் நிலைமை மாறிவிட்டது. தோடர் மட்டுமன்றிச் சில ஆண்டுகளுக்கு முன்புவரை காடுகளில் பன்றிகளைப் போலவும், கரடிகளைப் போலவும் கிழங்குகளையும், தேனையும் காட்டு வளங்களையுமே உண்டு காடுகளிலேயே அடைபட்டுக் கிடந்த இருளர்களும், குறும்பர்களுங்கூட இப்பொழுது ஞாயிற்றுக் கிழமைகளில் உருமாலையோடும், ஆங்கிலேயருக்கான மேற்சட்டையோடும்கோத்தகிரிக்கடைத்தெருக்களில் உலவுகின்றனர். நாகரிகத்தில் முன்னேறாத பழங்குடியினர் தலைப்பாகை அணியத் தொடங்கியவுடன் கல்லூரி மாணவர்கள் அலங்காரமான இந்தத் தலைக்கட்டைத் துவைக்கப்பட வேண்டாத சாதாரணத் தொப்பியை அணிந்தவர்களாகத் துறந்து விட்டனர். நல்ல சிவப்பு அல்லது ஆரஞ்சு வண்ணத் தலைக் குல்லாயே இப்போது படக ஆடவரிடையேயும், இளைஞரிடையேயும் நாகரிகமாகக் கருதப்படுகிறது. படகர் தங்கள் உடலை நீண்ட துணியால் போர்த்துக் கொள்வர். இதற்குச் சிவப்பு, கறுப்பு கோடிட்ட துணிகளும் பயன்படுத்தப்படுகின்றன. மண்வெட்டும் போது சிலமுறை வெட்டியபின், வேலையினை நிறுத்தித் தொளதொளப்பாக மேலே அணிந்திருக்கும் மேலாடையை மீண்டும் எடுத்துத் தோள்மீது போட்டுக் கொள்ள வேண்டியதாக இருக்கும் படியாக இறுக்கமற்ற நிலையிலேயே மேலாடையைப் போர்த்திக் கொள்வர்.'' ஆண்கள் கோத்தர்களோ, பொற்கொல்லர்களோ தயாரித்துத்தரும்தனி வடிவுடைய காதணியையும், வெள்ளி அரணாக் கயிற்றையும், கையில் வெள்ளி வளையலையும் வெள்ளி, செம்பு அல்லது பித்தளையாலான மோதிரங்களையும் மட்டுமே அணிந்து கொள்வர். பெண்கள் மேலாடையாக ஒரு வெள்ளைத் துணியை அணிவர். கீழாடையாக முழங்கால் வரை தொங்கும்படியாக ஒரு வெள்ளைத் துணியை மார்பில் உயர இறுக்கிக் கட்டிக் கொள்வர்.

பெண்களின் அணிகள் பற்றியும், பச்சை குத்திக் கொள்ளும் இடங்கள், உருவங்கள் பற்றியும் நேரில் கண்டறிந்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

1. நெற்றியில் சிறு வரைகோடுகளும், வட்டங்களும், பிறை வடிவங்களும் பச்சைக் குத்தப்பட்டுள்ளன. மோவாயில் ஒரு

பெரும்புள்ளி; இரு வரிசையாகப் புள்ளிகள் இரு கரங்களி லிருந்தும் புயங்கள் வரை மேலே செல்கின்றன. அடையாளங் களும் இரு வரிசையில் அமைந்த புள்ளிகளும் முன்னங்கைகளில்; இட மூக்கில் தங்க அணி; கழுத்தணியாகப் பாசிகள் கோக்கப் பட்ட வெள்ளிச் சங்கிலி நான்கணா நாணயப் பதக்கத்து டன்; வல முழங்கைக்கு மேலே வெள்ளிக் கடகம்; இட முழங்கைக்கு மேலே நான்கு செம்புக் கடகங்கள்; நான்கு வெள்ளி வளையல்களும் ஏழு பலவகைப் பொருள்கள் கலந்து செய்யப்பட்ட வளையல்களும் இட முன் கையில்; வலக்கை மோதிர விரலில் இரண்டு வெள்ளி மோதிரங்கள்; இடக் கை மோதிர விரலில் இரண்டு உருக்கு மோதிரங்கள்.

2. நெற்றியில் பச்சைக் குத்தப்பட்டுள்ளது. வலப் புயத்தில் நான்கு வரிசையில் அமைந்த புள்ளிகள். வல முன் கையில் நட்சத்திர உருவம்.

3. முன்னவளைப் போலவே நெற்றியிலும் புயங்களிலும் பச்சைக் குத்தப்பட்டுள்ளது; மோவாயில் ஒரு பெரிய புள்ளி; வல முன் கையில் விரிவான பல அடையாளங்கள்; பின் கைகளில் கோடுகள் அமைந்த நட்சத்திரம் அல்லது சூரியன்.

4. முன்னவளைப் போலவே நெற்றியிலும் கைகளிலும் பச்சைக் குத்தப்பட்டுள்ளாள். இட மணிக்கட்டின் முன்னும் பின்னும் மூன்று வரிசையாக அமைந்த புள்ளிகள்; புள்ளிகளால் சூழப்பட்ட வட்டத்தினிடையே மார்பில் இரண்டு வரிசையாகப் புள்ளிகள்.

தொரையர் பிரிவைச் சேர்ந்த பெண்கள் வளையல்கள் மட்டும் அணிந்து கொள்ள உரிமையுடையவர்கள்.

உதயர் பிரிவைச் சேர்ந்த பெண்களின் நெற்றியில் பிறை வடிவும், புள்ளியும் பச்சைக் குத்தப்பட்டிருக்கும். அவர்கள் கண் களின் வெளி ஓரங்களிலிருந்து வெளியே நீண்டு செல்லும் கோடு களையும் குத்திக் கொள்வர். பிற பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் தங்கள் நெற்றியில் இரு செங்குத்துக் கோடுகளின் இருபுறமும் வட்டங்கள் அமையும்படி பச்சைக் குத்தி அதன் கீழே நேரான

அல்லது பிறை வடிவமான கோட்டினையும் குத்திக் கொள்வர். பச்சைக்குத்தும் கலவையில் மோதிரத்தைத் தோய்த்து அதை வட்டமாகப் பச்சைக் குத்த வேண்டிய இடத்தில் முதலில் அழுத்திப் பின்னர் முள்ளால் குத்துவர். அல்லது முதலில் மோதிரத்தின் உதவியால் கறுப்பு அடையாளத்தினை வரைந்து கொண்டு, பின்னர் அதன்மேல் பச்சைக்குத்துவர். படகர் அல்லது குறவர் இனப் பெண்களே பச்சைக் குத்துவார்கள். படகர் இனப் பெண்கள் ஊசியாகச் சிறுகளா முள்ளினையும், பச்சைக் குத்தும் கலவையாக நனகு பொடி செய்யப்பட்ட கரித் தூளையோ அல்லது விளக்குக் கரியையோ அரிசிக் கஞ்சியில் கலந்து பயன் படுத்துவர். ஒரு பெண் எட்டு அல்லது ஒன்பது வயதுடைய வளாக இருக்கும்போது நெற்றியில் பச்சைக் குத்தப்படும். திரு நடேச சாஸ்திரி கூறியிருப்பதுபோல் இதுபோல ஒரு பெண்ணின் நெற்றியில் பச்சைக் குத்துவது அவள் மணப்பருவமடைந்து விட்டாள் என்பதனை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்காக அன்று.

படகர்கள் மற்ற மலைவாழ் பழங்குடிகளைவிட நல்ல உடல் நிறம் வாய்க்கப் பெற்றவர்கள். பெண்களின் உடல் நிறம் மேலும் கருமை குறைந்து வெளிறிக் காணப்படும். படகர் இனப் பெண் களைப் பற்றிய இந்த விவரம் நான் ஒரு சிலரை விதிவிலக்காக நெருங்கிப் பார்த்ததைத் தவிர, மற்றவர்களைச் சாலைகளில் செல்லும் போது பார்த்து அறிந்து கொண்டதுதான்.

இளைஞர்களாக இருக்கும் சமயம் கொள்ளிக்கட்டையால் தோளிலும் முன்கையிலும் சூடுபோடப்பட்ட தழும்புகளோடு படகர் ஆண்கள் காட்சியளிப்பர். இவ்வாறு சூடுபோடுவது நல்ல உடல்வலிமை தருவதோடு பால் கறக்கும்போதும், தயிர் கடையும் போதும் உடல்வலி தோன்றாதபடி காப்பதாகவும் கருதுகிறார்கள். இதே போன்று தோடர்களும் கொள்ளிக் கட்டையால் தோளில் சூடிட்டுத் தழும்பு உண்டாக்கிக் கொள் கின்றனர். அவர்களும், இவ்வாறு சூடுபோடுவது சுலபமாக எருமைகளைப் பால் கறக்க உதவுவதாக நம்புகிறார்கள்.

படகர்கள் பல செல்லப் பெயர்களை வழக்கில் உடையவர் களாக உள்ளனர். அவற்றுள் சில வருமாறு:-

இரவில் படுக்கையில் இருந்தபடி உண்பவன்	புளுகன்
குறட்டையன்	பூனைக் கண்ணன்
மூடன்	காய்கறிப் பிரியன்
வழுக்கைத் தலையன்	வாத நோயன்
செங்கண்ணன்	எரிந்து விழுபவன்
எலும்பன், நோஞ்சான்	இடக்கையன்
பெருந்தலையன்	எருமை மேய்ப்பவன்
கோணற்காலன்	கொள்ளுவாயன்
சுடுகாட்டிலிருந்து வந்தவன்	தேன் குடிப்பவன்
பழுத்தவன்	கறுப்பன்
பெருந்தொடையன்	சோம்பேறி
குருடன்	பல்லன்
நொண்டி	உருளைக்கிழங்கு தின்பவன
பெருங்கெண்டைக்காலன்	பெருந்தீனி
மூலநோய்	வயிறன்
சொறிகாலன்	கிலிபிடிச்சான்
நடைதடுமாறி	ரோமத்தான்
நெட்டையன்	மெலிஞ்சான் (அரை வேக்காடு போல)
திருட்டு முழியன்	திடகாத்திரன்
கொப்புளான்	(போர்ட்லாண்ட் சிமெண்ட் போல)

படகர்களிடையே கொங்கா என்ற சொல் திட்டப்பயன் படுத்தப்படுகிறது. நான் ஆய்வு நடத்தியபோது ஹோல்ம்கிரெனுடைய ஆட்டு ரோமத்தை இணைப்பதில் தவறு செய்பவர்களை, வேடிக்கை பார்ப்பவர்கள் 'கொங்கா' எனச் சொல்லிக் கேலி செய்வார்கள்.

இரண்டு படகர்கள் ஒருவரை ஒருவர் எதிர்ப்படும்போது வயதில் மூத்தவன் இளையவன் தலையைத் தனது வலக் கையால் தொடுவான். இதுபோன்ற மரியாதை செலுத்துதல் தலைகாட்டல் என்று அழைக்கப்படும். படகரில் பிற பிரிவைச் சேர்ந்தவர்கள் உதயர்களை எதிர்ப்படும் போது அவர்கள் மேன்மையை ஒப்பும் அடையாளமாகத் தங்கள் தலையைக் காட்டுவர். ஒரே பிரிவைச் சேர்ந்த படகர்கள் ஒருவரை ஒருவர்

காணும்போது "வா—அண்ணா, அப்பா, தம்பா, அம்மா, அக்கா" எனக் கூறுவர். எதிர்வருபவர் வேறு குலப் பிரிவைச் சேர்ந்த வராயின் "வா—மாமா, மாமி, மச்சான்" போன்று முகமன் கூறுவர்.

"ஒரு தோடன் தனக்கு அறிமுகமான படகர் இன மணியக் காரரை, அல்லது தன்னை விட மூத்த படகனைக் காணும்போது இருவரும் மரியாதை தெரிவித்துக் கொள்வர். தோடன் படகன் முன் தலையினைச் சற்றே தாழ்த்தி 'மாத்டின் வந்தீங்களா' எனக் கூறுவான். அதற்குப் படகன் 'வாழ்த்து வாழ்த்து!' எனக் கூறித் தன் கையினைத் தோடன் தலைமேல் வைப்பான். இத்தகைய வாழ்த்து முறை, தோடர்களுக்கும் படகர்களின் முதல்வர்களுக்குமிடையே மட்டுமே நிகழும். ஒவ்வொரு படகர் குல முதல்வனும் இதுபோல மரியாதை பெற உரியவன் எனத் தெரிகிறது. மணியக்காரரைத் தவிர வேறு படகர்கள் குல முதியவர்களை எதிர்ப்படின் அவர்கள் தனக்கு முன்பே அறிமுக மானவர்களாக இருந்தாலன்றி ஒரு தோடன் மரியாதை செலுத்தும் பழக்கமில்லை. தொரையர் பிரிவினரைத் தவிர படகர்களின் அனைத்துப் பிரிவினரும் இத்தகைய மரியாதை பெற உரியர். இப்பழக்கம் தோடர்கள் படகர்களைத் தங்களினும் மேம்பட்டவர்கள் எனக் கருதுகின்றனரெனக் கொள்ள இடம் தருகின்றதெனினும் இதில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது எனத் தெரியவில்லை. தோடர்களே, தாங்கள் படகர்களுக்கு இதுபோல மரியாதை செலுத்தக் காரணம் படகர்கள் தங்களுக்கு ஆதரவு தருவதால்தான், எனக் கூறுகின்றனர். இது, தோடர்கள் தங்களோடு நெருங்கிய உறவுடைய மற்றுமொரு இனத்தவர்களுக்குச் செலுத்தும் மரியாதையின் அடையாளம் என்றே கொள்ள வேண்டியுள்ளது. தோடரினத்தைச் சேர்ந்த முதியவர்களுக்குப் படகர்கள் இது போல மரியாதைக்குரிய அடையாளங்களைக் காட்டுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது" என டாக்டர் ரிவர்ஸ் எழுதியுள்ளார்.*

ஒவ்வொரு படகர் குடும்பத்திற்கும் பயிர்த்தொழிலுக்கு

---

* தோடர்கள். 1906, (The Todas, 1906.)

வேண்டிய கருவிகள், பானைகள், கொத்துகள் முதலியவற்றை வழங்கும் முட்டுக் கோத்தன் இருப்பான். இவற்றிற்கு ஈடாக கோத்தர் படகரிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் தானியங்கள், கடுகு, உருளைக் கிழங்கு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வர். கோத்தர்களிடமிருந்து பெறப்படும் பானைகள் உடனே பயன் படுத்தப்படுவதில்லை. காடுகளிலோ, புதர்களிலோ வீட்டுக்கு வெளியே மூன்று நாள்கள் அவற்றை வைத்திருப்பர். பின்னர் அவை வீட்டுக்கு வெளிப்பகுதியில் மூன்று நாள்கள் தூடு (*Meliosma pungens*) மரப்பட்டையும், பாசம்பே புல்லும் (*Andropogon Schoenanthus*) உள்ளே போட்டு வைத்திருக்கப்படும். இவ்வாறு தூய்மை செய்தபின் மூன்று நாள்கள் அவற்றை வெந் நீர்ப்பானைகளாகப் பயன்படுத்தியபின் வேறு உபயோகங் களுக்குப் பயன்படுத்துவர். படகர்கள் ஆண்டுதோறும் தோடர் களுக்குத் தானியம் பரிசாகத் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு தோட 'மாண்டு' களுக்கும் 'கூடு' என வழங்கப்படும் இப்பரிசை வழங்கும் படகர் குடும்பங்கள் உள்ளன.

முனைவர் ரிவர்ஸ் படகர் தோடர் ஆகியோரிடையே உறவு கள் பற்றி எழுதுவதாவது:- "தோடர்களின் புனிதம் போற்றப் படும் பால் பண்ணையில் பால் கறக்கும் பலோல் என்பவனுக்கு உரிய உணவுக் கட்டுப்பாடுகள் பல. அவன் உணவாகக் கொள் ளும் கூலம்படகர்கள் கொடுத்ததாகவே இருக்க வேண்டும். முன்பு இருந்ததைவிடத் தற்போது அரிசி மிகுதியும் உணவாகக் கொள்ளப்படுகின்றது. இதனைப் படகர்கள் விளைவிப்ப தில்லை. எனினும் பலோல் உண்ணும் சோற்றுக்கான அரிசி படகர்களால் வாங்கிக் கொடுக்கப்பட்டதாக இருத்தல் வேண் டும். பலோல் கோயமுத்தூரில் தயாரிக்கப்படும் கறுத்த சாம் பல் நிற ஆடைகளை அணிகிறான். 'திக்கெல்மாவ்' என வழங்கப்படும் இந்த ஆடையையும் படகனே பலோலுக்குக் கொண்டு வந்து தருகிறான். பால்கூடத்தில் பயன்படுத்தப் படும் மண்பாண்டங்கள் மற்றவற்றைப் போலக் கோத்தர்களிட மிருந்து பெறப்படுவதில்லை. இவை இந்துக்களால் வனையப் பட்டுப் படகர்களால் வாங்கி அளிக்கப்படுகின்றன."

படகர்கள் எப்பொழுதும் குறும்பர்கள் பற்றிய அச்சத்

தோடேயே வாழ்கின்றனர். படகர்களின் நாட்டுப் புறக் கதை களில் குறும்பர்களைப் பற்றிய செய்திகள் அடிக்கடி இடம் பெறக் காணலாம். குறும்பர்கள் மலைப் பகுதிகளுக்குரிய மாய வித்தைக்காரர்கள். இவர்கள் பெண்களைக் கொடுமைக் குள்ளாக்கி அவர்களுடைய ஈரல்களை அவர்களிடமிருந்து அப்புறப்படுத்துவர். அதனால் அப்பெண்களுக்குச் சாவுண்டாக் கும் இவர்கள் தங்கள் மாய வித்தையால் ஈரலைக் கிழித்தெடுத்த காயமோ, தழும்போ வெளியே புலப்படாமல் மறைத்துவிடும் ஆற்றலுடையவர்களென நம்பப்படுகிறது. கதவுகளின் தாழ்ப் பாளை மந்திரத்தால் நீக்கி, இரவில் வீடுகளுக்குள் நுழைந்து கொடிய செயல்களைச் செய்யும் வல்லமை படைத்தவர்கள் இவர்கள் எனவும் நம்பப்படுகிறது. தங்கள் குடும்பத்தில் ஒருவ ருக்குப் பேய் பிடித்திருப்பதாக நினைக்கும் தோடர்களும் படகர் களும் குறும்பரின் உதவியை நாடுவர். தங்கள் குழந்தைகளுக்குக் கண்பட்டிருப்பதாகக் கருதுபவர்களும் அதனைப் போக்கக் குறும்பரையே அழைப்பர். குறும்பர்கள் பல மந்திரங்களைத் திரும்பத் திரும்பக் கூறி இத்தீமைகளைப் போக்கத் தங்களால் இயன்றவரை முயற்சி செய்வர். இந்த முயற்சியில் அவனுக்குத் தோல்வி நேரிட்டுத் தோடனுடைய அல்லது படகனுடைய மனத்தில் பேயை ஓட்டுவதற்குப் பதிலாக அதனைக் குறும்புகள் செய்யும்படியாகக் குறும்பன் ஏவுகிறான் என்ற சந்தேகம் தோன்றிவிடுமானால் அந்தக் குறும்பனுக்குக் கெட்ட காலம் வந்து விட்டதாகவே கொள்ள வேண்டும். அந்தக் குறும்பனுக்கு எதிராக ஊரார் அல்லது இனத்தவர் அனைவரின் கோபமும் கிளர்ந்தெழும். இரவில் அவன் குடிசையைச் சூழ்ந்து கொள் ளும் அவர்கள் கண்ணோட்டமின்றி அவன் குடும்பத்தை முழுதுமாகக் கொன்று குவிப்பதோடு அவன் குடிசையினையும் தீயிட்டுக் கொளுத்துவர். இதனை மிகவும் கவனத்தோடு யாரு டைய தீச்செயலென்று கண்டு கொள்ள முடியாத வகையில் செய்து முடிப்பர். குறும்பர்களின் குடியிருப்பு ஒதுக்கமாகத் தனித்திருப்பதால் இச்செயலைச் செய்தவர்கள் யாரெனக் கண்டு பிடிக்கச் சாட்சியங்கள் கிடைக்க வாய்ப்பில்லாது போய் விடு கின்றது. 1835-இல் ஐம்பத்தெட்டுக் குறும்பர்களுக்கு மேல் இது போலக் கொலை செய்யப்பட்டுள்ளனர். 1875-இலும்

1882-இலும் இதுபோன்ற கொலைகள் சிறியஅளவில் நடைபெற்றுள்ளன. 1891-இல் ஒரு படகக் குழந்தைக்கு மருத்துவம் பார்த்த குறும்பன் அக் குழந்தையின் நோயினைத் தீர்க்கத் தவறியதால் அவனும் அவன் குடிசையிலிருந்த அவன் குடும்பத்தவரும் கொலை செய்யப்பட்டதோடு அவன் குடிசையும் தீக்கிரையாக்கப்பட்டது. இந்தக் குற்றத்தைச் சில கோத்தர்கள் படகர்களோடு சேர்ந்து செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் சாட்சியங்கள் கூறுவதை மாவட்ட நீதிபதி உண்மையல்ல என்று கருதி வழக்குத் தொடரப்பட்ட அனைவரையும் விடுதலை செய்துவிட்டார். ஒவ்வொரு படகர் குடும்பமும் குறும்பர்களுக்கு நான்கணா வரியாகச் செலுத்துகிறது. மேலும் ஒரு குறும்பன் படகருடைய ஊருக்கு வருவானாகில் அவனை அங்கிருந்து விரைவில் அனுப்பி வைப்பதற்காக ஊக்கத் தொகையாக ஊரார் அனைவரிடமும் பணம் வசூலிக்கின்றனர். படகர் குடும்பத்தில் நிகழும் ஒவ்வொரு சாவுக்கும், கன்னிக் கட்டு எனப்படும் வளைகாப்பை ஒத்த நிகழ்ச்சிக்கும் குறும்பன் ஒரு தொகையைக் கட்டணமாகப் பெறுகிறான்.

"தோடர்கள் இனச் சூன்யக்காரர்களிடம் மற்ற தோடர்கள் மட்டுமன்றிப் படகர்களும் அச்சமுடையவர்களாகவேஉள்ளனர். தோடர் சூன்யக்காரர்களிடம் கொண்ட இந்த அச்சம் காரணமாகவே படகர்கள் தொடர்ந்து தோடர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கும் கூலத்தைப் பரிசாக அளித்து வருகின்றனர். படகர்கள் தோட சூன்யக்காரர்களிடம் செல்வதுண்டு. தோடர்களின் மாயவித்தையில் படகர்கள் கொண்டுள்ள நம்பிக்கையே தோடர்களுக்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. சில சமயங்களில் படகர்களுடைய இந்த நம்பிக்கையால் தோடர்கள் கொலைக்கு ஆளாகியுமுள்ளனர்" என முனைவர் ரிவர்ஸ் குறித்துள்ளார்.

தோடர்களிடையே எருமைகளைக் கறப்பதற்கும் பால் கூடம் தொடர்பான பணிகளைப் பார்ப்பதற்கும் தனியே சிலர் அமர்த்தப்படுகின்றனர். ஆனால், படகர்களுள் இச்செயல்களுக்கான சடங்கினை முடித்துக் கொண்ட எந்த ஆணும் அவன் தீட்டுப் படாதவனாக இருப்பின் இச் செயல்களை மேற்கொள்ளலாம். ஏழு அல்லது ஒன்பது வயதில் ஒவ்வொரு

படகச் சிறுவனுக்கும் ஒரு நல்ல நாளில், அல்லது புத்தாண்டு பிறக்கும் அன்று பசுவினைப் பால் கறக்கும் சடங்கினைச் செய்து வைப்பர். இந்தச் சடங்கினைத் திரு நடேச சாஸ்திரி பின்வருமாறு விவரித்துள்ளார்:- "இந்தச்சடங்குக்காகக் குறிப்பிடப்பட்ட நாளில் அச்சடங்கினை மேற்கொள்ளும் சிறுவன் குளித்து நல்லாடைகளை அணிவான். அவன் கறப்பதற்காக ஓர் எருமையும், அதன் கன்றும் அவன் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருக்கும். அவனுடைய பெற்றோரும், மூத்த உறவினர்களும், இச்சடங்குக்காக அழைக்கப்பட்டவர்களும் அல்லது இதில் பங்கு பெற வேண்டியவர்களும் அச் சிறுவனை எருமை நிற்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வர். அச் சிறுவனின் தந்தை அல்லது பங்காளிகளுள் ஒருவர் அச் சிறுவன் கையில் ஹானே எனப்படும் மூங்கில் பாத்திரத்தைத் தருவர். அது அப்போது தான் கறந்த பாலால் கிட்டத்தட்ட நிரம்பியிருக்கும். அச்சிறுவன் அதனை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டபின் எருமையருகே செல்வான். மூத்த உறவினர்கள் அவனுக்குப் பால் கறக்கும் முறையைக் கூற அச்சிறுவன் எருமை அருகே அமர்ந்து ஹானேயில் கொஞ்சம் பால் கறப்பான். பால் கறக்கும் இந்தத் தொடக்க விழா நடைபெறும் முதல் நாளில் அவன ஏதேனும் தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்படாதபடி தடுக்கவே ஹானே முதலிலேயே முக்கால் பங்குக்கு மேல் நிரப்பப்படுகிறது. பால் நிறைந்த கலத்தை அச் சிறுவன் பின் வீட்டினுள் கொண்டு சென்று வீட்டிலுள்ள எல்லோருடைய உண்கலத்திலும் அந்தப் புனிதப் பாலினைக் கொஞ்சம் ஊற்றுவான். இது அக் குடும்பத்திற்குத் தேவையான பாலை அன்றிலிருந்து வழங்கும் பொறுப்பினை அவன் மேற்கொண்டுவிட்டதனைக் குறிக்கும் அடையாளமாகும். அவன் தன் பெற்றோர், உறவினர் முகங்களில் கொஞ்சம் பாலினைத் தெளிப்பான். அவர்கள் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு தொடர்ந்து அவன் அன்று போல் பால் கறந்து வீட்டுக்கு நிறைந்த வளம் சேர்ப்பானாக என வாழ்த்துவர். அதன்பின் அச் சிறுவன் 'ஹாகூடு' என வழங்கும் பால் கூடத்தில் நுழைந்து தன் ஹானேயில் இருக்கும் பாலை அங்கு வைப்பான். அப்போதிலிருந்து

தன் வாழ்நாள் முழுதும் அவன் அந்தக் கூடத்தில் நுழையும் உரிமை பெறுகிறான். ஆகையால் இச்சடங்கு குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகக் கருதப்படுகிறது."

முதல் கன்று போடும் பசுவும், எருமையும் சிறப்பான முறையில் படகர்களால் பராமரிக்கப்படுகின்றன. முதல் மூன்று அல்லது ஐந்து நாள்களுக்கு அதில் பால் கறக்க மாட்டார்கள். பிறகு அதில் பால் கறக்க ஒரு சிறுவன் தேர்ந்தெடுக்கப்படுவான். அவன் பாயில் படுத்துறங்கவோ, உருமாலை அணிந்திருக்கவோ கூடாது. மேலாடையினை இடையில் இறுக்கமாகக் கட்டாமல் இணக்கமாகப் போர்த்திக் கொள்ள வேண்டும். அவன் ஊன் உணவு கொள்ளவும் கூடாது. தீட்டு ஏற்படுத்துபவர்களான கோத்தர்கள், இருளர்கள் ஆகியரோடு பேசுவதும் கூடாது வீட்டுக்கு விலக்கான பெண்களோடு பேசுவதும் தவிர்க்கப் பட வேண்டும். முதல் கன்று ஈன்ற பசுவையோ, எருமை யையோ பால் கறக்கும் அன்று அச்சிறுவன் குளித்தபின் தூடு இலைகளை அரைத்துப் பூசி அதன் பட்டைகளையும் போட்டு நெருப்பின் மேல் காட்டித் தூய்மை செய்யப் பட்ட ஹானேயில் பால் கறப்பான். அப்பாலினை ஓர் அரு விக்கு எடுத்துச் சென்று முசுட்டை (மீனிகெ) இலைகளாலான மூன்று கோப்பைகளில் கொஞ்சம் பாலை விட்டு அவைகளைத் தண்ணீரில் விடுவர். ஹானேயில் மீதியிருக்கும் பாலும் அருவி யில் கொட்டப்படும். அருகில் மாதேசுவரர் கோயில் இருக்கும் இடங்களில் பாலினைக் கோயிலுக்குக் கொண்டு சென்று பூசாரி யிடம் கொடுத்து விடுவர். பாலின் ஒரு பகுதியை வாழைப்பழத் தோடு சேர்த்துப் பிசைந்து அதனை ஓர் உதயரிடம் கொடுப்பர். அவன் அதனைக் கொண்டு சென்று அருவியில் விடுவான். அத்த கைய விலங்கினைக் கறக்கும் சிறுவன் குடும்பத்தில் உள்ளவர் களால் அக்காலத்தில் மதிப்போடு நடத்தப்படுவதோடு அவனுக்கு முதலில் உணவும் அளிக்கப்படும். இதனை அவன் முசுட்டை இலைகளை வைத்துச் செய்த கலத்தில் அல்லது வாழை யிலையில்தான் உண்ணவேண்டும். வீட்டினுள் உள்ள பால் கூடத்தினோடு கூடப் படகர்கள் ஹெத்தீஸ்வசாமிக்கான கோயி லின் அருகே தனித்த இடங்களில் சில வீடுகளை அமைத்திருப் பர். இவற்றுள் பைரகன்னி (அல்லது பேர்கன்னி) என்ற ஊரின்

அருகே உள்ள கூடம் குறிப்பிடத்தக்கது. இங்கிருக்கும் பால்கூடப் பூசாரி தோடர் பலோல் போலத் திருமணம் செய்து கொள்ளாதவனாக இருப்பான். 1905-இல் அங்கிருந்த இளைஞனை எனது பிராமண உதவியாளர் ஒளிப்படம் எடுக்க முற்பட்டார். ஆனால் அவர் ஊருக்கு வெளியேயே ஊர்த்தலைவனால் பதினைந்து ஊராரின் அனுமதியின்றி அத்தகைய ஒளிப்படம் எடுக்கக் கூடாது எனத் தடுக்கப்பட்டுவிட்டார். பூசாரி ஊருக்குள் தன் விருப்பம் போல் சுற்றவோ, வயது வந்த பெண்களோடு பேசவோ அனுமதிக்கப்படுவதில்லை. கோயில் எல்லையில் அவன் தானே தன் உணவைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். தன் உடம்பின் மேல் ஆடையை இளக்கமாகப் போர்த்துக் கொள்ள வேண்டும். ஆண்டுக் கொருமுறை கோயில் திருவிழாவின்போது அவனுக்கு வழங்கப்படும் புத்தாடைகளையும் உருமாலையையுமே அவன் அணிந்து கொள்ள வேண்டும். மரக்கறி உணவே அவனுக்கு உரியது. பூசாரிப் பதவியை விட்டுவிட்டுத் திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்ற விருப்பம் அவன் கனவுகளின் வழியே அவனுக்குத் தெரியவரும்; அல்லது உணர்வோரால் அது அவனுக்கு உணர்த்தப்படும். கோயிற்பணியை விட்டுச் செல்லுமுன் அவன் தனக்கு அடுத்துப் பணியேற்பவனுக்குக் கடமைகளைச்செய்யும் முறைகளைப் பழக்கப்படுத்தி விடுதல் வேண்டும். ஓய்வு கொள்ளும் அவன் பால் முதலான பொருட்களை விற்று ஈட்டிய தொகையினையும் கோயிலில் படைக்கப்பட்ட பொருள்களிலிருந்து கிடைத்த வருவாயையும் தன்னோடு கொண்டு செல்லலாம். பைரெகன்னி ஊர்ப் புனிதத் தன்மை உடையதாகக் கருதப்படுகிறது. அங்கே வீட்டுக்கு விலக்காகும் பெண்களுக்கான தனிக் குடிலும் உண்டு.

"பைரெகன்னியில் உள்ள கோவிலுக்கு எருமைகள் வேண்டிவிடப்படுகின்றன. அவை பூசாரிக்குரியனவாகிவிடும். அவற்றின் பாலைக்கறந்து அவன் உணவாகக் கொள்கிறான். ஊரார் அனைவரும் அவனுக்கு அரிசி தருகின்றனர். ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் பிற்பகல் மூன்று மணியளவில் அவன் உணவு கொள்வான். அவன் உணவினை அவனே சமைத்துக் கொள்வான். சமைத்த பானையைக் குப்புறக் கவிழ்க்கும்போது ஒரே தட்டையில் பானையில் இருக்கும் சோறு முழுவதையும் கொட்டி

விட வேண்டும். அவ்வாறு கொட்டும்போது முதல் முயற்சியிலேயே சோறு வெளியே கொட்டவில்லையானால் அவன் அதனை மீண்டும் தோண்டி எடுக்கக் கூடாது. (அன்றைய பொழுதை அவன் பட்டினியாகக் கழிக்க வேண்டும்.) அவன் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் அவனிடத்திற்கு வேறொரு சிறுவன் அமர்த்தப்படுவான். எருமைகள் அவனுக்கு அடுத்துப் பணியேற்பவனிடம் ஒப்படைக்கப்படும்.'' என்று வைட்ஹெட் பாதிரியார் குறித்துள்ளார். பைரெகன்னியைப் பற்றி வழங்கும் பின்வரும் பழைய வரலாற்றுக் கதையினையும் வைட்ஹெட் பாதிரியார் பதிந்துள்ளார். "நீலகிரியின் மேகநாடு பகுதியில் நுந்தூல என்ற ஊர் உள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன் அங்கே ஒருவனுக்கு மகளொருத்தி இருந்தாள். பரங்க நாடுபிரிவில் உள்ள ஒருவனுக்கு அவளை மணமுடித்துக்கொடுக்க அவன் முடிவு செய்தான். ஆனால் அவளுக்கு அவனை மணந்து கொள்ள விருப்பமில்லை. அவளுடைய தந்தை பிடிவாதமாக இருக்கவே அவள் தொடர்ந்து தன் மறுப்பைத் தெரிவித்து வந்தாள். இறுதியில் அவள் சாக விரும்பி ஒரு குளக்கரைக்கு வந்து அங்கிருந்த மரத்தினடியில் அமர்ந்தாள். பிறகு குளித்து முடித்துக் குளத்தில் விழுந்து உயிர் துறந்தாள். பைரெகன்னியைச் சேர்ந்த ஒருவன் தன் கனவில் அவளைக் கண்டான். அவள் அவனிடம் தான் மனிதப் பிறவியல்லவென்றும் பார்வதியின் அவதாரமான தெய்வம் எனவும் கூறினாள். நுந்தூல ஊர்மக்கள் அக்குளத்தைச் சுற்றிக் கல்லால் கரை அமைத்தனர். அதன் மேல் பெண்கள் யாரும் நடக்க அனுமதிக்கப்படவில்லை. பூசாரியும், பட்டினியிலிருந்து தங்களைப் புனிதமாக்கிக் கொண்ட படகர்களுமே பூசை செய்ய அக்கரை மீது செல்ல அனுமதிக்கப்பட்டனர். அக்குளத்தின் கரையில் தேங்காய் உடைத்து, அரிசி, பழங்கள், பூ முதலியன வைத்துப் பூசை செய்யப்பட்டது. அந்தப் பெண் பைரெகன்னியைச் சேர்ந்தவன் கனவில் தோன்றி அங்கு ஒரு கோயில் கட்டும்படி கூறினாள். அதுவே தற்போது ஹெத்தேசுவாமி கோயிலாக அங்கு அமைந்துள்ளது.''

இலிங்காயத நெறி சார்ந்த படகச் சிறுவனை அந்தச் சமய நெறியில் அவனுக்குப் பதின்மூன்று வயதாக இருக்கும்போது இலிங்கம அணிவித்து நெறிப்படுத்துவர். இதுப்பற்றித் திரு

நடேச சாஸ்திரி பின்வருமாறு எழுதுகின்றார்:- "படகர் இனத்துக்குரிய குருவே இச்சடங்கைச் செய்து வைக்கிறார். இலிங்கம் அணிய இருப்பவன் குடும்பத்தார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குருக்கள் உதயர் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்போதும் தங்கள் சொந்த ஊரிலேயே வாழ்வர். இச்சடங்கு பற்றிச் செய்தி அனுப்பினால் அச்சடங்கிற்குரிய சிறுவன் ஊருக்கு வருவார்கள். ஒரே வயதுடைய பல சிறுவர்களுக்கு ஒரு சேர ஒரே நாளில் சடங்கு நடத்துவதே பொதுவான வழக்கம். சடங்கு நடைபெறுவதற்குரிய நாளில் சடங்கு நடைபெற உள்ள ஊரிலிருக்கும் படகர்கள் அனைவரும் உண்ணாது விரதம் இருப்பர். அதிகாலையிலேயே பசுக்களும், எருமைகளும் பால் கறக்கப்பட்டுவிடும். அப்பாலில் ஒரு சொட்டுக்கூட யாருக்கும் வெளியே வழங்கப்பட மாட்டாது. பால் இன்றியமையாத ஊரிலுள்ள பச்சைக் குழந்தைகளுக்குக்கூட அன்று பால் தர மாட்டார்கள். உதயர் பிரிவினைச் சேர்ந்த குரு காலையில் பத்து மணியளவில் ஊரின் எல்லைக்கு வந்து சேர்வார். அவர் ஊருக்குள் வரும் வழக்கமில்லை. ஊரெல்லையிலுள்ள ஓர் ஓடையின் கரையிலேயே தங்கி விடுவார். இலிங்கம் அணியும் சிறுவனின் உறவினர்கள் ஒரு புதிய கூடையில் ஐந்து படி அரிசி, பருப்பு, நெய் முதலியவற்றோடு ஒரு பணமும் வைத்து அவரிடம் கொண்டு செல்வர். குரு தண்ணீர் அருகே அமர்ந்து ஓடைக்கரையில் நெருப்பு மூட்டுவார். வாசனைப் பொருட்கள் பல அந்த நெருப்பில் இடப்பெறும். இது ஒன்றே நெருப்பின் முன் நடக்கும் சடங்கு ஆகும். இலிங்கம் அணியவுள்ள சிறுவர்களை ஓடையில் குளிக்குமபடி வேண்டுவார். ஒரு சதுர அடி அளவில் அறுக்கப்பட்ட வாழை இலைகள் நெருப்புக்குக் கிழக்குப் பக்கம் போடப்பட்டு, அவற்றின் மேல் சிறுவர்களின் பெற்றோர் தயாராக வைத்திருக்கும் அணிவதற்குரிய இலிங்கங்களைக் குரு வாங்கி வைப்பார். ஒவ்வொரு சிறுவனும்தான் அணிவதற்குரிய இலிங்கத்தைத் தண்ணீரிலும் பாலிலும் குளிப்பாட்டும்படி செய்வார். அதன்பின் காலையில் சேகரிக்கப்பட்ட பால் அனைத்தும், அந்தச் சிற்றோடை பாலோடையாகத் தோன்றும் படியாக இலிங்கங்களின் மேல் கொட்டப்படும். இப்படிக் குளிப்பாட்டிய இலிங்கங்களைச் சிறுவர்கள் குருவிடம் தருவர். அவர்

அவற்றைத் தனது இட உள்ளங்கையில் வைத்து வலக் கையால் மூடியபடி அங்கு அந்தச் சூழலுக்குரிய நிலையில் பக்திப் பரவசத்துடன் பின்வரும் வாழ்த்தினைக் கூறுவார், சிறுவர்களும் அங்குக் கூடியுள்ள மற்றவர்களும் மிக்க பணிவோடும் பக்தியோடும் அதனைக் கேட்பர், 'ஓ சிவ, அா, பசவச, ஆறாயிரம் பெயர்களுக்கும், மூவாயிரம் புகழ்களுக்கும் உரியவனே! ஓர் இலட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம் பூத கணங்களின் தலைவனே! தண்ணீரை வழங்குபவனே! நாளும் வழிபடுதற்குரியவனே! பார்வதி மணாளனே! ஓ! எம்பெருமானே! ஓ! சிவலிங்கா! உன் திருவடியே எங்களுக்குக் கதி. ஓ! சிவ சிவ, சிவ சிவ!' இந்த வாழ்த்தினைச் சொல்லும்போது அவ்வப்போது இலிங்கங்களின் மேலுள்ள தனது வலக் கையை விலக்கியவராக அதனை நெருப்பைச் சுற்றிச் சுழற்றியவராகத் தன் இடக் கையிலுள்ள இலிங்கங்களின் மேல் பாலும் நீரும் தெளிப்பார். பின் அவர் ஒவ்வொரு இலிங்கத்தையும் ஒரு சதுரமான துணியில் வைத்து உருட்டி அச் சிறுவர்களின் வல உள்ளங்கையில் தருவார். அதைப் பெற்றுக் கொண்ட படகச் சிறுவர்கள் முதலில் அவர் சொன்ன வாழ்த்துக்களை ஐந்து முறை சொல்வர். ஒவ்வொரு முறை சொல்லும் போதும் துணியில் சுருட்டப்பட்ட இலிங்கம் உள்ள உள்ளங்கையினைக் கழுத்தை நோக்கிப் படிப்படியே உயர்த்துவர். ஐந்தாம் முறை வாழ்த்துச் சொல்லும்போது கையிலுள்ள இலிங்கம் கழுத்தை நெருங்கியிருக்கும். அப்போது குரு துணியில் சுருட்டப்பட்ட இலிங்கத்தைச் சிறுவன் கழுத்தில் தொய்வாகத் துணியின் முனைகளை இணைத்துக் கழுத்தைச் சுற்றிக் கட்டுவார். அப்பொழுது அச்சிறுவன் மண்டியிட்டுத்தன் இரு கரங்களாலும் குருவின் பாதங்களைப் பற்றியபடி இருப்பான். கழுத்தில் இலிங்கத்தைக்கட்டி முடித்தபின் குரு பின்வருமாறு அச்சிறுவனை வாழ்த்துவார். 'உனக்கு ஒன்று ஓராயிரமாகட்டும். நீ எப்பொழுதும் உன் சிவலிங்கத்தைப் போற்றிக் காப்பாயாக. அவ்வாறு செய்தால் உனக்குப் பாலும், சோறும் பல்கிப் பெருகும். ஓராயிரம் ஆண்டுகள் உன் பெயரும் புகழும் நிலைக்க வளத்தோடு, பசுக்களும் பணங்காசும் பெற்று வாழ்வாய்!' ஒரே நாளில் ஒருவனுக்கு மேல் இலிங்கம் அணிவிக்கப்பட வேண்டியிருப்பின் ஒவ்வொரு சிறுவனும் தனித்தனியே இச்சடங்குகளைச் செய்து கொள்ள வேண்டி

யிருக்கும். சடங்கு முடிந்தபின் குரு அரிசி, பருப்பு, காணிக்கை, முதலியவற்றோடு தன் ஊர் திரும்புவார். இலிங்கம் கட்டிக் கொண்ட சிறுவர்களின் குடும்பத்தார் அதன் பின் சிறப்பாக விருந்து வைப்பர். ஏழைப் படகனாக இருந்தாலும் அன்று குறைந்தது ஐந்து பேருக்காவது உணவளிக்க வேண்டும்.

பின்வரும் விவரம் மேக நாட்டினைச் சேர்ந்த உதயர்கள் இலிங்கம் அணிவிக்கும் போது செய்யும் சடங்குகள் பற்றியது. இவ்விவரம் பரங்கி நாட்டைச் சேர்ந்த உதயர்கள் தந்த செய்திகளின் அடிபபடையில் தொகுக்கப்பட்டதாகும். இலிங்கம் அணிவிக்கும் இச்சடங்கு புத்தாண்டு நாளில் அல்லது சிவராத்திரி அன்று உதயர் பிரிவைச் சேர்ந்த குருவால் நடத்தி வைக்கப் படும். அப்பிரிவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஒருவர் வீடே சடங்கு நடக்கும் இடமான 'தொத்தமனை'யாகும். சடங்கு நடப்பதற் காக அந்த வீட்டார் தங்கள் வீட்டினைக் காலி செய்து தந்து விடுவர். இலிங்கம் அணிந்து கொள்ளுவதற்குரிய சிறுவர் சிறுமியர்களின் வீடுகள் தூய்மை செய்யப்பட்டு வாசற்படிகளிலும் தெருவாசலிலும் தூடு, மாவிலை, எலுமிச்சம்பழங்கள், தும்பைப் பூக்கள் ஆகியனவற்றாலான தோரணங்கள் தொங்கவிடப்படும். சடங்கு முடியும்வரை ஊரில் உள்ள அனைவரும் உண்ணாது விரதமிருப்பர். சிறுவர் தங்கள் பெற்றோருடனும் சடங்கு நடத்தும் குருவுடனும் தொத்த மனையை அடைவர். இலிங்கங்கள் குருவிடம் ஒப்படைக்கப்பட அவற்றை ஒவ்வொன்றாகக் குளிப் பாட்டிப் பூசை செய்து அவர் சிறுவர்களிடம் தருவார். அதன்பின் அவர்கள் அவற்றிற்குப் பூசை செய்வர். பின்னர் அவை இளஞ் சிவப்புப்பட்டுத் துணியிலோ, பருத்தித் துணியிலோ சுற்றப்பட்டு சிறுவர்கள் கழுத்தில் அணிவிக்கப்படும். பூசையின் போது இலிங் கங்கள் பசுவின் கோமயத்தாலும், பாலாலும் குளிப்பாட்டப் பட்டுச் சந்தனம், மஞ்சள் பூசப்பட்டுப் பூக்களிட்டு நறும்புகை களும், கர்ப்பூர ஆரத்தியும்காட்டப்பெறப்படும். இலிங்கம் அணி விக்கப்பட்ட சிறுவர்களுக்கு வாழ்த்துப்பா சொல்லித் தரப்படும். இந்த வாழ்த்துப்பா ஒரே மாதிரியாக இல்லாது ஊருக்கு ஊர் குருமார்களின் இயல்புக்கேற்ப மாறுபாடுடையனவாக அமைந் திருக்கும்.

பிற இலிங்காயதப் பிரிவினரைப் போலவே உதயர்களும் இலிங்கத்தை மதிக்கின்றனர். ஆனால் ஜங்கத்தின் பாதத்தை அலம்பிய ஜங்கம் தீர்த்தத்தால் இவர்கள் தங்கள் இலிங்கங்களைக் குளிப்பாட்டுவதில்லை. உதயர் ஊர்களில், 'ஓலகுடி' எனப்படும் வீட்டுக்கு விலக்கான பெண்களுக்கான தனி மனைகள் இல்லை. பாலினை அவர்கள் புனிதமானதாகக் கருதுவதில்லை யாகையால் உதயர் இல்லங்களில் 'ஹால்கட்டு' எனப்படும் பால் கூடங்களும் இல்லை. முன்னோர்களின் நினைவாக இவர்கள் மனைவளை நிகழ்ச்சிகள் நடத்துவதும் இல்லை. மற்றச் சடங்கு களைப் பிற படகர்களைப் போலவே செய்கின்றனர். ஆனால் அதனை அவர்கள் குறும்பர்களை வைத்து நடத்துவதில்லை.

விதைப்பின்போதும் அறுவடையின்போதும் பயிர்த்தொழில் தொடர்பான பல சிறப்பான சடங்குகளைப் படகர்கள் செய் கின்றனர். விதைப்புச் சடங்கு மார்ச் மாதத்தில் நடைபெறு கின்றது. மேகநாடு, பரங்கி நாடு போன்ற பகுதிகளில் இச் சடங்குகளில் குறும்பர்கள் சிறப்பான பங்கு பெறுகின்றனர். மூன்றாம் பிறைக்கு முந்தைய செவ்வாய்க் கிழமையாக அமையும் ஒரு நல்ல நாளிலே பொழுது புலரப் பல மணி நேரம் முன்ன தாகத் தெவ்வே கோயில் பூசாரி ஐந்து அல்லது ஏழு வகைக் கூலங்களையும் ஓர் அரிவாளையும் ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு ஒரு குறும்பனுடன் ஏரில் பூட்டிய இரு இணை எருதுகள் முன்செல்ல வயலை நோக்கிப் புறப்படுவான். உரிய வயலை அடைந்ததும் பூசாரி கூடையிலிருக்கும் கூலக்கலவை யைக் குறும்பன் துணியில் கொட்டி விட்டு எருதுகளை ஏரில் பூட்டி மூன்று சால்கள் உழுவான். குறும்பன் எருதுகளைத் தடுத்து நிறுத்திச் சால்களிடையே கிழக்கு நோக்கி மண்டியிட்ட வனாகத் தனது உருமாலையை எடுத்துக் கீழே வைத்துவிட்டு இரு கைகளாலும் இரண்டு காதுகளையும் பொத்தியபடி, 'தோ! தோ! தோ!' என மும்முறை கத்துவான். பிறகு எழுந்து கூலங்களை மும்முறை வயலில் வீசுவான். பின் பூசாரியும் குறும் பனும் ஊருக்குத் திரும்பி விடுவர். பூசாரி மிச்சம் இருக்கும் கூலங்களை 'அட்டு' எனப்படும் பொருள்கள் வைக்கும் அறையில் வைப்பான். ஒரு புதுப்பானை நிறையத் தண்ணீர்

பால்கூடத்தில்வைக்கப்படும். பூசாரி அதனுள் தனது வலக்கையை விட்டு 'நிறைந்திருக்கே' எனக் கூறுவான். இந்த விதைப்புக்கான சடங்கு படகர்களுக்குச் சிறப்பானதொன்று. இதனைச் செய்து முடிக்கும்வரை யாரும் விதைப்பைத் தொடங்கமாட்டார்கள். இந்தச் சடங்கு நாளில் விருந்து வைக்கப்படும். விருந்தில் அரிசிச் சோற்றோடு கொள்ளும் பருப்பும் சமைக்கப்படும்.

பயிர்த்தொழிலோடு தொடர்புடைய இன்னொரு சடங்கு சூன், சூலை மாதங்களில் ஒரு திங்கட்கிழமைகளில் நடத்தப்படும் 'தெவ்வீ ஹப்பா' எனப்படும் தினை அறுப்பு விழாவாகும். மகாலிங்கசாமி, கிரிய உதயர் என்ற இரண்டு தெய்வங்களைச் சிறப்பிக்க எடுக்கப்படும் விழாவாக இதனைக் கொள்ளலாம். இத்தெய்வங்களுக்கான கோயில்கள் பல ஊர்களுக்குரியனவாகச் சிலவிடங்களில் உள்ளன. கோத்தகிரி வட்டாரத்தில் இருக்கும் படகர்களுக்குரியதான கிரிய உதயர் கோவில் தண்ட நாட்டிலும் மகாலிங்கசாமி கோவில் கண்ணேர்முக்கிலும் உள்ளன. 'தெவ்வீத்'' திருவிழாவினை எக்காரணங்கொண்டும் 'துவ்வீ' என உச்சரித்துவிடுதல் கூடாது. துவ்வீ என்பது சுடுகாட்டைக் குறிக்கும் சொல். இத்தெவ்வீத் திருவிழா ஓரிடத்திலே நடைபெறும்போது வேறு பகுதிகளிலுள்ள படகர்களும் அங்குச் சென்று அதில் பங்கு பெறுவர். நண்பகல் சமயத்தில் சில படகர்கள் கோயில் பூசாரியுடன் கிரிய உதயர் கோயிலிலிருந்து புறப்பட்டு மகாலிங்கசாமி கோயிலுக்குச் செல்வர். இந்த ஊர்வலத்தை வழக்கமாக ஒரு குறும்பனே தலைமை தாங்கி, வழி நெடுகத் தூடு மரப்பட்டைகளைத் தூவியபடி அழைத்துச் செல்வான். பூசாரி தன்னோடு பூசைக்கு வேண்டிய பொருள்களைச் சுமந்து போவான். மகாலிங்கசாமியை வழிபட்டபின் இவர்கள் கிரிய உதயர் கோவிலுக்குத் திரும்பி வருவர். அங்கே கோயில் எல்லையில் இருக்கும் பல தெய்வங்களுக்குப் பாலும் பொங்கலும் படைக்கப்படும். அடுத்த நாள் மீண்டும் அனைவரும் கோயிலில் கூடுவர். ஒரு குறும்பன் சில தினைக் கதிர்களைக் கொண்டு வந்து கோயில் வாயிலில் நிற்கும் தூணில் கட்டித் தொங்கவிடுவான். அதன் பிறகு பூசை நடைபெறும். கூடியுள்ளவர் தேங்காய் உடைத்து வழிபடுவர்.

பின் மதாவெ குலத்தைச் சேர்ந்த முதல் குழந்தையைப் பெற்றெடுத்த பெண்கள் சிறப்பான ஆடைகளைப் புனைந்து தங்கள் குழந்தைகளுடன் கோயிலுக்கு வருவர். இந்த நாளில் அவர்கள் இலை மூக்குத்தி என்றழைக்கப்படும் சிறப்பான மூக்குத்தியை அணிவர். கணவன் இறந்தபின் செய்யப்படும் சடங்கின் போது தான் இந்த அணி மற்றுமொருமுறை அப்பெண்களால் அணியப்படும். அப்பெண்கள் கிரிய உதயருக்குப் பூசை முடித்தபின் பூசாரி அவர்களுக்கு முசுட்டை இலைகளில் சிறிது பொங்கல் தருவான். அதை உண்டபின் அவர்கள் வரிசையாகக் கோவிலை விட்டு வெளியேறிப் பூசாரி தரும் தண்ணீரில் கையலம்புவர். மதாவெ பிரிவைச் சேர்ந்த பெண்கள் செய்யும் இந்த வழிபாடு 'மாண்டே தண்ட' எனப்படும். திவ்வீச் சடங்கு இவ்விதமாக முடிந்தவுடன் அறுவடை தொடங்கும். முதல் நாள் அறுவடையிலிருந்து ஒன்று அல்லது இரண்டுபடி நெல் 'நீசல்' என்று மகாலிங்கசாமி கோயிலுக்காகத் தனியே எடுத்து வைக்கப்படும்.

கித்தீசுவாமி, மகாலிங்கசாமி, கிரிய உதயர் மாதேசுவரர். மாங்காளி, சடேசுவாமி, நீலகிரி அரங்கசாமி ஆகியன படகர் சிறப்பாக வழிபடும் தெய்வங்கள். இப்பொழுது சில படகர்கள், கோவை மாவட்டத்தில் சமவெளியில் காரமடையில் உள்ளசிவன் கோவிலுக்கோ மைசூர் நஞ்சன் கூட்டிலுள்ள கோவிலுக்கோ செல்லும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

பைரெகன்னியில் உள்ள கித்தீசுவாமிக்குச் சனவரி மாதத்தில் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. இச்சமயத்தில் உழவு வேலைகள் ஒரு முடிவுக்கு வந்து விடுவதால் இதனை 'ஏர்மாத் தொகப்ப' என்றும் சிலபோது அழைப்பர். இந்த விழா எப்போதும் திங்கட்கிழமையில் தொடங்கப் பெற்று எட்டு நாள்களுக்கு நீடிக்கும். இந்த விழாவிற்கு ஒரு சேடன் அல்லது தேவாங்கன் அவனது தூக்கிச் செல்லக்கூடிய தறியோடும், ஒரு துப்பட்டியும் உருமாலையும் நெய்வதற்குப் போதுமான நூலோடும் அழைத்து வரப்படுவான். பைரெகன்னியில் மட்டும் தறிபோட்டு நெய்வதற்கென்றே ஒரு தனி வீடு உள்ளது. ஆனால் இந்த விழா கொண்டாடப் பெறும் பிற இடங்களில், படகர்கள்

நெசவாளன் ஊருக்குச் சென்று வேண்டிய துணிகளை எடுத்து வருவர். விழாவின் இரண்டாம் நாள் காலையில் சில ஊர்ப் பெரியவர்களான படகரும், நெசவாளனும் குளித்துவிட்டு நெசவு செய்யும் இல்லத்திற்குச் செல்வர். அங்கு நெசவுக்காரன் தறியைப் பூட்டி அதற்குரிய தூப தீபங்கள் காட்டித் தன் பணியைத் தொடங்குவான். உடன் சென்ற படகர்கள் அவனுக்குப் புதிய துணியும் கொஞ்சம் பணமும் கொடுத்து அவனை ஒரு துப்பட்டியும், இரண்டு கச்சையும் நெய்து தரும்படி வேண்டுவர். விழாக் காலத்தில் நாளும் படகர்கள் கோயிலருகில் கூடிப்பாட்டுகள் பாடியும், இன்னிசை வாத்தியங்கள் வாசித்தும் மகிழ்வர். கடைசி நாள் வரை அவர்களைக் கோயிலுள்ள கித்தீசுவாமியைக் காண அனுமதிக்க மாட்டார்கள். கடைசி நாளன்று பூசாரியும் படகர்களும் புதிதாக நெய்யப்பட்ட துணிகளை எடுத்துச் சென்று ஓடையில் துவைப்பர். அவை காய்ந்ததும் எல்லோரும் கோயிலுக்குத் திரும்பி அந்த ஆடைகளைச் சாமி சிலைக்கு அணிவிப்பர். அப்பொழுதுதான் அனைவரும் சாமியைத் தரிசிக்க அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் செலுத்தும் சிறு காணிக்கைகள் ஒரு தட்டில் சாமியின் முன் வைக்கப்படும். பிற்பகல் நேரத்தில் கூட்டத்தினர் கலைந்து தங்கள் ஊர்களுக்குச் செல்வர். அவர்கள் வழிநடையின்போது வேண்டிய உதவிகளைச் செய்ய ஆங்காங்கே காபி, பழங்கள் முதலியன வழங்குபவர்கள் அமர்ந்திருப்பர். படகர்கள் விழாவிற்கான துணிக்காக ஒரு நெசவாளன் ஊருக்குச் செல்லும்போது அங்கு நெசவாளன் குளித்து வந்தவுடன் அவனுக்கு நான்கணா பரிசளிப்பர். அப்போது படகர்கள், "இது கித்தி இறமாஸ்தியும், பராசக்தி பார்வதியும் அணியப்போகும் துணியை நெய்வதற்காகச் செலுத்தப்படும் கட்டணம்" என உரக்க கூச்சலிட்டுக் கூறுவர். விழாவின் இறுதி நாளன்று அத்துணிகள் துவைக்கப்பட்டு அவற்றில் ஒன்று கடவுள் சிலையாகக் கருதப்பட்டு இடையணி, கழுத்தணி முதலியன பொருத்தப்பட்டு ஒரு குடையின கீழ் வைக்கப்படும். எல்லோரும் அதன் முன் விழுந்து வணங்கிக் காணிக்கை செலுத்துவர். பழங்களோடு பிறவற்றையும் கித்தீசுவாமிக்குப் படைத்துப் பின்வரும் வாழ்த்தினைக் கூறுவர். "நலல செயல்களெல்லாம் நினைவிருக்கட்டும்; தீயனவெல்லாம் மறக்கப்

படட்டும்.நான் ஆயிரத் தொரு பாவங்களைச் செய்திருப்பினும் இறைவன் திருவடியை அடைவேனாகுக''

வைட்ஹெட் பாதிரியார் பைரெகன்னியில் நடைபெறும் திருவிழா பற்றி மேலும் தரும் விவரங்கள் வருமாறு:- ''வேறு ஊர்களிலிருந்து அங்கு வரும் மக்கள் பணம், அரிசி, பழங்கள், தேவிக்கான பொன் அல்லது வெள்ளியாலான குடை, துணிகள், எருமைகள், ஆகியவற்றைக் கோயிலுக்கு வழங்குவர். எருமைகளைப் பலியாகக் கொல்லும் வழக்கம் இல்லை; அவை கோயிலுக்குரியனவாக இருந்துவரும். பூசாரி ஓர் ஊரைச் சேர்ந்த பெரிய மனிதர்களை அழைத்து அவர்களிடம், ''இந்த ஆண்டு உங்களுக்கு நல்ல (அல்லது கெட்ட) விளைச்சல் இருக்கும், காலரா அல்லது பெரியம்மை வரும்; மழை நன்கு பெய்யும் (அல்லது பொய்க்கும்) என்று கித்தீசுவாமி சொல்கிறார்'' என்பது போல வாக்குச் சொல்வார். தங்கள் காணிக்கையைச் செலுத்துபவர்கள் கீழே விழுந்து நெற்றி தரையில்பட வணங்கிய பின் பூசாரி கொடுக்கும் பூவை வாங்கித் தலையில் அணிவர். படையல் நடக்கும்போது பூசாரியும் கூடியிருப்பவர்களும் கொம்பினை முழக்கியும் மணிகளை ஆட்டியும் ஒலி எழுப்புவர். படையல் முடிந்தபின் கூடியிருக்கும் ஆடவர் அனைவரும் இரு பிரிவினராகப் பிரிந்து கோயிலின்முன் ஆடுவர். ஒரு பிரிவினர் 'கௌ-கொ, கௌ-கொ'எனச் சத்தமிட மற்றொரு பிரிவினர், 'இசு-கோலி' என எதிர்க்குரல் கொடுப்பர். இந்த ஆட்டங்களை இவர்களுக்குத் தோடர்களே சொல்லித் தந்திருக்கின்றனர். இவர்கள் கூச்சலிடும் சொற்களும் தோடர் மொழியைச் சேர்ந்தவையே.''

மேலூர், தங்காலு, மைநெலே, ஜக்கநாரி, தென்நாடு, நிடுகல ஆகிய ஊர்களில் நடைபெறும் சடேசாமி திருவிழாத் தொடர்பாகத் தீமிதி நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலூரிலும் தங்காவிலும் உள்ள கோயில்கள் ஆருவர் பிரிவிற்குரியன. விழாத் தொடர்பான எல்லா ஏற்பாடுகளையும் அவ்வினத்தவரே செய்வர். தென்நாடு கோவில், உதயர் பிரிவினருக்குரியதாகையால் அங்கு அவர்கள் விழா நிகழ்ச்சிகளை நடத்துவர். மற்ற ஊர்களில் படகர் பிரிவினரே கோயில்களுக்கு உரிமை உடையவர்கள்.

நிடுகலாவில் இந்த விழா சனவரி மாதத்தில் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. தீ மிதிக்க உள்ள அனைவரும் எட்டு நாள்கள் விரதமிருந்து ஒன்பதாம் நாள் அச்சடங்கில் பங்கு பெறுவர். இந்த நிகழ்ச்சிக்குத் திங்கட்கிழமையே புனிதமான நல்ல நாளாகக் கருதப்படுகிறது. முன்னறிகுறி காட்டும் நிகழ்ச்சியாக அருகருகே அமைக்கப்பட்ட இரண்டு அடுப்புகளில் பானைகளில் பாலினைக் காய்ச்சுவர். பானையில் எல்லாப் பக்கங்களிலும் பால் ஒரே சீராகப் பொங்கி விழுமானால் எல்லா ஊர்களிலும் விளைவு நன்கு இருக்கும் எனவும், அவ் வாறில்லாமல் பால் பானையில் ஒரு பக்கத்தில் மட்டும் பொங்கி வழியின் அது பொங்கி வழியும் திசையிலுள்ள ஊர்களில் மட்டும் விளைவு நன்றாக இருக்குமெனவும் நிமித்தமாகக் கொள் வர். தீ மிதிப்பதற்குரிய தணல் பரப்பிடம் சுமார் ஐந்து கச நீளமும் மூன்று கச அகலமும் உடையதாயிருக்கும். ஜக்கநாரெ. மேலூர் போன்ற இடங்களில் முகமதியர்களுடைய தீமிதி குண்டம் போலத் தணல் பரப்பிடம் வட்ட வடிவமாக இருக் கின்றது. தணலை உண்டாக்க நாவல், நெல்லி மர விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன. பால் பொங்கலிடவும், தீமிதித்தற் குரிய தணல் தரும் விறகிற்கு நெருப்பு மூட்டவும். தீக்கடைந்து, அந்தத் தீயினைக் கொண்டே நெருப்புப் பற்ற வைப்பர். இதனை நீளக்கோல் என்றழைப்பர். தீக்கடையும் நீளக்குச்சி தவிட்டுச் செடி (*Rohodomyrtus tomentosus*) யால் ஆனது. வரிசையாகத் துளைகளையுடைய அடிக்கட்டை காட்டு நொச்சி மரத்தால் (*Debregeasia velutina*) ஆனது. நீளக் கட்டையில் ஒரு கயிற்றைப் பல சுற்றுக்கள் சுற்றி அக்கயிற்றின் இரு முனைகளையும் மாற்றி மாற்றி இழுப்பர். படுகிடையான அடிக்கட்டையைத் தரையோடு ஒருவன் கால் பெருவிரல்களால் அமுக்கிப் பிடித்துக் கொண்டு நீளக் குச்சி துளையை விட்டு வெளிப்படாதபடி அதன் மேல் முனையில் ஒரு கொட்டாங்கச் சியைக் கவிழ்த்து அழுத்திக் கொண்டிருப்பான். இம் முறையில் நெருப்பை உண்டாக்கத் தவறும் படகன், தனக்குத் தீட்டு இருப்பதாகவும் தீமிதி விழாவின்போது அது தன்னைவிட்டு நீங்கிவிடும் என்றும் கூறிக் கொள்வான். படகர் தீக்கடைந்து நெருப்பு மூட்டினாலும் அவர்களுடைய நாட்டுப் புறக் கதைக ளில் இம்முறை பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. இறந்

படகர் திக்கடைதல்

தவர்களுக்கு நெருப்பு மூட்டுவது பற்றிய நிகழ்ச்சிகளைக் கொண்ட நாடோடிக் கதைகள் யாவும் சக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு நெருப்பு மூட்டினதாகவே குறிப்பிடுகின்றன. பால் பொங்கும் சடங்கு முடிந்தவுடன் பூசாரி காலில் சலங்கைகளைக் கட்டிக் கொண்டு முதல் முறை கன்று ஈன்ற பசுவின் பாலோடும் அழிஞ்சி (*Rahododendron arboreum*), தும்பை (*Leucas aspera*), மல்லிகை மலர்களோடும் நெருப்புக் குண்டத்தை நெருங்குவான். குண்டத்திற்குப் பூசை செய்தபின் அம்மலர்களைத் தணலின் மீது வீசியெறிவான். சில வினாடிகள் அவை வாடாமல் இருக்க வேண்டும். பிறகு பாலினில் சிறிதளவைத் தணலின் மீது விடுவான். அப்போது நெருப்பிலிருந்து 'இசெ'ன்ற ஒலி எழுதல் கூடாது. இந்த இரண்டு நிமித்தங்களும் இணக்கமாக அமையின் ஓர் உதயன் பின்வரப் பூசாரி தணல் மேல் நடப்பான். அவர்களைப் பின்பற்றித் தீமிதிப்பவர்கள் அவ்வாறு நடக்குமுன் தங்கள் கால்களில் உள்ள உரோமங்களைக் கணக்கிடுவர். தீமிதித்த பின் அந்த உரோமங்கள் கருகிக் காணப்படின் அது வரப்போகும் கேட்டினை அறிவிப்பதாக அல்லது சாவின் அறிகுறியாகக் கொள்ளப்படும். "படகர்கள் தாங்கள் தீமிதிக்குமுன் தங்கள் பாதங்களைப் பாதுகாக்கத்தக்க முன்னேற்பாடுகளை மேற்கொள்கின்றார்கள் என்ற குற்றசாட்டை மறுத்துள்ளனர். அவர்கள் முடிவளர்ப்பது சடையசாமிக்கு நேர்ந்திருப்பதற்காகவே. அதற்காகவே ஒரு கொத்து முடியினைப் பல ஆண்டுகள் போற்றி வளர்த்து இறுதியில் அதனைக் கத்தரித்துச் சடையசாமிக்கு அளிக்கின்றனர். தீமிதி விழாக் கூட்டத்தில் செட்டிகள் பலர் தங்கள் வணிகப் பொருட்கள் வளையல்கள், வண்ணக் கைத்துணித் துண்டுகள், உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை விற்பர். கோத்தர்கள் இன்னிசை முழக்குவர். வயதில் மூத்த ஒருவன் உணர்ச்சி வயப்பட்டவனாக உரத்த குரலில் வரப் போகும் பருவத்தில் படகர் குடிக்கு நிகழ உள்ள பல நலங்களையும் பற்றி எடுத்துரைத்தபடி இருப்பான்" என 1902-இல் நடைபெற்ற தீமிதி விழாத் தொடர்பான விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வைட்ஹெட் பர்திரியார் தீமிதிவிழா பற்றி வழங்கி வரும்ஒரு வரலாற்றினைப் பின் வருமாறு பதிந்துள்ளார்:- "சுமார் ஐம்பது

ஆண்டுகளுக்கு முன் இவர்கள் தீமிதி விழா எடுக்க முடிவு செய்து ஏற்பாடுகள் செய்த பின், தணலின் மீது நடக்க அஞ்சினர். அப்போது கோயிலினுள் கல்லுருவாக இருக்கும் மகாலிங்க சுவாமி பாம்பாக உருக் கொண்டு, கோயில் சுவரினைத் துளைத்தபடி வெளிவந்து தணலின் மீது ஊர்ந்து, பின்னர் கோயிலுக்குள் சென்று புகுந்தார். அதன்பின் அவர்கள் அச்சம் நீங்கித் தீமிதித்தனர். அப்போது மகாலிங்க சுவாமி சுவரில் ஏற்படுத்திய துளை அக்கோயிலில் இன்றளவும் காணக் கூடியதாக உள்ளது.''

நீலகிரி மாவட்டக் கையேட்டில் மேலூரில் நடைபெறும் தீமிதி விழா பற்றிப் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன:- ''மார்ச் மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த திங்கட் கிழமையில் இவ்விழா நடைபெறும். இது பயிர்த்தொழில் வேலைகள் தொடங்கப்படுவதற்கு முற்பட்ட பருவம். மேற்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் படகர்கள் இவ்விழாவில் பங்குபெறுவர். குருவராசர் என வழங்கப் பெறும், முதன் முதலில் அப்பகுதிக்கு வந்த படகர்களின் வழித் தோன்றல்களாகிய ஆறு ஊரினைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊர்க் கோட்டுக்காரர் அல்லது ஊர்த்தலைவர் வழி முதலில் விழாக் கொண்டாடலாம் எனத் தங்கள் உடன்பாட்டினைத் தெரிவிக்க வேண்டும். செய்தி அறிவிக்கும் கோட்டுக்காரர் தீமிதியின் போது நடப்பதற்குரியவராக மூவர், ஐவர் அல்லது எழுவரைத் தேர்ந்தெடுப்பர். உரிய படகனும் குறிப்பிட்ட படகக் குருவும் ஒரு குறும்பனும் சேர்ந்து நெருப்பு மூட்டுவர். கோட்டுக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குளித்து முடித்துச் சந்தனம் பூசிக் கேத்திக்கு அருகில் உள்ள உடையார் அட்டியிலிருந்து இதற்காகவே வரவழைக்கப்பட்டு விருந்துபசாரம் செய்யப்பட்ட உதயர்களுக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்துவர். பின் முதன் முறை ஈன்ற பசுவின் பாலை அருகில் ஓடும் ஓடையில் ஊற்றுவர். பிற்பகலில் மகாலிங்கசுவாமி கோயிலிலிருந்து கொண்டு வரபபட்ட பூவையும் பாலையும் தீக்குண்டத்தில் ஊற்றியபின் தணலின்மீது நடப்பர். தணலின் மேல் மண் தூவப்பட்ட பின்னர் மேலும் இரண்டு முறை அவர்கள் அதன் மீது நடப்பர். ஒரு

பொது விருந்தின் பின் விழா முடிவிற்கு வரும். மறுநாள் முதல் உழவு ஓட்டுவர். முதலில் குறும்பன் விதை விதைக்க அவனை அடுத்துப் பூசாரி விதைகளை விதைப்பான். இறுதியாக ஒரு வலை கொண்டுவரப்படும். கோயில் பூசாரி அதன் மீது நின்றபடி நல்ல பயிர் விளைவுக்காகக் கடவுளை வாழ்த்தி வேண்டிக் கொள்வான். அந்த வலையினுள் இரண்டு கோழிகள் வீசப்படும். அவற்றைக் குத்திக் கொல்லப்படுவதாகப் போக்குக் காட்டுவர். பிறகு காட்டில் வேட்டை விலங்குகள் திரியும் பாதையில் அந்த வலையைக் கொண்டுபோய் விரிப்பர். எதாவது ஒரு காட்டு விலங்கினை (முடிந்தால் கடமான் ஒன்றினை) அந்த வலையில் வீழ்த்திய பின் அதனைக் கொன்று அதன் இறைச்சியை ஊரார் அனைவரும் பங்கிட்டுக் கொள்வர். இது போலக் கடமானைக் கொல்லும் வழக்கம் மலைப் பகுதிகளிலும் மற்ற ஊர்களிலும் காணப்படுகிறது. *1883, 1894* ஆகிய ஆண்டு களில் வேட்டைக்கு அனுமதி இல்லாத பருவத்தில் இது போலக் கடமான்களை வேட்டையாட அனுமதித்துத் தனி அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அண்மையில் மேலூரில் தீமிதி விழாவில் தணலின் மேல் நடப்பது தொடர்பாக இரு பிரிவின ருக்குள் உண்டான பூசல் வழக்குமன்றம் வரை சென்று விட்டது. இரு பிரிவினரும் தீமிதி விழாவினை ஆண்டுக்கொரு பிரிவினராக மாறி மாறிக் கொண்டாடி வருகின்றனர். சிவாச்சாரி படகரின் மேற்பார்வையில் சக்கனேரியில் இருக்கும் சடையசுவாமி கோவி லிலும் ஆண்டுதோறும் தீமிதி விழா நடைபெறுகின்றது. இது பயிர்த்தொழில் வளம் தொடர்பானதாகத் தொடக்கத்தில் நடந்திருக்கக்கூடும். பக்தர்கள் தணலில் நடப்பதற்குமுன் ஒரு காளையினை சிறிது தூரம் தணலின் மேல் நடக்கச் செய்யும் வழக்கம் இருப்பதால் இவ்வாறு கருத வேண்டியுள்ளது. முதன் முதல் கன்று போட்ட பசுக்களுக்குச் சொந்தக்காரர்கள் தணலில் அப்பசுக்களின் பாலினைத் தெளித்து மற்றவர்களுக்கு முன் தணலில் நடக்க உரிமையுடையவர்களாயிருப்பதும் இக் கருத்துக்கு இடம் தருவதாக உள்ளது.''

அக்டோபர் மாதத்தில் நடைபெறும் சகலதி திருவிழாவின் போது படகர்கள் மாலையில் தங்கள் வீட்டுக் கூரையின் மீதுகாட் டுப் புகையிலை (*Lobelia nicotianetolia*), நாயுருவி (*Achyrantshu*

aspera), தும்பை (*Leucas aspera*, *Plectranthus wightii*, *Crotalaria obtecta*), ஆகியவற்றின் மலர்களை வீசுவர். மறுநாள் தங்கள் இல்லங்களைத் தூய்மை செய்தபின் விருந்துண்பர். பிற்பகலில் பலர் தங்கள் வீட்டின் முன் தெருவில் சாம்பலால் எருமைகள், காளைகள், பசுக்கள், கலப்பைகள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், பாம்புகள், பல்லிகள் ஆகியவற்றை வரைவர். பின்னர் வீட்டினுள் சென்று கையலம்புவர். தங்களுடைய தூய்மையான கைகளில் ஒரு மாவுக் கட்டியினை எடுத்து அதன் மீது கொஞ்சம் அரிசியும் வெண்ணெயும் வைத்து விளக்கெண்ணெயில் தோய்த்த மூன்று திரிகளை அதில் பொருத்தி அவைகளை ஏற்றுவர். பின்னர் அம் மாவுக் கட்டியினை வீட்டில் எல்லாக் குழந்தைகளின் தலையையும் சுற்றி வயலுக்குக் கொண்டு சென்று 'சகலதி வந்திட்டது' எனக் கூறி வீசிஎறிவர். அதனை வீசி எறிந்தவர் வீட்டிற்குத் திரும்பி, வீட்டின் உள் அறையில் எரியும் விளக்கினை விழுந்து வணங்கிச் சிவனுடைய பல பெயர்களையும் கொண்ட நீண்ட வாழ்த்தினைப் பல முறை கூறுவர்.

நவம்பர் மாதத்தில் 'தொட்டகப்பா' (பெரிய விருந்து) எனப் படும் திருவிழா நடைபெறும். பிற்பகலில் பால் கூடத்தினுள் உறைபாலில் அரிசியினையிட்டுச் சோறு சமைத்து முசுட்டை இலையில் வைத்து உண்பர். அன்று நாள் முழுதும் ஊரார் பலவகைப் பந்தாட்டங்களில் ஈடுபடுவர்.

மகங்காளிக்குச் சிறப்புச் செய்யக் கோணக்கொரெப் பகுதிக்கு மட்டும் உரிய ஒரு விழா கொண்டாடப்படுகிறது. ஓர் எருமையினை மலைவிளிம்பிற்கு ஓட்டிச் சென்று அதனை ஒரு குறும்பன் ஈட்டியால் குத்திக் கொன்றபின் மலைச்சரிவில் அதனை உருட்டி விடுவர். இவ்விழாவின்போது முன்பு ஒரு பூசாரி ஒரு தடியினைப் பாறை இடுக்கில் விட்டு துழவினால் ஓர் எருமையின் விலைக்குச் சமமான தங்கக்காசுகள் அவனுக்கு அந்த இடுக்கில் கிடைத்து வந்ததெனவும், ஆனால் ஒரு முறை அதிகக் காசு பெற ஆசைபட்டு அவன் தடியினைப் பாறை இடுக்கில் இரண்டாம் முறை நுழைத்தபோது அவன் காசுகளைப் பெறுவதற்குப் பதி

லாகத் தன் பேராசைக்குத் தண்டனையாக அங்கேயே உயிரிழக்க வேண்டியதாயிற்று எனவும் ஒரு கதை வழங்குகின்றது.

உதயர் பிரிவைச் சேர்ந்த ஊர்களைத் தவிர மற்ற எல்லாப் படகர் ஊர்களிலும் 'ஓலகுடி' எனப்படும் வீட்டுக்கு விலக்காகும் நாள்களில் பெண்கள் தங்கும் குடிசைகள் இருக்கும். ஒரு சிறுமி பூப்படைவாள் என எதிர்பார்ப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அமாவாசைக்கு நான்கைந்து நாள்களுக்கு முன்பு ஒரு வெள்ளிக் கிழமையன்று அவளை ஓலகுடிக்கு அனுப்பி வைப்பர். இவ்வாறு செய்வது அவள் வீட்டுக்கு முதன்முறை விலக்காவது நல்ல நாள் அல்லாத நாளிலும் நிகழலாம் என எதிர்பார்ப்பதாலேயாம். அந்தச் சிறுமி ஓலகுடியில் ஓர் இரவு தங்கி மறுநாள் புத்தாடைகள் புனைந்து உடுத்திய ஆடைகளைக் குடிசையிலேயே விட்டுவிட்டு இல்லம் திரும்புவாள். வீட்டிற்கு வந்தவுடன் அவள் பெரியவர்களை வணங்கி அவர்கள் வாழ்த்தினைப் பெறுவாள். ஞாயிற்றுக் கிழமையன்று உறவினர்கள் இல்லங்களுக்குச் செல்வாள். அங்கே அவளுக்குக் கொத்துக் கடலையும், பிற உணவுப் பண்டங்களும் வழங்கப்படும். அவள் தன்னுடைய வீட்டின் உட்பகுதிக்குள் பிறை நிலவைப் பார்க்கும்வரை நுழையக் கூடாது. படகப் பெண்கள் வீட்டு விலக்குத் தீட்டினை ஐந்து நாள்களுக்குரியதாக மேற்கொள்கின்றனர். ஒருத்தி அதிகாலையில் முகம் கழுவுமுன் தன் விலக்கு நிலையை உணர்வாளானால் அதுவும் ஒரு நாளாகக் கணக்கில் கொள்ளப்படும். இல்லையானால் விலக்குக் காலம் ஆறு நாள்களாக நீட்டிக்கப்படும். மூன்றாம் நாள் அவள் 'தொரீ கோலு (*Pouzolzia*) பட்டைகளைப் பயன்படுத்தி குளிர்ந்த நீரில் குளிப்பாள். நான்காம் நாள் குளித்தபின் ஆடைகளை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவாள். அன்று குடிசையைவிட்டு வெளியேறி இரவின் ஒரு பகுதியைத் தன் வீட்டு முற்றத்தில் கழித்தபின் தனது மாலை உணவினைத் தானே சமைத்து உண்டபின் குளித்துவிட்டு வீட்டின் வெளி அறையில் நுழைவாள். மறுநாள் அதிகாலையில் அவள் தங்கியிருந்த இடத்தைத் தூய்மைப்படுத்தியபின் ஓடையில் போய்க் குளிப்பாள். வீட்டுக்குத் திரும்பி வெளி அறையிலேயே உணவு கொண்டு மறுநாள் காலைவரை அங்கேயிருக்க வேண்டும். விலக்கான ஒருத்தி குழந்தைகளைக் கூடத் தொடக் கூடாது. அவ்வாறு

தொட்டுவிட்டால் தீட்டு நீங்கும்படியாகக் குழந்தையைக் குளிக்கச் செய்த பின்னரே மற்றவர்கள் அதனைத் தொடுவர். குழந்தைகள் பற்றிய இந்த வரையறையை வேறு எந்த இனத்தவர்களோ சாதியாரோ கடைப்பிடிப்பதில்லை என்பது தெளிவான ஒன்று.

படகர்களின் திருமணம்பற்றி ஹார்கன்ஸ் * பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:– "வேலைக்கு ஆள்கள் தேவையுள்ள ஒருவன் தன்னைவிட வசதி குறைந்த அண்டை வீட்டானிடம் அல்லது அவன் உறவினனிடம், தன் மகளை அவன் மகனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக உறுதி கூறி உடன்பாடு செய்து கொண்டபின், அந்த இளைஞனைத் தன் வீட்டில் குடும்பத்தில் ஒருவனாகத் தன் மகள் பருவம் அடையும் வரை அழைத்து வைத்துக் கொள்வது பொதுவான வழக்கமாகும். திருமணச் சடங்கு நிறைவேறியபின் அந்த இளைஞன் தன் மாமனாரின் குடும்பப் பங்குதாரர்களில் ஒருவனாகக் கருதப்படுகிறான்.

ஒருவன் தன் ஊரைச் சேர்ந்த ஒருத்தியையே அவனும் அவளும் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரே குலத்தைச் சேராதவர்களாயிருப்பின் மணந்து கொள்ளலாம். பெரும்பாலும் ஒரு ஊரைச் சேர்ந்த அனைவரும் ஒரே குலத்தவர்களாக அமைந்து விடுவதாலேயே ஒருவன் வெளியூரைச் சேர்ந்த ஒரு பெண்ணையே மணமகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகின்றது.

வயது வந்தபின் திருமணம் செய்து கொள்வதே எல்லாப் பிரிவையும் சேர்ந்த படகர்களின் பொதுவான வழக்கம். சில போது குழந்தை மணங்களும் நிகழ்வதுண்டு. திருமணத்திற்கு முன்பு மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து பழகுதல் உண்டெனினும் திருமணம் செய்து கொள்ளப் பெற்றோரின் உடன்பாட்டினைப் பெற்றே ஆகவேண்டும். ஒருத்தி இறுதியாக ஒருவனைக் கணவனாக அடையுமுன், பலர் அவளைப் பெண் பார்த்து நிராகரித்திருப்பினும் அது அவளுக்கு இழிவு தருவ

* முந்து நூல் (op. cit.)

தாகக் கருதப்படுவதில்லை. உதயர்கள் பிரிவினைத் தவிர மற்ற படகர் பிரிவினர் திருமண நிகழ்ச்சி மிக எளிமையாகவே நடைபெறுகிறது. திருமணத்திற்காகக் குறிக்கப்பட்ட நாளுக்கு ஓரிரு நாள்கள் முன்னர் மணமகன் தன் உடன்பிறந்தவர் களுடன் மணப் பெண்ணின் இல்லத்திற்கு மரியாதை நிமித்தம் செல்வான். அங்குக் கூடியிருக்கும் படகர் அனைவரை யும் கால்களைத் தொட்டுக் கும்பிடுவான். மணநாளன்று மண மகள் கோத்தர்கள் இன்னிசையோடு மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவாள். அவள் வீட்டு வாசலில் வந்து நின்றவுடன் அவள் மாமியாரோ, மைத்துனியோ ஒரு கலத்தில் தண்ணீர் கொண்டுவந்து மூன்று முறை அவள் கரங்களில் ஊற்றுவர். ஒவ்வொரு முறையும் அவள் அத்தண்ணீரைத் தன் பாதங்களின் மீதுவிழும்படி விட்டு விடவேண்டும். பின் மாமியார் அவள் கழுத்தில்பாசி மணி மாலை அணிவித்து அவளை வீட்டின் வெளி அறைக்குள் அழைத்துச் சாமைச் சோறும் பாலும் தருவாள். அவள் அவற்றை உண்பதாகப் பாவனைச் செய்வாள். மணமகன் சகோதரி இவள் கையலம்ப நீர் தரவேண்டும். பின் மணமகளும் வேறு இரு பெண்களும் (பெரும்பாலும் மணமகன் உடன்பிறந்தோர்) கோத்தர்கள் இன்னிசை முழங்க ஓடைக்குச் சென்று அலங்கரிக்கப்பட்ட பானைகளில் சமையலுக்காகத் தண்ணீர் கொண்டு வருவர். பின் மணமகள் தன் புதிய உறவினர்களை வணங்கி அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவாள். மணச்சடங்குகள் விருந்தோடு முடிவடையும். சில இடங்களில் மணமகளும் மணமகனும் வீட்டுத்திண்ணையில் அமர்ந்து தங்களுக்குத் தரப்படும் பரிசுகளை ஏற்றுக் கொள்வர்.

"படகர் எளிமையும், தேவைகள் மிகுதியும் இல்லாத வாழ்க்கை முறையையும் மேற்கொண்டிருப்பினும், மதுவிற்கும், மங்கையர்க்கும் அடிமையாகும் பழக்கத்திலிருநது அவர்களால் மீள இயல்வதில்லை. படகர் இனப் பெண்கள் எளிய மணமுறிவு நெறியைப் பின்பற்றித் தங்கள் கணவர்களை எத்தனை முறை வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ள வாய்ப்புள்ளது. தனது இனத்தைச் சேர்ந்த மற்றவர்களுடன் மறைவாகவும் அவள்

தொடர்பு கொள்ள முடியும். இளமையும் வலிமையும் நீங்கும் வரை படகரினப் பெண்கள் தங்கள் கணவர்களை மாற்றிக் கொண்டிருந்து பின்னர் இறுதியாகத் தேடிக் கொண்ட கண வனோடு நிலைத்து விடுவது பொதுவாகக் காணக்கூடியதாகவே உள்ளது. முதுமையும் தள்ளாமையும் அத்தகைய களியாட்டக் காரர்களை இயலாமையில் தள்ளிவிடுகிறது.'' என ஒருவர் தெரிவித்துள்ளார். நீலகிரியில் முன்பு குற்றவியல் நடுவராகப் பணியாற்றிய ஒருவர், திருமணமான ஒருவன் மற்றொருவனால் தன் மனைவி தீய நோக்கத்தோடு கடத்தப்பட்டுவிட்டதாகத் தொடர்ந்த வழக்கினைத் தான் ஒன்றுக்குமேல் விசாரிக்க நேரிட்டுள்ளது என என்னிடம் கூறினார். அவ்வழக்குகளில் கடத்தப்பட்ட பெண்ணின் தந்தை கடத்தலுக்கு உடந்தையாக இருந்தவனாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளான். அவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட பெண்ணின் தந்தை அவன் கணவன் தனக்குப் பரிசப்பணம் ஏதும் தராமலேயே அவளோடு வாழ்க்கை நடத்தியதாகவும் ஆகவே தன் மீதோ அவளைக் கடத்திச் சென்றவன் மீதோ குற்றம் சாட்டி நிரூபிக்க முடியா தென்றும் முறையிட்டுக் கொண்டுள்ளான். பல பெண்களை மணம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டிருப்பதோடு அவ் வாறு பல மனைவியரை மணப்பது ஓர் ஆடவனுக்கு இலாபகர மானதாக இருப்பதாகவே கூறப்படுகிறது. ஒவ்வொரு மனைவி யும் தன் வயிற்றுக்கு வழிதேடிக் கொள்ள உழைப்பதோடு, தன் குழந்தைகளையும் ஆதரித்து வளர்க்கிறாள். பல மனைவியரை உடைய கணவன் குடும்ப நிருவாகத்தின் ஒவ்வொரு துறையை யும் ஒருத்தியிடம் ஒப்படைத்து விடுகிறான். கைம்பெண்கள் மணம் புரிந்து கொள்வது இயல்பானதாகவே உள்ளது. ஒருத்தி இறந்த தன் கணவனின் உடன் பிறந்தவர்களை மணம் செய்து கொள்ளலாம். ஒரு பெண்ணின் கணவன் வெளியூர் சென்றிருக் கும்போது, அவள் தன் கணவனின் உடன்பிறந்தவர்கள் தன் னோடு உறவு கொள்ள உடன்பாடுடையவளாக நடந்து கொள் வது படகர்களிடையே ஒழுக்க நடைமுறையாகக் கருதப்படுகிறது. கணவன், மனைவியைவிட மிக இளையவனாக இருக்கும்படி யான சூழ்நிலைகள் உள்ளன. அததகைய சூழ்நிலைகளில் அவன் உரிய பருவம் அடையும்வரை அவனுடைய மனைவி தன் அத்தை

மகனோடோ அல்லது தனக்கு விருப்பமான வேறொரு வனோடோ உடலுறவு கொள்வாள்.

உதயர்களின் திருமணச் சடங்குகள் சமவெளியில் வாழும் மற்றச் சாதியாரின் திருமணத்தைப் போல விரிவான பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. திருமண நாளன்று பொழுது புலருமுன் மணமகனின் சகோதரர்களும்,பங்காளிகளும் சில உதயர்களுடன் கோத்தர்களின் இன்னிசை முழங்கக் காட்டுக்குச் சென்று அங்கிருந்து பால்கம்பம் நடுவதற்காகப் பாலை (*Mimusops hexandra*) மரத்திலிருந்து இரண்டு கொம்புகள் வெட்டி வருவர். கெட்ட சகுனம் எதிரே வந்து விடக்கூடாது என்பதற்காகவே பொழுது புலருமுன் செல்லும் பழக்கம் மேற்கொள்ளப்படுகிறது. மரக் கொம்புகள் கொடுவாளால் ஒரே வீச்சில் வெட்டப்பட வேண்டும். வெட்டப்பட்ட கிளைகள் தரையில் வைக்கப்படாமல் ஒரு துணி விரிப்பின் மீதே வைக்கப்பட வேண்டும். இச்சடங்கின் போது உடன்சென்ற மற்ற உதயர்கள் மணப் பந்தலுக்காகப் பன்னிரண்டு பாலை (*Mimusops*) மரக் கொம்புகளையும் வெட்டி வருவர். திருமணம் நடைபெறவுள்ள வீட்டு முற்றத்தில் இரண்டு குழிகள் தோண்டப்பட்டு அவற்றில் சாணநீர் தெளிப்பர். பூசாரி பால்கம்பங்களுக்குக கரும்பு, வெல்லம் ஆகியன படைத்துப் பூசை செய்து அதில் இரண்டு நூல்களைக் கட்டுவார். பிறகு அக் கம்பங்களை மணமக்களின் பெற்றோரும் பூசாரியுமாக ஐந்து பேரும் சேர்ந்து குழிகளில் நடுவர். அடுத்துப் பால்கம்பத்திற்கு அருகே திருமணப் பந்தலும் மணமேடையும் அமைக்கப்படும். இரண்டாம் நாள் மணமகன் வீட்டார் கோத்தர்கள் இன்னிசை முழங்க ஆடுதற்குரிய அலங்கார ஆடை அணிகள் தரித்து மணமகள் இல்லம் செல்வர். அங்கு விருந்து நடைபெறும். மணமகள் விளக்கினை வணங்கிய பின்னர் தன் பெற்றோர் காலில் விழுந்து வணங்குவாள். அவர்கள் அவளை ''உன் வயிறும், கரங்களும் சீக்கிரம் வாய்க்கட்டும்! வாழ்க்கை வளம் பெருகட்டும்'! எனக் கூறி வாழ்த்துவர். மணமகள் ஊர்வலமாக மணமகன் இல்லத்திற்கு உதயர்கள் சூழவும் ஒரு தொரையன் அரிசி மூட்டையைச் சுமந்து வரவும் அழைத்துச் செல்லப்படுவாள். மணமகன் வீட்டு வாசலில் அவள் கண்கள் கட்டப்படும். அவள் மாமியார் அவள்

பாதங்களில் தண்ணீரை ஊற்றி ஆரத்தியெடுத்தபின் அவள் வலக் காலை முதலில் வைத்து உள்ளே நுழைந்து பாயில் அமர்வாள். கோத்தர் இசைவாணர்களுடன் மணமகனுக்கு நெருங்கிய உறவினர்களானமூன்றுமணமான பெண்கள் ஓர் அருவிக்குத் தும்பை இலைகளால் (*Leucar aspera*) அலங்கரிக்கப்பட்ட மூன்று பானைகளுடன் செல்வர். அங்குப் பூசாரி பூசை செய்தபின் அப் பானைகளில் நீர் நிரப்பி அவற்றை ஊர்வலமாக மணமேடைக்குக் கொண்டு வருவர். மணமேடையில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று பாத்திரங்களில் மும்முறை அவர்கள் மூவரும் தாங்கள் கொண்டுவந்த நீரினை ஊற்றுவர். மணப்பந்தலில் தொரெயன் ஒருவன் உயரமான இரண்டு மேடைகள் அமைப்பான். மணமகன் தன் உடன்பிறந்த சகோதரர்களோடும் சகோதரிகளோடும் மும்முறை மணப்பந்தலைச் சுற்றிவந்த பின் பந்தலினுள் நுழைந்து அந்தப் பாத்திரங்களில் உள்ள நீரில் குளிப்பான். அதன்பின் புத்தாடை புனைந்து கொள்ளும் அவனை அவன் தாய்மாமன் வெளி அறைக்குத் தூக்கி வருவான். அடுத்து மணமகளுக்கும் இத்தகைய சடங்குகள் நிகழ்த்தப்பட்டபின் அவள் உள் அறைக்குத் தூக்கிச் செல்லப்படுவாள். குறிப்பிட்ட நல்ல நேரம் நெருங்கியதும் மணமக்கள் மணப்பந்தலை அடைவர். அங்கு மணமகன் ஒரு பாயின் மீது நிற்க நான்கைந்து ஆண்கள் அவனுக்கும் மணமகளுக்கும் இடையே ஒரு திரைச்சீலையினைத் தொங்கவிட்டுப் பிடித்துக் கொள்வர். பூசாரி அப்பொழுது அவர்கள் ஆடைமுனைகளைச் சேர்த்து முடிவார். அவர்கள் சிறுவிரல்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட பின்னர் திரைச்சீலை விலக்கப்படும். அதன்பின மணமக்கள் பாயில் அமர்வர். மணமகன் உடன்பிறந்தவன் ஒரு தட்டில் சோற்றினை வைத்து அதன் நடுவில் குழி செய்து அதில் நெய் பெய்து திரியிட்டு ஏற்றி அதை மணமக்களுக்கு நடுவே கொண்டு வந்து வைத்து அமர்வாள். இதனை ஆனந்த ஆரத்தி என்பர். தங்கத்தால் வட்ட வடிவமாகச் செய்யப்பட்ட தாலியினைப் பூசாரி வழிபாடு நிகழ்த்தி மணமகனிடம் தர அவன் அதனை மணப்பெண்ணின் கழுத்தில் அணிவிப்பான். சிலவிடங்கள் வேறு வேறு ஊரைச் சேர்ந்த நான்கைந்து மனைவியையுடைய பெரியவர்கள் தாலியை மணமகள் கழுத்தில் அணிவிப்பதும் உண்டு.

மணமக்கள் பின்னர் சம்பந்த மாலை எனப்படும் மலர்மாலை களைச் சூடிக் கொள்வர். அவர்கள் மணிக்கட்டில் கங்கணம் அணிவிக்கப்படும். மணமகளின் உடன்பிறந்தவள் ஒரு குவளை யில் பாலும், சோறும் கொண்டு வருவாள். அதனுள் இணைக்கப்பட்ட மணமக்கள் விரல்கள் அழுத்தப்படும். அதி லிருந்து கொஞ்சம் சோற்றை எடுத்து அவர்கள் மும்முறை ஒருவர் வாயில் மற்றவர் இடுவர். அவர்கள் கையலம்பியபின் அவர்கள் தாய்மாமனோ, பூசாரியோ அருந்ததி பார்த்தீர்களா என வினவுவர். அதற்கு அவர்கள் பார்த்தோம் எனப் பதிலிறுப் பர். மூன்றாம் நாள் புதிதாக மணந்து கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்குவர். பின்னர் கங்கணம் அவிழ்க்கப்படும். ஓடைக்குச் சென்று அவர்கள் விதைப்பதாகப் பாவனை செய்து நெல்லையும் பருத்திக் கொட்டையையும் மாட்டுச் சாணத்தால் தொரையன் செய்து வைத்திருக்கும் அகல கலத்தில் தூவுவர். உதயர்கள் கைம்பெண் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். கணவனை இழந்த ஒருத்தி தன் கணவனின் ஒன்று விட்ட சகோதரர்களை மணந்து கொள்ளலாமேயன்றிக் கணவனோடு உடன்பிறந்தவர்களை மணக்க முடியாது. திருமணச் சடங்கின் போது ஒரு பூசாரி மணமக்கள் நெற்றியில் விபூதி பூசி அவர் களுடைய திருமண உறவை அறிவிப்பார்.

முனைவர் ரிவர்ஸ் படகர் சொத்துரிமை பற்றிக் குறித்துள்ள தாவது:- "திரு பிரீக்ஸ் தோடர்களிடையே பெற்றோருடைய வீட்டினைக் கடைசி மகனுக்குரியதாகக் கொடுக்கப்படும் வழக் கம் இருப்பதாகக் குறித்துள்ளார். இது தவறான கருத்து எனத் தெளிவாகப் புலனாகிறது. தோடர்களிடம் இப்பழக்கம் என்றும் இருந்ததில்லை. இம்முறை படகர்களிடமே வழக்கில் உள்ளது. குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் வளர்ந்தவுடன் திருமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் நடத்த வேறு வீடு கட்டிக் கொண்டு பிரிந்து செல்கின்றனர். பெற்றோருடன் இருந்து அவர்களை இறுதிவரை காப்பாற்றும் பொறுப்பு கடைசிப் பிள்ளைக்கே உரியதாகின்றது. அவர்கள் இறந்தபின், பெற்றோ ரின் வீட்டில் தொடர்ந்து வாழும் அவன் அந்த வீட்டுக்கு உரியவனாகின்றான் என எனக்குக் கூறப்பட்டது."

முதன் முறை கருவுறும் ஒருத்திக்கு ஏழாம் மாதத்தில் ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. இதுவே திருமண உறவை உறுதி செய்யும் சடங்காக இருப்பதால் இன்றியமையாது நடத்தப்பட வேண்டியதாகின்றது. இச்சடங்கு நடந்து முடிந்தபின் மண முறிவு பெறவேண்டுமானால் இனப் பஞ்சாயத்தார் உடன்பாடு பெற்றாக வேண்டும், இச்சடங்கு நடத்தப்பட வில்லையானால் ஒருவன் தன் மனைவிக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குத் தானே தந்தையென உரிமை கொண்டாட முடியாது. இச்சடங்கு கன்னி கட்டோது அல்லது கன்னி காதோது (நூல் கட்டுதல் அல்லது நூல் எறிதல்) என அழைக்கப்படும். இச்சடங்கிற் காகக் கணவனும் மனைவியும் கூடியிருப்பவர்களுக்கு நடுவில் உட்கார்ந்த பின், கணவன் தன் மாமனாரிடம் தன் மனைவி யின் கழுத்திலிருக்கும் நூலை எறிந்துவிடலாமா எனக்கேட்டு அவரின் அனுமதி பெற்று மனைவியின் கழுத்தில் உள்ள நூலை அகற்ற முற்படுவான். அவன் அதனை அகற்றும்போது அதில் முடிச்சு விழாதபடியும் மனைவியின் கொண்டையில் மாட்டிக் கொள்ளாதபடியும் அகற்ற வேண்டும். (இந்தச் சடங்கின்போது வேண்டுமென்றே நிறையச் சவுரி முடி வைத்து அவன் மனைவி யின் கொண்டையைப் பெரிதாகப் போட்டிருப்பர்) அது கொண்டையில் மாட்டிக் கொள்ளுமானால் அவன் மூன்று ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். இச்சடங்கு நடக்கும் நாளில் சடங்கிற்குரிய கணவன் மனைவியரைத் தீட்டுப் பட்ட வர்களாகக் கருதுவர். அவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தே பரிசுகளைப் பெறுவர். அவர்கள் அன்று தூங்கப் பயன்படுத்தும் பாய் மறுநாள் காலையில் கழுவப்படுவதோடு அவர்களும் குளித்துத் தீட்டினைப் போக்கிக் கொள்வர்.

முதல் மகப்பேறு வீட்டுக்குள் நிகழக் கூடாது ஆகையால் வீட்டுத் திண்ணை மகப் பெறும் அறையாக அமைத்துக் கொள்ளப்படும். பிளளை பிறந்தவுடன் பிள்ளை பெற்றவளை வீட்டின்புறக்கட்டுக்கு அழைத்துக் கொள்வர். பிறை நிலாவைப் பார்த்தபிறகே, பிள்ளையைப் பெற்றவள் தீட்டு நீங்குமாகை யால் அதுவரை அவள் புறமனையிலேயேதங்கியிருக்க வேண்டும். ஒருத்தி தன் பிறந்த வீட்டில் மகப்பெற்றால், பிள்ளை பிறந்த

ஒரு மாதத்திற்குள் ஒரு நல்ல நாளில் கணவன் இல்லம் திரும்பு வாள். கணவன் இல்லம் வந்தவுடன் பால் கூடத்தில் விளக்கருகே நிற்கும் ஒரு பெரியவர் காலடியில் தன் குழந்தையைக் கிடத்து வாள். அப்பெரியவர் தனது வலக்கரத்தைக் குழந்தையின் தலைமீது வைத்து அதனை வாழ்த்துவார். பின்னர் விருந்து நடைபெறும். அதற்கு முன் ஒரு கலத்தில் சோறும் இன்னொரு கலத்தில் பாலும் கொண்டுவந்து வைப்பர். கூடியுள்ள உறவினர் கள் பாலையும் சோற்றையும் விரலில் தொட்டுக் குழந்தையின் நாவில் வைப்பர்.

குழந்தை பிறந்த ஏழாம், ஒன்பதாம் அல்லது பதினொான் றாம் நாளில் அதற்குப் பெயரிடுவர். அன்று ஊராருக்கு நல்ல விருந்து வைப்பர். குழந்தையின் பாட்டன் (இயலுமானால் தந்தை வழியினன்) ஒரு பசுவினைக் கறந்து அப்பாலைப் பால் கூடத்திலுள்ள ஒரு பித்தளைப் பாத்திரத்தில் ஊற்றுவார். அத னோடு சமைக்கப்பட்ட சாமைச்சோறு கொஞ்சம் கலக்கப்படும். குழந்தையை ஓடையிலிருந்துகொண்டு வந்த தண்ணீரில் குளிப் பாட்டுவர். பின் அதன் நெற்றியில் விபூதி பூசி இடுப்பில் மஞ்சள் நூல் கயிற்றைக் கட்டுவர். கைகளில் எஃகு அல்லது வெள்ளி வளை யல் அணிவிப்பர். வெள்ளிப் பாசி ஒன்று நூலில் கோத்து அதன் கழுத்தில் கட்டப்படும். இவ்வாறு அலங்கரிக்கப்பட்டபின் ஊரில் உள்ளவர்களுள் மனைவியை இழக்காத வயதில் மூத்தவர் குழந்தையைத் தூக்கி முன்பே முடிவு செய்யப் பட்டிருக்கும் பெயரை அதற்குச் சூட்டுவார். அப்பெரியவரும் குழந்தையின் பெற்றோரும் பாட்டன்மார்களும் குழந்தையின் வாயில் கொஞ்சம் பாலினை வைப்பர்.

ஆண், பெண் குழந்தைகளுக்கு ஏழு மாதங்களானவுடன் முடி இறக்கும் சடங்கு நடைபெறும். குழந்தையை ஒரு படகன் மடியில் அமர்த்தி அதன் தலையில் ஒரு படகனோ அம்பட் டனோ தண்ணீரைத் தெளித்தபின் அக்குழந்தையின் தாய் மாமன், கத்தியால் கொஞ்சம் மழித்தபின் கத்தியை வேறொரு படகனிடமோ அம்பட்டனிடமோ கொடுத்து முடி இறக்கும் பணியை முடிக்கும்படி செய்வான்.

கோத்தகிரிக்குச் சென்றிருந்தபோது படகர் உட்பிரிவைச் சேர்ந்த ஒருவரின் சாவுச் சடங்குகளைப் பார்த்துப் பின்வரும் குறிப்புகள் எழுதப்பட்டன. சாவு நெருங்கும்போது வீரராயர் பணம் எனப்படும் தங்கக் காசை அல்லது வெள்ளிக் காசை நெய் அல்லது வெண்ணெயில் முக்கிச் சாகக் கிடப் பவனுக்கு விழுங்கத் தருகின்றனர். அக்காசை விழுங்க இயலாத நிலையில் சாவினை மிக நெருங்கியிருப்பானாகில் அக்காசினை அவன் கையினில் வைத்துக் கட்டுவரெனத் திரு நடேச சாஸ்திரி கூறுகின்றார். எங்களுக்குத் தகவல் தந்தவர் இப்பொழுது அவ் வாறு செய்யும் பழக்கம் இல்லை எனக் கூறுகின்றார். "அந்தச் சிறிய காசு உள்ளே எளிதாகச் செல்லும். சாகின்றவனுக்குத் தங்கமும் நெய்யும் தேவையே. நெய் இருண்ட சாவு ஆற்றினை நோக்கிய அவன் பயணத்தின்போது அவன் ஆற்றலைப் பாதுகாக்க உதவுவது. தங்கக்காசு, இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட யாவரும் அஞ்சும் இடைவெளிப் பாலத்தின் பாது காவலனுக்குக் கட்டணம் செலுத்துவதற்காக உதவுவது. காசு விழுங்கும்போது சாகக் கிடப்பவன் சுய நினைவோடு இருப்பா னாகில் அந்தப் பாவி தனக்கு முடிவு நெருங்கி விட்டதை உணர் வான். மனக்கசப்பும் தங்கமும் அவனை மீண்டும் எழுந்திருக்க விடுவதில்லை. வீரப் பணத்தை விழுங்கியபின் மறுபடியும் எழுந்து உலவியவர் யாருமில்லை. நினைவு தவறியதாலோ, சோர்வி னாலோ காசை விழுங்க இயலாதவனாயின் அதனைப் பத்திர மாக ஒரு துணியில் முடிந்து வலக் கையில் கட்டிவிடுவர். இவ் வகையில் ஒரு நல்ல ஆத்மா புண்ணிய உலகை அடைய எந்தத் தடையும் ஏற்படாதபடி செய்ய முடிகின்றது" எனக் கோவர்* குறித்துள்ளார். சாகக் கிடப்பவனுக்குக் காசு தருதல் படகர் சடங்குகளில் சிறப்பான ஒன்றாகும். படகரின் நாட்டார் கதை களில் சாவின் வாசலில் நிற்பவன் வீரராய பணம் கேட்ப தான நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. உயிர் பிரிந்தபின் பிண ஊர்வலத்திற்கான தேர் கட்டி முடியும்வரை பிணத்தை வீட்டி னுள்ளேயே வைத்திருப்பர். திரு கோவர் இறந்தவரைக் கொண்டு சென்று எரிப்பதில் இருபத்திநான்கு மணி நேரத்திற்குமேல்

* முந்து நூல் (op. cit)

காலம் கடத்தக் கூடாது எனக் குறித்திருந்தாலும், இன்று படகர்கள் எல்லா உறவினர்களும் வந்து சேரும் வரை சில போது இரண்டு, மூன்று நாள்கள்வரை ஈமச்சடங்குகளைத் தள்ளி வைக்கின்றனர். செவ்வாய்க் கிழமை தவிர மற்ற எல்லா நாள்களிலும் பிணத்தை எரிக்கலாம். சாவுச் செய்தியினைத் தொலைவில் உள்ள அட்டிகளுக்கெல்லாம் சென்று தெரிவிக்கும் கடமை தொரையனுடையது. அதற்காக அவனுக்கு ஒரு ரூபாய் கூலியாகத் தரப்படுகிறது, ஒரு சிற்றூரை நெருங்கியவுடன் அவன் தன் உருமாலையை எடுத்துவிடுவான். இது அவன் துக்கச் செய்தி தெரிவிக்க வந்தவன் என்பதனை மற்றவர்களுக்கு உணர்த்திவிடும். ஊர்ப் புறத்தே, மலைப் பக்கத்தில் நின்றபடி "தோ தோ ஊரிலே யாரு?" எனக் கூக்குரல் எழுப்பியபின் தான் சொல்ல வந்த செய்தியைத் தெரிவித்துவிட்டு அடுத்த ஊரை நோக்கிச் செல்வான்.

பிணம் சுடுவதற்காக முடிவு செய்யப்பட்ட நாளன்று காலையில் பிணத்தை ஒரு 'சார்பாயில்' அலலது நாட்டுக் கட்டிலில் வைத்து வீட்டுக்கு வெளியே தூக்கி வருவர். ஓர் எருமையை அக்கட்டிலை மூன்றுமுறை சுற்றும்படி செய்வர். அடுத்துப் பிணத்தின் வலக் கையைத் தூக்கி எருமையின் கொம்புகளின் மேல் சுற்றியபின் கீழே வைப்பர். அந்த எருமையிலிருந்து கொஞ்சம் பால் கறந்து அதனைப் பிணத்தின் வாயில் விடுவர். இச்சடங்கிற்கு முன் இரண்டு அல்லது மூன்று எருமைகளை அவிழ்த்து விடுவர். அவற்றில் ஒன்றைமட்டும் தோடர்கள் பிடிப்பது போலப் பிடித்து வந்து மேற்கூறிய சடங்குகளுக்கு உரியதாக்குவர். பிணம் எரிப்பதற்குரியதான தேர் ஐந்து அல்லது பதினொரு அடுக்குகளை உடையதாகக் கட்டப்பட்டுத் துணிகளாலும், துணிக் கொடிகளாலும் அலங்கரிக்கப்படும். தேரின்ஒரு தட்டு கறுப்புச் சீட்டித் துணியால் மூடப்பட வேண்டும். ஒரு சிறுவனுடைய இறுதிச் சடங்கின்போது தேரில் கொடிகள் சுற்றிலும் அமைக்கப் பட்டதோடுகூட ரொட்டி, ஆரஞ்சு, வாழைப்பழம் முதலியவற்றோடு அச்சிறுவன் பேசல் மிசின் பள்ளியில் படிக்கப் பயன்படுத்திய புத்தகங்களோடு கூடிய பையையும் கட்டித் தொங்கவிட்டு இருப்பதைப் பார்த்ததாகத் திரு எ.சி. கிளேய்ட்டன் பாதிரியார்



பிணத்தோடு கூடிய படகர் சமத்தேர்

படகர் ஈமத்தேர்

குறித்துள்ளார்.* ஏழை எளியவர்கள் தேருக்குப் பதிலாக ஒரு கட்டிலின் மேல் துணியை விரித்து அதனைச் சுற்றிலும் ஐந்து குடைகளை அமைத்துக் கொள்வார்கள். எருமையைச் சுற்றச் செய்யும் சடங்கு முடிந்தவுடனே பிணத்தைக் குளிப்பாட்டிக் கோட்டு, உருமாலை அணிவித்துத் தேருக்குத் தூக்கிச் சென்று தேரின் கீழ்த்தட்டில் வைப்பர். அதனைச் சுற்றி ஒரு புது துப்பட்டியைப் போர்த்துவர். பிணத்தின் நெற்றியில் இரண்டு வெள்ளி காசுகள் பதிக்கப்படும். தேருக்கு அடியே பணியாரம், வறுத்த நெல், புகையிலை, கடலை, வெல்லம், சாமை மாவு ஆகியன கொண்ட கூடைகளும் வைக்கப்படும். இறந்தவனுக்கு உறவினரும் நண்பர்களுமான பல பெண்கள் ஓடிச் சென்று கட்டிலின் மேல் பிணத்தைச் சுற்றி அமர்ந்துகொள்வர். பிணத்தின் தலை மாட்டில் உட்கார்த்திருப்பவள் மணி ஒன்றை அடிக்கும்வரை அங்கேயே உட்கார்ந்திருக்கும் பெண்கள் மணி அடித்ததும் எழுந்து செல்வர். அடுத்து மற்றுமொரு பெண்கள் கூட்டம் அவ்விடத்தில் வந்து அமரும். இதற்கிடையே படகர்கள் பெருமளவில் கூடிப் பிணத்தின் தலையைத் தொட்டு வணக்கம் செலுத்துவர். தொரையர்களும், பெண் உறவினர்களும் பாதங்களைத் தொட்டு வணக்கம் செலுத்துவர். துப்பட்டியினுள்ளே சிவப்பு மஞ்சள் கோடுகள் கொண்ட துணி இவ்வாறு தொடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும். பிறகு கோத்தர்கள் இசை முழக்கத்திற்கியைய எல்லோரும் பிணத்தைச் சுற்றி ஆடுவர். நெருங்கிய உறவினர்கள் அவ்வாறு ஆடும்போது தங்கள் உருமாலைகளையும் கம்பளித் தொப்பிகளையும் மரியாதையின் அடையாளமாகக் கழற்றிவிடுவர். பெரும்பாலான ஆட்டக்காரர்கள் பல்வண்ண மேல் சட்டைகளையும் அதற்குப் பொருத்தமான தலைப்பாகைகளையும் அணிந்திருப்பர். 'இறந்தவர் ஆணாயின் ஆட்டங்களில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. பெண்ணாயின் இறந்தவளுக்கு நெருங்கிய உறவினளான ஒரு மூதாட்டி ஆட்டங்களில் பங்கு பெறுவாள்.'' எனத் திரு நடேச சாஸ்திரி எழுதியுள்ளார். ஆனால் நாங்கள் நேரில் பார்த்த இரண்டு ஆண்களின் சாவுச் சடங்குகளில் சில பெண்களும் ஆண்களோடு ஆட்டத்தில் ஈடுபட்டதைக் கண்டோம்.

---

* சென்னை மெயில் இதழ், *1907*. (Madras Mail, 1907.)

வழக்கமாகப் பிற்பகல் இரண்டு அல்லது மூன்று மணிவரை உறவுக்காரர்கள் வந்தபடி இருப்பர். வெளியூரிலிருந்து வருபவர்கள் ஊருக்கு வெளியே ஒன்றாகக் கூடிப் பிறகு கூட்டமாகத் தேரை நோக்கி வருவர். இறந்தவரின் மருமகன்கள் மட்டக் குதிரைகள் மேல் ஏறி வருவர். சிலர் சாமையைச் சுமந்து வருவர். அவர்கள் தேரினை நெருங்கும் போது, 'சா! கொச்; சா! கொச்'' எனக் கூக்குரலிட்டப்படி வருவர். முத்துக் கோத்தர்கள் எருமையின் கொம்பினை ஒத்ததாகக்காட்சி தரும் இரட்டை அரிவாளைக் கொண்டு வருவர். அது கோடரி, புல்லாங்குழல், கைத்தடி ஆகியவற்றுடன் தேரின் மீதோ அதன் பக்கத்திலோ வைக்கப்படும். எல்லோரும் கூடியபின் கட்டிலை வீட்டிற்கும் சுடுகாட்டிற்கும் இடையே உள்ள ஒரு வெட்ட வெளிக்குத் தேர் அதனைத் தொடர்ந்து வரத் தூக்கிச் செல்வர். பெண்கள் கடலை, சாமை முதலியன உள்ள கூடைகளைத் தூக்கிச் செல்வர். பின்னர் தேரின் அலங்காரங்களைக் களைந்து அதனைச் சிறு துண்டுகளாக உடைப்பர். இறந்தவரின் மனைவியைக் கட்டிலுக்கருகே அழைத்துவந்து அவளுடைய இலை மூக்குத்தியையும் பிற அணிகளையும் களைவர். நாங்கள் நேரில் கண்ட இரு சடங்குகளிலும் இறந்தவரின் மனைவி தன் தோளில் குறுகலான சீட்டித் துணியைப் போட்டுக் கொண்டிருக்கக் கண்டோம். பிணத்தருகே நின்று அவள் தன் காதணிகளிலிலிருந்து கொஞ்சம் கம்பியையும், ஒரு கொத்துத் தலைமுடியையும், காதோலையிலிருந்து கொஞ்சம் பனை ஓலைச் சுருளையும் எடுத்துத் தனது கணவனது ஆடையில் வைத்துக் கட்டுவாள். அவளுக்குப் பின் இறந்தவனோடு உடன்பிறந்தவர்களான பெண்கள் தங்கள் தலைமுடியில் ஒரு கொத்தை அறுத்து அவன் ஆடையில் வைத்துக் கட்டுவர். இறந்தவனோடு முறையற்ற வகையில் உறவு கொண்டிருந்த பெண்களும் அதுபோல ஒரு கொத்து தலைமுடியை அறுத்து அதனை விராலி (*Dodonala viscosa*) இலைக் கொத்தோடு சேர்த்துக்கட்டி அவனது ஆடையுள் வைப்பர். இறந்தவன் தன் வாழ்நாளில் செய்த பாவங்களையெல்லாம் ஒரு பெரியவர் பிணத்தின் தலைமாட்டில் நின்று வரிசைப் படுத்தி ஒப்பிக்கும் நிகழ்ச்சி கேட்போர் மனத்தைத் தொடுவதாகும். பின்வரும் வரிகளை அல்லது அவற்றின் சற்று

மாறுபட்ட பாடங்கள் கொண்ட வரிகளை தனது ஒவ்வொரு வரியைச் சொல்லி முடித்ததும் வலக் கையைப் பிணத்தின் பாதத்தைச் சுட்டி நீட்டியபடி ஒப்பிப்பவர் கூறுவார். நான் அதனை ஒலிப்பதிவு செய்து, பின்னர் படகர், கோத்தர், தோடர் ஆகியோரிடையே மறுபடியும் திரும்ப ஒலிபரப்பிய போதெல்லாம் அவர்களை அது மிகவும் கவர்ந்தது என்றே சொல்லவேண்டும். அவ்வாறு ஒப்பிக்கப்படும் பாவங்களாவன:-

இது ஆண்டியின் சாவுச் சடங்கு.
அவன் நினைவாகப் பெல்லி பசுவின் கன்றை உரிமையோடு
திரிய விடுகிறேன்.
இந்த உலகத்திலிருந்து வேறொரு உலகத்திற்கு,
அவன் தேரில் பயணம் போகிறான்.
இந்த உலகில் அவன் செய்தன அனைத்தும்,
அவன் முன்னோர் செய்த பாவங்கள் அனைத்தும்,
அவன் பாட்டன் பூட்டன் செய்த பாவங்கள் அத்தனையும்,
அவன் பெற்றோர் செய்த பாவங்கள் அத்தனையும்,
அவன் செய்த பாவங்கள் அத்தனையும்,
உடன்பிறந்தவர்களோடு மனங்கோணியது,
வயலில் எல்லை வரப்பைத் தள்ளிப் போட்டது,
வேலியை அகற்றிப் பக்கத்து நிலத்தினைப் பறித்துக்
கொண்டது,
உடன்பிறந்தவர்களைத் துரத்தியது,
திருட்டுத்தனமாகக் கள்ளி மரம் வெட்டியது,
தனது வேலிக்கு வெளியே இருந்த முள்ளியை வெட்டியது,
கொட்டி மரத்தின் முள்கொம்பை இழுத்து முறித்தது.
விளக்கு மாற்றால் பெருக்கியது,
பச்சைக்கிளையை முறித்தது,
பொய்கள் புகன்றது,
நாற்றுக்களை வேரோடு பறித்தது,
வளரும் செடிகளைப்பிடுங்கி வெயிலில் போட்டது,
பறவைக் குஞ்சுகளைப் பிடித்துப் பூனைகளுக்குத் தின்னக்
கொடுத்தது,
ஏழைகளையும், நொண்டி முடவர்களையும் தொல்லைப்
படுத்தியது,

சூரியன் முன் அழுக்குத் தண்ணீரை வீசிக் கொட்டியது,
சந்திர கிரணத்தைப் பார்த்தபின் போய்த் தூங்கியது,
நிறைய பால் கறக்கும் எருமையைப் பொறாமையோடு பார்த்தது,
மற்றவர்களுக்கு மிக நல்லவிளைச்சல் கிடைத்தபோது பொறாமைப்பட்டது,
எல்லைக் கற்களைப் பிடுங்கியது,
தண்ணீரைத் தீட்டுண்டாகும்படி அழுக்குப்படுத்தியது,
எரியும் தணலின்மீது சிறுநீர் கழித்தது,
பூசாரியிடம் நன்றிகெட்டதனமாக நடந்து கொண்டது,
மேலதிகாரிகளிடம் கோள் சொன்னது,
சோற்றில் நஞ்சு கலந்தது,
பசியோடு வந்தவனுக்கு உணவளிக்காதது,
குளிரில் நடுங்கியவனுக்குக் கணப்பு உதவாதது,
பாம்புகளையும் பசுக்களையும் கொன்றது,
பல்லிகளையும் அட்டைகளையும் கொன்றது,
வழிகேட்டவனுக்குத் தப்பான வழிகாட்டியது,
கட்டிலில் படுத்துக் கொண்டு மாமனாரைத் தரையில் தூங்கச் செய்தது,
திண்ணையில் அமர்ந்தபடி மாமியாரைச் சுற்றிப் போகச் செய்தது,
இயற்கையழைத்தபோது அதனைப் புறக்கணித்தது,
மருமகள்களைக் கொடுமைப்படுத்தியது,
ஏரிகளின் கரைகளை வெட்டிவிட்டது,
குட்டைகளின் கரைகளை வெட்டிவிட்டது,
மற்ற ஊராரின் வளத்தைப் பார்த்து வயிறெரிந்தது,
மற்றவர்களிடம் கோபம் காட்டியது,
காட்டில் பயணிகளுக்குத் தப்புவழி காட்டியது,
இது போன்ற முந்நூறு பாவங்களைச் செய்திருப்பினும்,
அவையெல்லாம் இப்பொழுது விடப்படும் இந்தப் பசுவின் கன்றோடு போகட்டும்.
எல்லாப் பாவங்களும் விலகட்டும்.
எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படட்டும்.
சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படட்டும்.

நரகத்தின் கதவுகள் மூடப்படட்டும்.
தருமத்தின் கரம் நீளட்டும்.
வஞ்சனையின் கரம் மடங்கட்டும்.
கதவு திடீரெனத் திறக்கட்டும்.
எங்கும் அழகும் பெருமையும் பெருகட்டும்.
சூடான தூண் குளிரட்டும்.
நூல் பாலம்* எளிதில் கடக்கப்படுவதாகட்டும்.
நரகத்தின் குழி மூடப்படட்டும்.
இவன் தங்கத் தூணினைச் சென்று சேரட்டும்.
ஆறாயிரம் அதிகளின் அடிகளைப் பற்றிப்
பன்னீராயிரம் பதிகளின் பாதங்களைப் பற்றிப்
பிரம்மனின் திருவடிகளைப் பிடித்து,
இன்று உரிமையாக விடப்படும் கன்றின் காலைப்
பிடித்து,
இன்று சிவலோகம் சென்று சேர்வானாக.

இது இப்படியே ஆகட்டும்.

பெரியவர் மேற்கண்ட பாவங்களின் பட்டியலை மும்முறை ஒப்புவிப்பார், சில படகர்கள் அப்பெரியவரைப் பின்பற்றி ஒவ்வொரு வரியின் கடைசி வார்த்தைகளைத் திரும்பச் சொல்வர். பாவங்களின் பட்டியல் ஒப்பிவிக்கப்படும்போது கூட்டத்தினர் பிணக்கட்டிலின் மூன்று பக்கங்களில் மட்டுமே கூடியிருந்து மேற்குப் பக்கமாக ஒரு சந்தினை வழியாகவிட்டு நிற்பர் என்று திரு எ. சி. கிளேட்டன் பாதிரியார் கூறுகிறார். இறந்தவனின் பாவங்கள் இன்னொரு பாவஞ் சுமப்பவனுக்கு மாற்றப்பட்டு இறுதியில் சந்து வழியாக வெளியேற்றப்படுகிறது. நாங்கள் நேரில் பார்த்த சடங்கு நாற்பதாண்டுகளுக்கு முன்பு நடந்ததாகத் திரு கோவர் தந்துள்ள சடங்கின் நடப்பிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. திரு கோவரின் வர்ணனை வருமாறு:- "ஒருவன் செய்யக் கூடிய பாவங்களின் மொத்த எண்ணிக்கை பதின்மூன்றாயிரம் என்று கூட்டிக் கணக்கிடப் பட்டுள்ளது. இறந்தவன் அத்தனைப் பாவங்களையுமே செய்தான் என ஒப்புக்

---

* நல்லோர் பாதுகாப்போடு கடக்கும் சாவு ஆற்றின் குறுக்கே உள்ள பாலம்.

கொள்ளப்பட்டு ஒப்பிப்பவன் உரக்க, "இறைவனின் தூய திருவடியை அடையுமுன் அவை விலகி ஓடட்டும்" எனக்கூறி முடிக்கக் கூட்டத்தினர் அனைவரும் அவற்றின் தொல்லை விலகி ஓடட்டும் என உரக்கக் கூக்குரலிடுவர். மீண்டும் ஒப்பிப்பவன், "இவன் ஊர்ந்து செல்லும் பாம்பைக் கொன்றான். அது ஒரு பாவம்" என விளக்கமாகப் பாவங்களின் பட்டியலைக் கூறக் கூட்டத்தினர், "அது ஒரு பாவம்" எனக் கத்துவர். அவர்கள் கத்தும்போது ஒப்பிப்பவன் தனது கையினைக் கன்றுக் குட்டியின் மீது வைப்பான். அந்தப் பாவம் கன்றுக்குட்டிக்கு மாற்றப்பட்டதாகிவிட்டது. இப்படியே பட்டியலாக உள்ள பாவங்கள் அனைத்தும் கன்றுக்குட்டிக்கு எல்லோரும் வியக்கும்படி மாற்றப்படும். அத்தோடு எல்லாம் முடிந்து விடுவதில்லை. கடைசிக் கூக்குரலாக, "எல்லாம் நல்லபடியாகட்டும்" என்றதன் ஓசை அடங்குமுன் ஒப்பிப்பவன் மற்றொரு பாவத்தை எடுத்துக்கூற எல்லோரும், "அது ஒரு பாவம்" எனக் கூக்குரலிடுவர். மூன்றாவது முறையும் இது செய்யப்படும். பிறகு புனித அமைதி நிலவ அந்தக் கன்றுக் குட்டி உரிமையோடு செல்ல விடப்பட்டுவிடும். யூதர்களின் பாவம் சுமக்கும் ஆட்டைப் போலவே இக்கன்றுகுட்டியும் பின்னர் சமயம் சாராத பணிகளுக்குப்பயன்படுத்தப்படுவதில்லை". முனைவர் ரிவர்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:-"படகர்கள் சாவுச் சடங்கின்போது இறந்தவனின் பாவங்களைச் சுமந்துசெல்ல ஒரு கன்றினை ஓட்டிவிடுகின்றனர். தோடர்களின் சாவுச்சடங்குகளில் பயன் படுத்தப்படும் கன்றுகுட்டியும் இதே போன்ற குறியீட்டதாகலாம். அப்படியாயின் இப்பழக்கம் மற்றவர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்டது என எண்ண இடமுள்ளது. இவ்வாறு விடப்படும்கன்றுகளின் கழுத்தில் தொங்கும் மணியைக் கோத்தர்களும், படகர்களும் வைத்துக் கொள்வதானது இப்பழக்கம் தோடர்களால் கோடர்களிடமிருந்தோ படகர்களிடமிருந்தோ மேற்கொள்ளப்பட்டதாகலாம் என எண்ண இடமுள்ளது." நாங்கள் நேரில் பார்த்த சடங்கில் பிணத்திற்கருகே கன்றுக் குட்டி கொண்டு வரப்படவில்லை. சடங்கு செய்பவர் கன்றுக் குட்டி என்று வாயால் சொல்வதே போதுமானதாகக் கருதினார்கள். இறந்தவர் ஆணாயின் சேங்கன்றுக்குட்டியும் பெண்

ணாயின் கிடாரிக்கன்றுக் குட்டியும் சடங்கிற்குப் பயன் படுத்தப் படும். திருஎ.சி. கிளேட்டன் பாதிரியார் நேரில் பார்த்த ஒரு சாவுச் சடங்கில் பெண் எருமை ஒன்று மும்முறை பிணத்தைச்சுற்றி ஓட்டிச்செல்லப்பட்டதாகவும் அதன் பாலில் கொஞ்சம் அப்போது கறக்கப்பட்டுப் பிணத்தின் வாயில் விடப்பட்டதாகவும் அதன் பின் ஓர் எருமைக் கன்றினைப் பிணத்தைச் சுற்றி மும்முறை ஓட்டிப் பிணத்தின் கையினை எடுத்து அதன் தலைமீது வைக்கப் பட்டதாகவும் கூறியுள்ளார். இச்செயலால் அக்கன்றுக் குட்டி இறந்தவரின் பாவங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டதாகின்றது. அதன்பின் அது யாரையும் தீண்டாதபடி அதனை வெகுதொலைவில் விரட்டி விடுவர். இப்படிப் பாவத்தை ஏற்றுக் கொள்ளும் கன்றுகள் விற்கப்படுவதில்லை எனவும், கோயிலுக்கு விடப்பட்ட புனித விலங்குகளுக்கொப்பாக இவையும் நடத்தப்படும் எனவும் கூறப்படுகிறது. இறந்த ஒருவனது மனைவி கர்ப்பமுற்றவளாக இருந்து அவளுக்கு (கன்னிக் கட்டோடு) மணநூல்இடும் சடங்கு நடைபெறாதிருப் பின் பிணத்தை ஈம விறகில் வைக்குமுன் அச்சடங்கு நடத்தப் படும். அப்பொழுதுதான் **அவள்** தனக்குப் பிறக்கும் குழந்தையை இறந்தவனுக்குப் பிறந்த குழந்தை என உரிமை கொண்டாட முடியும். கருவுற்றவளைச் சாவுச் சடங்கின் போது பிணம் கிடத்தப்பட்டிருக்கும் கட்டிலருகே அழைத்து வந்து இறந்து போனவருடைய நெருங்கிய உறவினர் ஒருவர் கழுத்தணி வடிவில் முறுக்கப்பட்ட ஒரு பருத்த நூல் கயிற்றினை அவள் கழுத்தில் அணிவிப்பார். சில சமயங்களில் பிணத்தின் கையில் நூலினைத் தந்து அதன் கையை உயர்த்திக் கழுத்தில் அணிவிக்கும் படியாகவும் செய்வர். ஓர் இளைஞனது சாவுச் சடங்கில் அவனுடைய கர்ப்பிணி மனைவிக்கு நடத்தப்பட்ட இச்சடங்கினை நேரில் பார்த்த திரு கிளேட்டன், மஞ்சள் தோய்க்கப்பட்ட கயிறொன்று பிணத்தின் கரத்திலிருந்து எடுத்து அவள் கழுத்தில் கட்டப்பட்டதாகவும், இரண்டாம் முறையாக அவள் பிணத்தருகே அழைத்து வரப்பட்டு அவளுடைய காதணிகள், மூக்குத்தி, பிற அணிகள் ஆகியன அவள் கைம்பெண் என்பதனை உணர்த்தும் வகையில் களையப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

பாவங்கள் ஒப்புவிக்கும் சடங்கு முடிந்தவுடன் இறந்தவரின்

பங்காளிகள் அனைவரும் இறந்தவருடைய வீட்டிற்குச் செல்வர். வீட்டுவாசலில் ஒரு கோணிப்பை விரிக்கப் பட்டிருக்கும். அதன்மேல் கொஞ்சம் நெல்லைப் பரப்பி அறுகம் (*Cynodon Dactylon*) புல்லின் சில துண்டுகளுடன் 'மாட்டுச் சாணமும் வைக்கப்பட்டிருக்கும். பங்காளிகளுள் மூத்தவராக இருப்பவர் கையில் அரிவாளுடன் அந்த நெல்லில் சிறிதளவை எடுத்துக் கொண்டு இரண்டு கைகளையும் நெற்றியில் உயர்த்தியவாறு செல்வார். மற்றப் பங்காளிகளும் அவ்வாறு செய்தபடி அவரைத் தொடர்ந்து ஆண்கள் ஒரு வரிசையாக முன்னேயும் பெண்கள் பின்னேயுமாகப் பிணத்தை நோக்கிச் செல்வர். பிணத்தை ஆண்கள் இடமாகச் சுற்றியும், பெண்கள் வலமாகச் சுற்றியும் நடந்து ஒவ்வொரு சுற்று முடிந்தவுடனும் கையில் உள்ள நெல்லில் சிறிதளவைப் பிணத்தில் முகத்தில் தூவுவர். அதன் பின் பிணக்கட்டில் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். பெண் ஒருத்தி பிணத்தின் முன்னே தன் ஆடையின் தலைப்பை உதறிய படியே செல்வாள். பிணத்தை ஈம விறகின் மீது கால்கள் தெற்கு நோக்கி இருக்கும்படி வைத்து இறந்தவரின் மூத்தமகன் பிணத்தின் தலைப்பக்கம் தீ மூட்டுவான். உடைக்கப்பட்ட தேரின் குச்சிகளும் ஈம விறகுகளோடு எரியும்படியாகப் போடப் படும். சில இடங்களில் ஈம விறகிற்குத் தீ மூட்டுபவன் 'என் தந்தையாலும் தாயாலும் பெற்றெடுக்கப்பட்ட நான் இங்குக் கூடியிருப்பவர்கள் முன்னிலையிலும், தேவன் முன்னிலையிலும், என் குலத்தவரைப் போலவும் என் முன்னோரைப் போலவும் இந்த நிலையில் நெருப்பிடுகிறேன்.' என உரக்கக் கூறுவான். திரு எ. சி. கிளேட்டன் பாதிரியார் சுடுகாட்டை நோக்கி ஊர் வலம் புறப்படுமுன் இறந்தவனின் உறவினரான சில பெண்கள் தங்கள் தலைமுடியின் ஒரு கொத்தினை அவன் கால் பெரு விர லில் கட்டுவர் எனவும், மற்றவர்கள் பிணத்தைச் சுற்றி மும் முறை வலம் வருவர் எனவும் குறித்துள்ளார். பிணத்தைச் சுட் டதற்கும் அடுத்த நாள் துக்கம் கொண்டாடும் குடும்பத்தினர் சிற் றூரிலுள்ள படகர்கள் அனைவருக்கும் அரிசி வழங்குவர். இறந் தவரின் நெருங்கிய உறவினர் அனைவரும் இரண்டு புதுப் பானைகளோடுசுடுகாட்டிற்குச் சென்றுநெருப்பினை அணைத்த பின் எலும்புகளைப் பொறுக்கிச் சேர்ப்பர். சூரல் ஓலைகளா

லான தட்டின்மேல் துணியினை விரித்து அதன்மேல் எலும்பு களை அறுகம் புல்லுடனும் நெய்யுடனும் வைப்பர். இறந்த வரை விட வயதில் இளையவர்களான படகர்கள் அந்த எலும்பு களைத் தொட்டு வணக்கம் செலுத்துவர். கொள்ளியிட்டவன் உட்படச் சில படகர் எலும்புத் தட்டினைத் தூக்கிக்கொணர்ந்து எலும்புக்குழியில் இடுவர். ஒவ்வொரு ஊரிலும் தனியே எலும்புக் குழிகள் உள்ளன. அவற்றில் எலும்பைக் கொட்டியபின் பெரிய வர் ஒருவர், "உனது முந்தைய உறவினர்களோடு ஒன்றாக இணைந்தாய், உன் கூட்டத்தோடு சேர்ந்தாய், பெரியவர் களிடைக் கலந்தாய்." என்றோ "இறந்த பெரியவர்கள் சிறியவர்கள் உட்பட அன்று தொடங்கி இன்றுவரை காலங்கால மாய் இறந்தவர்கள் அனைவரும் ஒன்றாய்க் கலநதனர்." என்றோ சில முறை திரும்பத் திரும்பச் சொல்வார். பின் எலும்புக்குழி மூடப்படும். அனைவரும் மீண்டும் பிணத்தை எரித்த இடத்திற்குத் திரும்பி, சிறிது இடத்தைத் தூய்மை செய்து ஒரு குழியமைத்து அதனைச் சூழ நின்று அதனுள் ஒரு கைப்பிடித் தினையைச், "சாவு முடிவுக்கு வரட்டும், கேடுகள் வில கட்டும்; ஊரில் நலம் பெருகட்டும், குலத்தவர்களும் முன்னோர் களும் செய்த நல்லவைகளின் பயனாய் இந்த ஒருவனும் அவர் களோடு சென்று கலக்கட்டும்." என்று கூறியபடி அக்குழியில் வீசுவர். இச்சடங்கு முடிந்தபின் எல்லோரும். ஓர் ஓடையை அடைவர். அங்கு இறந்தவர் குடும்பத்தில் ஒருவர் ஒரு தொரையனுக்குச் சிறிதோ. முழுவதுமாகவோ முகம் மழிப்பான். எல்லாப் பங்காளிகளுக்கும் படகன் அல்லது அம் பட்டன் முகம் மழிப்பான். கொள்ளியிட்டவன் தரையில் விழுந்து வணங்க அனைவரும் அவனை வாழ்த்துவர். அவ னும் தொரையரும் நேரே இறந்தவர் இல்லம் அடைவர். அவன் மூன்று பிரிவுகளாக உள்ள ஒரு தாயொண்டய் (*Rhodomyrtus tomentosa*) கொத்தின் மூன்று முனைகளிலும் முசுட்டை (*Argyreia*) இலைகளைச் சொருகியபடி சென்று வீட்டின் அருகே குவிந்து கிடக்கும் குப்பைக் குவியலில் அதனைச் சொருகுவான். பின்னர், தெருச் சோறு என அழைக்கப்படும் சடங்காகக் கொஞ்சம் சாமையை இலையிலிட்டு அதன்மேல் மும்முறை தண்ணீர் தெளித்து அப்பால் செல்வான்.

திரு ஹார்க்ஸை சுடுகாட்டில் இறந்தவன் மகனோ அவன் சார்பாக ஒருவரோ தனது இடக்கையில் ஓர் இரும்புத் துண்டினை வைத்துக் கொண்டு பிணத்தின் வாயில் கொஞ்சம் கூலம் இடுவர் எனக் குறித்துள்ளார். கையில் இரும்புத் துண்டோடு இருப்பது இறந்தவரின் பிணத்தின் மேல் திரியும் ஆவிகள் அஞ்சியோடும்படி செய்வதற்காக என நம்பப்படுகிறது.

'கொரம்பு' எனப்படும் இறுதிச் சாவுச் சடங்கு ஒரு ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறும். மாலையில் இறந்தவருடைய வீடு மாட்டுச் சாணத்தால் மெழுகித் தூய்மை செய்யப்படும். பெண்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றி விட்டுப் படகர்கள் அங்கே கூடுவர். கொள்ளியிட்டவன் இரண்டு படகர்களோடும் புதுப் பானைகளோடும் ஓடையை அடைந்து பானைகளைப் பசுஞ்சாணத்தால் தூய்மையாக்கிக் கவட்டன் புல்லின் (*Andropogon schoenanthus*) தண்டினால் தேய்ப்பர். பின்னர் பானைகளில் நீர் நிரப்பி வீட்டுக்குக் கொண்டு வந்து பால் கூடத்தில் வைப்பர். வீட்டின் அகமனை வாசலில் ஐந்து பங்காளிகள் மூங்கிலைப் பிளந்து கட்டப்பட்ட வட்டத் தட்டினைத் தாங்கி நிற்பர். கொள்ளியிட்டவன் அதன் மீது கொஞ்சம் நெல்லினைப் போட்டு அரிவாளால் அதனைப் பரப்புவான். இறந்தவன் மனைவியும் மற்றப் பெண்களும் அதன் அருகே வந்து அழுவர். சில அரிவாள்கள் அல்லது கத்திகள் (பெரும்பாலும் சாவுச்சடங்கில் பயன்படுத்தப்பட்டவை மூங்கில் தட்டில் வைக்கப்பட்டபின் படகர்கள் அனைவரும் அதனை வணங்குவர். பின் நெல்லினை உரலில் குத்தி அரிசியினைக் கொள்ளு, கடலை மற்றும் பிற பருப்புக்களுடன் கலந்து உப்புப் போடாது சமைப்பர். மறுநாள் அதிகாலையில் மூத்த மகன் அந்தச் சோற்றில் சிறிதளவை வீட்டுக் கூரைக்கு எடுத்துச் சென்று அவற்றை ஏழு உருண்டைகளாக ஆக்கி வாழையிலையிலோ மாவிலையிலோ வைத்துத் தன் குலத்தவர்களான ஆண், பெண் முன்னோர்களின் பெயர்களையும் தன் அம்மா, அப்பா, உடன்பிறந்தோர் ஆகியவர்களின் பெயர்களையும் ஒப்பிப்பான். எஞ்சிய சோற்றினை உறவினர் உண்பர். சிலவிடங்களில் சோறு முழுதுமே ஏழு உருண்டைகளாக்கப்பட்டு வீட்டுக்குப் புறத்தே கொண்டு செல்லப்படும். கூரை மீது நீர் தெளித்துச் சோற்றின்

ஒரு பகுதி கூரை மீது வீசப்படும். கூடியுள்ள படகர்களின் முன் ஒரு பெரியவர் "இன்று நாம் நம் 'முன்னோர்களினுடையவும் பாட்டன்மார்களுடையவும் ஆன நினைவை மேற்கொள் கின்றோம்.புதியவர்கள்பழையவர்கள்களாகவோ, பழையவர்கள் புதியவர்களாகவோ எண்ணப்படுதல் கூடாது. தனது தலை யினைத் தூக்கித் திரியும் ஓர் ஆணோ (அறிவாளியோ), தனது மார்பகங்களைத் தூக்கித் திரியும் பெண்ணோ (அறிவுள்ளவள்) இல்லை. அத்தகையவன் தனது இனத்தைச் சேர்ந்த குல முதல்வர்களோடு இணைவானாக." என்று கூறுவர்.

உதயர்களின் சாவுச்சடங்குகள் படகர் உட்பிரிவின் சாவுச் சடங்குகளிலிருந்து சில சிறப்பான கூறுகளில் வேறுபடுகின்றன. உதயர்களால் எருமையினைப் பிடித்துப் பிணத்தைச் சுற்றிவரச் செய்வது நடத்தப்படுவதில்லை. ஆனால் ஒரு காளையும் கன்று போடாத பசுவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் தொடையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பு கொண்டு இலிங்கமும் பிற சின்னங் களும் பொறிக்கப்படுகின்றன. துணிகள் போர்த்தப்பட்டு, அணி களால் அலங்கரிக்கப்பட்டு அவை பிணத்தின் பக்கத்தில் ஓட்டிச் செல்லப்பட்டுத் தரையின் மேல் போடப்பட்டுள்ள விரிப்பின் மேல் நிறுத்தப்படுகின்றன. அவை இலிங்கங்களாகப் பாவிக்கப் பட்டு அவற்றிற்குத் தேங்காய், பழம் படைக்கப்படும். மேலே பூ இட்டும் பூசிக்கப்படுகின்றன. அவற்றின் கழுத்தைச் சுற்றிக் கங்கணம் கட்டப்படுகிறது. பின் அவை பிணத்தைப் பார்க்காத படி திருப்பி நிறுத்தப்பட்டு அவற்றின் வால்கள் பிணத்தின் கையில் தரப்படுகின்றன. அப்போது பெரியவர் ஒருவர் இறந் தவர் செய்த பாவங்களின் பட்டியலை ஒப்பிக்கின்றார். புதை குழியில் பக்கவாட்டில் குடையப்பட்ட அறையில் உதயர்கள் இறந் தவர்களை உட்கார்ந்த நிலையில் புதைக்கின்றனர். இருளர் களைப் போல இவர்களும் முன்பு புதைக்கப்பட்டவர்களின் புதைகுழியையே மீண்டும் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுவர். புதைகுழியின் நான்கு மூலைகளிலும் தரையில் தும்பைச் செடி களை வைத்துப் பருத்தி நூலைப் புதைகுழியின் பக்கங்களிலும் குறுக்கேயும், அறை உள்ள பக்கம் தவிர, மற்றப் பக்கங்களில் கட்டுவர். இருவர் புதைகுழியில் இறங்கிப் பிணத்தை அதற்குரிய

அறையில் உட்கார்ந்த நிலையில் இரு விளக்குகளுடன் அடக்கம் செய்வர்.

படகர்கள் முன்னோர்களின் நினைவாகப் பல ஆண்டுகளுக் கொருமுறை கொண்டாடும் 'மனவளை' எனக் கூறப்படும் வீரி வான சடங்கு நிகழ்ச்சி 1905-இல் நீலகிரியில் நடைபெற்றது. நீலகிரியைச் சேர்ந்த ஓர் அதிகாரியின் குறிப்புகளிலிருந்து அது பற்றிய பின்வரும் விவரங்களை நான் திரட்டினேன். ஏழு குடித் தேர் எனப்படும் ஏழு அடுக்குகளையுடைய மிகப்பெரிய தேர் மரம் மூங்கில்கள் கொண்டு கட்டப் பெற்றுப் பட்டு, கம்பளித் துணிகளாலும், கொடிகள், குடைகள் முதலியவற்றாலும் அலங் கரிக்கப்பட்டது. அதன் கீழ் அடுக்கில் ஒரு கட்டில் இட்டு அதில் பாயும் தலையணையும் போடப்பட்டு வாழையின் அடிமரம் ஒன்று அவற்றின் மீது கிடத்தப்பட்டிருந்தது. இறந்து போன முன்னோர்களின் ஆவிகள் கட்டிலில் சாய்ந்து தலையணையில் தலை வைத்து வாழையின் அடிமரத்தைக் கடித்து மெல்லுவ தாகவும், குடைகள் வெயில், மழையிலிருந்து அவர்களைக் காப்ப தாகவும் படகர் நம்புகின்றனர். இதற்குமுன் இவ்விழா நடை பெற்ற நாளுக்குப் பிறகு இறந்த அனைவருடைய காதணிகளும் கட்டிலின்மேல் வைக்கப்பட வேண்டும். "இத்தேர் கட்டும் பொழுது ஒரு படகன் கீழே விழுந்து காயமடைந்தான். அப் போது இன்னொரு படகன் சாமி ஏறப் பெற்று அத்தேர் கட்டு வதில் ஒரு குறும்பன் தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டிருப் பதால் தெய்வக் கோபம் உண்டாகியிருக்கிறதென வாக்குக் கூறி னான். உடனே சபை கூட்டப்பட்டு அக்குறும்பனை இருபத் தைந்து ரூபாய் குற்றம் கொடுக்கும்படி கூறி, அப்பணத்தைக் கடவுள் கணக்கில் சேர்த்தனர். இவ்விழாவை முன்னிட்டு வரும் கூட்டத்தினருக்கு உதவ அறுபத்தொன்பது சிறுகடைகளும் மூன்று பீர் வழங்கு நிலையங்களும் திறக்கப்பட்டன. அக் கும்பலி லிருந்த ஒரு வயதான மூதாட்டி, தோடர்கள் ஐரோப்பியன் ஒரு வனை முதன்முதலில் கோயம்புத்தூரிலிருந்து நீலகிரிக்கு நாற்காலி யில் உட்கார வைத்துத் தூக்கி வரும்போது தனக்கு வயது பன்னிரண்டு நடந்து கொண்டிருந்தது என நினைவு கூர்ந்தாள். புதன்கிழமையன்று முற்பகல் பத்து மணி அளவில் பக்கத்து ஊர்களிலுள்ளவர் வந்துள்ளார்கள் என்ற செய்தி வந்து

சேர்ந்தது கோத்தர்களின் இன்னிசை முழங்க, ஊர்மக்கள் அவர்களை எதிர்கொண்டு சென்று தேர் நிற்கும் இடத்திற்கு அழைத்து வந்தனர். வருகை தந்தவர்கள் தேரை நெருங்கும் போது உருமாலையைக் கழற்றிவிட்டுத் தலையணை மீது குனிந்து தங்கள் தலையை அதன் மீது வைத்தபின் ஆடுபவர்கள் வட்டத்தில் சென்று கலந்து கொண்டனர். கூட்டத்தினர் வெள்ளைப் பருத்தித் துணியாலும் வெள்ளையும், வெண்ணெய் நிறத்திலுமான பட்டாலும் ஆன சீழாடைகளும், பட்டு, வெல் வெட், பருத்தி ஆகியவற்றாலான கண்ணைப் பறிக்கும் பல வண்ணங்கள் தோய்த்த சட்டைகள், கோட்டுகள், இரவிக்கைகள் அணிந்து காணப்பட்டனர். ஒவ்வொரு குழுவினரும் வந்தவுடன் கோயிலுக்குச் சென்று வணங்கியபின் தேரின் அடிநிலையிலுள்ள இறந்தோரை வழிபட்டுப் பின்னர் ஒரு மணிநேரம் ஆட்டத் தில் ஈடுபடுவர். அதன்பின்னர் தங்களுக்குரிய அரிசி முதலிய வற்றைப் பெற்றுக் கொண்டு புறப்படுவர். வியாழனும் வெள்ளி யும் ஆரவாரமும் கூட்டமும் மிகுந்த நாள்கள். சுமார் மூவாயி ரம் பெண்களும் ஆறாயிரம் ஆண்களும் வியாழனன்று கூடினர் இக்குளறுபடிகளுக்கு மகுடம் வைத்தது போல் சுமார் ஆயிரம் படகர்கள் புதிய மம்மட்டிகளுடன் கொஞ்சம் தொலைவிலிருந்தே ஆடியபடி வந்து கூட்டத்தில் புகுந்து தேரைச் சுற்றி ஆட்டம் போடலாயினர். இவர்கள் பொதுப் பணித்துறை, நகராட்சி, ஊர்நலத்துறை ஆகியவற்றில் கூட்டாகக் கூலி வேலை பார்ப் பவர்கள். விழாவின் இறுதி நாளன்று தெய்வத்திற்கு ஆடு பலியிடப்பட்டது. விழாக்காலம் முழுதும் கோத்தர்களும் குறும்பர்களும் இசைக் கருவிகளை முழக்கினர். முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆடிய ஆட்டம் இசையோடு இயைந்ததாய் அடிவைப்புகள் சுவைக்கத்தக்கனவாயிருந்தன இளைஞர்கள் ஆட்டம் அவர்களுக்கு ஆட்ட நுட்பங்கள் பற்றி யோ, இசை அமைதிகள் பற்றியோ ஏதும் தெரியாது என்பதைப் புலப்படுத்துவதாய் வெறும் குதியாட்டமாகவே இருந்தது. படகர்கள் தொன்மையான சிறப்புடைய ஆடற்கலை சீரழிந்து கொண்டுள்ளது என்பதனை இது காட்டுவதாயுள்ளது.'' இறுதி யில் தேரிலுள்ள கட்டில் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப் பட்டு அதில் ஒரு பிணம் இருப்பது போலப் பாவனை செய்து எரியூட்டப்பட்டது.

குள்ளர்களின் ரொட்டி என வழங்கப்படும் ஒருவகை உண்ணும் பூங்கிழங்கு (Mylitta lapidescens) நீலகிரியில் உள்ளது. படகர்கள் நாட்டார் கதைகளில் அது 'பாண்டவ-உண்ணா-பூதிகள், அல்லது சிறு உணவு மூட்டை,* அல்லது குள்ளர்களின் உணவு என வழங்கப்படுகிறது. நீலகிரியில் ஒரு காலத்தில் வாழ்ந்த இக்குள்ளர்களே 'பாண்டு கூளி' களைக் (Kistvaens) கட்டியவர்கள் எனக் கருதப்படுகிறது.

சென்னையில் முன்னாள் ஆளுநராக இருந்த வெல்லிங்கடன் பெருமகன் கேத்தியில் இல்லம் கட்டிக் கொள்ள விரும்பினார் என்றும், ஆனால் அவர் வீடு கட்ட விரும்பிய இடத்தில் படகர்களின் புனித மரம் இருந்தமையால் அந்த இடத்தை விற்க அவர்கள் முன் வரவில்லை என்றும் ஆளுநரின் பெருமனைத் தலைமைப் பணிமகன் (Steward) படகரின் தலைவனுக்கு நிறைய மது வாங்கித் தந்து, போதையூட்டி ஆண்டுக்கு முப்பத்தைந்து ரூபாய் வாடகைக்கு அந்த நிலத்தைப் பெற்று விட்டானெனவும் அங்கு அப்போது கட்டப்பட்ட இல்லமே இன்று பசெல் சமயப் பரப்புக் குழுவுக்கு உரியதாக உள்ளது எனவும் ஒரு கதை வழங்குகிறது.†

திரு எ. எச். கியானி (A.H. Keane) அண்மையில் வெளியிட்டுள்ள ஒரு நூலில்‡ திராவிடத்தொன்முதுமக்கள் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:- "சமுதாயப்படியில் இவர்கள் அனைவரும் மிகத் தாழ்வான மட்டத்திலேயே முரட்டுத்தனமான மலைவாழ் மக்களாக எத்தகைய நாகரிக நலமுமின்றி நீக்ரோ இன உடற்கூறுகளைப் பெரிதும் வெளிப்படுத்துபவராகவே இருந்து வந்துள்ளனர். இவர்கள்தொடக்கத்தில்நீக்ரோக்களாகவோ, நீக்ரோ கலப்பினத்தவராகவோ இருந்து, பின்னர் தங்களை வெற்றிகொண்ட திராவிடர்களால் ஒரு சில கூறுகளில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களாக உள்ளனர். அவர்களுக்குப் பொதுவானதொரு இனப்பெயரில்லாமையால் அவர்

* நீலகிரி அரசு தாவரவியல் தோட்ட அறிக்கை, 1903. (Report, Govt. Botanic Gardens Nilgiris, 1903.)

† E. Schmidt. Reise mach, Sudindien, 1894.

‡ உலகத்து மக்கள், 1908. (The world's Peoples. 1908.)

கள் இன்று திராவிடர்களென்றோ திராவிடர்களின் முன்னோர் களைச் சார்ந்தவர்களென்றோ அழைக்கப்படாமல் திராவிடர் களுக்கு முற்பட்டவரென அவர்களுடைய உண்மையான இனத் தொடர்பு புலப்படும் படியும் அழைக்கப்படுகின்றனர். கோத்தர் இருளர், படகர், குறும்பர் ஆகியோர் இத்தகையவரே." நீலகிரி மலையைச் சார்ந்த படகர்களும் கோத்தர்களும் நாகரிக மில்லாத காட்டுவாசிகளல்லர் என்பதனை இங்குக் குறிப்பிடப்பட வேண்டும். அவர்களிடம் நீக்ரோ இனக் கூறுகள் சிறிதும் இல்லை என்பதையும் அவர்களுக்கும் நீலகிரிச் சரிவில் வாழும் குறும் பர், இருளர் ஆகியோருக்கும் எத்தகைய ஒற்றுமைக் கூறுகளும் இல்லை. இவ்வுண்மைகளை 161-ஆம் பக்கத்தில் உள்ள அட்ட வணையே தெளிவுபடுத்தக் காணலாம்.

படகி – Badagi

பாஞ்சாலர்களுள் தச்சு வேலை செய்யும் உட்பிரிவினர்.

பதோயி - Badhoyi

பதோயியர் ஒரிய தச்சர்களும் கருமான்களுமாவர். இவர் களுள் முன்னவர் பதோயி எனவும், பின்னர் கொமாரு எனவும் கூறப்படுவர். இவையிரண்டும் தனிச் சாதிகள் அல்ல. இரு பிரி வினரும் ஒருவரோடு ஒருவர் ஒன்றாக உண்பதோடு திருமண உறவும் கொள்கின்றனர். பதோயி என்ற பெயர் வர்த்தகி என்ற பெயரிலிருந்து வந்ததென்பர். ஒரிய மொழியில் அது உருவை (அதாவது மரத்தின் உருவை) மாற்றுபவன் என்ற பொருளில் பர்த்தகி என்றாகிப் பின இவ்வடிவை அடைந்த தென்பர். கொர்டி என்பது இரம்பம் எனப் பொருள்படும் கொர்டு என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். கொமாருகளுள் ஒரு பிரிவினர் மரம் அறுக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் இப்பெயர் பெற்றனர். சமூகப் படிநிலையில் பதோயிகள் தொளுவர், காலிஞ்சர் மற்றும் பல பயிர்த்தொழில் செய்யும் பிரிவினரோடும் ஒத்தவர்களாகவே கருதப்படுகின்றனர். தமிழ் நாட்டுக் கம்மாளர்களைப் போலத் தெய்வத் தச்சனான விசுவகர்மாவின் வழி வந்தவர்களென இவர்கள் தங்களைக் கூறிக் கொள்வதில்லை.

	உடல் வாகு			மூக்கின் விகித அளவு		
	சராசரி	மேலளவு	கீழ்அளவு	சராசரி	மேலளவு	கீழ்அளவு
படகர்	164.1	180.2	159.9	75.6	88.4	62.7
கோத்தர்	162.9	174.2	155.0	77.2	92.9	64.0
இருளர்	159.8	168.0	152.0	84.9	100.0	72.8
குறும்பர்	157.5	163.6	149.6	88.8	111.0	79.1

பரம்பரையாக இவர்கள் சாதிக்குத் தலைமை பூண்பவர்கள் மகாராணாக்களென அழைக்கப்படுகின்றனர். சிலவிடங்களில், இத்தலைவர்கள் மூன்று படி நிலையுடைய மகாராணாக்களாக, டோண்டொ, படொமகாராணா, சுவாங்கோ மகாராணா என அழைக்கப்படுகின்றனர். இத்தலைமைக்காரன்களுக்குப் பொல்லொபகய அல்லது டொலொபேகரா எனப்படும் உதவி யாளர்கள் உளர். மற்றும் எகொபொதிரிய என்னும் அதிகாரியும் உண்டு. சாதி விலக்கம் செய்யப்பட்ட ஒருவனை அவையோர் கூடி மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தபின் அவனோடு உடன் உண்பவன் இந்த அதிகாரியே. சிலபோது மகாராணாவே இப்பணியை மேற்கொள்வான். சாதாரண அவைக் கூட்டங்களை மகாராணாவும், பொல்லொபக யாவும் கூட்டுவர். சிக்கலான வழக்குகளின்போது குலப் பஞ்சாயத்து எனப்படும் சிறப்புக் கூட்டங்கள் ஊருக்கு வெளியே ஒரு தோப்பில் அல்லது வெட்ட வெளியில் கூட்டப்படும். எல்லா மகாராணாக்களும் பிற அதிகாரிகளும் பயோதிகள் சாதிக்குச் சமமான அல்லது உயர்ந்த ஐந்து சாதியாரின் பிரதிநிதிகளும் அச்சபையில் இருப்பர். வழக்குத் தொடுப்பவன் சுவாங்கோ மகாராணாவிடம் போய் அவருக்கு ஐம்பது பாக்குகள் வைத்துச் சபைக் கூட்டத்தைக் கூட்டும்படி கேட்க வேண்டும். பெரும்பாலும் ஒரு தொகையைத் தண்ட மாக விதிப்பதே அவையாரின் வழக்கம். குற்றவாளியின் வளத் திற்கு ஏற்பத் தண்டத் தொகையின் அளவு இருக்கும். குற்ற வாளி கோபக்காரனாக இருப்பின் கண்டித்து எச்சரிக்கை செய்து விடுப்பதும் உண்டு. சிலபோது பிராமணர்களுக்கோ, பதோயிகளுக்கோ, உணவளித்தால் குற்றங்கள் மன்னிக்கப்படு கின்றன. தண்டம் விதிக்கப்படும் சிறு தொகைகளைத் தலைமைக் காரனே வைத்துக் கொள்வான். பெரிய தொகைகளை ஒரு நிதி யாகச் சேர்த்துச் சாதியைச் சேர்ந்த ஏழைகளின் திருமணத் திற்கு உதவ ஒதுக்குவர். குலப் பஞ்சாயத்துக் கூட்டச் செலவு களும் அத்தொகையிலிருந்து செய்யப்படும்.

இவர்களின் திருமணச் சடங்குகள் பற்றித் திரு டி. மகண்டி பின்வருமாறு எழுதுகிறார்:- "பதோயிகள் மற்றும் கஞ்சம் மாவட்டத்தைச் சார்ந்த பல சாதியினர் திருமணங்களின் போது

மணமகன் தலையின்மேல் இரண்டு நெட்டி முடிகள்வைக்கப்படும் மணமகள் இல்லம் செல்லும் மணமகனை வழியில் பெண் வீட்டாரின் குருக்களும், உறவினர்களும் எதிர் கொள்வர். பெண் வீட்டு நாவிதன் அவன் கால்களை அலம்பிப் புதிய மஞ்சள் ஆடை, பூ, தர்ப்பை ஆகியவற்றை அளிப்பான். அவன் மணப் பெண்ணின் வீட்டினைக் குருக்களின் வாழ்த்தொலி, சங்கு முழக்கம், இன்னிசை ஆகியவற்றுக்கிடையே அடையும்போது பெண் வீட்டு மகளிர் ஆரவாரமாகக் குலவையிட்டுத் தர்ப்பைப் புல்லை அவன் மீது தூவுவர். மணப்பந்தலில் மணமகன் ஓர் உயர்ந்த மேடையில் அமர்வான். தன் தாய்மாமனோடு வரும் மணப் பெண் உப்பு, மஞ்சள், அரிசி, அவல் ஆகியவற்றை அவன் தலைமீது இடுவாள். பின் அவன் பக்கத்தில் அமர்வாள். மணமகன் தலையிலிருக்கும் ஒரு நெட்டி முடி அகற்றப்பட்டு அது மணமகள் தலையில் கவிழ்க்கப்படும். பிராமணருக்குரிய பல சடங்குகள் நிகழ்த்தியபின் மணமகள் தந்தை அவள் கரத்தைப் பற்றி மணமகன் கையில் தருவான். ஒரு கட்டு வைக்கோல் அச்சமயம் மேடையின் மீது வைக்கப்பட்டு அதன் மீது மணமகன் கிழக்கு நோக்கியும் மணமகள் மேற்கு நோக்கியும் அமர்வர். குருக்கள் மணமகன் உள்ளங்கையில் கொஞ்சம் வெல்லத்தைத் தேய்த்து அதனை மணமகள் கையோடு சேர்த்து ஒரு தர்ப்பைக் கயிற்றினால் கட்டுவார். மணமக்கள் அணிந்திருக்கும் ஆடையோடு சேர்த்து ஒரு மஞ்சள் துணி முடியப்பட்டு அது அவர்களின் தோளோடு இழுத்து விடப்படும் பின் அவர்கள் கைகளை மணமான ஒருத்தி இணைத்து வைப்பாள், இதன் பின் குல முன்னோர்களைப் போற்றிச் சிரார்த்தம் செய்யப்படும். குருக்கள் சில மந்திரங்களைக் கூறியபடி அவர்கள் மீது மஞ்சள் அரிசியைத் தூவுவர். மணவிழாவின் ஆறாம் நாள் மணமகன் மாமனார் வீட்டைவிட்டு வெறுப்புற்று ஓடிப் பக்கத்து ஊரிலோ, அதே ஊரிலோ உள்ள உறவினர் வீட்டிலோ தங்குவான். அவன் மைத்துனனோ அல்லது வேறு ஆண் உறவினர்களோ அவனைத் தேடிப் போய்க் கண்டுபிடித்து அவன் முகத்தில் கொஞ்சம் வெல்லம் தேய்த்து அழைத்து வருவர். குருக்கள் ஒப்பிக்கும் பாடல்களின் இயல்பினை அறிந்து கொள்ளப் பின்வரும் பாடல் வரிகள் தரப்படுகின்றன:-

நான் இவளை எண்ணத்தாலும் சொல்லாலும், தர்ப்பை யாலும் தண்ணீராலும் உனக்களிக்கிறேன்.

இதற்கு நெருப்பு, பிராமணர், பெண்கள், உறவினர், தேவ தைகள் ஆகிய அனைவரும் சாட்சிகளாக உள்ளனர்.

உனக்கு ஏற்றவளான நன்றியுள்ள இந்தக் கன்னியை மன்னிப்பாயாக.

நான் இத்திருமணத்தை வேதங்களில் கூறப்பட்டுள்ள நெறிப்படி நடத்திக் கொண்டுள்ளேன்.

பெண்கள் பலவகைப் பிழைகள் உடையவர்கள். அப்பிழை களையெல்லாம் பொறுப்பாயாக.

பிரம்மனே இந்தக் கன்னி வழிபடும் கடவுளாவார்.

வாசுதேவப்பெருமான் அருளால் நான்
உனக்கு இந்த மணமகளை அளிக்கிறேன்.

பதோயிகள் சைத்யன்னரின் பரமார்த்திக வைணவ சமயத் தைப் பின்பற்றுபவர்கள். மேலும் பல சிறு தேவதைகளையும் இவர்கள் வழிபடுகின்றனர். இறந்தவர்களை எரிக்கின்றனர். இறந்தவரின் பிணத்தை வீட்டில் குளிப்பாட்டாமல் சுடுகாட்டில் வைத்தே குளிப்பாட்டுகின்றனர்.

இச்சாதியார் மகாராணா என்ற பெயரையே பெரும்பாலும் சூடிக் கொள்கின்றனர். தங்கள் தச்சுத் தொழிலின் சிறப்புக் காரணமாகச் சமீன்களிலுள்ள சில பதோயிகள் சமீன்தாரர் களால் பிந்தானி ரத்தோ, பிந்தானி பூசானோ போன்ற பட்டங்கள் தந்து சிறப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

அரசின் கீழும், சமீன்களின் கீழும் தச்சர்களும், கருமான் களும் வரியில்லாத இனாம் நிலத்துக்கு உரிமையுடையவர்களாக உள்ளனர். இதற்கீடாக அவர்கள் ஊர்த் தெய்வத்தின் ஆண்டு விழாவின்போது தேர் செய்து தருதல் வேண்டும். விழாவின்

முடிவில் பெரும்பாலான இடங்களில் தேர் எரிக்கப்பட்டுவிடும். ஊராருக்குப் பயிர்த்தொழிலுக்குத் தேவையான கருவிகளைச் செய்து கொடுப்பதும் இவர்கள் கடமையாகும். அதிகாரிகள் சுற்றுப்பயணம் வரும்போது அவர்கள் தங்கும்கூடாரம் அடிக்கத் தேவையான முளைகளையும் இவர்களே செய்து தரவேண்டும்

பகடர் - (Bagada)

பகடர்,, பாக்தார், பக்டா எனப் பலவாறு வழங்கப் பெறும் தெலுங்கர்களாகிய இவர்கள் உள்நாட்டில் மீன் பிடிப்பவர்கள். நீண்ட ஈட்டி கொண்டு மீன் பிடிப்பதில் திறமை மிக்கவர்கள் என இவர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் "தசரா விழாவின்போது இவர்கள் மீன்பிடிக்கும் கூடையினை வழிபடுகின்றனர். ஒரு மூவிலைவடிவிலான சூலத்தையும் அப்போதுஇவர்கள்வழிபடுகின்றனர். அதற்கான சரியான காரணம் தெரியவில்லை." எனக் குறிக்கப்பட்டுள்ளது. மூவிலைச் சூலம் இவர்கள் மீன் பிடிக்கப் பயன்படுத்தும் ஈட்டியாகலாம். விசாகப் பட்டினத்தைச் சேர்ந்த மலைப்பக்க சமீன் நிலங்களில் சில பகடர்கள் பயிர்த்தொழிலும் ஈடுபட்டுள்ளனர். கோல்கொண்டா, மாதுகுல்ல ஆகியவற்றை ஆண்ட அரசர்களுக்குப் பக்தி சிரத்தையோடு சேவை செய்ததால் அவர்கள் 'மொக்காச'குடிவார முறையில் தங்களுக்கு நிலங்களை விட்டிருப்பதாக இவர்கள் தங்கள் பெயருக்குக் காரணம் கூறுகின்றனர். இவர்களுள் சிலர் மலைப்பகுதி ஊர்களுக்குத் தலைவர்களாவும் உள்ளனர். ஓர் ஊரின் தலைவன் படாள் எனப்படுகிறான். படாளர் என்பது காபுகளின் புறமணக் கட்டுப்பாடுடைய குலத்தின் பெயராகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. அச்சாதியாரின் ஒரு பிரிவினரே பகடர் என்ற கருத்தும் கூறப்படுகிறது. பல படாளர்களுக்குத் தலைமை மேற்கொள்பவன் தன்னை நாயக் அல்லது ராசு எனக் கூறிக் கொள்கின்றான். மோக்காசதர், தொவர் என்ற பட்டத்தையும் இவர்கள் சூடிக்கொள்கின்றனர்.1871 கணக்கெடுப்பு அறிக்கையில் "சமவெளியில் வாழும் பாக்தாரர்கள் தங்களைப் படைவீரர்களாகக் கருதுகின்றனரே யன்றிப் பயிர்த்தொழிலாளராகக் கருதுவதில்லை. விசாகப் பட்டினத்தில் உள்ள மாடுகுல்லு மலைகளில் உள்ளவர்கள் சூழல்

காரணமாக அத்தகைய மனப்பான்மையை விட்டு உணவுக்காகப் பயிரிட வேண்டியதாகின்றது. இவர்கள் காபுகளைத் தங்கள் நிலத்தில் உழைக்கச்செய்கின்றனர். இவர்கள் பயிர்த் தொழிலினைப் பாங்காகச் செய்யப் பழகாதவர்களாகவே உள்ளனர்''. எனக் கூறப்பட்டுள்ளது.

விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டில், 'மடம்' என்ற ஊருக்கு அருகில் மச்சாறு (மீன் ஆறு) வில் காணப்படும் மச்சய குண்டம் (மீன் குழி), ஏந்திரிக மலைக்கு அண்மையில், கடல் மட்டத்திற்குமே 5188 அடி உயரத்தில்அமைந்துள்ளது. அங்கு ஆற்றிடையே பாறைகள் குறுக்காக அமைந்துள்ளன. ஆறு, பாறைகளைக் குடைந்தபடி ஒரு பெரிய துளை வழியாகச் சுமார் நூறு கசதூரம் பாய்ந்து பின்னர் வெளிப்படுகின்றது. பாறைகளின் அடியேயிருந்து ஆறுவெளிப்படும் இடத்தில் ஒரு பெரிய குழியினை அது ஏற்படுத்தியுள்ளது; அதில் சிறியதும் பெரியதுமான 'மாசீர்' மீன்கள் நிறைந்திருக்கும். இவை மக்களைக் கண்டு அஞ்சுவதில்லை. பெரிய மீன்கள் நமது கைகளில் இருக்கும் உணவை உண்ணுவதோடு அவற்றின் முதுகைத் தட்டித்தரவும் இடம் தருகின்றன. மாட்கொல்லே சமீன்தார்கள் அவற்றிற்குப் பாதுகாப்புத் தருகின்றார்கள். மீன்களிடத்து மூட நம்பிக்கையோடு கூடிய அச்சங்கொண்டுள்ள இவர்கள் பல காரணங்களால் எல்லா வகை மீன்களையும் போற்றுகின்றனர். ஒரு பிரிஞ்சாரி ஒரு முறை ஒரு மீனைப் பிடித்துச் சமைத்தபோது, மீன்களின் அரசன் தூய சிந்தையுடன் அவனைச்சபித்ததாகவும், அதனால் அவனும் அவன் பட்டியிலிருந்த கால்நடைகளும் கற்களாகி விட்டதாகவும் அவற்றை இன்றுவரை அங்குக் காணலாம் எனவும் ஒரு கதை வழங்குகின்றது. இம் மீன்குளத்தின் அருகே இருக்கும் குடிசைக் கோயிலில் சிவராத்திரியின்போது ஒரு திருவிழா நடைபெறுகிறது.அச்சமயம்பூசாரியாகப் பொறுப்பிலிருப்பவன் ஒரு பகடனே. விழாவின் ஒரு சடங்காக, மீன் குளத்தில் உள்ள மீன்களுக்கு உணவளிக்கப்படுகிறது.

''1901-இல் கொண்டமாலர் அல்லது மலைப் பறையர் என வழங்கப் படுகின்றவர் ஊர்களில் ஒன்றைச் சில பொறாமைக்கார பகடர்கள் கொள்ளையிட்டனர். இவ்வூரைச் சார்ந்தவர்கள்

சுறுசுறுப்பான வணிகர்கள். விரைந்து செல்வர்களாக மாறிய இவர்கள் தங்களைப் பற்றிய உயர்வான மனப்பான்மை அடைந்திருந்தனர். அவர்கள் ஆணவக்காரர்களாக உள்ளனரென்று காரணங்கற்பித்தே அவர்கள் ஊரைப் பகடர் கொள்ளையிட்டனர். ஒரு சேவற் போரில் மாலர்களின் சேவல் படகர்களின் சேவல்களை வெற்றி கொண்டதே இவர்களிடையே தொல்லைகள் விளைய உடனடிக் காரணமாயிற்று.''

இச்சாதி புறமணக்கட்டுப்பாடுடைய பல குலங்களாகவோ இல்லப் பேருடையனவாகவோ பிரிக்கப்பட்டுள்ளது. இக்குலப் பெயர்களில் சில காபு, தெலக, வந்தாரி சாதி குலப்பெயர் களாகவும் உள்ளன எனத் திரு. சி. ஹயவதனராவ் ஒரு குறிப்பில் கூறியுள்ளார். பெண்களின் திருமணம் பருவமடையும் முன்போ, பின்போ நடத்தப்படும். மீநரிகம் எனப்படும் தாய் மாமன் மகளை ஒருவன் மணந்து கொள்வது அவன் கடமையாகும் என்ற வழக்கம் இவர்களிடையே பொதுவாகக் காணப்படுகிறது. ஒரிய அல்லது தெலுங்குப்பிராமணன் ஒருவன் இவர்கள் திருமணச் சடங்குகளை நடத்தி வைக்கிறான். பெண்ணுக்குப் பரிசப் பணத்திற்குப் (வோலி) பதிலாக நகைகளைத் பரிசளிப்பது இவர்கள் பழக்கம். 1901 கணக்கெடுப்பில் ஒரு திருமணத்தில் மணமகனை அவன் மைத்துனன் அடித்து விட்டதாகவும அம்மணமகனுக்கு அதன்பின் ஓர் இணைப் புத்தாடைகள் பரிசளிக்கப் பட்டதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. பகடர்களில் சைவர்களும் வைணவர்களும் உளர். வைணவர்கள் கோதாவரி மாவட்டத்தில் வாழும் குருவிடம் சென்று தோளில் முத்திரை பதித்துக் கொள்கின்றனர். வைணவர்கள் இறந்தவர்களை எரிக்கின்றனர். சைவர்கள் வழக்கமான உட்கார்ந்த நிலையில் அவர்களைப் புதைக்கின்றனர். வைணவர்களுக்குச் சாதானிகளும், சைவர்களுக்கு ஜங்கமர்களும் சடங்குகளைச் செய்கின்றனர். இரு பிரிவினரும் பெரிய நாள், சிறிய நாள் ஆகியவற்றில் செய்வதற்குரிய இறந்தோர் சடங்குகளைச் செய்கின்றனர். மலை வாழ் பகடர் விசாகப்பட்டினம் மலைச்சாதியார் கொண்டாடும் இதிக பொண்டுக விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

பகுசாகரர் - (Bahusāgara)

பல கடலினர் எனப் பொருள்படுவது. 1901 சென்னைமாநிலக்

லக் கணக்கெடுப்பில் ரங்காரி சாதிக்குரிய இன்னொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது ரங்காரிகள் தையல்காரர்கள்; சாயம் தோய்ப் பவர்கள். இப்பெயரின் காரணம் தெளிவற்றதாக உள்ளது.

பைத்தியர் – Baidya

பார்க்க : வைத்தியர். **See–Vaidya:**

பைநேடு – Bainêdu

பைநேடு அல்லது பைநேடி என 1901 கணக்கெடுப்பில் குறிக்கப்பட்டுள்ள இவர்கள் மாலர், மாதிகர் ஆகிய சாதி யாருக்குரிய இசைக்கலைஞர்களும் அம்பட்டர்களுமாவர். காமலர்களின் பெரியநாள் (பெத்ததின) சாவுச் சடங்கில் மாலர் சாதிப் பைநேடு அக்கம்மாவின் கதைப் பாடலை ஒப்பிக்கும் செயலைச் செய்வதோடுகூடத் தரையில் 'முக்கு' எனும் உருவங் களையும் தீட்டுகிறான்.

பைராகியர் - Bairāgi

சமயத் தொடர்புடைய இரந்துண்ணும் கூட்டத்தினரான பைராகிகள் இந்தியா முழுவதும் திரிகின்றனர். வடநாட்டுச் சாதியாரைச் சேர்ந்தவர்களே இவர்களில் பெரும்பாலோர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த இராமானந்தர் தோற்றுவித்த பைராகி நெறியைப் பின்பற்றுபவர்கள். தன்னு டைய சமகாலத்தவரான பிற சீடர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டு அது தன் குருவினால் ஒப்புக் கொள்ளப்பட்டதை, எதிர்த்து வெளியேறி இவர் தனியே இந்த உட்பிரிவினைத் தோற்றுவித்தாரென்பது எல்லோராலும் அறியப்பட்ட வழக் கியல் வரலாறாகும். இவர் இந்தியாவின் பல பகுதிகளையும் சுற்றிப் பயணம் செய்வதில் கொஞ்ச காலத்தைக் கழித்து மடத்திற்கு அல்லது குருபீடத்திற்குத் திரும்பினார். அப்பொழுது இவரையொத்த சீடர்கள் இவர் மேற்கொண்ட பயணத்தின் போதுதனித்து மற்றவர்கள் காணாதபடி உண்ணும்இராமனுசர் பிரிவின் சிறப்பான ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்திருக்க இயன் றிருக்காதென இவர் மீது குற்றம் சுமத்தினர். இவர் குருவான



பைராகிகள்

இராகவானந்தர் அவர்கள் கூற்றில் உண்மையிருப்பதாக ஒப்புக் கொண்டார். மற்றச் சீடர்களோடன்றி இராமனந்தர் தனித் திருந்தே உண்ண வேண்டுமெனத் தண்டிக்கப்பட்டார். இத னால் மிகவும் ஆத்திரங்கொண்ட இவர் அந்தச் சமய நிலையத்தி லிருந்து வெளியேறி புதியதோர் பிரிவினைக் கண்டார்.*

பைராகி என்ற சொல் வி+ராக், வை+ராக்ய என்ற இரு வட சொற்களிலிருந்து வந்த, ஆசை உணர்வு அற்றவர் என்ற பொருளில் தன் புலனுணர்ச்சிகளை அடக்கி உலக ஆசைகளி லிருந்து விடுபட்ட துறவியைக் குறிப்பதாகும். பைராகிகள் சில போது பாவாஜி அல்லது சாது எனவும் அழைக்கப்படுகின்றனர்.

வைணவர்களான பைராகிகள் தென்கலைக்குரிய நாமத் தினைச் சந்தனம் அல்லது கோபியினால் நெற்றியிலிட்டுக் கொள்வர். வடகலை நாமத்தோடுகூடிய பைராகிகளை அரி தாகவே காணலாம். துளசிமணிமாலை, தாமரை விதை மாலை ஆகியவற்றை இவர்கள் கழுத்தில் அணிவர். ஒவ்வொரு பைரா கியும் தன்னால் அல்லது தனது மாணவனால் மாட்டுச் சாண நீரால் மெழுகித் தூய்மை செய்யப்பட்ட இடத்தில் தன் உணவினைத் தானே சமைத்துக் கொள்வான். தன்னுடைய உணவைச் சமைத்து உண்டபின்னரே அவன் அவ்விடத்தை விட்டு அகல்வான். மற்றவர் பார்வையில் படாதபடி தாங்கள் உண்ணுமிடத்தை மறைவாக அமைத்துக் கொள்ளவேண்டும் என்று பைராகிகள் எண்ணுவதில்லை. நாளும் ஒருமுறை பிற் பகலில் மட்டும் உண்ணும் இவர்கள் ஊன் உணவைத் தொடுவ தில்லை. கடைவீதிகளிலோ சத்திரங்களிலோ பெறப்படும் பிச்சை யைக் கொண்டே இவர்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். உணவு சமைக்க ஓரிரு பித்தளைப் பாத்திரங்களையும், வழிபாட் டுக்கு உரிய சாலக்கிராமக் கல்லையும், ஒரு சங்கையும், கஞ்சா புகைப்பதற்கான குழாயையும் எப்பொழுதும் இவர்கள் தங்களு

*எச். எச். வில்சன் இந்துக்களின் சமயம் பற்றிய கட்டுரைகளும் உரைகளும் 1862. (H. H. Wilson, Eassays and Lectures, chiefly on the Religion of the Hindus, 1862.)

டன் கொண்டு செல்வர். இடுப்பில் கட்டிய கோவணத்தைத் தவிர அவர்கள் பொதுவாக வேறு உடைகள் அணிவதில்லை. சிலர் வேட்டி, தலைப்பாகை ஆகியனவற்றையும் அணிவதுண்டு. தாடி வளர்க்கும் இவர்கள் தலைமுடியைச் சடையாக்கிக் கொள்வர். சிலபோது தலைமுடியை உச்சந்தலையில் முடிச்சாகப் போட்டுக் கொள்வதுமுண்டு. கோவணத்தோடு மட்டும் திரிபவர்கள் உடல் முழுதும் சாம்பலைப் பூசிக் கொள்வர். சிலர் தெருவில் பிச்சையெடுத்தபடி செல்லும்போது ஏதாவது ஒரு கடவுள் பெயரை உரக்கக் கூவியபடி செல்வர். சிலர் வீடுவீடாக அமைதியாகப் பிச்சை கேட்டுச் செல்வர். சிலர் குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்துகொண்டு மக்கள் தங்களிடம் வந்து பிச்சையிட வேண்டும் என எதிர்பார்ப்பர்.

பைராகிகளுள் சிலர் திருமணம் செய்துகொள்வதில்லை. மற்றவர்கள் திருமணம் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் துறவு வாழ்க்கை வாழ வேண்டியவர்கள். ஆனால் முனைவர் டி. என். பட்டாச்சார்ஜி கூற்றுப்படி,*''இத்துறவிகளின் மடங்களில் மிகுதியான அளவில பெண் துறவிகள் இருப்பதால் அவர்களோடு இவர்கள் வெளிபபடையாகவே கணவன் மனைவியராக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.'' சாலக்கிராமக் கல்லை வழிபடுவதில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். அதனை வழிபடாமல் உணவு கொள்ள மாட்டார்கள் சாலக்கிராமக் வழிபாட்டின்போது தங்கள் தலையில் தேவநாகரியில் இராமன் பெயர் பொறித்த துணியைக் கட்டிக் கொள்வர். தேவநாகரியில் இராமநாமத்தைத் தங்கள் முகத்திலும் தோள்களிலும் பொறித்துக் கொள்வர். தியானத்தின்போது மான் அல்லது புலியின் தோலினைத் தரையிலிட்டு அமர்ந்து கைகளை யோகத் தண்டத்தின் மீது வைத்த நிலையில் இருப்பர். ஓர் இணைப் பற்றுக் குறடுகள் அவருக்கு வலப் பக்கம் தரையில் குத்தப்பட்டிருக்கும். சிலபோது அதனருகே கணப்பும் இருக்கக் காணலாம். ''பைராகிகளின் கடமைகளுக்கும் அன்றாட நடை

---

* இந்துக்களின் சாதிகளும் குலப்பிரிவுகளும். (Hindu Castes and sects.)

முறை வாழ்க்கைக்கும் மிக விரிவான சடங்கு விதிகள் வகுக்கப் பட்டுள்ளன. துவைப்பது, குளிப்பது, அமர்வது, பிரயாணம், உடல் தூய்மை, மனத்தூய்மை, விட்டுணு பற்றிய தியானம், அவர்களுக்கே உரிய காயத்ரி சொல்லும் முறை, இராமன், சீதை, இலக்குவன், பரதன், சத்ருக்கனன், இராமனின் வில் அம்பு கள், அனுமன் ஆகியோரை வழிபடும்முறை ஆகியனவெல்லாம் அவ்விதி முறைகளுள் மிக விரிவாக விளக்கிக் கூறப்பட்டு உள்ளன.''* என்று திரு ஜெ. சி. ஓமன் குறித்துள்ளார்.

பைராகிகளுக்கு ஒரு குரு அல்லது பூசாரி இருப்பார், அவரை இவர்கள் மகண்ட் என்றழைப்பர். சிலர் திருப்பதிக்கு அருகில் உள்ள புகழ்பெற்ற கோயிலுக்குச் சென்று அங்குள்ள மகானுக்கு அஞ்சலி செலுத்துவர்.

பைசியர் - Baisa

கஞ்சம் மாவட்டக் கொரொணொக்களின் ஓர் உட்பிரிவு.

பைத்த கம்மரவர் – Baita Kammara

இப்பெயர் கருமான்களைச் சேராதவர் எனப் பொருள்படும். இது கம்சல கருமான்களுக்குரிய பெயர். தாழ்ந்த படிநிலையின ரான இவர்கள் வெட்ட வெளிகளிலோ ஊருக்கு வெளியே யிருந்தோ தொழில் செய்வர்.†

பாசந்திரியர் - Bajantri

மங்கலருக்கான மற்றுமொரு பெயர். இது அவர்கள் இசைத் தொழில் செய்வோர் என்பதைக் குறிக்கும்.

பக்டர் - Bakta

பார்க்க: பகடர்

---

* இந்தியாவின் சித்தர்கள், துறவிகள், அருட்தொண்டர், 1903. (The Mystics, Ascetics and Saints of India, 1903.)

† 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு. (Madras Census Report, 1901.)

பாகுடர் – Bākuta

ஹொலையரின் ஓர் உட்பிரிவினர்.

பலநொள்ளு – Balanollu

பல நொள்ளு, பத்ர நொள்ளு என்பன காணீகர்களின் கோத்திரப் பெயர்கள். இக்கோத்திரத்தினர் செம்புளிச்சம் (*Erythroxylon monogynum*) மரத்தை வெட்டமாட்டார்கள்.

பாலசந்தோசர் – Bālasantōsha

பாலசந்தோசர் எனப்படும் பாலசண்டவாண்டலு (குழந்தைகளைத் திருப்தி செய்வோர்) என்பவர் பற்றிக் கர்நூல் கையேட்டில், "இவர்கள் இசைப்பாடல் ஒப்பிப்பவர்கள்; விசாகப்பட்டினத்தில் உள்ள பொப்பிலி கோட்டையைப் புஸ்ஸி முற்றுகையிட்டதும், கர்நூல் நவாப்பின் கதையும் அல்லது கர்நூலை ஆங்கிலேயர் கைப்பற்றிய கதையும் இவர்கள் சிறப்பாகப் பாடும் கதைப் பாடல்களாகும். சிவனின் இரண்டு மனைவியரான கங்கையும் பார்வதியும் தங்களுக்குள் போடும் சண்டையையும் கதைப் பாட்டாக இவர்கள் பாடுவர்.

பளேக்காரர் - Balēgara (bangle man)

பணசிகரின் தொழில் தொடர்பான ஓர் உட்பிரிவு.

பலிசர் – Balija

திரு பிரான்சிஸ் பலிசர் பற்றிப் பின்வருமாறு விளக்குகின்றார்:-* "பலிசர் சென்னை மாநிலமெங்கும் ஆங்காங்கே காணப்படும் தெலுங்கு பேசும் வணிகச் சாதியார். தேசா அல்லது கோட்டை, பேட்டா அல்லது தெரு என்ற இரு பெரும் பிரிவுகளையுடையது இச்சாதி. கோட்டைப் பலிசர்களில் மதுரை, தஞ்சாவூர், விஜயநகர் ஆகியவற்றை ஆண்ட அரசர்களின் முன்னோர்களும், அந்நாடுகளின் ஆட்சித் தலைவர்

* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை 1901. (Madras Census Report, 1901.)

களாக இருந்தவர்களின் முன்னோர்களும் அடங்குவர். இரண்டாவது பிரிவில் 'காஜாலு' எனப்படும் வளையல் விற்போர், பெரிகி எனப்படும் உப்பு விற்போர் முதலான வணிகர்கள் அடங்குவர். தமிழ் மாவட்டங்களில் பலிசர், வடுகர்கள் எனவும் கவரர்கள் எனவும் வழங்கப்படுகின்றனர். மதுரையிலும், தஞ்சாவூரிலும் அரசாண்ட பலிசர் அல்லது நாய்க்கர்கள் மரபில் வந்தவர்கள் தங்களைச் சத்திரியர்கள் எனவும் காசியபர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறிக் கொள்கின்றனர். விசய நகரத்து இராயர்கள் தங்களைப் பாரத்வாசரின் நேர் மரபினர் என்று கூறிக்கொண்டனர். மற்றவர்கள்மகாபாரத கால மன்னர்களான கௌரவர்கள் மரபினர் எனப் பழமை பாராட்டுவர். ஆனால், பலிசர்கள் சத்திரிய மரபினர் என்பதனை மற்றச் சாதியினர் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் பலிசர்கள் கம்மர் அல்லது காபுக்களிலிருந்து பிரிந்தவரோ இந்த சாதிகளிலிருந்தும் மற்றத் தெலுங்குச் சாதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கலப்படமான சமூகத்தவர் என்றோ கருதுகின்றனர். இச்சாதியைச் சேர்ந்த எவரும் இப்பொழுது பூணூல் அணிவதோ வேத நெறிப்பட்ட சடங்குகளைச் செய்வதோ இல்லை. மதுரையிலும், தஞ்சாவூரிலும் ஆண்ட மன்னர்கள் பரம்பரையினர் எனக் கூறிக் கொளபவர்கள் தங்களைக் கர்த்தாக்கள் (ஆளுநர் என்ற பொருளில்) எனப் பதிந்துள்ளனர்.

1901 கணக்கெடுப்புத் தொடர்பாகத் திரு பிரான்சிஸின் முன் வைக்கப்பட்ட ஒரு கடிதத்தில் பலிசர் பற்றிக் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- "பலிசர் சந்திர வம்சத்தைச் சேர்ந்த சத்திரியர்கள் என்பதனைப் பாகவதம், விட்டுணு புராணம், பிரஹ்மாண்டபுராணம் முதலியன தெளிவாக்கும்...........இது தொடர்பாகச் சேவப்ப நாய்க்கன என்பவன் விசய நகர நரபதி சமஸ்தான அச்சுத தேவராயரின் மைத்துனியான மூர்த்தியம்மாளை மணந்து கொண்டபோது தஞ்சாவூரினைத் திருமணப் பரிசாகப் பெற்று நெடுங்காலம் ஆண்டான். இச்சமயத்திலேயே மதுரையை ஆண்ட திருமலை நாயுடு சேவப்ப நாய்க்கரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியை மணந்து கொண்டார். திருமலை நாயுடுவின் பேரரான சொக்கலிங்க நாயுடு

என்பவன் தஞ்சாவூரை ஆண்ட முன் சொன்ன சேவப்ப நாயுடுவின் பேரனான விசயராகவலு நாயுடுவின் மகளான மங்கம்மாளை மனந்துகொண்டான். இதன் வழி தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய ஊர்களிலிருந்து ஆண்ட நாயுடுகள் விசய நகர நரபதி அரசின் உறவினர்கள் என்பதனைத் தெளியலாம். விசயநகர நரபதிகள் சந்திர வம் சத்தைச் சேர்ந்த சத்திரியர்கள் என்பதனை மனுசரித்திரம், பாரிஜாதாபகரணயம், புரொயுட பிரபந்தகவிசரித்திரம் முதலிய வற்றால் அறிய முடிகிறது. இவர்கள் ஆந்திர அரசர்களின் நேர்வழி மரபினர் என்பதனைப் படைப்பகுதி முதல்வர் மெக் கென்சி சேகரித்துள்ள கையெழுத்துச் சுவடிகள் தெளிவாக்கும். எம். டி. காம்பெல் தனது தெலுங்கு இலக்கணத்திற்கு எழுதி யுள்ள முன்னுரை, ஜேம்ஸ் பிரின்செப் வரைந்துள்ள ஆந்திர அரசர்களின் கொடிவழிப் பட்டியல் ஆகியன ஆந்திர அரசர்கள் யயாதி அரசரின் சந்திர குலத்தின்சந்ததியினர் என்பதனையும் தெளிவாக்குவனவாம்.''

திரு எச். எ. ஸ்டுவர்ட் பலிசர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்*:– ''பலிசர்கள் தெலுங்கு நாட்டைச் சேர்ந்த வணிகர்கள்; எனினும் மாநிலமெங்கும் காணப்படுகின்றனர். இச்சாதியாரின் தோற்றம் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் அவர்கள் காபு அல்லது ரெட்டி சாதியிலிருந்து பிரிந்த கிளையினர் என்பதே உண்மைக்கு அண்மையதாகலாம். இது ஒரு கலப்புச் சாதியாகவே தோன்றுகிறது. இச்சாதியார் மற்றச் சாதிகளிலிருந்து விலக்கப்பட்டவர்கள். முறையற்ற திருமண உறவின் வழிப் பிறந்தவர்கள் ஆகியோரை முணுமுணுக் காமல் தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருப்பதே இவர் களுள் பலர் தங்களைப் காபுக்கள் எனப் பதிந்து கொண்டிருக் கக் காரணமாகலாம். காபு என்பது உழவரைக் குறிக்கும் பொதுவான தெலுங்குச் சொல். ஒரு காலத்தில் இன்றிருப்பதை விடப் பலிசர்களும் காபுக்களும் நெருங்கிய உறவுடையவர்

---

* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, 1891. (Madras census Report, 1891.)

களாக இருந்திருக்கக் கூடும். பலிசர்கள் தாங்கள் காபுக்களின் சாதியைச் சேர்ந்தவரென உரிமை கொண்டாடுவதில் உண்மை இல்லாமலில்லை. பலிசர்களுக்கும் காபுக்களுக்கும் இடையே நடைமுறை வழக்கங்களில் அதிக வேறுபாடில்லை. இவர்கள் பெண்களின் திருமணத்தைப் பருவம் அடையும் முன்னோ பருவம் அடைந்த பின்னோ நடத்துகின்றனர். கைம்பெண்கள் மறுமணம் புரிந்து கொள்ள உரிமை தரப்படுவதில்லை. ஊன் உண்ணும் இவர்கள் மதுப்பிரியர்கள். ('பலிசனாகப் பிறந்தவன் சாராயப் பாட்டிலைத் திறந்தேயாகவேண்டும்' என்ற பழமொழியும் உள்ளது.) வழக்கமாக இந்துப் பெண்கள் அணியும் நீண்ட சேலைக்குப் பதிலாகப் பலிசர் சாதிப் பெண்கள் பொதுவாகப் போகங்களும் சானிகளும் அணியும் பாவாடையே அணிகின்றனர். இச்சாதியாரின் பொதுப்பெயர் நாயுடு.'' இவர்கள் தொழில் பற்றிப்* ''புகைவண்டி நிலையத்தலைவர்கள், தலைச் சுமைக் கூலிகள், ரொட்டி சுடுவோர், வீட்டு உதவியாளர், நகராட்சி ஆய்வர், அஞ்சல் கொண்டோடுவோர், தெரு வணிகர் உணவுக்கடை வைத்திருப்போர் எனப் பலிச நாயுடுகள் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கக் காணலாம். சிலர் நாயுடு என்ற பட்டப் பெயருக்குப் பதிலாகச் செட்டி என்ற பட்டத்தை விரும்பி வைத்துக் கொள்கின்றனர்.'' எனக் கூறப்பட்டுள்ளது. பெல்லாரி மாவட்டக் கையேட்டில், ''பலிசர் பொதுவாகச் சமுதாயப் படிநிலையில் உயர்ந்தவர்களாகவே அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளனர். சிலர் நில உரிமையாளர்களாகத் தங்கள் சொந்த நிலத்தில் குடியிருந்துகொண்டு தாழ்ந்த பிற சாதியாரின் உதவியோடு பயிர்த்தொழில் செய்கின்றனர். பெரும்பாலோர் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்'' எனக் கூறப்பட்டுள்ளது. திருப்பதியில் பல பலிசர் குடும்பங்கள் சிவப்புச் சந்தன மரத்தால் (*Petrocarpus santalinus*) பொம்மைகள் செதுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தெய்வ உருவங்கள், புராணப் பாத்திரங்கள், யானைகள் குதிரைகள் பூட்டிய தேர்கள் முதலியன பெரும் அளவில் செதுக்கப்படுகின்றன. வீட்டுக்குப் பயன்படும் சொம்பு, கிண்ணம், குவளை, தட்டு போன்றவை

* தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒரு சாதியாரின் சித்திரங்களும் விளக்கங்களும். (A native: Pen and Ink Sketches of South India)

கடைசல் பொறியின் உதவியோடு செய்யப்படுகின்றன. பெரிய பாத்திரங்கள் சிவப்புச் சந்தன மரத்தை ஒத்திருக்கும் வேப்பி அல்லது ஆச்சா (*Hardwickia binata*) மரத்தால் செய்யப்பட்டா லும் அவை எளிதில் பிளந்து உடையக்கூடியவை. இவ்வாறு செதுக்கப்படுபவை திருப்பதிக்கு வரும் புனிதப் பயணிகளுக்கும் மற்றவர்களுக்கும் விற்கப் படுவதோடு, காஞ்சிவரம், மதுரை முதலிய இடங்களில் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் கொண்டு போய் விற்கவும்படுகின்றன. சிவப்புச் சந்தன மரத் தால் செய்யப்படும் பண்டங்கள் தீட்டுக்குள்ளாகாதவையாகை யால் அவற்றைப் பெண்கள் வீட்டுக்கு விலக்காகும் சமயத்தில் பயன்படுத்திக் கொண்டு பின்னர் தீட்டுப் போக்கும் சடங் கின்றியே வீட்டினுள்ளும் பயன்படுத்துகின்றனர்.இதே காரணத் திற்காக இவை துறவிகள் பூசைப் பாத்திரங்களாகவும் பயன் படுத்தப்படுகின்றன.

பலிசர் என்ற பெயர்பலீ+ஜ என்ற வடசொற்கள் இணைந்து யாகப்பலியில் பிறந்தவர் பலிசர் என்ற அவர்கள் தோற்றம் பற்றிய வரலாற்றைத் தெரிவிப்பதாகும் என்பர். ஒருமுறை சிவன் தன் துணைவி பார்வதியை அவள் அழகு முழுதும் வெளிப் பட அலங்கரித்து வரும்படி கூறினான். பார்வதி தன்னை அப்படி அலங்கரித்துக் கொண்டு வந்து அவர் முன் நின்றபோது அவள் எத்தனை சிறந்த அழகியாகத் தோன்ற வேண்டுமோ அத்தனை அழகுடையவளாகத் தோன்றவில்லை என்பதால் சிவன் சிரித்தார். பார்வதி தான் சிறந்த அழகியாகக் காட்சி தர உதவ வேண்டும் எனச் சிவனை வேண்டினாள். சிவன் தன்னுடைய சடாமுடியிலிருந்து ஒருவனைப் படைக்க, அவன், வளையல்கள், மஞ்சள் ஆகியவற்றோடு பூமியில் தோன்றினான். பார்வதி அவற்றால் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அதனால் மனமகிழ்ந்த சிவன் அவளை ஒரு கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும்படி வேண்டினார். இவ்வாறு வளையல் களோடு வந்தவனே காசுல பலிசரின் முன்னோன் என நம்பப் படுகிறது. இக்கதையின் மாற்று வடிவமாக மற்றொரு கதையும வழங்குகிறது. அதன்படி, பார்வதி தன்னைக் கண் ணாடியில பார்த்துக் கொண்டபோது அவள் தோற்றம் அவ

ளுக்கு மன நிறைவைத் தராததால் தன் தந்தையைத் தன்னை மேலும் அழகுடையவளாக ஆக்கிக் கொள்ள வழி கேட்டாள் எனவும், அவன் பிரம்மனிடம் வேண்ட பிரம்மன் அவனைக் கடுந்தவம் செய்யும்படி ஆணையிட்டான். அதன் தொடர்பாக மூட்டப்பட்ட யாகத்தீயில் ஒருவன் கழுதையின்மேல் வளையல்கள் மஞ்சள், பனங்குருத்தோலை, கருப்புப் பாசிமணி, சந்தனப் பொடி, சீப்பு, நறுமணப் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றியவனாகத் தோன்றினான். அவ்வாறு பலித் தீயிலிருந்து தோன்றிய மனிதனின் வழி வந்த பலிசர் அப்பெயரைத் தாங்கினர் எனவும், அவனுக்கு மரியாதை தரும் வகையில் கொடிகள், தீப்பந்தம் இன்னிசைக் கருவிகள் ஆகியன வழங்கப்பட்டன என்றும் அக்கதை கூறுகின்றது.

தேசாயியர் அல்லது வலக்கைப் பிரிவின் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் பலிசர் சாதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. முன்பு அவர்கள் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாக விளங்கினர். வலக்கைப் பிரிவைச் சேர்ந்த அனைத்துச் சாதியினரும் தேசாயி செட்டிகளுக்கு அடங்கியிருந்தனர். இன்றுங்கூட ஒட்டர்களும், வேறுசிலரும் தங்கள் வழக்குகளைத் தேசாயிகளிடம் கொண்டு செல்கின்றனரேயன்றி தங்கள் சாதித் தலைவர்களிடம் கொண்டு செல்வதில்லை. முன்பு காஞ்சிவரம், கடலூர்,வாலாசாபேட்டை ஆகிய ஊர்களைத்தலைமையிடமாகக் கொண்ட மூன்று பெரும்பிரிவினராகத் தேசாயிகள் இருந்தனர். தலைமைத் தேசாயி மணியொன்று உடன் இணைக்கப்பட்ட பித்தளை அகப்பையினை விருதாக வைத்திருப்பான். பலிசர்கள் திருமணத்தின்போதோ, சாவுச் சடங்கின் போதோ சாலவதி எனப்படும் தேசாயினுடைய பணியாளனான பறையன் இதனை அவ்விடத்திற்கு எடுத்துச் செல்வான். இப்பறையன் கடைவீதிக்குச் செல்கையில் அள்ளு எடுக்கும் உரிமையுடையவன். ஊன் கறிக்கடையில் ஊனும், காய்கறிக் கடையில் காய்கறிகளும் தனக்கு வேண்டிய அளவில் பெற்றுக் கொள்வான். தேசாயின் அகப்பை இவன் பொறுப்பிலேயே இருக்கும். (பார்க்க: தேசாயி)

பலிசர் பற்றித் திரு ஸ்டுவர்ட் எழுதியுள்ளது வருமாறு*:-

* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, 1891. (Madras Census Report, 1891.)

'பலிசர் தங்கள் சடங்குகளுக்குப்பிராமணர்களையோ சாதானிகர் களையோ குருவாக அமர்த்துகின்றனர். பலிசர்களின் குலதெய்வ மான கௌரியே அவர்கள் வழிபடும் சிறப்பான தெய்வம். மாலர் களே கௌரியின் சிலையையும் அணிமணிகளையும் பரம்பரை யாகப் பேணிக்காத்துவருபவர்கள். பலிசர்கள் தங்களுக்கு வேண் டியபோது அவர்களிடமிருந்து அவற்றைப் பெற்று வழிபடுவர். இதற்குக் காரணமாகப் பின்வரும் கதையினைக் கூறுவர். வடக்கி லிருந்து வந்த முகமதியர்களால் துன்புறுத்தப்பட்ட பலிசர்களும் காபுகளும் வட பெண்ணையாற்றுக்கு வடக்கேயிருந்து தெற்கு நோக்கி இடம் பெயர்ந்துபோகும்போது,பெண்ணையாறு பெருக் கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்க இயலாத அவர்கள் தங்கள் குலதெய்வத்தை வழியுண்டாக்குமாறு வேண் டினர். அதற்கு அத்தெய்வம் தலைக்குழந்தை ஒன்றைத் தனக்குப் பலியிடும்படி வேண்டியது. பலிசர்கள் இதனைக் கேட்டு என்ன செய்வதென்று அறியாது திகைத்து நின்றனர். அவர்கள் பின் னால் வந்து கொண்டிருந்த மாலர் தயங்காது தங்கள் தலைக் குழந்தையொன்றை அப்பெண் தெய்வத்திற்குப் பலியிட்டனர். உடனே ஆறு இரண்டாகப் பிளந்து வழிவிடக் காபுக்களும் பலிசர்களும் ஆற்றைக் கடந்து முகமதியர் கொடுமையிலிருந்து தப்பினர். அப்போதிருந்து மாலர்கள், காபுக்களாலும் பலிசர் களாலும் மதிக்கப்படுவதோடு பலிசர்கள் தங்கள் தெய்வங் களான கௌரி, நந்தி, கணேசர் ஆகியவற்றை மாலர் வீடுகளில் கொடுத்து வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். இன்றும் கடப்பை மாவட்டத்தில் சில பகுதிகளிலும் வேறு இடங்களிலும் இது போல மாலர் இல்லங்களில் தெய்வ உருவங்களைக் கொடுத்துவைக்கும் பழக்கம் இருப்பதாக எனக்கு நம்பத்தக்க வர்களிடமிருந்து தகவல் கிடைத்துள்ளது.''

பலிசர்களின் பல உட்பிரிவுகளுள் பின்வருவன குறிப்பிடத் தக்கவை:-

1. காசூலர்:-கண்ணாடி வளையல்காரர். வளையல் அல்லது வளைசெட்டி என்பது இவர்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம். இவர்கள் தோளில் வளையல் பையைப் போட்டபடி எதிரில் வருவது நல்ல சகுனம் எனக் கருதப்

படுகிறது. அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட செர்மன் வளையல்களில் - இவை காசூலரின் உள்ளூர் வளையல் களோடு விற்பனையில் போட்டியிடுபவை - ஒரு பூச்சி உள்ளே தங்கியிருப்பதாக மக்களிடையே ஓர் அச்சம் பரவியுள்ளது. இப்பூச்சி வளையல்வாங்கி அணியும் வரை பதுங்கியிருந்து பின் வெளிப்பட்டு இதனை அணிப வரைக் கடிப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு கடிக்கு முன் அது தான் கடிக்கப் போகிறவர்களுக்குச் சாகுமுன் செய்து முடிக்க வேண்டிய காரியங்களைச் செய்ய எச் சரிக்கையும் தருகிறதாம். உடைந்த ஒரு வளையலிலிருந்து வெளிவந்து ஒரு சிறுமியின் மணிக்கட்டைக் கடித்த தாகக் கூறப்படும் வளையல் துண்டு எனக்கு அனுப்பப் பட்டது. ஆனால் அதனுள் இருக்கும் பூச்சி வெளிவரவில்லை.

2. கந்தவார் அல்லது கந்தப்பொடி வாண்டலு:- இவர் கள் ஊர் ஊராக மஞ்சள், குங்குமம், புன்னைச் சாயப் பொடி, பாசி, சீப்பு, பிற அழகுக்குதவும் பொருட்களை விற்றுச் செல்பவர்கள். முதலில் இவர்கள கோமட்டிகளாக இருந்தவர் என நம்பப்படுகிறது.

3. கவரை:- பலிசர் என்பதற்கு நேரான தமிழ்ப் பெயர்.

4. இலிங்கர்:- —

5. பஞ்சமர் :- —

6. தெலுகு அல்லது தெலக:- வடசர்க்கார் பகுதியில் பலிசர் என்பதற்கு நேரான சொற்கள்.

7. இராசமகேந்திரம் அல்லது மூசுகம்மர்:- முன்னது இராசமகேந்திர நகரைச் சேர்ந்தவரையும் பின்னது காதில் மூசுகம்மல் அணிகின்றவரையும் குறிக்கும்.

8. தோட்டர் :- தோட்டக்காரர்.

9. பகடளர் :- பவளக்காரர்.

10. பூசர்:- பாசிக்காரர்.

11. இராசர்:- அரசர்.

12. வியாசர்:- ஒரு முனிவர் அல்லது வேடர்.

வேட்டையாடும் குலத்தவர் இவரைத்தங்கள் முன்னோனாகக் கொள்வர்.

1901 கணக்கெடுப்பில் பலிசராகப் பதிந்து கொண்டு உள்ள பிற உட்பிரிவினர்கள் வருமாறு :-

13. ஜக்குலர்:- கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள தெனாலியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். ஒவ்வொருகுடும்பத்தினரும் தங்கள் குடும்பத்தில் பிறக்கும் பெண்களில் ஒருத்தியைப் பரத்தையராகப் போகக் கொடுத்து வந்தனர். சமூக சீர் திருத்தத்தின் பயனாகச் சிலஆண்டுகளுக்கு முன் இப்பழக்கத்தைக் கைவிடுவதென இப்பிரிவினர் அனைவரும் எழுத்து வழி உடன்பாடு கண்டுள்ளனர்.

14. ஆடபாபா:- சமீன்தார் குடும்பப் பெண்களுக்குப் பணிப்பெண்களாகப் பணிபுரியும் இவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப் படுவதில்லையாகையால் பரத்தையராக வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களின் பிள்ளைகள் தங்களைப் பலிசர் என அழைத்துக் கொள்கின்றனர். கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் இப்பிரிவினர் கசர் அல்லது கசவாண்டுலு என அழைக்கப்படுகின்றனர்.

15. சந்த கவரர்:- செங்கல்பட்டுமாவட்டத்தில்இவர்கள் கவரர் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

16. ரவுத்:- சேலம் மாவட்டத்தில் தங்களைப் பலிசராகப் பதிந்துள்ளவர்கள். பாளையக்காரர்களின் கீழ் படைவீரர்களாக இருந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

மற்றத்தெலுங்குச் சாதியாரைப் போலவே பலிசர்களுள்ளும் புறமணக்கட்டுப்பாடு உடைய பல குலப்பிரிவுகள் (இல்லப் பேர்கள்) உள்ளன; மேலும் பல கோத்திரங்களும் உள்ளன. குலப் பிரிவுகளுள் சில கீழே தரப்பட்டுள்ளன:-

துப்பாக்கல (துப்பாக்கி)	மிறியாள (மிளகு)
சமுத்திரம்	முத்யாளர்
பருப்பு	நாரி கேள்ள (தேங்காய்)

வளையல்களோடு காசுல பலிசன்

பலிசர் - மணமக்கள் கோலத்தில்

கண்டல (மணி)	நிமிலி (மயில்)
புலி	பகடலர் (பவளம்)
பல்லி	பட்டிண்டில (பட்டு வீட்டார்)
ஆவுல (பசு)	ரத்னாளர் (மாணிக்கக்காரர்)
கந்தம் (வாசனைப்பொடி)	உங்கராளர் (மோதிரக்காரர்)
ஜிலக்கரை (சீரகம்)	யெனுமாலர் (எருமை)

கோத்திரம் தெரியாத பலிசர் பசுலெட்டி அல்லது பசுபு லெட்டிக் கோத்திரத்தவராகக் கருதப்படுவர். இதே போன்று கோத்திரம் தெரியாத அனாதைப் பிராமணச் சிறுவர்கள் வசத் கோத்திரத்தவராகக் கருதப்படுகின்றனர்.

மூசு கம்மர் பிரிவில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து தரும் முன் அவளுடைய தாய்மாமன், அக்காவின் கணவன் ஆகியோர் உடன்பாடு பெறவேண்டும். மண உறுதிச் சடங்கின் போது வருங்கால மணமகனின் உறவினர்கள் மணமகளின் வீட்டிற்கு மேற்கட்டியின் கீழ் ஒற்றைப் படையிலான தட்டுக்களில் கடுகு, சீரகம், பெருந்தயம், தயிர், வெல்லம், துவரை, இனிப்பு உருண்டைகள், உப்பு, வாழைப்பழம், பூ, புத்தாடைகள், கரும் பாசிகள், பனை ஓலைச் சுருள், மஞ்சள், சீப்பு, குங்குமம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் செல்வர். வருங்கால மாமியாருக்கென சில ரூபாய்கள் துணியில் 'கொங்குமுடி' என்ற பெயரில் முடியப் பெற்று ஒரு தட்டில் வைத்திருப்பர். மண ஒப்பந்தம் செய்பவர்கள் தேங்காய், வெற்றிலை மாற்றிக் கொள்வர். தேங்காயினை மணமகன் வீட்டார் மேல் துண்டில் முடிந்து திரும்பும்போது எடுத்துச் செல்வர். மணப்பெண்ணை ஒரு பலகையில் அமரச்செய்து எண்ணெய், மஞ்சள் ஆகியன பூசி நலங்கு நடத்திப் புத்தாடைகள் புனையச் செய்வர். அதன்பின் மணையில் அமரும் அவள் மடியில் வெற்றிலை, பூ, நகைகள் முதலியவற்றை இடுவர். நெருங்கிய உறவினளான பெண்ணொருத்தி அவள் கழுத்தில் கருப்புப்பாசி மணிமாலை அணிவிப்பாள். மூசு கம்மர்கள் திருமணம் நடைபெறுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் பச்சை மூங்கிலைப் (சில சமயங்களில் அதனோடு உதிய (*Odina Wodier*) மரக்கிளைகளையும் சேர்த்துப்) பால்கம்பம் நடுவர். அதனை

வழிபட்டு, அதில் இரும்பு மோதிரமும் கம்பளி நூலும் பருத்தி நூலும் சேர்த்துத் திரித்த கயிற்றினைக் கட்டுவர். தோரணம் எனப்படும் இரண்டு கழிகளினிடையே கட்டப்பட்ட துணிக் கொடிகளோடு கூடிய கயிற்றை வண்ணாத்தி மணமகன் தாய் மாமனிடம் கொண்டு வந்து தருவாள். அவர் அதனை மணப் பந்தலில் கட்டுவார். குயவனார் வீட்டிலிருந்து மேற்கட்டியின் கீழ் திருமணப் பானைகள் கொண்டு வரப்பட்டு மணமக்களிடம் தரப்படும். மணமகனுக்கு நெருங்கிய உறவினர் அதில் தண்ணீர் கொண்டுவந்து மணமேடையில் வைப்பர். மணமான சில பெண்கள் தரையில் விரிக்கப்பட்ட தூய வெள்ளைத் துணியில் அரிசியைப் பரப்பிப் பாட்டுப் பாடியபடி அதனைத் தவிடுபோகத் தேய்ப்பர். அவர்களே மணமகன் அணிதற்குரிய ஆடையினை மஞ்சள் நீரில் தோய்த்து உலர்த்துவர். பலிசர்கள் தங்கள் பெண் மூதாதையர் வழிபாட்டில் கருத்து உடையவர், 'பேராண்டாளு பூசை' என்று கூறப்படும் அவர்களுக்கான வழிபாட்டினை நடத்திய பின்னரே எல்லா நற்செயல்களையும் தொடங்குவர். மூசு கம்மர்களில் மணமக்களுக்கு உறவினர்களாக உள்ள ஐந்து பெண்கள் ஒரு வேளை உணவு மட்டும் உண்டு விரதமிருந்து தீட்டுப்படாதவர்களாக ஒதுங்கியிருந்து நலங்கிடுவர். அவர்களுக் குப் புத்தாடைகள் வழங்கப்படும். பிற பிரிவினர்கள் சுவரில் மஞ்சளால் கோடிட்டு அதனை மூதாதையராகப் பாவித்து வழி படுவர். மூதாதையர் வழிபாடு முடிந்தபின் மணமகனின் கால், கை நகங்கள் வெட்டப்படும். மூசு கம்மர் மணமகனை அருகில் பிள்ளையார் கோயிலிருப்பின் அங்கு அழைத்துச் செல்வர். மற்றப் பிரிவினர் பிள்ளையார் வழிபாட்டை மணப்பந்தலிலேயே நிகழ்த்துவர். மூசு கம்மர் பிரிவைச் சேர்ந்த மணமகன் பிள்ளை யார் கோவிலிலேயே ஆடைகள் அணிவிக்கப்பட்டு நெற்றியில் பாசிங்கம், தலைப்பாகை, இடைக்கச்சில் குத்துவாள் ஆகியன தாங்கிமணக் கோலத்தில் மணப்பந்தலுக்கு வருவான். முன்பு, பலிசர்குத்து வாளை வழிபட்டனரெனவும் அதற்குச் செம்மறி, ஆடுமுதலியன பலியிடப்படும் என்றும் கூறப்படுகிறது. மணப் பந்தலுக்கு வரும் மணமகனை அவனுடைய மைத்துனன் பாதங் களைக் கழுவி மலரும் அரிசியும் இட்டு, விரல்களில் விஞ்சி அணிவித்துச் செருப்பும் அணிவிப்பான். பிராமணக் குருக்கள்

ஓமத்தீ மூட்டி அதில் நெய் வார்த்து வேதம் அல்லது வேறு மந்திரங்களைச் சொல்வார், அடுத்து மணமகன் மணிக்கட்டில் அவர் கங்கணம் அணிவிப்பார். மணமகளின் பெற்றோர் பின்னர் நீரும் அரிசியும் மணமகன் கையிலிட்டுத் தாரை வார்ப்பர். பிள்ளையாரை வணங்கியபின் கூடியிருப்பவர்கள் தாலிப் பொட்டினை வாழ்த்தி மணமகன் கையில் தருவர். அவன் மணமகள் கால்மீது தனது வலப் பாதத்தை வைத்துத் திரைக்கு மறுபக்கம் இருக்கும் அவள் கழுத்தில் தாலியைக் கட்டுவான். மணமக்கள் பின்னர் இடம் மாறிக் கொள்வர். அவர்கள் முன் அரிசி தூவப் படும். அதன்பின் மணமேடையினையும் பால் கம்பத்தையும் அவர்கள் மும்முறை வலம் வருவர். முதல் சுற்றும் இரண்டாம் சுற்றும் சுற்றி முடியும்போது மணமகளின் பாதங்கள் அம்மிக் கல்லின் மேல் வைக்கப்படும். மூன்றாம் சுற்றின் பின்னர் அவர்கள் அருந்ததி பார்ப்பர். ஒரு திருமணப் பானையுள் கிண்டி, மோதிரம், வளையல் ஆகியவற்றைப்போட்டு மணமக்கள் அவற்றை எடுப்பர். மணமகன் முதலில் கிண்டியை எடுத்தால் முதலில் பிறக்கும் குழந்தை ஆண் என்றும், மோதிரத்தை எடுத் தால் பெண் என்றும் சொல்வர். இச்சடங்கின் பின் மணமகன் மணமகள் நெற்றியில் அஞ்சனமையால் பொட்டிடுவான். இரண் டாம் நாள் மணமகன் சினம்மூண்டவனாகப் பாவனை செய்து கொண்டு மண நிகழ்ந்த வீட்டுக்கருகிலோ தோட்டத்திலோ வேறு வீட்டிலோ சென்றிருப்பான். மணமகளும் சில உறவினர்களும் ஊர்வலமாகச் சென்று உரிய மரியாதை தந்து அவனைத் திரும்ப அழைத்து வருவர். மீண்டும் ஓமத்தீ மூட்டப்படும். மணமகள் மணப்பானைகள் வைத்துள்ள 'அரவேணி' அறையில் நுழைந்து கொண்டவுடன் மணமகனை வாயிற்படியிலேயே திருமணமான சில பெண்கள் தடுத்து நிறுத்துவர். அவன் தன் மனைவியைப் பெயர் சொல்லி அழைப்பதோடு, அப்பெண்கள் கண்பட்டதைப் போக்க ஆரத்தி எடுத்தற்காகக் கொஞ்சம் தொகையும் கொடுக்க வேண்டும். சிலவிடங்களில் மணமகனின் உடன்பிறந்தவள் அவன் பவளத்தைத் (மகளை) தன் முத்துக்கு (மகனுக்கு) மண முடித்துத் தருவதாக உறுதி கூறும்படி வேண்டுவாள். அதன் பிறகு அவன் மணமகள் இருக்கும் அறைக்குள் செல்ல அனு மதிக்கப்படுவான். மூன்றாம் நாள் பிராமண குருக்கள் ஓமம்

வளர்த்தபின் மணமக்கள் குடும்பம் நடத்துவதான பாவனைகளை மேற்கொள்வர். பால் கம்பங்களை வழிபட்டபின், உழவு செய்வதாகப் பாவனை செய்யும் சடங்கு நடத்துவர். மணமகன் ஒரு கோலால் அல்லது சின்னஞ்சிறு கலப்பையால் கூடை ஒன்றிலிருக்கும் மண்ணைக் கிளறுவான். சில இடங்களில் அச்சமயம் அவன் உடன்பிறந்தவள் அக்கூடையை ஒரு துணியால் மூடி அவனை அச்செயலைச் செய்ய முடியாதபடி தடுப்பாள். மணமகன், "நான் என் பவளத்தை உன் முத்துக்கே தருவேன்" என உறுதி கூறவேண்டும். மணமகனின் மைத்துனன் கிட்டி எனப்படும் குச்சிகளினிடை மணமகன் விரல்களை நசுக்க முயற்சிப்பான். கிட்டிகள் முன்பு குற்றவாளிகளிடமிருந்து உண்மையினை வரவழைக்கப் பெருமளவில் பழக்கத்திலிருந்த ஒரு கருவியாகும். பின் மணமகள் தன் கணவனது உழைப்பின் களைப்பினைப் போக்கக் கஞ்சி கொடுப்பாள்.

பெரிக்கெயர் தங்கள் மணத்தின்போது பொட்டுக்கட்டுமுன் ஒரு கோணிப்பையை வழிபடுகின்றனர். மணச் சடங்கின் முதல் நாள் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை அளந்து ஒரு துணியில் கட்டி வைப்பர். மூன்றாம் நாள் அதனை அவிழ்த்து அளக்கும் போது சற்று அளவு கூடியிருப்பின் அது நல்ல அறிகுறியாகக் கருதப்படும். இராசமகேந்திரம் பலிசர்களிடையே நலங்குச் சடங்குக்குச் சற்றுமுன் மணமக்களின் முழங்கால், தோள், கன்னம் ஆகியவற்றை அவர்கள் குலத்தின் பெயரை உரக்கச் சொல்லியபடி உலக்கையால் தொடும் பழக்கம் உள்ளது. மூன்றாம் நாள் இதே நிகழ்ச்சியில் கன்னம், தோள், முழங்கால் ஆகியன முறை மாற்றித் தொடப்படும். காசூல்ல பலிசர் மணமகள் பொட்டுக் கட்டும்போது 'சன்னப் பப்புலி' எனப்படும் சிவப்புக் கோடிட்ட வெள்ளை ஆடை அணிந்திருக்க வேண்டும். மற்றப் பிரிவினர் மஞ்சள் நீரில் தோய்த்த வெள்ளை ஆடையை உடுப்பதையே மரபாகக் கொண்டுள்ளனர்.

வடஆர்க்காடு கையேட்டில் பலிசர் தங்களைத் தாசரியர், ஈதிகர் ஆகிய சாதிகளின் உட்பிரிவினராகப் பதிந்துள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளது. வசதியுடைய மீதரர் (மூங்கில் பிளப்பவர்

மற்றும் பாய் நெய்பவர்) தங்களைப் பலிசர் என அழைத்துக் கொள்ள விரும்புவதோடு செட்டி என்ற பட்டமும் சூடிக் கொள்கின்றனர். ஒட்டர்களும், உப்பரர்களும் சிலபோது தங் களை ஒட்ட பலிசர், உப்பர பலிசர் எனச் சிறப்பித்துக் கொள் கின்றனர். இவர்கள் வலக்கைப் பிரிவினர். அப்பிரிவிற்குப் பலிசர் களான தாசரிகளே தலைமை ஏற்கின்றனர். இதனால் இவர் கள் தங்களைச் செட்டி அல்லது செட்டி சமயம் எனவும் அழைத் துக் கொள்கின்றனர் போலும். மீன் பிடிக்கும் மிலர், மற்றும் வாடர் சாதியைச் சேர்ந்த சிலர் ஓடப் பலிசர் அல்லது வடப் (படகு) பலிசர் என்பதாகத் தங்கள் சாதிப் பெயரைக் கூறிக் கொள்கின்றனர்.

பெல்லாளர்: Ballāla or Bellāla

பெல்லாளர் அல்லது பல்லாளர் என வழங்கப்படும் இப் பெயர் 1901 கணக்கெடுப்பில் தனிப்பட்ட பலருடைய சாதிப் பெயராகப் பதியப்பட்டுள்ளது. இது இவர்கள் மைசூரை ஆண்ட ஹொய்சாள பெல்லாள அரச மரபினர் என உரிமை கொண்டாடுவதைக் காட்டுவதாகும். பல்லாள என்பது செல்வாக் கில் உயர்ந்த பண்ட் குடும்பத்தினர் சூட்டிக் கொள்ளும் பட்டப் பெயராகும். 'ஒரு பண்ட் வல்லமையுடையவனாக ஆனால் அவன் பல்லாளன் ஆகின்றான்' என்ற பழமொழியும் உள்ள தாகத் தென் கன்னட மாவட்டக் கையேடு தெரிவிக்கிறது.

பல்லெம்-Ballem (spear)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின் பெயர்.

பல்லி–Balli (lizard)

பலிசர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப் பெயர்.

பாலொலிகர்-Bālolika

இராசாபுரி என்பதற்குரிய மற்றுமொரு பெயர்.

பாலு–Bālu (bear)

தோம்பர் சாதியின் ஒரு குலப் பிரிவு.

பானை–Bāna (big pot)

தோகடர்களின புறமணக்கட்டுப்பாடுடைய ஒருகுலப்பெயர். தெலுங்கு வண்ணாருக்கு உரிய பெயராகவும் இது உள்ளது. இவர்கள் சிலபோது 'பானைத் தாசக்கல' எனவும் அழைக்கப் படுகின்றனர். பானா என்பது இவர்கள் துணிகளை வெள்ளாவி வைக்கும் பானையைக் குறிக்கும் தெலுங்குப் பெயராகும்.

பணசிகர்–Banajika (vanik, tradesman)

கன்னடம் பேசும் வணிகர்கள்; இவர்களில் பலர் இலிங்காய தர். (பார்க்க: இலிங்க பலிசர்)

பண்ட-Banda

பண்ட என்னும் இப்பெயர் மொண்டிகளான பிச்சைக் காரர் வகுப்பைக் குறிப்பது. பிடிவாதக்காரன் என்ற பொருளி லும் இது வழங்கப்படுகிறது. சிலர், இது தன் கையில் எப் போதும் ஒரு கல்லோடு பிச்சையெடுப்பவன் தனக்குப் பிச்சையிட வில்லையானால் அக்கல்லால் தன் மண்டையை உடைத்துக் கொள்ளப் போவதாகப் பிடிவாதம் பிடிப்பவனைக் குறிக்கும் என்பர். பாறை எனப் பொருள்படும் பண்ட எனும் சொல் ஒட்டர்களுடைய புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பிரிவின் பெயராகவும் வழங்குகிறது.

பண்டாரி–Bandāri (*Dodondaea viscosa*)

பண்டாரி என்ற இப்பெயர் விராலி என்ற செடிக்குரிய தெலுங்கு, கன்னட மொழிப் பெயராகும். இது ஒட்டர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பெயர்களுள் ஒன்று. கோவில் பண்டாரகர் என்ற பொருளுடையதாகத் ்தேவாங்கர், பத்ம சாலேயர் சாதிகளின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பெயரா கவும் இப்பெயர் அமைகிறது. அச்சாதியாருக்கு இக்குலத்தவர் செய்தி அறிவிப்பவர்களாகப் பணிபுரிகின்றனர். ஒக்கலிய சாதி யாரின் பட்டக்காரரான தலைவரின் உதவியாளனும் இப்பெயர் பெறுவான். கொங்கணிப் பிராமணரின் பட்டப் பெயராகவும் இது உள்ளது. இது கெலசியர் என்ற பெயருக்கு மாற்றுப் பெயராகும்.

பாண்டேகாரர் - Bāndēkāra

கொங்கணி வணிகருக்குரிய மற்றுமொரு பெயர். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பிராமணர்களின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ள இவர்கள் தங்களை வைசியப் பிராமணர் என்ற விசித்திரமான கலப்புப் பெயரால் அழைத்துக் கொள்கின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

பண்டி - Bandi (cart)

காபு, கவரார், குறவர், குறும்பர், குர்ணியர், குருபர், மாலர், ஒட்டர், ஸ்தானிகர், ஏனாதியர் ஆகிய சாதியாரின் புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பெயர். சமயத் திருவிழாக்களில் தேர் இழுக்கும் குறவர்களின் பெயராகவும் இது உள்ளது. நாயர்களில் விறகு வண்டியோட்டும் தொழில் புரிவோரும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

பங்காரு முக்கரர் - Bangēru Mugkara (gold nose ornament)

கம்மரின் ஓர் உட்பிரிவு. தங்க மூக்குத்தியர் என்பது பொருள்.

பணியர் - Baniya

பணியர் அல்லது புண்யர் எனப்படும் இவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறி வட்டிக்கடை நடத்தும் சௌகார்கள். தென்னிந்தியக் கடைத் தெருக்களில் நிலையாகத் தங்கிவிட்ட இவர்கள் தொழில் பெருகி நல்ல செல்வ வளமிக்க பகட்டான வாழ்க்கை வாழ்கின்றனர். பணியர் என்பது தென்னாட்டு கோமட்டிகளுக்குரிய மற்றுமொரு பெயராகவும் வழங்குகிறது.

''பணியர்களின் மொழியைப் பேசவும், எழுதவும் மொழி பெயர்க்கவும் அவர்கள் கணக்கு எழுதும் முறையைக் கற்கவும் இயன்ற நமது படை வீரர்களுக்கு அல்லது பணியாளர்களுக்கு இருபது பவுன் ஊக்கத் தொகை அளிக்கப்படும்'' என்ற அறிவிப்பை 1677 - இல் போர்ட் செயின்ட் ஜார்ஜ் இதழில் இயக்குநர்கள் குழு வெளியிட்டிருப்பது வரலாற்றியல் நோக்கிலான ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பஞ்சாரியர் - Banjāri

லம்பாடிகளுக்கான மற்றுமொரு பெயர்.

பங்கா - Banka (gum)

மொதாதி காபுக்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பண்ணக்காரர் - Bannagara (a painter)

சித்திரக்காரருக்குரிய மற்றுமொரு பெயர்.

பண்ணான் - Bannān

வண்ணான் அல்லது மண்ணானுக்குரிய மற்றுமொரு பெயராகக் கணக்கெடுப்பில் பதியப்பட்டுள்ளது. இதே போன்று பண்ணட்ட என்ற கன்னட வடிவம் மலையாள வெளுத்தீதன் அல்லது வண்ணட்டான் என்பதற்குரியதாக அமைந்துள்ளது.

பன்னி அல்லது வன்னி - Banni or Vanni (*Prosopis spicigera*)

குருபர், குர்ணியர் ஆகியோரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பெயர். இந்தமரத்தை வழிபடுவதற்குக் காரணம் "பஞ்ச பாண்டவர்கள் ஓராண்டுக் காலம் ஒளிந்து வாழும் வாழ்வைத் தொடங்க நகரத்தில் நுழைந்தபோது இந்த மரத்திலேயே தங்கள் படைக்கலங்களைத் தொங்கவிட்டனர் எனவும், அங்கு அவர்கள் படைக்கலங்கள் பாம்புகளாக மாறி அவர்கள் திரும்ப வரும்வரை அதிலேயே இருந்தன என்பதுமாகும்."

பண்டர் - Bant

பண்டர்களைப் பற்றியதான பின்வரும் விவரங்கள் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு எச். எ. ஸ்டுவர்ட் எழுதியுள்ளவற்றையே பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. பண்ட் என்ற பெயர் புண்ட் எனறே உச்சரிக்கப் படுகிறது. துளு மொழியில் இது வல்லவன் அல்லது படைவீரன் எனப் பொருள்படும். இது பண்டர் மலபார் நாயர்களை ஒத்தவர்களாகப் போர்த் தொழிலில் ஈடுபட்டிருந்த வகுப்பினராக இருந்தவர் என்ப

தனைத் தெளிவாக்கும். தென் கன்னட மாவட்டத்தின் வட பகுதிகளில் பண்டர் என்பதற்குப் பதிலாக நாடவர் என்ற வழக்கிருப்பது மலபாரில் உள்ளதாகத் திரு லோகன் விளக்கியுள்ள அமைப்பினை ஒத்த நாட்டுப் பிரிவுகள் இவர்களிடையேயும் இருந்ததைக் குறிக்கும். "ஆங்கிலேயர் நாட்டினைப் பிடித்துக் கொள்ளும் வரை, நாயர்கள் மாவட்டத்தின் போர்ப் படையினராக விளங்கியுள்ளனர். 'அறு நூற்றுவர்' என்ற அமைப்பினைத் தொடக்கத்தில் கொண்டிருந்த ஒவ்வொரு குழுவும் ஒரு நாட்டிற்கு உட்பட்ட எல்லா மக்களையும் காக்கும் பொறுப்புடையவராக இருந்தனர். நாடுகள் மேலும் தரை என்ற சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. தரை என்ற திராவிடச் சொல் அடித்தளம் என்ற பொருளில் வீட்டின் அடித்தளத்தைக் குறித்துப், பின் வீடுகள் பல கொண்ட தமிழ்த் தெருவையும் தெலுங்குத் தெருவுவையும், கன்னடம் துளுத் தெராவையும் குறிக்கும். தரை என்ற பிரிவையே பொது நடைமுறைகளுக்குரியதாக நாயர்கள் கொண்டிருந்தனர்.' என அவர் எழுதியுள்ளார். "முன்னர், மலபார் நாயர்களின் தலைவர்கள் தங்களுக்குரியநாடுகளையும், படை வகுப்பாரையும் கொண்டிருந்தனர். ஆற்றல் வாய்ந்த இந்தப் பண்ணை நிலவுரிமை முறையின் அடையாளங்கள் இன்றும் புதிய மலபார் மாவட்டத்தின் சில வட்டங்களின் பெயர்களிலும் பல நாயர்களின் குடும்பங்களின் அலுவல் தொடர்பான பட்டப் பெயர்களிலும் நிலைத்திருக்கின்றன. அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்றும் சமோரினின் அரிசி வீசும சடங்கு நடக்கும் சமயத்தில் பழஞ்சிறப்பு வாய்ந்த வாள்களுடனும், கேடயங்களுடனும் அவருக்குப் பாதுகாப்புத்தர வந்து கூடுகின்றனர். அச் சடங்கே அவரை முறைப்படி அரசராக்கி உறுதிப்படுத்துவது. இதனை ஒப்பவே கன்னட மாவட்டத்தின் வடபகுதிப் பண்டர்களும் நாடு தலைவர்களான பண்டர்களின் அல்லது நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அல்லது பகுதிகளின் அழைப்பை ஏற்கின்றனர். பண்டைய கேரளத்திலும், துளு நாட்டிலும் படையாளராகவும் செல்வாக்குடையவர்களாகவும் செயல்படும் வகுப்பாராகச் சில பிரிவினரே அமைந்திருந்தமையால் அவர்கள் மட்டுமே அரசர்களுக்குப் படையில் பணி செய்வோராக இருந்தனர். மற்றவர்கள்

பெருமகனார்களாகவோ, வீரர் துணைவர்களாகவோ பயிர்த் தொழில் புரியும் உயர்குடியாளர்களாகவோ தங்கள் வகுப்புக் குரியதான தொழிலோ, கைத்தொழிலோ புரிபவர்களாகவோ இருந்தனர். எனினும் அனைவரும் வீர விளையாட்டுகளின்பால் ஈடுபாட்டை வளர்த்தே வந்துள்ளனர்.''*

மேற்கூறிய அமைப்புகளின் சில தடயங்களே இன்று எஞ்சியுள்ளன. இடைப்பட்ட காலத்தில் பெருமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் விசயநகர அரசு புகுத்திய ஆட்சி முறையின் காரணமாக சமணசமயம் சார்ந்த வட்டாரத் தலைவர்கள் ஒரு தலைவருக்குக் கட்டுப்பட்டவராகஇருந்தாலும் தன் பகுதி மக்களை ஆள்வதில் மிகுந்த உரிமை பெற்றவர்களாக மாறிவிட்டனர். பெட்ணூர் அரசர்கள் ஆட்சியின் போதும், அதற்கு மேலாக மைசூர் அரசர்களின் ஆட்சிக் காலத்திலும், வட்டாரத் தலைவர்களின் செல்வாக்கு வீழ்ந்துபட்டாலும் பழைய அமைப்புக்கு மீண்டும் ஆட்சிமுறை திரும்பவில்லை.

தென் கன்னடத்தில் பண்டர்களே இப்பொழுது பெருமளவில் நிலவுடைமையாளர்களாகவும், பயிர்த்தொழில் செய்யும் வகுப்பாராகவும் சிறப்புற்றுள்ளனர். கள இறக்குவோரான பில்லவர்களுக்கு அடுத்த நிலையிலே அம்மாவட்டத்தில் பெரும்பான்மையான சாதியாராக இருப்பவர்களும் இவர்களே. "இன்று கன்னட மாவட்டப் பண்டர் உரிமையும் செல்வாக்குமுடைய நிலவுடைமையாளர்கள் சிலர் இவர்களைக் குறிப்பிடத் தக்க நிலக்கிழார்கள் என்றும் கூறுவர். அவர்கள் இன்றும் உரிமை உணர்வையும் நல்ல உடற் கட்டையும் பெற்றுத் தங்கள் முன்னோர்கள் போராட்ட நாள்களிலே எப்பொழுதும் வாளும் கேடயமும் தாங்கித் திரிந்தது போலவே பெருமித உணர்வு மிக்கவர்களாகத் தலை நிமிர்ந்து 'வெட்டுப்பட்டவன் வெட்டியவன் வாசலில் கிடப்பான்' என்ற பழமொழிக்கேற்ப நடந்து கொள்கின்றனர். பண்டர் இன ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்கள் நல்ல அழகு நயம் வாய்க்கப் பெற்றவர்களாகவே

* கல்கத்தா மடல். (Calcutta Review.)

உள்ளனர். மேலெழுந்து தோன்றும் நெற்றியும் நன்கு வளைந்த கழுகினை யொத்த மூக்கினையும் உடையவர்களாக ஆண்கள் விளங்குகின்றனர்."

தென் கன்னடத்தின் பயிர்த்தொழில் பொருளாதாரம் பற்றிய ஒரு குறிப்பில் இராவ் சாகேப் டி. இராகவைய்யர் எழுது வதாவது:-* "தென் கன்னட உழவன் தன் நிலத்தைப் பார்ப்பவர் போற்றும்படி வைத்துக் கொள்வதில் ஆர்வமுடையவன். ஒவ்வொரு வயலின் ஓரத்திலும் அழகிய பாக்கு மரங்களும், வளர்ந்த தென்னை மரங்களும் வரிசையாக நின்று அணி செய் யும் வயலைச் சார்ந்த வளமான சரிவுகளில் பலா, மா, முந்திரி, வாழை மரங்களும் மற்றும் பிற பழ மரங்களும் நிழல் தரும் மரங்களும் நெருக்கமாக வளர்ந்திருக்கும். கிழக்குக் கடற்கரைப் பக்கத்துப் பெண்கள் மணம் நிகழும் இல்லங்களையும் கோவில் சுவர்களையும் அழகுபடுத்தக் காவியும் சுண்ணாம்பும் பட்டை யடித்திருப்பதைப் போல இவர்கள் தங்கள் மரங்களுக்கு அழகுப் பூச்சினைச் செய்து வைத்திருக்கக் காணலாம். இவற்றிடையே அழகுறக் கரைகள் அமைக்கப் பெற்ற வாய்க்கால்களும், ஓடை களும் அந்தச் சூழலுக்குத் தனித்ததோர் கவர்ச்சியினைத் தந்து விடுகின்றது. கிழக்குக் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த நிலக் கிழார் குடும்பத்துப் பெண்களின் அறியாமையைப் பற்றிக் கேலியாக நெல்லைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், அது மரத்தில் காய்ப்பது என்ற ஒன்றுதான் எனச் சொல்லப் படுவதுண்டு. ஆனால், தென் கன்னட மாவட்டத்தில் பயிர்த் தொழிலின் நுட்பங்களை அறியாத பெண்கள் மிகச்சிலரே. பண்டர், சிவாலி நாயர் ஆகிய பிரிவைச் சார்ந்த செல்வச் செழிப்புள்ள பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஆண்களைப் போலவே திறமையாகத் தங்கள் நிலங்களில் பயிர்த்தொழில் செய்து வருவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். தென் கன்னடத்துப் பெண்கள் மண்ணில் அந்த மண்ணைச் சார்ந்தே வாழ்கின்றனர். எப் பொழுது விதைப்பது, எப்பொழுது அறுப்பது, எவ்வளவு விதை தெளிக்கவேண்டும், உழவும், களை பிடுங்கவும், அறுவடை

---

* இந்தியன் ரெவ்யூ VII 1906. (Indian Review, VII, 1906.)

செய்யவும் எத்தனைக் கூலியாள்கள் தேவைப்படுவர் என்ப தெல்லாம் அவளுக்குத் தெரியும். விதை நேர்த்தி செய்தல், புகையிலையைப் பக்குவப்படுத்துதல், தானியங்களைக் களஞ்சி யத்தில் வைப்பது, மழைக்காலத்தில் வெள்ளரியைப் பாது காப்பது போன்றவற்றையும் அவள் அறிவாள். மாடுகளுக்குத் தீனி வைப்பதும், பால் கறப்பதும், பசுக்கள் நோயுறின் அதற்கு மருத்துவம் செய்யவும், அவற்றை மேய்க்கவும் அவளுக்குத் தெரியும். எருவைத் திரட்டவும், வீணாக்காமல் பயன்படுத்த வும், பச்சிலைகளை வெட்டி வயலுக்கும் உரமிடவும், வீட்டுக்கு மேலே உள்ள மலைச் சரிவில் நிற்கும் மரங்களின் கிளைகளை மட்டும் விறகுக்காக வெட்டிக் கொண்டு மீண்டும் தழைக்கும் படியாக அடிமரத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பன போன்ற விவரங்களும் அவளுக்குத் தெரியும். பாக்கு, தென்னை, ஆகியவற்றின் காய்களை விற்பனைக் கேற்பத் தயாரிப்பதோடு, நல்ல விலைபெற வணிகர்களுடன் பேரம் செய்யவும் அவள் அறிவாள். உண்மையைக் கூற வேண்டுமானால் தென் கன்னடத்து ஆண்கள் அறிந்தனவும் பெண்கள் அறியா தனவுமான பயிர்த்தொழில் பற்றிய நுட்பங்கள் எதுவுமிலலை எனலாம். பெண்கள் முந்திய நாள் அடுப்பில் விழுந்த சாம்ப லைத் திரட்டித் தங்கள் வயலருகே உள்ள பழமரங்களுக்கிடச் சுமந்து சென்றபடியிருக்கும் காட்சி வயல்களிடையே செல்லும் ஒருவன் எங்கும் காணக்கூடிய காட்சியாகும்.''

பண்டருள் பெரும்பாலோர் இந்து சமயம் சார்ந்த சூத்திரர் களே. சுமார் பத்தாயிரம் சமண சமயத்தவர்களும் அவர் களிடையே உள்ளனர். வழக்கமான தேவதை வழிபாட்டினைக் கைவிடாத இவர்கள் ஒரு கவர்ச்சி காரணமாகச் சமண சம யத்தை மேற்கொண்டவர்களாதல் வேண்டும். சமணர்களா யினும், சைவர்களாயினும், வைணவர்களாயினும் பழைய ஊர்த் தெய்வங்களின் வழிபாட்டினை இவர்கள் தொடர்ந்து செய்தே வருகின்றனர். சமண சமயம் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த போது இன்றிருப்பதை விடக் கூடுதலான எண்ணிக்கையில் பண்டர்கள் அச்சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்திருத்தல் வேண்டும்.

இச்சாதியில் நான்கு பெரிய உட்பிரிவுகள் உள்ளன. துளுவர்களான மாசாதிகர், கன்னடம் பேசும் தென் கன்னடத்தின் வட பகுதிக்குரிய நாடவர், அளிய சந்தான முறையைப் பின்பற்றாத பரிவாரர், சமணர் என்பனவே அந்த நான்கு பிரிவுகள். இப்பிரிவினர் தங்களுக்குள் மண உறவு கொள்வதில்லை. எனினும் மாசாதிகர்களுக்கும் நாடவர்களுக்கும் இடையே சிலபோது மண உறவுகள் நிகழ்கின்றன.

பண்டர் தோற்றம் பற்றி உறுதியாக எதுவும் கூறுவதிற்கில்லை. கிறித்துவ சகாப்தத்தின் தொடக்க கால நூற்றாண்டுகளில் துளுவர் சில சமயம் அரசர்களாகவும் சில சமயங்களில் பல்லவர், முற்காலக் கடம்பர், முற்காலச் சாளுக்கியர், பிற்காலக் கடம்பர், மேற்குச் சாளுக்கியர், கால சூரியர், ஹொய்சால பல்லாளர் ஆகியோருக்குக் கீழே குறுநில மன்னர்களாகவும் இருந்து வந்துள்ளனர் என அறிகின்றோம். இது அவர்கள் தொடர்ந்து போரில் ஈடுபட்டவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குவதோடு, வீரர் குலத்தவரான பண்டாரு என்ற சிறப்பான வகுப்பார் உருவானதற்கான காரணத்தையும் தெளிவாக்குகின்றது. காலப்போக்கில் தங்கள் நிலங்களைச் சமயத்துறை முதல்வர்களான பிராமணரிடத்துச் சென்று சேராமல் தங்களுடையதாகவே வைத்துக் கொள்வதில் பண்டர் வெற்றி கொண்டுள்ளனர். பழங்காலக் கல்வெட்டுகள், துளுவ அரசர்களைப் பற்றியும், காரகல் பைராசு அரசர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. பின்னவர் கல்வெட்டுகள் கலசாவில் காணப்படுவதால் இவர்கள் துளுவ நாடு முழுவதுமோ அதன் பெரும் பகுதியையோ ஆண்டிருக்க வேண்டும். 1336-இல் விசயநகரத்தார் கன்னட நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியபோது பல சிறு குறுநில மன்னர்கள் இருந்துள்ளனர். அவர்கள் நெடுங்காலமாகவே ஆட்சியுரிமையுடையவர்களாக இருந்திருக்கலாம். பண்டர்களிடையேயும், சமணர்களிடையேயும் மிகுதியாக இன்றளவும் நிலைத்துள்ள பட்டங்களும், பட்டம், காடி என்றழைக்கப்படும் உள்ளூர்த் தலைவர்கள் உள்ளமையும் மிகப்பழங்காலந் தொட்டுப் பெரிய, சிறிய வட்டாரத் தலைவர்கள் இருந்து வந்தமையைத் தெளிவாக்கும். மேற்குக் கடற்கரைக்கே உரியதான தனித்த இயல்பினதான, பெண்களுக்கே உரியதாக எல்லாச்

சொத்துக்களையும் கொடுத்துக் குடும்பத்தில் மூத்தவரொருவர் மேற்பார்வையில் அனைத்தையும் விட்டுவைக்கும் முறை பரந்த அளவிலான நிலங்கள் தொடர்ந்து அவ்வாறே இருந்து வரத் துணை செய்கின்றன. நிலங்களைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளும் பழக்கம் பொதுவானதாகக் காணப்படுவது மிக அண்மைக் காலத்தில் பழக்கத்திற்கு வந்ததாதல் வேண்டும். பரிவாரர் பிரிவினரையும் சில சமணர்களையும் தவிர எல்லாப் பண்டர்களும் இந்த அளிய சந்தான சொத்துரிமை முறையையே மேற்கொள்கின்றனர்.* நாட்டை வெற்றி கொண்ட போர்ப்படையினைச் சார்ந்தவர்களும், வட்டாரத் தலைவர்களும் அப்பகுதி நிலவுடைமையாளர்களின் பெண்களை மணம் செய்து கொள்கின்றனர். குடும்பத்தின் மிக முக்கியமான உறுப்பினர்கள் பெரும்பாலான நாள்களைப் பாடி வீட்டிலோ அரசவையிலோ கழிப்பர். பெண்களே பண்ணை வீட்டில் தங்கிப் பண்ணை வேலைகளை மேற்பார்ப்பர். பட்டங்களும் சிறப்புகளும் ஆண்களுக்கே உரியதாவாயினும் அவை நிலச் சொத்துக்கு உரியனவாக இருப்பதால் அப்பட்டங்களும் சிறப்புகளும் அதற்குரியவர் இறந்த பின் அவருடைய உடன் பிறந்தவள் பிள்ளைக்கே உரியனவாகின்றன. இதுவே உடன் பிறந்தவளின் பிள்ளைக்குச் சொத்துரிமை என்ற பொருளில் அளிய சந்தானமுறை இடம் பெற்றமைக்குக் காரணமாகும். இம்முறை இவர்களிடையே வழக்கில் வந்ததற்கான காரணமானவன் பூதல் பாண்டியன் என்ற மன்னன் என்பதையும், அவன் காலத்தில் மக்களுரிமை முறையே பொதுவாக மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதையும் விளக்கும் பின்வரும் வழக்கு வரலாற்றுக் கதை வழங்கி வருகின்றது. "பூதல் பாண்டியன் என்ற இந்த மன்னனின் தாய் மாமனாகிய தேவ பாண்டியன் தான் புதிதாகக் கட்டிய கப்பல்களை அவற்றில் ஏற்றப்பட்ட மதிப்பு வாய்ந்த வணிகப் பண்டங்களோடு கடலில் விட முடிவு செய்தான். அப்போது பூதங்களின் அரசனான குண்டோதரன், ஓர் உயிர்ப்பலி வேண்டுமெனக் கேட்டான். தேவ பாண்டியன் தன் பிள்ளைகளுள் ஒருவனைப்பலி கொடுக்கத் தன் மனைவி

---

* பார்க்க: அளிய சந்தானச் சட்டங்களும் அதன் பயன்பாடும்- ஜி.கிருட்டிண ராவ், மங்களூர், 1898. (*See:* Treatise on Alia Santana Law and Usage, Mangalore; 1898 - by G. Krishna Rao).

வியின் அனுமதியை வேண்டினான். அவள் அதற்கு மறுத்து விட்டாள். அவனுடன் பிறந்தவளான சத்தியவதி தன் மகன் செயபாண்டியனை அவ்வாறு பலிதரக் கொடுக்க முன் வந்தாள். அப்பிள்ளையிடம் வருங்காலத்தில் சிறப்பான நிலையடைவதற்கான கூறுகளைக் கண்ட குண்டோதரன் பலியினை விட்டுக் கொடுத்துக் கலங்கள் செல்ல அனுமதி வழங்கினான். அவன் அதன்பின் அக்குழந்தையினை அதன் தந்தையின் நாடாகிய செயந்திகத்தில் சேர்த்து அவனுக்குப் பூதல் பாண்டியன் என்ற பெயரையும் வழங்கினான். தேவ பாண்டியன் கலங்கள் நிறைந்த செல்வங்களோடு திரும்பி வந்தபின் குண்டோதரன் மீண்டும் தேவ பாண்டியனிடம் உயிர்ப்பலி வேண்ட அவன் மீண்டும் தன் மனைவியிடம் மகனைப் பலியிட உடன்பாடு வேண்ட அவள் முன் போலவே மறுத்து விட்டதோடு, தனது உரிமையையும் தன் பிள்ளைகளுக்குக் கலத்தில் வந்து சேர்ந்துள்ள செல்வங்கள்மீதுள்ள உரிமையையும் பலரும் அறியத் துறந்தனள். குண்டோதரன் இப்போது தேவ பாண்டியனிடம் அவன் தன் பிள்ளைகளைக் கலத்தில் வந்துள்ள செல்வங்களுக்கும் நாட்டுக்கும் உரிமையற்றவர்களாக்கி, அனைத்தையும் அவன் உடன் பிறந்தவள் மகனான செயன் என்ற பூதல் பாண்டியனுக்கு உரிமையாக்கும்படி ஆணையிட்டான். அப்படியே அந்த ஆணை நிறைவேற்றப்பட்டது. இந்த இளவரசன் தன் மாமன் வழியாகத் தாய் உரிமை பெற்றமையால் தன் மக்களும் அவ்வழியையே பின்பற்ற வேண்டுமென ஆணையிட்டான். இவ்வாறாகவே கி.மு. 77–இல் அளிய சந்தானத் தாய உரிமை முறை தோற்றுவிக்கப்பட்டது.*''

கி.பி. 78–இல் வாழ்ந்த பூதல் பாண்டியன் என்பவனால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'அளிய சந்தானக் கட்டுக் கட்டளை' என்ற புத்தகத்தினை ஆதாரங்காட்டி அளிய சந்தானம் தொடர்பான பல வழக்கு மன்றத் தீர்ப்புகளில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் திரு எல். மூர் ‡குறித்துள்ளார்.

* கல்கத்தா மடல். (Calcutta-Review.)

‡ மலபார் சட்டமும் வழக்கும், மூன்றாம் பதிப்பு 1905. (Malabar Law and custom, 3rd Ed., 1905.)

அந்த நூல் உண்மையில் 1840 - இல் புனையப்பட்ட போலி யான ஒன்றாகும் என முனைவர் வைட்லெ ஸ்டோக்ஸ் கருதுகின்றார். தன்னுடைய பங்கீடும் தாய உரிமையும் பற்றியதான சட்டத்தில் முனைவர் எ. சி. பர்னல் இதுபற்றிக் கூறுவதாவது:– "வழக்கு மன்றங்களால் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய வடிவிலான, போலி நூல் அளிய சந்தானக் கட்டுக் கட்டளை. இது தென் கன்னட மக்கள் வழக்கங்கள் பற்றிய தவறான விவரங்களைத் தருகின்றது. பல இந்திய நூல் களைப் போல மடமைக்குரியதான அது, மிகவும் குழந்தைத் தனமாகவும், முட்டாள் தனமான போக்கிலே செல்வதாகவும் உள்ளது. இதனை வழக்கில் சாட்சியமாக ஏற்பதானது ஒரு வழக்கு மன்றத்திலே 'இராட்சசக் கொலைகாரனும் ஜேக்கும்' என்ற குழந்தைகள் கதையைச் சாட்சியமாக ஏற்றுக் கொள்வது போன்றது. அது அண்மையில் போலியாகத் தயாரிக்கப்பட்டது என்பது உறுதி. இன்றைய வழக்கில் உள்ளபடியான அதன் வரலாறு நன்கு தெரிந்ததே. முப்பது ஆண்டுகளுக்கு முன் பெயர்போன போலித் தயாரிப்பாளர்களாக இருந்த இரு மோசடிக்காரர்களின் வேலையிது. இந்நூலின் எல்லாப் படிகளும் அவர்கள் தயாரித்த ஒரே மூலப்படியிலிருந்து படியெடுக்கப் பட்டவையே. நான், ஒரு பழைய படி வேண்டும் என எவ்வளவு முயற்சி செய்தும் அதுபற்றிய செய்திகளைக் கூறக்கூடிய திறமை உடையவர்கள் அத்தகைய படி ஏதும் இல்லை எனக் கூறி விட்டனர். அண்மையில் படி எடுக்கப்பட்ட பல படிகள் உள்ளன எனினும், அவை ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபட்ட வையாக உள்ளன. போலியானது என்பதைக் கண்டு கொள்ள மிகக் கடினமானதும் போலியானதுமான அது தென் கன்னடத்தில் பெருமளவிலான சொத்துக்களைப் பயனற்றனவாக முடக்கி வைத்துள்ளது. போலியைத் தயாரித்தவர்கள் தாங்கள் யாரோடு தொடர்பு கொள்கின்றோம் என்பதனை உணர்ந்து பண்டார் களிடம் அளிய சந்தானத் தாய முறையை மேற்கொள்ளாத குடும்பங்கள் அழிந்து விடும் எனக் கூறி இக்குழப்பத்திற்குத் தக்கதொரு வழி காண முற்படும் சட்ட முறையை நிறைவேற்ற இயலாததாகத் தடுத்து வருகின்றனர். இல்லையாயின் மூட நம்பிக்கையில் ஊறிப்போன ஏழை மக்கள் விருப்பத்தோடு இவ்வழக்கத்தை ஒழித்துவிட ஒப்புதல் தந்திருப்பார்கள்.

எனச்''* சென்னை உயர்நீதி மன்ற அறிக்கைகளின் முதல் தொகுதியைத் தொகுத்த அறிஞரான முனைவர் வைட்லே ஸ்டோக்சின் கருதுகின்றார்.'' துளுவமும் கேரளமும் பிரிவதற்கு முன் அளிய சந்தானத்தாய முறையை ஒத்த ஒரு வழக்கம் மலபாரில் தோன்றியிருக்க வேண்டும். சிறு கூட்டத்தினராக உள்ள பரிவார பண்டார்களும், சில சமணர்களும் அளிய சந்தானத் தாய முறையை மேற்கொள்வதில்லை. இவர்கள் இந்து சமயத்தினையோ, சமண சமயத்தினையோ சமய மாற்றத்தினைத் தங்கள் தலையாய நோக்கமாகக் கருதாமல் சமூகத் தொடர்பு நிலை காரணமாக மேற்கொண்ட சில குடும்பங்களின் வழி வந்தவர்களாக வேண்டும். இன்று பண்டார்களிடையேயும் மணமுறை பற்றிய கோட்பாடுகள் பெருமளவில் பிற சாதி மக்கள் வழக்கினை ஒட்டியதாகமாறிக் கொண்டிருப்பதால் தேசத்தின் மற்றப் பகுதிகளில் காணப் படுவதுபோன்ற தாய உரிமை வேண்டும் என்ற எழுச்சி பல மனத்தாங்கல்களுக்கும், குடும்பச் சண்டைகளுக்கும் காரண மாகியிருக்கின்றது. குடும்பச் சொத்து அழிவதைப்பற்றிக் கூடக் கவலைப்படாதவர்களாகத் தந்தையர் தங்கள் பிள்ளைகளுக்கே எப்படியும் சொத்துரிமை கிடைக்க வேண்டுமென முயற்சிக் கிறார்கள். இது பற்றிய மாற்றம் காணப்படுமாயின் அதனைப் பலரும் வரவேற்பர். ஆனால் சொத்தில் கருத்துடைய தன்னலப் பேர்வழிகள் அத்தகைய மாற்றத்திற்குப் பெரும் முட்டுக்கட்டை இட்டு வருகின்றனர்.

பண்டார்கள் மாட்டிறைச்சியைத் தவிர மற்ற ஊன் உணவு களை உண்கின்றனர். இவர்கள் பூணூல் அணியும் வழக்கமில்லை. செல்வாக்கு மிக்க பல்லாளர் குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத் தலைவர்கள் சிலர் ஊன் உண்ணாதவர்களாக இருப்பதோடு பூணூலும் அணிந்து கொள்கின்றனர். இவர்கள் மற்றப் பண்டார் களோடு உண்ணுவதோ, மண உறவு கொள்வதோ இல்லை. பல்லாளர்களின் தோற்றம் பற்றிய பழமொழி ஒன்று 'பண்டன்

* வரதராசரின் வியாவகரணிய மூலத்திலிருந்து, எ. சி. பர்னல் தொகுத்த பாகப் பிரிவினையும் தாய உரிமையும் தொடர்பான சட்டங்கள், 1872.

ஒருவன் செல்வாக்கு உடையவனானவுடன் பல்லாளன் ஆகி விடுகிறான்,' என்று வழங்குகின்றது. பட்டம் என்ற உயர் சிறப்புப் பெற்றவர்களும், ஷெட்டிவாலக்கள், ஹெக்டேக்கள் போன்ற குடும்பங்களின் தலைவர்களும் பூணூல் அணிகின்றனர். இவர்கள் கோயில்கள், பூத ஸ்தானங்கள் ஆகியவற்றின் மூக்தீசர் கள் என்று கூறப்படும் மேலாண்மையாளர்களாக இருப்பதோடு தங்கள் பகுதியில் குற்றவியல் உட்பட்ட ஊர்ப்பொது வழக்கு கள் அனைத்தையும் தீர்த்து வைக்கும் உரிமையும் பெற்றிருந் தார்கள். சமண சமயம் சார்ந்த பண்டர்கள் மரக்கறி உணவு மட்டும் கொள்வதோடு, மது குடிக்கும் பழக்கமும் அற்றவர் களாக உள்ளனர். மற்றப் பண்டர்கள் மது குடித்தாலும் பண்டர்களிடையே இப்பழக்கம் பரந்துபட்டதாக இல்லை. சமணராக உள்ளோர் பொழுது விழுந்தபின் உண்பதில்லை.

மிக்க செல்வவளம் உடைய பண்டர்கள் தோட்டங்களில் பெரிய வீடுகளைக் கட்டியுள்ளனர். அவற்றுள் பல அழகிய மரவேலைப்பாடுகள் கொண்டவை. சில வீடுகளின முன் வாசல் தூண்கள், வெளி நுழை வாயில் கதவுகள் ஆகியன நுட்பமான பலவகை மரவேலைப்பாடுகள் கொண்டு விளங்குவன. இவ்வீடு கள் நன்கு கட்டப்பட்டு மேலே ஓலைக்கூரை வேயப்பட்டு நாற் புறமும் அழகுக் காட்சிகள் பொருந்தியமைந்த எடுப்பான இடங்களில் இருக்கும்.

பண்டர்கள் ஆங்கிலமுறைக் கல்வியினைப் பெருமளவில் கற்கவில்லையாகையால் ஒரு சிலரே அரசுப் பணிகளில் உள்ள னர். அவ்வாறு பணிபுரிவோரில் சிலர் உயர்ந்த நிலையினைப் பெற்று நன்கு மதிக்கப்படுகின்றனர். விரைவில் உணர்ச்சி வயப் படும் தொடக்ககால எண்ணங்களில் ஊறிய ஆதிகால மனிதர் களைப் போல் நிலத் தகராறுகளின் காரணமாகப் பொறாமை யும், பகையும் கொண்டு ஆத்திரத்தில் வன்செயலில் ஈடுபடு கின்ற போக்குடையவர்கள் இவர்கள். இன்று அத்தகைய நிலத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள வழக்கு மன்றங்களை நாடி நீண்ட நாள்கள் வழக்காடுகின்றனர்.

வெட்ட வெளிகளில் ஆடும் விளையாட்டுக்களில் குறிப்பாகக் கால்பந்து, எருமைப் பந்தயம் போன்றவற்றில் பண்டர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எல்லாவற்றிலும் மேலாக மிக விரும்பப்படுவது சேவற்போரே.சமணரல்லாத எல்லாப் பண்டர் களும் இதில் ஆர்வங் காட்டுகின்றனர். தென் கன்னடம் முழுவதிலும் ஒவ்வொரு சந்தையிலும், திருவிழாவிலும் பெரு மளவிலான சேவல்களைக் காணலாம். "அப்பக்கத்தைச் சாராத ஒருவர் ஊர்ச் சந்தைகளில் இதன் காரணமாக நிலவும் பெரும் பரபரப்பினைக் கண்டு திகைப்படையாமல் இருக்க முடியாது. பெருமளவிலான சேவல்கள் அங்கு விற்பனைக்கு வருகின்றன. கூட்டங் கூட்டமாக மக்கள் நெருக்கியடித்தபடி ஆர்வத்தோடு குனிந்து இரண்டு போர்ச் சேவல்களின் சண்டையின் ஒவ்வொரு அசைவையும்பார்ப்பதைக்காணலாம்." எனச்சொல்லப்படுகிறது.* தீபாவளி, சங்கராந்தி, விநாயக சதுர்த்தி, கோகுலாஷ்டமி ஆகிய விழாக்களுக்கு மறுநாள் ஊரெல்லைக்கு வெளியே பெரு மளவில் சேவற்போர்கள் நடைபெறும். 1907 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஹரியடக என்ற ஊரில் நூற்றுக்கு மேற் பட்ட சேவல்கள், கால்கள் கட்டப்பட்டு என்றும் பசுமை மாறா வெட்சிப் புதர் (*Ixora Coccinea*) கள்மண்டிய காட்டுக்குஇளைஞர் களாலும், சேவற் சொந்தக் காரர்களாலும் தூக்கிச் செல்லப் பட்டன. அந்த ஊரையும், சுற்றுப்புற ஊர்களையும் சேர்ந்த ஆண்கள் மட்டுமே அந்த அருங்காட்சியைக் கண்டுகளிக்கக் கூடி னர். கால்கள்கட்டப்பட்ட பறவைகள் அருகருகே இருக்குமாயின் ஓயாத கூவலாலும் குழப்பங்களாலும் பரபரப்படைந்து திடீ ரெனப் போரில் இறங்கக் காணலாம். அரிசி மணிகளும், தண் ணீரும் போர் தொடங்குமுன் அவற்றிற்கு ஊட்டப்படுவதோடு. தலையிலும் தண்ணீர் கொட்டப்படும். ஒவ்வொரு சுற்றுப் போர் முடிவிலும் அவற்றிற்கு அரிசியும், தண்ணீரும தரப்படும். இப்பறவைகளின் கால்களில் மறைவாகப் பொருத்தப்பட்ட முட்கள் பலஉருவினவாக வளைந்து அமைந்திருக்கும்.இப்பறவை களின் குருதி தரையில் சிந்துமானால் அது பூதங்களைத் திருப்திப்படுத்தும் என நம்பப்படுகிறது. ஒரு சுற்றின் இறுதியில்

* கல்கத்தா மடல். (Calcutta Review.)

சேவல்களைப் பிரித்துவிடுவோர் சிலபோது அவற்றின் முட்களால் கடுமையான காயமடைவர். காயமடைந்த சேவல்களின் வாலிறகினைத் தூக்கி அவற்றின் மயக்கத்தைத் தெளிவிப்பர். வெற்றி பெற்ற சேவலின் உரிமையாளர் தோற்ற சேவலை அது இறந்திருந்தாலும் உயிரோடிருந்தாலும் பெறும் உரிமையுடையவர். அண்மையில் சென்னை மாநில ஆளுநர் மங்களூரில் நடைபெற்ற பொருட்காட்சிக்குச் சென்றிருந்தபோது அங்கு வைக்கப்பட்டிருந்த தென் கன்னட மாவட்ட உற்பத்திப் பொருள்களில் சேவலின் கால்களில் கட்டப்படும் முட்களும் 'வீட்டு உபயோகக் கருவிகள்' என்ற பிரிவில் இடம் பெற்றிருந்தன.

எருமைப் பந்தயங்கள் பற்றிய பின்வரும் செய்திகளுக்கு நான் திரு எச்.ஒ.டி. ஹார்டிங் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். "நஞ்சையில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பாரிடையே தோன்றி வளர்ந்துள்ள ஒரு விளையாட்டு எருமைப் பந்தயம். பயிர்த்தொழில் முழுவதும் நஞ்சையிலே நடைபெறும் தென் கன்னடத்திற்கே உரியது இது என நான் நினைக்கிறேன். பண்டர்களும், சமணர்களும், பிற வசதியுள்ள நில உரிமையாளர்களும் பந்தய எருமைகளை வைத்துக் கொண்டு போட்டிகளில் ஈடுபடுகின்றனர். பில்லவர்களும் கள் இறக்குவோருங்கூட இந்தப் போட்டிகளில் ஈடுபாடு காட்டுகின்றனர். ஒவ்வொரு செல்வ வளமுள்ள பண்டனும் எருமைப் பந்தயத்துக்கென்றே தனியே கம்பலை வயல்களை வைத்துள்ளனர். போட்டிக்கான இணை எருமைகள் ரூ. 150 முதல் 500 வரை விலையுள்ளனவாகவும், தரமானவையாகவும் இருக்கும். பயிர்நடவு தொடங்கும் பருவத்தில் சிலபோது மட்டும் வயலை உழ இவை ஏரில் பூட்டப்படும். ஆண்டு முழுவதும் பந்தயங்களைத் தவிர வேறு எந்த வேலைகளுக்கும் இவற்றைப் பயன்படுத்துவதில்லை. இந்தப் பந்தயங்களில் வெற்றி பெறுவனவற்றிற்குப் பரிசுகள் வழங்குவதோ, இவற்றின் மீது பணம் கட்டும் வழக்கமோ இல்லை. போட்டியைத் தொடங்குபவர், நடுவர், வெற்றியைக் குறிக்கும் தூண் போன்ற வழக்கமான நடைமுறைகளும் இல்லை. ஒவ்வொரு இணை எருமைகளும் தனித்தனியே பந்தயத்தில் ஓடும். கூடியுள்ளோர் அவற்றின்



கம்பலை எருமைப் பந்தயம்



கம்பளைப் பந்தய எருமைகள்

வேகம், ஓடும் மிடுக்கு ஆகியவற்றையும், சிறப்பாக அவை ஓடும் போது எவ்வளவு உயரம், எவ்வளவு தூரம் சேற்றை வாரி இறைக்கின்றன என்பதையும் கணிப்பார்கள். இந்தியா முழுவதும் உழவர்கள் உழுதபின் வயலைச் சமப்படுத்தப் பயன்படுத்தும், பரம்படிக்கும் பலகையைப் பெரும்பாலோர் அறிந்திருப்பர். இப்பலகை சுமார் நான்கு முதல் ஐந்து அடிவரை நீளமுள்ளதாகவும், ஒன்று முதல் ஒன்றரை அடி வரை அகலமுள்ளதாகவும் இருக்கும். இதன்மீது எருமைகளை ஓட்டுபவன் பாரமாக நின்றுகொள்வான். எருமைகள் தண்ணீர் தேங்கியுள்ள வயலில் இதனை இழுத்துச் செல்லும். இதுவே எருமைப் பந்தயத் தேரின் வழக்கமான அமைப்பு. துளு நாட்டில் உழவு நடைபெறும் பருவத்தில் நாள்தோறும் சிறுவர்கள் வயலைச் சமமாக்கும்போது பரம்பு அடிக்கும் பலகைகளை எருமைகளில் பூட்டி ஆர்வத்தோடு அவற்றைப் பந்தயம் விட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். இந்தப் பரம்புப் பலகையிலிருந்துதான் பந்தயத்திற்கான தேர் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தேரில் எவரும் பயணம் செய்ய முடியாது என்பதோடுகூட எவரும் அவ்வாறு பயணம் செய்வதை விரும்பவும் மாட்டார்கள். வயலில் பயன்படுத்தப்படும் பலகையைச் சுமார் ஒன்றரை அடி நீளமும் ஓர் அடி அகலமும் உடையதாகக் குறைத்து அதில் சில வேலைப்பாடுகளைச் செதுக்குவர். இதன்மீது அழகமையச் சித்திரிக்கப்பட்ட ஆறு அங்குல உயரமும், பத்துக்குப் பத்து நீள அகலமும் உடைய மரப்பலகையைப் பொருத்துவர். அதன் மேற்பரப்பில் ஒரு காலை ஊன்றிக் கொள்ளப் போதுமான அளவு பள்ளம் குடையப்பட்டிருக்கும். அதன் இரண்டு பக்கங்களிலும் சேற்றையும் தண்ணீரையும் வாரியிறைக்கத் துளைகள் இடப்பட்டிருக்கும். இந்தத் தேர்ப்பலகை ஒரு கம்பத்தில் இணைக்கப்பட்டு எருமைகளின் கழுத்திலுள்ள நுகத்தில் சேர்த்துக் கட்டப்படும். எருமைகள் அலங்கரிக்கப்பட்டுப் பித்தளையினாலோ வெள்ளியினாலோ செய்யப்பட்ட கொம்பணைச்சுக்கள் பூட்டப்படும். அவற்றில் சூரியன், சந்திரன் முதலிய உருவங்களும் சிலபோது அலங்காரமாகப் பொருத்தப்படும். கடிவாளத்திற்கொப்பான கயிறுகள் முகத்தில் கட்டப்படும். எருமைகளை ஓட்டுபவன் மிகக் குறைவான ஆடைகளோடு தேர்த் தட்டில் ஏறிக்

கொள்ள, அவன் நண்பர்களில் சிலர், செத்த வண்டினைச் சுற்றிப் போராடும் எறும்புகளைப் போல எருமைகளைச் சூழ மொய்த்தபடி அலற்றைப் பிடித்துக் கொண்டிருப்பர். அவன் தேரில் ஏறியானதும் எருமைகளை ஓடும்படி விட்டுவிடுவர், அவை சுமார் 150 கச தூரம் சேறும் நீருமான பந்தய வெளியில் ஓடும். சுற்றிலும் நூற்றுக் கணக்கானவர்களிலிருந்து ஆயிரக் கணக்கானவர்வரை கூடி நிற்பர். பறையர்கள் சேற்றில் குதித் தாடுவதோடு சிலம்ப ஆட்டமும் ஆடுவர். பறைகளை முழக்கு வர். ஓடும் எருமைகளின் முன் இருக்கும் தண்ணீர் தெளிந்து அமைதியாக இருக்கும். ஓடும் எருமைகளின் பிரதிபலிப்பை அந்த நீரில் காணலாம். ஆனால் அவை ஓடும்போது தண்ணீரும் சேறும் மேலே வாரி இறைக்கப்படும். ஓட்டுபவன் ஒரு காலைத் தேர்த்தட்டின் மீதும், இன்னொரு காலை அதனை நுகத்தில் இணைக்கும் கம்பத்தின் மீதும் வைத்து நின்று கொள்வான். ஒரு கையில் சாட்டையை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டி ருக்கும் அவன் இன்னொரு கையால் ஓர் எருமையின் வாலைப் பிடித்துக் கொள்வான். அவனிடம் கடிவாளக் கயிறோ வேறு பிடிமானமோ இருக்காது. ஒரு கையில் பிடித்துக் கொண்டிருக்கும் எருமையின் வாலே அவனுக்கு ஆதாரம். அவன் வாயைப் பெரிதாகத் திறந்து தன்னால் முடிந்த அளவு உரக்கக் கத்தி எருமைகளை விரட்டுவான். சேறும் நீரும் அவன் வாயினுள் தாரளமாகப் பாய்வதுபோல் இருக்கும். இவ்வாறு தன்னைச் சுற்றிலும் 'வேல்ஸ் இளவரசர் இறகு களைப்' போலச் சேறும் நீரும் தெறிக்க அவன் பலகை மேல் நின்றபடி பந்தய வெளியின் முடிவிடத்தை அடைவான். பலகைமேல் நிற்பது எளிதானதன்று. பலர் விழுந்துபட்டாலும் சேற்றிலும் நீரிலும் விழுவதால் அடிபேதும் படுவதில்லை. வேகம், ஓடும் நயம், தேரின் மேல் நிற்கும் திறம், பெரியதாகத் தொலை தூரத்துக்குச் சேற்றை வாரியிறைக்கும் ஆற்றல் ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு இணை எருமைகளுக்கும் மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. எருமை ஓடு பாதையில் சிலபோது இருபதடி உயரத்தில் குறுக்கு விட்டம் தாங்கிய கம் பங்கள் நடப்பட்டிருக்கும். சேறு அவற்றில் பட்டாலோ, அவற்றை விட உயர எகிறினாலோ கூடியுள்ள மக்கள் கைதட்டி

ஆரவாரம் செய்வர். சில சமயங்களில் எருமைகள் மிரண்டு கூட்டத்தினுள் பாய்ந்து பயிரிடப்பட்டுள்ள வயல்களில் புகுந்துவிடுவதுமுண்டு. பந்தயத் தடத்தின் முடிவில் ஓட்டுபவன் தன் தேரிலிருந்து தன் எருமைகளுக்கு ஒரு சாட்டையடி கொடுத்தபடி குதித்துவிடுவான். அவை வயலின் கடைசிவரை ஓடி மேட்டுநிலத்தில் ஏறித் தாமே நின்றுவிடும். பெரிய பந்தயங் களின்போது துளு நாடெங்குமிருந்து நூறு இணை எருமைகள் வரை வந்து பங்கேற்கும். பெரும் புள்ளிகள் தங்கள் எருமை களை உள்ளூர் வாத்தியக் குழு முழங்கப் போட்டிக்கு அனுப்பி வைப்பர். சாலைகள் பல நாள்களுக்குத் தப்பட்டை ஒலியும் கொம்புகளும் முழங்க சுறுசுறுப்பாகக் காணப்படும். போட்டி கள் தொடங்குமுன் ஓர் ஊர்வலம் நடைபெறும். ஊர்வலத்தின் முன் வண்ணம் பூசப்பட்ட பொம்மைகள் போட்டியின் போக் கினை வெளிப்படுத்தும் பாவத்தோடு கொண்டு செல்லப்படுவ துண்டு. போட்டிகள் அவற்றிற்கு நன்றி கூறக் கடன்பட்டவை எனலாம். இரண்டாம் பட்டம் விதைக்குமுன் அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஒரு வகையான அறுவடைத் திருவிழா நடைபெறும். பூதங்களுக்கு வழிபாடு நிகழ்த்திப் பூதாட்டங்கள் ஆடுவர். தலையில் புல்லாலான தொப்பி அணிந்து முகத்தில் வண்ணம் பூசிக் கொண்டு, பொம்மைக் குதிரையில் ஏறிப் பூதாட் டக்காரன் கம்பலை வயலை இசை முழங்கச் சுற்றி வருவான். அதனை அடுத்து எருமைகள் ஊர்வலமாக வரும். பின்னர் போட்டிகள் தொடங்கும். மங்களூர் அருகே நடைபெற்ற ஒரு போட்டியில் முகமூடி அணிந்த இரண்டு பூதாட்டக்காரர்கள் நீலத்துணியில் சிவப்பு முனையோடு கூடிய நீண்ட ஆண்குறியும் பெரிய விதைக் காய்களும் கொண்ட அமைப்புடைய உடையில் அலங்காரம் செய்து கொண்டிருந்தனர். இளைய, மூத்த, பயிற்சி பெற்ற, பெறாத, தேர்பூட்டப்பெற்ற, தேர் பூட்டப் படாத, ஓட்டுநரோடு கூடிய, ஓட்டுநர் இல்லாத எல்லா வகை யான எருமை இணைகளும் போட்டிகளில் கலந்து கொள்ளும். எருமைகள் கூட்டத்திடையே பாய்ந்து செல்வதால் சிலபோது விபத்துகள் நிகழ்வதுண்டு. ஒருமுறை எருமைகளின் முன் அவற் றைத்தடுத்தபடி நின்றவன் அவை ஓடத் தொடங்கும்போது நுகத் தடியை விட்டுவிட்டுப் பக்கத்தில் பாய்ந்து ஓடத் தவறிவிட்டான்.

அவன் நுகத்தடியை உறுதியாகப் பிடித்துக் கொண்டபடி பந்தயத்தடத்தின் முடிவை எருமைகள் அடையும் வரை தொங்கிய படியே நல்லபடியாக வந்து சேர்ந்துவிட்டான். அவன் இடையே கீழே விழுந்திருப்பின் எருமைகளின் காலிலும் பலகைகளின் அடியிலும் மிதிபட்டுப் பாடம் கற்றிருப்பான். பெரிய புள்ளிக ளான பண்டர்களின் பிள்ளைகளும், பங்காளிகளும் எருமை களை வைத்து ஆண்டுக்குப் பத்தாயிரம் ரூபாய்வரை செல விட்டுத் தங்கள் போட்டி இணைகளை ஓடவிடுகின்றனர்.

மேற்கண்ட விவரங்களோடு நான் உடுப்பிக்கருகில் நேரில் பார்த்த எருமைப் பந்தயம் பற்றி எழுதி வைத்துள்ள சில குறிப்பு களையும் தர விரும்புகின்றேன். பலவித இன்னிசைக் கருவிகள் முழங்கவும், ஹொலையர் கைகளில் கோல்களுடன் ஆடி வரவும், ஒருவன் கொடி தாங்கியபடி முன் வரவும், ஒவ்வொரு இணை எருமைகளும் ஒரு களத்தின் தொடக்க முனைக்குச் செல்லும். சிலபோது கொடியோடுகூட ஓர் ஈட்டியின் முனையில் மூங்கிலில் கட்டித் தொங்கவிடப்பட்ட துணிகளாலான தோரணம் அல்லது இரண்டு மூங்கில்களுக்கிடையே குறுக்காக ஒரு மூங்கிலில் துணிகள் தொங்கவிடப்பட்ட மகர தோரணம் உடன்கொண்டு செல்லப்படும். மேற்சொன்ன தோரணங்கள், எருமைகள் பண்டர் அல்லது பிராமணருக்குரியனவாக இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும். பில்லவர்கள் இத்தகைய தோரணங் களைப் பயன்படுத்த அனுமதி இல்லை. பந்தயங்களின் முடிவில் போட்டி நடைபெற்ற வயலுக்குரிய பல்லாளப் பெருமகன், அவ னுக்குரிய கொடியைத் தாங்கியபடி ஒருவன் முன்வர ஊர்வல மாக வருவான். பந்தயங்கள் நடக்கும்போது அக்கொடி உயர்ந்த மூங்கில் கம்பத்தில் பந்தயத் திடலின் கோடியில் பறக்கவிடப் பட்டிருக்கும். அவனைத் தொடர்ந்து கொரகர் வாத்தியங்கள் இசைத்துச் செல்ல, அவன் கீழ் தொழில் புரியும் ஹொலையர் கைகளில் கழி தாங்கி அடியிட்டுக் குழப்பமாக ஒலிக்கும் ஓசை களுக்கிடையே ஆடியபடி செல்வர். இரண்டு பூதாட்டக்காரர் (Nalkes) கள் தங்களுடைய ஆட்ட உடையில் உடன்வரத் தீப்பந்தம் பிடிப்பவர்களும் ஊர்வலத்தில் வர அலங்கரிக்கப் பட்ட குடையின் கீழ் நிலத்திற்குரிய பல்லாளன் வருவான். ஒவ்வொரு ஊரிலும் கம்பல அசுரர் எனப்படும் வயல்களைக்

காக்கும் பூதங்கள் உள்ளன. அவற்றைத் திருப்திப்படுத்தவே இப்பந்தயங்கள் நடத்தப்படுகின்றன. இவை நடத்தப்பட வில்லையாயின் அந்த ஆண்டு பயிர்களின் விளைவு கேடுறும். சிலர் கருத்துப்படி கம்பல அசுரன் எருமைத் தலையையுடைய மைசூர் என்ற பெயரின் மூலவனான மகிஷாசுரன் தம்பியா வான். கொரகர் கம்பல நாளுக்கு முந்தைய இரவு முழுதும் விழித்தபடியிருந்து பனிக்குளுனி என்ற பனியில் உட்கார்ந் திருக்கும் சடங்கினைச் செய்வர். இன்னிசைக் கருவிகளின் இசைக்கு இயையத் தங்கள் பேய்த் தேவதையான நீச்சன் மேல் பாட்டுப்பாடுவர். அத்தேவதைக்குக் கள்ளையும், பெரிய பானையிலிட்டு அவிக்கப்பட்ட அரிசிப் புட்டையும் படைப்பர். பானையில் அவிக்கப்பட்ட புட்டு ஒரே பெரிய உருண்டையாக இருக்கும்படியாகப் பானையை உடைத்தே அதனை வெளியே எடுப்பர். பந்தய நாளன்று காலையில் ஹொலையர்கள் பந்தயம் நடக்கும் வயலில் எருவினைத் தூவி உழுவர். மறுநாள் அந்த வயலில் உழவு செய்யப்படாமலேயே நாற்று நடப்பட்டு விடும். மற்றத் தேவதைகளைத் திருப்திப்படுத்தப் பந்தயத்தை அடுத்து வரும் நாள்களில் சேவல் போர் நடத்துவர். கம்பலங் கள் ஒவ்வோரிடத்திலும் அந்தந்த ஊர்களுக்குரிய தேவதை களின் பெயரொடுபட்ட பெயரினையோ, ஊர்ப்பெயரோடு இணைந்த பெயரினையோ பெற்றுள்ளன. சனார்த்தன தீவிர, தெய்வல உடையவர் என்பன சில கம்பளங்களின் பெயர்களாம். பந்தயங்களில் பங்கு பெறும் எருமைகளுக்கு உதவியாளராக இருக்கும் இளைஞர்கள் 'பன்னகவி குரிகரர்' (பாதி முற்றிய தேங்காய்களுக்கு உரிமையுடையவர் என்ற பொருளில்) என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் உடல் உரம் பெற இளநீர் களையும், அவலையும் நில உரிமையாளர் அனுமதியின்றியே அனுபவிக்கும் உரிமையுடையவர். வண்டர் என்ற சிற்றூரில் இப்பந்தயங்கள் புழுதிக் காட்டில் நடைபெறுகின்றன. அதற் காக நிலம் உழப்பட்டு மண்ணாங்கட்டிகள் உடைக்கப்படும். இதனால் இப்பந்தயங்கள் புழுதிக் கம்பலம் என அழைக்கப் படுகின்றன.

எந்த வயலில் பந்தயம் நடைபெறுகின்றதோ அந்த வயலுக் குரிய எருமை இணைகளே வயலில் முதலில் இறங்குதற்குரியவை.

கம்பலை எருமைப் பந்தயம் நடைபெறும் இடத்தில்
நடப்பட்டுள்ள 'பூக்காரெ' கம்பம்

இம்மரபு மீறப்படுமானால் விவாதங்களும் சண்டைகளும் ஏற்படும். ஒரு சமயம் இரண்டு பண்டர்கள் எவருடைய எருமைகள் முதலில் செலுத்தப்பட வேண்டும் என்பதில் கருத்து மாறுபாடு கொண்டனர். ஒருவன் தன் சொந்த எருமைகளைக் கொண்டு வந்திருந்தான். மற்றொருவன் இரவலாக எருமைகளைக் கொண்டு வந்திருந்தான். பின்னவன் தன் சொந்த எருமைகளைக் கொண்டு வந்திருப்பின் அவனே முன்னுரிமை பெற உரியவன். அவனுடைய எருமைகள் இரவலாகையால் தன் சொந்த எருமைகளோடு வந்தவனுக்கு முன்னுரிமை தரப்பட்டது இதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இந்தச்சிக்கலான உரிமைப்பாடு தீர்க்கப்படும் வரை போட்டிகள் தொடங்கப் படவில்லை. சில விடங்களில் ஓர் உயர்ந்த 'பூக்காரெ' எனப்படும் கொடிகள், மலர்கள், இலைத் தோரணங்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட கம்பங்கள் கம்பலை வயலில் ஒரு மேடையில் நடப்படுவதுண்டு. பில்லவர்களே இக்கம்பத்திற்குக் காவலர் கள். பந்தயம் முடியும்வரை வழிபாடு செய்யப்படும் இதனை மற்றவர்கள் யாரும் தொட அவர்கள் அனுமதிப்பதில்லை.

பண்டர்களுடைய அவைத் தலைவர்கள் விதிக்கும் தண்டப் பணம் கோயில் திருவிழாச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப் படுகிறது எனக் கேள்விப்பட்டேன். முன்பு, குற்றம் செய்தவர் களாக அவையோரால் முடிவெடுக்கப்பட்டவர்கள் புளியம் விளாரால் அடிக்கப்படுவதும், வெயிலில் நிறுத்தப்படுவதும், பெரிய சிவப்பு எறும்புகளை உடல் மேல் விடப்படுவதும் போன்ற தண்டனைகள் பெற்று வந்தனர். சில சமயங்களில் குற்றம் சுமத்தப்பட்டவன் தனக்கும் குற்றத்திற்கும் தொடர் பில்லை என்பதனை மெய்ப்பிக்கப் பழுக்கக் காய்ச்சிய இரும் பினைத் தன்கையிலெடுத்துக் குற்றம் சுமத்தியவனிடம் கொடுக் கும்படி கூறப்படுவான்.

பூப்படைந்த பெண்ணைப் பண்டர் தங்கள் வீட்டின் முற்றத் தில் உரிக்கப்படாத ஐந்து தேங்காய்களின் மேல் கவிழக்கப் பட்ட மூங்கில் குதிரின் மேல் உட்கார வைப்பர். பெண்கள் அவளைச் சுற்றிலும் உள்ளே வெற்றிலைபாக்கு இடப்பட்ட நீர் நிறைந்த நான்கு பானைகளை வைப்பர். பின்னர் அந்தப் பானை

களில் உள்ளவை அவள் மீது ஊற்றப்படும். பின் அவள் வீட்டின் புறத்தே உள்ள பகுதியில் தனித்து இருத்தப் படுவாள். மீனோடும் கோழிக் கறியோடும் அந்தச் சடங்கில் பங்கு பெற்ற பெண்களுக்கு விருந்திட வேண்டும். அத்தேங்காய்கள் வண்ணாத் திக்குத் தரப்படும். நான்காம் நாள் அந்தப் பெண்ணைக் குளிக்கச் செய்து வீட்டினுள் அழைப்பர். அவளும், நாட்டுச் சர்க்கரை கலந்த அரிசி மாவும் கூடியுள்ளவர்களுக்கு அப்போது வழங்கப்படும். சில காலம் வீட்டினுள்ளேயே தனித்து இருத்தப் படும் பெண்களுக்குத் தாராளமாக உணவு வகைகளைச் செய்து கொடுப்பர்.

அளிய சந்தானத் தாய உரிமை முறையில் குற்றவியல் சட்ட விதிகளின்படி திருமணம் என்பதற்கு இடமில்லை என உயர்நீதி மன்றம் தன் முடிவை வழங்கியுள்ளது. பெண்கள் மணமுறிவும், மறுமணமும் செய்துகொள்ள உரிமை வழங்கப்பட்டிருப்பினும் அதற்கென உரிய விதிமுறைகளும் சடங்குகளும் உள்ளன. வளமிக்கவர்களிடையே மணமுறிவு செய்து கொள்ளுதல் மதிப் புக் குறைந்ததாகக் கருதப்படுவதால் அது அரிதாகவே நிகழ் கின்றது. நாயர்களிடையே வழக்கிலுள்ள போலியானதான தாலிக்கட்டுக் கல்யாணம் பண்டர்களிடையே இல்லை. ஒரு வனை மணந்தவள் தன் குடும்பத்தில் மிக உயர்வான தகுதிக் குடையவளாகக் குடும்பத்தோடு இருப்பது இன்றியமையாத தாகக் கருதப்பட்டாலன்றித் தன் கணவன் வீட்டிலேயே சென்று வாழ்கின்றாள்.

பண்டர்கள் புறமணக்கட்டுப்பாடுடைய பல 'பலி' களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவற்றின் குல மரபு பெண்களின் கொடி வழியை அடிப்படையாகக் கொண்டது. அதாவது ஒரு பிள்ளை தன் தாயின பலியைச் சேர்ந்தவனாகக் கருதப்படுவானே யன்றித் தந்தையின் பலியைச் சேர்ந்தவனாகக் கருதப்படான். ஒரே பலியைச் சேர்ந்த இருவர் மணம் செய்து கொள்ள முடியாது. இந்தத் தடை சில கூட்டுப் பலிகளுக்கும் கூடப் பொருந்துவதாகும். ஒருவன் தன்னுடைய தந்தை யின் உடன்பிறந்தவன் மகள் வேறு பலிக்குரியவளாயிருந்தாலும் அவளை மணந்து கொளவது முடியாது. திரு எம். முண்டப்ப

பங்கேரா இதுபற்றிக் கொடுத்துள்ள தகவல்வருமாறு*:- "அளிய சந்தானத் தாயமுறைக் குடும்பங்களின் பலி இந்துச் சட்டத்திற் குட்பட்ட பிராமணர்களின் கோத்திரத்தோடுஒப்புமையுடையது. கோத்திரம் எப்பொழுதும் தந்தை வழிப்பட்டதாக இருக்கப் பலி தாயவழிப்பட்டதாக அமைகின்றது என்பதொன்றே இவற்றி டையே உள்ள வேறுபாடு. ஒரே பலியைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் புரிந்து கொள்ளும் மணம், குருதி உறவு கூடாது என விதிக்கப்பட்டவர்களிடையே நடைபெறும் மணமாகையால் முறையில்லாத மணமாகவே அதனைக் கொள்ளவேண்டும். ஓர் ஆணோ பெண்ணோ எந்தப் பலியைச் சேர்ந்தவர் என்று தெரிந்து கொள்வது கடினமானதன்று. தான் எந்தப் பலியைச் சேர்ந்தவன் என்பதைக் குருட்டுப் பாடமாகத் தெரிந்து வைத்திராத ஒருவனைக் காண்பது அரிது. ஒவ்வொரு மணத் தினையும் மேற்பார்ப்பவர்கள் சாதித் தலைவர்களே. மண மகன், மணமகள் ஆகியோரின பெற்றோரும் திருமண உறவை முடிவு செய்யும்முன் சாதித் தலைவரைக் கலந்து பேசுகின்றனர். அத்தலைவர்கள் இத்தகைய சந்தேகங்களுக்குப் புத்தகம் எதையும் பாராமலும் விதிமுறைகளை ஆராயாமலும் உடனுக் குடன் தங்களிடம் அறிவுரை கேட்பவர்கள் சட்டப்படி மணந்து கொள்ள உரிமையுடையவர்கள்தானா என்பதைக் கூறக்கூடிய திறமை வாய்ந்தவர்கள்." பண்டரிடையே காணப்படும் பலி களின் பெயர்களுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வருபவற்றைக் கூறலாம்:-

வெல்லம்	கோழி
சாம்பல்	பச்சைப்பயறு
நெய்பவன்	பெருச்சாளி
குளவிக்கூடு	கண்பட்டதை நீக்குபவன்
எட்டி மரம்	புலி
தேள்	ராகி
பலா மரம்	

குழந்தை மணத்திற்குத் தடையேதுமில்லையாயினும் அது

* மலபார் மண ஆய்வுக் குழு அறிக்கை, 1891. (Report of the Malabar Marriage Commission, 1891.)

பொதுவாக நடைபெறுவதில்லை. ஆணும் பெண்ணும் பருவம் அடைந்த பின்னரே மணம் செய்விக்கப்படுகின்றனர். கன்னியருக்கும் மணம் செய்து கொள்ளாத ஆண்களுக்குமிடையே ஆன கைதாரி எனப்படும் மணமுறையும், துணையிழந்த விதவைகளுக்கும் துணைவியை இழந்த ஆடவர்களுக்கும் இடையே நடைபெறும், புதுதாரி எனப்படும் மணமுறையுமான இருவகை மணங்கள் உள்ளன. மணமக்களை முடிவு செய்தபின் வழக்கமாக நடைபெறும் 'பொண்ணெப் பாத்ரெ' என்ற நிச்சயதாம்பூல நிகழ்ச்சி நடைபெறும். மணமகன் உறவினரும், நண்பர்களும் கூட்டமாக உரிய நாளில் மணமகள் இல்லம் செல்வர். அங்கு அவர்களுக்குச் சிறப்பான விருந்தளித்து உபசரிப்பர். இதில் கலந்து கொள்ள பெண்ணின் உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப் பட்டிருப்பர். பின்னர் இரண்டு குடும்பங்களையும் சேர்ந்த தலைவர்களான கரணவன்கள் மணமுடிப்பது பற்றி வழக்கப் படி பேசி முடிப்பர். பாக்கு வெற்றிலை மாற்றிக் கொண்டபின் இரு வீட்டாரும் ஒன்றாக வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்வர். வசதிக்கேற்ப மணவிழா மணமகன் இல்லத்திலோ, மணமகள் இல்லத்திலோ வைத்துக், கொள்ளப்படும். இந்த நிகழ்ச்சிக்காகச் சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் மணமகன் வந்து அமர்ந்தவுடன் மணவினைகள் தொடங்கும். ஊர் அம்பட்டன் அவனுக்கு அங்கே முகம்மழித்தபின் அவன்சென்று குளித்து வருவான். அதன்பின் மணமக்களை உறவினர்கள் மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்வர். சிலபோது ஊர்த் தலைவனும் முன்னின்று அவர்களை நடத்திச் செல்வதுண்டு. மும்முறை மணமேடையை வலம் வந்தபின், அவர்கள் இருக்கையில் ஒருவர் பக்கத்தில் ஒருவராக அமர்வர். மணநிகழ்ச்சியின் சிறப்பான பகுதியான 'தாரெ' என்பது அடுத்து நிகழும். மணமகளின் வலக்கை மணமகனின் வலக்கை மீது வைக்கப்பட்டபின், தாரெகிண்டி எனப்படும் நீர் நிறைந்த வெள்ளிக் கலத்தின் வாய் மீது தேங்காயினை வைத்து, கமுகம் பாளைப் பூக்களை அத் தேங்காய்மீது வைத்து, அக்கலத்தை இணைக்கப்பட்ட மணமக்கள் கரங்கள் மீது வைப்பர். மணமக்களின் பெற்றோரும் இரு குடும்பங்களின் தலைமைக்காரர்களும் ஊர்த்தலைவனும் அக்கலத்தினைத் தொட்டுக் கொண்டிருக்க மணமக்கள் தங்கள்

கைகளின் மேலிருக்கும் அதனை மும்முறை மேலும் கீழும் உயர்த்தித்தாழ்த்துவர். சில குடும்பங்களில் கலத்திலிருக்கும் நீரை இணைந்த மணமக்கள் கைகளில் ஊற்றுவர். இது மணமகளை நீர் ஊற்றி அளித்ததன் அடையாளமாகும். இவ்வாறு நீரூற்றி மண மகளைத்தரும் முறை முன்பு பெரு வழக்கினதாக இருந்ததோடு வேறுவகைக்கொடையளிப்புகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. பல சாதியாரிடையே இன்னமும் இம்முறை வழக்கிலுள்ளது. பண்டார் களின் மணவிழாவைக் குறிக்கும் 'தாரெ' என்ற சொல்லே ஒரு காலத்தில் இது அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்ட வழக்காக இருந்தது என்பதனை உணர்த்தும். மணமக்கள் பின்னர் விருந் தினரின் பாராட்டுதல்களைப் பெறுவர். பன்னிரண்டு ஆண் களையும், பன்னிரண்டு பெண்களையும் பெற்றுச் சிறக்கும்படி விருந்தினர்கள் வாழ்த்துவர். ஒரு வெறும் தட்டும், அரிசியுள்ள மற்றொரு தட்டும் பின்னர் மணமக்கள் முன் வைக்கப்படும். நண் பர்கள் ஒரு தட்டில் உள்ள அரிசியினை அவர்கள் மீது தூவியபின் இன்னொரு தட்டில் அன்பளிப்பாகக் காசினை – பெரும்பாலும் நாவணா - வைப்பர். மணமகன் பின்னர் மணமகளுக்குப் பரி சளிப்பான். இது 'சிர்டச்சி' என அழைக்கப்படும். மணமக்களின் தகுதிக்கேற்ப இந்தப் பரிசுத் தொகையின் அளவு மாறு படும். மனைவி கணவனைப் பிரிந்து சென்றாலோ தவறான நடத்தைகாரணமாக மணமுறிவு செய்யப்பட்டாலோ அவள், தன் கணவனுக்கு இத்தொகையைத் திருப்பி அளிக்க வேண்டும். மணமகள் அதன்பின் அவளுடைய பிறந்த வீட்டிற்கு ஊர்வல மாக அழைத்துச் செல்லப்படுவாள். சில நாள்களுக்குப்பின் அவள் மீண்டும் மணமகன் வீட்டிற்கு அழைத்து வரப்படுவாள். அங்கு அவள் தன்கணவனுக்கு உணவு பரிமாறவேண்டும், அவன் மறுபடியும் அவளுக்குப் பணம் பரிசளிப்பான். அதன்பிறகு மணவிழா முடிவிற்கு வந்ததாகக் கருதப்படும்.

பண்டார்களிடையே வழக்கிலுள்ள மற்றுமொரு திருமண முறை பற்றிய விவரம் வருமாறு:— அம்பட்டன் மணமகன் முகத் தினைத் தண்ணீருக்குப் பதிலாகப் பாலைப் பயன்படுத்தி மழிப் பான். அவன் மணமகள் முன் தலையினையும் தன் கத்தி யால் தொடுவான். மணமக்கள் குளித்துப் புத்தாடை புனைவர். மணப்பந்தலில் வண்ணான் தந்த துவைத்த தூய துணி போர்த்

திய பலகை, பச்சரிசியோடு கூடிய தட்டு, ஏற்றிய விளக்கு, வெற்றிலை பாக்கு முதலியன வைக்கப்படும். ஏற்றிய விளக்கு, ஒரு படி பச்சரிசி, வெற்றிலை ஆகியன வைக்கப்பட்ட ஒரு தட்டினைச் சிறுமி ஒருத்தி எடுத்து வருவாள். அவளைத் தொடர்ந்து மணமகனை மணமகள் உடன்பிறந்தவனும் மணமகளை மணமகன் உடன்பிறந்தவளும் மணமக்கள் துணைவராக இருந்து அழைத்து வருவர். அவர்கள் பந்தலை அடைந்து, அங்கு வைக்கப்பட்டுள்ளவற்றை ஐந்துமுறை வலம் வந்தபின் பலகையில் அமர்வர். அவர்கள் சாதித் தலைவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த முதியவள் ஒருத்தி, ஒரு தட்டில் அரிசியைக் கொண்டு வந்து அவர்கள் முன் வைத்துப் பிறகு அவர்கள் மேல் கொஞ்சம் அரிசியைத் தூவுவாள். கூடியுள்ள ஆண்களும் பெண்களும் பணப் பரிசினை அத்தட்டில் வைத்தபின் மணமக்கள் மேல் அரிசி தூவுவர். பெண்ணின் வலக் கையினைக் குலத் தலைவனும், பெண்ணின் மாமனும் பிடித்து மணமகன் வலக் கையில் வைப்பர். ஒரு சொம்பின் வாயில் கமுகம் பாளையாலும், பூவாலும், மாவிலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட தேங்காயொன்றை வைப்பர். குலத் தலைவனும், பெண்ணின் ஆண் உறவினர்களும் இப்பாத்திரத்தை மும்முறை மணமக்கள் கையில் அவர்கள் தாங்கு படி தருவர். இச்சொம்பிலுள்ள நீர் பின்னர் ஒரு தென்னையின் அடியில் ஊற்றப்படும்.

மேலேதரப்பட்ட விவரங்களின்படி நடைபெறும் பண்டார்கள் மணம் ஒருவன் ஒருத்தியைச் சடங்கேதுமின்றி வைப்பாகக் கொள்வதைவிடப் பலவழிகளில் மேம்பட்டது என்பது தெளிவாகும். உலகெங்கும் காணப்படும் மணமுறைகளை ஒப்பவே இதுவும்முறைப் படுத்தப்பட்டதாக உள்ளது. மணமுறிவு செய்து கொள்ளத் தரப்பட்டுள்ள உரிமையானது இந்த மணச் சடங்கு பிணைப்பைப் உறுதிப்படுத்துவதாக இல்லையென்று குறை கூற இடந்தராது. கைம்பெண்கள் மறுமணத்தில் முறையான சடங்குகள் இதனினும் மிகச் சிலவே. மணமக்கள் கரத்தை இணைப்பது மட்டுமே மணச்சடங்காக மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், அச்சமயம் அவர்களிடையே ஒரு திரையிடப்படுவது வியக்கத்தக்கதாகவே உள்ளது. எல்லாக் கைம்பெணகளும் மறுமணம் புரிந்து கொள்ள

அனுமதிக்கப்பட்டாலும், வயதில் குறைந்தவர்களே உண்மையில் மறுமணம் செய்து கொள்ளக் காணலாம். ஒரு கைம்பெண் கருவுற்றால் அவள் மணம் புரிந்து கொண்டேயாக வேண்டும். இல்லையேல் அவள் சாதி விலக்கத்திற்குள்ளாவாள்.

ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகள் தவிர, இறந்தவர்கள் எல்லோரையும் பண்டார்கள் எரிக்கின்றனர்- தொழுநோய், காலரா, பெரியம்மை முதலிய தொற்று நோய்களால் இறந்தவர்களும் புதைக்கப்படுகின்றனர். எரியூட்ட உரிய விறகின் ஒரு பகுதியேனும் மாமரமாக இருக்கவேண்டும் என்பது விதி. சாவு நிகழ்ந்த வீட்டார் ஒன்பது, பதினொன்று அல்லது பதின்மூன்றாம் நாளில் பலருக்கும் உணவளிப்பர். சமணர்கள் தற்பொழுது உணவுக்குப் பதிலாகத் தேங்காயினை மூன்றாம், ஐந்தாம், ஏழாம், அல்லது ஒன்பதாம் நாளிலே வழங்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். ஆண்டுக்கு ஒரு முறை பொதுவாக அக்டோபர் மாதத்தில் 'அக்கேலு' என்ற சடங்கு, முன்னோர்களைத் திருப்திப்படுத்த நடத்தப்படுகிறது.

பண்டார்களினுடைய சாவுச்சடங்குகள் பற்றிய விரிவான விளக்கத்திலிருந்து நான் பின்வரும் செய்திகளைத் திரட்டித் தருகின்றேன்:- சாவுச் செய்தியினைச் சாதியைச சேர்ந்த மக்களுக்கு அறிவிப்பவன் ஹொலையன். ஒரு தச்சன், இனனிசை முழக்குவோர் தன்னைப் பின் தொடர்ந்து வரப் போய் எரியூட்டுவதற்குரிய விறகுக்காக ஒரு மாமரத்தை வெட்டி வீழ்த்துவான். சடலம் குளிப்பாட்டப்பட்டு ஒரு பலகையின் மேல் வைக்கப்படும். புத்தாடைகள் அணிவிக்கப்பட்டு இசை முழக்கத்தோடு அதனைச் சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்வர். நெருப்புள்ள பானையினை ஓர் அம்பட்டன் உடன்கொண்டு செல்வான். சிதைக் கருகே உடல் வைக்கப்பட்டுப் புத்தாடைகள் களையப்படும். அவை அம்பட்டன், வண்ணான், தச்சன், ஓர் பில்லவன், ஓர் ஹொலையன் ஆகியோருக்கு வழங்கப்படும். சிதையினை ஒரு பில்லவன் பற்ற வைப்பான். அதன் மேல் விரித்தற்குரிய பாயை இறந்தவரின் மகனோ, பங்காளியோ வீரிப்பர். மூன்றாம் நாள் உறவினர்கள் சுடுகாட்டிற்குச் செல்வர். அம்பட்டனும் வண்ணானும் சாம்பல் மீது நீர் தெளிப்பர். சில நாள்களுக்குப் பின்

அங்குச் சாதியார் அனைவரும் அழைக்கப்படுவர். பிணத்தை எரித்த இடத்தில் அம்பட்டன், வண்ணான், தச்சன் ஆகிய மூவரும் மூங்கில்களாலும் பாக்குமரப்பட்டைகளாலும் ஒற்றைப் படையிலான தட்டுகளோடு கூடிய தேர் அமைத்து அதனை ஒற்றைப்படையிலான கால்கள் தாங்கும்படி நிறுத்துவர். அதனைத்துணி, இளநீர், பழம், கரும்பு, பூ, மாவிலை, கமுகம் பாளை முதலியவற்றால் அலங்கரிப்பர். அதனைச் சுற்றிலும் வேலி கட்டப்படும். இறந்தவரின் பிள்ளைகளும் உறவினரும் மஞ்சள் பூசிய மூன்று சோற்றுருண்டைகளை வாழைக்காய், பூசணி, தேங்காய் ஆகியவற்றுடன் ஒரு துணியில் முடிந்து அங்குக் கொண்டு செல்வர். கட்டப்பட்டுள்ள தேர் அமைப்பினைப் பல பொருள்களையும் தட்டில் தலையில் சுமந்தபடி மும்முறை வலம் வந்து அத்தேரில் வைப்பர். உறவினர்கள் பின் சிறிதளவு மஞ்சள் பூசிய சோற்றினைத் தேர் அமைப்பினுள் வீசுவர். சாதியைச் சேர்ந்த ஒருவர் மாவிலையில் நீரினைத் தொட்டு அவர்கள் கைகளில் தூவுவார். குளித்தபின் அவர்கள் இல்லம் திரும்புவர். வீட்டினுள்ளே ஒரு துணியை விரித்து இறந்து போனவருடைய ஆடைகள், அணிகள் ஆகியவற்றை அதன்மீது வைப்பர். மேற் கூரையிலிருந்து ஓர் நூலில் மஞ்சள் துண்டு ஒன்று கட்டித் தொங்கவிடப்படும். அதன் கீழ் ஓர் தட்டில் மஞ்சள் கலந்த தண்ணீர் வைக்கப்படும். இதனைச் சுற்றிப் பெண்கள் அமர்ந்த பின் தேங்காய் உடைப்பர். அதன் நீரை ஓர் அம்பட்டன் மாவிலையில் தொட்டு கூடியுள்ளவர்கள்மேல் தெளிப்பான். மறு நாள் பலவகை உணவுகள் தயாரிக்கப்பட்டு இலைகளில் படைக்கப்படும். அத்துணி ஓராண்டு தொடர்ந்து அவ்விடத் திலே இருக்கும். பின்னர் அவற்றை மாற்றி வேறு புதிய துணியினை அவ்விடத்தில் வைப்பர். வீட்டில் இன்னொரு சாவு நிகழும் வரை இவ்வாறு மாறறுவது தொடர்ந்து நடை பெறும்.

பின்வரும் அட்டவணையில் பண்டர்களின் தலையின் நீள அகலத்திற்கிடையேயான விகித அளவு பில்லவர், சிவாலி பிராமணர் ஆகியோர் தலையின் விகித அளவோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது:-

	சராசரி	மேலளவு	கீழளவு
பிராமணர்	80.4	96.4	72
பில்லவர்	80.1	91.5	71
பண்டர்	78	91.2	70.8

பண்டர்களின் ஊர்த்தலைவன் 'குட்டினய்ய' என அழைக்கப் படுகிறான். குட்டு அல்லது இடத்திற்கு உரிய ஆள் என்பது இதன் பொருளாகும், ஒவ்வொரு ஊருக்குமோ சில, ஊர்களுக்குப் பொதுவாகவோ ஒரு குட்டு இருப்பான். இப் பொறுப்பில் இருப்பவன் குட்டுக்காக என ஒதுக்கப்பட்டுள்ள வீட்டினிலோ நிலத்தினிலோ வாழும் உரிமை உடையவன். அதனை அவன் மற்றொருவனுக்கு விற்கவோ தாய உரிமையாக விடவோ செய்யின் அவன் வகிக்கும் பொறுப்பும் அதனோடு புதியவனைச் சென்று சேரும். இவ்வகையில் ஊர்த் தலைமை சில சமயங்களில் பண்டர் அல்லாத சாதியாரான பிராமணர், சமணர் ஆகியோரிடமும் சென்று சேர்ந்துள்ளது. சில ஊர்களில் ஊர்த்தலைவன் மற்றச் சாதிகளில் அழைக்கப் படுவதுபோலக் குரிக்காரன் என்றும் அழைக்கப்படுகிறான். இவர்கள் இப்பொறுப்பினைப் பரம்பரையாக மேற்கொள்ளும் உரிமை உடையவர்கள்.

பரிவாரர், நாடர், மாசாதிகர் ஆகிய பிரிவினைச் சேர்ந்த பண்டர் பற்றிச் சில குறிப்புகளை உடன் தருகின்றேன்:— பரிவாரர் தென் கன்னடத்தில் தெற்குப் பகுதிகளில் மட்டுமே உள்ளனர். இவர்கள் மற்றப் பிரிவினரோடு உடன் உண்பர். ஆனால், மண உறவு கொள்வதில்லை. தாய உரிமை 'மக்கள் கட்டு' என ஆண்களுக்கே உரியதாக உள்ளது. பல சடங்கு களுக்கும் பிராமணக் குருமார்களை அமர்த்துகின்றனர். ஆகை யால் இவர்கள் நாடர், மாசாதிகர் ஆகிய இருவரைக் காட்டிலும் மிகுதியும் பிராமணர் செல்வாக்கினை ஏற்றுள்ளவராகின்றனர். இவர்கள் பிராமணருக்கு உரிய கிணறுகளில் நீரெடுக்கச் செல்லலாம். எனவே, மற்ற இரு பிரிவினரை விடவும் இவர்கள் தங்களை உயர்ந்தவர்களெனக் கூறிக் கொள்கின்றனர். நாடர் பிரிவு பண்டர்கள் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பதில்லை. பரிவாரர் மணங்கள் 'தாரெ' சடங்கினை அடுத்து மணமகன்

பொன்னாலான தாரெமணி எனப்படும் உருண்டை மணியினை மணமகள் கழுத்தில் அணிவிக்கிறான். இவர்கள் பிரிவில் கைம் பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை. சாவுச் சடங்கில் இவர்கள் நாடர் அல்லது மாசாதிகர் பிரிவினரைப் போல இறந்தவரை எரித்த இடத்தில் தேர் அமைப்பதில்லை. பதி னொன்றாம் நாள் சிதை அமைத்த இடத்தில் படையல்கள் தருவதற்குப் பில்லவர்களுக்குத் துணி வெளுக்கும் நிக்காரர் ஒரு துணிமயை மட்டும் விரித்து வைப்பார்.

நாடர், மாசாதிகர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பண்டர் கள் அளிய சந்தானத் தாய முறையை மேற்கொள்கின்றனர். இவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் மண உறவு கொள்கின்றனர். முன்பு பெயர் தரப்பட்டுள்ள பலிகள் மாசாதிகர்களிடையே பெரிதும் காணப்படுவன. நாடர்களிடையே அப் பலிப் பெயர் கள் வழங்கப்படுவதில்லை. அவர்களிடையே ஹொன்னெ ஷெட்டி, கௌடிச்சி ஆகிய குலப்பெயர்கள் காணப்படுகின்றன. இறந்துபோனவர் சமூகத்தில் மிகச்சிறப்புப் பெற்றவராகவோ வயதில் மிக மூத்தவராகவோ இருந்தால்தான் சாவுச்சடங்குகள் மிக விரிவாகச் செய்யப்படுகின்றன. குடும்பத்திற்குச் சொந்த மான ஒரு வயலிலேயே இவர்கள் பிணத்தை எரிக்கின்றனர். குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் அங்கிருந்து வீட்டுக்குத் திரும்பி நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தையும், ஏற்றிய விளக்கை யும் ஓர் அறையில் வைப்பர். எப்பொழுதும் ஓரிரு பெண்கள் அந்த அறையில் தங்கியிருந்தபடி இறுதிச் சடங்குத் தொடர்பான பூசை முடியும்வரை அந்த விளக்கினை அணையாமல் காத்து வர வேண்டும். பாத்திரத்தில் உள்ள தண்ணீரை நாளும் இரு முறை புதியதாய் மாற்றி வைக்க வேண்டும். இறுதிச் சடங்கின் போது சாதியைச் சேர்ந்தவர்களுக்கு விருந்தளிப்பர். சிலவிடங் களில் சாதித் தலைவன் ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று ஆகிய நாள்களில் சாவுச் சடங்கினை நடத்துவதை உறுதி செய்யும் வகையில் துக்கம் மேற்கொண்டிருக்கும் குடும்பத்தவர் தன்னிடம் ஒரு நகையை அடகுவைக்க வேண்டும் என வற்புறுத்து வான். சாதித் தலைவன் அவ்வீட்டிற்குச் சடங்குக்கு முந்தின நாள் வந்து வாங்கப்பட்டுள்ள பொருள்களைச் சரிபார்ப்பதோடு, காய்கறிகளை நறுக்கியும் உதவுவான். சடங்கு நாளன்று, செம்பு,

வெள்ளிக்காசுகளையும் சிறிய தங்கத் துண்டுகளையும் பிணத்தை எரித்த வயலில் சடங்கின்போது புதைக்கவோ, தூவவோ செய்வர். இது 'பணபித்தோடு' என வழங்கப்படும். குரிகி அல்லது உப்பரிகை எனப்படும் உயர்ந்த தேர் அமைப்பு பிணச்சாம்ப லைக் குவித்துள்ள இடத்திலோ பிணத்தைச் சுட்ட இடத்திலோ அமைக்கப்படும். இது இறந்தவர்கள் சமூகத்தில் சிறப்புப் பெற்றவர்களாக இருந்தால் மட்டுமே அமைக்கப்படும். சில விடங்களில் ஆண்களுக்குக் 'குர்கி' எனப்படும் பல நிலைகளை யுடைய தேர்களும், பெண்களுக்கு ஒரே நிலையையுடைய 'தேல கூடு' எனப்படும் தேருமாக இருவகைத் தேர்கள் அமைக்கும் பழக்கமுள்ளது. பூதாட்டக்காரர்கள் அந்நாள்களில்அமர்த்தப்படு வர். அவர்கள் பொதுவாகக் கொள்ளும் கோலம், எருக்கோலம் அல்லது மனிதனும் போலிக் குதிரையுமாகும். ஒரு கலத்தில் நீரும், விளக்கும் வைக்கப்பட்டுள்ள அறையில் தரையில் நான்கு குச்சிகளை நட்டு அவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவர். அவற் றின் மீது ஒரு துணியைப் போட்டு அதனடியில் நீருள்ள கலத்தை வைப்பர். கூரையில் ஒரு சிறு கயிற்றினைக்கட்டி அதன் முனையில் மஞ்சள் ஒன்றையும், தங்கமோதிரம் ஒன்றையும் முடிவர். இவை கலத்திலுள்ள நீரைத் தொடும்படியாகத் தொங்கவிடப்படும். இது நீர் நிழல் என வழங்கப்படுகிறது. பல துளுவ சாதியாரிடை யே இப்பழக்கம் காணப்படுகிறது. பூசைச் சடங்கு முடிந்தபின் தீட்டுக்குரியவர்கள் அனைவரும் இரண்டு வரிசையாக் நிற்பர். ஒரு மடிவலி (வண்ணான்) அவர்களை ஒரு துணியால் தொட்டுச் செல்ல, அம்பட்டன் அவர்கள் மீது நீர் தெளிப்பான். இதனால் அவர்கள் தீட்டு அகற்றப்படுகிறது.

பண்டர்களின் பட்டப் பெயர்களுள் பெரு வழக்காயிருப்பது செட்டி அல்லது ஷெட்டியாகும். ஹெக்டே, நாயக, பங்கர ராய், பல்லாளரு என்ற பட்டப் பெயர்களும் வழக்கில் உள்ளன.

பாரங் சோதிய - Barang Jhodia

பொரொசர் சாதியின் ஓர் உட்பிரிவு.

பர்தேசக்கார் - Bardēshkar (people of twelve countries)

கொங்கணிப் பிராமணர்களுள் சில குடும்பத்தினர் இப் பெயர் தாங்கியுள்ளனா.

பாரிகி - Bāriki

பாரிகி என்பது தென் கஞ்சம் பகுதியில் ஊர்க் காவல்காரருக்கு உரிய பெயர். அதோடு பப்ணிகளுக்கு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் செல்ல வழி காட்டுவதும் இவர்கள் கடமையாக உள்ளது. பெல்லாரி மாவட்டக் கையேட்டில் 'பாரிக' என்பது கன்னடக் கப்பேரர்களுக்குரிய பெயராகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஊர்ச்சாவடியைத் துப்புரவாக வைத்துக் கொள்வதும், வருகை தந்து தங்கும் அலுவலர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிவதும் மற்றும் பலவகைப் பணிகளை மேற்கொள்வதும் ஊர்ப்பணியாளர்களான இவர்களுடைய கடமைகளாம். 1901 கணக்கெடுப்பில் பாரிகர் பெரும்பாலும் போயா என்ற பெயராலேயே சுட்டப்பட்டுள்ளனர். மைசூரைச் சேர்ந்த பாரிகர் பற்றித் திரு எல்.ரைஸ், "ஊர்ப்பணியாளர்களுள்ளே குற்றேவல் புரிபவன், தலையாரிக்கு உதவியாளன், வயல்களிலும் களஞ்சியங்களிலும் விளையும் விளைந்த தான்யங்களுக்குக் காவலிருப்பவன்."* எனக் கூறியுள்ளார்.

பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில், "பெல்லாரி மாவட்டத்தில் பாழடைந்து கிடக்கும் பெரும்பாலான கோட்டைகளின் நுழைவாயிலில் உள்ள வாயிற்படியின் நடுவே இலிங்கத்தைப் போன்ற கூம்பு வடிவமான ஒரு கல்லிருக்கக் காணலாம். இது மையக்கல் எனப் பொருள் தரும்படியாகப் 'பொதுராயி' என வழங்கப்படுகிறது. கோட்டை கட்டும்பொழுது நடப்பட்ட இது, மக்களால் ஊரெல்லையைக் குறிக்கும் அடையாளமாகக் கருதப்பட்டு அன்போடு பாவிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தில் விதைப்புப்பருவம் தொடங்கச் சற்று முன்பு இக்கல் தொடர்பான ஒரு விழா நடத்தப்படுகின்றது. முதலில் எருதுகளுக்கு வழிபாடு செய்தபின் மாலையில் அவற்றைக் கோட்டை வாசல் வழியிலே பொதுராயி கல்லினைத் தாண்டிச் செல்லும்படியாகத் தப்பட்டை, குழல் முதலிய வாத்தியங்கள் முழங்க ஓட்டிச் செல்கின்றனர். பாகிரி அதன்பின் அக்கல்லுக்குப் பூசை செய்கின்றான்.

---

* மைசூர், குடகு விவரக் குறிப்பு. (Mysore and Coorg Gazetteer.)

அதன் பின்னர் கோட்டை வாசலில் உயர மாவிலைத் தோரணம் கட்டப்படுகிறது. அப்பொழுது ஊரார் இரண்டு குழுவினராகப் பிரிந்து கொள்வர். ஒரு குழுவினர் எருதுகளை மீண்டும் கோட்டை வாயில் வழியே உள்ளே விரட்டுவர். இன் னொரு குழுவினர் அவை அவ்வாறு நுழையாதபடி தடுப்பர். இதனால் பெருங்கூச்சலும் குழப்பமும் ஏற்படும். இக்குழப்பத்தி னிடையே சில எருதுகள் வாயிலைத் தடுத்து நிற்போரைக் கடந்து எப்படியோ உள்ளே நுழைந்துவிடும். அவ்வாறு நுழை யும் எருதுகளில் முதலில் நுழைந்தது செவலை நிறமாக இருப் பின் அந்த ஆண்டு சிவப்பு மண்ணில் சிவப்புத் தானியங்கள் நன்கு விளையுமென்றும், வெள்ளையாக இருப்பின் பருத்தி, வெள்ளைச் சோளம் முதலான வெள்ளை நிற விளைவுகள் நன்கு இருக்குமென்றும், இரண்டு நிறமும் கொண்டதாக இருந்தால் இருவகைப் பயிர்களும் நன்கு விளையும் என்றும் கணிப்பர். மழை பொய்க்கும் ஆண்டுகளில், செப்டம்பர் மாதத்தில் வரும் முழு நிலா நாளன்று தரையில் கரிப் பொடியால் அலங்கோல மான மனித உருவங்கள் நாற்சந்திகளிலும் பெரிய தெருக்களி லும் வரைந்து வைக்கப்படும். மழைக் கடவுளான ஜோக் குமாரனைக் குறிக்கும் இவற்றை வரைபவர்கள் பாரிகிகளே. இவர்கள் பொதுவாகப் பேரர் சாதியின் உட்பிரிவான கௌரி மக்கள் வகையைச் சேர்ந்த ஊர்க்குற்றேவலர்கள். இதனை வரைந்து வைக்கும் இவர்களுக்கு ஊரார் சிறிய தொகையை அன்பளிப்பாகத் தருவர். இவ்வாறு வரையப்பட்டவற்றைத் தாண்டிச் செல்பவர்களுக்கு அதிர்ஷ்டம் வரும் என நம்பப் படுகிறது.'' எனக் கூறப்பட்டுள்ளது.

பாரிகெ - Bārike

கௌடொ முதலிய ஒரிய சாதியாரின் பட்டப்பெயர்.

பர்ரெல்லு - Barrellu (buffaloes)

காபுகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பாசலர் - Bāsala

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் விசாகப் பட்டினத்தில் காணப்படும் தெலுங்குப் பிச்சைக்காரர்களும்

வருவது உரைப்போருமெனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல் ஞானி எனப் பொருள்படும் பாச-வாளு என்ற சொல்லின் திரிபாதல் வேண்டும். இவர்கள் தங்களைத் தேவதைகளின் தலைவனான இந்திரன் தூதுவர் எனவும், வருவதுரைக்க வல்லவரெனவும் கூறிக் கொள்கின்றனர்.

பசரி – Basari (fig tree)

குர்ணிகளின் ஓர் கோத்திரம்.

பாசவ கோல்லர் – Bāsava Golla

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த சில கோயிகளுக்குரிய பெயர். இவர்களின் பாட்டன்மார் அயலாருடன் சண்டையிட்டுக் கொண்டு பிரிந்து வந்தவர்கள். பாசவ என்ற பெயர் 'பாஷை' என்பதிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. கோல்லர்கள் பேசுவதிலிருந்து வேறுபட்டதொரு மொழியை இவர்கள் பேசுவதால் இப்பெயர் பெற்றனர்.* இதே போன்று பாச கோந்தர்கள் ஒரிய அல்லது ஒரியக் கலப்புள்ள குயி மொழியைப் பேசாது தங்களுக்குரியதான தனித்த மொழி பேசுபவர்கள்.

பசவி - Basavi

பார்க்க: தேவதாசி (See: Dēvá-dāsi)

பாசிய கொரானு – Basiya Korono

கொர்ணோ சாதியின் ஓர் உட்பிரிவு.

பசிறுவோதரு – Basruvogaru (basru belly)

கௌட சாதியின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின் பெயர்.

பாத்தாளர் - Baththālar

கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஓர் குலம்.

---

* ஜெ. கெயின், இந்தியத் தொல்லியல், தொகுதி ஐந்து, 1876 (Rev. J. Cain Ind. Ant. V, 1876.)

பட்லு - Batlu *(cub)*

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஓர் குலம்.

பவுரி – Bauri

சென்னை மாநிலத்தில் பவுரியர் அல்லது பாவாரியர் என்ற பெயரில் நாடோடிகளாகத் திரியும் இவர்கள் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடிகளில் மிகவும் கொடியவர் எனக் கூறப்பட்டுள்ளது.* இவர்கள் இந்தியாவெங்கும் செயல்படுகின்றனர். வழிப்பறி செய்தல், கன்னம் வைத்தல், திருடுதல் ஆகியவற்றோடு கள்ள நாணயங்களையும் இவர்கள் புழக்கத்தில் விடுகின்றனர். தெய்வத்தின் தானியம் எனக் கூறி ஒரு சிறு டின்னிலோ, செம்புக் கலத்திலோ சிறு அளவு கோதுமையையும், சந்தன விதைகளையும் வைத்துக் கொண்டிருப்பர். மயில் தோகைகளின் சிறுகட்டும் இவற்றுடன் இருக்கும். குருட்டு நம்பிக்கையில் மிகுந்த பற்றுடைய இவர்கள், செயலில் ஈடுபடுவதற்கு முன்பு அது வெற்றியளிக்குமா இல்லையாவெனக் குறி பார்த்தே செயற்படுவர். தங்களிடமுள்ள தெய்வத் தானிய டின்னிலிருந்து சிறிதளவு, தானிய மணிகளை எடுத்து அவை ஒற்றையா, இரட்டையா என எண்ணி அதற்கேற்பக் குறியினை முடிவு செய்வர். இவர்களின் குற்ற நடவடிக்கை பற்றிய விரிவான விளக்கத்தைத் திரு பாப்பாராவின் மேற்கூறிய நூலிலும், திரு டபிள்யூ. கிருகெ (W. Crooke)யின் 'வடமேற்கு மாவட்டப் பழங்குடிகள்' பற்றிய நூலில் பாவுரியர் என்ற தலைப்பிலும் காணலாம்.

பாவாஜி - Bāvāji

பாவாஜிகள் பைராகிகளான கோசாயிப் பிச்சைக்காரர்கள். நாடு முழுதும் திரியும் இவர்கள் பைராகி, சாது போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

பாவுரியர் – Bāvuri

பாவுரியர் அல்லது பவுரி என வழங்கப்படும்இவர்கள் கஞ்சம்

---

* எம். பாப்பா ராவ் நாயுடு, இந்தியக் குற்றவழிப் பழங்குடிகள், எண். *111,சென்னை, 1907.* (M.Paupa Rao Naidu, The Criminial Tribes of India. No. 111, Madras, 1907.)

மாவட்டத்தில் வாழும் ஒரிய மொழி பேசும் கூடை முடையும் தொழிலில் ஈடுபட்டுள்ள கீழ் வகுப்பார். கூடாலு என்ற பெயராலேயே இவர்கள் பொதுவாக அறியப்பட்டுள்ளனர். இவர்கள் தீட்டு உண்டாக்கும் பிரிவினர். தனிச் சேரிகளில் வாழும் இவர்கள் சமுதாயப் படிநிலையில் சாமந்தியருக்குக் கீழும், கொண்டரர், தண்டாசியர், ஹட்டியர் ஆகியோருக்கு மேலும் வைத்து எண்ணப்படுகின்றனர். பல்லக்குச் சுமப்பதே தங்கள் குலத் தொழில் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் அதன் காரணமாகப் 'போயி' என்றும் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். "ஒரு கதை வழக்குப்படி, தெய்வங்களின் விருந்தின்போது உணவைக் களவாடியதற்காக இவர்கள் இழிநிலையடையும்படி சாபமுற்றதாகக் கூறப்படுகிறது. மற்றுமொரு கதை வழக்கு இவர்களின் குடி முதல்வனாக இதிகாசங்களில் கூறப்படும் சுமையினைத் தாங்கும் வல்லமை வாய்ந்த பாகக் முனிவரைக் கூறுவதோடு, ஒரு மண ஊர்வலத்திற்குப் பின் திரும்பும் வழியில் தூக்குவதற்காக வாடகைக்கு எடுத்திருந்த பல்லக்கை விற்று அக்காசைக் குடிக்கச் செலவிட்டதோடு, குல குருவினையும் தாக்கிய காரணத்தால் அவர் கொடுத்த சாபத்தால் இவர்கள் கீழான சாதியினராக ஆகும்படியாயிற்று என உரைக்கிறது" என ரிஸ்லெ (Risley) எழுதுகிறார்.* பாவுரியர், துலியர், காண்டிர் என்ற இரு அகமணக்கட்டுப்பாடு உடையவர்களாக உள்ளனர் எனத் தெரிகிறது. முன்னவர் பின்னவரை விடத் தங்களை உயர்ந்தவர்கள் எனக் கருதுவதோடு அவர்களைக் கோடாலு என அழைப்பதையே விரும்புகின்றனர். இவர்களுள் சிலர் மாட்டிறைச்சி தின்பதை விட்டுவிட்டுத் தங்களைத் தாச கோடாலு எனக் கூறிக் கொள்வதோடு, பல்லிக தாசர் என்ற புகழ் பெற்ற பாவுரிய சாதியைச் சேர்ந்த பக்தரின் வழி வந்தவர்கள் எனவும் கூறிக் கொள்கின்றனர். இவர் பல அருட் செயல்கள் நிகழ்த்தியவராகக் கருதப்படுவதோடு, பறையர் குலத்தைச் சேர்ந்த நந்தனாரோடும் ஒப்புமை உடையவராக எண்ணப்படுகிறார். இச்சாதியாரின் பூசாரியாக அப்பறையர் பிரிவைச் சேர்ந்தவனே உள்ளான். இரசல்கொண்டாவில் ஒருத்தியை

---

* வங்காள பழங்குடிகளும் சாதிகளும், 1891. (Tribes and Castes of Bengal, 1891.)

'நீ பாவுரியர் சாதியைச் சேர்ந்தவளா?' என நான் கேட்டதற்கு, அவள் அச்சாதியை மற்றவர்கள்தான் அப்படிக் குறிக்கின்றனரேயன்றி அச்சாதியின் உண்மைப் பெயர் கோடாலு ஆகும் என்றாள். காண்டிர் என்ற பிரிவை நீங்கள் சேர்ந்தவர்களா எனச் சிலரைக் கேட்டபோது அவர்கள் கோபத்தோடு காண்டிர்கள் தவளையின் கால்களைத் தின்பவர்களாகையால் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாவார்கள் எனக் கூறினார்கள்.

பாவுரியர் புறமணக்கட்டுப்பாடுடைய சப்தபவுனிய, நாக என்ற இரண்டு கோத்திரங்களைக் கூறுகின்றனர். முன்னவர் தெய்வங்களுக்கு ஏழு குமட்டி (*Benincasa cerifera*) இலைகளில் படையலிடுகின்றனர். பின்னவர் ஏழு பலா (*Artocarpus integrifolia*) இலைகளில் படையலிடுகின்றனர். ஒரியர் தங்கள் நாட்டுப் பகுதிகளில் வம்சம் அல்லது இல்லப் பெயர் என்கின்ற குலப்பிரிவு இல்லையென்றும் தெலுங்கர்களுக்குள்ளேயே அப்பிரிவினை உள்ளது என்றும் கருதுகின்றனர். எனினும் ஹட்டியர், தண்டாசியர், பொந்தாரியர் போன்ற ஒரியர்களுக்குரிய சில சாதிகளில் குலப் பிரிவுகள் உள்ளன.

'முட்டா' எனப்படும் ஊர்களை உள்ளடக்கிய குழு ஒவ்வொன்றுக்கும், பாவுரியர்கள் பேகரா என்ற ஊர்த்தலைவனைப் பெற்றுள்ளனர். அவனுக்கு நாய்க்கோ அல்லது தொலொ பேகரா அல்லது தொண்டிய அல்லது பொரிச்சா எனப்படும் உதவியாளன் இருப்பான். இந்த உதவியாளனுடைய கட்டுப்பாட்டின் கீழ் சில ஊர்கள் இருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் 'பொல்லொபையன்' (நல்ல தம்பி) என்ற ஊர்த் தலைவன் இருப்பான். எல்லா முறைகேடுகளையும் இவனிடமே சென்று கூறுவர். அவற்றை அவனே தீர்த்து வைப்பான் அல்லது பேகராவின் கருத்தினைக் கேட்டறிந்து தீர்ப்புக் கூறுவான். சில ஊர்களில் பொல்லொபையனோடு சாதியாருக்குக் குற்றேவல் செய்யும் 'தாங்குவ' அல்லது 'தொகரா' எனப்படும் பணியாளும் இருப்பான். பெரிய குற்றங்களை விசாரிக்கப் பேகரா ஊரவையினைக் கூட்டுவான். அதில் பொல்லொபையன், நாய்க்கோ ஆகியவர்களோடு பாவுரியர்சாதியைச் சேர்ந்த பெரியமனிதர்கள் சிலரும் கலந்து கொள்வர். கூட்டம் ஊருக்கு வெளியே

வெட்ட வெளியில் நடைபெறும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 'மொண்டொலு' எனப்படும் அவைக் கூட்டம் நடத்திப் பலவற்றைப் பற்றியும் பேசி முடிவுகள் மேற்கொள்வர். இக்கூட்டங்களுக்கான செலவுகளை அவை நடைபெறும் ஊர்களைச் சேர்ந்த குடிமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறனில் உறவு, தாழ்ந்த சாதியாரோடு உண்ணல், சிறைத்தண்டனை பெற்றவரை மீண்டும் சாதியில் சேர்த்தல் ஆகியவையே அவையினர் சிறப்பாக முடிவெடுக்க வேண்டிய குற்றங்கள். தண்டத் தொகை செலுத்தும்படியே பெரும்பாலும் தீர்ப்பு வழங்கப்படும். குற்றவாளிகளைக் கடுஞ்சோதனைகளுக் குட்படுத்தும் பழக்கமில்லை. பிறனில் உறவு கொண்டவனையும், தாழ்ந்த சாதியாரோடு உண்டவனையும் தண்டத் தொகை செலுத்தியபின் மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்வர். ஆனால் பெண்கள் தவறான நடத்தையில் ஈடுபட்டால் அவர்களை மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்வதில்லை. உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் பாவுரிய சாதியைச் சேர்ந்த பெண்ணோடு தகாத உறவு கொண்டால் அவனைச் சில சமயங்களில் பாவுரியர் தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்வர். பேகரா ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊரார் அல்லது குடும்பத்தாரிடமிருந்தும் சிறுதொகை பெறுகின்றான். ஒவ்வொரு மணத்தின்போதும் அவனுக்குச் சிறு தொகை அன்பளிப்பாகத் தரப்படும்.

பெண்களுக்குப் பூப்படையும் முன்னரோ அல்லது பூப்படைந்த பின்னரோ மணம் செய்யும் வழக்கம் உள்ளது. ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்கலாம். ஆனால் அத்தையின் மகளை மணக்க உரிமையில்லை. வயது வந்தவர்கள் திருமணம் நான்கு நாள்கள் நடைபெறும். குழந்தைகள் திருமணம் ஏழு நாள் வரை நீடிக்கும். ஓர் இளைஞனின பெற்றோர் அவனுக்காக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்த பின்னர் ஒரு பிராமணரிடம் சென்று கருத்துக் கேட்பர். பிராமணர் அந்த உறவு நலமானதாக அமையும் எனக் கூறினால், பெண்ணின் இல்லம் சென்று வரைவு நாள் ஒன்றினை முடிவு செய்யும்படி கேட்பர். உரிய நாளில் மணமகன் பெண்ணின் அணிகளுக்காகச் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்று அறுதி செய்வர். மண

மகன் பெண்ணின் பாட்டிக்கென ஓரிரு புத்தாடைகள் வழங்குவதோடு சாதியாருக்குத் தான் தரப்போகும் விருந்துகள் எத்தனை என்பதனையும் கூறவேண்டும். மணமகன் குடும்பம் ஏழ்மையானதாக இருப்பின் விருந்துகளைப் பற்றி வாயால் சொல்வதோடு இருந்துவிடலாம். விருந்துகளை நடத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மணச் சடங்குகள் பெரும்பாலும் இரவு நேரத்திலேயே நடைபெறும். மணத்திற்கு முந்தின நாள் மாலை, மணமக்கள் ஊரிலுள்ள தாகுராணி கோவிலுக்குச் சென்று திரும்பும்போது தங்கள் சாதி அல்லது உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஏழு வீடுகளுக்குச் சென்று அவ்'வீடுகளிலிருந்து கொஞ்சம் தண்ணீர் பெற்று ஒரு கலத்தில் சேகரித்து வந்து, வீட்டில் மணப்பந்தலில் அதனைத் தொங்கவிடுவர். மறுநாள் காலை மணக்கள் அந்த நீரில் குளிப்பர். மணநாளன்று மணமகன், மணமகள் ஊருக்குப் புறப்பட்டுச் செல்வான். மணமகள் வீட்டார் அவனை வழியில் எதிர் கொள்வர். மைத்துனனாக இருப்பவன் மணமகனை மண மேடையில் ஏற்றி அமர்த்துவான். பொல்லொபையன் அப்பொழுது மணமகள் வீட்டார் முன்பு உறுதி செய்தபடி பெறவேண்டிய வரிசைகளையெல்லாம் பெற்றார்களா எனக் கேட்பான். அதுபற்றிப் பெண் வீட்டார் உறுதி கூறிய பின்பு மணப் பெண்ணின் தாய்மாமன் அவளை மணமேடைக்கு அழைத்து வருவான். அவள் தன் கையில் கொண்டுவரும் சிறிது உப்பையும், அரிசியையும் மணமகன் மீது தூவிய பின்பு அவன் அருகே அமர்வாள். மணமக்களின் பாட்டன் பாட்டியரோ அல்லது தியானி என்ற பூசாரியோ மணச்சடங்குகளை முன்னின்று நடத்தி வைப்பர். மணமக்கள் உள்ளங்கைகள் ஒன்று சேர்க்கப்பட்டு அவற்றை மஞ்சள் நூலால் கட்டுவர். கைகளை இணைத்தல் 'ஹஸ்தகொண்டி' எனக் கூறப்படும் மணத்தை உறுதி செய்யும் சடங்காகும். அவர்கள் கரங்களின் மேல் சங்கிலிருந்து ஏழுமுறை மஞ்சள் நீர் ஊற்றப்படும். திருமணமான ஏழு பெண்கள் மணமக்கள் தலை மீது இலந்தை இலை, மஞ்சள் நீரில் தோய்த்த அரிசி, அறுகம் புல் ஆகியவற்றைத் தூவுவர். 'பொகொண்டைபாரொ' என அழைக்கப்படும் இச்சடங்கு எல்லா நல்ல நிகழ்ச்சிகளின் போதும் செய்யப்படும். மணமக்கள் விரல்கள் இணைக்கப்பட்டு

அவர்கள் மணமகளின் உடன்பிறந்தவன் மனைவியால் ஏழு முறை மணமேடையைச் சுற்றி அழைத்துச் செல்லப்படுவர். அதன்பின் பூசாரி, அடியில் கரி பிடித்த பாத்திரத்தின் கரியைக் கூட விரைவில் தேய்த்துக் கழுவி விடலாம் ஆனால் இந்த மணஉறவு அழியாது நிலைக்கும் என அறிவிப்பான். பின் மணமக்களை வீட்டினுள் அழைத்து உண்ணச் செய்வர். மண நிகழ்ச்சியின் எஞ்சியுள்ள நாள்கள் விருந்தில் கழியும். கைம் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின் றனர். கைம்பெண் ஒருத்தி இறந்து போன தன் கணவன் உடன் பிறந்தவனை மணக்க வேண்டும் என்பதே நியதி. அவன் உடன் பாடு பெற்று அவள் தனக்கு விருப்பமான வேறொருவனையும் மணக்கலாம்.

ஒரு பெண் பூப்பெய்தியவுடன் அவளைப் புதுப்பாயில் அமர்த்தி, அவள் தலை மீது இலந்தை இலைகளைத் தூவுவர். இச்சடங்கு தொடர்ந்து ஆறு நாள்கள் நடைபெறுவதும் உண்டு. அச்சமயத்தில் அவளுக்கு இனிப்பு முதலியன தருவதோடு அவளைக் காண அன்பளிப்புகளோடு வரும் பெண்களுக்கு உணவளிப்பர். ஏழாம் நாள் அப்பெண்ணை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்வர்.

இறந்தவர்களைப் புதைக்கவோ, எரிக்கவோ செய்கின்றனர். இறந்தவரின் பிணத்தை நால்வர் தங்கள் கைகளில் தாங்கியோ பாடையிலோ தூக்கிச் செல்வர். ஊரெல்லையைக் கடந்ததும் இறந்தவரின் மனைவி பிணத்தின் கண்கள் மீது கொஞ்சம் அரிசி தூவி, சிறு நெருப்போடு பிணத்தை மும்முறை சுற்றி வந்தபின் அதனைப் பிணத்தின் மீது இடுவாள். வழக்கமாக அவள் தன்னுடன் தூக்கிவரும் அகப்பையும், சட்டியும் அங்கே தூர எறியப்படும். வயதான பெண்கள் இறந்தால் இச்சடங்கை அவளுடைய மருமகள் செய்ய வேண்டும். சுடுகாட்டில் பிணத்தைத் தூக்கியபடி புதைகுழியினை ஏழு முறை சுற்றுவர். பிணத்தைக் குழியில் இறக்கும்போது கூடி யிருப்பவர்கள், "மரங்களே! வானமே! பூமியே! நாங்கள் இவனை இப்புதைகுழியில் கிடத்துகிறோம். அது எங்கள் தவறு அன்று." எனக் கூறுவர். புதைகுழியை மூடியபின் அதன்மேல்

ஓர் ஆணின் உருவமும் பெண்ணின் உருவமும் வரையப்படும். கூடியுள்ளவர்கள், "நீ எங்களோடு வாழ்ந்தாய். இப்பொழுது எங்களைப் பிரிந்து போய்விட்டாய். யாருக்கும் தொல்லை தராதே." எனக் கூறியபடி புதைகுழி மேல் மண்ணைத் தூவு வர். வீட்டுக்குத் திரும்பியபின், துக்கம் மேற்கொண்டுள்ளவர்கள் வீட்டிலும் தங்கள் பாதங்களின் மீதும் மாட்டுச் சாணம் கரைத்த நீரைத் தெளிப்பர். அதன்பின் கள்ளினைக் குடிப்பர். மறுநாள் வீட்டிலுள்ள பழைய மண்பாண்டங்களைத் தூர எறி வர். பங்காளிகள் அனைவரும் வேப்பிலையிட்டுச் சமைத்த உணவை உண்பர். இறந்து போனவருக்குச் சுடுகாட்டில் அல்லது வீட்டுப் புறக்கடையில் பலிச்சோறு அளிக்கப்படும். பத்தாம் நாள் தியானி பூசாரியினை அழைப்பர். அவன் தன் தியானி (பம்பை) யுடன் வருவான். ஒரு குளக்கரையில் சிறு குடிசையிட்டு ஏழுமுறை சமைக்கப்பட்ட உணவை, ஏழுமுறை ஏழு மண்பாண்டச் சில்களில் வைப்பர். ஒரு புதிய துணியை விரித்து அதில் சோறு, பழம், சங்கு முதலியன இறந்தவருக்குப் படைக்கப்படும். பின்னர் அவற்றையெல்லாம் ஒரு புதுப்பானையி லிட்டு இறந்தவன் மகன் அப்பானையோடு குளத்தில் கழுத்தளவு நீரில் இறங்கிப் பானையை உயர வீசி உடைப்பான். சடங்கு, செய்தவர்கள் வீட்டுக்குத் திரும்பி வீட்டின் முன் வரிசையாக நிற்பர். தியானி அவர்கள் கைகளின் மீது பாலினைத் தெளித்து அவர்கள் தீட்டினைப் போக்குவான். பன்னிரண்டாம் நாள் பன்னிரண்டு இலைகளில் சோறு படைக்கப்படும்.

பாவுரியர் சகன்னாதரையோ பிற பெருந் தெய்வங் களையோ வழிபடுவதில்லை. தங்கள் முன்னோர்களை வழிபடுவ தோடு, ஊர்த்தெய்வமான தாகுராணி அம்மனையும் தொழுவர். மற்ற ஒரிய சாதியாரைப் போலவே இவர்களும் இருபத்தியொன் றாம் நாள் குழந்தைக்குப் பெயர் சூட்டுவர். ஓகாடு (அழுக்கன்), கங்காலி (கீழ்மகன்), ஹாடியா (துப்புரவுச்சாதியான்) போன்ற பழிப்புச் சொற்களாலான பெயர்கள் இவர்களிடையே பெரு வழக்காயுள்ளன.

பேடர் அல்லது போயர் - Bēdar or Bōya

"கபலதுர்க்கத்திற்கு வடக்கேயுள்ள மலைகளில் பயிர்த் தொழில நடைபெறும் பகுதிகள் உள்ளன. திப்புவின் ஆட்சிக்

காலத்தில் பாய்தரு அல்லது வேடர்கள் அந்நிலங்களில் குடியேற்றப்பட்டனர். இவாகளுக்கு ஆண்டுக்குப் பன்னிரண்டு வராகன் ஊதியமாக வழங்கப்பட்டது. அரசு இவர்கள் பணியை வேண்டிய பொழுது இவர்கள் படைப் பிரிவிலும் போர் வீரர்களாகப் பணியாற்றி வந்தனர். காட்டில் மான்களையும், புலிகளையும் வேட்டையாடுவதில் பழக்கமுடையவர்கள் ஆகையால் தங்கள் 'மேட்ச்லாக்' துப்பாக்கிகளைக் குறி தவறாது பயன் படுத்துவதில் வல்லவர்களாக இருந்ததோடு தங்கள் வேட்டை விலங்குகளைத் தளர்வின்றித் துரத்திச் செல்லும் ஆற்றலும் பெற்றிருந்தனர். இந்தத் தளர்வின்மையே ஒவ்வொரு வீரனுக்கும் போர்க் காலங்களில துணையாயிருக்கும் பெருஞ்செல்வமாகும். திப்புவோடும் அவன் மகனோடும் போர்கள் நடைபெற்ற சமயங்களில் கருநாடகத்தின் சமவெளிகளில் நடைபெற்ற கொடுமைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் மூல காரணமாக இருந்தவர்கள் இவர்களே. இவர்களைப் படைவீரர்களாகப் பெற்றிருந்த பாளையக்காரர்களுக்கு எதிராகவும் இவர்கள் வெற்றி ஈட்டித் தரும் வகையில் பயனபடுத்தப் பட்டிருக்கிறார்கள்'' என்று புச்சனன் எழுதியுள்ளார்.* அனந்தப்பூர் மாவட்ட விவரக் குறிப்பில், ''போயர்கள் இந்தப் பகுதிக்குரிய பழமையான போர் வீரர் சாதியினைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வீரச் செயல்கள் பற்றி வரலாற்று நூல்கள் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. பாளையக்காரர்களின் போர்ப் படைக்கும் ஹைதரின் போர்ப் படைக்கும் இவ்வினத்தவர்களிலிருந்தே பெரும்பாலான வீரர்கள் சேர்க்கப்பட்டனர். இன்றும் இவர்கள் வீர விளையாட்டுகளில் தொடர்ந்து ஆர்வங்காட்டி வருகின்றனர்'' எனக் கூறப்பட்டுள்ளது.

திரு என். இ. க்யூ. மெயின்வாரிங் எனக்குத் தந்துதவிய போயர்கள் பற்றிய குறிப்புகளில் பின்வருமாறு எழுதியுள்ளார். ''அண்மைக்காலம் வரை போயர்கள் இந்திய மக்களைக் கொண்ட படைப் பிரிவில் பணிபுரிந்துள்ளனர். படை வீரர்கள்

* மைசூர், கன்னட, மலபார் பகுதிகள் வழியாகப் பயணம், 1807. Journey through Mysore, Canara and Malabar, 1807.)



பேடர்

பில்லவர் - கள் இறக்குவோன்

பெயர்ப்பட்டியலில் இவர்களின் சாதிக்குரிய பட்டப்பெயரான நாயுடு என்றோ முந்தைய நாள்களில் படை ஆவணங் களில் இந்தியர்களைக் குறிக்க அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்ததான ஜெண்டு (Gentu)* என்றோ இவர்கள் பதியப்பட்டு உள்ளனர். அண்மையில் அரசு பிறப்பித்த தெலிகர்கள் எவரை யும் படையில் இனிமேல் சேர்த்தல் கூடாது என்ற ஆணையின் காரணமாக நல்ல முறையில் தங்கள் வாழ்க்கைக்குத் தேவை யான பொருளை ஈட்டிக் கொண்டிருந்த இவர்கள் வாழ்வு நலம் சீர் குலைந்துள்ளது. போயர்கள் கொந்தளிப்பான பதி னெட்டாம் நூற்றாண்டில் பெரிதும் விரும்பபபட்ட போர் மறவர்களாயிருந்தனர் என்பதைக் கர்னல் வில்க்ஸ் எழுதியுள்ள அவர் காலத்திய வரலாற்றில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. †அவர் சித்தல்துர்க்கிலிருந்த பாளையக்காரரின் வீரமிக்க படை களைக் குறிப்பிடுகின்றார். 1755-இல் வாழ்ந்த அப்பாளையக் காரர் பேடர் அல்லது போயர் இனத்தவரே. அதற்கு முன்னர் 1750-இல் மைசூர் அரசரின் படையில ஒரு நாயக்காக இருந்த ஹைதர்அலி தன் கீழிருந்த ஒரு சில பொறுக்கி எடுக்கப்பட்ட பேடர் இன வீரர்களைச் செஞ்சிப் போரில் மிகத் திறமையாகப் பயன்படுத்தினான். இப்போர் நடந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின், மிகப் பெரிய உயர்நிலையை அடைந்த ஹைதர் பேடர் படை வீரர்களையே தன் எதிரிகள் இருக்குமிடத்தை உறுதி செய்து கொள்ள உதவும் பணியாட்களாக அமர்த்தியிருந்தான். மேலும் அப்பகைவர் பயன்படுத்தும் கிணற்று நீரினை நச்சாக்கத்

---

* ஜெண்டு அல்லது ஜெண்டூ "ஜெண்டியோ என்ற போர்துகீசியச் சொல்லின் சிதைந்த வடிவமாகும். போர்த்துகீசியர் இச்சொல்லை இந்தியர் களைக் குறிக்கப் பயன்படுத்தினர். முகமதியரைக் குறிக்கும் 'மூர்' என்ற சொல்லுக்கு மாறுபட்டதாக இது வழங்கப்பட்டது. தெலுங்கு பேசும் இந்துக்களையும் அவர்கள் மொழியையும் குறிக்க இது சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டது." யூலும், பர்னலும்; ஹாப்சன் - ஜாப்சன்.

(Gentu or Gentoo is "a corruption of the Portuguese Gentio, gentile or heathen which they applied to the Hindus in contradistinction to Moros or Moors, i. e. Mahammedans. It is appleid to the Telugu - speaking Hindus specially, and to their language." Yale and Burnell, Hobson - Jobson)

† *தென்னிந்திய வரலாற்றுக் குறிப்புகள்: மைசூர் 1810-17).* (Historical Sketches of S. I.; Mysore *1810-17.)*

திருத்து கள்ளிப் பாலைக் கலக்கவும், படைகள் செல்லும் பாதை களில் உள்ள கிணறுகளை அதுபோல நச்சுப் படுத்தவும் இவர் களையே பயன்படுத்தினான். வரலாற்றாசிரியர்கள் இவர் களை 'வீரமும் நன்றியறிதலும் நிறைந்த திருடர்கள்' எனச் சித்திரித்துள்ளனர். 1751-இல் பேடர்களையே பெரும்பாலும் கொண்டிருந்த, தனித் தேர்வு செய்து எடுக்கப்பட்டிருந்த, கூட்டியைச் சேர்நத மொராரி ராவின் படை, போர்க்களத் திலும் பின்னர்க் கூட்டிக் கோட்டையைக் காப்பதிலும் தங்கள் ஆற்றலை நன்கு வெளிப்படுத்தியுள்ள கடந்த கால நிகழ்ச்சிகள் உள. பின்னர் அக்கோட்டை வஞ்சகமாகவே வீழ்த்தப்பட்டதும் வரலாறாகும். வாள், குத்துவாள், ஈட்டி, மேட்ச்லாக் துப்பாக்கி போன்ற பழங்காலப் போர்க்கருவிகள் இன்றும் பேடர்களிடம் இருக்கக் காணலாம். அவை போயருக் குரிய போர்க் கருவிகளாகத் தெரியவில்லை. அவை அப்பகுதியில் முகமதியர்களும் இந்துக்களும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத் தில் அவர்களுக்குரியனவாயிருந்து, பின் வீரர்களான இவர்கள் கையில் கிடைத்திருக்க வேண்டும். சில மாவட்டங்களில் போயர் சாதியைச் சேர்ந்த பாளையக்காரர்கள் உள்ளனர். ஆனால் இன்று அவர்கள் செல்வாக்கற்ற ஏழைகளாயுள்ளனர். தங்கள் பகுதியில் வாழும் மக்களோடு பொதுவாக நல்லுறவு கொண்டுள்ள போயர்கள் சிலபோது கொள்ளையடிப்பதில் ஈடுபடுவர்.*

"கர்நூல் மாவட்டத்தில் இவர்கள் காவல் துறை ஆவணங் களில் திருட்டிலும், கன்னம் வைப்பதிலும் பழகிப் போன பிரிவினர் எனப் பதியப்பட்டுக் கெட்ட நடத்தையுள்ளவர் களாகக் கருதப்படுகின்றனர். சிறுகுற்றங்களில பெரும்பாலும் இவர்கள் ஈடுபடுவதில்லை. சிலர் பயிர்த்தொழிலுக்கான கருவி களைச் செய்யும் தச்சர்களாகவும், கொல்லர்களாகவும் உள்ளனர். சிலர் காவல்காரர்களாகப் பணிபுரிகின்றனர். மூங்கிலைக்

---

* சட்டப்படி, கொள்ளையடித்தல் என்பது ஐவரோ ஐந்து பேருக்கு மேலோ கூட்டமாக இணைந்து செய்யும் குற்றமாகும் - யேலும் பர்னலும். (முந்து நூல்)
(By law to constitute decoity, there must be five or more in the gang committing the crime. Yule and Burnell, op. cit.)

கொண்டு நேர்த்தியான மீன்பிடி கண்ணிகளைச் செய்வதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். எனினும் பெரும்பாலானவர்கள் தங்களுக்குரிய பட்டா நிலத்தில் பயிர்த்தொழில் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளனர். தங்கள் தொழில் திறமையாலும், கடின உழைப்பாலும், சுறுசுறுப்பாலும் தற்பொழுது இவர்கள் தங்கள் பழைய தீய வழிகளை மறந்து செல்வ வளமுடையவர்களாக உள்ளனர். ஒவ்வொரு ஊரும் அல்லது சில ஊர்களும் ஒன்றாக இணைந்து நாயுடு அல்லது துரை எனப்படும் தலைவனின் ஆளுகைக்கு உட்பட்டதாக உள்ளது. கர்நூலின் சில பகுதிகளில் இத்தலைவன் சிம்மாசன போயன் எனப்படுகின்றான். எல்லாக் கூட்டங்களையும் தலைவனே தலைமை தாங்கி நடத்துகிறான். சாதியினைச் சார்ந்தவர்களின் பாகப் பிரிவினை, பிறன் மனை உறவு போன்ற பாடுகள் அனைத்தையும் ஊர்ப் பெரியவர்களின் உதவியுடன் தீர்த்து வைக்கிறான். தலைவன் குற்றம் புரிந்தவர்களின் தகுதிக்கும், செல்வ வளத்திற்கும் ஏற்பத் தண்டம் விதிக்கும் அதிகாரம் உடையவன். தண்டத் தொகை ஊரவையினருக்கு உணவளிக்கப் போதுமானதாக இருப்பதோடுகூடக் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவனும், ஊர்த்தலைவனும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்ட பிறகும் கொஞ்சம் மிஞ்சும்படியாகவே கணக்கிட்டு விதிக்கப்படும். இவ்வகையில் ஊர்த்தலைவன் தன் ஊதியத்தைப் பெறுவதோடுகூட அதன் அளவையும், அவனே இவ்வளவு என வரையறை செய்து கொள்கின்றான்.''

பெல்லாரி மாவட்ட விவரப் பட்டியலில் இவர்களைப் பற்றிக் கூறப்படுவதாவது:- ''பெல்லாரியில் காணப்படும் இந்து சாதியார்கள் பலருள்ளும போயர்களே (கன்னடத்தில் பேடர், பையேதர், பையாதார் எனப் பலவாறு வழங்கப்படுகின்றனர்.) எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளனர். இப்பகுதியினைச் சர் தாமஸ் மன்றோ கிழக்கிந்தியக் கம்பெனியோடு இணைத்த காலத்தில் பல பாளையங்களுக்குப் போயர்களே உரிமையுடையவர்களாக இருந்தனர். இச்சாதியார் அப்பாளையக்காரர்களிடமும், ஹைதரின் வலிமைமிக்க படையிலும் இடம் பெற்றிருந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில் ஹர்பணஹள்ளி வலிமை வாய்ந்த பாளையங்களுள் ஒன்றாக இருந்தது. அக்குடும்பத்தின் தலைவன் போய தலையாரி. அவன், விசயநகரத்தார் ஆட்சி

சீர்குலைந்தவுடன் ஹர்பணஹள்ளியைச்சார்ந்த இரு சிறு மாவட்டங்களைத் தன்னுரிமையாக்கிக் கொண்டான். இம் மாவட்டத்தில் வீர விளையாட்டுகளில் இன்னமும் ஆர்வங் காட்டிவரும் ஒரே வகுப்பார் போயர்களே. இவர்களுள் பெரும்பான்மையினர் பயிர்த்தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். அரசுப் பணியில் காவலர், பணியாள், ஊர்க் காவலன் (தலையாரி) போன்ற பணிகளிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். சாதிகளின் உட்பிரிவுகளின் வளர்ச்சி பற்றி அறிய, இவர்கள் சாதி பல விவரங்கள் தரும் முன்மாதிரியாக உள்ளது. தெலுங்கு பேசும் போயர்களும், கன்னடம் பேசும் பேடர்களும் ஊரார், மையாசர் என இரு பெரும் பிரிவினராக உள்ளனர். இப்பிரிவுகள் இரண்டும் மேலும் பல புறமணக்கட்டுப்பாடுடைய 'பெதகங்களாகப்' (உட்பிரிவுகளாகப்) பிரிக்கப்பட்டுள்ளன. இந்த உட்பிவுகளுள் நான்கு பிரிவுகள் குறிப்பிடத்தக்கவை. எம்மலவாரு எனப்படும் எருமைக்காரர், மண்டவாரு எனப்படும் கால்நடைக்காரர், பூலவாரு எனப்படும் பூக்காரர், மீனளவாரு எனப்படும் மீன்காரர் எனபனவே அந்த நான்கு பிரிவுகள். அவை எந்த வகையிலும் வெறும் மரபுச் சின்னங்கள் எனக் கொள்ளத் தக்கனவல்ல. பெதகு எனப்படும் ஒவ்வொரு குலப்பிரிவும் அப்பிரிவினர் வழிபடும் தனித் தெய்வங்களைப் பெற்றுள்ளன. போயர், பேடர் என்ற இரு சாரருள்ளும் காணப்படும் பெதகுகள், ஒரே மாதிரியான பெயர்களைப் பெற்றுள்ளன. ஊரார், மையாசர் என்ற இரு பிரிவினைச் சார்ந்த போயர், பேடர்களிடையேயும் இப்பெதகுகளின் பெயர்கள் பொதுவாக உள்ளன. எனவே வெகுகாலத்திற்கு முன் போயர்களும், பேடர்களும் ஒரே சாதியினராக இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ள இடமுள்ளது. இன்று ஊரார் போயர்கள் ஊரார் பேடர்களோடும்; மையாச போயர்கள், மையாச பேடர்களோடும் மண உறவு கொள்கின்றனர். ஊராருக்கும் மையாசருக்குமிடையே அவர்கள் போயர்களாக இருந்தாலும் பேடர்களாக இகுந்தாலும் மண உறவுகள் நிகழ்வதில்லை. ஊராரும், மையாசர்களும் ஒன்றாக ஒரே பந்தியில் உண்டாலும், அவர்கள் வேறு வேறு வரிசைகளாகவே அமர்வர். மேலும் ஊரார் பிரிவினர் அவர்கள் பேடர்களாக இருநதாலும் போயர்களாக இருந்

தாலும் கோழிக்கறி தின்பதோடு மதுவும் அருந்துவர். மையாசர்கள் கோழிக்கறியைத் தொடமாட்டார்கள். எந்தப் போதை தரும் மது வகைகளையும் அவர்கள் குடிப்பதில்லை. இதில் அவர்கள் மிகவும் கட்டுத் திட்டமாக உள்ளனர். பெல்லாரி பகுதிகளில் கள்ளினைத் தரும் ஒரே மரமான ஈச்சமரத்தின் ஓலையால் பின்னப்பட்ட பாயில்கூட அவர்கள் உட்காருவதில்லை. ஊரார் பிரிவினர் தங்கள் மணச்சடங்குகளைப் பால்கம்பம் நட்டு, மணமக்களைக் குளிக்கச் செய்வது போன்ற வழக்கமான சடங்குகளோடு நிகழ்த்துகின்றனர். அப்போது மணமகள் மாவரைக்கும் கல்லின் மீது அமர்வாள். மணமகன் சோளம் நிறைந்துள்ள கூடை மீது அமர்வான். இவர்கள் மணவினையை நடத்தி வைக்கப் பிராமணர்களை அழைப்பர். மையாசர் மிக எளிமையான மணச்சடங்குகளையே மேற்கொள்கின்றனர், மேற்கூறிய ஊரார் பிரிவினர் சடங்குகளுள் பலவற்றைப் புறக்கணிப்பதோடு பிராமணர்களையும் இவர்கள் அழைப்பதில்லை. ஊரார் பிரிவினைச் சார்ந்த பெண்கள் இறுக்கமான ரவிக்கை அணிவதும், மையாசர் அவைகளை இடைக்கயிற்றில் நுழைத்துக் கொள்ளும்படியாகத் தளர்வாக அணிவதும் மற்றுமொரு வேறுபாடாகும். இரு பிரிவினரும் மாட்டிறைச்சியை உண்கின்றனர். இரு பிரிவினரும் எசமான் எனப்படும் பரம்பரைக் குலத் தலைவர்களையும், பூசாரிகளாகப் பணியாற்றும் பரம்பரைத் தாசரிகளையும் பெற்றுள்ளனர்."

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் போயர்களுள் சின்ன, பெரிய என்ற இருபெரும் பிரிவுகள் உள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. இன்னொரு விவரப்படி போயர்களுள் புறமணக்கட்டுப்பாடுடைய பெத்த, சின்ன, சதரு, மையாசர் என்ற நான்குபிரிவுகள் உள்ளனஎனத்தெரிகிறது. சதகு என்ற பெயர் இலிங்காயதர்களின் உட்பிரிவுக்குரிய பெயராகும். பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள இப்பிரிவினர் பெல்லாரி, அனந்தபூர் மாவட்டங்களிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களோடு கூட இப்பகுதியில் வாழும் பேடர்கள் சிலரும் தங்களைச் சதகு எனக் கூறிக் கொள்கின்றனர். வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டின் படி, "போயர்கள், பள்ளத்தாக்குகளுக்கு மேலேவாழும் தெலுங்கு பேசும் வேட்டையாடும் சாதியார். அப்பகுதிகளைச்

சேர்ந்த பாளையக்காரர்கள் பலரும் அச்சாதியினரே. சட்டத்திற்குக் கட்டுப்படாதவர்களாக வரம்பு மீறிய செயல்களில் ஈடுபட்டவர்களுடைய பாளையங்கள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன. இப்பொழுது இவர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிடையே பல பிரிவுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை முல்கி போயர், பால போயர் என்பன. இவர்கள் தங்களுக்குள் மண உறவு வைத்துக் கொள்வதில்லை."

1891, 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பின்படி, "பேடர்களிடையே கன்னடர்கள், தெலுங்கர் என்ற இரு தெளிவான பிரிவுகள் உள்ளன. அவற்றுள் சுமார் இருபது உட்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஹலு, மாச்சி அல்லது மையாசர், நாயக், பாளைக்கார், பாரிக்கா, கன்னய்யன சாதி, கிராடக என்பனவாம். மாச்சி அல்லது மைசாய பேடர் ஒரு தனிப் பிரிவாக விளங்குகின்றனர். இவர்கள் சுஞ்சுகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் மலைப் பகுதிகளிலும், மக்கள் குடியிருப்புகளுக்குப் புறத்தே அவ்வப்போது குடிசைகள் போட்டுக் கொண்டும் வாழ்கின்றனர். இவர்கள் சாதியில் ஓர் பகுதியினை ஊருக்குள்ளே வந்து குடியேறுமாறு வற்புறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு குடியேறியவர்கள் வழித்தோன்றல்களோடு ஒதுங்கியிருந்த மற்றவர்கள் சமூகத் தொடர்புகள் கொண்டுள்ளனர். இவர்கள் பன்றிக் கறியோ, கோழிக் கறியோ தின்பதில்லை. ஆனால் மாட்டிறைச்சியைத் தின்பர். மையாச பேடர்களே இந்துக்களுக்குள் சுன்னத்துச் சடங்கு செய்து கொள்ளும் ஒரே பிரிவினர்.* முகமதியருக்கேயுரியதான இப்பழக்கங்கள் ஹைதர்அலி படைப் பிரிவில் இப்பிரிவினர் சேர்ந்திருந்த காலத்தில் இவர்கள் தாங்களே முன்வந்து ஏற்றுக் கொண்டதாகலாம். சுன்னத்துச் சடங்கோடு கூடப் பஞ்சகவ்வியம், வேப்பங்குச்சியால் நாக்கைச் சுடுதல் போன்ற பிராமணர் நெறிகளுக்கு உரிய சடங்குகளையும், ஒவ்வொரு இளைஞனையும் சமூகத்தில் ஓர் உறுப்பினனாக ஏற்றுக் கொள்ளும்போது செய்விக்கின்றனர். இவர்களுடைய தனித்தன்மையதான பழக்கங்களுள் குழந்தை பெற்றவளையும், அடிக்கடி நோய்வாய்ப் படுபவர்களையும் வீட்டுக்குப் புறத்தே

* தமிழ் நாட்டுக் கள்ளர் சிலரும் சுன்னத்துச் செய்து கொள்கின்றனர்

தனித்துத் தங்க வைத்தல் குறிப்பிடத்தக்கன. எந்த வகையான மதுவையும் மையாச பேடர்கள் அருந்துவதில்லை. காடை, கௌதாரி ஆகிய இரு பறவைகளின் ஊனினை மட்டுமே இவர்கள் உண்பர்.'' மையாச பேடர்களின் சுன்னத்துச் சடங்கு பற்றிப் பெல்லாரி மாவட்டக் கையேட்டில் இராயதுர்க்கம், குடிக்கோட்டை ஆகிய வட்டாரங்களிலேயே இப்பழக்கம் காணப்படுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ''மையாசர் தங்களுடையஇந்த வழக்கம் பற்றி மிகவும் பெருமை பாராட்டிக் கொள்கின்றனர். இந்த வழக்கம் இல்லாத குடும்பங்களோடு மண உறவுகள் கொள்வதை அவர்கள் மிகவும் வெறுக்கின்றனர். இச் சடங்கு சிறுவர்களுக்கு ஏழு அல்லது எட்டாவது வயதில் செய்யப்படுகிறது. இதே சாதியைச் சேர்ந்த ஒருவன் இச்சடங்கிற்காகச் சிறுவனின் ஒரு சிறுபகுதி தோலினை மட்டும் வெட்டி எடுக்கிறான். அதன்பின் அச்சிறுவன் யாராலும் தொடப்படுவதில்லை. அவனைப் பதினொரு நாள்கள் தனியே ஓர் குடிசையில் தங்க வைக்கின்றனர். அவனுக்கு அன்றாட உணவு ஓர் கல்லின் மேல் வைத்துத் தரப்படுகிறது. பன்னிரண்டாம் நாள் அவனைக் குளிக்கச் செய்து புத்தாடை அணிவித்து வீட்டுக்கு அழைத்து வருகின்றனர். அவனது பழைய ஆடைகளும், அவன் உணவு உண்ணப் பயன்படுத்திய கல்லும் தூர எறியப்படுகின்றன. அவன் உறவினர்கள் அவனை ஆவாரம் செடியருகே அழைத்துச் சென்று அதற்குத் தேங்காய், பூ முதலியன படைத்து அதனை வழிபடுகின்றனர். முதன்முதல் பூப்படையும் பெண்களும் இதே போல் பதினொரு நாள்கள் தனியே குடிசையில் இருத்தப்படுகின்றனர். அதன்பின் அவர்களும் ஆவாரம் செடிக்கு வழிபாடு செய்கின்றனா. இச்செடி சாவுச் சடங்கின் போதும் வழிபாட்டுக்குரியதாகின்றது.''

போயர்களுக்குரிய பட்டங்கள் நாயுடு, அல்லது நாயக், தொரை, தொரபிட்டா, வால்மீகி என்பனவாம். இராமாயணத்தை எழுதிய வால்மீகியின் வழி வந்தவர்கள் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். மைசூர் மாநிலக் கணக்கெடுப்பின் போது சில போயர்கள் தங்களை வால்மீகி பிராமணர்கள் என உயர்த்திக் கூறிக்கொண்டனர். மையாச பேடர்களின் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை

வழங்குகின்றது. ஓர் பேடர் சாதிப் பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவன் உணவு உண்டபின் வயல் வேலைக்குச் சென்று விட்டான். அடுத்து வீட்டுக்கு வந்த இளையவன் தனக்கு உணவளிக்கும்படி தன்னுடைய தாயாரிடம் வேண்டினான். சோளச்சோறும், காய்கறிகளும் அவனுக்கு அவள் தந்தாள். அவன் உண்ணும்போது ஆட்டுக்கறியின் மணம் வீசுவதாக உணர்ந்து, தன் தாயார் தனக்கு அதனை வைக்கவில்லை என்ற காரணத்தால் கோபம் கொண்டு அவளை அடித்துக் கொன்றுவிட்டான். பிறகு வீட்டில் தேடத் தொடங்கிய அவன், ஆட்டுக்கறியின் மணம் வீசிய சட்டியைத் திறந்தபோது அழுகிப் போன செடியின் நார்களே அதனுள் இருக்கக் கண்டான். பின் தன்னைத் தானே சபித்துக் கொண்டவனாகக் காட்டுக்கு ஓடிப் போன அவன் அங்கேயே தங்கிவிட்டான். அவனே மையாச பேடர்களின் குல முதல்வன்.

பேடர்கள் தோற்றம் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு மெயின்வாரிங் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். "பேடர்கள்" தோற்றம் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பிரிவினருடைய பெயரோடு தொடர்புடைய கதையாக உள்ளது. சிலர் தங்களை நிஷ்காடுலு எனக் கூறிக் கொள்கின்றனர். பிரமனிடமிருந்து நேரே தோன்றிய மாபெரும் பேணுடு இந்த உலகத்தை ஆண்டு கொண்டிருந்த போது அவன் தனக்கு வாரிசாக ஒரு பிள்ளையைப் பெற்றானில்லை. அவன் இறந்த போது அச்சாவு விடிவு காண இயலாத பேரிழப்பாகக் கருதப்பட்டது. என்ன செய்வதென்று அறியாத கவலையினாலும், ஐயத்தினாலும் அவன் உடலைப் பத்திரப் படுத்தினர். இந்த உலகை ஆளும் ஏழு கோள்களும் ஒன்று கூடி அமர்ந்து, அடுத்துச் செய்வதற்குரியது என்னவென்று சிந்தித்தன. இறுதியாக அவை இறந்துபோன பேணுடுவின் வலத் தொடையிலிருந்து ஒருவனைப் படைப்பது என முடிவு செய்து அவ்வாறே நிஷ்காடு என்பவனைப் படைத்தனர். அவர்கள் படைத்த படைப்பு வெற்றிகரமானதாக இல்லை. நிஷ்காடு உடற்குறை உடையவனாகவும், அழகற்றவனாகவும் அமைந்துவிட்டான். கோள்களின் மற்றுமொரு கூட்டத்தில் அவன் அரியணையில் அமர்த்தப்படத் தகுதியுடையவனல்லன் என முடிவு செய்யப்

பட்டது. ஆகவே அவர்கள் இறந்து போன வேணுடுவின் தோள் பட்டையிலிருந்து இரண்டாவதாக ஒருவனைப் படைத்தனர். அவன் சக்சரவர்த்தியெனப் பெயரிடப் பட்டான். அவன் திருப்தி யுற அமைந்தமையால் அவனை அரியணையில் அமர்த்தினர். தன்னைப் புறக்கணித்து அவமதித்ததால் நிஷ்காடு வெறுப்புற்றுத் தனித்தவனாக இருந்தான். அங்கு அவன் தெய்வங்களிடம் தான் ஆளத் தகுதியற்றவனெனில் தன்னை ஏன் படைத்தனர் எனக் கேட்டான. தெய்வங்கள் அவனிடம் சக்கரவர்த்தி ஆட்சியில் அமர்ந்துவிட்டதால் இனி அவன் நாட்டை ஆள முடியாதென வும் காட்டுக்குச் சென்று காட்டினை அவன் ஆளலாமெனவும் கூறினர். எனவே, அவன் காட்டிற்கு வந்து குறவர், செஞ்சுக்கள், ஏனாதியர், போயர் ஆகியவரைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத் தான். இவர்கள் அவனுக்கு உரிய உறவுவழிப் பிறந்த பிள்ளை களாக அமையப் போயர் முறைகேடான உறவுவழிப் பிறந்தவ ராயினர். வால்மீகி இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள கதையின் படி அரசரான விசுவாமித்திரர் வசிட்ட முனிவரோடு போரிட்டபோது அவரிடமிருந்த காமதேனு கோபம் கொண்டு உடலைச் சிலிர்த்து உதறியபோது அதன் உடலிலிருந்து நிஷ்டுலு, துருக்கர், யெவனுடு (யெருக்கலர்) ஆகிய படை வீரர்கள் ஒரு சேரப் பிறந்தனர் எனக் கூறப்படுகிறது.

''போயர்கள் தங்களை வால்மீகியர் எனக் கூறிக் கொள் வதற்குக் காரணமான பழங்கதை வருமாறு:- முன்பு காட்டில் வழிப்பறிக்காரனாக இருந்த பிராமணன் ஒருவன் போயர் இனப் பெண் ஒருத்தியைத் தன் துணைவியாக வைத்துக்கொண்டு பல பிள்ளைகளைப் பெற்றான். ஒரு நாள் அவன் வழக்கமான தன் வழிப்பறித் தொழிலுக்குச் சென்றபோது அங்கு ஏழு முனிவர் களை எதிர்ப்பட்டான். அவர்கள் உடைமைகளைத் தராவிடில் உயிரிழக்க வேண்டிவருமென அவன் அவர்களை அச்சுறுத்தி னான். அந்த முனிவர்கள் தங்களிடமிருந்த சிறிது பொருளை அவனுக்குத் தர உடன்பட்டதோடு, அவனுடைய இந்தப் பாவச் செயல்களுக்காக அவன் ஒருநாள் காரணங்கூறியே ஆகவேண்டு மென அவனை எச்சரித்தனர். அந்தப் பிராமணன் தான் ஒரு பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருப்பதாகவும், தன் குடும்பத்தினர் தன் கொள்ளைப் பொருளில் உண்டு வாழ்வ

தாகவும், தனக்குக்கிடைக்கப்போகும் தண்டனையை அவர்களும் பங்கிட்டுக் கொள்வரெனவும் ஆத்திரத்தோடு அந்த முனிவர்களுக்குப் பதிலளித்தான். அந்த முனிவர்கள் இதனை நம்ப மறுத்தனர். அவனைத் தன் குடும்பத்தாரிடம் சென்று இதுபோல அவன் பாவத்தைப் பங்கிட்டுக்கொள்ள அவர்கள் உடனபடுகின்றனரா எனக்கேட்டு வருமாறு ஏவினர். அந்தப் பிராமணனும் தன் இல்லம் சென்று தான் செய்துவரும் பாவச் செயல்கள் பற்றிய உண்மையினை மனைவி மக்களிடம் எடுத்துக் கூறி இப்பாவச் செயல்களைச் செய்தே அவன் அவர்கள் நனகு உண்டுவாழ உதவுவதாகவும் கூறினான். அதன்பின் அவன் அவர்களிடம் ஏழு முனிவர்களை எதிர்ப்பட்டதைக் கூறித் தன் பாவத்தில் பங்கு கொள்ள அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டான். அவன் மனைவியும், மக்களும் அந்தப் பாவங்களுக்குத் தாங்களும் பொறுப்பாக முடியாதென உறுதியாக மறுத்து விட்டதோடு அது முழுதும் அவனுடைய பொறுப்பே எனக் கூறினர். இதனால் அதிர்ச்சிக்குள்ளான அவன் முனிவர்களிடம் திரும்பித் தன் குடும்ப வாழ்வில் தான் இத்தகையதான அதிர்ஷ்டங்கெட்டவனாக ஆனதறகு வருந்தித் தன் பாவங்களைக் கழுவிக் கொள்ளத்தக்க அறிவுரை வழங்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அவர்கள் அவனிடம் இராமனின் பெயரைக் கூறி உய்யுமாறு அறிவுறுத்தினர். இளமைக் காலத்தைக் கல்வியில் செலவிடாது தகாத வழியில் கழித்த அவனுக்கு இராம நாமத்தை உச்சரிக்க வரவில்லை. ஆகவே அந்த முனிவர்கள் அவனிடம் மரா, மரா, மரா என்று 'ராம' என்று பெயரைத் தலைகீழாகக் கூறும்படி செய்ய, அவ்வாறு அவன் வேகமாகக் கூறி வந்தபொழுது ராம எனக் கூறத் தெரிந்து கொண்டான். அவ்வாறு எளிதாக அப்பெயரைச் சொல்லக் கற்றுக் கொண்ட அப்பிராமணன் அவன் பாவங்கள் புரிந்த அந்த இடத்திலேயே அமர்ந்து தவம புரிந்தான். கரையான்கள் தரையிலிருந்து வெளிப்பட்டுப் புற்றமைத்து அவனை முழுதும் மூடிவிட்டன. அவ்வாறு முழுதும் உயிரோடு புதைக்கப்பட்ட அவன் ஒரு முனிவராகி வால்மீகி முனிவர் என வழங்கப்பட்டான். வால்மீகி என்பதன் பொருள் புற்று என்பதாம். அவன் கெட்டழிந்து கொண்டிருந்த நாள்களில் அவனோடு வாழ்ந்த போயர் பெண்ணுக்குப் பிறந்த

பிள்ளைகளின் வழி வந்தவர்களே போயர்கள் எனக் கூறிக் கொள்ளும் இச் சாதியார், இவர்கள் தங்களை வால்மீகுடு எனக் கூறிக் கொள்கின்றனர்.''

பெல்லாரி மாவட்டத்தில் ஹொஸ்பெட் அருகே நான் நேரில் கண்ட பேடர்கள் வேட்டைக்குச் செல்லும் பழக்கமுடையவர்கள். துப்பாக்கி, மான், பன்றி ஆகியவற்றை எறியும் ஈட்டி, மான்குட்டி, முயல் ஆகியவற்றை அகப்படுத்தும் டென்னிஸ் விளையாட்டுக் களத்தில் பயன்படுத்துவது போன்ற வலை ஆகியவற்றை வேட்டைக்குச் செல்லும்போது இவர்கள் கொண்டு செல்வர். இவர்களுள் பலர், வேட்டையின்போதும் கரும்புத் தோட்டங்களில் பணியாற்றும் போதும் கரடிகளின் தாக்குதலால் உடலில் ஏற்பட்ட காயங்களின் தழும்புகளோடு இருந்தனர். பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளதாவது:- ''கன்னடத்தில் போயர் அல்லது பேடர் என அழைக்கப்படும் இந்த ஒரு சாதியாரே வீரமிக்க விளையாட்டுகளில் ஈடுபாடு காட்டுகின்றனர். இவர்கள் காட்டுப் பன்றி வேட்டை ஏற்பாடு செய்கின்றனர். அச்சமின்றிக் கரடிகளைப் பின் தொடர்ந்து வேட்டையாடுகின்றனர். 'கரிடி மனை' எனப்படும் ஊர் உடற்பயிற்சிக் கூடங்களுக்கு முறையாகச் சென்று வருகின்றனர். இக்கூடங்கள் காற்றோட்டமற்றவையாகப் பெரும்பாலும் தரைமட்டத்திற்குக் கீழே அமைக்கப் பெற்றிருக்கும். அங்கு உடல் நன்கு வியர்க்கும்படியாக இரு முனையிலும் பளுவோடு கூடிய மரக்கட்டைகளைத் தூக்குவதும், கர்லாக் கட்டை சுழற்றுவதுமே இவர்கள் மேற்கொள்ளும் பயிற்சியாகும். அடிக்கடி மற்போர்களுக்கு ஏற்பாடு செய்வர். ஒரு காலில் வைக்கோலை வளையமாகச் சுற்றிக் கொண்டு அதனை அகற்றும்படி அனைவருக்கும் சவால் விடுவர். ஹொஸ்பெட் அருகேயுள்ள செங்குத்தான ஜொவதராசிக் குன்றின் உச்சிக்கு முதுகில் ஒரு மூட்டை தானியத்தைச் சுமந்தபடி ஓடுவது போன்ற உடல் வலிமையை வெளிப்படுத்தும் போட்டிகளில் ஈடுபடுவர்.'' ஹொஸ்பெட்டில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக நடைபெறும் மற்போரினைக் காண நூற்றுக் கணக்கில் கூடுவர். என் முன்னிலையில் மற்போரில் ஈடுபட்ட அவர்கள் தங்கள் பின் தலையினை மழுங்க மழித்திருந்தனர்.

எதிரியின் கையில் குடுமி அகப்படாமல் இருக்க இதுபோலக் குடுமியை மழித்து விடுவதோடு மீசையையும் ஒட்ட வெட்டிக் கொள்கின்றனர். நான் அளவெடுத்த இரண்டு மற்போர் வீரர் களின் உடல் அளவுகள் ஆண்மை நலம் சான்ற அவர்களின் உடற்கட்டினைத் தெளிவுறுத்துவனவாம்.

	செ. மீ.	செ. மீ.
உயரம்	163.2	163
தோள் அளவு	41.8	42.8
மார்பளவு	84	82
புயங்கள் தொங்கிய நிலையில்	28	29
தொடையளவு	47	51

அனந்தப்பூர் மாவட்ட விவரக் குறிப்பில் தெலுங்குப் புத் தாண்டு நாளே பன்றி வேட்டைக்குரிய திருநாளாகவும், அன்று போயர்கள் வேட்டை ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளைத் தவிர முதியவர், ஊன முற்றோர் உள்ளிட்ட அனைவரும் வேட்டையில் சேர்ந்து கொள் கின்றனர். புத்தாண்டு நாளில் நல்ல வேட்டை கிட்டுமாயின் அது பின்வரும் நன்மையின் முன்னறிவிப்பாகக் கொள்ளப் படுவதால் வேட்டையில் பரபரப்பும் மிக்க கருத்தும் இருக்கக் காணலாம். சில சமயங்களில் பரபரபபின் வேகங் காரண மாகப் பகை கொண்ட இரு ஊர்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் படைக்கலங்களை விலங்குகளை வீழ்த்தப் பயன்படுத்தாமல் ஒருவர் மேல் ஒருவர் செலுத்திக் கொள்ளும் அளவிற்குச் சென்று விடுவதும் உண்டு. ''போயர்களும் கரடிகளும்'' என்ற கட்டுரை ஒன்றில்* ஓர் ஐரோப்பிய வேட்டைக்காரன் கரடி வேட்டை பற்றிய நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு தந்துள்ளார். ''நிலா வெளிச்சமுள்ள இரவில் நாங்கள் அந்தக் குன்றுகளில ஏதாவது ஒன்றின் உச்சியில படுத்துறங்குவோம். சுற்றிலும் உள்ள ஒவ் வொரு குன்றின் உச்சியிலிருந்தும் போயன் ஒருவன் இரவு வேட்டையை முடித்துக் கொண்டு அதிகாலையில் தம் இருப்பி டம் திரும்பும் கரடிகளைக் கண்காணித்தபடி இருப்பான்.

*சென்னை மெயில் இதழ் 1902. (Madras Mail, 1902.)

கரடியை ஒருவன் கண்ட அளவில் பரபரப்பாக அதற்கான அடை யாளங்களைத் தெரிவிப்பான். உடனே நாங்கள் அங்கு விரைந்து கரடி, அதன் இருப்பிடமான குகையை அடைய முடியாதபடி மலைப் பாறைகளிடையே வழி மறிப்போம். அக்குன்றுப் பகுதி கள் கரடுமுரடான பரப்போடு எங்கும், "கொஞ்சம் பொறு" (Wait a bit) முள் நிறைந்திருக்கப் பெற்றிருப்பினும், அதில் செயல்படப் போயர்கள் கொஞ்சமும் தயங்கிப் பின்வாங்குவ தில்லை. என்னைப் பாறைக் குவியல்களுக்கு வெளிப்புறத்தி லேயே காத்திருக்கும்படி கூறிவிட்டுப், போயர்கள தங்கள் தலை முண்டாசினைப் பிரித்துக் கரடியின் தாக்குதலுக்குப் பாது காப்பாக இட முன்கையில் சுற்றிக்கொண்டு முரட்டுத் தீப் பந்தத்தைப் பிடித்தவர்களாக, இரும்புமுனை சொருகிய ஈட்டி யோடு மையிருட்டாயிருக்கும் எதிரியின் கோட்டையான குகை யில் சத்தமின்றி நுழைந்து, நான் சுடுவதற்காகக் கரடியை அங் கிருந்து வெளியேற்ற முனைவர். இந்த வேடிக்கை விளையாட் டில் எனக்குத் தரப்படும் சிறிது பங்கிற்காக நான் வெட்க மடைந்தவனாக அவர்களோடு கூடக் குகைக்குள் வர அனுமதி கேட்பதுண்டு. ஆனால், என்னுடைய இந்த விருப்பத்தைப் பணி வோடு, ஆனால் உறுதியாக அவர்கள் மறுத்துவிடுவர். துப்பாக்கி யினைக் குறிபார்த்துக் சுடக் குகையின் இருட்டில் வாய்ப்பு, இல்லையென்று கூறுவர். மேலும் குகைக்குள் துப்பாக்கி வெடிக்கும்போது அதிலிருந்து வரும் புகை வெளியேற வழியில்லாமல் காற்றோட்டமில்லாத குகையிலேயே நெடுநேரம் தங்கியிருக்குமாகையால் கரடி தப்பிப் போய்விட வாய்ப்பாக அது அமைந்துவிடும். இவற்றோடுகூட மிக நெருக்கத்தில் சுடும் பொழுது துப்பாக்கிக் குண்டுகள் மொட்டைப் பாறையில் பட்டு எகிறித் தெறிக்குமாதலால் விபத்துகளும் ஏற்படலாம். இக் காரணங்களால் என்னை உடன் அழைத்துச் செல்ல மறுப்பர். எனவே, ஆர்பாட்டமாகச் சத்தமிட்டபடி துரத்தும் போயர்கள் பின்வரக், குகையிலிருந்து வெளிப்படும் கரடிக்காக நான் மட்டுமே வெளியே காத்திருக்க வேண்டியதாகின்றது." அதே ஆசிரியர் தந்திரமிக்க ஒரு கரடியைப் பற்றி எழுதும் போது, "தன்னைத் துரத்திவரும் போயர்களிடமிருந்து தப்ப முடியாத அது கடைசியாக நான்கு ஆள் ஆழமுள்ள இருண்ட குகையில்

பாறைக்கு அடியில் சென்று பதுங்கிக் கொண்டது. இந்த இடத்தினை ஈட்டிகளோ, தீப்பந்தங்களோ நெருங்கமுடியாது. தோல்வியை ஒப்புக் கொள்ள விரும்பாத மூன்று போயர்கள் அதனைத் தொடர்ந்து அக்குழியில் இறங்கினர். அது ஒடுங்கியபடி பதுங்கியிருக்கும் பாறைக்கடியிலிருந்து அதனை வெளியே கிளப்ப, ஒருவன் தன் சிறிய மலிவான நிக்கல் முலாம் பூசப்பட்ட கைத்துப்பாக்கியால் சுட, அதன் முகத்தில் இருமுறை குண்டுபட்டதும் அக்கரடி தான் பதுங்கியிருக்குமிடம் பாதுகாப்பற்றதென முடிவு செய்து அந்த மூவரில் ஒருவனைப் பாறையோடு சேர்த்து மோதியபடி அங்கிருந்து வெளிப்பட்டது. மோதிய வேகத்தில் ஒரு தோளின் எலும்பு முறிந்துவிட, அது அக்குழியைவிட்டு வெளி வந்துவிட மற்ற போயர்கள் அதனை நான் காத்திருந்த குகையின் வாயிலுக்குத் துரத்திக் கொண்டுவந்து சேர்த்துவிட்டனர்.'' எனக் கூறியுள்ளார்.

திரு மெயின்வாரிங் பின்வருமாறு எழுதுகின்றார்:-''போயர்களுக்கு வேட்டையில் நீங்கா ஆர்வம் உண்டு. மறிமான்களைக் கவர அவர்கள் எருதுகளைப் பயன்படுத்துகின்றனர். பின்னர் அவற்றை மேட்லாக் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துகின்றனர். சிலர் பழகிய ஆண் மறிமானினை வளர்க்கின்றனர். அதன் கொம்புகளைச் சுற்றி வலையினைக் கட்டி மறிமான் கூட்டம் திரியும் பகுதிகளில் திரியும்படி விரட்டுவர். மனிதர்களோடு பழகிய இது, மான் கூட்டத்தை நெருங்கியவுடன், அக்கூட்டத்தின் தலைமையை மேற்கொண்டுள்ள ஆண் மறிமான் இதனை நெருங்கிவரும். பழகிய மான், கூட்டத்தின் தலைவனை மதிக்கும் பழக்கத்தை இளமையிலேயே இயல்பாகக் கற்றறியாத காரணத்தால் ஓடாது எதிர் நிற்பதால் அவற்றிடையே சண்டை மூளும். சில தாக்குதல்களுக்குப் பிறகு பழகிய மானின் கொம்புகளில் உள்ள வலையில் அது அகப்பட்டுச் செயலிழந்துவிட வேட்டைக்காரர்கள் விரைந்து போய் காட்டுமானை ஒரு கத்தியால் குத்திக் கொல்வர்.''

போயர்களும் பேடர்களும் தேனெடுத்தலையும் ஒரு தொழிலாக மேற்கொள்கின்றனர். உயரத் துருத்தியபடியிருக்கும் பாறையிடுக்குகளில் இருக்கும் தேன்கூடுகளை மேலிருந்தோ

கீழிருந்தோ அடைந்து மிகக் கருத்தோடு செய்ய வேண்டியதான செயலாகும் இது.

நான் பார்த்த பேடர்கள் அது மழைக்காலமாக இருந்ததால் கம்பளியைப் போர்த்தியபடி இருந்தனர். தென்மேற்குப் பருவ மழையின் வேக வீச்சிலிருந்து தப்ப அக்கம்பளியைத் தலையோடு சேர்த்தும் போட்டுக் கொள்கிறார்கள். அதே கம்பளி நகரத்திற்குப் புல் சுமையினைக் கட்டிக் கொண்டு வரவும் பயன்படுத்தப் படுகிறது. ஆங்கிலேயர்களின் நாட்டுப் புறப் பாவாடை போலச் சிலர் மார்பிலிருந்து தொங்கும் ஒரு வகையான உடையினை அணிகின்றனர், கருவேல முள்ளினைக் களைய உதவும்படியாக, வயலில் வேலை செய்பவர்கள் இடுப்பு அரைநாணில் உருக்காலான முள் வாங்கியைக் கட்டித் தொங்க விட்டபடியிருப்பர். கருவேலங் கொம்புகள் விளை நிலங்களில் வேலியாக அடைக்கப் படுகின்றன. ஆண்கள் அணிந்து கொள்ளும் தாயத்து முதலியவற்றின் வகைகளுக்குக் கீழ்க்கண்டவை மாதிரிகளாம்:—

வலப் புயத்தில் கயிற்றில் கோத்துக் கட்டப்பட்ட தாயத்து பிசாசுகளை அண்ட விடாமல் இருக்க உதவும் பொருட்டு. அதே காரணத்திற்காகக் கணுக்காலிலும் தாயத்தினைக் கட்டியிருப்பர்.

துணியில் காலணாவை முடிந்து நேர்ந்து கொண்டதற்காகப் புயத்தில் கட்டியிருப்பர்.

இளைஞனாக இருந்தபோது தோள்பட்டை எலும்பு விலகப்பெற்றவன் அனுமனின் உருவத்தைத் தோள்பட்டைச் சதையில் வலிதெரியாமல் இருக்கப் பச்சைக் குத்திக் கொண்டிருப்பான்.

ஐதராபாத்திலுள்ள கூளிகம்மனுக்கு நேர்ந்துகொண்டதற்காகக் கழுத்தில் பவளம், தந்தம் ஆகியவற்றின் பாசி மணி மாலை அணிந்திருப்பான்.

விட்டுணுவின் பாதங்கள் பொறிக்கப்பட்ட தங்கத் தகடு கோக்கப்பட்ட தந்தப் பாசி மாலையை ஏதாவதொரு சாதுவிடமிருந்து பெற்று அதிர்ஷ்டத்திற்காகக் கழுத்தில் கட்டியிருப்பான்.

மையாச பிரிவைச் சார்ந்த பேடர் பெண்கள் காலில் விஞ்சி அணிய அனுமதிக்கப் படுவதில்லை எனக் கூறப்படுகிறது.* ஊரார் மையாச பிரிவுகளைச் சேர்ந்த பெணகள் நெற்றியிலும், தோள், மணிக்கட்டு ஆகியவற்றிலும் தேர், தேள், பூரான், சீதையின் கொண்டை, அனுமான், கிளி ஆகிய உருவங்களைப் பெரிய அளவில் பச்சைக்குத்திக் கொள்கின்றனர். ஆண்கள் அனுமார் கோவில் பூசாரியிடம் சென்று தங்கள் தோள்களில் சங்கு சக்கர முத்திரை பதித்துக் கொள்கின்றனர். இது வைகுந்தம் செல்லத் துணை செய்யுமென அவர்கள் நம்புகின்றனர். மையாச பிரிவைச் சேர்ந்த ஒருவன் இதுபோல முத்திரை பதித்துக் கொள்ளும்போது பேடர் பெண்கள் தயாரிக்கும் கூம்பு வடிவிலான கொபால எனப்படும் கூடை, மூங்கில் கழி, விசிறி, முறம் ஆகியவற்றை வாங்க வேண்டும். இவ்வாறு முத்திரையிடப்படும் பேடர் பெண்கள் பசவிகள் எனப்படும் பரத்தையர்களாகக் கருதப்படுவதோடு 'கண்டு பசவியோரு' எனப்படும் ஆண் தெய்வங்களுக்காக நேர்ந்து விடப்படுகின்றனர். குடும்பத்தில் ஆண் குழந்தைகள் இல்லாதிருந்தால் இவ்வாறு நேர்ந்து கொள்வர், அல்லது ஓர் பெண் நோயில் வீழ்ந்தால் நோய் நீங்கி அவள் எழுந்திருப்பின் பசவியாக்கப்படுவாள் என நேர்ந்து கொள்வதும் உண்டு. அவ்வாறு பசவியராகும் பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தால் அதனை அவளுடைய தந்தையின் குடும்பத்தோடு கொண்டு போய் விட்டுவிடுவாள். ஆண் தெய்வங்களுக்குப் பதிலாகப் பெண் தெய்வங்களைக் குல தெய்வங்களாகக் கொண்டுள்ள பேடர் குடும்பப் பெண்கள் இதுபோல முத்திரை பொறித்துக் கொள்ளாமல் பட்டணத்து எல்லம்மா எனப்படும் குருபர் பெண்ணிடம் சென்று விட்டுணுப் பாதங்கள் பொறிக்கப் பட்ட தங்கத் தகடு கோத்த எலும்புப் பாசி மாலையினைப் பெற்றுக் கழுத்தில் அணிந்து கொள்வாள்.* குலதெய்வம் பெண் தெய்வமாக இருக்கும் பேடர் பிரிவினைச் சேர்ந்த சிறுமிகளைப் பசவிகளாக நேர்ந்து விடும்போது பெண்களுக்குக் கட்டுவது போலவே கழுத்தில் பாசிமணி மாலை கட்டுவர். ஆனால் வெள்ளைப் பாசிகளுக்குப் பதிலாகக் கறுப்புப் பாசிகளைப் பயன்

---

* மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, 1901. (Mysore Census Report, 1901.)

படுத்துவர். அவர்கள் ஹெண்ணு பசவிகள் என்றழைக்கப்படுவர். இவ்வாறு பெண் தெய்வங்களுக்கு நேர்ந்து விடும் சடங்கில் மாதிகர் தெய்வமான மாதங்கி இருக்க வேண்டியது இன்றியமையாதது. அப்போது மாதிகன் ஒருவன் ஆட்டுக்கடா பலிபெறும் மாதிகர் தெய்வத்திற்குப் பதிலாக நொச்சி இலைக் கொத்துக்களைக் கொண்ட ஒரு முனையில் குவளை பொருத்திய வளைந்த இரும்புக் கம்பியினைக் கொண்டு வருவான். அந்த இரும்புக் கம்பியினை வீட்டு வாயிலின் முன் நட்டு, அதில் பொருத்தப் பட்டுள்ள குவளையில் எண்ணெய் வார்த்துத் திரியிட்டு விளக்கெனக் கருதும்படி ஏற்றி வைப்பர். அங்குப் பலவகை உணவுகள் படைக்கப்படும். அவற்றைக் கூடியுள்ள பேடர்கள் உண்பர். சில சமயங்களில் பேடர் பிரிவுப் பெண்கள் முகமதியருக்கு வைப்பாட்டியாக இருப்பதும் உண்டு. மொகரம் விழாவின்போது சில பேடர்கள் முகமதியர்களைப் போலவே மார்பின் குறுக்கே நூலணிந்து கொள்வர். குளித்த பிறகே அவர்கள் தங்கள் வீடுகளுக்குள் நுழைவர்.

1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, "பேடர்களின் சிறப்பான தெய்வம் அவர்களால் திருமலை தேவரு என்ற பெயரில் வணங்கப்படும் திருப்பதி வெங்கடரமண சாமியாவார். மாரியம்மனுக்கும் இவர்கள் படையல்களும் பலியும் தருகின்றனர். ஊரார் பிரிவு போயர்கள் பிராமணர்களையும் ஜங்கமர்களையும் குருக்களாக அமர்த்திக் கொள்கின்றனர்." மேலே கூறப்பட்ட தெய்வங்களோடு பேடர்கள் கன்னிமிராய், கனகராயன், உலிகம்மா, பாலையா, பொலெரம்மா முதலிய வேறு பல தெய்வங்களையும் வழிபடுகின்றனர். அத்தெய்வங்களுக்குப் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் படைப்பதோடு, மறி, ஆடு முதலியவற்றையும் பலி கொடுக்கின்றனர். சாண்டூர் திவான் என்னிடம் அண்மையில் மையாச பேடர்கள் சிலர் தங்கள் சமய நம்பிக்கையை மாற்றிக் கொண்டு சைவ நெறி சார்ந்து மகாதேவரை வழிபடத் தொடங்கியுள்ளனர் எனக் கூறினார். இவர்கள் ஜங்கமக்களால் இவ்வாறு மதம் மாற்றப்பட்டாலும் இவர்கள் புதிய நெறிக்கு முழுவதுமாக இன்னமும் மாறிவிடவில்லை. பெல்லாரியில் குடிலிசி வட்டத்தில் அமைந்துள்ள உச்சனி இலிங்காயத மடத்தைச்

சேர்ந்த தலைவரே இவர்களுக்குக் குருவாக இருக்கின்றார். இவர்கள் இலிங்கம் அணிவதில்லை. 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் போயர்களின் குலதெய்வம் கன்யா தேவுடு எனக் கூறப்பட்டுள்ளது.

போயர்களின் சமயம் பற்றித் திரு மெயின்வாரிங் பின் வருமாறு எழுதுகிறார்:- "போயர்கள் சிவன், விட்டுணு ஆகிய இருவரையும் வழிபடுகின்றனர். மேலும் வேறு பல தெய்வங் கள் பல பகுதிகளில் வழிபடப்படுகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் அவர்கள் திருப்பதி சாமியை வழிபடுகின்றனர். கர்நூலில் கன்யா தேவுடுவை வழிபடுகின்றனர். கடப்பை, அனந்தப்பூர் பகுதிகளில் செண்டுருகாரு வழிபாடு சிறப்புற் றுள்ளது. அனந்தப்பூரில் ஏழு கன்னியரின் ஆவியாகக் கருதப் படும் அக்கம்மாவின் வழிபாடும் நடைபெறுகின்றது. அனந்தப் பூர் மாவட்டத்தில் உருவகொண்டாவில் ஒரு பெரிய பாறையின் மீதுள்ள அக்கம்மா கோவிலில் ஏழு கன்னியரைக் குறிக்கும் ஏழு சிறு தங்கக் கலங்கள் வைத்துத் தேங்காய், அரிசி, துவரம் பருப்பு முதலியன படைத்துப் போயர்கள் வழிபடுகின்றனர். நாகலாஸ்துதி எனப்படும் பாம்புகளை வழிபடும் திருநாளில் பெண்கள் விரதமிருந்து பாம்புப் புற்றில் பால் வார்த்து நாகல சாமியை வழிபடுகின்றனர். இதனால் இருவகையில் மன நிறைவு கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. பாம்புப்புற்று நாகங்களின் உறைவிடமாக விளங்குவதோடு கூட, வால்மீகி புதையுண்ட புற்றாகவும் கருதப்படுகிறது. எனவே இருவகை யில் வழிபாடு நடத்தியதாகப் புற்றுக்குப் பால்வார்க்கும் வழி பாடு அமைந்து விடுகின்றது. ஆண்டுக்கொரு முறை இறந்து போன முன்னோர்களின் நினைவாக வழிபாடு நடத்துகின்ற னர். இது பொதுவாக நவம்பர் இறுதியில் நடைபெறும். போயர்கள் தங்கள் சமயச் சடங்குகளை நடத்தப் பிராமணர் களை அமர்த்திக் கொள்வதில்லை. மணநாளன்று தாலி கட்டு வதற்குரிய நல்ல நேரத்தைக் கேட்டு அறிய மட்டும் பிராமணர் களை நாடுகின்றனர். போயர்களுக்குப் பிராமணர்களின் உதவி தேவையில்லையெனினும் பிராமணர்கள் போயர் உதவியை நாடும் சமயங்கள் உள்ளன. மண நிகழ்ச்சிக்கான நல்ல பார்வை யினை உண்டாக்க 'வொான்டிகடு' எனப்படும் சடங்கை நிகழ்த்த

விரும்பும் பிராமணன் போயன் ஒருவனின் உதவியை நாடியே ஆக வேண்டும். 'வொண்டிகடு' எனச் சொல்லப்படுபவன் பசியால் வருந்தி உயிர்விட்ட அனாதைப் போயனாவான் என்பர். போயர் சாதியினைச்சேர்ந்த ஒருவனை வயிறார உண்பிப்பதன் வாயிலாகப் பசியால் வருந்தி உயிர் துறந்த போயன் ஒருவனுக்குத் தங்கள் முன்னோர் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் தேடி அப்பாவத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையாலேயே 'வொண்டிகடு' சடங்கைப் பிராமணர்களும், சூத்திரர்களும் நடத்துகின்றனர். நல்ல நாள் பார்த்துச் சடங்கு நடைபெறவுள்ள அன்று காலையில் ஒரு போயனைத் தங்கள் வீட்டுக்குச் சடங்கு நடத்துவோர் அழைப்பர். அவனுக்குத் தேய்த்துக் கொள்ள நல்லெண்ணெய் தரப்படும். அவன் அதனைத் தேய்த்துக் கொண்டு, கையில் எலுமிச்சம்பழம் சொருகப்பட்ட ஒரு குத்து வாளினை ஏந்தியபடி வருவான். அவனை மாட்டுக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று வயிறார உணவு படைப்பர். உண்டு முடித்தவுடன் அவன் அக்கொட்டகையை விட்டுச் சத்தமின்றி வெளிவந்து, பின் உரக்கக் குரலெழுப்பியவனாகத் தனது குத்துவாளை ஆட்டியபடி அந்த வீட்டைவிட்டு ஓட்டமெடுப்பான். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவன் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது. அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் அவன் காலடி பட்ட இடங்களிலெல்லாம் தண்ணீரைத் தெளித்தபடி அவனைக் கொஞ்ச தூரம் பின்னால் துரத்திச் செல்வர். இவ்வாறு 'வொண்டிகடு' சடங்கு நடத்துவதால் அடுத்து நடைபெற இருக்கும் மணச் சடங்கு போன்றவற்றில் கண்ணேறு படாது தடுக்கப்படுகிறது.

பெல்லாரி மாவட்டத்திலுள்ள சில போயர்கள் பற்றி நான் திரட்டிய செய்திகள் வருமாறு:-* ''சில போயர்கள் ஊர்த்தேவதைகளுக்குப் பூதப் பலி எனப்படும் சடங்கினை நடத்தி வைப்பதற்காக இனாம் நிலங்களை அனுபவித்து வருகின்றனர். ஊர்த் தேவதைக்கான விருந்தின் இறுதி நாளன்று ஊருக்கு வளம் சேர்ப்பதற்காக இநதப் பூதப் பலிச் சடங்கு நடத்தப்படுகிறது.

* சென்னை மெயில் இதழ், 1905. (Madras Mail, 1905.)

போயர் சாதிப் பூசாரி நள்ளிரவில் தன் முகத்தை மழித்துக் கொண்டு, ஒரு மறியையோ எருமையையோ பலியிட்டு, அதன் இரத்தத்தைச் சோற்றில் கலந்து பிசைந்து, உருண்டை களாக்கி ஊர் முழுதும் இறைத்து வருவான். இதற்காக அவன் ஊரைச் சுற்றிவரும்போது அவன் முகத்தில் விழிப்பது அப சகுனமாகக் கருதப்படுவதால் அனைவரும் தங்கள் வீட்டினுள் கதவைத் தாளிட்டபடி இருப்பர். அவன் அதிகாலையில் தான் புறப்பட்ட ஊர்த்தேவதையின் கோயிலுக்கு மீண்டும் திரும்பி வந்து குளித்தபின் ஊராரிடமிருந்து புதுத் துணிகளைப் பெற்றுக் கொள்வான்.''

ஹொஸ்பெட்டில், பேடர்கள் தங்கள் சாதியாரிடம் வசூலித்த தொகையைக் கொண்டு கட்டிய, சாவடிகள் என வழங்கப்படும் இரண்டு கட்டிடங்கள் உள்ளன. அதனை அவர்கள் சாதிக் கூட்டங்கள் கூட்டப்படுவதற்கான இடமாகப் பயன்படுத்து கின்றனர். சாண்டூரில் உள்ள ஊரார் பிரிவைச் சேர்ந்த பேடர் கள் தங்கள் வழக்குகளைத் தங்கள் குருவான ஸ்ரீவைணவப் பிராமணனிடம் கூறித் தீர்த்துக் கொள்கின்றனர். ஒரு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவன் குற்றவாளி என முடிவு செய்யப் படின் அவனுக்குத் தண்டம் விதிப்பதோடு, அவன் மீது தீர்த்தம் தெளித்து அவனை அவர் தூய்மையானவனாகவும் ஆக்குவார். குரு இல்லாத சமயங்களில் சாதியைச் சேர்ந்த 'கட்டையண்டி வாடு' என்ற தலைமைக்காரன் பேடர் சாதியைச் சேர்ந்த அல்லது வேறு சாதிக்காரனாகிய தாசரி ஒருவனை அனுப்பி வைப்பான். இத்தாசரி குருவின் கீழ்ப்பணிபுரிபவன். சாதியாரை யும், சமயியரையும் அழைப்பது இவன் வேலை. குரு இல்லாத போது இந்தச் சமயியரே சாதிக் கூட்டங்களை நடத்தி வைப்பர். சமயியர் அனுமார் கோயில் முதலிய கோயில்களில் பூசாரி களாகப் பணிபுரிபவர்கள். சக்ராங்கிதம் எனப்படும் சங்கு, சக்கரம் பொறிக்கும் சடங்கை நடத்தி வைப்பவர்களும் இவர் களே. மையாச பேடர்களுக்குக் குருக்கள் யாருமில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பிரிவைச் சேர்ந்த பூசாரிகளே சில குடும்பங் களின் பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றனர். இவர்கள் சாதியில் செய்தியினைச் சென்று அறிவிப்பவன் தளவாய் எனப் படுகின்றான்.

திரு மெயின்வாரிங் போயர்களிடையே காணப்படுவதான புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பெயர்களாகத் தொகுத்துள்ளனவற்றுள் மாதிரிக்காகச் சில கீழே தரப்பட்டுள்ளன:-

முக்காரர் (மூக்குத்தி)
மஜ்ஜிகர் (மோர்)
குக்கலர் (நாய்)
பூல (பூ)
பன்றி
சில்லகல (கிளி)
ஹஸ்தம் (கை)
வெல்கமீதி (வெள்ளெலி)
மீசாலர் (மீசை)
நெமிலி (மயில்)
பேகுல (குடல்)
பீஜம் (விதை)
உத்தரேணி (நாயுருவி)
பஞ்சலிங்காளர் (ஐந்து லிங்கத்தர்)
குடிசை
தோட்டம்
இலங்கா (தீவு)
பில்பத்ரி (வில்வம்)
கோடிகண்டல (கோழிக்கண்)
காடிதிகண்டல (கழுதைக்கண்)
ஜோதி
நாமத்தார் (நாமம் போடுவோர்)
நாகெல்லு (கலப்பை)
உள்ளிக் கட்டை (வெங்காயம்)
ஜிங்கலா (சிறுமான்)
தண்டு (படை)
கட்டேறு (கட்டைகள்)
மேகலர் (ஆடு)
புச்சகயல (குமட்டி)
காந்தப் பொடி (சந்தனத் தூள்)
பசுல (கால்நடை)
சிந்தகாயல (புளியங்காய்)
ஆவுலர் (பசு)
உடுமல (பள்ளி)
புலகம் (சோறும் பருப்பும்)
பொக்குல (கட்டைக் கரி)
மிடதல (வெட்டுக்கிளி)
பொத்த (வயிறு)
உத்ல (உறி)
ரொட்டால (ரொட்டி)
சிம்பிரி (பழந்துணி)
கோட்டால (கோட்டை)
சாப்ப (பாய்)
குண்டல (குட்டை)
தப்பட்டை (முழவம்)
பெல்லபு (வெல்லம்)
சீம்ல (எறும்பு)
ஜென்நீறு (அரளி)
பிச்சிக (சிட்டுக்குருவி)
உளுவல (கொள்ளு)
கெட்டம் (தாடி)
எட்டுல (காளைகள்)
செறுக்கு (கரும்பு)
பசுபு (மஞ்சள்)
அக்கி (நெருப்பு)
மிரபக்காய (மிளகாய்)

நக்கர் (நரி)
செவ்வுலர் (காது)
ஜெரிபோது (நூற்றுக்கால் பூச்சி)
ஜன்ஜாபு (பூணூல்)
சங்கதி (ராகி அல்லது சோளப் புட்டு)
குவல்ல (புறா)

மேற்கூறப்பட்ட குலங்களுள் பல போயருக்கேயன்றி வேறு பல வகுப்பாருக்கும் உரிய குலப் பெயர்களாக உள்ளன என்பதனைப் பின்வரும் பட்டியல் காட்டும்:-

ஆவுல (பசு)	- குறவர்
பொக்குல (கட்டைக்கரி)	- தேவாங்கர்.
செறுக்கு (கரும்பு)	- ஜோகி, ஒட்டர்.
செவ்வுல (காது)	- கோல்லர்.
சில்லகல (கிளி)	- காபு, ஏனாதியர்.
சீம்ல (எறும்பு)	- தாசகலர்.
சிந்தக்காயல (புளியங்காய்)	- தேவாங்கர்.
தண்டு (படை)	- காபு.
எட்டுல (காளைகள்)	- காபு.
காந்தப் பொடி (சந்தனத் தூள்)	- பலிசர் சாதியின் ஓர் உட்பிரிவு.
கெட்டம் (தாடி)	- பத்ம சாலே.
குடிசை	- காபு
குவல்ல (புறா)	- முத்ராசர்.
ஜிங்களா (சிறுமான்)	- பத்மசாலே.
குக்குல (நாய்)	- ஒருகுண்ட காபு.
இலங்கா (தீவு)	- கம்மர்.
மேபலா (ஆடு)	- செஞ்சுகள், கோல்லர், கம்மர், காபு, தொகட்டர், ஏனாதி.
மிடதல (வெட்டுக்கிளி)	- மாதிகர்.
நக்கல (நரி)	- துடலர், கோல்லர், முத்ராசர்.
நெமிலி (மயில்)	- பலிசர்.
பச்சிக (சிட்டுக்குருவி)	- தேவாங்கர்.
பன்றி (-)	- அசிலி, கம்மல்லர்.
பசுல (கால்நடை)	- மாதிகர், மாலர்.

புச்சகாய (சுரைக்காய்)	— கோமட்டி, வீரமுஷ்டி.
பூல (பூ)	— பத்மசாலே, எருகலர்.
தோட்ட (தோட்டம்)	— செஞ்சுகள், மீலர்,
	— முத்ராசர்.பொந்துக்சாவரர்.
உடுமல (பள்ளி)	— காபு, தோட்டியன், ஏனாதி.
உள்ளிகட்ட (வெங்காயம்)	— குறவர்.
உளுவல (கொள்ளு)	— ஜோகி.
உட்ல (உறி)	— பத்ம சாலே.

ஹொஸ்பெட்டில் மையாசபேடர்களின் மண ஏற்பாடுகளை மணமக்களின் பெற்றோரும், சேரி' எனப்படும் தெருவின் தலைவனுமே செய்கின்றனர். மண நாளன்று மணமக்கள் உயர்ந்த மேடையில் அமர்கின்றனர். மணமான ஐந்து ஆண்கள் மஞ்சள் நீரில் தோய்ந்த அரிசியை மணமகனின் பாதம், முழங் கால், தோள், தலை ஆகியவற்றில் வைக்கின்றனர். இவ்வாறு மும்முறை செய்யப்படுகிறது. இதன்பின் மணமான ஐந்து பெண்கள் மணமகளுக்கு இதே போலச் சடங்கு செய்கின்றனர். மணமகன் தாலியைக் கையிலெடுத்துக் கூடியுள்ள பேடர்களின் அனுமதி பெற்று அதனை மணமகள் கழுத்தில கட்டுகின்றான். சிலவிடங்களில் தாலியைப் பிராமணப் புரோகிதர் மணமகனுக் குப் பதிலாக மணமகள் கழுத்தில் அணிவிப்பான். தாலி கட்டுமுன் கூடியுள்ள அனைவரும் ஒருமுகமாகத் தாலிகட்டத் தங்கள் அனுமதியை வழங்கவேண்டும். ஊரார் பிரிவு பேடர் களின் திருமணம் பெரும்பாலும் மணமகள் இல்லத்திலேயே நடைபெறும். அங்கு மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் மணநாளுக்கு முன்தினம் வந்து சேர்வர். அப்போது 'துப்பத் தூட்ட' என்ற நெய் அன்ன விருந்து நடைபெறும். அதற்கு வேண்டிய அரிசி, தேங்காய், வெற்றிலை பாக்கு ஆகியவற்றை ஐந்து இரவிக்கைகளோடு மணமகனின் பெற்றோர் தருதல் வேண் டும். விருந்து முடிந்தபின் மணப்பந்தலில் கூடியுள்ள அனை வருக்கும் வரிசையறிந்து வெற்றிலை வழங்கப்படும். முதலில் வெற்றிலை பெற உரியவர்கள் தெய்வமும் குருவுமேயாவர் மறுநாள் காலை மஞ்சளும் சுண்ணாம்பும் பூசப்பட்ட நான்கு பெரிய பானைகள் நான்கு மூலைகளில் வைக்கப்பட்டுச் சதுர மான இடம் அமைத்து கொள்ளப்படும். இது 'ஈரணி'ச்சதுரம்

என்று வழங்கப்படும். அப்பானைகளை வளைத்து ஒன்பது சுற்றுகள் நூல் சுற்றப்படும். அவ்வாறு சுற்றப்பட்ட நூலுக்கு நடுவே மணமகனும் இரண்டு சிறுமிகளும் அமர்வர். அவர்கள் மீது அரிசி தூவப்பட்டு எண்ணெயும் தலையில் வைக்கப்படும். புகூமத்தோரு எனப்படும் ஐந்து பெண்களால் அவர்களும் மணமகளும் குளிப்பாட்டப்படுவர். மணமகனும் அச்சிறுமியரில் ஒருத்தியும், ஊர்வலமாகக் கோயிலுக்கு ஐந்து பெண்கள் பின்தொடரத் தூக்கிச் செல்லப்படுவார்கள். அப்பெண்களில் ஒருத்தி ஐந்து வெற்றிலையும், விபூதி உருண்டையும் தாங்கிய பித்தளைக் குவளை ஒன்றினை எடுத்துச் செல்வாள். இன்னொருத்தி ஓர் உலோகப் பாத்திரத்தில் ஒரு பெண்ணின் உடைகளைத் தூக்கிச் செல்வாள். மற்ற மூன்று பெண்களும் மணமகனின் பெற்றோரும் அரிசியினைத் தூவுவர். தேங்காயும் வெற்றிலையும் அனுமார் கோயிலில் படைக்கப்படும். மணமகன் முகத்தில் விபூதியால் கோடிழுப்பர். அவர்கள் பிறகு மண வீட்டிற்குத் திரும்புவர். ஓர் அம்மி மணப்பந்தலில் வைக்கப்படும். பிராமணக் குருக்கள் மணமக்களை அதன் மீது நிற்கும்படி கூறுவார். பின்னர் அவர் தாலியை எடுத்து அதனை மணமகன் தொட்டபின் மணமகள் கழுத்தில் கட்டுவார். அன்று பிற்பகல் புது மணமக்கள் வீட்டினுள் அமர்ந்திருக்க, அவர்கள் அருகே சோறு, வெல்லம், தயிர் ஆகியன கலந்த ஒரு பெரிய பித்தளைப் பானையை முன்பு கூறிய பெண்கள் கொண்டு வந்து வைப்பர். அவர்கள் மணமக்களுககு அதில் சிறிது எடுத்துத் தந்தபின் அப்பால் செல்வர். பின் ஐந்து பேடர் ஆண்கள் தங்கள் தலையில் உள்ள உருமாலையினை எடுத்துவிட்டு அப்பாத்திரத்தை நெருங்கி அதனுள் தங்கள் இடக் கையினை இடுவர். வலக் கையால் அவர்கள் பாத்திரத்திலிருக்கும் சோற்றினை வாரி அவசர அவசரமாக விழுங்குவர். இச்சடங்கு 'பூம இடுது' அல்லது சிறப்பாக உண்ணல் எனப் பெயர் பெறும். சிலவிடங்களில் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து இச்சடங்கினை மேற்கொள்வர். கூடியுள்ள அனைவரும் அவர்கள் உண்பதைப் பார்ப்பர். அவ்வாறு உண்ணும்போது அவர்களில் ஒருவருக்குச் சோறு விக்கினாலும், அல்லது அவர்களுள் யாரேனும் சில மாதங்களுக்குள்ளாக நோய்வாய்ப்பட்டாலும், அது மணமகள்

தவறான நடத்தை உள்ளவள் என்பதனைக் காட்டுவதாகக் கருதப்படும். மறுநாள் மணமக்கள் பேடர்களும், பித்தளைப் பாத்திரத்தில் பெண்ணின் ஆடைகளும் பின் வரத் தெருக்களில் ஊர் வலமாகச் செல்வர். அப்போது சிவப்புப் பொடி வாரித் தூற்றப் படும். மூன்றாம் நாளும் அதனைத் தொடர்ந்து இரண்டு நாள்களும் புது மணமக்கள் குழவிமேல் அமர, அவர்கள் மீது அரிசி தூவப்பட்ட பின், தலையில் எண்ணெய் வைக்கப்படும். மணமகளின் தந்தை தன் மருமகனுக்கு ஒரு தலைப்பாகை, வெள்ளி மோதிரம், ஒரு வேட்டி ஆகியவற்றைப் பரிசாகத் தருவார். ஒருவன் உடன் பிறந்த சகோதரிகள் இருவரையுமே மணக்கலாம். ஆனால் முதலில் அவர்களுள் மூத்தவளை மணந்தாக வேண்டும்.

போயர்களின் மணச்சடங்குகளில் காணப்படும் சிலவேறு பாடுகளைத் திரு மெயின்வாரிங் பின்வருமாறு தந்துள்ளார்:- "ஒரு போயனுக்கு க் குடும்ப வாழ்க்கையில் நிலைத்து இருத்தப்பட வேண்டிய மகன் இருப்பானாயின், அவன அவனுக்குரிய மணமகளைத் தேடியலைவான். அவனுக்கு யாரை மணம் முடிப்பது என்பது வெகு காலத்திற்கு முன்பே முடிவு செய்யப்பட்டிருப்பினும் கூட இந்த மணமகள் தேடல் நடைமுறை வழக்கத்தை மேற்கொள்வது நிகழவே செய்யும். பையனின் தந்தை தனக்கு மருமகளாதற்குரியவள் வீட்டிற்கு வந்து சேர்ந்தபின், அவள் தந்தையிடம் தான் வந்துள்ளதின் நோக்கத்தை வெளியிடுவான். அவர்கள் தங்கள் குடும்பங்களைப் பற்றிப் பேசி முடித்தபின் மணஉறவு கொள்வது இரு குடும்பங்களுக்கும் நன்மைதரும் என்ற திருப்தி ஏற்படின் பெண்ணின் தந்தை மணமகளின் தந்தையை மீண்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் ஊர்ப் பெரியவர்களோடு வரும்படி கூறுவான். குறிப்பிட்ட நாளில் பிள்ளையின் தந்தை தன் ஊரைச் சேர்ந்த பெரியவர்களுடன் மணமகள் இல்லம் செல்வான். அவன் தன்னுடன் பதினாறு சேர் அரிசி, ஒரு சேர் பருப்பு, இரண்டு சேர் நெய், கொஞ்சம் வெற்றிலை, பாக்கு, ஒரு சேர் வறுத்த கடலை, இரண்டு வெல்ல உருண்டைகள், ஐந்து கட்டிப் பூண்டு, ஐந்து பேரிச்சை, ஐந்து மஞ்சள் துண்டு, ஓர் இரவிக்கை ஆகியனவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். மாலையில் இரு வீட்டையும சேர்நது பெரியவர்கள்

மணங்குறித்துப் பேசுவார். அவர்களிடையே உடன்பாடு ஏற்படின் பரிசப் பணத்தினை உடனே மணமகன் வீட்டார் செலுத்த வேண்டும். பொதுவாக அத்தொகை 202 ரூபாயாக இருக்கும். இத்தொகையில் முதலில் பதினாறு ரூபாய் எண்ணப்பட்டபின் எஞ்சிய தொகைக்குப் பாக்குகளை எண்ணி ரூபாய் 202 எனக் கணக்கிட்டுக் கொள்வர். அவ்வாறு எண்ணியது போக எஞ்சிய பாக்கும் மணமகன் வீட்டார் கொண்டு வந்த மற்றப்பொருள்களும் ஒரு பித்தளைத் தட்டில் வைக்கப்பட்டு மணமகளாக வர இருப்பவளிடம் தரப்படும். அவள் அவற்றிலிருந்து, கைநிறைய மூன்று முறை பாக்குகளையும், மூன்றுமுறை வெற்றிலையையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் வெற்றிலை எடுத்துக் கொள்ளும் பழக்கம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதன்பின் கூடியுள்ளவர்களுக்கு வெற்றிலை வழங்கப்படும். பின்னர், கொண்டுவரப்பட்ட அரிசி, பருப்பு முதலியவற்றோடு மேலும் இரண்டு ரூபாய் வைத்து அவற்றை மணமகள் பெற்றோரிடம் தருவர். இவ்வாறு தரப்படுவது மணமகன் தந்தை தனக்குப் போர்வை எடுத்துக் கொள்ளவும, மணவரைவுக்கு வருகை தந்தவர்களுக்கு விருந்தளிக்க உதவவுமே யாகும். இவ்விருந்து மறுநாள் காலையில் நடைபெறும். அதன்பின் இரு வீட்டாரும் பிரிந்து செல்வர். மணவரைவு நாளின் பின் இரு வாரங்களோ ஒரு மாதமோ சென்றபின் மணம் நடைபெறும்படியாக மணநாளினை முடிவு செய்வர். பிற சாதிரியாரின் திருமணச் சடங்குகளிலிருந்து இவர்கள் திருமணம் சிறிதே வேறுபடுகின்றது. தாலி கட்டுவதற்குரிய நல்ல நேரத்தை ஒரு புரோகிதரைக்கலந்து முடிவு செய்வர். இதனை முடிவு செய்த பின மணமகன் மணநாளன்று மணமகள் ஊருக்குச் செல்வான். சிலபோது மணமகள் மணமகன் ஊருக்குச் செல்வதும உண்டு. மணமகன் வருகை தரும் சமயம் மணமகள் வீட்டார் மணமகன் வீட்டாரின் உணவிற்குத் தேவையானவற்றை ஏந்தியபடி ஊர்வலமாகச் சென்று அவர்களை அழைத்து வந்து திருமண நாளைக்கு முந்தின இரவுக்கான உணவினை அளிப்பர். தாலிகட்ட உரிய நல்ல நேரம் நெருங்கும்போது மணமகள் வீட்டார் மணமகளை வீட்டில் விட்டுவிட்டு மணமகன் தங்கியுள்ள இடம் சென்று மணமகனைத் தங்கள் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துவருவர்.

வந்து சேர்ந்தவுடன் மணமகன் மணப்பந்தலின் அடியில் நிறுத்தப் படுவான். அங்குத் தென்வடலாக ஒரு திரை தொங்கவிடப் படும். மணமகன் அத்திரைக்குக் கிழக்குப் பக்கம் மேற்கு நோக்கி நிற்பான். மணமகள் வீட்டினுள்ளிருந்து அழைத்து வரப்பட்டுத் திரையின் மேற்குப் பக்கம் தன் வருங்காலக் கணவனின் எதிராக நிறுத்தப்படுவாள். மணமகள் கறுப்புக் கயிற்றில் சிறு தங்கத் தகடு இணைக்கப்பட்ட பொட்டினை எடுத்துக்கூடியுள்ள அனை வருக்கும் காட்டி அதனை மணமகள் கழுத்தில் கட்ட அவர்க ளுடைய அனுமதியை வேண்டுவான். எல்லோரும் தங்கள் உடன் பாட்டினைப் பாராட்டோடு தெரிவிப்பர். அவன் அதன்பின் மணமகள் கழுத்தில் தாலி கட்டுவான். மணமகள் கறுப்புக் கம் பளியிலிருந்து பிரிக்கப்பட்ட மஞ்சள் துண்டு இணைக்கப்பட்ட ஒரு நூலினை மணமகன் வல மணிக்கட்டில் கட்டுவாள். இதன் பின் மணமகன் கொஞ்சம் விதைகளை எடுத்து மணமகள் கை களில் தருவான். பின் அதனோடு கொஞ்சம் மிளகினையும் மண மகள் உள்ளங்கையில் வைத்து அவள் கையின்மீது தன் உள்ளங் கையை ஒரு கிண்ணம் போலக் குவித்து வைத்துக் கொள்வான். அதில் மணமகளின் தந்தை பாலினை வார்க்க, மணமகன் தன் வாழ்நாள் முழுவதும் அவளுக்கு நன்றியுடையவனாக நடந்து கொள்வதாக வாக்களிப்பான். இவ்வாறு உறுதி கூறியபின், அவன் தன் கையிலுள்ள பாலினை மணமகள் உள்ளங்கையில் வழிந்துபோக விடுவான். அவள் அதனைப் பெற்றுக் கீழே தரை யில் வைக்கப்பட்டுள்ள கலத்தில் வழியுமாறு விடுவாள். இவ் வாறு மூன்றுமுறை செய்யப்படும். ஒவ்வொரு முறையும் மண மகன் தன் வாக்குறுதியைக் கூறவேண்டும். அதன்பின மணமகள் இதேபோலத் தான் தன் கணவனுக்கு நன்றியுடையவளாக நடந்து கொள்வதாக மும்முறை உறுதி கூறும் சடங்கு நடை பெறும். பின்னர் இருவரும் தங்கள் கரங்களைப் பக்கத்தில் உள்ள பித்தளைத் தட்டில் வைக்கப்பட்டிருக்கும் அரிசியில் கொஞ்சம் எடுத்துத் துடைத்துக் கொள்வர். அவர்கள் அருகேயிருக்கும் ஒவ் வொரு தட்டிலும் ஐந்து சேர் அரிசி, ஐநது மஞ்சள் துண்டு, ஐந்து பூண்டுப்பறகள், ஒரு கட்டி வெல்லம், ஐந்து பாக்கு, ஐந்து பேரீச்சை ஆகியன இருத்தல் வேண்டும். தன் கை உலர்ந்தபின், மணமகன் தன் கரங்கள் கொள்ளும் மட்டும் அரிசியை வாரி

மணமகள் தலையில் தூவுவான். இவ்வாறு மும்முறை தூவிய பின் மணமகள் அதுபோலத் தன் தலைமீது தூவ வாய்ப்பளிப்பான். பிறகு இருவரும் தட்டுக்களையே எடுத்து ஒருவர் மற்றொருவர் தலையில் அதில் உள்ளவற்றைக் கவிழ்ப்பர். அப்போது அவர்களிடையே இருக்கும் திரை அகற்றப்படும். பின் மணமக்களை ஒருவர் அருகே ஒருவரை நிறுத்தி அவர்கள் ஆடைகளை இணைத்து முடிவர். இம்முடிச்சு, பிரம்ம முடிச்சு எனப்படும். மணமக்களை ஒன்று சேர்த்து முடிச்சிட்டவன் பிரம்மனே என்ற கோட்பாட்டின் விளக்கமாக அமைவது இது. அவர்கள் அதன்பின் பந்தலை விட்டு வெளிவந்து மார்பின் முன் கைகுவித்துக் குனிந்து சூரியனை வணங்குவர். பின்னர் பளிச்சென வண்ணங்கள் பூசப்பட்ட மண் பானைகளில் நீர் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும் பந்தலின் மூலைக்குத் திரும்பி வருவர். அந்தப் பானைகளில் ஒன்றில் அங்கிருக்கும் பெண்களில் ஒருத்தி ஒரு மூக்குத்தியை இடுவாள். அல்லது ஒருவன் ஒரு மோதிரத்தை இடுவான். மணமகளும் மணமகனும் தங்கள் வலக்கையினை அப்பானையில் விட்டு அதனைத் தேடுவர். அதனை எவர் முதலில் கண்டெடுக்கிறார்களோ அவர்கள் அதனை வெளியே எடுத்துக் காட்டி தாங்கள் அதனைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூறுவர். இந்த வேடிக்கை மூன்று முறை திரும்பத் திரும்ப நடத்தப்படும். அதன்பின் மணமக்கள் பந்தலின் நடுவே விரிக்கப்பட்டுள்ள கம்பளியில் உட்கார்ந்து மணவிழாவின் இறுதியில் நடைபெறுவதற்குரியதான சிறப்பான விருந்துக்காகக் காத்திருப்பர். இந்த விருந்துக்காக இரண்டு மறி ஆடுகள் வெட்டப்படும். கூடியிருக்கும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அவர்கள் விருப்பம் போல் உண்ணும்படியாகக் கறியும் சோறும் வழங்கப்படும். மறுநாள் காலை மணமக்கள் மணமகன் ஊருக்குச் செல்வர். மணவிழா மணமகன் ஊரில் நடந்திருப்பின் மணமகள் ஊருக்குச் செல்வர். அங்கு மூன்று நாள்கள் தங்கியபின் மீண்டும் மணம் நடைபெற்ற பந்தலுக்குத் திரும்புவர். முன்பு கூறிய ஐந்து தண்ணீர்ப் பானைகள் அருகே மணநிகழ்ச்சியின்போது கரையான் புற்றின் மண்ணைப் பரப்பி அதன் மீது கொஞ்சம் நெல், பருப்பு ஆகியவற்றின் விதைகளைத் தூவியிருப்பர். மணமக்கள் திரும்பும்போது இந்த

விதைகள் முளைத்திருக்கும். மணமக்கள் அவற்றை ஒன்றாகத் திரட்டி எடுத்துக் கொண்டவர்களாக ஊர்வலமாகப் புறப் பட்டுப் போய், ஊர்க்கிணற்றில் எறிவர். இத்தோடு திருமணச் சடங்குகள் முடிவுறுகின்றன. போயர்கள் தங்கள் திருமணத்தின் போது உரக்க வாத்திய இசைகள் வைத்துக் கொள்வர். அவர்கள் ஆடை பளிச்சென்ற வண்ணத்தோடு நிகழ்ச்சிக்கு ஏற்ப அமைந்திருக்கும். மணமகன் உயர்ந்த இரண்டு கோத் திரங்களில் ஏதாவதொன்றினைச் சேர்ந்தவனாய் இருப்பின், இடுப்புக கச்சையில் ஓர் குத்துவாளையோ, வாளையோ தொங்கவிட்டுக் கொள்வான். மணநிகழ்ச்சிகளின்போது அடிக் கடி பாடப்படும் பாடல் ஏழு கன்னியர்களைப் பற்றியது. மணநிகழ்ச்சியின்போது ஒரு பசவி வந்திருப்பது நல்ல சகுன மாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம் அவள் என்றும் சுமங்கலியாகவே இருப்பதுதான.

சிலவிடங்களில் அரசு அல்லது ஆலமரத்தின் கொம்பு ஒன்று வீட்டின் முன் மணத்திற்குரிய பால்கம்பமாக நடப்படு கிறது. அது காய்ந்து விடுமாயின் அதனைத் தூர எறிவர். வேர்விட்டுத் தழையுமானால், நீரூற்றி வளர்ப்பர். பேடர் மணங்களில் சிலவிடங்களில் ஓர் கலததில் பாலினை நிரப்பி அதனுள் ஊர்த்தலைவன் மூக்குததியை இடுவான். மண மக்கள் மும்முறை அதனைத் தேடுவர். பிறகு பாலினை ஒரு குழியில ஊற்றி மூடிவிடுவர். வட ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில், ''போயர் சாதி மணமகள் கழுத்தில் தங்கத்தாலி கட்டப்படுவதோடுகூடக் கையில் கறுப்புக் கயிற் றோடு கூடிய ஓர் இரும்பு வளையமும் அணிவிக்கப்படுவாள். மணமகனும் அதே போலக் கையில் வளையம் அணிந்து கொள் வான். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்தல் இல்லை. அவர்கள் கறுப்பு வளையல் அணியாது அதற்குப் பதிலாக வெள்ளி வளையல்களை அணிவர்,'' எனக் கூறப்பட்டுள்ளது.

திரு மெயின்வாரிங், ''மணமுறிவுக்கு அனுமதி தரப்படு கிறது. மணமுறிவுக்குக் கணவனல்லாத ஆண்களோடு தொடர்பு, அல்லது கொடுமைக்கு ஆளாதல் ஆகியன காரணங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அத்தகைய மணமுறிவு வழக்குகள்

அவையோரால் கேட்டு முடிவு செய்யப்படுகின்றன. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. எனினும் கைம்பெண் ஒருத்தி ஒருவனுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டு அவன் வழியாகக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் தாங்கள் ஒன்றாக வாழப்போவதைச் சாதியைச் சேர்ந்தவர்களுக்கு விருந்து வைத்து அறிவித்தல் வேண்டும். இந்த நடைமுறை மேற்கொள்ளப்படாதவரை அவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளானவர்களாகவே கருதப்படுவர். இவ்வாறு கூடி வாழ்பவரின் குழந்தைகள் முறைப்படி பிறந்த குழந்தைகளாகக் கருதப்படுவதில்லை. அவர்களை முறைப்படி பிறந்த குழந்தைகளுக்கு மணம் செய்து கொள்வதுமில்லை. இத்தகைய, மண உறவுக்குப் புறத்தே நேரும் தொடர்புகளால் சமுதாயத்தில் பின்வரும் புதிய பிரிவுகள் தோன்றியுள்ளன:-

1. சுவசாதிச் சம்பிரதாயம் (Swajathee Sumpradayam):
உரிய முறையில் முறையான பிரிவுகளிலும், உட்பிரிவுகளிலும் மணம் புரிந்து கொண்டவர்களுக்குப் பிறந்த குழந்தைகள்.

2. கூடக்கொண்ண சம்பிரதாயம் (Koedakonna Sumpradayam):
உயிரோடு கணவன் இருக்கையிலேயே தன் கணவனிடமிருந்து மணமுறிவு செய்து கொண்ட அல்லது கணவனைப் பிரிந்து வாழ்கின்ற போயர் பெண் இன்னொருவனோடு கூடி வாழ்ந்து பெற்றுக் கொண்ட குழந்தைகள்.

3. வித்துன்து சம்பிரதாயம் (Vithunthu Sumpradayam):
போயர் சாதிக் கைம்பெண்ணுக்கும் போயன் ஒருவனுக்கும் பிறந்த குழந்தைகள்.

4. அர் சம்பிரதாயம் (Arsumpradayam):
ஒரு போயர் சாதி ஆணுக்கோ பெண்ணுக்கோ வேறொரு சாதியைச் சேர்ந்தவர்களோடு ஏற்படும் உறவின் வழிப் பிறந்த குழந்தைகள்.

மேலேயுள்ள பிரிவுகளுள் சுயசாதிச் சம்பிரதாயத்தைச்

சேர்ந்தவர்கள் அப்பிரிவுக்குள்ளேயே மண உறவு கொள்ள வேண்டும். கூடக்கொண்ண சம்பிரதாயமும் வித்துனது சம்பிர தாயமும் தங்களுக்குள் உறவு கொள்ள உரியவர்கள். இவ்விரு பிரிவினரும் முறையல்லாத உறவின் வழிப் பிறந்தவர்களாகை யால் சுய சாதி சம்பிரதாயத்தாரோடு மண உறவு கொள்ள முடியாது. அதே போன்று அர் சம்பிரதாயத்தார் தூயபோயர் கள் அல்லாத சாதிவிலக்கம் செய்யப்பட்டவர்களாதலால் அவர்களோடும் உறவு கொள்ள இயலாது. நான்காம் பிரிவினர் தங்களுக்குள்ளேயே மண உறவு கொள்வதற்குரியர்.''

ஹொஸ்பெட்டில் ஊரார் பிரிவுப் பேடர் சாவுச் சடங்கு நிகழ்ச்சி ஒன்றில் பிணத்தினைப் பாடையில் வைத்து ஊரார் பேடர்கள் புத்தாடை போர்த்திப் பூவிட்டுப் புதைகாட்டிற்குத் தூக்கிச் சென்றனர். இறந்தவரின் பிள்ளைகள் ஒவ்வொருவரும் பிணத்தின் வாயில் காலணாவை இட்டுத் தண்ணீர ஊற்றினர். பிணத்தைக் குழியில் வைத்தபின் பங்காளிகள் எல்லோரும் மண்ணிட்டபின் புதை குழி மூடி மேடிடப்பட்டுத் தலைப் பக்கத் தில் ஐந்து காலணாக் காசுகள் இடப்பட்டன. இறந்தவரின் மூத்த பிள்ளையோ, நெருங்கிய உறவினர் ஒருவரோ ஒரு பானை யில் தண்ணீருடன் புதைகுழியின் தலைப்பக்கம் மேற்குப் பார்த்து நிற்பார். பானையில் ஓர் துளையிடப்பட்டுப் புதைகுழியை மும்முறை சுற்றி வந்தபின் அந்தப் பானையை முதுகுக்குப் பின் வீசிப் போட்டுவிட்டுப் பின்னால் திரும்பிப் பார்க்காமல் வீட்டை நோக்கிச் செல்வர். இந்தச் சடங்கு தெல்லகொலு எனப்படும். உரிய வாரிசு இல்லாதவர்கள் இறந்தால் இச்சடங் கினைச் செய்பவர்களே அவருடைய சொத்துக்கு உரியவராவர். மூன்றாம் நாள் புதைகுழி மேல் உள்ள மண்மேடு சமன் செய் யப்பட்டுப் பிணத்தின் தலை, வயிறு, கால் ஆகிய இடங்களுக்கு நேர் மேலே மூன்று கற்கள் வைத்து அவற்றிற்கு வெள்ளை யடிப்பர். பெண் ஒருத்தி அங்குச் சிலவகைப் பலகாரங்களைக் கொண்டு வருவாள். அதனை முறம் போன்ற தட்டிலிட்டுப் பிசைந்து மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று கற்களின் முன் காக்கைகள் உண்ணும்படியாகப் படைப்பர். அதனைத் தின்ன வரும் பருந்து போன்ற பறவைகளையும் பிற விலங்குகளையும் அப்பால் விரட்டுவர். ஒன்பதாம் நாள் திவசச் சடங்கு நடத்தப்

படும். இறந்தவர் உயிர் துறந்த இடத்தில் அலங்கரிக்கப்பட்ட ஒரு பித்தளைப் பாத்திரத்தை இறந்தவருடைய ஆன்மாவைக் குறிக்கும் படியாக வைத்து, அதன் வாயில் ஐந்து வெற்றிலைகளையும், ஒரு உருண்டை விபூதியையும் வைப்பர். அதன் அருகே விளக்கேற்றி வைத்து ஒரு செம்மறியாட்டினை வெட்டுவர். இரண்டு அல்லது மூன்று நாள்கள் சென்ற பின் சோறும் காய்கறி வகைகளும் சமைப்பர். முத்திரையிடப்பட்ட தாசரிகள் கூம்பு வடிவமான மூங்கிலால் பின்னப்பட்ட கூடையின் உருவிலான தங்கள் தெய்வங்களையும் குச்சியையும் ஓடைகளுக்கு எடுத்துச் சென்று நீராட்டி வழிபடுவர். அவர்கள் திரும்பிய பின் சோறும் காய்கறிகளும் கடவுளுக்குப் படைக்கப்பட்டு அதன் பின் முதலில் தாசரிக்கு உணவளிக்கப்படும். பின்னர் மற்றவர்களுக்கு உணவளிப்பர். அவர்கள் தாசரியின் அனுமதி கிடைத்த பிறகே உண்ணத் தொடங்கலாம். முத்திரை பொறிக்கப்பட்டமையாச பிரிவுப் பேடர்கள் இறந்தால் அவர்கள் மூங்கில் கூடையும் குச்சியும் அவர்களுடன் புதைக்கப்பட்டுவிடும்.

1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில் பேடர்கள் இறந்தவர்களை எரித்து, மறுநாள் அவர்கள் சாம்பலை ஐந்து ஆவாரம் செடிகள் மீது தூவுவர் என்று சொல்லப்படுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

''மணமாகாது இறக்கும் 'பயதரு'க்களின் ஆவிகள் வீரிகளாக ஆகின்றதெனவும் அவர்கள் நினைவாகச சிறு கோயில்கள் கட்டி அதில் உருவங்களை நிறுத்தி அங்கே துணி, சோறு முதலியன அவர்கள் பெயரில் படைக்கப்படுவதாகவும், அவ்வாறு செய்யத் தவறினால் அவ்வாறு கடமை தவறியவர்கள் கனவில் இறந்தவர்கள் தோன்றி அச்சுறுத்துவர் எனவும்'' புச்சனன்* குறித்துள்ளார். ''இத்தகைய கோயில்களில் அடுக்காக அல்லது குவியலாகக் கற்கள் காணப்படுகின்றன எனவும், அக்கோயில்களின் சிறு உட்குடைவுகள் இரண்டு மூன்று பாவுகற்களால் தாங்கப்படுமென்றும், உள்ளே இருக்கும் வீரக்கல் உருவம் ஏதும் செதுக்கப்படாத வெறுங்கல்லெனவும் அதற்கும்,

---

* முந்து நூல், (op. cit.)

மற்றக் கோயில் சிலைகளுக்கு எண்ணெய் காப்பிடுவது போல எண்ணெய்க் காப்பிடுவர் எனவும்'' அவரே மேலும் குறித்துள்ளார்.

பேடர் - Bēdar

பார்க்க: வேடன் (*See: Vēdan*)

பேகரர் - Bēgara

பேகரர் அல்லது பையாகரர் என்பது கன்னட இலிங்காயதர், ஹொலையர்களைக் குறிக்க வழங்கும் மற்றுமொரு பெயர்.

பேஹரர் – Bēhara

கணக்கெடுப்பின்போது ஒரிய சாதியாரான அலியர், அருவர், தோபி, கௌடொ, ஜக்கலி, கெவுடொ, குருமொ, ரொங்குணி, சொண்டி ஆகியோர் சூட்டிக் கொள்ளும் பட்டப் பெயராகப் பதியப்பட்டுள்ளது. ரொங்குணி போன்ற சாதிகளில் இப்பட்டப் பெயர் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பெயராகவும் உள்ளது. பல ஒரிய சாதிகளின் சாதித் தலைவர்கள் பேஹரர் என அழைக்கப்படுகின்றனர்.

பெஜ்ஜொ – Bejjo

பொந்தாரிகளின் ஓர் உட்பிரிவு. கெவுட்டொக்களின் பட்டப் பெயர்

பேலதர்-Bēlata (*Feronia elephantum* - wood-apple)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப் பிரிவு. விளாம் பழம் எனப் பொருள் தரும் பெயர்.

பெல்லபு - Bellapu (Jaggery: palm–sugar)

போயர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப் பிரிவு.

பெல்லரா-Bellara

இவர்கள் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் எழுதுவதாவது:-* ''பெல்லரர் அல்லது பெல்லெரர் எனப்படும் இவர்கள் குடைகள்,

* தென் கன்னட மாவட்ட விவரக்குறிப்பு. (Manual of South Canara District.)

மூங்கில் கூடை ஆகியன செய்கின்றனர். குடை செய்பவர்களும், பூத ஆட்டக் காரர்களுமான பரவர்களை விட இவர்கள் உயர்ந்த சாதியினர். இவர்கள் கன்னடத்தின் கிளை மொழி ஒன்றினைப் பேசுகின்றனர். (பார்க்க: தென் கன்னட மாவட்ட விவரக் குறிப்பு, தொகுதி-2) அளிய சந்தான தாய முறையினை (மருமக்கள் தாய முறை) மேற்கொள்ளும் இச்சாதியில் மருமக்கள் தாயமுறை பின்பற்றப்படும் பிற சாதிகளில் உள்ளது போல மணமுறிவு எளிதில் செய்து கொள்ளக் கூடியதாயில்லை. மண முறிவு பெற்ற பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை எனக் கூறப்படுகிறது. எனினும் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலாம். இறந்தவர்களை எரிக்கவோ, புதைக்கவோ செய்கின்றனர். ஆண்டுதோறும் முன்னோர் நினைவாக 'யெதிபெசல' என்ற விருந்தினை நடத்துகின்றனர்.

பெல்லத்தன்னய–Bēllathannaya (*Jaggery*)

பண்டர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பெள்ளே-Bellē (White)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். பைலே கோத்திரம் குர்ணிகள் சாதியில் இதற்கு நேரானதாக உள்ளது.

பெள்ளி-Belli

வெள்ளி எனப் பொருள்படும் இது படகர், குறவர், குருபர், மாதிகர், ஒக்கிலியர், தொரையர், வக்கிலிகர் ஆகிய சாதியாரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பெயர். பெள்ளி தொரையர் பிரிவைச் சேர்ந்தவர்கள் வெள்ளியாலான கால் விரல் மெட்டி அணிவதில்லை.

வெள்ளிக்கை என்பது கொங்கு வேளாளர்களின் ஓர் உட் பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பேளு-Bēlu (*Feronica elephantum*)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். கருவிளம் என்ற மரத்தினது பெயருமாகும்.

பெனயிட்டொ - Benayito

ஓடியரின் ஓர் உட்பிரிவு.

பெண்டே - Bende (*Hibiscus esculentus*)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். வழவழப்பான வெண்டைக்காய் ஐரோப்பியர்களாலும், இந்தியர்களாலும் விரும்பி உண்ணப்படுகிறது. இதனுடைய வழவழப்புத் தன்மை காரணமாக, இரு கருத்து வேறுபாடுடைய குழுக்களினிடையே மோதலைத் தணிக்க உதவுபவர்களுக்குச் செல்லப் பெயராகவும் வெண்டைக்காய் என்ற பெயர் வழக்கில் உள்ளது.

பெங்கிரி - Bengri (frog)

தோம்பர்களின் ஓர் உட்பிரிவு. தவளை என்ற பொருள் உடையது.

பெனியர் - Benia

பெனியர் ஒரிய மொழி பேசும் பயிர்த்தொழிலையும் பல்லக்குத் தூக்கும் பணியையும் மேற்கொண்டிருக்கும் கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறு தொகையினராக உள்ள சாதியினர். கஞ்சம் மாவட்டத்தில் தேனும் மெழுகும் திரட்டும் சாதியினராகக் கொண்டர்களும், பெனியர்களும் பதியப்பட்டுள்ளனர்.* இச்சாதியார் செங்குத்தான பாறைகளிலும், நெடிது வளர்ந்த மரங்களிலும் ஏறுவதில் திறமை மிக்கவர்கள். இப்பெயர், புல் எனப் பொருள்படும் 'பென' என்ற சொல்லிலிருந்து வந்ததாகவும் இச்சாதியார் முதலில் புல்வெளிகளில் புல்லினை வெட்டிப் பயிர்த்தொழிலுக்குரிய நிலமாக மாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

---

* பயிர்த்தொழில் பற்றிய தொகுப்புக்கள், கல்கத்தா, எண், 7, 1904.
(Agricultural Ledger Series, Calcutta, No. 7. 1904)

பெனிசெ - Benise (flint stone)

சக்கிமுக்கிக்கல் எனப் பொருள்படும் இது குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பெண்ணெய் - Benne (butter)

வெண்ணெய் எனப் பொருள்படும் இது குர்ணிகளின் ஒரு கோத்திரம்.

பேபாரி - Bēpāri

சென்னை மாநிலக் கணக்கெடுப்பு, அறிக்கையில், "பேபாரியர் லம்பாடியரோடு தொடர்புடையவர். பஜ்ஜார பெண் தேவதையை வணங்குபவர்கள். தங்களைச் சத்திரியரெனக் கூறிடும் இவர்கள் பேபாரி அல்லது இலம்பாடி மொழியைப் பேசுகின்றனர்." எனக் கூறப்பட்டுள்ளது. கும்சூர் அரசரின் பட்டப் பெயரான பகொன்ஜொ என்பது இச்சாதியின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. ஜி. குளோயெர் பாதியார் 'பொய்பாரி' என்ற பெயர் 'பிரின்ஜாரி' என்பதன் மற்றுமொரு பெயராகும் எனச் சரியாகக் கணித்துள்ளார்.* ஒரு பொய்பாரி குடும்பத்தைப் பற்றிய அவர் விளக்கம் இலம்பாடி அல்லதுபிரிஞ்சாரிகள் குடும்பத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. பேபாரி, பொய்பாரி என்பன வணிகர் எனப் பொருள்படும், வியாபாரி, வேபாரி என்ற சொற்களின் திரிந்த வடிவங்களே. விசாகப்பட்டினம் முகவர் மலைப் பகுதிகளுக்கும், சமவெளிகளுக்குமிடையே வணிகர்களாகவும் பண்டங்களை ஏற்றிச் செல்வோராகவும் இவர்கள் செயல்பட்டனர். திரு. சி. ஹயவதன ராவ் இவர்களைப் பற்றி எனக்குத் தெரிவித்துள்ள விவரங்கள் வருமாறு;- "பேபாரிகள் சில பாதுகாப்புகளை மேற்கொண்டால் புலிகளின் தாக்குதலுக்கு ஆட்படாதவர்களாகத் தாங்கள் தப்ப முடியும் எனக கருதுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் புலிகள் மலிந்துள்ள பகுதிகளிடையே செல்ல வேண்டிய கட்டாயத்துள்ளாகும் நிலையில் உள்ளனர். இவர்கள் புலிகள் தங்களை நெருங்காதபடி பின்வரும் வழியில்

---

* செய்ப்பூர், பிரெக்லம், 1901. (Jeypore, Breklum, 1901.)

காத்துக் கொள்கின்றனர். காட்டிடையே சதுரமான நிலப்பரப்பினைச் சமன் செய்து, அதன் நடுவே நெருப்பினை மூட்டி, அதனைச் சுற்றியிருந்தபடி இரவு நேரத்தைக் கழிக்கின்றனர், நெருப்பெரியும் அச்சதுரப் பரப்பினை நெருங்கினால் கண் குருடாகி விடுமென்றும், பிறகு சுட்டு வீழ்த்திவிடுவார்களென்றும் எண்ணியவையாகப் புலிகள் இவ்வாறு நெருப்பு மூட்டப்பட்டுள்ள இடங்களை நெருங்குவதில்லையென இவர்கள் நம்புகின்றனர். நான் ஒருமுறை ஜெய்ப்பூரிலிருந்து மல்கங்கிரிக்கிச் சென்று கொண்டிருந்தபோது இதுபோலத் தங்கியிருந்த கூட்டத்தாரோடும் இருக்கவேண்டி வந்தது. அப்போது மல்கங்கிரிப்பகுதியைச் சார்ந்த பல சிற்றூர்களில் மனிதரைக் கொன்று தின்று வந்த ஒரு புலியின் செயல் எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.''

பெரலைக் கொடுவர் - Beralakoduva

வக்கலிகரில் ஒரு பிரிவினர். இவர்களிடையே சில விரல்களை வெட்டிப் பலியாகத் தரும் பழக்கம் இருந்து வந்தது. (பார்க்க: மொரசு—See:Morasu)

பேரி செட்டி - Beri Chetti

பேரிச் செட்டிகள் தங்களை வணிகர்களுள் முதன்மையானவராகக் கருதுகின்றனர். செட்டிகளையும், கோமட்டிகளையும் போலவே இவர்களும் தங்களை வைசியர் பிரிவைச்சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். எனினும், ''இவர்கள் கோமட்டிகள் தங்களுக்குச் சமமானவர்கள் அல்லர் என மறுப்பதோடு தாங்களே உண்மையான வைசியப் பிரிவினர் எனவும் கூறிக்கொள்கின்றனர்.''* இவர்கள் தோற்றம்பற்றிக் 'கன்யகபுராணம்' கூறும் விவரங்கள் வருமாறு:- கோமட்டிகள் சாதியினைச் சேர்ந்த ஒரு அழகிய கன்னியை ஓர் அரசன் மணந்து கொள்ள விரும்பினான். ஆனால் கோமட்டிகள் அவன் விருப்பத்திற்கு இணங்கவில்லை. இதனால் அந்த அரசன் அவர்களுக்குக் கொடுமையிழைக்கத்

---

* வட ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பு. (Manual of the North Arcot District.)

தொடங்கினான். அதனைத் தாங்காது அஞ்சி நாட்டைவிட்டு ஓடிய கோமட்டிகளே பேரி (பயந்த) செட்டிகள் எனப் பெயர் பெற்றனர். இக்கதை நாட்டுக்கோட்டைச் செட்டிகளைப் பற்றி வழங்கி வருகின்ற கதையினை உண்மையில் ஒத்துள்ளது. இந்தக் கதை வழக்கின்படி ஓர் அரசன் வழக்கத்தை விட வரம்பு மீறியவனாகக் கொடுமைகள் இழைத்திருக்க வேண்டும். பெருமை என்ற சொல்லினடியாகப் பிறந்ததே பேரி எனக் கொள்கின்ற ஒரு கொள்கையும் உள்ளது.* கோமட்டிகளின் ஓர் உட்பிரிவான பேரி என்பது அவர்கள் குல தெய்வமான கன்யகம்மாவின் தீக் குண்டத்தில் இறங்குவதற்குப் பயந்து ஓடிய பிரிவினரைக் குறிப்பதாகக் கொள்கின்றனர்.

திரு. எச். எ. ஸ்டுவர்ட் பேரி செட்டிகள் பற்றி வழங்கும் கதையாகக் கூறியிருப்பதாவது,† "கும்பகோணத்திற்கு அருகேயுள்ள காவேரிபுரமே முன்பு இச்சாதியினர் பெருமளவில் வாழ்ந்த ஊராகும். அந்த நாட்டு அரசன், பேரி செட்டி சாதியைச் சேர்ந்த ஒரு கன்னியை மணக்க விரும்பியபோது அவர்கள் அதற்கு உடன்படவில்லை. எனவே அந்த அரசன் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவர்களைத் தன் நாட்டைவிட்டு விரட்டினான். மேலும் எந்தச்சாதியினரும் அவர்களோடு உடன் உண்ணக் கூடாது எனத் தடை விதித்தான். அது இன்றளவும் கடைப் பிடிக்கப்படுகிறது."

திருத்தணியார், அச்சரப்பாக்கத்தார், தெலுங்குபாக்கம், முசல்பாகம் என நகரங்கள், நிலப்பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையிலான அகமணக்கட்டுப்பாடுடைய பல பிரிவுகள் பேரி செட்டிகளிடையே உள்ளன. இவற்றினிடையே உயர்வு தாழ்வு பாராட்டப்படுவதும் உண்டு. சில பிரிவினர் மட்டும் மற்றப் பிரிவினரோடு உண்ணும் பழக்கமுடையவர்கள்.

கம்மாளர்களைப்போலப் பேரி செட்டிகளும் தொழில்

---

* வட ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பு. (Manual of the North Arcot District.)

† பேரி என்ற அடைமொழிபெற்ற சங்ககாலப்புலவராம் பேரி சாத்தனாரை இங்கு நினைவு கூறலாம். (மொ. கு.)

வழிப்பட்ட இடங்கைப் பிரிவினரில் முக்கியமான சாதியினர். இது தொடர்பாகப் பின்வரும் கதையொன்று கூறப்படுகின்றது. பேரி செட்டிகள் காவேரிபுரத்தில் ஆயிரம் கோத்திரங்களை உடையவராக ஆயிரம் இல்லங்களில் வாழ்ந்து வந்தனர். ஓர் அரசன் எல்லாச் சாதிகளிலிருந்தும் ஒவ்வொரு பெண்ணை மணந்து கொண்டான். அதன்படி பேரி செட்டிகளின் சாதியி லிருந்தும் ஒருத்தியை மணக்க விரும்பினான். அதற்கு இவர் கள் மனம் ஒப்பவில்லையாயினும் அவன் விருப்பம் போல் ஒருத்தியை மணம் செய்து தருவதாக வாக்களித்தனர். இந்த இக்கட்டிலிருந்து விடுபட அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தனர். மணத்திற்கெனக் குறிக்கப்பட்ட நாளன்று மணப்பந்தலின் பால்கம்பத்தில் ஒரு கறுப்பு ஆண் நாயினைக் கட்டிப் போட்டு விட்டுப் பேரி செட்டிக் குடும்பத்தினர் அனைவரும் அவ்விடத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இதைக் கேள்விப்பட்ட அரசன் சினமுற்று எல்லாச் சாதியினருக்கும் பேரி செட்டிகளிடமிருந்து தண்ணீர் பெற்றுக் குடிக்கத் தடை விதித்தான். இதனால் அவர்கள் இடங்கைப் பிரிவில் சேர வேண்டியதாயிற்று.

தங்கள் சாதித்தொடர்பான வழக்குகளைப் பேரி செட்டிகள் பஞ்சாயத்து முறையில் தீர்த்துக் கொள்கின்றனர். இவர்களின் சாதித் தலைவன் பெரியதனக்காரன் என அழைக்கப் படுகிறான். இடங்கைப் பிரிவைச் சேர்ந்த அம்பட்டன் ஒருவன் பெரியதனக்காரனுக்கு உதவியாளனாக இருப்பான். இவர்கள் குழந்தை மணத்தை மேற்கொள்வதே பெருவழக்கெனினும் வயது அடைந்த பின்னர் மணம் புரிவித்தலும் உண்டு. இவர்கள் மணப்பந்தலில் தூண்களோடு தரையைத் தொடும்படியாக வாழை மரங்களை வைத்துக் கட்டக் கூடாது என்ற தடை யுள்ளது. அவ்வாறு செய்வார்களாயின் வலங்கைப் பிரிவைச் சேர்ந்த பறையர் அவற்றை வெட்டி வீழ்த்துவர். எட்டாப் பகுதிகளிலுள்ள சிற்றூர்களில் இவ்வழக்கம் இன்றும் கடைப் பிடிக்கப்படுகினறது. பூணூல் அணிவிக்கும் சடங்கு மணமாவ தற்கு முன்போ மணச் சடங்குகளுடனேயோ நடத்தப் படும். அதன்பின் சிறுவராயினும், பெரியவராயினும் தொடர்ந்து பூணூல் அணிந்திருப்பர்.

பெரும்பாலான பேரி செட்டிகள் ஊன் உண்பவர்களே. சிலர் மரக்கறி உணவு மட்டும் உண்பர்களாகவும் உள்ளனர்.

பேரி செட்டிகளுக்கும் கோமட்டி செட்டிகளுக்குமிடையே தங்களில் யார் உயர்ந்தவரெனப் பல வழக்குகள் நடந்துள்ளன. இவ்விரு சாதியாரும் ஒருவரையொருவர் இழிவுபடுத்தும் பல கட்டுக் கதைகளைக் கூறி வருகின்றனர். பொதுக்கணிப்பில் பேரிச் செட்டிகள் கோமுட்டிகளை விடச் சற்றுத் தாழ்ந்தவர்களாகவே கருதப் படுகின்றனர்.* பின்வரும் கதையின்படி பேரி செட்டிகள் தங்களை வைசியர்களாகக் கூறிக் கொள்வதாகத் திரு ஸ்டுவர்ட் குறித்துள்ளார்:— "சோழர்கள் ஆட்சிக் காலத்தில் பேரி செட்டிகள் ஓர் தண்ணீர்ப் பந்தல் வைத்தனர். கோமட்டிகள் அதனைப் பயன்படுத்த உரிமை கொண்டாடியதைப் பேரி செட்டிகள் மறுத்தனர். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலில் இருக்கும் கல்வெட்டு ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு அரசன் அவர்கள் வழக்கைத் தீர்க்க முயன்றும் அவனால் அதில் வெற்றி பெற முடியவில்லை. அவன் அதன் பின் இரு வழக்காடிகளும் சுடப்படாத மண்பானையில் தண்ணீர் எடுத்து வரவேண்டும் என்று கூற அதற்கு இரு பக்கத்தவர்களும் ஒப்புக் கொண்டனர். பேரி செட்டிகளாலேயே அவ்வாறு தண்ணீர் கொண்டுவரமுடிந்தது. இதில் தோற்றுப்போனதற்கான தண்டம் ரூபாய் 12000. கோமட்டிகளால் அதனைச் செலுத்த முடிய வில்லை, கோமட்டிகள் தங்களுக்கு அத்தொகையைக் கொடுத்து உதவிய ஒரு பேரி செட்டிப் பெண்ணுக்கு அடிமைப்பட வேண்டியதாயிற்று. கோமட்டிகளின் சந்ததியினர் இன்றுவரை பேரி செட்டிகளோடு பகைமைக்கு உள்ளாகியிருப்பதோடு தங்கள் வாழ்க்கையை நடத்தப் பேரி செட்டிகளையே நம்பியுள்ளனர். கோமட்டிகளில் பலர் இந்த ஒப்பந்தத்திற்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று கூறுவதோடு தாங்கள் கீழானவர்கள் என்பது மெய்ப்பிக்கப்படவில்லையென்றும் கூறுகின்றனர்." இக்கதையின் மற்றொரு வடிவமாக வழங்கி வரும் கதை வருமாறு:— "சோழர் ஆட்சிக் காலத்தில் பேரி செட்டிகளால் ஒரு தண்ணீர்ப்

---

*சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, *1891*. (Madras Census Report, *1891*.)

பந்தல் அமைக்கப்பட்டது. கோமட்டிகளும் அத் தண்ணீர்ப் பந்தலுக்கு உரிமை கொண்டாடினர். அவர்கள் வைசியர்கள் அல்லர் என்ற காரணத்தால் அவ்வுரிமை மறுக்கப்பட்டது. இது பற்றி அவர்கள் அரசனிடம் முறையிட அதனைப் பற்றி விசாரிப்பதாகக் கூறிய அரசன் அவ்வாறு செய்யவில்லை. ஒரு வீரமுஷ்டி (பேரி செட்டிகள், கோமட்டிச் செட்டிகள் சாதியைச் சேர்ந்த இரவலன்) அரசனுடைய குதிரையையும், யானையையும் கொன்றான். அவ்வாறு செய்தமைக்கான காரணத்தை அவனிடம் கேட்டபோது அரசன் கவனத்தைத் தீராத வழக்கின்பால் ஈர்ப்பதற்காகவே தான அது போலச் செய்ததாகக் கூறிய அவன், அவற்றை மீண்டும் உயிர்த்தெழச் செய்தான். அந்த இரு கூட்டத்தினரைப் பற்றியும் காஞ்சிபுரத்திலுள்ளதாகக் கருதப்படும் ஒரு செப்புப் பட்டயத்தை ஆதாரமாகக் கொண்டு நீதி வழங்குவதாக அரசன் கூறினான். அந்தச் செப்புப் பட்டயத்தைப் பெறப் பன்னிரண்டு பேரை உயிர்ப்பலி தர வேண்டி வந்தது. வீரமுஷ்டி தன் பன்னிரண்டு பிள்ளைகளையும் பலி கொடுத்தான். அப்பட்டயப்படி பேரி செட்டிகள் வைசியரேயென்றும் கோமட்டிகளைத் தலையை வெட்ட வேண்டுமெனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவர்களுக்குக் கருணை காட்டும்படி சில பேரி செட்டிகள் கேட்டுக் கொள்ள, அவர்கள் ஒரு தொகையைத் தண்டமாகச் செலுத்தித் தப்பிப் பிழைக்கலாம் எனக் கூறப்பட்டது. இத்தண்டத் தொகையைப் பெறுவதற்காக அவர்கள் ஒரு பேரி செட்டிப் பெண்ணுக்கு அடிமைப்பட்டனர். இந்த நிகழ்ச்சி நடந்தபோதிருந்து கோமட்டிகள் பேரிகளின் குழந்தைகளாகப் பாவிக்கப்பட்டு, அவர்கள் வழிவந்தோர் பிள்ளை பூந்த கோமட்டி (மகனாகிவிட்ட கோமட்டி) யென அழைக்கப்படுகின்றனர். வீரமுஷ்டி செய்த தியாகத்தின் காரணமாக அவனையும் பேரி செட்டிகள் ஒரு மகனாகக் கருதினர். இதனால் அச்சாதியாரிடையே அவனுக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டாயிற்று. அவனுடைய செல்வாக்குக்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். பேரிச் செட்டிகள் தங்கள் புறக்கடைத் தோட்டத்தில் முருங்கை, மொச்சை, சிவப்பு முளைக்கீரை ஆகியவற்றைப் பயிரிடக் கூடாது என்பது விதி. எங்கேனும் முருங்கை மரம் நட்டிருப்பதைப் பார்த்தால் உடனே வீரமுஷ்டி அதனை வெட்டி அழிப்பதோடு, மூன்று பணம் தண்டமும் வசூலிப்பான்.

மொச்சை பயிரிட்டால் அதற்குத் தண்டம் ஆறு பணம். செங் கீரை போட்டிருந்தால் ஒரு பணம் தண்டம் தர வேண்டும். பன்றி, ஆடு, கோழி ஆகியன வளர்ப்பதும் இதுபோலத் தண் டம் விதிக்கப்படும் எனக் கூறித் தடை செய்யப்பட்டிருந்தது. பேரி செட்டிப் பெண் ஒருத்தி தன் தலைமேல் தண்ணீர்ப் பானையை வைத்துச் சுமந்து செல்வதைப் பார்த்தால் வீரமுஷ்டி அப்பானையை உடைப்பதோடு கூடப் பன்னிரண்டு பணம் தண் டமும் வசூலிப்பான். பெண்கள் பொது இடங்களில் பொருள் கள் விற்பார்களாயின் அவர்கள் சாதியைவிட்டு விலக்கப் படுவார்கள். பேரி செட்டிகளும், கோமட்டிகளும் கூட்டாக வாணிபம் செய்வது கூடாது.

கம்மாளனும் செட்டியும் நண்பர்களாகக் கருதப்படுகிறார் கள். 'செட்டியும் கம்மாளனும் ஒண்ணு' என்ற தமிழ்ப் பழ மொழியும் உள்ளது. இது தொடர்பாகப் பின்வரும் கதை வழக்கும் உள்ளது:- ''காந்தப் பட்டணத்தில் பழங்காலத்தில் ஐவகைத் தொழில்புரியும் கம்மாளர்களும் இணைந்து ஒற்றுமை யாக வாழ்ந்து வந்தனர். எல்லாத் தர மக்களுக்கும் இவர் கள் பணி செய்தனர். அங்கு இவர்களைத் தவிர வேறு கைவினைஞர்கள் இல்லை. இவர்கள் அரசர்கள் எவருக்கும் அஞ்சாது வாழ்ந்தனர். இதனால் சினமுற்ற அரசர்கள் சிலர் இவர்களுக்கெதிராகப் பல்வகைப் படைக்கலங்களுடன் போர் செய்ய எழுந்தனர். இவர்கள் வாழ்ந்த காந்தக் கோட்டை காந்தக் கற்களால் கட்டப்பட்டதாகையால் போரிட வந்த அரசர்களின் படைவீரர் கையிலிருந்த போர்க் கருவிகள் அனைத்தையும் அந்தக்கோட்டை தன்பால் ஈர்த்துக் கொண்டது. பின்னர் அந்த அரசர்கள் அக்கோட்டையினைக் கொளுத்து பவர்களுக்குப் பெரும் பரிசு அளிக்கப்படும் என அறிவித்தனர். யாரும் இதனைச் செய்து முடிக்க முன்வரவில்லை. இறுதியில் ஒரு கோயிலைச் சேர்ந்த தாசிகள் இதனைச் செய்து முடிப்ப தாக முன்வந்து, வெற்றிலை பாக்குப் பெற்று, அவ்வாறு செய் வதாகச் சத்தியம் செய்து அப்பணியில் ஈடுபடுவராயினர். இத னால் மனம் மகிழ்ந்த அந்த மன்னர்கள் அந்தக் காந்தக் கோட் டைக்கு எதிரே ஒரு கோட்டையை அமைத்துத் தர அதில் குடி புகுந்த தாசிகள் தங்கள் பாடலால் எதிரேயுள்ள கோட்டையில்

உள்ளவர்களைக் கவர்ந்து கலவியில் ஈடுபடுத்த வாய்ப்பு ஏற்பட்டது. இவர்களுள் ஒருத்தி கடைசியில் ஓர் இளைஞனிட மிருந்து காந்தக்கோட்டை பற்றிய இரகசியத்தை அறிவதில் வெற்றி பெற்றாள். அந்தக் கோட்டையைச் சூழ வரகுத் தட்டினைப் போட்டு நெருப்பு மூட்டினால் அக்கோட்டை சாம்பலாகிவிடும் என்பதே அது பற்றிய இரகசியமாகும். அந்த அரசன் அதுபோல நெருப்பிடலானான். கோட்டை எரிந்ததில் கம்மாளர் பலர் உயரிழந்தனர். எனினும் சிலர் தங்களுடைய கப்பலில ஏறிக் கடல் வழியே தப்பினர். இதன் விளைவாக நாட்டில் கைவினைஞர் இல்லையாயினர். தப்பியோட முயன்ற கம்மாளர்களும் தலை வெட்டப்பட்டு விட்டனர். அவ்வினத்தைச் சேர்ந்த கர்ப்பமுற்றிருந்த ஒருத்தி, ஒரு செட்டியின் வீட்டில் தஞ்சம் புகுந்து அவனுடைய மகளெனச் சொல்லிக் கொண்டு உயிர் பிழைத்தாள். நெசவுக் கருவிகள் செய்யும் கைவினைஞர்கள் இல்லையாகவே நெசவும் பிற தொழில்களும் நசிந்தன. உழவும் சுருங்கிற்று. நாட்டு மக்கள் அதிருப்தியடைந்தனர். சிறந்த புத்திசாலியான அரசன் கைவினை ஞர் இனத்தவர்களில் யாரேனும் தப்பிப் பிழைத்துள்ளனரா எனக் கண்டறிய ஒரு தந்திரத்தைக் கையாண்டான். மிக நுண்ணிய வளைவு நெளிவுகளோடு கூடிய துளையினைத் தன்னிடையே பெற்றுள்ள ஓர் பவளத்தினுள்ளே ஒரு நூலினை யார் செலுத்துகின்றார்களோ அவர்களுக்குப் பெரும் பரிசில் வழங்கப்படும் என அறிவித்து அந்தப் பவளத்தையும் நூலையும் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தான். யாராலும் அச்செயலைச் செய்ய முடியவில்லை. கடைசியாகச் செட்டியின் விட்டில் பிறந்து வளர்ந்த கம்மாளச் சிறுவன் அதனைச் செய்து முடிப்ப தாகக் கூறினான். அதனைச் செய்து முடிக்க அவன் அந்தப் பவளக் கட்டியை ஓர் எறும்புக் குழியின் நுழைவாயிலில் வைத்து, அந்த நூலினைச் சர்க்கரைப் பாகில் தோய்த்து அதனருகே வைத்துவிட்டான். எறும்புகள் அந்த நூலினைப் பவளத்தின் துளை வழியே இழுத்துச் சென்று விட்டன. அந்த அரசனும் தொல்லை தீர்ந்தது என மகிழ்ந்து பெரும் பரிசில் களைக் கொடுத்து அச் சிறுவனிடம் வேறு பல பணிகளையும் ஒப்படைத்தான். அவனும் தன் அன்னையின் உதவியுடன்

அப்பணிகளைச் செய்து முடித்தான். அரசன் அச்செட்டியினை வரவழைத்து அச்சிறுவன் பற்றிய உண்மைகளைக் கேட்க, அவனும் நடந்தவற்றை அரசனிடம் உரைத்தான். அரசன் அச்சிறுவனுக்கு உழவுக்கருவிகள் செய்வதற்கான பொருள்களை அனுப்பினான். அத்தோடு அவனுக்கு ஒரு செட்டியின் மகளையும் மணமுடித்து வைத்து அவனுக்கு வாழ்க்கை நடத்தப் போதுமான நிலங்களையும் தந்தான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் ஐவரும் கம்மாளர்களின் ஐவகைத் தொழிலை மேற்கொள்வராயினர். அரசன் அவர்களுக்குப் பாஞ்சாலர் என்ற பட்டம் தந்தான். இன்றுவரை அந்த ஐவரின் வழிவந்த அந்த ஐந்து பிரிவினரும் நெருங்கிய உறவுடையவர்களாகத் தங்களுக்குள் மணஉறவும் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் செட்டியின் வழி வந்தவர்களாகையால் செட்டிகளுக்குரிய பூணூலையும் அணிந்து வருகின்றனர்.''*

மளிகைச் செட்டிகள் எனக் கூறப்படும் அச்சரப்பாக்கம் செட்டிகளே மேற்கூறிய கதை வழங்கொடு தொடர்புடையவர்கள். இன்றும் கூடச் சென்னையில் பேரி செட்டிகள் தங்கள் சாதித் தொடர்பான நடப்பு விவகாரங்களைப் பற்றிய கூட்டங்கள் கூட்டும் போது மளிகைச் செட்டிகளுக்கு அழைப்பு விடுப்பதில்லை. கந்தசாமிக் கோயில் முதலானவை தொடர்பான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் மளிகைச் செட்டிகளுக்கு இல்லை.

திரு ஸ்டுவர்ட், ''பேரி செட்டிகளுள் சிலர் சிவனையும்,மற்றும் சிலர் விட்டுணுவையும் வழிபடுகின்றனர். இவர்களிடைய இலிங்காயதர்களும் உளர். இவர்கள் பிறவழிபாட்டு நெறி சார்ந்தவர்களோடு மண உறவு கொள்வதில்லை. இலிங்காயதர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். மற்ற நெறியினர் எரிக்கின்றனர். எல்லாப் பிரிவினரும் பூணூல் அணிகின்றனர். இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. கோமட்டிகளைப் போலன்றி இவர்கள் சிலபோது பெண்கள் பூப்படைந்த பின்னும் மணம் செய்விக்கின்றனர்.'' என எழுதியுள்ளார்.

* டெய்லர், ரெய்சோனே கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்பு. (Taylor, Catalogue Raisonné of Oriental Manuscripts.)

பெரிகெ - Berike

போயர் சாதியைச் சேர்ந்த கைம்பெண் ஒருத்தி தன் சாதியைச் சேர்ந்த ஒருவனோடு கூடி வாழும்போது பெற்றுக் கொண்ட குழந்தைகள் பெரிகெ என்ற தனி உட்பிரிவினைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

பெஸ்தர் - Bestha

1891 சென்னை கணக்கெடுப்பு அறிக்கையில்பெஸ்தர், "பரம்பரையாக வேட்டையாடுதலையும், மீன் பிடித்தலையும் தொழிலாகக் கொண்ட தெலுங்கு பேசும் சாதியா.ர். இப்போது பெரும்பாலானவர்கள் பயிர்த்தொழிலையும், குற்றேவல், சமையல் முதலிய பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்" எனத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. 1901 கணக்கெடுப்பில், "தக்காண மாவட்டங்களைச் சேர்ந்த மீன் பிடிக்கும் சாதியார் பெஸ்தர் எனவும், கப்பேரர் எனவும் வழங்கப்படுகின்றனர். கோயமுத்தூர், சேலம், மாவட்டங்களில் சில பகுதிகளில் இவர்கள் தங்களைத் தொரையர், சிவியர், பரிவாரத்தர் என அழைத்துக் கொள்கின்றனர். இம் முப்பிரிவினர்களும் கப்பேரர்களைப் போலக் கன்னடம் பேசுகின்றனர். இவர்கள் பெஸ்தர் அல்லது கப்பேரர்களாகவே தோன்றுகின்றனர். எனினும் கப்பேரர்களும், தொரையர்களும் தனித்த சாதியினரெனவே கொள்ளப்பட்டுள்ளது. பெஸ்தர் சாதியில் அகமணக்கட்டுப்பாடுடைய இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. தெலக, பரிகிர்த்தி என்ற அவற்றோடு கப்பிலி அல்லது கப்பேர – வாண்டுலு என்ற பிரிவையும் சேர்த்து மூன்று உட்பிரிவுகள் உள்ளதாகக் கருதுபவர்களும் உளர். பரிகிர்திப் பிரிவினர் புகழ்பெற்ற மகாபாரத விளக்குநரான சூடுது (*Sutudu*) வின் வழி வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். பெஸ்தர்கள் தங்கள் குடும்பச் சடங்குகளை நடத்தப் பிராமணர்களையும் சாதானிகளையும் (சைவர்களாயின் ஜங்கமர்களை அமர்த்துவர்) அமர்த்துவதோடு, பிராமணர்களின் பழக்கவழக்கங்களையே மேற்கொள்கின்றனர். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை. சிவன், விட்டுணு ஆகியதெய்வங்களோடு,பிற ஊர்த் தேவதைகளையும் வழிபடுகின்றனர். இவர்களின் உட்பிரிவான மத்தியர், மத்தி மரத்தின் (*Morinda citrifolia*) பட்டைகளைச்

சாயந்தோய்க்கப்பயன்படுத்துவதால்அப்பெயர்பெற்றுள்ளனர்.'' எனக் கூறப்பட்டுள்ளது. பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில் பெஸ்தர்கள் உண்மையில் கங்கெ மக்களு கப்பேரர்களின் ஓர் உட்பிரிவினரே எனக்கூறப்பட்டுள்ளது. இவர்கள் முன்பு பல்லக் குச் சுமப்பவர்களாக இருந்தவர்கள். இப்போது பல்லக்குப் பய ணம் வழக்கிழந்த காரணத்தால் வேறு பல பணிகளில் ஈடுபட் டுள்ளனர். கோயம்புத்தூரிலுள்ள சிவியர்கள், மைசூரில் முகமதி யர்கள் ஆட்சியைக் கைப்பற்றியபோது அங்கிருந்து குடி பெயர்ந்த பெஸ்தர்களே தாங்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். சிவியர் என்ற பெயர், தமிழர்களால் தங்களுக்குத் தரப்பட்ட பெயர் என்று இவர்கள் கூறுகின்றனர். புகை வண்டிகள் அறி முகப்படுத்தப்படாத நாள்களில் உடல் வலிமையும் ஏழ்மையு முற்றவர்களாக இருந்த இவர்கள் பயணம்மேற்கொள்ளும் அரசு அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பல்லக்கினைச் சுமக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறுகின்றனர். இன்று உள்நாட்டில் ஏரிகளிலும், ஆறுகளிலும் மீன் பிடிப்பதே இவர்கள் தொழிலாக உள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- ''மலைப்பக்கங்களில் பெரும் எண் ணிக்கையராக உள்ள பெஸ்தர்கள் வணிகத்தால் வளமான வாழ்வு பெற்றுள்ளனர். பெஸ்தர் என்ற சொல்லுக்குப் பொரு ளேது மில்லை. இவர்கள் தங்களைச் சூத குலத்தவரென்றும், சூத மகாமுனி என்ற முனிவரின் வழித்தோன்றியவரென்றும் கூறிக் கொள்கின்றனர். சூதர் என்ற சொல் சத்திரியன் ஒருவனுக் குப் பிராமணர் வழிப் பிறந்தவனையும் குறிக்கும். சூதன் என் பது சமையல்காரன் என்றும் பொருள்படுவதால், பெஸ்தர்கள் தங்கள் சமையல்கலைத் திறமையால் இப்பெயர் பெற்றிருத் தலும் கூடும். இவர்கள் தெலுங்குப் பெஸ்தர் எனவும், பரிகிர்தி பெஸ்தர் எனவும் இரு பிரிவினராக உள்ளனர். இவ்வேறுபாடு இவர்கள் கடைப்பிடிக்கும் சமயத்தை அடிப்படையாகக் கொண் டது. தெலுங்குப் பெஸ்தர்கள் வைணவ சமயச் சின்னங்களான சங்கு, சக்கர முத்திரைகளைத் தங்கள் தோளில் பொறித்துக் கொள்ளும் பழக்கமுடையவர்கள். இவர்கள் சாவினை அறிவிக்

கும் செய்தியாளர்களாகத் தாசரிகளையே அனுப்பி வைப்பர். பிறப்புப் பற்றிய செய்தியையோ, பெண்கள் பூப்படையும் செய்தியையோ தெரிவிக்க இச்சாகலர்களை அனுப்பி வைக்கின்றனர். தங்கள் வழிபடு தெய்வமான அனுமாரின் படத்தினையோ, உருவத்தினையோ தங்கள் வீட்டில் வழிபடுவதற்காக இவர்கள் வைத்திருப்பர்.''

பெஸ்தர்களின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ள பரிகிர்தி அல்லது பகிரிதி பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:– சில தெலுங்குப் பகுதிகளில் பகிரிதி என்ற பெயர் வைணவர் என்பதற்குப் பதிலாகப் பயன்பட்டுள்ளது. இது சைவர்களினும் வேறானவர்கள் வைணவர்களான பெஸ்தர்கள் என்பதனைக் குறிக்கப் பயன்படுகின்ற சொல்லாகும். பெஸ்தர்கள் சிலரிடம் அவர்களுடைய சாதியின் தோற்றம் பற்றிக் கேட்டபோது, தங்களுக்கு அதனைப் பற்றிக் கூறிக் கொள்ளப் புரண்டம் ஏதும் இல்லை எனக் கூறிவிட்டனர். அவர்கள் பயன்படுத்திய புரண்டம் என்ற சொல் புராணம் என்பதன் திரிபாகும்.

1901 மைசூர் கணக்கெடுப்பு அறிக்கையில் பெஸ்தர்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது.- ''மீன் பிடிப்பவர்கள், படகு ஓட்டுபவர்கள், பல்லக்குச் சுமப்பவர்கள் ஆகிய இவர்கள் தாங்கள் தங்கி வாழும் இடத்திற்கேற்ப பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். கிழக்கு மாவட்டங்களில் பெஸ்தர் என அழைக்கப்படும் இவர்கள் தெற்கே தொரையர், அம்பிகர், பரிவரர் (படகுகாரர்) எனவும், மேற்குப் பகுதிகளில் கபெயரர், கங்கெமக்களு என்றும் அழைக்கப் படுகின்றனர். தெலுங்கு பேசும் பிரிவினர் போயிகள் எனத் தங்களை அழைத்துக் கொள்கின்றனர். மீன் பிடித்தலும் பல்லக்குச் சுமப்பதும் சுண்ணாம்புக் காளவாய்போடுவதுமே இவர்கள் சிறப்பாக மேற்கொண்டுள்ள தொழில்கள். சிலர் அரசுப் பணியில் கடைநிலை ஊழியர்களாகப் பணிபுரிகின்றனர். பெரும்பாலானவர்கள் பயிர்த்தொழிலை மேற்கொண்டுள்ளனர். போயிகள் பெத்த போயி எனப்படும் சாதித் தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனர். தொரையர்கள் கபெயரர்களுடனோ, தங்களைப் பெரிதும் ஒத்துள்ள போயிக

ளுடனோ மண உறவு வைத்துக் கொள்வதில்லை. சுபெயரர்கள் எனப்படும் கர்நாடகத்திற்குரிய பெஸ்கர்கள் பல்லக்குச் சுமக்கும் பணியில் ஒரு போதும் ஈடுபட்டதில்லை. இவர்கள் பயிர்த் தொழிலையும், சுண்ணாம்புக் காளவாய் போடுதலையுமே தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களுக்கு யஜமான் என்ற சாதித் தலைவன் உள்ளான்.''

மிதப்புகளின் மேலிருந்தபடி, மைசூரில் உள்ள ஏரிகளில் பெஸ்தர்கள மூங்கில் அல்லது பிரம்பாலான மிதப்புகளின் மேல் மீன் கூடையினை வைத்தபடி மீன் பிடிப்பதை நான் அடிக்கடி பார்த்துள்ளேன். இவர்கள், ஒருவன் வீசுவதற்குரிய சிறிய வலைகளையே பயன்படுத்துகின்றனர். பலர் சேர்ந்து இழுக்கும் பெரிய வலைகளைப் பயன்படுத்தினால் அது துரதிருஷ்டத்தையே கொண்டுவரும் என இவர்கள் நம்புகின்றனர். புதிய வலையைப் பயன்படுத்தும்போது அதில் அகப்படும் முதல் மீனினை வெட்டி, அதன் குருதியினை வலையில் பூசுவர். நெருப்பில் சாம்பிராணியிட்டபின் வலையின் ஒரு கண்ணியினைத் தீயினால் எரிக்கின்றனர். முதன்முறையாக ஒரு வலையைப் பயன்படுத்தும்போது அதில் பாம்பு அகப்படுமாயின் அவ்வலையினை எரித்துவிடவோ தூர வீசிவிடவோ செயவர்.

தெலுங்குப் பெஸ்தர்கள் காமம்மாவைத் தங்கள் குலதெய்வமாக வழிபடுகின்றனர். இத் தேவதையை வழிபடும்போது அவளுடைய புராண வரலாற்றைச் சொல்ல மாவர் சாதிப் பம்பாலர்களை அமர்த்திக் கொள்வர். தங்கள் தேவதைக்கு ஊனையோ, மதுவையோ படைக்கும் பழக்கம் இவர்களிடமில்லை.

பிற தெலுங்குச் சாதியாருள் உள்ள இல்லப் பெயர்கள் எனப்படும் புறமணக் கட்டுப்பாடுடைய (குலங்கள்) கோத்திரங்கள் பெஸ்தர் சாதியிலும் உள்ளன. இக் கோத்திரங்களுக்குரியவர்களுக்கெனச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. உதாரணமாக மல்லே கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மல்லிகைச் செடியைத் தொடமாட்டார்கள். இப்பல கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்

காட்டு இலுப்பை (*Bassia latifolia*) மரத்தைத் தொடவோ பயன்படுத்தவோமாட்டார்கள். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் புச்சனன் எழுதியுள்ள குறிப்புகள் வருமாறு:-* "கருநாடகத்தில் எங்கும் பல்லக்குத் தூக்கிகள் தெலுங்க வழியினரே. கருநாடகர்மொழியில் இவர்கள் தெல்கபெஸ்தர் எனஅழைக்கப்பட்டாலும் இவர்கள் மொழியில் 'பாய்' என்றே அழைக்கப்படுகின்றனர். பல்லக்குத் தூக்குவதோடு இவர்கள் மீன் பிடித்தலையும், சாராயம் காய்ச்சுவதையும் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். இவர்களுள் செல்வம்படைத்தவர்குடியானவர்களாக மாறியுள்ளனர். இச்சாதியரில் எவரும் விவசாயக் கூலிகளாக என்றும் பணி செய்யச் செல்வதில்லை. இவர்களுடைய பரம்பரைத் தலைவன் 'பெத் பூவி' என்றழைக்கப்படுகிறான். சென்னையில் உள்ள ஐரோப்பியர்கள்,எல்லாச் சாதியாரின் தலைவர்களையும் இந்தப் பெயரையே தந்து அழைக்கின்றனர்." பெஸ்த போயிகள் அல்லது மசூலிப்பட்டினத்தைச் சேர்ந்த சுமை தூக்கிகள் பற்றிய தனது குறிப்பில், கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த திரு எச். ஜி. பெரெண்டர்காஸ்ட் பின் வருமாறு கூறியுள்ளார்.† "இவர்கள் நம்பிக்கைக்குரிய பணியாளர்கள். இவர்களுடைய ஆங்கிலேய எசமான் பதவி உயர்வு பெற்றுச் சென்னை செல்லும்போது தங்கள் நம்பிக்கைக் குரிய பெஸ்தர்களையும் உடன் அழைத்துச் செல்கின்றனர். அன்றிலிருந்து இன்றுவரை பெஸ்த போயிகள் பொதுப்பணி நிலையங்களிலும், வணிக அலுவல் நிலையங்களிலும் நம்பிக்கைக்குரிய உதவியாளர்களாக அமர்த்தப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து இவர்கள் தங்கள் நற்பெயரைக் காப்பாற்றிக் கொண்டுள்ளனர்."

பல்லக்குத் தூக்குபவர்களின் 'போயி' என்ற பெயரின் சிதைவான வடிவமே 'பாய்' என்ற சொல் என்பதனைக் காட்ட

---

* சென்னையிலிருந்து மைசூர், கன்னட, மலபார் வழியான பயணம், (Journey from Madras through Mysore, Canara and Malabar.)

† இந்திய தொல்லியல் தொகுதி - 18,1889, (Ind. Ant. XVIII, 1889).

யேலும் பர்னலும்* பல எடுத்துக் காட்டுக்களைத் தந்துள்ளனர். லார்ட் கிளைவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய கர்ரச்சி யொலி (*Carraccioli*) 1785–இல் கர்னல் லாரன்சின் பல்லக்குத் தூக்கிகளான 'பாய்ஸ்', பயணத்தின்போது சற்றுக் களைப் படையவே மராட்டியர்களால் பிடிக்கப்பட்டனர் என எழுதி யுள்ளார், 1563-இல் பரரஸ் (**Barras**), "ஓடும் குதிரைமேல் அமர்ந்து பயணம் செய்யும் தங்கள் எசமானர்கள் உடம்பின் எந்தப் பகுதியின் மேலும் கொஞ்சமும் சூரியனின் வெயில் படாத படி திறமையாகக் குடையை உயர்த்திப் பிடித்தபடி பின்னால் ஓடும் 'பாய்'என அழைக்கப்படும் ஆண்கள் அங்கு இருந்தனர்."† என எழுதியுள்ளார். காஞ்சிபுரத்தில் பதிந்துள்ளபடி பெஸ்தர் கள் தங்கள் அடையாளச் சின்னமாகக் கொள்வது வலையே யாம். ‡

பேஸ்யா - Bēsyā (*a prostitute*)

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் ஒரியக் கூனியர் களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இப்பெயர் வேசியர் என்ற சொல்லின் திரிந்த வடிவமாகும்.

பெட்ட – Betta (*hill*)

குருபர்களின் ஓர் உட்பிரிவு.

பேவினர் - Bēvina

பேவினர் அல்லது பேவா எனப்படும் இச்சொல் வேம் பினைக் குறிக்கும். இது குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு டைய ஒரு குலப் பெயராகவும், காட்டுக் குறும்பர்களின் ஓர் உட்பிரிவாகவும் வழங்குகின்றது. வேப்ப மரம் இந்துக்களால் புனிதமானதாகக் கருதப்படுவது. பெரியம்மைக்குரிய தேவதை யுடனும் பிற ஊர்த் தேவதைகளுடன் பல சடங்களில் இம்மரம் தொடர்புடையதாக உள்ளது.

---

* ஹாப்சன்-ஜாப்சன் (Hobson-Jobson)

† Decades de Asia

‡ ஜெ. எஸ். எப். மக்கன்சி, இந்தியத் தொல்லியல்தொகுதி, 4, 1875.
(J.F. Mackenzie Ind, Ant, IV, 1875)

பாக் - Bhāg (tiger)

புலி எனப் பொருள்படும் இது விசாகப் பட்டினத்தைச் சார்ந்த பூமியர், பொட்டர், தொம்பர், கடபர், மட்டியர், ஓமனட்டொர், பெண்டியர், ரோணர் ஆகிய பல வகுப்பாரின் குலப்பெயர் இதற்குச் சமமாகப் 'பாகோ' என்ற பெயர் கஞ்சம் மாவட்டத்தில் வழக்கில் உள்ளது.

பாகவதட்டுலு - Bhāgavatulu

தெலுங்கு நாட்டில் நாடகம் நடிப்பவரெனப் பதியப் பட்டுள்ள பெயர். புராணங்களில் ஒன்றான பாகவதத்திலிருந்து கதைகளையும், வரலாறுகளையும் இவர்கள் நிகழ்த்திக் காட்டு வதால் இப்பெயர் பெற்றனர்.

பக்ட - Bakta

பார்க்க: பகடர் (*See:* **Bagata**)

பண்டாரி - Bhandāri

பார்க்க: கெலசியர் (*See*: **Kelasi**)

பாண்டெ - Bhānde

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில், "கும்பாருவின் ஓர் உட்பிரிவினரான கஞ்சத்தைச் சேர்ந்த மாலையரான மண் பாண்டக்காரர் இவர்கள். இப்பெயர் வடமொழிச் சொல்லான பானையைக் குறிக்கும் பாண்டர் என்பதிலிருந்து வந்துள்ளது." எனக் கூறப்பட்டுள்ளது.

பரத்துவாஜர் - Bharadwāja

இது பட்ராசுக்களுக்குரிய பிராமண கோத்திரம். பரத்து வாச முனிவர் பிரஹஸ்பதியின் மகனாவார். பாண்டவர் களுக்குக் குருவாக விளங்கியவர்.

பாடியா – Bhātia

1991 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் சுமார் நானூறு பாடியக்கள் வரை பதியப்பட்டுள்ளனர். பம்பாய் வீவரப்

பட்டியலில், ''பாடியாக்கள் யாதவகுலத்தைச் சேர்ந்த பாடி இராசபுத்திரர்கள். இவ்வகுப்பினர் கூரிய அறிவாற்றல், செயல் வேகம், துணிவு, சிக்கனம், வளைந்து கொடுக்கும் பண்பு, தன்னல நாட்டத்தோடு கூடிய செயலாண்மை ஆகியன வாய்க்கப் பெற்றவர்கள். இப்பிரிவைச் சேர்ந்த பம்பாயி லுள்ள சில பெருஞ்செல்வர்கள் கையில் ஒரு காசு கூட இல்லாமல் வாழ்வைத் தொடங்கியவர்களே. இவர்களுள் பெரும்பான்மையோர் மொத்த வாணிபம் செய்பவர்களாகவும் பங்கு வாணிப முகவர்களாகவும் உள்ளனர். இவர்கள் சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகப் பெருஞ்செல்வர் களாகி விட்டதோடு, குறிப்பிடத்தக்க வகுப்பாராகவும் ஆகி விட்டனர்.'' எனக் கூறப்பட்டுள்ளது. தென் இந்திய நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் போல பாடியாக்கள் கடல் கடந்து தொலைவிலுள்ள நாடுகளுக்குச் செல்கின்றனர். கிழக்கே சீனம் வரை இவர்கள் சென்றிருக்கக் காணலாம்.

பட்டா - Bhatta

கௌடா சாதியின் ஓர் உட்பிரிவு.

பட்கலி - Bhatkali

மேற்குக்கடற்கரைக்குரிய முகமதிய வகுப்பார். வட கன்னட மாவட்டத்திலுள்ள பட்கல் என்ற இடத்தில் இவர்கள் முதன் முதல் குடிபுகுந்ததாகச் சொல்லப்படுகிறது.

பட்ராசு - Bhatrazu

பட், பட்ராசு, பட்ராஜ் எனப் பல்வேறு பெயர்களால் வழங் கப்படும். இவர்கள் 1891, 1901-ஆம் ஆண்டுகளிலான மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கைகளில் இசைவாணராகவும் கதைப்பாடல்கள் ஒப்பிப்பவராகவும் கூறப்பட்டுள்ளனர். ''தெலுங்கு பேசும் இவர்கள் வட சர்க்கார் பகுதியிலிருந்து வந் தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் முதலில் இந்து சமய அரசர்களின் அவைகளில் குலப் பெருமை பாடுபவர்களாகவும், அப்பகுதிக்குரிய அரசர்கள், மாவீரர்கள் ஆகியோரைச் சிறப் பித்துக் கதைப்பாடல்கள்பாடுவதைத்தொழிலாகக்கொண்டபுகழ்

பாடிகளாகவும் அரசவைகளைச்சார்ந்திருந்தார்கள். ஹைதர்அலி இந்து அல்லன் எனினும் தன் படையில் இவர்கள் கூட்டம் முன் செல்வதை மிகவும் விரும்புவான். இந்து, முகமதியத் தலைவர்களின் அரசவைகளின் ஓர் அங்கமாக இவர்கள் இன்றும் விளங்குகின்றனர். எந்தப் பொருள்பற்றியதாக இருப்பினும் முன் கூட்டியே தயார்படுத்திக் கொள்ளாமல் தங்கு தடையின்றிச் செய்யுளுக்கும் வாழ்த்துக்கும் இடைப்பட்டதானதொரு நடையில் வியக்கத்தக்க வகையில் போதுமெனத் திருப்தியடையும்படியாகச் சொல்லும் சொல்வல்லார்கள் இவர்கள். படை வீரர்கள், போருக்கு அணிவகுத்துச் செல்கையில் அப்படைவீரர்களுக்கு முன் அவர்களுடைய முன்னோர்களின் வீர தீரச் செயல்களைப் புகழ்ந்து பாடியபடி நடந்து அப்படை வீரர்களை வீர எழுச்சியுறச் செய்வதையே பட்ராசர் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் இன்று இரவலர்களாகத் திரிகின்றனர்." எனவும் இவர்களைப் பற்றி மேலும் கூறப் பட்டுள்ளது.

1871 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பட்ராசர்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது:- "பூணூல் அணியும் இவர்கள் சத்திரியர்கள், பெருந்தலைவர்கள் ஆகியோர் புகழ்பாடுவோராகவும், அருகிருப்போராகவும் விளங்குகின்றனர். ஓர் இடத்தில் நிலைத்திராது சுற்றித் திரியும் இவ்வகுப்பார் பெருந்தலைவர்களின் ஊழியர்களோடு சேர்ந்துகொண்டும், நாடோடிப் பாடல்களைப் பாடிப் பொதுமக்களை மகிழ்வித்தும் வாழ்க்கை நடத்துவர். இவர்களில் பெரும்பாலனவர்கள விட்டுணுவை வழிபடுபவர்களே. ஒரே ஒரு மாவட்டத்தில் மட்டும் இவர்கள் ஊர்த் தேவதைகளை வழிபடுவதாகக் கூறப்படுகிறது." 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் இவர்களைப் பற்றிக் கூறப் பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "குலப்புகழ் பாடும் தொழிலினரான இவர்கள் தெலுங்கு மாவட்டங்கள் அனைத்திலும் காணப்படுகின்றனர். இந்தியாவின் பிற பகுதிகளிலுள்ள பாட் சாதியாரின் பிரிவைச் சேர்ந்தவர்களே இவர்கள். ஒரு வைசியனுக்கும் சத்திரியப் பெண்ணுக்கும் பிறந்தவர்களாகக் கருதப் படுவதால் இவர்கள் இராசாக்கள் என அழைக்கப்படுகின்றனர். மன்னர்களின் மரபு வரலாற்றையும், குடும்பங்களின் கால்வழிச்

செய்திகளையும், நாடோடிக் கதைகளையும் இவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். பழைய இந்து மன்னர்களிடம் அவர்களின் புகழ் பாடுபவர்களாகவும், கால்வழி மரபு எடுத்துரைப்பவர்களாகவும், பழக்கவழக்கங்கள் பற்றி எழும் ஐயம் நீக்குபவர்களாகவும் இருந்துவந்துள்ளனர். இன்று ஒரு சிலர் மட்டும் புகழ்பாடிகளாக இருக்கப் பெரும்பாலோர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். காபுகளோடும் வெலமர்களோடும் இவர்கள் உடன் உண்பர். பிறப்பு, இறப்பு, மணம் முதலானவற்றிற்கான இவர்களின் சடங்குகள், காபுகளின் சடங்குகளையே ஏறத்தாழ ஒத்தமைவன. ராஜு என்பது இவர்கள் சாதிக்குப் பொதுவான பெயர்.''

பட்ராசர் பற்றித் திரு டபிள்யூ. பிரான்சிஸ் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:– ''இவர்கள் பட்கள் எனவும் மாகதர் எனவும் அழைக்கப்படுகின்றனர். வண்டி, இராசா அல்லது தெல்காண்ய எனவும் மாகத, கணி அல்லது அக்ரகாரெகல எனவும் இரு அகமணக் கட்டுப்பாடுகளைக்கொண்ட இருஉட்பிரிவுகளாக இவர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். (சில பட்ராசர்கள் வண்டி என்பதும் மாகதர் என்பதும் சிவபெருமானுடைய திருமணத்தின்போது அதனை அறிவித்தஅதிகாரிகளாகப் பணியாற்றியவர்களின் தனிப்பட்டபெயர்கள் எனக்கூறுகின்றனர்.) இவ்விரு பிரிவுகளும் மேலும் பல புறமணக்கட்டுப்பாடுடைய குலங்கள் அல்லது கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அத்ரேய, பாரத்துவாச, கௌதம, காசியப, கௌண்டன்ய என்பன அவற்றுள் சில பிரிவுகளாம். இவை அனைத்தும் பிராமணர்களுக்குரிய கோத்திரங்களாக இருப்பது இச்சாதி வைசியனுக்கும் சத்திரியப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவர்கள் வழி வந்தது என மனு சொல்லும் கதையை மெய்ப்பிப்பதாக உள்ளது. பட்ராசர்கள் எல்லோருமே இன்று பூணூலை அணிந்து கொண்டவர்களாகக் காயத்திரி மந்திரம் ஓதி வருகின்றார்கள் எனக் கூற இயலாது. இவர்கள் மணச் சடங்குகளுக்குப் பிராமணப் புரோகிதர்களையும், சாவுச் சடங்குகளுக்கு ஜங்கம், சாதானிகள் ஆகியோரையும் அமர்த்துகின்றனர். எல்லாச் சடங்குகளையும் வேதநெறிப்படி மேற்

கொள்ளாமல் அதற்குப் பிற்பட்டதான புராண மரபுப்படியே இவர்கள் செய்கின்றனர். கைம்பெண்கள் எக்காரணங் கொண்டும் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவ தில்லை எனினும் இவர்கள் மீன், ஆடு, பன்றி ஆகியவற்றின் ஊனினை உண்கின்றனர்; பசுவின் ஊனினை உண்பதில்லை. இத்தகைய முரண்பாடுகள் ஓரிய சாதியாரிடையே பொதுவாகக் காணப்படுபவை. பட்ராசுக்கள் வட நாட்டுச் சாதியார் எனவும் அவர்களை வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1295 முதல் 1323 வரை அரசாண்ட சத்திரிய குலத்தைச் சேர்ந்த பிரதாபருத்ர மன்னனே முதலில் தெற்கே வரவழைத்தா னெனவும் கூறும் வழக்கு உள்ளது. அந்த அரசு வீழ்ந்த பின், இவர்கள் சிறு சிறு பகுதிகளில் தலையெடுத்த ரெட்டி, வெலம குலக் குறுநில மன்னர்களின் அவைகளில் பாணர்களாக வும், வைதாளிகராகவும் ஆயினராதல் வேண்டும். இச்சாதியினர் தெலுங்கு இலக்கியத்தில் நல்ல பயிற்சி உடையவர்களாக இருத்தலோடு வசு சரித்திரம் படைத்த இராமராசபூசனர் போன்ற கவிஞர்களையும் தோற்றுவித்துள்ளனர். பட் என்பதே இவர்களுக்குரிய வழக்கமான பட்டப்பெயர். சிலபோது அதனுடன் ராசு அல்லது மூர்த்தி என்பதையும் இணைத்துக் கொள்வர்.''

வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு எச்.எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளவை வருமாறு:- ''இன்று பட்டுராசுக்கள் பயிர்த் தொழில் செய்தும் பல்வேறு சூத்திர சாதியார்களின் குலப் பெருமைகளை அச்சாதியாரின் மண நிகழ்ச்சியின்போதும் பிற சடங்குகளின் போதும் பாடியும் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் பாடும் குலப்பெருமைகள் பெரும்பாலும் இவர்க ளாகவே படைத்துக் கூறுவனவாயிருத்தல் கூடும். இவர்கள் தங்களைச் சத்திரியர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். எனினும் இவர்களுள் பலர் முகமதியர்களாகவும் வேறு சாதியின ராகவும் இருப்பது தெரிய வந்துள்ளது. அவ்வாறு தங்களைப் பட்ராசுக்கள் எனக் கூறிக் கொள்ளும் பிற சாதியார் நினைத்த வுடன் ஒருவர் புகழ்பாடும் செய்யுள் படைப்பதில் வல்லமை படைத்தவர்கள். இதனாலே அரசர்கள் தங்கள் புகழ்பாட இவர் களை அமர்த்திக் கொண்டனர். இதனாலேயே இவர்கள்

தங்களைப் பட்ராசுக்கள் எனக் கூறிக் கொள்ளலாயினர். பழக்க வழக்கங்களில் இவர்கள் இராசுக்களை ஒத்திருப்பினும் இறந்த வர்களைப் புதைக்கவே செய்கின்றனர் எனக் கூறப்படுகிறது." அனந்தப்பூர் மாவட்ட விவரத்தொகுப்பில், பட்ராசுக்கள் ஊர்ப் பெருமக்களைப் புகழ்ந்து கவி பாடி ஊர் ஊராகத் திரிந்து அவர்களிடமிருந்து பழைய துணி, கூலம், பணம் ஆகிய வற்றைப் பரிசாகப் பெற்று வருகின்றனர் எனக் கூறப் பட்டுள்ளது. கர்நூல் மாவட்டக் கையேட்டில், "உயர் சாதி யினர் (கம்மர் போன்றோர்) பட்ராசுக்களுக்கு மண நிகழ்ச்சி யின் போது ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டும். சில பட்ராசுக்கள் ஸ்தொடரியமும் இனாமும் பெற்றுள்ளனர்." எனக் கூறப்பட்டுள்ளது. ஸ்தொட்ரியம் என்பது வேதங்களில் வல்லவர்களுக்கோ கல்வியில் சிறந்தவர்களுக்கோ தரப்படும் நிலக்கொடை ஆகும். இனாம் வரிகொடாமல் அனுபவித்துவரத் தரப்படும் நிலம்.

வெலமர், கம்மர், காபு ஆகிய சாதியாரோடு பட்ராசுக்கள் கொண்டுள்ள உறவுத் தொடர்பாகப் பின்வரும் கதை கூறப் படுகிறது. முன்னொரு காலத்தில் பில்லலமாரி பெத்தால ரெட்டி என்பவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் இருவர் பயிர்த்தொழிலில், ஈடுபட மூன்றாவது பிள்ளை போர்ப்படை வீர னாக விளங்கினான். அவனுக்கு எழுபத்தி நான்கு பிள்ளைகள். அவர்கள் அனைவருமே போர்ப்படையில் தளபதிகளாக இருந் தனர். பிரதாப ருத்ரன் ஆட்சிக் காலத்தில் ஒரு சமயம் அவர்கள் வாரங்கல் கோட்டையில் தங்கியிருக்கும்போது தங்களுக்குள் பகைகொண்டு கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். இதனை அறிந்த அரசன் அவர்களைத் தன் அரசவைக்கு அழைத்தான். அப்போது கோட்டை வாயிலில் ஒரு வாளினைக் கட்டித்தொங்க விடும்படி அவன் ஆணை பிறப்பித்தான். தளபதிகளான அவ்வீரர்கள் வாளுக்கு அடியே புகுந்து செல்வதை அவமானாகக் கருதி அதனடியில் செல்லாமல் சிலர் அதன் மீதே பாய்ந்து உயிர் விடலாயினர். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த பட்ராசு ஒருவன், உயிர்விடாமல் எஞ்சியிருக்கும் மற்றவர்களுக்கு வாளின் அடியில் செல்லாமல் தப்ப உதவுவதாகக் கூறி அரசனிடம் சென்று

ஒரு பிராமணன் அரசனைக் காண வர விரும்புவதாகக் கூறினான். உடனே கோட்டை வாசலின் குறுக்கே கட்டப்பட்ட வாளினை அகற்ற மன்னன் ஆணையிட்டான். தங்களுக்குப் பட்ராசு செய்த உதவிக்குப் பெரிதும் மகிழ்ந்த படைத் தளபதிகள் பட்ராசுக்களைத் தங்கள் ஆதரவில் வைத்துக் கொண்டதோடு அவர்களை மதித்து நடத்தவும் தொடங்கினர். இன்றும் காபு, கம்மர், வெலமர் ஆகியோர் மணங்களின்போது பட்ராசு ஒருவன் பணிக்கு அமர்த்தப்படுகிறான். மணமகனை மணக் கோலத்தினனாக அலங்காரம் செய்வதும், சமயச் சின்னங்கள் அணிவிப்பதும், உதவிகள் செய்பவனாக மணச் சடங்குகள் முடியும்வரை அருகிருப்பதுமே அவன் கடமைகள். அவன் இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றிலிருந்து சில பாடல்களைப் பாடுவதோடு பிராமணர்களையும், மணமக்கள் குலப் பெருமையையும் புகழ்ந்து பாடவும் செய்வான். ஒரு காபு மணத்தில் பாடப்பட்ட பாடல் வருமாறு:-"அன்வ வெம ரெட்டி மலைபோலப் பணம் குவித்தார். தன் தம்பி பின்ன பிரம்ம ரெட்டியோடு சேர்ந்து அக்ரகாரங்கள் கட்டினார். கொன்னெ புத்த ரெட்டி, இராமாயணம் படிப்பதற்காகப் பெருந்தொகை செலவு செய்து, அதனை ஆர்வத்தோடு கேட்டார். பண்டமல்ல ரெட்டி பல குளங்களை வெட்டுவித்தார். அவர்கள் பரம்பரையில் வந்த நீங்கள் நல்ல செல்வத்தோடு வாழ்வதோடு தான தர்மங்களும் செய்கின்றீர்கள்." கம்மர்களுடைய வீட்டிலே பின் வரும் பாடல் ஒப்பிக்கப்படும் :-"எழுபத்தேழு பிள்ளைகளுள்ளே பொப்பலி நரசிம்மன் பெரும் வீரனாய் இருந்தான். அவனைக் கம்மவைத் (ஓர் அணி) தேடிக் கெட்ட சொற்களைப் பேசாமல் போகும்படி கூறினர். ஓடி மறைந்தவர்கள் வெலமர். அதனைத் தேடிக் கண்டவர்கள் கம்மர்."

தங்கள் சடங்குகளில் பட்ராசுக்கள் தெலுங்கர்களையே பெரிதும் தழுவியவர்களாக உள்ளனர். மணச் சடங்கின்போது மணமக்கள் ஜுவ்வி (*Picus Tsiela*) மரத்தாலான பலகையின் மீது அமர்கின்றனர். தெலுங்கு ஜணப்பன்களுக்கு இவர்கள் குருவாகப் பணியாற்றுகின்றனர். ஜங்கமர்கள், பண்டாரங்கள் தவிரக் குருவாக இருந்து சமயநெறி போதிக்கும் பிராமணரல்லாத

சாதியார் இவர்கள் மட்டுமேயாவர். காஞ்சிபுரத்தில் இருக்கும் பட்ராசுக்களின் அடையாளச் சின்னம் வெள்ளித் தண்டாகும்.*

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பாடொ, கணிராசு, கன்னாஜிபாட், பதிகராசு என்பன ஒரு சாதியாருக்குரிய வேறு பெயர்களாகக் காணப்படுகின்றன. அண்ணாஜிபட் என்பது பட்ராசுக்களின் ஓர் உட்பிரிவாக உள்ளது.

தங்களைப் பட்ராசுக்கள் அல்லது பட்டுத் துருக்கர் எனக் கூறிக் கொள்ளும் குற்ற இனப் பிரிவினரைப் பற்றி 1881-ஆம் ஆண்டு சென்னை காவல்துறை வாராந்திரச் சுற்றறிக்கையில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.† கடப்பை,வட ஆர்க்காடு மாவட்டக் காவல் துறையினரால், இவர்கள் குற்றவாளிகளாகக் கருதப் படுவதோடு ஒருவன் ஊரைவிட்டுப் புறப்படுவானாயின், அது பற்றிக் குறிப்பும் அவர்களால் பதியப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் ஊரைவிட்டுத் தொலைவில் உள்ள இடங்களில் திருட்டுக் களை நடத்தி, திருடிய பொருள்களை ஊருக்குத் திரும்புமுன் காசாக மாற்றிவிடுவதால் இவர்களுக்கு எதிராக வழக்கு பதியச் சாட்சியங்களைப் பெறுவது கடினம். ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு பேர் ஊரைவிட்டுப் புறப்படுவர். மூன்று நான்கு பேர் கொண்ட குழுக்களாக இணைந்தே இவர்கள் வழக்கமாகச் செயல்படுவர். அடிக்கடி பல மாதங்கள் தொடர்ந்து ஊரைவிட்டு வெளியே தங்குவர். தங்கள் குழுவினரை விட்டுப் பிரிந்திருக்கும் போது ஒருவருக்கொருவர் தங்கள் நடமாட்டம் பற்றி அறிவித்துக் கொள்ளச் சில தனி வழிமுறைகளைக் கையாள் கின்றார்கள். அவற்றுள் ஒரு முறை மட்டுமே தெரியவந்துள்ளது. அது அவர்கள் உண்ணும் இலைக் கலங்கள் வழிச் செய்தி தெரிவித்தலாகும். ஒரு தனிப்பட்ட முறையில் இலைகளைத்

---

* ஜெ. எஸ். எப். மெக்கென்சி, இந். தொல். தொகுதி. 4. 1875. (J.S.F. Mackenzie, Ind. Ant. IV, 1875.)

† பார்க்க. எப், எஸ். முல்லலியின் சென்னை மாநிலக் குற்ற இனப் பிரிவினர் பற்றிய குறிப்புகள். (*See:* F.S. Mullaly, Notes on Criminal Classes of the Madras Presidency.)

தைத்து, அதில் உணவு உண்டபின் அதனை முன் கூட்டியே முடிவு செய்திருக்கும் இடங்களில் விட்டுச் செல்வர். இந்த இலைக் கலங்களைக் காவல் துறை வல்லுநர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியும். அந்த வட்டாரத்தில் அண்மையில் பட்ராசுக்களின் நடமாட்டம் இருந்திருக்கிறது என்ற செய்தியை மட்டும்தான் அவர்கள் அந்த இலைக் கலங்களை அடையாளம் கண்டு கொள்வதால் அறிந்து கொள்ள முடியும். ஊர் திரும்பிய உடன் இவர்கள் தங்கள் திருட்டுக்கள் பற்றிய கணக்கு வழக்குகளை ஒப்படைப்பதோடு திருட்டு வருமானத்தை ஊரார் அனைவருடனும் பகிர்ந்துகொள்கின்றனர். திருட்டில் ஈடுபட்டவர்கள் மட்டும் இரட்டிப்புப் பங்கு பெறுவர். இவர்கள் வழக்கமாகப் பிராமணர்களைப் போல வேடமிட்டுக் கொள்வர். அண்மையில் இவர்களுள் சிலருடைய வீடுகளைச் சோதனையிட்டபோது, பிராமணர்கள் அணியும் பட்டுத் துணிகளும் உருத்திராட்சம், கழுத்தணி, சாலிக்கிராமக் கற்கள் ஆகிய பிராமண வேடத்திற்குரிய பிற பொருள்களும் கண்டுபிடிக்கப் பட்டன. இவர்கள் வடமொழியும் கற்றுத் தங்களைப் பிராமணராகக் காட்டிக் கொள்ள வேண்டிய அனைத்துத் தகுதிகளும் பெற்றுள்ளனர். தெலுங்குப் பகுதியைச் சேர்ந்த பிராமணன் இவர்கள் உண்மையான பிராமணர்கள் அல்லர் என்பதை விரைவில் கண்டுணர்ந்து கொள்வான். இதனாலேயே இவர்கள் தங்கள் ஏமாற்றுவித்தைகளைத் தமிழ்ப் பகுதிகளில் நடத்துகின்றனர். முரட்டுத்தனமான நாகரிகமில்லாத தெலுங்கர்கள் என இவர்களைப் பற்றித் தவறாகக் கணிக்கின்றனர். அடிக்கடி சத்திரங்களில் தங்கும் இவர்களுடைய மதிப்புக்குரிய தோற்றம் கண்டு யாரும் இவர்களைச் சந்தேகிப்பதில்லை. அங்குச் சமயம் பார்த்துக் குப்பை கூளங்கள் நிரப்பப்பட்ட தங்கள் பைகளையும் மூட்டைகளையும் மாற்றாக வைத்துவிட்டுப் பயணிகளினுடைய பொருட்களோடு கூடிய பைகளுடன் மறைந்து விடுவர்.'' இது பற்றித் திரு பாப்பா ராவ் நாயுடு மேலும் கூறுவதாவது:– ''திருவிழாக்களின் போதும், விருந்து நிகழ்ச்சிகளின் போதும் இவர்கள் அடிக்கடி தங்கள் திருட்டுத் தொழிலை மேற்கொள்கின்றனர். குளங்களில் குளிக்கும்போது நகைகளையும், துணிகளையும் கரையில் விட்டுச் செல்பவர்களின் பொருள்

களை இவர்கள் திருட முற்படுவர். இதனாலேயே குளத்தைச் சுற்றித் திருடுபவர் என்ற பொருள்பட இவர்கள் குளம் சுற்றிப் பார்ப்பான் எனக் கூறப்படுகின்றனர். புகைவண்டிகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் இவர்கள் ஏமாற்றுக்கள் சத்திரங்களிலும், குளங்களிலுமே நடத்தப்பட்டன.''*

வட ஆர்க்காடு மாவட்டப் பட்டுத்துரக்கர் பற்றித் திரு எச்.எ. ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பின்வருமாறு கூறுகிறார்:- ''அறிவுக் கூர்மையும், கல்வித் தகுதியும் பெற்ற பட்டுத்துரக்கக் குற்றவாளிகள் சிலர் சந்திரகிரி வட்டத்தின் வடமேற்குப் பகுதியிலும் புங்கனூருக்கு வடக்கிலும் காணப்படுகின்றனர். இவர்கள் உண்மையில் முகமதியர்களே. ஆனால் இவர்கள் அந்தச் சமய நெறிப்படி வழிபாடு நடத்துவதோ, அதன் விதிமுறைப்படி நடப்பதோ செய்வதில்லை. ஏமாற்றிப் பிழைப்பதைத் தவிர வேறு தொழிலில் ஈடுபடாத இவர்கள் ஏமாற்றுவதில் திறமைசாலிகளாக உள்ளனர். திறமையோடு வேகமாகப் பல மொழிகளையும் பேசும் இவர்கள் பெரும்பாலும் வடமொழியும் பயின்று எச்சாதியாரைப் போலவும் நடிக்கும் ஆற்றல் மிக்கவர்களாக உள்ளனர். ஒரு குறிப்பிட்ட வசதிபடைத்த குடும்பத் தலைவனை ஏமாற்ற முடிவு செய்தபின், அவனுடைய பணியாளாகச் சேர வாய்ப்பை எதிர்பார்த்திருந்து, அவ்வாறு சேர்ந்தபின் அவருடைய நம்பிக்கைக்கும் உரியவராகும்படி நடந்துகொள்வர். இறுதியில் அந்த நல்லெண்ணத்தின் பயனாக எவ்வளவு பொருள்களைச் சமயம் பார்த்துச் சுருட்ட முடியுமோ அவ்வளவையும் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகிவிடுவர். கள்ள நாணயம் செய்தல், பொய்க்கையெழுத்திடுதல், மருத்துவரெனக் கூறி நடித்தல், தங்கம், வைரம் முதலியன உண்டாக்க முடியும் எனல், ரூபாய்த் தாள்களை மதிப்பு அதிகரிக்கச் செய்வோம் எனக் கூறல், போன்ற குற்றச் செயல்களிலும் இவர்கள் அடிக்கடி ஈடுபடுகின்றனர்.''

---

* புகைவண்டியில் திருடுபவர்கள் வரலாறு சென்னை, 1904.
(History of Railway Thieves, Madras, 1904.)

பாயிபுவொ - Bhāyipuo

1901 மக்கள் கணக்கெடுப்பில் பாயிபுவொ ஒரிய சாதி எனப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் தங்களைச் சத்திரியர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். பாயிபுவொ என்ற இந்தச் சொல் உடன் பிறந்தவன் மகன் எனப் பொருள்படுவது. இப் பொருளில் இது அரசரின் உடன் பிறந்தவர்களின் காமக்கிழத்திகளுக்குப் பிறந்தவர்கள் எனப் பொருள்தருவது. அரசர்களின் மனைக் கிழத்தியர் வழிப் பிறவாத பிள்ளைகளும் பாயிபுவொ என அழைக்கப் படுகின்றனர்.

பீமர் - Bhima

பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான பீமனின் பெயரையுடைய சவரர்களின் ஒரு பிரிவினர்.

பொலிய - Bholia (wild dog)

புறமணக்கட்டுப்பாடுடைய கொண்டரர்களின் ஒரு குலம்.

பொந்தாரியர் - Bhondāri

பொந்தாரியர் ஒரியப் பகுதியைச் சேர்ந்த கஞ்சம் மாவட்டத்தில் வாழும் அம்பட்டர்கள். "பொந்தாரி எனும் இப்பெயர் கருவூலம் என்பதற்கான பொண்டரம் என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. சமீனதார்கள் அம்பட்டர் தொழில் புரிந்து வந்தவர்களிடம் தங்கள் செல்வத்தைக் காக்கும் பொறுப்பினை ஒப்படைத்திருந்தனர். சமீன் தலைவருக்கும் முகம் மழிக்கும் பணியைச் சாதாரணமானதாகவும் பண்டாரத்தைக் காக்கும் பணியைச் சிறப்பானதாகவும் இவர்கள் மேற்கொள்வாராயினர்." எனத் திரு எஸ்.பி. ரைஸ் எழுதியுள்ளார்.* தமிழ்,தெலுங்கு அம்பட்டர்களைக் காட்டிலும் பொந்தாரியர் சமூகத்தில் சிறப்பான இடம் வகிக்கின்றனர். பல ஒரிய சாதியார் முகமழித்த பின் குளித்தாலும், பொந்தாரியர் தொடுவதால் தீட்டு ஏற்படுவதாக அவர்

---

* தென்னிந்தியர் வாழ்க்கை முறைபற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகள். (Occasional Essays on Native South Indian Life.)

கள் கருதுவதில்லை. கஞ்சம் மாவட்டம் முழுதும் பொந்தாரியர், வீட்டு வேலைக்காரர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். சிலர் கூலிகளாகவும் வண்டியோட்டுபவர்களாகவும் பணியாற்று கின்றனர். மற்றவர்கள் ஊர்த்தேவதையான தாகுராணி கோயில் பூசாரிகளாக உள்ளனர். சடங்குத் தொடர்பான ஊர்வலங் களின்போது விருந்தினரின் கால்களைக் கழுவுவதும், பூசைக்கான பொருள்களைச் சுமந்து செல்வதும், மணச் சடங்குகளின்போது மணமக்களின் புத்தாடைகள், அணிகள் ஆகியவற்றைச் சுமந்து செல்வதும் பொந்தாரியர்கள் பணியாகக் கருதப்படுகிறது. கர்ணங்களின் வீட்டு மண நிகழ்ச்சிகள், பிற சடங்குகள் ஆகிய வற்றின்போது பொந்தாரிகள் வீட்டுப் பெண் ஒருத்தியின் பணி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது என நான் கேள்விப் பட்டேன். குடியர் சாதியினும் தாழ்ந்த சாதியாருக்கு முகம் மழிக்கும் பணியில் பொந்தாரியர் ஈடுபடாத சில இடங்களில் ஒரிய பிராமணர்கள் தாங்கள் உண்ட எச்சில் இலைகளை எடுத் தெறிய இவர்களை அனுமதிக்கின்றனர். இலை எடுக்கும் இந்தப் பணி பிராமணரல்லாதார் செய்வதற்குரியதன்று என்ற வரை யறை இருந்தபோதிலும் இது அனுமதிக்கப்படுகிறது.

கொடொமலிய, ஓடிசி, பெஜ்ஜோ என்ற மூன்று அகமணக் கட்டுப்பாடுடைய உட்பிரிவுகள் இச்சாதியிலிருப்பதாகத் தெரி கிறது. கொடொமலிய என்ற சொல் கோட்டைகளின் கூட் டம் எனப் பொருள்படுவது. இப்பிரிவினர் கோட்டைகளில் வாழும் அரசர்களுக்குப் பணி செய்யும் கடப்பாடுடையவர்கள் எனச் சொல்லப்படுகிறது. கஞ்சம் மாவட்டத்தில் மிகப் பெரும் பான்மையானவர்களாக, கொடொமலியர்கள் தங்களை ஓடிசி யர்களையும், பெஜ்ஜோக்களையும் விட உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பிரிவு களுள் மயில் எனப் பொருள்படும் மொகிரா, விளக்கு எனப் பொருள்படும் திப்பொ, நாயுருவி எனப் பொருள்படும் ஒப் பொமரங்கொ, நாகம் எனப் பொருள்படும் நாகசிர ஆகியன குறிப்பிடத்தக்கவை. ஒப்பொமரங்கொ குலப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் நாயுருவியின் வேரினைப் பல்துலக்கப் பயன் படுத்த மாட்டார்கள். திப்பொ பிரிவினர் விளக்குகளை

ஊதியோ, வேறு வகைகளிலோ அணைக்கமாட்டார்கள். குளித்துத் தூய ஆடையோ பட்டாடையோ அணிந்து மடியாக இருக்கும்போதுதான் இவர்கள் தங்கள் விளக்குகளை ஏற்றுவர். நாகசிர பல ஒரிய சாதிகளுக்கு உரிய குலப்பெயர். இதன் தோற்றம் ஒரிய பிராமணர்களின் செல்வாக்கின் வழிப்பட்டது எனக் கூறப்படுகிறது.

இச்சாதியின் பரம்பரைத் தலைவன் பேகர எனப்படுவான். இவனுக்குப் பொல்லொபய என்ற உதவியாளன் உளன். பெரும் பாலான பொந்தாரிகள் சைத்தன்யர் நெறிப்படுத்திய பரமார்த்த சமயம் எனப்படும் வைணவ சமயத்தையே பின்பற்றுகின்றனர். இவர்கள் துளசி மணிகளாலான மாலையினைக் கழுத்திலணிந் தவர்களாகவே வழிபாடு செய்வதும், உணவு உட்கொள்வதும் செய்வர். பூரிசகன்னாதர் உட்படப் பல இந்துத் தெய்வங்களை யும் பல ஊர்த் தேவதைகளான தாகுராணிகளையும் இவர்கள் வழிபடுகின்றனர்.

ஒருவன் தன் தாய் மாமன் மகளையோ, அத்தை மகளையோ மணந்து கொள்ளக் கூடாது என்பது இவர்கள் வழக்கம். குழந்தை மணமே மேற்கொள்ளப்படுகிறது. பூப்படையும் முன் ஒரு பெண் கணவனைப் பெற இயலவில்லையாயின் 'தர்ம பிபாஹ்' எனப்படும் போலி மணத்தை அவள் செய்து கொள்ள வேண்டும். அவளை ஒரு பிர (*Streblus asper*)* மரத்திற்கு அழைத்துச் சென்று அதற்கு அவளை மணமுடித்து வைப்பர். அதன்பின் தன் வாழ்நாள் முழுதும் அவள் அம்மரத்தைத் தொடவோ அதன் குச்சிகளைப் பல் துலக்கவோ பயன்படுத்தக் கூடாது. சில சமயங்களில் பூப்படையுமுன் கணவனைப் பெறமுடியாத பெண்ணினை அவன் பாட்டன் போன்ற வயதான பெரியவர்களுக்கோ அக்காவின் கணவனுக்கோ போலி மணம் செய்விப்பர். பின்னர் 'இட்சாடோ பத்ரோ' எனப்படும் மணமுறிவு ஓலை எழுதப்பட்டு ஒப்புக்கான அந்தத் திருமணம் மணமுறிவு செய்யப்படும். சில சமயங்களில்

* பறையன் என்றபெயரும் இதற்குண்டு, இது நெய்தல் நில மரம் (மொ.கு.)

வில்லினையும் அம்பினையும் மணமகனாகப் பாவித்து மணம் செய்விப்பர். இச்சடங்கு 'காண்டொபிபாஹ்' எனப்படும்.

இவர்களின் வழக்கமான மணச் சடங்குகள் ஏழு நாள்கள் நடைபெறும். மண நிகழ்ச்சிக்கு முதல் நாள் தூய்மையாக்கப் பட்ட ஓரிடத்தில் பல மண்பானைகளை வைத்துச் சில சுமங் கலிப் பெண்கள் இலந்தை இலைகளையும் அரிசியையும் அதன் மீது தூவுவர். இது கண்ணேறு படுவதை விலக்கவும், அவ் விடத்தைத் தூய்மையாக்கவும் செய்யப்படுவதாகலாம். அவ்வாறு தூவும்போது மறவர்களும் கள்ளர்களும் குலவை இடுவதை நினை வூட்டும் வகையில் அப்பெண்கள் 'ஊலு உலு' என உரக்கக் கத்துவர். குயவனின் சக்கரத்திற்குப் பூசையிடும் 'சக்கொ பொந்தொ' எனப்படும் சடங்கு ஒன்றும் செய்யப்படுகிறது. மணநாளுக்கு முந்தின நாள் பகல் முழுதும் விரதமிருக்கும் மணமகன் முகம்மழித்துக் கொண்டு ஓர் அம்மியின் மீது நின்று குளிப்பான். அவன் அவ்வாறு குளிக்கும் போது சில பெண்கள் அம்மியில் காராமணி, துவரை, கடலை ஆகியவற்றை வைத்து, 'ஊலு, உலு எனக் குலவையிட்டபடி அரைப்பர். அதன்பின் மணமகன் ஆடைகளை அணிந்து மணமேடையில் அமர்வான். அப்போது பல சுமங்கலிப் பெண்கள் அவனைச் சுற்றி நின்று அவன் தலைமீது இருக்கும் வாக்கினை அம்மிக் குழவியால் ஒவ்வொருவரும் ஏழுமுறை தொடுவர். அவர்கள் 'பொண்டை வாரு' என்று சொல்லப்படும் சடங்கினை இலந்தை இலை களையும், மஞ்சள் தோய்த்த அரிசியினையும் 'ஊலு, உலு' எனக் குலவையிட்டபடி மணமகன் மீது தூவி நடத்துவர். அன்று மாலை, மறுநாள் மணநிகழ்ச்சிக்கு வேண்டிய பூணூல், ஆடையணிகள், மொக்கூடு போன்ற பல பொருள்களையும் எடுத்துக் கொண்டு மணமகனைச்சேர்ந்தவர்கள் ஊர்வலமாகக் கோயிலுக்குச் செல்வர். கடவுளை வழிபட்டு வீட்டுக்குத் திரும் பும் போது வழியில் ஏழு இல்லங்களிலிருந்து ஒரு பாத்திரத்தில் நீரினைப் பெற்று வருவர். அத்தண்ணீர் மறுநாள் மணமகன் குளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். மணமகன் இல்லத்தில் நடைபெறும் இதே போன்ற சடங்குகள் மணமகள் இல்லத்திலும் மணநாளுக்கு முந்திய நாள் நடைபெறும். மண நாளன்று மணமகன மணமேடையில் பிராமணக் குருக்கள் வழிகாட்டக்

கணபதியை வழிபட்டபின், மணமகனுக்குரிய ஆடைகளை அணிந்து, மொக்கூடு, பூணூல், கையில் கங்கணம் ஆகியன புனைந்து பல்லக்கில் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வான். பின்னர் பல்லக்கில் மணமகள் இல்லம் நோக்கிச் செல்வான். அவ்வாறு அவன் புறப்படப் போகும் சமயம், அவன் அண்ணன் மனைவி அப்பல்லக்கைப் பிடித்துக்கொண்டு செல்ல விடாமல் தடுப்பாள். அவன் அவளுக்கு ஒரு புதிய சேலையைத் தந்த பிறகே அவள் அவனைப் போக விடுவாள். வழியிலே மண மகளின் தந்தை அவனை எதிர்கொள்வான். மணமகளின் உடன் பிறந்தவன் அவன் பாதங்களைக் கழுவுவான். அவன் வருங்கால மாமனார் மஞ்சள் வண்ணச் சோற்றுருண்டைகளை அவனைச் சுற்றிச் சுழற்றி வீசியபின் அவனைத் தன் இல்லம் அழைத்துச் செல்வார். அந்த இல்லத்தின் வாயிலில் மணமகளின் தாயார் உட்படப் பல பெண்கள் அவனுக்காகக் காத்திருந்து, அவன் வீட்டை நெருங்கும்போது இலந்தை இலைகளை 'ஊலு, உலு' எனக் குலவை இட்டபடி சுற்றி வீசுவர். அவன் வருங்கால மாமியார் அவனைக் கரம் பற்றி வீட்டினுள் அழைத்துச் செல் வாள். அவன் மணமேடையை அடைந்தவுடன் மணமகளை அவள் தாய் மாமன் அழைத்து வருவான். அவள் திரைக்கு அப் பாலிருக்கும் மணமகன் மீது கொஞ்சம் உப்பைப் போட்டபின் மணமகன் அருகில் அமர்வாள். பிராமணக் குருக்கள் நெருப்பு வளர்த்தபின் மணமக்களின் கரங்களைத் தருப்பைப் புல்கொண்டு இணைப்பார். இது 'ஹஸ்த கொந்தி' என அழைக்கப்படும் திருமணத்தை உறுதிப்படுத்தும் சடங்காகும். மணமகனும் மண மகளும் பாக்கினையும் பத்துக் கடுக்காய்களையும் (*Terminalia*) தங்களுக்குள் பறிமாறிக் கொள்வர். இரண்டு புதிய துணிகளை அவர்களுக்குப் போர்த்தி அவற்றின் முனைகளை இருபத்தோரு சோழிகளையும் ஒரு காசையும் கொஞ்சம் இலந்தை இலைகளை யும் வைத்து முடிவர். இச்சடங்கு 'கொண்டியலொ' எனப்படு கிறது. மணமகளின உடன் பிறந்தவன் அடுத்து மணமகனைத் தன் கரத்தினை மடக்கித் தாக்கி ஒரு புதுவேட்டியைப் பரிசாகப் பெறுகிறான். இச்சமயம் மணமக்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் பரிசுகளைப் பெறுகின்றனர். அதன்பின் ஏழுமுறை சோழிகளை வைத்து விளையாடுவர். மணச்சடங்குகள்

இலந்தை இலைகளைத் தூவுவதுடனும், வெல்லமும் தயிரும் சேர்த்த சோற்றினை மணமக்கள் உண்பதோடும் முடிவுறும். அடுத்த இரண்டு நாள்களும் அவர்கள் மணமேடையில் அமர்ந்து சோழி விளையாட, அவர்கள் மீது அரிசியும், இலைகளும் தூவப் படும். அவர்கள் மணநாளுக்குரிய ஆடைகளைப் புனைவதோடு. குளத்தில் சென்று குளிக்காமல் வீட்டிலேயே குளிப்பர். நான்காம் நாள் மணமகளை மணமகன் கோத்திரத்தில் சேர்த்துக் கொள் ளும் சடங்கு நடைபெறும். அதன் அறிகுறியாக மணமகள் மண மகன் தரும் உணவுப் பண்டங்களைச் சமைப்பாள்.பிறகு அதனை அவர்கள் உண்பதாகப் பாவனைச் செய்வர். அன்று மாலை மணமகளை அவளுடைய தாய்மாமன் மணமேடைக்கு அருகே அழைத்துச் செல்வான். அங்கு அவள் ஓர் அம்மியின் மீது நிற்பாள். மஞ்சள் தோய்த்த நூலினை மணமேடையைச் சுற்றி ஏழு சுற்றுகள் சுற்றி, மணமேடையின் கம்பங்களில் கட்டுவர். மணமகன் மணமகளை அழைத்துக்கொண்டு அந்நூலினைத் தாண்டி மணமேடையினுள் செல்வான். அங்கு நால்வர் அவர்களுக்கு மேற்கட்டித் துணியினை விரித்துப் பிடிக்க, அவர்கள் மீது அரிசி தூவப்படும். ஐந்தாம் நாள் மணமக்களும் அவர்கள் உறவினர்களும் ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரூற்றி விளையாடுவர். ஆறாம் நாள் அதிகாலையில், மணமகன் மண மேடைமீது இருக்கும் ஒரு பானையை உடைத்து விட்டுக் கோபத்தோடு உறவினர் ஒருவரின் இல்லம் சென்று விடுவான். அன்று மாலை அவனுடைய மைத்துனன் அவனைத்திரும்ப அழைத்து வந்த பின் அவன் மணமகளோடு சோழி விளை யாட்டில் ஈடுபடுவான். 'பொண்டெபரொ' சடங்கு மீண்டும் நடத்தப்படும். ஏழாம் நாள் பூணூல், கைக்கங்கணம், மொக்கூடு ஆகியன அகற்றப்படும். பிற சாதிகளில் இருப்பதைப் போலவே கைம்பெண் ஒருத்தி தன் கணவனின் இளவலையே மணந்து கொள்ளவேண்டும் என்ற வழக்கு இவர்களிடையே உள்ளது.

இறந்தவர்களின் பிணம் எரிக்கப்படுகின்றது. ஒருவன் சாகும் தறுவாயில் இருக்கும் போது, அவனுடைய வாயில் பூரி சகன் நாதர் கோவில் பிரசாதமான சோறு கொஞ்சம் வைக்கப்படும் ஒரிய சாதியார் பலரும் நிர்மால்யம் எனப்படும் பூரி சகன்நாதர்

கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட பாதி சமைத்த அரிசியினைத் தங்கள் வீட்டில் வைத்திருப்பர். சமயப் பற்றுள்ள வர்கள் நாளும் குளித்தபின், உணவு உண்ணும் முன் இதில் சிறிதளவை வாயிலிட்டுக் கொள்வர். பிணத்தைக் குளிப் பாட்டி எண்ணெய் முதலியன பூசிப் புத்தாடை போர்த்துவர். ஈம விறகின் மீது அதனை வைத்தபின் அதன் மீது ஒரு சிவப்புத் துணி போர்த்தப்படும். தலைமாட்டில், இறந்தவர் வீட்டுக் கூரையிலிருந்து முன்பே கொண்டு வரப்பட்ட சிறு வைக்கோல் கட்டு வைக்கப்படும். ஈம விறகினை அடுக்கி ஒழுங்கு செய்யும் பணியைப் பொதுவாக ஒரிய வண்ணானே மேற்கொள்கின்றான். சுடுகாட்டில் பிணத்தை ஈம விறகருகே வைப்பர். இறந்தவரின் மகன் பிணத்தின் வாயில் கொஞ்சம் ஊறவைத்த அரிசியைப் போடுவதோடு அதன் கண்களின் மீதும் கொஞ்சம் அரிசியினை வைப்பான். பின்னர் வைக்கோலில் நெருப்பு மூட்டி மூன்று முறை பிணத்தைச் சுற்றி ஆட்டிய பின் அதனைப் பிணத்தின் முகத்தின்மீது போடுவான். அதன்பின் ஈம விறகினைச் சுற்றிப் பிணத்தினை மும்முறை தூக்கிச் சென்று அதனை ஈம விறகின் மேல் வைப்பர். இச்சடங்கு நடக்கும்போதே இறந்தவரின் உறவினர்கள் ஆளுக்கொரு விறகினை ஈம விறகின் மீதிடுவர். இறந்தவரின் மகன் குளித்தபின் ஈரத் துணியோடு இல்லம் திரும்புவான். மறுநாள் ஈமத் தீத்தணல் அணைக்கப்பட்டு, இரு எலும்புத் துண்டுகள் ஒரு பானையில் வைக்கப்பட்டுப் பாது காக்கப்படும். சாம்பல் குவிக்கப்பட்டபின் தரையில் ஒரு குச்சி யால் ஓர் உருவம் வரையப்பட்டு அதற்கு உணவுப் பொருட் களைப் படைப்பர். 'பித்தபொன' எனப்படும் வேப்பிலையிட்டுச் சமைத்த சோற்றினைப் பங்காளிகள் மட்டும் உண்பர். பத்தாம் நாள் இறந்தவரின் உறவினர்களும், நண்பர்களும் முகம் மழித்துக் கொண்ட பின் இறுதியாக, இறந்தவரின் மகன் முகம் மழித்துக் கொள்வான். அவனும் பிற பங்காளிகளும் ஒரு குளக் கரைக்குச் சென்று, அதற்கென்றே அமைக்கப்பட்ட கொட்டகை யில் புதிய பானை ஒன்றில் சோறு சமைப்பர். பின்னர் அந்தப் பானையினைப் பத்துத் துண்டுகளாக உடைத்து ஒவ்வொரு துண்டிலும் கொஞ்சம் சோற்றினை வைத்து இறந்த வனுக்குப் படைப்பர். இறந்தவரின் மகன் ஒவ்வொரு பானைத்

துண்டையும் ஒவ்வொருமுறையும் குளித்துவிட்டுக் குளத்தில் கொண்டு வீடுவான். இரண்டு எலும்புகளோடு பாதுகாக்கப் பட்ட பானை பெரும்பாலும் குளக்கரையிலுள்ள அரச மரத்தின் அடியில் புதைக்கப்பட்டுவிடும். பத்தாம் நாள் அந்த இடத்திற்குச் சென்று பானை புதைப்பட்ட இடத்தில் பத்து முறை நீர் வார்த்த பின், அதனை மீண்டும் கொண்டு வந்து வீட்டருகே புதைப்பான். அப்போது வீட்டை நெருங்கும் சமயம் அவன் தன்னுடன் வருபவர்களுக்கு முன்னதாகச் சென்று தரையில் மூன்று முறை நீரூற்றிய பின் கையினை மேல் நோக்கிச் சுழற்றுவான். பின்னர் ஓர் இரும்பால் தரையில் மூன்று அடையாளங்கள் செய்வான். இருபுறமும் கணு வெட்டப்பட்ட மூங்கிலாலோ, மரக்கால் கொண்டோ ஏழுமுறை அரிசியையோ வேறு தானியங்களையோ அங்கு அளந்து கொட்டுவான். அதன்பின் மரக்காலினைத் தன் கால்களுக்கிடையே பின்புறம் வீசியெறி வான். பின் வீட்டினுள் நுழைந்து உடைந்த கண்ணாடியைப் பார்த்து நெற்றியில் சமயச் சின்னம் தரித்தபின் அதனைத் தூர எறிவான். பதினொன்றாம் நாள் விருந்து நடைபெறும்வரை தீட்டுக்குரிய பங்காளிகள் நெய்யினையோ, ஊனினையோ உண்ணக் கூடாது.

இச்சாதியில் சிறப்புற வாழ்ந்த முதியவர் ஒருவர் இறப்பா ரானால் 'ஜொல ஜொல ஹண்டி' (துளையிடப்பட்ட பானை) எனப்படும் சடங்கு பத்தாம் நாள் இரவு நடத்தப்படுகிறது. இரண்டு கதவுகள் கொண்ட ஓர் அறையில் நுண்மணல் பரப்பப் பட்டு, அதன் மேற்பரப்பு ஒரு பலகையாலோ தட்டாலோ சமன் செய்யப்படுகிறது. மணலின் மீது, ஒரு பாக்குக்குப் பக்கத்தில் விளக்கேற்றி வைக்கப்படுகிறது. அந்த விளக்கினைச் சமையலுக் குரிய ஒரு மண் பானையால் மூடுவர். தும்பலிக்காய் மரக்கட்டை யில் துளைகளோடு கூடிய ஒருபானையினைத் தொங்கவிட்டவர் களாக இருவர் அதனைத் தங்கள் தோளில் சுமந்தபடி அந்த அறையிலுள்ள விளக்கு மூடப்பட்டவுடன் அங்கிருந்து வெளி யேறித் தெருவுக்கு வருவர். உடனே அந்த அறையின் இரு கதவு களும் மூடப்பட்டுவிடும். அவர்கள் தோளில் சுமந்து செல்லும் பானையின் சுமை அவர்கள் குளக்கரையை நெருங்க நெருங்கக் கூடிக் கொண்டே செல்லும். அவர்கள் அந்தப் பானையைக்

குளத்தில் வீசிய பின் திரும்புவர். அதன் பிறகே மூடிய அந்த அறையின் கதவினைத திறப்பர். திரும்பி வந்த அவர்கள் அந்த அறைக் கதவினை மும்முறை தட்டுவர். அதன்பின் அக்கதவு திறக்கும். கூடியிருக்கும் அனைவரும் அந்த அறையில் ஒருசேரப் புகுந்து எருது, பூனை, அல்லது மனிதனின் அடிச்சுவடுகள் ஆகிய வற்றில் எது மணலில் பதிந்துள்ளது எனத் தேடுவர். பூரான் போன வழி, வண்டித்தடம், ஏணி ஆகியவற்றின் சுவடுகளைக் கூடத் தேடுவர். அந்த அடையாளங்கள் மறு உலகம் சென்ற மனிதனால் விட்டுச் செல்லப்படுகின்றன என அவர்கள் நம்பு கின்றனர்.

பொந்தாரிகளிடையே வைதுரைக்கின்ற பெயர்கள் பொது வாகப் பலவாக உள்ளன. ஒரு குடும்பத்தில் அடுத்தடுத்து குழந்தைகள் பிறந்து அவை இறக்குமானால் இது போன்ற பெயர்களையே சூட்டுகின்றனர். இத்தகைய பெயர்களுள் ஹட்டி, பவுரிய, தண்டாசி என்பவை பெருவழக்கின.

பொன்ஜொ - Bhonjo

கஞ்சத்திலுள்ள கும்சூர் அரசரின் பட்டப்பெயர்.

பூமஞ்சி - Bhūmanchi (good earth)

காபுக்களின் ஓர் உட்பிரிவு.

பூ ராசு – Bhū (earth)Rāzu

மலைப்பகுதிகளில் வாழும் கொண்டராசுக்களிலிருந்து சமவெளியில் வாழும் ராசுக்களை வேறுபடுத்திக் காட்டும் பெயர்.

பூ வைசியர் - Bhū Vaisya (earth vaisya)

சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் வேளாளர்களும் தங்களைப் பதிந்துகொண்டுள்ள பெயர்.

பூமி தொம்பிதி - Bhūmi Dhompthi

மணத்தின்போது பூமியில் படைப்பவர்கள் எனப் பொருள் படும் இது மாதிகர்களின் ஓர் உட்பிரிவு. இவர்களின் திருமணத் தின்போது சோற்றுப் படையலைத் தரையில் வைப்பர்.

பூமி ராசுலு - Bhūmi Rāzulu (kings of the earth)

கோயிகள் சிலர் சூடிக் கொண்டுள்ள பட்டப்பெயர்.

பூமியர் – Bhūmia

பூமியர்கள் ஜெயபுரம் சமீன் பகுதியில் காணப்படும் ஒரிய சாதியைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் பயிர்த்தொழில் புரிவோர். இவர்களே முதன்முதல் மலைப் பகுதிகளில் பயிர்த்தொழில் தொடங்கினர் எனக் கூறப்பட்டு வருகிற வழக்கு ஒன்று உள்ளது. மத்திய மாவட்டங்களில் பைசாகர் என அழைக்கப்படும் இவர்களைப் பற்றிக் காப்டன் வார்டு பின்வருமாறு எழுதுகிறார்:– "நில எல்லை பற்றிய கருத்து வேறுபாடுகளில் பைசாகர் கூறும் முடிவுகள் பெரும்பாலும் இறுதியானவை என ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு ஊருக்கும் உரிய நில எல்லைகளை வரையறுக்கும் இந்த உரிமை காரணமாகவும், மண்ணின் மக்கள் என்ற உரிமை காரணமாகவும் இவர்கள் நிலம் எனப் பொருள்படும் பூமி என்ற வடமொழிச் சொல்லிலிருந்து பிறந்த தான பூமியர் என்ற பட்டப் பெயரைப் பெற்றுள்ளனர்."*

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. ஹயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். பாக் (புலி), நாக் (நாகம்) போன்ற குலப்பிரிவு பூமியரிடையே உள்ளன. ஒருவன் தன்னுடைய அத்தை மகளை முறைப்பெண் என்ற முறையில் மணக்க உரிமை கொண்டாடலாம். பொட்டதர்கள் மண முறைகளையே இவர்கள் மணச் சடங்குகள் பெரிதும் ஒத்துள்ளன. 'ஜொல்ல டொங்' எனப்படும் பரிசம், சாராயம், அரிசி, ஆடு அல்லது கோழி, மணமகளுக்குரிய புதியஆடைகள் எனப் பொருள்களாக வழங்கப்படும். சொர்க்கி மரக்கிளைகளை நட்டு மணமகன் இல்லத்தின் முன் மணப்பந்தல் அமைப்பர். தேசாரியே மணச் சடங்குகளை நடத்தி வைப்பவன். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் இறந்து போனவனுடைய தம்பியே கைம்பெண்ணான தன் அண்ணியை மணக்கிறான். தன் மனைவியை மணமுறிவு செய்து

---

* மத்திய மாவட்டங்களின் விவரக்குறிப்பு, 1870. (Gazettear of the Central Provinces, 1870.)

கொள்பவன் அவளுக்கு ஒரு ரூபாயும், ஒரு புதுச் சேலையும் மணமுறிவுக்கு ஈடாகத் தரவேண்டும். இறந்தவர்களை இவர்கள் எரிக்கின்றனர். சாவுத்தீட்டு ஒன்பது நாள் அளவினதாகும். பத்தாம் நாள் சடங்கு அன்று குளித்து முடித்தபின் சாராயத் தோடு கூட நல்ல விருந்து படைப்பர். மத்திய மாவட்டங்களில் சில பகுதிகளில் இறந்தவர்களைப் புதைத்துப் புதைகுழியின் மேல் இரண்டு அல்லது மூன்று தட்டையான கற்களை அமைக் கின்றனர்.*

புரி - Bhuri

கோண்டுகளின் ஓர் உட்பிரிவு.

பீஜம் - Bijan (seed)

போயர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். விதை எனப் பொருள்படுவது.

பில்பத்ரி - Bilpathri (beal: *Aegle Marmelos*)

போ. ர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பிந்தாணி - Bindhani (workman)

பணியாள் எனப் பொருள்படும் இப்பெயர் ஒரிய பதோயி களுக்குரிய பட்டப் பெயராகும். சிலபோது அச்சாதியின் பெய ராகவும் வழங்குகின்றது.

பிங்கியர் - Bingi

கர்நூல் மாவட்டக் கையேட்டில் பிங்கிவாண்டுலு, கூத்தாடும் நாடோடிகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர். பட்டி கொண்டாவிலுள்ள லிங்கினெனி தொட்டிகளைப் போல இவர் களில் சிலர் 'சொரொட்டியம்' கிராமங்களை அனுபவித்து வரு கின்றனர். 'சொரெட்டியம்'† என்பது பின்வருமாறு விளக்கப்

---

* மத்திய மாவட்ட இனப் பிரிவுகளிடையே வேறுபாடு பற்றிய குழுவின் அறிக்கை. (Report of the Ethnological Committee of the Central Provinces.)

† வில்சன், நீதி மற்றும் வருவாய்த்துறை சார்ந்த சொற்பட்டியல் விளக்கம். (Wilson, Glossary of Judicial and Revenue Terms.)

பட்டுள்ளது:- "வேதங்களில் வல்ல பிராமணர் நிலத்தையோ ஊர் முழுவதையுமோ மிகக் குறைந்த வரி செலுத்தி அனுபவிப்பதோ, வரி வருவாயினைப் பெறும் உரிமையைக் குறைந்த உரிமத் தொகையோடு பெற்று அனுபவிப்பதோ ஆகும். பின்னர் இந்த உரிமம் இந்தியரான அரசுப்பணி யாளர்கள், படைவீரர்கள் ஆகியோருக்கு அவர்கள் அரசுக்கு ஆற்றிய பணிக்குப் பரிசாக இந்துக்கள், முகமதியர்கள் ஆகிய இருபாலருக்கும் வழங்கப்பட்டது."

பூதியன்னய - Bhūtiannaya (ashes)

பண்டார்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப் பிரிவு.

பிடாரு - Bidāru (wanderers)

ஒட்டர்களின் ஓர் உட்பிரிவு.

பிளிமக்கார் - Bilimagga

தென் கன்னடத்தில் வாழும் மிகச் சிதைந்ததான தமிழைப் பேசும் பிளிமக்கார் நெசவாளர்களைக் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்ட, மைசூரைச் சேர்ந்த பிளிமக்காரொடு தொடர்புடையர் எனத் தவறாக எண்ணுதல் கூடாது. தென் கன்னடத்துப் பிளிமக்கார் சிலவிடங்களில் தங்களைப் பத்ம சாலேக்கள் என அழைத்துக்கொண்டாலும் பத்ம சாலே சாதியா ரோடு இவர்களுக்குத் தொடர்பு ஏதும் இல்லை. இவர்கள் பாண்டியருக்குரிய மதுரைப் பகுதியிலிருந்து வந்து குடியேறிய வர்கள் என்ற ஒரு வழக்கு உள்ளது. வெள்ளைத் தறிக்காரர் எனப் பொருள்படும் பிளிமக்கார் என்ற சாதிப்பெயர் இவர்கள் வெள்ளைத் துணிகளை மட்டுமே நெய்வதால் வந்ததாகும். தேவாங்கர்களும் தங்களைப் பிளிமக்கார் என்று அழைத்துக் கொண்டாலும் அவர்கள் வண்ணத் துணியையும் நெய்கின்றார் கள். வெள்ளைத் துணிகள் கடவுள்களுக்கும், பூதங்களுக்கும் விழாக்கள் நடைபெறும் சமயங்களில் சிலபோது தேவைப் படுகின்றன. பிளிமக்கார்களிடமிருந்து இவைகளைப் பெறுவதே வழக்கம.

பிளிமக்கார், மக்கள் தாய உரிமை முறையினையே மேற்கொள்கின்றனர். இவர்களிடையே ஏழு கோத்திரங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. மங்களூர், குண்டப்பூர், உடுபி வட்டங்களைச் சேர்ந்தவர்கள் முறையே 800, 700, 500 நகரர் கோத்திரத்தார் எனக் கூறப்படுகின்றனர். இச்சாதிக்குரிய தெய்வங்கள் வீரபத்திரர், பிரம்மலிங்கர், அம்மனொரு என்பனவாம்.

இச்சாதி அனைத்துக்குமாகப் 'பத்துக்குச் சொல்லற செட்டிகார்' என்ற பெருந்தலைவன் உள்ளான். பத்துப் பேருக்கு அறிவுரை கூறக் கூடியவன் என்பது இதன் பொருளாகும். ஒவ்வொரு ஊருக்கும் குரிகாரன் என்ற சாதாரணத் தலைவன் இருக்கிறான். பெருந்தலைவனே சாதிக்குரிய கோயில்களின் நடைமுறைப் பொறுப்புக்களை மேற்பார்ப்பான். சாதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து வரி வசூலிப்பது குரிகாரன் கடமையாகும். மணமுடித்துக் கொண்ட ஒவ்வொரு கணவன் மனைவியும் பன்னிரண்டணாவும் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட மணமாகாத ஆண்கள் ஒவ்வொருவரும் ஆறணாவும் ஆண்டுக்கொரு முறை கோயிலுக்காக வரியாகச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

பெண்கள் பூப்பு அடையும் முன்பே மணம் முடித்திட வேண்டும். மணம் முடிக்கும் முன் ஒரு பெண் பருவம் அடைவாளாகில் அவள் சாதியிலிருந்து விலக்கப்படுவாள். கைம் பெண்களுக்கு மறுமணம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. நிச்சயதார்த்தச் சடங்கே மணத்தை உறுதிப்படுத்துவதால் அது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அப்போது பெண்ணின் தந்தை பிள்ளையின் தந்தையிடம் பலர் முன்னிலையில் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு வைத்துக் கொடுப்பார். நிச்சயதார்த்தின் பின் மணம் தடைப்பட்டுவிடுமேல் இதே போலப் பலர் முன்னிலையில் பிள்ளையின் தந்தை பெண்ணின் தந்தையிடம் தட்டில் வெற்றிலை பாக்கு வைத்து நிச்சியதார்த்தம் விலக்கிக் கொள்ளப்பட்டதின் அடையாளமாக வழங்க வேண்டும். மணச் சடங்குகள் நடைபெறும் நாளுக்கு முன்தினம், மணமக்களின் தந்தையர் மும்முறை தங்களுக்குள் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வர். மணநாளன்று காலையில் மணமகளின்

தந்தை ஒரு குடத்தில் தண்ணீர் சுமந்துவரப் பெண்வீட்டார் மணமகன் இல்லம் செல்வர். இந்தக் குடத்திலிருந்து ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஒற்றைப் படையிலான பெண் களால் சிறு கலங்களில் தண்ணீர் நிரப்பப்படும். இதற்கான பெண்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஊர்த் தலைவன் மனைவியினுடையதேயாகும். இவ்வாறு தண்ணீர் ஊற்றி நிரப்பு வது ஒரு முறைமையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. இம்முறைமை ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையினதாக உள்ளது. சான்றாக, உடுபியல் நடைபெறும் மணங்களில் மங் களூர், பர்கூர், உடுபி பிரிவினர் ஒருவர் பின் ஒருவராக நீர் நிரப் புவர். பின், இந்தப் பெண்கள் மணமகன் தலைக்கு நீரூற்றுவர்.

இச்சடங்கு 'மரியாதை நீரு' என அழைக்கப்படுகிறது. அதன் பின் மணமகன் தன்னை அலங்கரித்துக் கொள்வான். அவன் நெற்றியில் பட்டம் கட்டப்படும். கணபதி எனக்கருதப்பட்டுத் தரையில் பரப்பப்பட்ட அரிசியின் மேல் வைக்கப்பட்ட பித்தளைப் பாத்திரத்தை அவன் அதன்பின் வழிபடுவான். அவனை அவன் உடன்பிறந்தவள் கணவன் மணப் பந்தலுக்கு அழைத்துச்செல்வான். அவன் உடன்பிறந்தவள், வழிபடப்பட்ட பித்தளைப் பாத்திரத்தையும், மணமகளுக்குரிய நெற்றிப்பட்ட மும் தாலியும் முடியப்பட்டுள்ள கிண்டியையும் சுமந்து கொண்டு அவன் உடன் செல்வாள். மணமகளுக்குரிய சிவப்புச் சேலையை யும் அவள் உடன்கொண்டு செல்வாள். மணப் பந்தலின் கீழ் மணமகன் ஒரு கட்டிலின் முன் நிற்பான். மணமகன் நடுவில் நிற்கப் பெண் வீட்டாரும், மணமகனோடு கூட வந்தவர்களும் எதிரெதிர் நிற்பர். ஒரு குழுவினர் எதிர் நிற்கும் குழுவினர் மீது அரிசியினைத்தூவுவர். அதன் பின் மணமகனையும் அவன் உடன் பிறந்தவளையும் மணமகள் உடன் பிறந்தவளையும் தவிர மற்ற வர் அனைவரும்அமர்வர்.மணமகனின் தந்தை கட்டிலுக்கும் பித் தளைப் பாத்திரத்திற்கும் தீப தூபங்கள் காட்டியபின், கிண்டி யையும் மற்றப் பொருட்களையும் மணமகனின் உடன்பிறந்தவ ளிடம் கொடுத்து மணமகளிடம் எடுத்துச் செல்லும்படி கூறுவார். மணமகனுக்கு முன்னே விளக்கினைச் சுற்றுவதோடு ஆரத்தியும் எடுப்பர். மணமகளின் தந்தை மணமகன் கைகளைப் பிடித்துக்

கொள்ள அவள் உடன்பிறந்தவன் அவன் கால்களைக் கழுவுவான். அதன்பின் மணமகன் ஏழு முறை கட்டிலைச் சுற்றி வந்து அதனை வணங்குவான். அக்கட்டிலின் முன், பின்னர் தேங்காய்கள் உடைக்கப்படும். இவ்வாறு உடைக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை அவன் சேர்ந்துள்ள நகரத்திற்கேற்ப வேறுபடும். மணமகன் ஏழு நகரத்தைச் சேர்ந்தவனாயின் ஏழு தேங்காய்கள் உடைக்கப்படும். பின்னர் மணமகன் கட்டிலில் அமர்வான். மணமகளும் பின்னர் உடன்வந்து அமர்வாள். அவளுடைய நெற்றிப் பட்டத்தையும், கழுத்தில் தாலியையும் அதற்கு முன்பாகவே மணமகனின் உடன்பிறந்தவள் அணிவித்திருப்பாள். கூடியிருப்பவர்கள் மணமக்களின் தாய்வழி மாமன் மார்களை அழைக்க, அவர்கள் கட்டிலை நெருங்குவர் மணமகனின் மாமன் மணமகளின் மாமனிடம் முன்பு கூறப்பட்ட சிவப்புச் சேலையைத் தருவான். மணமகள் எழுந்து வீட்டின் ஓர் அறையினுள் செல்வாள். அவள் மாமனும் அவள் பின் செல்வான். அந்த அறையில் தன் கால் பெருவிரல்களைத் தன் கைகளால் பிடித்தபடி மணமகள் சம்மணம் இட்டு அமர, அவள் மாமன் சிவப்புச் சேலையினை அவள் தலையில் விரித்துப்போட அவள் அதனால் தன் முகத்தை மூடிக் கொள்வாள். இச்சடங்கு 'தேவகிரி உடுகரே' என அழைக்கப்படும். அதன்பின் அவள் மாமன் அவளைத் தூக்கிச் சென்று கட்டிலில் மணமகனின் இடப்புறம் அமரச் செய்வான். குரிகாரன் மணமகன் மாமனிடம் பரிசப் பணமான ரூபாய் பன்னிரண்டையோ அதற்கு மேற்பட்ட தொகையையோ கொடுக்கும்படி கூறுவான். பின்னர் குரிகாரன் நகர சமூகத்தவர்களையும் ஏழு கோத்திரக்காரர்களையும் மணமக்களின் உறவினரையும் 'தாரெ' சடங்கினை நடத்த அனுமதி வழங்கும்படி கேட்பான். அவர்கள் தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்ததும், மணமக்களின் தாய்மாமன் மார் மணமக்கள் கரங்களை இணைத்து வைப்பர். மணமகளின் முகத்தை மூடியிருக்கும் சிவப்புச் சேலையை அகற்றியபின் அவர்களுடைய இணைக்கப்பட்ட கரங்களில் முதலில் மணமகளின் தந்தையும், அடுத்துக் குரிகாரனும் நீர் வார்ப்பர். குரிகாரன் நீரூற்றும்போது மூன்று நகரத்தார் விதிமுறைகளின்படி அவர்கள் கணவன் மனைவியராகிவிட்டதாக அறிவிப்பான். கூடி

இருப்பவர்கள் அவர்கள் மீது அரிசியினைத் தூவியபின் மண மக்களுக்குப்பரிசுகளை வழங்குவர். மணமக்களுக்குவழங்கப்படும் பரிசு மொய் எனப்படும். இதை வழங்குவது மொய் வைக்கிறது எனக் கூறப்படும். பெண்கள் மணமக்களுக்கு ஆரத்தி எடுத்த பின் மணமக்கள் வீட்டின்உள்ளே சென்று பாயில் அமர்வர். மணமகளின் உடன் பிறந்தவள் மணமகனுக்குப் பால் தர மணமகன் அதில் சிறிது பருகிய பின் எஞ்சியதை மணமகளுக்குத் தருவான். மீண்டும் அவர்கள் மணப்பந்தலில் கட்டிலின் மேல் வந்து அமர்வர். அவர்கள் மீது அரிசி தூவப்பட்டு, ஆரத்தி எடுத்தபின் மணமகன் ஒரு மோதிரத்தை ஒரு தட்டிலிட அதன் மீது மஞ்சள் நீர் ஊற்றப்படும். மணமகள் அம் மோதிரத்தைத் தேடுவாள். 'வொக்கிலி' குளியல் எனப்படும் மஞ்சள் நீராட்டோடு மணச் சடங்குகள் ஒரு முடிவுக்கு வரும். இறுதியாக மணமக்கள் கட்டிலில் அமர, 'பொண்ணை ஒப்பிச்சுக் கொடுக்கிறது' என்ற மணமகளை மணமகன் வீட்டாரிடம் ஒப்புவிக்கும் சடங்கு நடைபெறும்.

ஒரு மணப்பந்தலில் ஒரே சமயத்தில் மூன்று, ஏழு ஆகிய எண்ணிக்கைகள் தவிர வேறு எத்தனை மணங்கள் வேண்டுமாயினும் நடத்தலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மணத்திற்கு மேல் ஒரே பந்தலில் நடைபெறின் மணமக்களுள் யார் மூத்தவர்களோ மதிப்பில் உயர்ந்தவர்களோ, அந்த இணையினர் மட்டுமே நெற்றிப்பட்டம் அணிவர். சிலபோது ஓர் இணைக்கு நெற்றிப்பட்டம் அணிய அனுமதிக்கப்பட்டால் இன்னொரு இணைக்கு முதலில் தாரே நீர் ஊற்றிக் கொள்வதற்கு அனுமதி தரப்படும்.

இறந்தவர்களை இவர்கள் எரிக்கின்றனர். பிணத்தை இளம் வாழையிலை மேல் பாடையில் வைத்துச் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்வர். நெருப்புச் சட்டியை இறந்தவர் மகன எடுத்துச் செல்லும் வழக்கமில்லை. நெருங்கியஉறவினர் ஒருவரேஅதனைத் தூக்கிச் செல்வார். மூன்றாம் நாள் பிணத்தின் எரிக்கப்பட்ட சாம்பல் திரட்டப்பட்டுத் 'தூபெ' எனப்படும் மேடை அமைக்கப்படும். இறுதிச் சடங்கு நாள்வரை நாள்தோறும் அம் மேடை அருகே ஓர் இளநீரோ, பாத்திரத்தில் தண்ணீரோ

வைப்பர். பிளீமக்கார் இறுதிச்சடங்கு, பெரிதும் பண்டார்களின் சடங்கினை ஒத்தே அமைகின்றது. பண்டர்களைப் போல இவர்கள் தேர் அமைப்பதில்லை. சாவுத் தீட்டினை நீக்கத் துளு சாதியைச் சேர்ந்த மடிவாலி (வண்ணான்) தீட்டுப்பட்டவர்கள் மீது நீர் தெளித்து அவர்களுக்குத் துவைத்த ஆடைகளை வழங்குவான். இவர்கள் சாதிக்குரிய பட்டப்பெயர் செட்டி என்பதாகும்.

பிள்ளை கவு - Billai kavu (cat eaters)

பூனையை உண்ணும் மால வைதிகள் இவர்கள் எனக் கூறப்படுகிறது.

பில்லவர் - Billava

பில்லவர் தென் கன்னடத்தைச் சேர்ந்த துளு மொழி பேசும் கள் இறக்கும் வகுப்பினராவர். "தென் கன்னட மாவட்டத்தில் எண்ணிக்கையில் மிக அதிகமான சாதியாரான இவர்கள் மாவட்ட மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினராவர். பில்லவர் என்ற இச்சொல் வில்லாளிகள் என்ற பொருளின் தான 'பில்லனவாரு' என்பதன் சுருக்கமாகும் என இம்மாவட்டத்தினரால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இம் மாவட்டத்தை முன்னர் ஆட்சி புரிந்தவர்களின் கீழ் இச்சாதியார் பெருமளவில் விற்படை வீரர்களாகப் பணி புரிந்தமையால் இவர்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் கள் இறக்கும் சாதியாரான இவர்கள் இவ்வாறு பணி புரிந்தனர் என்பதற்கு நேரிடையான அல்லது மறைமுகமான சான்றுகள் ஏதும் இல்லை. கிறித்தவ சகாப்தத்தின் முன்னும் பின்னும் ஈழத்தின் வட பகுதியைத் தென்னிந்தியாவில் வாழ்ந்த இனத்தவர் படையெடுத்துத் தாக்கியதோடு அப்பகுதியைத் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர் என்பது யாவரும் நன்கு அறிந்த ஒரு செய்தியாகும். மலபாரில் வழங்கும் வழக்கு வழியான வரலாறு இவ்வாறு ஈழத்தின் வட பகுதியில் சென்று தங்கிய திராவிடர்களில் சிலர் ஈரம் அல்லது ஈழத்திலிருந்து வடக்கு நோக்கி வந்து திருவாங்கூரிலும் இந்தியாவின் மேற்குக் கடற்கரையின் பிற பகுதிகளிலும் குடியேறினர் எனக் கூறுகிறது.

இவ்வாறு வடக்கு நோக்கி வந்தவர்களே. தங்களோடு தென்னையை அதாவது தென்திசைக்குரியதான மரத்தைக் கொண்டு வந்தனர். இவர்கள் தீவிலிருந்து வந்த காரணத்தால் தீவர் அல்லது ஈரவர் என அழைக்கப்பட்டனர். இப்பெயர்களே பின்னர் தீயர் எனவும், ஈழவர் எனவும் திரிந்ததாகவும் கூறப்படுகிறது. இத்தகைய திரிபு, தீவரு அல்லது ஹலெதீவரு என்ற பெயரோடு தென் கன்னடத்தின் வட பகுதியிலும், வட கன்னடத்திலும் வாழும் இதே வகுப்பைச் சேர்ந்தவர்களின் பெயர்க் காரணத்தையும் தெளிவுபடுத்துவதாகும். மேல் மலைப்பகுதியிலுள்ள மஞ்சரப்பாடும், துளுவமும் முன்பு கும்ச மரபினர்களால் ஆளப்பட்டன. இம்மரபினர் பிற்காலத்தில் காரகல் பைரசு உடையார்கள் என அழைக்கப் பட்டனர். இவர்கள் கடவுளின் குழந்தைகள் எனப் பொருள் படும்படியாகத் தேவரு மக்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இது தீவரு மக்களு என்பதன் திரிந்த வடிவாக இருத்தல் கூடும். இவ்வழக்கு வகையிலான கோட்பாட்டினுக்குத் துணை செய்யும் வகையில், திரு லோகன் அவர்கள் மலபார் மாவட்டக் கையேட்டில் கூறியுள்ள ஒரு கருத்தும் இங்குக் கருதுதற்குரியது. பெரிபுளூஸ் மலபாரிலிருந்து கி. பி. முதலாம் நூற்றாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தந்துள்ள பொருள்களின் பட்டியலில் தேங்காயினைக் குறிப்பிடவில்லை. ஆனால் கி. பி. 522 முதல் கி. பி. 547 வரையில் வாழ்ந்தவரான காஸ்மொஸ் இண்டிகோ பெலியுஸ்டெஸின் குறிப்பில் தேங்காய் குறிப்பிடப் பட்டுள்ளது. சிரிய கிறித்துவர்களின் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி சார்ந்த செப்புப் பட்டயத்தின்படி தீயர்கள் அப்போது கட்டுப்பாட்டிலமைந்த பயிரிடும் தொழிலில் ஈடுபட்ட குழுவினராக இருந்திருக்கக் கூடும் எனத் தெரிகிறது. தென்னையை ஈழத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் கடற்கரைப் பகுதிகளில் அறிமுகப்படுத்தியவர்களாகக் கொண்டாலும், அதனை முறையாகப் பயிரிட்டுக் கள் இறக்கும் பணியினைத் துளுவைச் சேர்ந்த பயிரிடுபவர்களே மேற்கொண்டிருக்க வேண்டும். பில்லவர் என்ற பெயரின் மூலம் எதுவாயினும் அவர்கள், பெண்கள் வழியான தாய உரிமையைப் பின்பற்றும் பிரிவினரான துளுவ மக்கள் என்பதனை ஏற்றுக் கொண்டே

யாகவேண்டும்,'' எனத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

பில்லவர்கள் தியர்களிலிருந்து ஒரு சிறப்பான உடற்கூறில்-மண்டையோட்டின் அமைப்பில் - வேறுபட்டிருப்பது கருத்தில் கொள்வதற்குரிய ஒரு வேறுபாடாகும். பின்வரும் அட்டவணை காட்டுவதைக் கருத்தில் கொண்டு பார்ப்போமானால் தியர்கள் நீண்ட மண்டையோட்டினை உடையவர்களாக இருக்க, பில்லவர்கள் பிற துளுவகுப்பாரைப் போலக் குறுகிய மண்டை யோட்டினைப் பெற்றிருப்பது தெளிவாகும்.

மண்டையின் விகித அளவு

	சராசரி	மேலளவு	கீழளவு	80இற்கு மேற் பட்டதாக உள்ள எண்ணிக்கை
40 தியர்	73	78.7	65.5	1
50 பில்லவர்	80	92.5	71	28

உடுபிக்குப் பக்கத்தில் உள்ள சில பில்லவர்கள் தங்களைப் பில்லவாரு அல்லது ஹலேபைகாரு என அழைத்துக் கொள் கின்றனர். ஆனால் உண்மையில் ஹலேபைக்குகள் குண்டாப்பூர் வட்டத்தைச் சேர்ந்த கன்னடம் பேசும் கள்ளிறக்குவோராவர் இவ்விரு சாராரும் கள்ளிறக்கக் கையாளும் முறைகளில் சில வேறுபாடுகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக ஹலேபைக்குகள் விரல்கள் மேல் நோக்கி இருக்கும்படியாகவும் பெருவிரல் வலப் பக்கம் நோக்கியிருக்கவுமாகக் கத்தியினைப் பிடிப்பர். பில்லவர்களோ விரல்கள் கீழ்நோக்கியிருக்கவும் பெருவிரல் இடப்பக்கம் பார்த்திருக்கவும் கத்தியினைப் பிடிப்பர். உடுபியினைச் சேர்ந்த ஒரு பில்லவன் அடிப்பக்கத்தில் வட்டமான துளையை உடைய அகன்ற கத்தியினை வைத்திருந் தான். அத்துளையில் கோக்கப்பட்டுள்ள கொக்கியை இடுப்பைச் சுற்றியுள்ள கயிற்றில் மாட்டிக் கொள்வான். தென்னம்பாளை களின் உள்ளே இருக்கும் பூக்களை நசுக்கப் பில்லவர்கள் கல்லையும், ஹலேபைக்குகள் எலும்பையும் பயன்படுத்து கிறார்கள். புலியினால் கொல்லப்பட்ட எருமையினுடைய

எலும்பைக் கொண்டு தென்னம்பாளையினைத் தட்டினால் சாதாரண எலும்பினால் தட்டுவதைவிடக் கள் மிகுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது. இதற்கான ஒரு விதியாகப் புலி வீழ்த்திய எருமையின் எலும்பு தரையில் பட்டிருக்கக் கூடாது என்பர். பில்லவர்கள் நீண்ட சுரைக்காய் ஓட்டில் கள்ளினைச்சேகரிப்பர். ஹலேபைக்குகள் பானையினைக் கள் சேகரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

பைத்தியர், பூசாரி என்பன பில்லவர்களின் சாதிப் பெயர்களாகவும், பெயருக்குப் பின்னால் சாயின பைத்திய, பொம்ம பூசாரி என்பன போல இணையும் பட்டப் பெயர்களாகவும் உள்ளன. பைத்தியர் என்பது வைத்தியர் என்பதின் வடிவமான மருத்துவரைக் குறிக்கும் சொல். சில பில்லவர்கள் பூதஸ்தானம் எனப்படும் பூதங்களின் கோயில்களிலும், கரிடிகளிலும் பூசாரிகளாகப் பணியாற்றுகிறார்கள். இப் பூசாரிகளுள் பலர் பூதங்களின் அருளினைப் பெற்று நோய் நொடிகளைப் போக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். பைத்தியர் என்ற பெயர் வந்த விதத்தினை விளக்கப் பின்வரும் வழக்கு வரலாறு ஒன்று கூறப்பட்டு வருகின்றது. உள்ளல் என்ற ஊரில் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான ஓர் ஏழைப்பெண் வாழ்ந்து வந்தாள். அவர்களுடைய பரிதாபமான நிலையைக் கண்டு இரக்கங்கொண்ட ஒரு துறவி அவளுடைய பிள்ளைகள் இருவரையும் மருத்துவர்களாகவும், மந்திரவாதிகளாகவும் பயிற்சி தரத் தன் சீடர்களாக ஏற்றுக் கொண்டார். சிறிது காலம் சென்றபின் அந்தத் துறவி அந்த இளைஞர்கள் இருவரையும் தான் திரும்பி வரும்வரை மணம் செய்து கொள்ளக் கூடாது எனக் கூறிவிட்டு வெளியூர் சென்று விட்டார். அவனது கட்டளைக்குப் புறம்பாக அவர்கள் மணம் செய்து கொண்டிருப்பதைச் சிறிது காலம் கழித்துத் திரும்பி வந்தபோது அறிந்த அத்துறவி சினமுற்றவராக அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டு விட்டார். அவருடைய சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். அத்துறவி தன் பயணத்தின்போது உள்ளலில் உள்ள தோணித் துறையை நீரின் மீது நடந்தே கடக்கலானார். அவருடைய சீடர்களும் அவ்வாறே செய்ய முற்பட்டு நீரில்

மூழ்கும் நிலையை அடைந்தனர். அப்போது அத்துறவி மூன்று கைப்பிடி அளவினதான மருத்துவம், மந்திரம் பற்றிய சுவடிகளை அவர்களிடம் வீசியெறிந்துவிட்டுப் போய்விட்டார். அச்சீடர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு திரும்பி மந்திரம், மருத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றனர். இந்த இருவருந் தான் பில்லவர்களின் மூதாதையர் எனக் கூறப்படுகிறது.

பில்லவர்கள் பண்டர்களைப் போலப் பல புறமணக்கட்டுப் பாடுடைய குலங்களைக் (பலிகள்) கொண்டுள்ளனர். இவை தாய்வழிப்பட்ட குலப் பிரிவுகள். தாய் வழியினதான தாய உரிமை பாராட்டும் அளிய சந்தான முறையினை வைத்துப் பார்க்கும்போது உட்பிரிவுகளைக் கொண்டதான இருபது பலிகள் இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

இச்சாதியின் தலைவன் குரிகாரன் எனப்படுவான். இத் தலைமை பரம்பரை உரிமையுடையதாக அளிய வழியில் உடன் பிறந்தவளுக்குப் போய்ச் சேர்கின்றது. பூதஸ்தானம் அல்லது கரிடியில் நடைபெறும் கூட்டங்களில் சாதித் தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளும் பேசித் தீர்க்கப்படுகின்றன.

மணப்பெண்ணின் விலையான பரிசப்பணம் சுமார் பத்திலிருந்து இருபது ரூபாய் வரையாகும். இதில் நிச்சயதார்த்தச் சடங்கின்போது தரப்பட வேண்டியது எவ்வளவு எனப் பேசி முடிக்கப்படுகின்றது. மணநாளுக்குச் சில நாள்கள் முன்பு மணப் பெண்ணின் தாய் மாமன் அல்லது குரிகாரன் பெண்ணின் கழுத்தில் ஒரு நகையை அணிவிக்கிறான். மணப்பந்தலை அமைத்துப் பல்வண்ணச் சேலைகளால் அதனை அலங்கரிக்கும் பொறுப்பு 'பரேல் மட்டியாளி' எனப்படும் பில்லவர் சாதிக்குரிய அம்பட்டனுக்குரியதாகும். மணமகன் வயது வந்தவனாக இருந்தால் மணமகள் மணநாளுக்கு ஓரிரு நாள்கள் முன்பு தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ளும் சடங்கிற்கு உட்பட வேண்டும். மணப்பெண்ணின் நெருங்கிய உறவினரான மகளிர் சிலர் ஊர்க் குளத்திற்கோ, பூதஸ்தானம் அல்லது கரிடியின் அருகே உள்ள கிணற்றுக்கோ சென்று மட்குடங்களில் தண்ணீர் கொண்டு வரவேண்டும். அந்த நீரை அவர்கள் மணமகள் தலையில்

ஊற்ற அவள் குளித்து முடிப்பாள். மண நாளன்று மணமக்கள் மணமேடையிலிடப்பட்ட இரண்டு பலகைகளில் அமர்வர். மணச் சடங்குக்குத் தேவையான விளக்கு, அரிசி, பூ, வெற்றிலை, பாக்கு, நீர்க்குடம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி வைக்கும் பொறுப்பு அம்பட்டனைச் சேர்ந்ததாகும். அவனே மணமக்களின் கரங்களை இணைத்து வைப்பான். மணமக்களின் பெற்றோரோ, சாதித் தலைவனோ மணப் பெண்ணின் தோழியினுடைய மூக்குத்தியை அவ்வாறு இணைக்கப்பட்ட கைகளின்மீது வைத்து 'தாரெ' நீரினை ஊற்றுவர். கைதாரெ எனப்படும் இச்சடங்கே மணத்தை உறுதிப்படுத்துவதாகும். கைம்பெண்களின் மறு மணம் பிடுதாரெ எனக் கூறப்படுவதோடு அந்நிகழ்ச்சியில் தாரெ நீர் வார்க்கும் சடங்கு இடம் பெறுவதில்லை. மணமக்கள் எதிரெதிரே நிற்க அவர்களுக்கிடையே ஒரு துணி தொங்க விடப்பட்டு அதன் அடியில் சாதித் தலைவன் அவர்களுடைய கரங்களை இணைத்து வைக்கின்றான்.

ஒருவன் ஒருத்தியோடு உடலுறவு கொண்டு அவள் கர்ப்ப முற்றால் அவன் அவளைப் பிடுதாரெ சடங்கின் வழி மணம் புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய மணம் நடைபெறுமுன் அவன் ஒரு வாழை மரத்தைத் தன் வலக் கையால் கட்டி அணைத்துக் கொள்ள அம்மரம் வெட்டி வீழ்த்தப்படும்.

பூப்படையும் சிறுமி பத்து அல்லது பன்னிரண்டு நாள் களுக்குத் தீட்டுப் பட்டவளாகக் கருதப்படுவாள். முதல்நாள் ஐந்தாறு தேங்காய்களை ஒன்றாக இணைத்து நாற்சந்தியில் இருக்கையாகப் போட்டு அவளை அதன் மேல் உட்காரச் செய் வர். நாற்சந்தியின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு புது மண் பானை வைக்கப்படும். குரிகாரன் வீட்டைச் சேர்ந்த நான்கு பெண்கள் நாற்சந்தியின் முனைகளில் பானைகளின் அருகே அமர்வர். கூடியிருக்கும் பெண்களுக்கு வெற்றிலை பாக்கு, மஞ்சள் முதலியன வழங்கப் பெறும். தெரு முனைகளில் உட் கார்ந்திருக்கும் பெண்கள் பானைகளில் உள்ள தண்ணீரை எடுத்து வந்து பூப்படைந்த பெண்ணின் தலையில் ஊற்றுவர். மறுபடியும் பதினொன்றாம் நாள் அல்லது பதின்மூன்றாம்

நாள் பூப்படைந்தவளை இதே போல நாற்சந்தியில் அமர்த்தித் தலையில் நீர் ஊற்றுவர். அதன்பின் அவள் குளிப்பாள்.

இறந்தவர் எரிக்கப்படுவதே வழக்கமெனினும் சில சூழல் களில் பிணங்கள் புதைக்கவும் படுகின்றன. பிணத்தைக் குளிப் பாட்டி வாழை இலையின் மீது கிடத்திப் புத்தாடை போர்த்து வர். பிணத்தின் தலைமாட்டிலும், கால்மாட்டிலும் சிறிதளவு நெல்லைக் குவித்து வைப்பர். அக்குவியலின் மீது தேங்காய் ஓட்டில் திரியிட்டு விளக்கேற்றி வைப்பர். கூடியிருக்கும் உறவினர் களும், நண்பர்களும் துளசிக் கொத்தினை நீரில் நனைத்து அந்நீர்த்துளிகளைப் பிணத்தின் வாயில் விடுவர். பிணத்தைப் பின்னர் ஒரு பலகையில் கிடத்திச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வர். எரிப்பதற்கான விறகைக் கொண்டுவந்து சேர்ப்பது, அல்லது புதைப்பதற்கான குழியினைத் தோண்டுவதுஹொலையர் களின் கடமையாகும். எட்டி மரத்தின் விறகினைச் சிதையில் எரிக்கப் பயன்படுத்துதல் கூடாது. சிதையின் இருபக்கமும் நெருப்பு மூட்டுவர். இரு பக்கத்து நெருப்பும் நடுவில்வந்து சேரும் போது வீட்டிலிருந்து பிணத்தோடு கொண்டுவரப்பட்ட வாழை யிலை, நெல் முதலியன சிதை நெருப்பில் இடப்பெறும்.ஐந்தாம் நாள் எரித்த சாம்பல் திரட்டப்பட்டு அவ்விடத்திலேயே அது புதைக்கப்படும். பிணம் புதைக்கப்படுமாயின் வைக்கோலால் ஓர் உருவம் செய்து அதனை எரித்து அச் சாம்பலை அங்குப் புதைப்பர். அவ்விடத்தில் 'தூபெ' எனப்படும் கூருருளை வடிவி லான சிறிய மேடு அமைத்து அதன் மேல் ஒரு துளசிச் செடியை நடுவர். அச்செடியின் அருகே ஓர் இளநீரைப் பொத்து வைப்பதோடு புகையிலை, வெற்றிலை பாக்கு ஆகியனவும் அருகே வைக்கப்படும். பதின்மூன்றாம் நாள் பூசை எனப்படும் இறுதிச் சடங்கு நடத்தப்படுகிறது. அதற்கு முந்திய நாள் மாலையில் தூபெயைச் சுற்றி உப்பரிகை அல்லது கொடிக்கட்டு எனப்படும் தேர் அமைக்க நான்கு கம்பங்கள் நடப்படும். வீட்டில் இறந்து போனவர் உயிர் துறந்த இடத்திலோ, அதன் அருகிலோ மூன்றடுக்குகளாலான ஒரு சிறிய மூங்கில் தேரினைக் கட்டி அதனை வண்ணத் துணிகளால் அலங்கரிப்பர். இத்தேர்

'நீர்நெரலு' என அழைக்கப்படுகிறது. இத்தேரிலிருந்து ஒரு விளக்கு தொங்கவிடப்பட்டு அதன் அடியில் ஒரு கட்டிலை வைப்பர். அதன்மேல் இறந்துபோனவருடைய ஆடை அணிகளை வைப்பர். மறுநாள் காலை சாதிக்குரிய அம்பட்டன் உதவியோடு உப்பரிகை அமைக்கப்படும். தண்ணீர் நிறைந்த ஒரு சிறு பாத்திரம் நீர்நெரலுக்குள்ளாக வைக்கப்படும். இறந்தவரின் மருமகன்கள் குளித்துப் பரிசாகப் பெற்ற ஆடைகளை உடுத்தி 'நீர்நெரலை' நெருங்குவர். கொள்ளியிட்டவர் அதனுள்ளே இருக்கும் பாத்திரத்தை எடுத்து அதனுள் இருக்கும் நீரை ஒரு தென்னை மரத்தின் அடியில் கொட்டுவார். சாதித் தலைவனான குரிகாரன் அவ்வெற்றுப் பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீர் ஊற்றுவான். கொள்ளியிட்டவன் மீண்டும் அதனை 'நீர்நெரலினுள்' வைப்பான். அதன்பின் ஏழு மகளிர் சிறிதளவு அரிசியினை மும்முறை அளந்து மூன்று பெண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் தட்டில் இடுவர். அந்த அரிசியைக் கிணற்றடிக்குக் கொண்டு சென்று களைந்து திரும்பவும் 'நீர்நெரலு'க்குக் கொண்டு வந்து அதனோடு நாட்டுச் சர்க்கரையையும், தேங்காய்த்துறுவலையும் இட்டுக் கலக்கி, ஏழு பெண்கள் அதனை ஒரு கலத்தில் நிரப்பி, அக்கலத்தினைத் தேரினுள்ளே கட்டிலின் மேல் வைப்பர். இறந்துபோனவருடைய கணவனோ, மனைவியோ சிறிதளவு அரிசியினைப் பின்பு அக்கலத்திலிடுவர். பின்பு அவர் அக்கலத்தைக் குப்புறக் கவிழ்த்து அதன் அருகே ஓர் அகப்பையினையும் வைத்து அவற்றை ஒரு வாழை இலையால் மூடுவார். அங்குள்ள பொருள்கள் அனைத்தும் ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டுப் பல்லக்கில் வைத்து அதனை இருவர் சுடுகாட்டில் தூபெ மேல் அமைக்கப்பட்டுள்ள உப்பரிகைக்கு எடுத்துச் செல்வார். நல்கெயரும், பரவரும்-பூத ஆட்டக்காரர்கள்-பூதங்கள்போல வேடந்தாங்கி ஊர்வலத்தோடு செல்வர். அனைவரும் உப்பரிகையை மும்முறை சுற்றி வந்த பின் கொள்ளியிட்டவன் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்ட மூட்டையினை அவிழ்த்து,அதிலிருப்பதைத் தேரில் வைப்பான். நெருங்கிய உறவினர்கள் அந்த வாழை இலையில் சில சமயம் காய்கறிகள், பூசணிக்காய், வாழைக்காய் ஆகியனவற்றை வைப்பதும் உண்டு. எல்லோரும் பின்னர் அவ்விடத்தை விட்டு நீங்குவர். அம்பட்டன் உப்பரிகையில் உள்ள

துணிகளை அவிழ்த்துக்கொண்ட பின் அதன் கட்டுக்களை அவிழ்த்து வீழ்த்துவான். சில சமயங்களில், இறந்து போனவர் சாதியைச் சேர்ந்த பெரிய மனிதராக இருந்தால், ஒரு சிறிய தேரினை உப்பரிகையைச் சுற்றி இழுப்பர். பதினான்காம் நாள் காகங்களுக்குச் சோறிடப்படும். அத்தோடு சாவுச்சடங்குகள் ஒரு முடிவுக்கு வரும்.

கெட்ட நாளொன்றில் சாவு நிகழுமாயின் 'காலெ தெப்புணி' எனப்படும் பேயோட்டும் சடங்கு நிகழ்த்தப்படும். அந்த வீட்டின் தரையில் சாம்பலைப் பரப்பி வீட்டுக் கதவினை மூடி விடுவர். சற்று நேரம் சென்ற பின்னரோ மறு நாளோ வீட்டுக் கூரையின் மீது மஞ்சள் நீரினைத் தெளித்துச் சூரை முள் கொத்துக்களால் (*Zizyphus Oenoplia*) கூரையினை அடிப்பர். வீட்டின் கதவு பின்னர் திறக்கப்படும். பேயின் பிளவுபட்ட குளம்புத் தாரைகள் பதிந்துள்ளனவா எனச் சாம்பல் பரப்பினை ஆராய்வர். தாரைகள் தெளிவாயிருப்பின் அது பேய் வெளியேறி விட்டதற்கான அடையாளமாகும். அவ்வாறில்லையாயின் பேயினை விரட்ட ஒரு மந்திரவாதி அழைக்கப்படுவான். இச் சடங்கினை நேரில் கண்டு எழுதியுள்ள ஒருவர், தான் அத்தாரைகளை ஆராய்ந்த போது அவை அந்த வீட்டுப் பூனையின் காலடித் தாரைகளாகத் தெரிந்தன என்ற உண்மையை மனம்விட்டுக் கூறியுள்ளார்.

திருமணம் ஆகுமுன் இறந்து போகும் சிறுமிகளின் ஆவிகள் அவர்கள் வாழ்ந்தவீட்டில் திரிந்துகுடும்பத்திற்குப் பல தொல்லைகளைத் தருவதாகக் கருதி அந்த ஆவிகளுக்கு மணம் செய்வித்து அவற்றின் சினம் தீரச் செய்யும் சில நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன. இறந்து போன சிறுமியின் உறவினர் இறந்து போன ஒரு சிறுவனின் வீட்டைத் தேடிச் சென்று அவ்வீட்டிலிருந்து காலணாக் காசினை இரண்டு கரண்டிகளின் நடுவே வைத்துக் கட்டிக் கொண்டு வருவர். அக்கரண்டிகள் இறந்து போன சிறுமியின் வீட்டுக் கூரையின்கண் தொங்கவிடப்படும். இது நிச்சயதார்த்தச்சடங்காகப்பாவிக்கப்படுகிறது. பின்மணநாள் குறிக்கப் பட்டு உரிய நாளில் தரையில் மணமகளையும், மணமகனையும் குறிக்கும் இரண்டு உருவங்கள், ஒருவரின் கை இன்னொருவரின்

கைமீது இருக்கும்படியாக வரையப்படும். காலணாக் காசு, கறுப்புப் பாசிமணிகள், வளையல்கள், மூக்குத்தி ஆகியன அக் கைகளின் மேல் வைக்கப்பட்டு அவற்றின் மீது நீரூற்றுவர். இது தாரெ சடங்காகக் கொள்ளப்பட்டு மணமுடிந்ததாகக் கருதுவர்.

பூதஸ்தானங்களிலும், கரிடிகளிலும் பூசாரிகளாகப் பணி யாற்றுபவர்கள் பில்லவர்களே. கரிடிகள் என அழைக்கப்படும் பூதங்களின் கோயில்கள் பில்லவர்களுக்கு உரியவை. பைதேருகுலு (கொடீ, சென்னய்ய) பிரிம்மெரு அல்லது பிரஹ்மெரு, குண்ட, ஒக்க பல்லாள, குஜூம்பகஞ்சா, தேவநாஜிரி ஆகியவை அக் கோயில்களுக்குரிய பூதங்களாம். பைதெருகுலு பூதங்கள் பில்லவ சாதியைச் சேர்ந்தனவாகவும், கொடி, சென்னய்யா பூதங்கள் பிராமண சாதி விட்டு விலக்கப்பட்ட பெண்ணுக்கும் பில்லவனுக்கும் பிறந்தனவாகவும் கருதப்படுகின்றன. கொடி, சென்னய்யா பற்றி வழங்கும் கதை திரு எ. சி. பர்னல் அவர் களால் இந்தியத் தொல்லியல் இதழில் விரிவாகக் கூறப்பட்டு உள்ளது.* பூதங்கள் சிலை உருவினவாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பிரம்மரே சிறப்பானவர். மற்றப் பூதங்கள் அவருக்குக் கீழ்ப்பட்டன. கோயினுள் கல்லாலான தேர் போன்ற மாடத்தில் ஒரு வெள்ளி அல்லது வேறு உலோகத் தட்டில் மனித உருவம் பொறிக்கப்பட்ட அவருடைய உருவம் வைக்கப்படுகிறது. அதன் இடப்புறம் களிமண் அல்லது கல்லால் செய்யப்பட்ட இரு மனித உருவங்கள் வைக்கப்படும். இது பைதெருகுலு பூதத்தைக் குறிப்ப தாகும். வலப்பக்கத்தில் குதிரை மேல் வீற்றிருக்கும் ஒரு மனி தனின் உருவமும் இன்னொரு உருவமும் இருக்கும். இவை ஒக்க பல்லாள பூதத்தையும் குஜூம்பகஞ்ச பூதத்தையும் குறிப்பன. இந்தப் பூதங்களின் அறைக்கு வெளியே கரிடியில் வேறு பல தெய்வ உருவங்களும் வைக்கப்பட்டிருக்கும். அவை இடத்திற்கு இடம் வேறுபட்டனவாக இருக்கும். ஜூமடி, பஞ்ச ஜூமடி, ஹொச பூதம், கல்லுருட்டி முதலியன அப்பூதங்களின் பெயர்.

---

* துளுவரின் பேய் வழிபாடு, இந்தியத் தொல்லியல் இதழ்கள், தொகுதி, 23 - 25, 1894 - 96. Devil worship of the Tuluvas, Ind, Ant. XXIII, XXIV and XXV, 1894-96.)

களாம். பிராமணர்கள் தங்கள் சூழ்ச்சித் திறத்தால் பிரிம்மெரு பூதத்தைப் பிரம்மாவாக ஆக்கிவிட்டதோடு பிற பூதங்களையும் சிவ கணங்களாகச் சிவனுடைய பணியாளர்களாக்கி விட்டனர். பூதங்களைப் பாடும் 'பர்தானங்'களில் பிரிம்மெருவே முக்கிய பூதமாகக் கூறப்பட்டு, மற்றப் பூதங்கள் அதன் ஸ்தானத்திற்கு வருவதாகக் கருதப்படுகிறது. பூதஸ்தானங்களில் சிலைகள் வைக்கும் வழக்கமில்லை. கட்டில்களே அவற்றுள் காணப்படும். ஒரு ஸ்தானம் ஒரு பூதத்திற்காகவோ பல பூதங்களுக் காகவோ ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இதனை அந்த ஸ்தானங் களிலுள்ள கட்டில்களைக் கணக்கிட்டு அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பூதத்திற்கும் தனியே ஒரு கட்டில்அமைக்கப்படுவதால் இவ்வாறு கணக்கிட்டுக் கொள்ள முடியும். ஸ்தானம் ஒரு பூதத்திற்கு மேற்பட்ட பூதங்களுக்காக அமைக்கப்பட்டிருப்பின் அங்கிருக்கும் பூதங்கள் கொடமணித்தாய, குக்கினித்தாய,தெய்வ என்பனவாக இருக்கும். அவ்வப்போது நடைபெற வேண்டிய கோலம் எனும் திருவிழாக்களுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்பவன் பூசாரியே. திருவிழாவின்போது அவன் மீது அடிக்கடி சாமி வரும். அவ்வாறு சாமி ஏறப்படும் பில்லவர்களே பூசாரிகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். தங்கள் பணிக்கு அடையாளமாக அவர்கள் வல மணிக்கட்டில் தங்க வளையல் அணிந்திருப்பர். பண்டர், நல்கெயர், பரவர், பற்றிய கட்டுரை களில் பூத வழிபாடு பற்றி மேலும் பல விவரங்கள் கூறப் பட்டுள்ளன.

பில்வ – Bilva (Jackal)

கொண்ட்ரர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பிண்டொல்லு – Bindhollu (brass water - pot)

ஜோகிகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம் பித் தளைப் பானை எனப் பொருள்படும்.

பினு - Binu (Roll of wollen thread)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். கம்பளி நூல் சுருள் எனப் பொருள்படும்.

பிஸ்ஸொயி - Bissoyi

பர்லகிமெடி மாலியகங்கள் பல ஊர்களைத் தம்மகத்தே கொண்ட முட்டாக் (மிட்டா என்ற ஜமீன் போன்ற பிரிவு) களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு முட்டாவும் ஒரு பிஸ்ஸொயி யின் ஆளுகைக்குட்பட்டிருப்பதாக எனக்குக் கூறப்பட்டது. ஒவ்வொரு பிஸ்ஸாயியும் பல குடிமக்களைத் தன் ஆளுகையின் கீழ்க்கொண்ட தலைவனாக அக்குடிகளிடையே கட்டுப்பாட்டைக் காக்கும் பொறுப்புக்கு உரியவன். பிஸ்ஸாயிகளைப் பற்றித் திரு எஸ். பி. ரைஸ் பின்வருமாறு எழுதுகிறார்:-* "மாலியகங்களில் பல கோட்டைகள் உள்ளன. அவற்றில் பிஸ்ஸாயிகள் அல்லது மலைப்பகுதித் தலைவர்கள் தங்கியுள்ளனர். ஒவ்வொருவரும் தமக்குரிய ஒரு சிறு ஆட்சி அவையினைக் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரிடமும் படைக்கலங்களோடு கூடிய படை உள்ளது. அப்படை வீரர்கள் அழைப்பு விடுக்கும்போது வருவர். ஆட்சிப் பொறுப்பினை மேற்கொள்ளும் அலுவலர்களும் அவர்களிடையே உள்ளனர். மலைப்பகுதி சார்ந்த பழங்குடி இனத்தவர்களான கோண்டுகள், சவரர் ஆகியோரின் சட்ட வரம்பு மீறிய செயல் களை ஒடுக்கி நெறிப்படுத்தவே இவர்கள் இம்மலைப்பகுதிகளின் ஆட்சி உரிமைக்குரியவர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் உண்மையில் எல்லைப்பகுதிகளின் தலைவர்களாக உரிமைஉடை யவர்களாகவே இருக்கின்றார்கள். எனினும் கிமெதி அரசரின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக இவர்கள் தோன்றுகின்றனர். (ஆங்கிலேயர்) அரசுக்கும் அவர்கள் பொறுப்புடையவர் களாகவே நடந்து கொள்கின்றனர். இத்தகையவர் மதிப்பு வாய்ந்த நண்பர்களாக இருக்கும் அதே சமயத்தில் கேட்டினைத் தரும் எதிரிகளுமாவர். தங்கள் பகுதி மக்களிடம் முழுமையான செல்வாக்குடையவர்களாக இருப்பதோடு, தங்கள் இருப்பிடத் தைப் பற்றி முழு விவரங்களையும் அறிந்தவர்களாக இவர்கள் திகழ்கின்றனர். சிக்கல் மிகுந்த அடர்ந்த காடுகளிடையே இவர் களுக்கு மட்டுமே தெரிந்த ஒற்றையடிப் பாதையில் மற்றவர்களை வழி நடத்திச் செல்ல வல்லவர்கள் இவர்களையன்றி வேறு

---

* தென்னிந்தியர்களைப் பற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகள். (Occasional Eassaya on Native South Indian Life.)

யாரும் இல்லை. எனவே இவர்கள் பகைவர்களாக மாறும்போது மற்றவர்கள் கண்டு நெருங்க முடியாத இடங்களில் தங்களை நிலையிறுத்திக் கொள்ள முடியும். இப்பொழுது ஒவ்வொரு கோட்டைக்கும் சாலைத் தொடர்புள்ளது. காடுகள் அழிந்து விட்டன. பிஸ்ஸாயிகள் இன்னமும் கூலிப் படைகளை வைத் திருப்பதோடு மற்றவர்களால் மதிக்கவும் படுகின்றனர். இப் பொழுது அவர்கள் கொடுக்கினை இழந்துவிட்ட தேளின் நிலை யில் உள்ளதால் அரசு அலுவலர்கள் ஆண்டுதோறும் பள்ளி ஆய்வுக்காகவும், அம்மைத் தடுப்புப் பணியை மேற்பார்க்கவும் அமைதியாக அவர்களிடையே சென்று வர முடிகின்றது.'' பாலகி மெதி கிளர்ச்சியினைப் பற்றிய கதையினை, 'ஒரு மறக்கப்பட்ட கிளர்ச்சி' என்ற தலைப்பில் சென்ற நூற்றாண்டு நிகழ்ச்சிகளை யும் அதில் பிஸ்ஸோயிகள் பெற்ற பங்கினையும் திரு ரைஸ் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்.

கணக்கெடுப்பின்போது பிஸ்ஸோயிகள் தங்கள் பட்டப் பெயர்களாக டொலுவ, காளிங்கி, குருமொ , சொய்டி என்ப வைகளைத் தந்துள்ளனர்.

பிஸ்வாலொ - Biswalo

ஒரியச்சாதியார் பலரின் பட்டப் பெயர்கள்.

போச்சு – Bochchu (hairs)

ஒட்டர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

போத – Boda

இச்சாதி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு பிரிவினரெனப் பதியப்பட்டுள்ளது. போத என்பது கபடர்களது ஓர் உட்பிரிவின் பெயருமாகும். இவர்கள் 'போதலுவாட' எனப்படும் அத்தி மரத்தின் (*Ficus Glomerata*) நாரினைத் தங்கள் பெண்களுக்கான துணி தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

போட தாசரி - Boda Dāsari (bald - headed medicant)

ஜோகிகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். வழுக்கைத்தலை இரவலர் என்பது பொருள்.

பொத்து - Boddu (navel)

ஈதிகர், அசிலியர் ஆகிய சாதியாரின் புறமணக்கட்டுப் பாடுடைய குலம் அல்லது அச்சாதிகளின் உட்பிரிவு. பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில், "பெல்லாரியில் உள்ள ஊர்களைச் சூழ்ந்துள்ள கோட்டைகளின் வாசல்களில் பெரும்பாலான வற்றின் நடுவே உருளை வடிவான அல்லது கூம்பு வடிவமான இலிங்கத்தினை ஒத்திருக்கும் கற்கள் இருக்கக் காணலாம். இது பொட்டுராயி எனப்படும் மையக்கல்லாகும். ஆண்டுக்கொரு முறை மே மாதத்தில் விதைப்புப் பருவத்திற்குச் சற்றுமுன் இக்கல் தொடர்பானதொரு சடங்கு நடைபெறுகின்றது!" (பார்க்க: பாரிகி)

பொடொ – Bodo (big)

பொட்டாடர், மாலியர், ஓமனைட்டொ, பெண்டியர் முதலிய சாதியாரின் உட்பிரிவு இது. பொடொ நாயக் என்பது கடபர்களின் பட்டப் பெயராகும். பொடொ ஒடியர் என்பது சொண்டிகளின் உட்பிரிவாக உள்ளது.

போகம் - Bogam

பார்க்க: தேவதாசி மற்றும் சானி. (See: Dēva-dasi and Sāni)

போகாரர் – Bogāra

1901 சென்னை மாநிலக்கணக்கெடுப்பில் இவர்கள், "கன்னடம் பேசும், பித்தளை மற்றும் செம்பில் பணிபுரியும் கொல்லர் எனவும், பாஞ்சாலரின் ஓர் உட்பிரிவினர்." எனவும் பதியப் பட்டுள்ளது. பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சமணர்கள் பற்றிய ஒரு குறிப்பிலிருந்து* நான் அறிந்த செய்திகள் வருமாறு:- "ஹர்பணஹள்ளி வட்டத்திலும், ஹர்பணஹள்ளி நகரத்திலும் போகரர் என்ற வகுப்பினைச் சேர்ந்த மக்கள் சமணர்களோடு சேர்ந்து வாழ்கின்றனர். பித்தளை, செம்பு ஆகிய

---

* சென்னை மெயில் இதழ், 1905. (Madras Mail, 1905.)

வற்றால் செய்யப்படும் பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வளமான வாழ்க்கையுடையவர்கள் இவர்கள். சமண சமயத்தை மேற்கொண்டுள்ள இவர்கள் சமணர்களுக்குரிய கோத்திரங் களையும் கொண்டுள்ளனர். சமணர் கோயில்களில் உரிமை யோடு வழிபாடு நடத்தும் இவர்களைச் சமண சமூகத்தினர் தங்களவர்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர்கள் சமணர் களின் ஓர் உட்பிரிவினராதல் வேண்டும். தற்போது சமணர் களோடு மண உறவு கொள்ள இவர்கள் அனுமதிக்கப்படுவ தில்லை.'' எனினும், ''கோல்காப்பூரிலுள்ள சமண பட்டாச்சாரி யாரின் உதவியோடு போகாரர்கள் சமணர்களோடு மண உறவு கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.''

போகர்லு – Bōgarlu

விசாகப் பட்டினம் முகவர் பகுதியில் பயிர்த்தொழில் கூலி களாக உதவுபவர்களின் பெயராகும் இது. உலோகத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்த இவர்கள் பயிர்த்தொழில் பணி யாளர்களாக மாறியிருக்கக் கூடும்.

பொக்குல – Boggula (charcoal)

கரிக்கட்டை எனப் பொருள்படும் இது போயர், தேவாங்கர் சாதிகளில் புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தின் பெயராகும்.

பொகொரர் - Bohora

கொகொரர் அல்லது பொரர் என வழங்கப்படும் இவர்கள் ''பம்பாய் பக்கத்தைச் சார்ந்த, முகமதிய சமயத்தைத் தழுவியவர் களாவர். வணிகத்தில் ஈடுபட்டுள்ள இவர்களுக்கான ஒரு தலைமைக் குரு சென்னையில் உள்ளார். ஜார்ஜ் டவுனில் ஒரு மசூதியும் உள்ளது. இவர்களுள் ஒருவர் இறந்தால் தலைமைக் குரு, மைக்கேல், இஸரேயல், காபிரியல் ஆகிய தேவதூதர் களுக்கு, அவ்வாறு இறந்து சொர்க்கம் வருபவனை நன்கு பேண வேண்டுமெனக் கடிதம் எழுதுவாரெனவும், அக்கடிதம் சவப் பெட்டியில் வைக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.''*

---

* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு, 1901. (Madras Census) Report, 1901).

இவர்கள் தங்களை உயர்ந்த வகுப்பார் எனக் கருதுகின்றனர். வேறு பிரிவைச் சேர்ந்த முகமதியர்கள் இவர்கள் மசூதியில் நுழைந்து வழிபடுவார்களாயின் அவர்கள் வழிபட்ட இடத்தைத் தூய்மைசெய்வர். பட்டாசு கொளுத்தப்படும் தீபாவளி போன்ற இந்துக்களின் விழாக்களில் இவர்களும் பங்கு கொள்கின்றனர்.

பைதியோர் – Boidyo

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பைதியோர் எனப் பதியப் பட்டுள்ள இவ்வகுப்பார் "வைத்தியர்களே. இது பண்டிதோ சாதியின் ஓர் உட்பிரிவாகும்." பண்டிதோருக்கு பைதியோருக்குமிடையே வேறுபாடு ஏதுமில்லை எனக் கூறப் படுகிறது. கஞ்சம் பகுதியில் முந்தைய பெயராலும், பிற பகுதி களில் பிந்திய பெயராலும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

பைய்பாரி – Boipāri (See: Bēpari)

இலம்பாடிகளுக்கான மற்றுமொரு பெயர். (பார்க்க: பேபாரி See: Bēpāri)

பைஷ்ணபொ – Boishnobo

ஒரியர்களான வைஷ்ணவர்கள். சமயத்துறையில் ஈடு பாடுள்ள இரந்துண்போர். இவர்கள் சூத்திரர்களுக்குக் குருவாகவும் செயல்படுகின்றனர். இப்பெயர் (பிஷ்ணு) விட்டுணுவை வழிபடுபவர்கள் எனப் பொருள் தரும். இவர் களில் பெரும்பாலோர் வங்காளத்தைச் சேர்ந்த சமயச் சீர்திருத்தக்காரரான சைதயன்யரின் நெறியைப் பின்பற்று பவர்கள்.

பொக்ஷர் - Boksha

பொக்கிஷம் (கருவூலம்) என்ற பொருள் தருவதான இது கோல்லர்களின் ஓர் உட்பிரிவாகும். கருவூலங்களில் பாதுகாப் பாளர்களாகவும், பொருளைக் கொண்டு உய்ப்போராகவும் பணிபுரிபவர்கள் இவர்கள். மாவட்டக் கருவூலங்கள் சிலவற்றில் பணப்பைகளைக் கட்டுபவர்களும் எடுத்துச் செல்பவர்களும் வேறு சாதியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் இன்றும்

கோல்லர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். 1901 கணக் கெடுப்பில் 'பொக்கிஷ வடுகர்' என்பது கோல்லர்கள் என்பதற்கு நேரான தமிழ்ச் சொல்லாகப் பதியப்பட்டுள்ளது.

பொலாசி – Bolāsi

கஞ்சம் மாவட்டத்திலுள்ள கும்சூர் வட்டத்தில் பெரும் அளவில் காணப்படும் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரியச் சாதியார். இவர்களில் பலர் ஏவலாட்களாகப் பணி செய் கின்றனர். இச்சாதிக்குரிய முந்தைய பெயர் தாடிய என்பதாகும். பின்னர் இது பொலாசி என மாற்றப்பட்டது. (பயலிசி என்பது நாற்பத்திரண்டு என ஒரிய மொழியில் பொருள்படும்) ஒரியர் களுக்குரிய நாற்பத்திரண்டு சூத்திர சாதிகளில் இதுவும் ஒன்று ஆகையால் இவ்வாறு மாற்றம் பெற்றது. இச்சாதியைச் சேர்ந்த பெண்கள் 'பொல' எனப்படும் தடித்த பித்தளையாலான காற் சிலம்பினை அணிவதால் இச்சாதி இப்பெயர் பெற்றது எனவும் கூறுவதுண்டு.

இச்சாதியாரின் மணச்சடங்குகள் சாவுச் சடங்குகள் ஆகியன தொலுவர், கரவுடொர், பதோயியர் ஆகிய சாதியாரின் சடங்கு களை ஒத்தனவே. பெண்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே இவர்கள் மணம் முடிக்கின்றனர். பூப்படையுமுன் ஒரு பெண்ணுக்குக் கணவன் வாய்க்கவில்லையாயின் வில் அல்லது அம்மிக் குழவியோடு அவளுக்கு மணம் செய்விக்கின்றனர். வைணவ சமயத்தின் சைத்யன்யரின் பிரிவினை இவர்கள் சார்ந் துள்ளனர். பொத்தானொ, நாயக்கோ, தசொமகந்தி, பாத்ரொ, சாகு, ஜென்ன, கொன்ஹெரொ என்பன இச்சாதிக்குரிய பட்டப் பெயர்களாம்.

பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள குடியர் சாதியார் சிலபோது தங்களைப் பொலாசி குடியர் என அழைத்துக் கொள்கின்றனர்.

பொலொடியர் – Bolodia

கூலங்களைக் கொண்டு செலுத்தப் பொதி மாடுகளை வைத்திருக்கும் தெல்லியர்களின் ஒரு பிரிவினர் இவர்கள். சில கௌரெடாக்கள் கணக்கெடுப்பின்போது தங்களைப்

போலொடியர் உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

பொம்படை - Bombadai (a fish)

இது மேதரர்களின் ஒரு கோத்திரம். இதற்குச் சமமான பொமிடி என்பது மாலர்களின்புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பிரிவாகும். ஜணப்பன் சாதியைச் சேர்ந்த வம்ம கோத்திரத் தவர்கள் மீன் உண்பதில்லை. இதற்கான காரணமாக இவர்கள் தங்கள் முன்னோர் திருமணக் குடத்தில் நீரெடுக்கச் சென்ற போது அந்தக் குடத்தில் தண்ணீரோடு மீன்கள் புகுந்து விட்டதையே கூறுகிறார்கள்.

பொம்மை - Bomma (a doll)

பத்ம சாலே சாதியாரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலப்பிரிவு. இதற்குச் சமமான பொம்மல என்பது மாலர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய குலப் பிரிவாகும். பொம்மலாட்ட வாளு விசாகப்பட்டின மாவட்டத்தில் பொம்மலாட்டக் காட்சிகள் நடத்துவதாக விசாகப்பட்டினக் கையேடு கூறுகின்றது.

பொம்மலி - Bommali

கஞ்சத்தைச் சேர்ந்த கொரொணொக்களின் ஓர் உட்பிரிவு.

பொண்ட - Bonda

பொரசரின் ஓர் உட்பிரிவு.

பொந்தியர் - Bondia

கஞ்சத்தைச் சேர்ந்த சிறு அளவிலான சாதியார். புகழ் பாடுதல் எனப் பொருள்படும் பொந்தொனொ என்பதிலிருந்து இப்பெயர் வந்ததாகக் கூறுவர். பொந்தியர் அரசர்களைப் புகழ்ந்து துதிபாடுபவர்களாவர்.

பொந்திலியர் - Bondili

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பொந்திலியர்

என்ற பெயர் பந்தல்குண்டு என்பதிலிருந்து வந்ததாகக் கூறப் பட்டுள்ளது. இவர்கள் தங்களை இராசபுத்திரர் எனக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் இனத்திறங் கெட்டவர் களாகவே தோற்றுகின்றனர். இப்பிரிவைச் சேர்ந்த சைவர்கள் இறந்தவர்களைப் புதைப்பதாகவும், வைணவர்கள் எரிப்ப தாகவும் கூறப்படுகின்றது. கடப்பை மாவட்டத்தைச் சேர்ந்த கதிரி வட்டத்தில் அனைவரும் இறந்தவர்களைப் புதைப்பதாகக் கூறப்படுகிறது. இடத்திற்கிடம் இவ்வழக்கத்தில் மாறுபாடு இருப்பதாகத் தெரிகிறது. சிவனையும், திருமாலையும் வழிபடுவ தோடு இப்பிரிவினரைப்பற்றி எனக்குச் செய்தி தெரிவித்த எட்டு வல்லுநர்களில் மூவர் இவர்கள் ஊர்த்தேவதைகளையும் வழிபடுவதாகக் கூறுகின்றனர். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை என்பது வல்லுநர்கள் அனைவ ருடைய ஒருமித்த கருத்தாகும். இவர்கள் பெரும்பாலும் பயிர்த் தொழிலிலும், குற்றேவல் பணியிலும், சமீன்தார்களின் மெய்க் காப்பாளர் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் வட ஆர்க்காட்டினைச் சேர்ந்த பொந்தி லியர் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளவை வருமாறு:- ''பொந்திலியர் பண்டல்குண்டிலிருந்து வந்து குடியேறிய வெளி யார் ஆவர். அந்த ஊர்ப் பெயரே அவர்கள் சாதிப் பெயராக மாறி உள்ளது. வைசிய சூத்திர சாதிகள் பலவற்றைச் சேர்ந்த வர்கள் இவர்கள். வைசியர்கள் பெயருக்குப் பின் லாலா என்ற பட்டத்தையும், சூத்திரர்கள் ராம் என்ற பட்டத்தையும் இணைத்துக் கொள்கின்றனர். பல சூத்திரப் பொந்திலியர்கள் முறைமைக்கு மாறாகச் சிங் என்ற பட்டத்தைத் தங்கள் பெயரின் பின் இணைத்துக் கொண்டு, தங்களைச் சத்திரியர் எனவும் இராசபுத்திரர் எனவும் கூறிக்கொள்கின்றனர். வைசிய பாந்திலியர் மிகச் சிலராக வேலூர், சித்தூர், ஆரணி ஆகிய பகுதிகளில் மட்டும் வட்டிக்கடை நடத்தி வருகின்றனர். சூத்திரர் களில் பெரும்பாலோர் சிப்பாய்களாகவும், காவலர்களாகவும், வருவாய்த்துறையில் ஏவலாட்களாகவும், பணிபுரிகின்றனர். சிலர் இவர்கள் சூத்திரர்கள் கூட அல்லர் என மறுப்பதோடு இராசபுத்திரர்களுக்கு இப்பகுதிப் பெண்கள் வழியாகப் பிறந்த இனத்திறங் கெட்டவர்கள் எனக் கூறுவர். இச்சாதியார்

எல்லோரும் தங்களைப் பொந்திலியர் எனக் கூறிக் கொள்பவர்களோடு சேர்ந்து உண்பதில் மிகவும் கவனமாயுள்ளனர். உடன் உண்ண இருப்பவர் தங்கள் சாதியார்தான் எனத் துணிய முடியவில்லையாயின் உண்ண மறுத்து விடுவர். இவர்கள் மண முறை இராசபுத்திரர் மணமுறைகளை ஒத்ததாக உள்ளது.''

பொந்திலியரின் ஒரு பிரிவினர் தோலில் வேலை செய்வதால் தோலி என அழைக்கப்படுகின்றனரென நான் கேள்விப் பட்டேன். வெங்கடகிரியில் தோலி மிட்டா அல்லது தோலியர் பகுதி எனப்படும் தெருவுள்ளது. முன்பெல்லாம் அத்தெருவில் வாழ்வோர் கோயில்களினுள் புக அனுமதிக்கப்படுவதில்லை.

1901 மக்கள் கணக்கெடுப்பில் கூவாலு எனப்படும் சம்பல்பூர் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் தங்களைப் பொந்திலியர் சாதியின் உட்பிரிவினராகப் பதிந்து உள்ளனர்.

பொனிய - Bonia

பாணியர் என்பதற்கான (வானிபர்) ஒரியப் பெயர். பொனிய கொரொணா கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரிகளுக்கும் கடைக்காரர்களுக்கும் உரிய பெயராக அம்மாவட்டக் கையேட்டிலிருந்து தெரிய வருகிறது.

பொங்கர் – Bonka

விசாகப்பட்டின மாவட்டக்கையேட்டில் இவர்கள் செய்ப்பூர் மலைகளைச் சார்ந்த பயிரிடும் சாதியார் எனக் குறிக்கப் பட்டுள்ளது. 1901 சென்னை மாநில மக்கள் கணக்கெடுப்பில் ஒரியமொழி பேசும் மலையில் பயிர்த்தொழில் செய்யும் சிறு சாதி யினர் எனப் பதியப்பட்டுள்ளது. பொங்க, படபொங்க, கொறு பொங்க என்ற மூன்று உட்பிரிவுகள் இவர்களுள் உள்ளன.

பொந்துக்கர் - Bonthuk

பொந்துக்கர் அல்லது பொந்துச் சவரர் கிருட்டிணா, குண்டூர் மாவட்டங்களில் பரவலாக நாடோடிகளாகத் திரிகின் றனர். ஓரிடம் விட்டு இன்னோரிடம் செல்லும் போது இவர்கள்

தங்கள் குடியிருப்பான சிறு குடிசைகளையும் உடன் தூக்கிச் செல்வர், மேலும் வடபால் உள்ளவர்களான பொத்ர(கல்) சவரர்களிலிருந்து வேறுபடுத்தவே இவர்கள் பொந்து சவரர் என அழைக்கப்படுகின்றனர். கர்நூல் மாவட்டத்திலுள்ள மலைகளிலும் தெலுங்கு நாட்டின் பிறபகுதிகளிலும் வாழும் செஞ்சுக்களோடு இவர்களுக்கு உறவேதும் இல்லையெனினும் தெலுங்கு நாட்டவர் இவர்களைச் செஞ்சுக்கள் எனவும், பொந்த செஞ்சுக்கள் எனவுமே அழைக்கின்றனர். பொந்துக்கர், செஞ்சுக்களைப் போலவே அகோபில நரசிம்மரைத் தங்கள் இனத்தினைக் காக்கும் தெய்வமாகக் கொண்டுள்ளனர். ஒரிய மொழி பேசும் இவர்களில் உடற்கூறுகளில் கஞ்சம், விசாகப்பட்டினம் பகுதிகளில் வாழும் சவரர்களின் உடற்கூறுகளில் காணப்படுவது போன்ற மங்கோலிய இனக்கூறுகள் தென்படுகின்றன. இவர்கள் இல்லப்பெயர்கள் தெலுங்குப் பெயர்களாகவே உள்ளன. பசுபுரெட்டி, சிம்ஹாத்திரி (விசாகப்பட்டினத்திற்கருகிலுள்ள சிம்மாசலத்திலிருக்கும் தெய்வம்), கொனேதி, தாசபத்ரி, கேடல (எருமை), குடுமல (பணியாரம்), ஆகுல (இலை), சுங்கர, தோட (தோட்டம்) போன்ற இல்லப் பெயர்கள் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பெயர்களாகவும் அமைகின்றன. மணச் சடங்குகளில் பசுபரெட்டி குலத்தவர் குருக்களாகச் செயல்படுவர். கொனேதி குலத்தவர் கொட்டு முழக்குவதோடு, இசைக் கருவிகளையும் ஊதுவர். கேடலு குலத்தைச் சேர்ந்த ஆண்கள் இடையர்களுக்குச் சமமானவர்களாகக் கருதப்படுவர்.

பொந்துக்கர் தங்கள் குழந்தைகளுக்கு வேடிக்கையான வகையில் பெயரிடுகின்றனர். ஓர் அரசு அலுவலரோ பெரிய மனிதரோ தங்கள் குடியிருப்பின் அருகில் வந்திருக்கும்போது ஒரு குழந்தை பிறக்குமானால் அந்த அலுவலரின் பதவிப் பெயரையே அக்குழந்தைக்கு வைத்துவிடுகின்றனர். கலெக்டர், தாசில்தார், கர்னல், கவர்னர், இன்னேசு, சூப்ரின்டெண்டெண்டு, ஆச்சாரியாளு போன்ற பெயர் தரித்த பலரை அவர்களிடையே காணலாம். சிலபோது குழந்தைகள் எந்த ஊரில் பிறக்கின்றனவோ அந்த ஊரின் பெயரையோ, எந்த ஊர்க் கடவுளுக்கு நேர்ந்து கொண்டுள்ளனரோ அந்த ஊரின் பெயரையோ குழந்தைகளுக்கு வைப்பர். இவ்வகையில் ஐதராபாத்,

சென்னப் பட்டினம், பந்தார், நெல்லூர், திருப்பதி முதலிய பெயர்கள் வழங்குகின்றன. ஒரு குழந்தை பிறக்கும் போது கிளியொன்றினைக் குடியிருப்புக்குக் கொண்டு வந்த காரணத்தால் கிளி எனப்பொருள்படும் 'துய்ய' என்ற பெயர் அக்குழந்தைக்குச் சூட்டப்பட்டது. இன்னொரு குழந்தை பிறந்தபோது பேணி (வேணு) கான இசைகேட்டதால் அக் குழந்தை பேணி எனப் பெயர் பெற்றுள்ளது.

ஒவ்வொரு குடியிருப்பிற்கும் பிச்சாடி எனப்படும் சாதித் தலைவன் உளன். சாதிக்குள் ஏற்படும் பூசல்களையும், பிற நிகழ்ச்சிகளையும் அவன் பல முதியவர்களையும் கலந்து கொண்டு தீர்த்து வைப்பான். ஒருவனுக்குத் தண்டத் தொகை விதிக்கப்படுமானால், அவன் தண்டனையை ஏற்றுக் கொள்ள மறுத்து இன்னொரு பிச்சாடியிடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அவன், முன்பு விதிக்கப் பட்ட தண்டத் தொகையினை அதிகரிக்கவும் செய்யலாம். பிச்சாடியின் முடிவுக்கு கட்டுப்பட மறுப்பவர்கள் கொதிக்கும் சாணி நீருள்ள சட்டியிலிருந்து பாக்கினை வெளியே எடுக்கும் கடுந்தேர்வுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும். இச்சோதனையில் பயன்படுத்தப்படும் பானையின் உயரமும், அகலமும் விரித்த கையின் அளவினை விட அதிகமாக இருத்தல் கூடாது. சட்டியில் உள்ள சாணித் தண்ணீர் நடுவிரலின் நீளத் தைவிட ஆழமுடையதாக இருத்தல் கூடாது. பாக்கினை வெளி யே எடுக்கும்போது கையில் புண் ஏற்படுமேல் குற்றவாளியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் மெய்ப்பிக்கப்பட்டதாகும். இத்தகைய சோதனைக்கு முன் குற்றம் சுமத்துபவனும், குற்றம் சுமத்தப் பட்டவனும் பத்துப் பத்து ரூபாயினைப் பிச்சாடியிடம் சேர்ப் பித்தல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவன அவனுடைய குடிசையில் தங்கியிருக்க அனுமதிக்கப் படுவதில்லை. அவன ஒரு தோப்பிலோ, காட்டிலோ பசுபரெட்டி குலத்தைச் சேர்ந் தவர்களின் மேற்பார்வையின் கீழ் காவலில் இருக்க வேண்டும்.

பொந்துக்கர் மூங்கில்களைச் சேகரித்து அவற்றை நெருப்பில் வாட்டிக் கோணல் நிமிர்த்தபின் விற்பனை செய்யும் தொழில் புரிகின்றனர். விற்பனைக்காக மூங்கில்களை வண்டியில் ஏற்று

முன் ஆட்டினையும், கோழிகளையும் சத்தியம்ம, டோட்லம்மா, முத்தியலம்ம, பொதுராசு ஆகிய தெய்வங்களுக்கான கற்களை வைத்து அவற்றின முன் பலியிடுவர்.

சிறுமிகள் பருவமடையும் முன்பே மணம் செய்விக்கப் படுகின்றனர். ஒரு பெண் பருவமடைந்தபின் கணவனைத் தேடிக் கொள்ளும் நிலை ஏற்படுமேல் திருமணச் சடங்குகள் நடத்தப் படுவதில்லை. மணச் சடங்குகள் ஐந்து நாள் வரை நீடிக்கும். முதல் நாள் ஒரு பித்தளைப் பாத்திரத்தின் கழுத்தில் நூலினைச் சுற்றி, அதில் மஞ்சள் நீரினை ஊற்றி, அதனுள் ஒலியதொக எனப்படும் பரிசப் பணத்தையிட்டு, அப்பாத்திரத்தை மண மக்களின் குலப்பிரிவைச் சேராத மணமாகாத பெண்ணொருத்தி யின் தலைமேல் வைத்து, மணமகளின் குடிசைக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்வர். அதனை எடுத்துச் செல்பவள் சலங்கைகள் பொருத்தி அலங்கரிக்கப்பட்ட முக்காட்டினைத் தலையிலிட்டுச் சும்மாட்டின் மேல் பாத்திரத்தைத் தாங்கிச் செல்வாள். மண மகளின் குடிசையை அடைந்ததும் பரிசப் பணத்தைப் பிச்சாடி யிடம் சேர்ப்பித்துப் பாத்திரத்திலுள்ள மஞ்சள் நீரினைத் தரை யில் கொட்டுவர். பரிசப் பணத்தை மணமகளின் பெற்றோரும், தாய்மாமனும், பிச்சாடியும், சாதியைச் சேர்ந்த ஆண்களும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். ஒரு பன்றியை விலைக்கு வாங்கி அதனை ஒரு கழியில் கட்டித் தூக்கியபடி இருவர் மண வீட்டிற்குக் கொண்டு வருவர். சாதியினைச் சேர்நதவர்களும், தண்ணீருள்ள பித்தளைப் பாத்திரம் ஒன்றைத் தாங்கிய மண மான ஒருத்தியும் இன்னிசை முழக்கத்திற்கிடையே அப்பன்றி யைச் சுற்றி வருவர். அப்பெண் அவ்வாறு சுற்றும்போது பாத்திரததிலுள்ள நீரினைத் தரையில் ஊற்றியபடி வருவாள். பன்றியின் கழுத்தில் ஒரு கயிறு கட்டப்பட்டு அது மணமகன் குடிசைக்குத் தூக்கிச் செல்லப்படும். அங்கே அதனை இரு பகுதிகளாக வெட்டி, ஒரு பாதியை மணமகனைச் சேர்ந்தவர் களுக்கும், மறு பாதியை மணமகளைச் சேர்ந்தவர்களுக்கும் தருவர். மணமகன் வீட்டார் அன்றே அதனைச் சமைத்து உண்பர். மணமகன் இல்லத்திலும் மணமகள் இல்லத்திலும் மணப்பந்தலும் மணமேடையும் அமைக்கப்படும். மணப் பந்தலுக்கு வேண்டியவற்றை ஏழு பெண்களும், மணமேடைக்கு

வேண்டியவற்றை ஒன்பது ஆண்களும் கொண்டு வர வேண்டும். பந்தல் மாவிலைகளாலும் நாவல் இலைகளாலும் (*Eugenia Arnottiana*) பொதுவாக அலங்கரிக்கப்படும். இரவு உணவுக்குப்பின் மணமக்களின் உறவினர்கள் சிலர், வெட்ட வெளியில் சிலரோடு தன்னருகில் இரண்டு சட்டிகளையும் எருக்கம்பூக்களால் கட்டப்பட்ட இரண்டு நெற்றிப்பட்டங்களை யும் (bashingams) வைத்தபடி உட்கார்ந்திருக்கும் பிச்சாடியைக் காண்பர். மணமக்களின் பெற்றோர் நெற்றிப் பட்டங்களைத் தங்களுக்குத் தரும்படி வேண்டுவர். மணத்தின்போது எத்தகைய சச்சரவிலும் ஈடுபடப் போவதில்லை என்ற உறுதிமொழியை அவர்கள் தந்தபின் பிச்சாடி நெற்றிப் பட்டங்களை அவர் களிடம் தருவான். மணமகன் வீட்டில் மணமக்கள் மணமேடை யில் தங்கள் இருக்கையில் அமர்வர். சடங்கை நடத்தும் பூசாரி அவர்கள் நெற்றியில் பாசிங்கங் (நெற்றிப் பட்டைகள்) களை அணிவிப்பான். ஒன்பது ஆண்களும், ஏழு பெண்களும் மண மேடையின் அருகே நிற்பர். அவர்களைச் சுற்றி நூலினை ஏழு சுற்றுச் சுற்றியபின், பூசாரி அந்த நூலினை அறுத்துக் கங்கணம் செய்து மணமக்கள் மணிக்கட்டில் அணிவிப்பான். இவை மணச்சடங்குகள் முடிந்த பின் ஐந்தாம் நாள் அகற்றப்படும்.

ஒரு சிறுமி பூப்பெய்தினால் அவள் ஒன்பது நாள்கள் தீட்டுக்குரியவளாகக் கருதப்படுவாள். ஒன்பதாம் நாளின் இறுதி யில் பிச்சாடி அவள் பெற்றோரிடமிருந்து சிறிய தொகையை அன்பளிப்பாகப் பெறுவான். அச்சிறுமியின் கணவனும் அவன் குலத்தைச் சேர்ந்த பங்காளிகளும் அந்நாளகளில் தீட்டுக்குரியவர் களாகக் கருதப்படுவர். ஒன்பதாம் நாள் அவர்கள் அதுவரை பயன்படுத்திய சட்டி பானைகளைத் தூர எறிந்துவிட்டுப் பிச்சாடியிடம் சென்று ஒரு தொகையை அன்பளிப்பாகத் தரு வர். தீட்டுப்பட்டவர்களாக இருக்கும்போது புகைபிடிக்கக் கூடாது என்ற பழங்குடியினருடைய விதிகளை மீறியிருப்பார்கள் ஆகையினாலேயே இவ்வாறு தொகையினைப் பிச்சாடிக்கு அன்பளிப்பாகத் தருகின்றனர். ஒன்பதாம் நாள் அச்சிறுமியும் அவள் கணவனும் ஒருவர் மேல் ஒருவர் நீரினை இறைத்துக் கொள்வர். இதனபின் அவர்கள் திருமணம் முழுமை பெற்ற தாகக் கருதப்படும்.

இறந்தவர்கள் பெரும்பாலும் இடப்புறம் நோக்கியவர்களாக இருக்கும்படி புதைக்கப்படுகின்றனர். இரண்டாம் நாள் காகங்களுக்கும் கருடனுக்கும் சோறளிக்கப்படுகிறது. பதினொன்றாம் நாள் குடிசையினுள் தரையில் ஒரு பாயினை விரித்து அதனைத் தூயதொரு துணியால் மூடி அதன்மேல் சோற்றுருண்டைகளை வைப்பர். அவ்வாறு சோற்றுருண்டைகளைப் படைக்கும்போது படைப்பவர் இறந்து போனவரைப் பெயர் சொல்லி அழைப்பார். இறுதியில் அச்சோற்றுருண்டைகளை ஒரு முறத்திலிட்டுக் குளக்கரைக்குக் கொண்டு செல்வர். குளக்கரையில் ஒரு சிறு குடிசை அமைத்து அதனுள் இரு இலைகளில் சோற்றினை வைப்பர். ஒன்று இறந்து போனவருக்காகவும், மற்றொன்று அவருடைய உயிரைக் கவர்ந்து செல்ல வந்துள்ள எமதூதனுக்காகவும் என இவ்வாறு படைக்கப்படுகின்றது.

போரி-Boori (cake)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். பணியாரம் எனப் பொருள் படுவது.

பொசந்தியர்–Bosantia

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பொசந்தியர் பற்றி, "ஒரியப் பயிரிடுவோரான இவர்கள் கஞ்சம மாவட்டத்தின் வடபகுதி வட்டங்களில காணப்படுகிறார்கள். முதலில் சாயம் தோய்ப்பவர்களாக இவர்கள் இருந்திருக்க வேண்டும்." எனத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இச்சாதியின் பெயர் இவர்கள் ஒரு காலத்தில் கபில (*Mallotus Philippinensis*) மரத்தின் கனிகளிலிருந்து பொசொண்டொகுண்டி என்ற சாயம் தயாரித்து விற்று வந்த தொழிலோடு தொடர்புடையது என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. கமேலா அல்லது கமலா எனப் பொதுவாக அழைக்கப்படும் இச்சாயம் கபில மரத்தின் பழங்களின் மேற்பரப்பில் சுரப்பிகளோடு கூடிய மென் மயிர்த் தூவிகளிலிருந்து திரட்டப்படும் பொடியாகும். 1892-ஆம் ஆண்டு இந்திய வனவியல் (Indian Forester, 1982) இதழில் இச்சாயம் பற்றி வெளிவந்துள்ள குறிப்பு வருமாறு:- "கஞ்சம் மாவட்டத்து இயற்கைச் செல்வ வளங்கள் பலவற்றுள்ளும் மிக மதிப்பு வாய்ந்தது

கபில மரத்திலிருந்து கிடைக்கும் கமேலா சாயமேயாகும். கஞ்சம் மாவட்டக் காடுகளில் பளபளக்கும் செஞ்சிவப்புப் பழங்களோடும் மரகதப் பச்சை இலைகளோடும் நிற்கும் இம் மரங்கள் அக்காடுகளுக்குத் தனித் தோற்றப் பொலிவினைத் தருகின்றன. இம்மரத்தின் பழங்கள் அழகிய சிவப்புப் பொடியால் மூடப் பட்டிருக்கும். இப்பொடியே சாயமாகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பழங்களில் பொடி எடுக்க வென்றே தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட கூடைகளில் தேய்த்துப் பொடியினைக் கூடையினுள் உதிரச் செய்வர். எனினும் முரட்டுத்தனமான இத்தகைய முறையால் பொடி பெரு மளவில் வீணாகின்றது. உயர இருக்கும் பழங்களுக்காக அடிக் கடி மரங்களே வெட்டிச் சாய்க்கப்படுகின்றன. இந்தத் தொழில் மலைக் கொண்டர்களின் தனி ஆதிக்கத்திற்குரியதாயிருப்பினும் இதனால் அவர்கள் பெறும் ஆதாயம் மிகச் சிறிதே. இச்சாயத் தின் வணிக மதிப்பினைப் பற்றி அவர்கள் அறியா தவர்களாகவே உள்ளனர். இவர்கள் சமவெளியில் உள்ள வணிகர்களுக்கு இப்பொடியினைச் சில படி அரிசிக்கும், ஓரிரு கசத்துணிக் கும் பண்ட மாற்றாகத் தந்து விடுகின்றனர். இத்தொழில் நன்கு வளரப்பெறும் வாய்ப்பு உள்ளது. சமவெளியில் கொண்டர் களிடையே தங்கி உள்ள இந்திய வணிகர்களோடு போட்டி யிட்டு இத்தொழிலில் புக விரும்பும் நிறுவனங்கள் அல்லது தனி யார், பெரும் லாபம் அடைய முடியும். அத்தனி வணிகர்களின் ஆளுகையில் இத்தொழில் இப்போது உள்ளது. இவர்கள் இச் சாய வணிகததில் பெருஞ்செல்வம் குவித்துள்ளனர் என்பது யாவரும் அறிந்த ஒன்றே. இம்மரம் கோண்ட்களால் கஞ்சம் மாவட்ட ஊர்ப்புறக் காடுகளில பெருமளவில் வளர்க்கப் படுகிறது.''

பொசந்தியரிடையே உட்பிரிவுகள் ஏதும் இல்லை. ஆனால் புறமணக்கட்டுப்பாடு உடைய நாகசிர (நல்ல பாம்பு), கொசி சிமொ (ஆமை) போனற கோததிரப் பிரிவுகள் உள்ளன. சமூகப்படிநிலையில் இவர்களை பொந்தாரியரொடு ஒப்பானவர்க ளாகவும் பச்சில்லிய கௌடொக்கள், சாமாந்தியர் ஆகியோருக்கு மேம்பட்டவர்களாகவும் உள்ளனர். இவர்களின சாதித் தலைவன் பிஸ்ஸோயி. அவனுக்குப் பொல்லாபய என்ற உதவியாளன்

உளன். சாதித் தொடர்பான சேதிகளைச் சென்று அறி விக்கும் சாதி நாய்க்கோ என்பவனும் உளன். இச்சாதிக்குரிய பட்டப் பெயர்கள் பிஸ்ஸோயி, நாகசெகா என்பனவாம்.

பெரும்பாலான பொசந்தியர் சைவர்களாயிருப்பினும், சிலர் பரமார்த்த வைணவ சமயத்தையும் சார்ந்துள்ளனர். இவர்கள், ஊர்த் தேவதைகளான தாகுராணிகளான கோடாரு, சொண்டி ஆகிய தெய்வங்களையும் வழிபடுகின்றனர்.

1869–ஆம் ஆண்டு விசாகப்பட்டினம் கையேட்டில் பொசுண்டிய என்பது பைய்க் சாதியைச் சேர்ந்த விசாகப்பட் டினம் செய்ப்பூரைச் சார்ந்த போர்வீரர்களுக் உரியதெனக் கூறப்பட்டுள்ளது.

பொட்டதர் – Bottada

திரு எச். எ. ஸ்டுவர்ட், 1891 சென்னை மாநிலக் கணக் கெடுப்பில், ''பொட்டதர் உரிய (Uriya) வகுப்பைச் சேர்ந்த பயி ரிடுவோரும், தொழிலாளரும் ஆவர். யுரியாவின் கிளை மொழி யான, பஸ்டுரிய என்றும் வழங்கப் பெறும் முரிய அல்லது லுசிய மொழி பேசுபவர்கள் இவர்கள். இச்சாதியினர் முரிய சாதியினரே எனத் திரு டெய்லர் கூறுகின்றார். முரிய சாதி, சாதிகளின் பட்டியலில் தனிச் சாதியாகக் காட்டப் பட்டிருப்ப தோடு, திரு எச். ஜி. டர்னரின் 1871 மக்கட் கணக்கெடுப்பு அறிக்கையிலும் தனிச் சாதியாகவே சுட்டப்பட்டுள்ளது. இது தனிச் சாதியோ, முரிய சாதியோடு ஒத்த வேறொரு சாதியோ எதுவாயினும் இவ்விரு சாதிகளும் பெரும்பான்மை யரான கோண்டுகளின் உட்பிரிவினர் என்பது தெளிவான தாகும்.'' எனக் கூறியுள்ளார்.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. ஹயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இச்சாதியார் முதலில் பர்த்த கடாவில் வாழ்ந்தனரென்றும் அங்கிருந்து விசாகப்பட்டினம் பகுதிக்கு நெடுங்காலத்திற்கு முன் குடிபெயர்ந்து வந்தனரென் றும் ஒரு வழக்கு உள்ளது. பர்த்தகடா பஸ்த்தார் பகுதியைச் சார்ந்து அல்லது அதற்கும் அப்பால் இருக்க வேண்டு

மெனத் தெளிவற்ற வகையில் கூறப்பட்டுள்ளது. அப்பகுதிகளின் அருகே இன்னமும் இச்சாதியைச் சார்ந்தவர்கள் காணப்படுகின்றனர். அவர்களோடு விசாகப்பட்டினம் முகவர் பகுதியைச் சார்ந்த பொட்டாதர் மண உறவும் வைத்துக் கொள்கின்றனர். இச்சாதி அகமணக்கட்டுப்பாடுடைய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:-

1. பொடொ அல்லது பரம்பரையான பொட்டாதர்
2. மத்தியர் - இவர்கள் பொட்டாதர் ஆண்களுக்கும் பொட்டாதர் அல்லாத பெண்களுக்கும் பிறந்தவர்கள்
3. சன்னொர் - மத்திய பிரிவைச் சேர்ந்த ஆண்களுக்கும் மத்தியர் பிரிவைச் சேராத பெண்களுக்கும் பிறந்தவர்கள்.

பொடொ பிரிவினர் மற்ற இரு பிரிவினரோடும் உடன் உண்ணமாட்டார்கள். மற்ற இரு பிரிவினையும் சேர்ந்த ஆண்கள் பொடொ பிரிவினரோடு உண்பர்.

பொடொ பிரிவினருக்குள் உள்ள புறமணக்கட்டுப்பாடு உடைய பல குலப் பிரிவுகள் அல்லது வம்சங்களுள் இன்றுள்ளனவாக உள்ளனவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

கொச்சிமோ (ஆமை)	குக்குரு (நாய்)
பாக் (புலி)	மகதொ (குரங்கு)
கோயி (பல்லி)	செலி (ஆடு)
நாக் (நாகம்)	

சிறுமிகள் பருவமடையும் முன்போ பின்போ மணம் செய்விக்கப்படுகின்றனர். ஒருவன் தன் தந்தை வழி அத்தைமகளை மணக்க உரிமை கொண்டாடலாம். திருமண ஏற்பாடு பற்றிய எண்ணம் தோன்றியவுடன் மணமகன் பெற்றோர் சாராயம், அவுல் ஆகியனவற்றைப் பெண் வீட்டிற்குக் கொண்டு செல்வர். மண உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதாயின் பெண்ணின் பெற்றோர் அவைகளைப் பெற்றுக் கொள்வர்; இல்லையேல் அவற்றை வேண்டாம் என மறுத்துவிடுவர். குறிப்பிட்ட இடை

வெளிக்குப் பின் மறுபடியும் மேற்கொண்டு அன்பளிப்பாகச் சாராயம், அரிசி, உளுந்து, துவரை, உப்பு, மிளகாய், வெல்லம் ஆகியனவற்றைக் கொண்டு கொடுத்து அதற்குப் பதிலாக வெற்றிலைப் பாக்கினைப் பெற்று வருவர். இரண்டு நாள்களுக்குப் பின் பெண்ணின் பெற்றோர் மணமகன இல்லம் வந்து செல்வர். அதன்பின் சில நாள்கள் கழித்தே மணம் நிகழும். மணத்திற்கு ஒன்பது நாள்கள் முன்பு நெல், இரண்டு ரூபாய் ஆகியவற்றை 'ஜொல்லடொங்கா' என மணமகள் வீட்டிற்குக் கொண்டு செல்வர். அப்போது விருந்து நிகழும். மணமகன் வீட்டில் ஒன்பது சொர்க்கி அல்லது சால் மரக் கம்பங்களைக் கொண்டு மணப் பந்தலமைக்கப்பட்டு நடுக் கம்பத்தில் ஒரு பானையில் மஞ்சள் நீர் கட்டித் தொங்கவிடப்படும். மணமகள் அங்கு அழைத்துச் செல்லப்படுவாள். மணச்சடங்குகளை நடத்தி வைப்பவன் தாசரியே. மணமக்களின் ஆடைமுனைகளைச் சேர்த்து முடிச்சிடுவர். மணமக்கள் சிறுவிரல்கள் இணைக்கப்பட்டு மஞ்சளையும், அரிசியையும் ஏந்தியவர்களாக மணப்பந்தலை ஏழுமுறை வலம் வருவர். ஓமத்தீ வளர்க்கப்பட்டு அதில் ஒன்பது வகையான மரங்களின் விறகுகள், நெய், பால், அரிசி, வெல்லம் ஆகியன அவிப் பொருள்களாக இடப்படும். மணமக்களின் நெற்றியில் தாசரியும், அவர்களின் பெற்றோரும் உறவினர்களும் மஞ்சள் தோய்த்த அரிசியைக் கொண்டு பொட்டிடுவர். அவர்களுக்கு விளக்கெண்ணெய் பூசி, நடுக்கம்பத்துப் பானையில் உள்ள மஞ்சள் நீரில் குளிக்கச் செய்வர். மணமக்களுக்குப் புத்தாடை அணிவிப்பர். சாதியார் அனைவருக்கும் விருந்து வைப்பர்.

கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. இறந்து போனவனின் இளைய சகோதரனே பெரும்பாலும் தன் அண்ணன் மனைவியை மணந்து கொள்வான். அவள் வேறு யாரையேனும் மணக்க நேரிட்டால் அவளுடைய புதிய கணவன் 'ராண்ட்டொங்க' எனப்படும் சாராயம், ஆடு, அரிசி, சாதிக்கான அபராதம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். அல்லது இவையனைத்துக்குமாக அவன் ஐந்து ரூபாய் செலுத்தினால் போதுமானது. மணமுறிவும் இவர்களிடையே அனுமதிக்கப்படுகிறது. ஒருவன் தன் மனைவியை மண

முறிவு செய்யும்போது அவளுக்குக் கொஞ்சம் நெல், புதிய சேலை, ஒரு ரூபாய் ஆகியனவற்றைத் தர வேண்டும். ஒருத்தி தன் கணவனை மணமுறிவு செய்து கொண்டு வேறொருவனோடு புதிய உறவு கொள்வாளாகில் அப்புதியவன் தண்டத் தொகையாக ரூபாய் இருபதினை அவளுடைய முதல் கணவனுக்குத் தர வேண்டும். அதில் ஒரு பகுதி விருந்துக்காகச் செலவிடப்படும். விருந்தில் அவளும் அவளுடைய இரண்டு கணவர்களும் பங்கு பெறுவர்.

இறந்தவர்களை எரிக்கின்றனர். சாவுத் தீட்டுப் பத்து நாள்களுக்கென வரையறை செய்யப்பட்டுள்ளது. அச்சமயம் எந்த உழவுப் பணிகளிலும் சாவு வீட்டார் ஈடுபடுவதில்லை. சாவு நிகழ்ந்த வம்சக் குடும்பங்களில் சமைப்பதுமில்லை. பிற வம்சத்தவர்கள் சமைத்து இவர்களை உண்பிப்பர். பிணத்தை எரித்த மறுநாள் ஒரு புதிய பானையில் நீரும், மணலும் பிணம் எரித்த இடத்திற்குக் கொண்டு செல்வர். அங்கு மணலால் மேடை அமைத்து ஆல், அல்லது அரசங் கன்றினை நட்டுப் பானையில் பொத்தலிட்டுப் பானையிலுள்ள நீரை நடப்பட்ட மரக்கன்றுக்கு விடுவர். பத்தாம் நாள் குளித்தபின் சிறிது அவுலையும், ஒரு புதிய பானையையும் பிணத்தைச் சுட்ட இடத்திற்குக் கொண்டு சென்று வைத்து விடுவர்.

செய்ப்பூர் முகமைப் பகுதியில் பொட்டதர் சிறந்த முறையில் பயிரிடுவோர் எனப் போற்றபபடுவதோடு, சமூகப் படிநிலையிலும் உயர்வாக வைத்து எண்ணப்படுகின்றனர். இவர்களுள் பலர் மணத்தினபோது பூணூல் அணிவதோடு, அதன் பின்னரும் அதனைத் தொடர்நது அணிந்து வருகின்றனர். இவ்வாறு பூணூலை அணியும் உரிமையைச் செயப்பூர் அரசருக்கு ஒரு தொகையைச் செலுத்தி உரிமமாகப் பெற்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

பொட்டுக் கட்டோரு - Bottu Kattōru (those who tie the bottu)

காப்பிலியர்களின் ஓர் உட்பிரிவினரான இவர்கள் கன்னடம் பேசும் பயிரிடும் வகுப்பார். தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்

தில் தங்கியுள்ள இவர்கள் தமிழர்களின் தாலிக்கொப்பான பொட்டினை மணத்தின்போது அணிவிக்கின்றனர்.

போவி - Bōvi

தென் கன்னட மொகீர்களுள் பல்லக்குத் தூக்கும் பிரிவினர். மைசூரிலிருந்து இம்மாவட்டத்தில் சென்று தங்கிவிட்ட சில பெஸ்தர்களும் போவி என அழைக்கப்படுகின்றனர். போயி (தூக்கிச் செல்பவன்) என்பதன் திரிபாகும் இது.

போயர் (பார்க்க: போடர்) - Bōya (See:Bēdar)

போயர் என்பது மாலர்களின் ஓர் உட்பிரிவாகவும் பதியப் பட்டுள்ளது. ஏகாரிகளுக்குரிய பெயருமாகும் இது.

போயன் - Bōyan

ஒட்டர்களுக்குரிய பட்டப் பெயர்.

போயி (பார்க்க: பெஸ்தர்) - Bōyi (See:Bestha)

சவரர்களில் பெரிய மனிதர்களுள் ஒருவருக்குரிய பட்டப் பெயராகவும் இது உள்ளது.

பிராமணர் - Brāhman

தென்னிந்தியப் பிராமணர்கள் மொழி, நெறிமுறை, பழக்க வழக்கம் ஆகியவற்றின் வேறுபாடுகள் காரணமாகப் பல பிரி வினராக உள்ளனர். அவர்களின் தோற்றம் பற்றியதான தற்கால நம்பிக்கை, அவர்கள் பிரம்மாவினுடைய வாயிலிருந்து தோன்றியவர்கள் எனபதாகும். இதற்கு ஆதாரமாக ரிக் வேதத் தின் புருஷ சூக்தத்திலிருந்து பின்வரும் செய்யுளை எடுத்துக் காட்டுவார்கள்:- "பிரஜாபதியின் (விராட்புருடன்) முகத்தி லிருந்து பிராமணர்கள் தோன்றினார்கள்; கைகளிலிருந்து சத்திரியர்கள் எழுந்தனர்; தொடையிலிருந்து வெளிப்பட்டவர் கள் வைசியர்கள்; பாதங்களிலிருந்து சூத்திரர் தோன்றினர்." இந்துக்களுக்குரிய நான நால்வகை வருணம் பற்றி மற்ற வேதங் களும், புராண இதிகாசங்களும் கூடக் கூறுகின்றன.

மூன்று வேதங்களினைப் பின்பற்றும் நெறியினராகப் பிராமணர்கள் ரிக், யஜுர், சாமம் என மூன்று கூட்டத்தினராகப் பிரிந்துள்ளனர். மூன்று வகைத்தான இப்பாகுபாடு, சடங்குகள் தொடர்பாகவே நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது. மணம், சமுதாய உறவு, ஆகியவற்றிற்கு மொழி, வாழ்விடம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடே கருத்தில் கொள்ளப் படுகிறது. சமயத் தொடர்பான சிறப்பான சடங்குகளை நடத்தத் தென்னிந்திய பிராமணர்கள் பிற இடங்களில் வாழும் பிராமணர்களைப் போலத் தங்களுக்குரிய வேதங்களையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு பிராமணனும் எண்ணிறந்த கோத்திரங்களுள் ஏதாவது ஒன்றைச் சேர்ந்தவனாகவே இருப்பான். இக்கோத்திரங்களைப் பற்றிப் பிரவர காண்டமும் கோத்திர காண்டமும் கூறுகின்றன. எல்லாச் சமயச் சடங்குகளும் கிருக்ய சூத்திரங்களின்படி உரிய சாகை அல்லது வேத நெறிப்படியே நிகழ்த்தப்படுகின்றன. அவற்றுள் தற்போது (எட்டு வகைகள்) வழக்கில் உள்ளனவாகத் தெரிய வருகின்றன. அவை வருமாறு:-

1. ஆஸ்வலயன சூத்திரம் - ருக் வேதத்திற்குரியது
2. ஆபஸ்தம்ப – கருப்பு யசுர் வேதத்திற்குரியது
3. பாரத்துவாச - ,, ,,
4. போதாயன - ,, ,,
5. சத்யாசாடா – ,, ,,
6. வைக்காநச - ,, ,,
7. காத்யாயன சூத்திரம் - வெள்ளை யசுர் வேதத்திற்குரியது.
8. திரகயாயன சூத்திரம் – சாம வேதத்திற்குரியது.

பிராமணர்கள் அனைவரும் பின்வரும் ஏழு முனிவர்களுள் யாரேனும் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் பரம்பரையில் வந்தவர்களாகவே கூறிக் கொள்கின்றனர். அத்ரி, பிருகு, குத்சர்,

வசிட்டர், கௌதமர், தாச்யபர், ஆங்கிரசர் என்பவர்களே அம்முனிவர்கள். வேறு சிலர் கூற்றுப்படி இவ்வரிசையில் குத்சருக்குப் பதிலாக அகத்தியர் இடம் பெறுவார். இம்முனிவர்களின் கீழ் பதினெட்டுக் கணங்களும், ஒவ்வொரு கணத்தினைச் சார்ந்து பல கோத்திரங்களுமாகச் சுமார் 230 கோத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு பிராமணனுக்கும் தனக்கு மேம்பட்ட பெரியவர்களை வணங்கும்போது அவன் தன் பரம்பரை வரலாற்றைக் கூறும் அபிகிவாதனம் வழிபாட்டினைச் சொல்லி வணங்க வேண்டியது அவன் கடமையாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வணக்கத்திற்குரிய மாதிரி வருமாறு:- "ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்தவனான பார்கவ, சையாவன, ஆப்னுவன, அருவ, சமதக்னி ஆகிய ஐந்து முனிவர்களின் கால்வழியில் வந்த யசுர் சாகைக்குரிய ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் பின்பற்றுவனான கிருட்டிணன் என்ற பெயரை உடைய நான் உங்களை வணங்குகின்றேன்." நாள்தோறும் சந்தி வழிபாட்டுக்குப் பின் இந்த அபிகிவாதன சூத்திரத்தினை ஒவ்வொரு பிராமணனும் சொல்லுதல் வேண்டும்.

பிராமணர்கள் அனைவரையும் பஞ்சதிராவிடர், பஞ்ச கௌடர் என இரு பெரும் பிரிவுகளில் அடக்குவது வழக்கம். பஞ்ச திராவிடர்கள் ஊன் உண்ணும் பழக்கமற்றவர்கள். பஞ்ச கௌடர்கள், மீனும் ஊனும் உண்ணலாம். எனினும் பஞ்ச திராவிடரிடையே வாழ்பவர்கள் அப்பழக்கத்தைக் கைக்கொள்ளுவதில்லை. மற்ற வேறுபாடுகள் பஞ்ச கௌடப் பிரிவைச் சேர்ந்த ஓரிய பிராமணர்களைப் பற்றிக் கூறும்போது கூறப்படும். தென்னிந்தியாவில் வாழும் பிராமணர்களுள் ஓரிய மொழியும் கொங்கணி மொழியும் பேசுபவர்களைத் தவிர மற்ற எல்லோரும் பஞ்ச திராவிடர் பிரிவைச் சேர்ந்தவர்களே. இவர்கள் ஐந்து பிரிவினராக வகைப்படுத்தப் பட்டுள்ளனர். அவை வருமாறு -

1. தமிழ்ப் பிராமணர் அல்லது திராவிடப் பிராமணர்.

2. தெலுங்குப் பிராமணர் அல்லது ஆந்திரர்,

3. கன்னடப் பிராமணர் அல்லது கருநாடகர்.

4. மராத்திப் பிராமணர் அல்லது தேசந்தரர்.

5. குசராத்திப் பிராமணர்.

துளு மொழி பேசும் சிவாலி பிராமணர் கர்நாடகப் பிராமணருள்ளும் பட்டர்களும், பூத்ரிநம் பிராமணர்களும் (பார்க்க: நம்பூத்ரி) திராவிடப் பிராமணர்களுள்ளும் அடங்குவர்.

சமய நெறியைப் பின்பற்றுவதில் பிராமணர்கள் சைவர்களாகவோ வைணவர்களாகவோ இருக்கின்றனர். சைவர்களுள்ளும், சைவ நெறிப்பட்டோர், ஸ்மார்த்தர் என்ற இரு பிரிவுகள் உள. ஸ்மார்த்தர்கள் மனிதன் ஆன்மா பிரம்மத்தின் ஒரு பகுதியெனவும், அதற்குப் பிரம்மத்தினோடு இரண்டறக் கலக்கும ஆற்றல் உண்டு எனவும் நம்புகின்றனர். அவர்கள் பிரம்மா, விட்டுணு, சிவன் என்ற மும்மூர்த்திகளைத் தனித் தெய்வங்கள் என ஏற்றுக் கொள்கின்றனரெனினும், அவை பிரம்மத்தின் வேறு வேறு தோற்றங்களெனவும், இறுதியில் இத்தெய்வங்களும் பிரம்மத்தில் கலந்து இல்லையாய் விடுவனவே என்றும் நம்புகின்றனர். சைவர்கள் ஸ்மார்த்தர்களைப் போல மும்மூர்த்திகளை நம்புவதில்லை. அவர்கள் சிவனை அன்றி வேறு தெய்வமில்லையெனவும் அவன் என்றும் உள்ளவன் என்றும் கொள்வர். வைணவர்களுள் மூன்று பிரிவினர் உளர். அவர்கள் சைதன்யர், இராமானுசர், மாத்வாச்சாரியர் ஆகியவர்களின் வழிப்பட்டவர்களாவர். ஸ்மார்த்தர்களைப் போலவே வைணவர்களும் பிரம்மா, விட்டுணு, சிவன் என்ற மும்மூர்த்திகளை ஏற்றுக்கொள்பவர்களாயினும் இவர்கள்விட்டுணுவையே பெருந்தெய்வமாகக் கொண்டு மற்ற இருவரும் அவருக்குக் கீழ்ப்பட்டவர்கள் எனக் கொள்வர்.

மொனியெர் வில்லியம்ஸ்* எழுதுவதாவது;- "வைணவர்கள் விட்டுணு ஒருவனைத்தான் தங்கள்தெய்வமாகக்கொள்கின்றனர். அவன் உலகைக் காப்பது மட்டுமன்றிச் சிவன் உள்ளிட்ட பிற

---

* இந்தியாவில் சமயச் சிந்தனையும் வாழ்வும்.(Religious Thought and Life in India.)

தெய்வங்களுககு மேலானவனாக உள்ளான். சைவர்களும் வைணவர்களும் பிரம்மத்திற்கு எனச் சில தரிப்பட்ட குணங்கள் உள என ஏற்றுக் கொள்வது கருத்தில் கொள்வதற்குரியது. அவர்களின் முழுமுதற் கடவுள் உண்மையில் என்றும் அழியாத உடலுடையவன். அது அவன் இம்மண்ணுலகத்தில் எடுத்த அவதாரங்களுக்கெல்லாம் முற்பட்டது. அத்தகைய அவதாரங்கள் மறைந்த பின்னும் நிலைததிருப்பது.'' ''இந்து சமயத்திற்குப் பன்னெடுங் காலமாகப் பெரும் ஆதாரமாக இலங்குவது பலபடித்தான கொள்கைகளைக் கொண்ட வைணவம் எனலாம். புத்த சமயத்தினைப் போல வைணவமும் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் அடிப்படைகளையுடையதாயிருக்கின்றது. பிற நெறிகளின் கோட்பாடுகளுக்கு இடம் தர முன்வருவதோடு, உலகத்து நாடுகளின் பிற சமயங்களைத் தன்னோடு இணைத்துக் கொள்வதில் ஆர்வமுடையதாயிருக்கின்றது. உட்பிரிவுகள் வளர்வதையும் அது அனுமதிக்கின்றது. ஒரு பெருந்தலைவரின் கீழ் அது பல நிலைப்பட்ட நிறுவனங்களைப் பெற்று இராத தோடு அது பல தனிப்பட்ட பிரிவுகளையும் அதற்கான தனிப்பட்ட தலைவர்களையும் கொண்டுள்ளது. இவர்கள் ஆன்ம மேம்பாட்டினைப் பெருமளவிலான மக்கள் பெற வேண்டும் என எப்பொழுதும் இணைந்து செயல்பட்டவர்களாக உள்ளனர்.'' என வைணவம் பற்றி அவரே மேலும் எழுதி யுள்ளார்.

சைதன்யரின் நெறிவழிப்பட்ட ஒரிய பிராமணர்கள் பரமார்த்திகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் கஞ்சம் மாவட்டத்திற்கே உரியவர்களாக உள்ளனர். சுமார்த்தர்களும் பரமார்த்த ஒரிய பிராமணர்களும் தங்களுக்குள்ளே மண உறவு வைத்துக் கொள்ளத் தடையேதுமில்லை.

தங்கள் சமயச் சின்னமாக நெற்றியில் நாமம் தரிக்கும் ஸ்ரீவைணவர்களும் மாத்துவர்களும் தங்களுக்குள்ளே மட்டும் மண உறவு கொள்வர். மாத்வர்கள் சுமார்த்தர்களோடும் அவர்கள் இல்லங்களிலும் உணவு கொள்வர். ஸ்ரீவைணவர்கள் அவ்வாறு செய்ய மறுப்பர்.

சூத்திரங்கள் விதித்துள்ளபடி ஒரு பிராமணன் பின்வரும் சமஸ்காரங்க (சடங்குகளை)ளைச் செய்து கொள்வதற்குரியவன்.

1. கர்ப்பாதானம்
2. பும்சவனம்
3. சீமந்தம்
4. ஜாதகர்மம்
5. நாமகரணம்
6. அன்னப் பிராசனம்
7. சௌளம்
8. உபநயனம்
9. விவாகம்

தாயின் கருப்பையின் வாயிலாக ஆன்மாவிற்கமைந்த கறைகளை இச்சடங்குகள் போக்கி உடலையும், ஆன்மாவையும் தூய்மைப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. இவை அனைத்தும் இன்று உரிய காலத்தில் உரிய முறைப்படி நடத்தப்படுவதில்லை.

க்ரிக்ய சூத்திரப்படி கர்ப்பாதானம் எனப்படும் கருவினை நிலைப்படுத்தும் சடங்கு மணச் சடங்குகளின் போது நான்காம் நாள் நடத்தப்படுவதற்குரியது. மணமகள் இளஞ்சிறுமியாக இருப்பதால் இது நடத்தப்படாமல் விடப்பட்டு வேதமந்திரங்கள் மட்டும் ஓதப்படுகின்றன. மணம் செய்து கொண்ட சிறுமி பருவம் அடைந்தபின் ரிது சாந்தியின் போது இச்சடங்கு நடத்தப்படுகிறது. ரிது சாந்தி அல்லது மணநிறைவுச் சடங்கின் போது பின்வரும் செய்யுள் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது:- "எங்கும் நிறைந்திருக்கும் விட்டுணுவானவர் இவளுடைய கருப்பையினை ஏற்றதாக்கட்டும். அனைத்தையும் படைப்பவன் கருவிற்கு வடிவங்கள் தரட்டும்; பிரஜாபதி இவளைக் கருவுறச் செய்யட்டும்; படைப்பவன் கருவினைத் தரட்டும்."

முதன் முதல் ஒருத்தி கர்ப்பமுறும்போது ஏழாவது மாதத்திலோ ஒன்பதாவது மாதத்திலோ ஒருங்கே நடத்தப்படும் இரு சடங்குகள பும்சவனமும், சீமந்தமுமாகும். க்ரிக்ய சூத்திரப்படி முன்னது மூன்றாம் மாதத்திலேயே நடத்தப்பட வேண்டும். பும்சவனம் எனப்படும் கருவினை ஆணாக ஆக்கும் சடங்கின் போது கருவுற்றவள் விரதமிருக்க அவளுடைய கணவன் அவள்

வலப்புற மூக்கில் ஆலம்பழம், ஆலங்கொழுந்து ஆகியவற்றின் சாற்றினைச் சிறிதளவு பிழிவான். அப்போது அவன், ''நீ ஓர் ஆண் குழந்தையே'' எனக் கூறுவான். இதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆலந்தளிரின் மொக்கு கிழக்கு அல்லது வடக்கு நோக்கியதாக இருக்க வேண்டும். அதனோடு இணைந்திருக்கும் பழங்கள் ஆணின் அண்டங்களைப் போலத் தோற்றம் தர வேண்டும். ஆலந்தளிரினை ஓர் அம்மியின் மீது வைத்துப் பூப்படையாத ஒரு பெண்ணைக் கொண்டு அதனை அரைக்கச் செய்வர். அரைக்கப்பட்ட இலைப் பசையை ஒரு புதிய பட்டுத் துணியிலிட்டுச் சாறு வரும்படியாகப் பிழிவர். இப்பும்சவனச் சடங்கு முடிந்தபின் கருவுற்ற பெண்ணின் மயிர் நீக்கும் சீமந்தம் என்ற சடங்கு நடைபெறும். ஓமம் வளர்த்து, நெருப்பில் பலிகளைத் தந்தபின் கர்ப்பமுற்றவள் கணவன் ஒரு முள்ளம் பன்றியின் முள்ளில் மூன்று தருப்பைப் புட்களையும், அத்திப் பழத்தோடு கூடிய அத்தி இலைக் கொத்தையும் இணைத்து, அதனை அவள் தலைமீது முன்பக்கமிருந்து பின் பக்கமாகத் தடவி மயிர் நீங்கச் செய்வான்.

ஜாதகர்மம், நாமகரணம், அன்னபிரசனம், சௌளம் சடங்குகள் பொதுவாக உபநயனத்தின்போது ஒன்றினை அடுத்து ஒன்றாகச் செய்விக்கப்படுகின்றன. ஜாதகர்மம் என்பது கொஞ்சம் நெய்யினையும், தேனினையும் குழந்தையின் நாவில் தடவுவதாகும். அப்போது ரிக் வேதத்திலிருந்து பின் வரும் செய்யுள் திரும்பத் திரும்பச் சொல்லப்படும்:– ''ஓ! நீண்ட காலம் வாழ்ந்தவனே, நீ இந்த உலகில் தெய்வங்களால் பாது காக்கப்பட்டு நூறாண்டுக் காலம் வாழ்வாயாக. பாறையைப் போலவும், கோடரியைப் போலவும் உறுதியாகவும், பொன்னைப் போலத் தூய்மையாகவும் ஆவாயாக. நீ தான் மகன் எனக் கூறப்படும் வேதம்; நீ நூறாண்டுக் காலம் வாழ்வாயாக. இந்திரன் தன் சிறந்த செல்வத்தை உனக்குத் தருவானாக. சாவித்ரி, சரஸ்வதி, அசுவினிகள் ஆகியோர் உனக்கு அறிவைத் தருவார்களாக.''

நாமகரணம் எனப்படும் பெயர் சூட்டு விழாவின்போது குழந்தையின் பெற்றோர் அதன் காதருகே அதற்கு வைக்கப்

படும் பெயரை உச்சரிப்பதோடு இந்திரனையும் அக்கினியையும் நோக்கி, ''இந்திரன் உனக்கு ஒளி, விந்து, அறிவு, குழந்தைகள் ஆகியவற்றைத் தருவானாக'' என்ற வேத மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவர்.

அன்னப்பிராசனம் எனப்படும் சோறூட்டும் சடங்கு குழந்தை பிறந்த ஆறாம் மாதம் நடத்தப்பட வேண்டும். சிறிதளவு சோற்றினைக் குழந்தையின் வாயில் வைத்தபின் பின்வரும் வேதச் செய்யுட்கள் திரும்பத்திரும்பக் கூறப்படும். ''மரஞ் செடிகளைக் கொண்டு வாழும் அக்கினி, சோமரசத்தினைக் கொண்டு வாழும் சோமன், வேதங்களைக் கொண்டு வாழும் பிராமணர்கள், அமிர்தத்தைக் கொண்டு வாழும் தேவதைகள் ஆகியோர் உன்னை வாழ்த்தட்டும். இந்தப் பூமி, மரஞ் செடிகளுக்கு உணவும் நீரும் தருவதைப் போல, நான் உனக்கு இந்த உணவைத் தருகிறேன். இந்த நீர்களும், தாவரங்களும் உனக்கு வளத்தையும், உடல் நலத்தையும் தருவதாகட்டும்.''

சௌளம் எனப்படும் மயிர் நீக்கும் சடங்கின்போது குழந்தையைத் தாயின் மடியில் அமரச் செய்வர். குழந்தையின் தந்தை ஒரு கையில் சில தருப்பைப் புல்களை எடுத்துக் கொண்டு குழந்தையின் தலையில் கொஞ்சம் நீர் தெளிப்பான். ஒவ்வொரு முறையும் மூன்று தருப்பைகளால் ஏழு முறை குழந்தையின் மயிர்களினூடே, ''ஓ! புனிதப் புல்லே, இவனைக் காப்பாயாக'' எனக் கூறியபடி நுழைத்து இழுப்பான். பின்னர் அவன் அப் புற்களின் முனையைக் கிள்ளித் தூர எறிவான். க்ரிக்ய சூத்திரப்படி குழந்தையின் தந்தையே குழந்தையின் மயிரினை நீக்குதல் வேண்டும். தற்போது இதனைச் செய்ய நாவிதனை அழைக்கின்றனர். அவன் ஒரு கற்றை அல்லது சடங்கு நடக்கும் பகுதிக்கு உரிய வழக்குப்படி சிறிதளவு மயிரை விட்டு விட்டுத் தலையை மொட்டையடிப்பான்.

உபநயனம் எனக் கூறப்படும் சடங்கு சிறுவனை அவன் குருவிடம் அழைத்துச் செல்லும் தீட்சை பெறும் சடங்கே. பழைய மரபுப்படி இச்சடங்கினை ஒருவன் வயது எட்டாண்டுகள்

ஆகுமுன் செய்து முடிக்க வேண்டும். தற்பொழுது நடைமுறையில் இது பதினேழு ஆண்டுகள் ஆகும்வரை கூடத் தள்ளி வைக்கப்படுகிறது. ஒன்பது வகைக் கூலங்களை முளைப் பாலிகை இடுவதோடும், சிறுவன் கையில் பிரதிசரம் என்னும் நூலைக் கட்டுவதோடும் இச்சடங்கு தொடங்கப்படுகிறது. இதன்பின் அபுயுதயம் எனப்படும் முன்னோரை வழி படுதல் நடைபெறும். சிறுவனைப் புனித ஓமததீயின் முன் அமரச் செய்து அவன் பககத்தில் அவன் தந்தை, அல்லது வேறு ஒருவர் சடங்குகளில் அவனுச்கு உதவும் குருவாக அமர்வர். பின்னர் அவர் அச்சிறுவன் தலை மீது தர்ப்பைப் புல்லினை அதன் நுனி கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கி இருக்கும்படியாக வைப்பார். பின்னர் அப்புல்லின் நுனிகள் கத்தரிக்கப்பட்டுப் பின்வரும் வேத மந்திரங்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்படும்:- "சோமன் சூரியனுக்கு முகம் மழித்த அந்தக் கத்தியால் நான் இந்தச் சிறுவனின் தலையை மழிக்க எனக்கு அருள்கூர்ந்து அனுமதி தருவாயாக. அவன் தலை மழிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அவ்வாறு செய்வதால் அவனுக்கு அது நீண்ட ஆயுளையும் நெடு நாள் வாழ்வையும் தரும். இவன் பெரியவனாக ஆகட்டும். இளமையிலேயே சாகாதவனாக இருக்கட்டும் இவன்தன் புகழ் எல்லோருடைய புகழையும் மங்கச் செய்யட்டும்." இதன்பின் அச்சிறுவன் ஒரு நாவிதனால் தலை மழிக்கப்படுவான். மேலும் பின்வரும் மந்திரங்கள் திரும்பத் திரும்பக் கூறப்படும்:- "நீ ஒரு கூரிய கத்தி கொண்டு இவன் தலையை மழிக்கின்றாய். இம் மழித்தலால் இவன் நீண்ட வாழ்நாள் பெறுவான். பிரகஸ்பதி, சூரியன், அக்கினி, ஆகியோர் வருணனின் தலையை மழித்து அம் மயிரினை ஆகாயம், பூமி, சொர்க்கம் ஆகியவற்றின் நடுப்பகுதியில் இட்டனர். நான், நீ மழிக்கும் இவனுடைய மயிரினை அத்தி மரத்தின் அடியில் அல்லது தருப்பை புல்லின் புதரில் இடுவேன்." அதன்பின் அச்சிறுவன் குளித்து முடித்துப் புனித நெருப்பருகே அமர்வான். அத் தீயில் நெய்யினை ஊற்றியபின் அவனிடம் ஒரு கட்டுப் பலா மரக்குச்சிகள் தரப்படும். அவன் பல வேத ரிக்குகளைக் கூறியபடி அவற்றை நெருப்பிலிடுவான். நெருப்பின் ஒரு பக்கம் ஓர் அம்மிக்கல் வைக்கப்படும். பின்

வரும் மந்திரங்கள் சொல்லப்படும்போது அச்சிறுவன் அதன் மீது ஏறிநிற்பான்:- "இக்கல்லின் மீது ஏறுவாயாக. நீ இக்கல் லைப் போல் உறுதியாக இருப்பாயாக. நீ உன் பகைவரைப் பணியச் செய்பவனாவாய்." அவனுக்குப் புதிய ஆடையினைத் தந்து அணியச் செய்வர். அப்போது பின்வரும் செய்யுள் கூறப் படும்:- "ஓ! ரேவதியும் மற்றவர்களும் நூற்றும், நெய்தும் உன் இருபுறமும் இத்துணியைத் தொங்கவிட்டுள்ளனர். அத்தெய் வங்கள் இச்சிறுவனுக்கு நீண்ட ஆயுளாகிய துணியைப் போர்த் தட்டும். வாழ்க்கையினைப் பெற்றுள்ள நீ இந்த ஆடையினை அணிவாயாக. சிறுவனுக்கு இந்த ஆடையை அணிவியுங்கள். இதை அணிவதால் அவன் நூறு ஆண்டுகள் வாழ்வு பெறட்டும். இவன் வாழ்நாள் பெருகட்டும். இத்தகைய ஆடைதான் சோம னால் பிரகஸ்பதிக்கு அணிய வழங்கப்பட்டது. நீ முதுமையை யும் காண்பாயாக. இந்த ஆடையினை அணிந்து கொள். எல்லா மக்களையும் காப்பவனாக இரு. நூறு ஆண்டுகள் வரை முழு வலிமையோடு வாழ்வாயாக. உனக்கு நிறையசெல்வம் சேரட்டும்." அச்சிறுவன் புதிய ஆடை புனைந்தபின் பின் வரு பவை திரும்பத் திரும்பச் சொல்லப்படும்:- "வாழ்த்துப் பெறு வதற்காகவே நீ இந்த ஆடையினை அணிந்துள்ளாய். நீ உன் நண்பர்களின் பாதுகாவலனாக ஆகிவிட்டாய். நூறாண்டுகள் வாழ்வாயாக. பண்பாளனாக வாழ்க்கை நலம் அனைத்தும் பெற்றுச் செல்வமும் பெறக் கடவாயாக." தர்ப்பைப் புல்லால் பின்னப்பட்ட ஒரு கயிற்றினை மும்முறை அவன் உடம்பில் சுற்றித் தொப்பூழின் மீது, அல்லது அதன் இடப்பக்க மாக முடிச்சிடுவர். அப்போது பின்வரும் செய்யுள் திரும் பத் திரும்பக் கூறப்படும்:- "கடவுளரின் நண்பனான வாழ்த்தி னைப் பெற்ற இக்கச்சை நம்மிடம் நம் பாவத்தைப் போக்க வந்துள்ளது. நம்மைத் தூய்மைப்படுத்தவும், காக்கவும், மூச்சை உள் இழுப்பதாலும் வெளிவிடுவதாலும் வலிமை சேர்க்கவும் வந்துள்ளது. எங்கள் செல்வத்தினையும் தியானத்தினையும் ஓ! கச்சையே நீ காப்பாயாக, எங்கள் பகைவரை அழித்து நான்கு பக்கமும் எங்களுக்குக் காவலாயிருப்பாயாக." தலை மழித்து முடித்தவுடன் சிறுவனுக்கு அணிவிக்கப்பட்ட பூணூலில் மான் தோலின் ஒரு சிறு துண்டு கட்டப்படும். அப்போது பின்வரும்

செய்யுள் சொல்லப்படும்:- "மித்ரன் பார்வை பட்டதால் பளபளக்கும் மான்தோலே! புகழுடையதும் புல்லியரைப் பொருந்தாததுமான உன்னை நான் இப்போது அணிந்துகொள் கின்றேன். அதிதி உனது ஆடையை அணியட்டும். நீ வேதங் களைக் கற்று அறிவு வாய்க்கப் பெற்றவனாக வளர்வாயாக. நீ கற்றதை மறவாது இருப்பாயாக. நீ புண்ணியம் செய்தவனும் புகழுடையவனுமாக ஆவாயாக." அச்சிறுவன குருவின் அருகே நெருப்பினை நெருங்கி அமர்ந்து பின்வருபவைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வான்:- "என் உயிருக்கு உறுதுணையான என் ஆச்சாரியரான குருவினை நான் நெருங்கியுள்ளேன். நானும் என் குருவும் வளம் பெறுவோமாக. நான் என் வேதப் பயிற்சி யினை முறையாக முடிப்பேனாக. அப்பயிற்சியின் பின் எனக்கு நல்ல மணவாழ்வு கிட்டட்டும்." குரு அச்சிறுவன் மீது மும்முறை நீர் தெளித்து, அவன் கையினைப் பற்றியபடி பின்வருமாறு கூறுவார்:- "அக்கினி, சோமன், சவிதா, பூசா, அர்யமன், அம்சுகு, பசுதேவதா, மித்ரா ஆகியோர் உன் கையினைப் பற்றியுள்ளனர். அவர்கள் உன்னைத் தங்களோடு சேர்த்துக் கொண்டனர். நீங்கள் நண்பர்களாகி விட்டீர்கள்." அதன்பின் அவர் அச்சிறுவனைப் பின்வருவனவற்றைத் திரும்பத் திரும்பக் கூறியபடி கடவுளர்களிடம் ஒப்படைப்பார்:- "நாங்கள் உன்னை அக்கினி, சோமன், சவிதா, சரசுவதி, மிருத்யு, யமன், காதன், அந்தகன். அப்ஹ்ய, ஓசாதி, பிரித்வி, வைசுவாரை ஆகியோ ரிடம் ஒப்படைக்கின்றோம். சூரியனுடைய அனுமதியுடன் நீ என்னை நெருங்க அனுமதிக்கின்றேன். ஓ! சிறுவனே, நீ ஒளிமிகுந்த வீரர்களாக விளங்கத்தக்க குழந்தைகளைப் பெறுவாயாக." சிறுவன் அதன்பின் பின்வருவனவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்வான்:- "நான் ஒரு மாணவனாகவே இங்கு வந்துள்ளேன். சூரியனிடமிருந்து அனுமதி பெற்றுள்ள நீங்கள் என்னை அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்," "நீ யார்? உன் பெயரென்ன?" அப்போது குரு இவ்வாறு வினவ அச்சிறு வன் தன் பெயரைக் கூறுவான். குரு அவனை, அவன் எத்தகைய பிரம்மச்சாரி என வினவுவார். சிறுவன் தான் ஆத்மனுக்குப்பிரம் மச்சாரியாக இருப்பதாகக் கூறிப் பின் வருபவைகளைத் திரும்பத் திரும்பக் கூறுவான்:- "ஓ! சூரியனே, எல்லா வழிகளுக்கும்

தலைவனே, உன் அருளால் எனக்கு நலம் பயக்கப் போகும் கல்வியினை நான் தொடங்க உள்ளேன்.'' குருவும் சிறுவனும் தர்ப்பைப் புல் ஆசனத்தில் அமர்ந்து பின்வருமாறு கூறுவர்:– ''ஓ! தர்ப்பா, உயர்ந்த வலிமை தருபவனே, குருவின் இருக்கையே, நான் உன்னைவிட்டு நீங்காதிருப்பேனாகுக.'' அதன்பின் சிறுவன் புனித நெருப்பில் கொஞ்சம் நெய்யினை விடுவான். அச் சிறுவனையும் குருவினையும் ஒரு துணியால் போர்த்த பின் குரு சிறுவனிடம் சாவித்திரியைச் சொல்லும்படி கேட்பார். பின்வரும் காயத்திரி அவனுடைய செவியில் திரும்பத் திரும்பக் கூறப்படும்:– ''தெய்வத் தன்மை வாய்ந்த உயிரூட்டுகின்றவனுடைய பெரும் புகழினைப் பற்றி நாம் தியானிப்போம், நம்முடைய தெளிவினை நாம் பெற அவன் ஒளி வழங்குவானாக.'' இதன்பின் சிறுவன் தன் மேலுதட்டினை வலக் கையால் தொட்டபடி பின்வருமாறு சொல்வான்:- ''ஓ! பிராணனே, நான் சாவித்திரியைக் கேட்டு ஒளி பெற்றனனானேன. என்னுள் புகுந்துள்ள செல்வமான காயத்திரி அல்லது சாவித்திரியாகிய இச்செல்வத்தைப் பாதுகாத்துக் காவல் புரிவாயாக.'' அவன் பின்னர் பலாச மரத் தண்டினைத் தாங்கிக் கொள்ள குரு பின் வருமாறு கூறுவார்:– ''வாழ்வோடு உயர்வாயாக. ஓ! சூரியனே, இவன் என் மகனாவான். நான் அவனை உன்னிடம் ஒப்படைக்கின்றேன்.'' அதன்பின் அச்சிறுவன் பின்வருமாறு கூறிச் சூரியனை வணங்குவான்:- ''கடவுளால் படைக்கப்பட்ட அந்த ஒளி மிகுந்த, கிழக்கில் எழும் கண்ணினை நாம் நூறு அத்துமன்கள் மகிழ்வோமாக; நாம் நூறு அத்துமன்கள் வளம்பெறச் செய்வோமாக. நாம் நூறு அத்துமன்கள் பேசுவோமாக; நாம் நசிதலின்றி நூறு அத்துமன்கள் வாழ்வோமாக; நாம் நெடிது சூரியனைக் காண்போமாக.'' இச்சடங்கின் முதல் நாள் நிகழ்ச்சிகள் அச்சிறுவன் தன் தாயிடமும் உறவினர்களான பிற பெண்களிடமும் அரிசியினை இரப்பதோடு முடிவுறும். அரிசி நிறைந்த கூடையினைப் பந்தலில் வைத்து அதனருகே அச்சிறுவன் நின்றபடி, ''எனக்குப் பிச்சையிடுங்கள்'' எனத் திரும்பத்திரும்பக் கேட்பான். பெண்கள் அவன் தாங்கியபடி இருக்கும் தட்டில் அரிசியினையிட்டு அவனுக்குச் சிறு தொகையும் வெற்றிலையும் அளிப்பர். அரிசியினை அவன் கூடையில் இடுவான். இரண்டு, மூன்றாம் நாள் சடங்குகளின்

போது சிறுவன் பலாசக் கட்டைகளை நெருப்பிலிட்டு நெய்யும் வார்ப்பான். நான்காம் நாள் அந்தப் புதிய ஆடை குருவுக்கு வழங்கப்படும்.

பூணூல் அணிவது சிறுவன் உபநயனச் சடங்கினைச் செய்து கொண்டான் என்பதற்கு அடையாளமாகும். மார்கோச்சிஸ் பாதிரியார் இது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:—* "பிராமணப் பெற்றோருக்குப் பிறந்தவன் பூணூல் அணியும் சடங்கைச் செய்து கொள்ளும் வரை பிராமணனாகக் கருதப்படுவதில்லை. (அதாவது அவனுக்குச் சமயச் சடங்குகளில் பங்கு பெற உரிமையில்லை) பூணூல் அணிந்த பிராமணச் சிறுவர்கள், பூணூல் அணியாத பிராமணனாகப் பிறந்த பிராமணச் சிறுவனை, அவன் பூணூல் அணியாத காரணத்தால் சூத்திரன் எனக்கூறி, கேலிக்குரியவனாக்கியதை நான் பார்த்திருக்கின்றேன்." பருத்தி நூலாலான மூன்று நூல்களை ஒன்றாக இணைத்து ஓரிடத்தில் பிரம்மகிரந்தி எனப்படும் தனிவகையினதான முடிச்சிடப்பட்டிருப்பதே பூணூலாகும். வைணவப் பிராமணர்கள் அணியுப் பூணூலில் இடப்படும் முடிச்சு விட்டுணு கிரந்தி எனவும், ஸ்மார்த்தர்கள் அணியும் பூணூலின் முடிச்சு ருத்ர கிரந்தி எனவும் கூறப்படும். பூணுலுக்கான நூலினைத் தயாரிக்கும்போது கடை வீதியில் விற்கும் பருத்தியினை வாங்கித் தயாரிக்கக் கூடாது. பருத்திச் செடியிலிருந்து நேரடியாகப் பருத்திச் சுளைகளை எடுத்துத் தயாரிக்க வேண்டும். ஊர்ப் புறங்களில் இங்கும் அங்குமாகப் பிராமணர்கள் பருத்திச் சுளைகளைச் செடியிலிருந்து எடுத்து நூல் நூற்க ஏற்றவகையில் பட்டைபோட்டுக் கொண்டிருப்பதையும், மாணவர்களுக்கு வேதங்களைச் சொல்லிக் கொடுத்தபடியே இப்பட்டைகளை வைத்து நூற்றுக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். நூற்கும் குச்சி மெல்லிய மூங்கிலால் செய்யப்பட்டு, அடியில் கனத்திற்காக அரை அங்குலக் கனமுடைய ஈயம் அல்லது மாக்கல் வட்டத் தட்டுப் பொருத்தப்பட்டிருக்கும். தாங்கள் நூற்கும் மெல்லிய நூலினைச் சேர்த்து வைத்துக் கொண்டு வேண்டும்போது பூணூலாக முறுக்கிக் கொள்வர். அவ்வாறு முறுக்கும்போது

* கிறித்துவ சமயமும் சாதியும், 1893, (Christianity and Caste, 1893.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து அதனைச் செய்ய வேண்டியிருக்கும். அப்போது அவர்கள் வேதத்திலிருந்து செய்யுட்களை ஓதியபடி இருப்பர். சுருதிகளிலும் சூத்திரங்களிலும் 'யக்ஞோபவித' எனப்படும் பூணூல், பலிச் சடங்குகள் செய்யும் போதே அணியப்பட வேண்டும் என விதிக்கப் பட்டுள்ளது. சமயப்பணி செய்வதற்குரிய ஆடை மரபினதாக இருந்த இது, இன்று அதன் உருவமாக அதற்குப் பதிலாக அணியப்பட்டு வருகின்றதெனலாம். பொதுவாக இடத் தோளில் உபவீதம் என அழைக்கப்படும் நிலையிலேயே பூணூலை அணிவர். இறந்தவர்கள் தொடர்பான சடங்குகளின் போது பிராசினவிதி என்று அழைக்கப்படும் நிலையில் இதனை வலத் தோளில் அணிவர். முனிவர்களையும் கணங்களையும் வணங்கும்போது இப்பூணூல் இரு தோள்களிலுமாகக் கழுத்தில் நீவிதி என அழைக்கப்படும் நிலையில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு சிறுவன் உபநயனத்தின்போது அணிந்து கொள்கின்ற புல்லாலான கச்சையும், மான் தோலும் ஐந்தாம் நாள் அகற்றப் படும். விதிகளை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் முதல் உபகர்ம நாள் வரை அவைகளைத் தொடர்ந்து அணிந்து வருவர். இவையும் பலாசத் தண்டும் பிரமச்சாரியால் தன் மாணவப் பருவம் முடியும் வரை உடன் வைத்திருக்க வேண்டியனவாம். எட்டு அல்லது ஒன்பது வயதாகும்போது உபநயனம் செய்து கொள்ளும் நம்பூத்ரி பிராமணச் சிறுவர்கள் எப்பொழுதும் தங்களோடு பலாசத் தண்டினைத் தூக்கிச் செல்வர். புல்லாலான கச்சையை அணிந்திருப்பதோடு கூடப் பூணூலுடன் அதன் நீள அளவிற்கு மெல்லிய பட்டையாகக் கத்தரிக்கப்பட்ட மான் தோலினையும் அணிந்திருப்பர். இடையைச் சுற்றிக் கால்களுக்கிடையே செல்லும் கௌபீனம் எனப்படும் குறுகிய பட்டைத் துணியை அணிந்து மார்பையும் வயிற்றையும் ஒரு துண்டால் போர்த்திக் கொண்டவர்களாக மணம் செய்து கொள்ளும் நாள் வரையோ வேதக் கல்வி கற்று முடியும் வரையோ காட்சி தருவர்.

இன்று பிராமணர்களிடையே காணப்படும் மணச் சடங்குகள் சிறப்பான கூறுகளில் வேதகாலச் சடங்குகளை ஒத்தன

வாகவே உள்ளன. எல்லாப் பிரிவினைச்சார்ந்த பிராமணர்களும் தங்கள் தங்கள் சாகைக்குரிய க்ருக்ய சூத்திரங்களையே பின்பற்றுகின்றனர். மணச் சடங்குகள் நிச்சயதார்த்தம் எனப்படும் வரைவோடு தொடங்குகின்றன. பிராமணர்கள் நடுவே மணமகளைப் பலகையில் அமர்த்தி வேதச் செய்யுட்களை அவர்கள் சொல்லி மணமகனை அவர்கள் வாழ்த்தியபின் மணமகளின் தந்தை தான் தன் மகளை அவனுக்கு மணம் செய்து தரமுடிவு செய்திருப்பதாகவும் விரதம் சடங்குகளை முடித்துக் கொண்டபின் அவன் மணம்செய்து கொள்ள வரலாம் எனவும் பலரும் அறியக் கூறுவார். இவ்விரதச் சடங்கிற்காக மணமகன் முகமழித்துக் கொண்டு ஆடைகள் புனைந்து வருவான். இதற்கிடையே இதற்காக அழைக்கப்பட்டிருக்கும் பிராமணர்கள் வந்து கூடுவர். மணமகன் மணமேடையில் அமர்ந்து சில வேதச் செய்யுட்களைக் கூறியபின் பின்வருமாறு சொல்வான்:– "இங்குக் கூடியுள்ள அனைவரின் உடன்பாட்டோடும் நான் விரதங்களான பிராஜாபத்யம், சௌம்யம், ஆக்னேயம், வைஸ்தேவம் ஆகியவற்றைத் தொடங்கிப் பின் அவற்றை முடிப்பேனாக," எல்லா விரதங்களும் மணத்திற்குப் பல காலம் முன்பே முடிப்பதற்குரியவை. நடைமுறையில் இது அப்படிச் செய்யப்படுவதில்லையாகையால் மணமகன் அவ்வாறு விட்ட குறையை ஈடுகட்ட இச்சடங்கை இப்போது பரிகாரமாகச் செய்கின்றனர். இச்சடங்கில் நெய்யினைப் பலியாக விடுவதோடு சில பிராமணர்களுக்குப் பணமும் கொடையாகத் தரப்படும். விரதச் சடங்குகள் முடிவடையும் வரை மணமகனுக்கு ஓர் ஆச்சாரியார் அல்லது குரு உதவி செய்வார். பெரும்பாலும் மணமகளின் தந்தை அல்லது வேறு உறவினர் ஒருவர் அப்பொறுப்பினை ஏற்பர். குருவாக இருப்பவர் மணமகன் மீது நீரினைத் தெளித்து அவனைக் 'காண்டரிஷி' தர்ப்பணத்தைச் செய்யும்படி கூறுவார். (இது முனிவர்களுக்குத் தண்ணீர், எள், அரிசி ஆகியவற்றைப் பலியாகக் கொடுப்பதாகும்). புனிதத் தீயின் வடகிழக்குத் திசையில் ஓர் இலை மீது சிறிய வெள்ளி அல்லது செம்புப் பாத்திரததை வைப்பர். இது வருணனைக் குறிப்பதாகும். அப்பாத்திரத்தைச் சுற்றிப் புதிய துணியொன்று அணிவிக்கப்படும். மேலே கூறப்பட்ட பல விரதங்களும் பின் வேகமாகச் செய்து முடிக்கப்படும். இது பல தேவதைகளுக்கும்

பிதுருகளுக்கும் நெருப்பில் நெய்யினைப் பலியாகத்தருவதாகும். அதன்பின் மூதாதையர்களுக்குச் செய்யப்படும் நாஸ்தி சிராந்தம் என்ற நீத்தார் நினைவுச் சடங்கு செய்யப்படும். அதன் பின் மணக்கோலம் கொண்டவனாக மணமகன் நெடுந் தூரமுள்ள ஓர் இடத்திற்கு வேடிக்கைப் பயணம் மேற்கொள்வான். இது பரதேசப் பிரவேசம் அல்லது காசி யாத்திரை என அழைக்கப்படும். இது சநாத கர்மச்சடங்கின் இன்றைய மாறுபட்ட தன்மையதாகும். அச்சடங்கு பிரம்மசாரியாக இருக்கும் மாணவன் தன் ஞான குருவின் வீட்டை விட்டுப் படிப்பு முடிந்து செல்லும்போது செய்யும் ஒரு தூய்மை பேணும் சடங்காகும். இதன் பின்னரே பிரம்மச்சாரி இல்லறத்தானாதற் குரியவன். காசியாத்திரையின் போது மணமகன் ஒரு குடை, ஒரு விசிறி, கொஞ்சம் அரிசி, தேங்காய், பாக்கு ஆகியன சேர்த்துக்கட்டப்பட்ட மூட்டை ஆகியவற்றோடு கிழக்கு நோக்கிச் செல்வான். அவனுடைய வருங்கால மாமனார் அவனைச் சந்தித்து மணம் நடைபெறுவதற்குரிய வீட்டிற்கு அழைத்து வருவார். மணமகன் அவ்வாறு அழைத்து வரப்பட்டவுடன் மணமகளும் மணக்கோலத்தில் அங்கு அழைத்து வரப் படுவாள். மணமக்களை அவர்களுடைய தாய் மாமன்மார் தோளில் சுமந்து வருவதோடு சிறிது நேரம் அவர்களைத் தோளில் சுமந்தபடி ஆடவும் செய்வர். மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் சந்திக்கும் போதெல்லாம் மாலை மாற்றிக் கொள்வர். பின் மணப்பந்தலில் கட்டப்பட்டுள்ள ஊஞ்சலில் மணமக்களை உட்கார வைத்துப் பாட்டுகள் பாடுவர். தண்ணீர், விளக்கு, பழம், வெற்றிலை ஆகியவற்றைத் தட்டுக் களில் தாங்கியபடி மணமான சில பெண்கள் அவர்களை மும் முறை சுற்றி வருவர். அதன்பின் மணமக்களை வீட்டினுள் அழைத்துச் சென்று மணமேடையில் அமர்த்துவர். அப்பொழுதே விவாகம் அல்லது மணம் தொடங்கப் பெறுகின்றது. ஒரு புரோகிதர் வேதத்தின் சில பகுதிகளைக் கூறி மணமக்களை வாழ்த்திய பின் பின்வருமாறு கூறுவார்:- "......... கோத் திரங்களைச் சேர்ந்த .... மகனும், மகளும் .... பேரனும் பேத்தியுமான மணம் செய்து கொள்ள இருக்கும் இம்மணமக்களை வாழ்த்து வீர்களாக." இச்சமயத்தில் மணம் புரிந்து கொள்ளும் மணமக்களின் கோத்திரங்களை

அவர்கள் மணம் புரிந்து கொள்வதற்கு அல்லாதவை என விலக்கப்பட்ட கோத்திரங்களைச் சேர்ந்தவர்களில்லை என்பதனைப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் தெளிவாக உச்சரிக்க வேண்டும். மணமக்கள் வேறு வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும், அடுத்து மணமகன் மணச்சடங்குகள் இடையூறின்றி நடந்து முடிய, அவன் வைணவனாகில் விசுவச் சேனன் பூசையைத் தொடங்க இருப்பதாகவும், சைவனாகில் கணபதி பூசையைத் தொடங்க இருப்பதாகவும் அறிவிப்பான். அங்குரார்ப்பணம் எனப்படும் முளைப் பாலிகைத் தட்டுகள் அமைக்கும் சடங்கு அடுத்து நடைபெறும். மண்ணாலான ஐந்து தட்டுக்களைக் கொண்டு வந்து அவற்றின் மீது புண்ணியாகம் நீரினைத் தெளித்துத்தூய்மை செய்தபின் அவற்றைச், சதுர வடிவில் அமைப்பார்கள். நான்கு தட்டுக்கள் கிழக்கு மேற்கு, வடக்கு, தெற்கு, ஆகிய பெருந்திசைகளில் அமைக்கப்பட்டு எஞ்சிய ஐந்தாவது தட்டு நடுவில் வைக்கப்பட்டுச் சதுரமாக அவை அமைக்கப்படும். கிழக்குத் திசையில் வைக்கப்பட்ட தட்டு இந்திரனையும், மேற்குத் திசையில் வைக்கப்பட்ட தட்டு வருணனையும், தெற்குப் பக்கம் உள்ளது யமனையும், வடக்குப் பக்கம வைக்கப்பட்டது சோமனையும் குறிக்கும். அவற்றின் மீது தண்ணீர் தெளித்தபடி பின்வரும் தெய்வங்களின் வேறு பெயர்களும் திரும்பத் திரும்பச் சொல்லப்படும்.

இந்திரன் - சதக்ருத, வஜ்ரணம், சசிபதி
யமன் - வைவஸ்வத, பித்ருபதி, தர்மராஜா
வருணன் - பிரச்சேதஸ், அபாம்பதி, ஸ்வரூபினம்
சோமன் - இந்தும், நிசாகரம், ஓஸ்காதிசம்.

நீரில் ஊறவைக்கப்பட்ட ஒன்பது வகைத் தானியங்களை முளைப்பாலிகைத் தட்டிலிடுவர். மொச்சை வகையில் இரண்டு, உளுந்து வகையில் இரண்டு, குதிரை வாலி, கடலை, துவரை, கேழ்வரகு, காராமணி என்பனவே இந்த ஒன்பது வகைத் தானியங்கள். அடுத்துப் பிரதிசரம் எனப்படும் மணிக்கட்டில் கங்கணம் கட்டும் சடங்கு நடைபெறும். வருணனைக் குறிப்பதாக வைக்கப்பட்டுள்ள நீர்ச் சொம்பின்மேல் இரு நூல் கயிறுகள் போடப்படும். வேதச் செய்யுட்களை ஒப்புவித்தபின் மணமகன்

அவற்றில் ஒன்றை எடுத்து அதனை மஞ்சள் கலவையில் தோய்த்துத் தன் இடக் கைப்பெருவிரல் மேல் வைத்து அதன்மீது வலக் கைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் சிறிது மஞ்சள் கலவையைத் தடவி அந்த நூலை மணமகளின் இட மணிக்கட்டில் கட்டுவான். புரோகிதர் மற்றொரு நூலினை மணமகனின் வல மணிக்கட்டில் கட்டுவார். மணமகன் கூடியுள்ளவர்களைப் பார்த்து, ''நான் இவளை மணமகளாக ஏற்றுக்கொள்ளப் போகிறேன்'' எனக் கூறுவான். அடுத்துஅவன் பின்வரும் வேதச் செய்யுளை ஒப்புவிப்பான்:- ''என்னுடைய வருங்கால மாமனாரின் இல்லத்திற்குத் தக்க முன்னேற்பாட்டுடன் சென்று அவருடைய குடும்பத்தினருடன் கலந்து பழகுவேனாகுக. இந்த மணம் இந்திரனுக்குத் திருப்தியைத் தரும் என்பது உறுதி ஏனென்றால் அவன் மணத்திற்குப் பின் உணவினைப் பலியாகப் பெறுவான். உன்னுடைய பாதை முட்களற்றதாக வழிச் செல்ல ஏற்றதானதாயிருக்கட்டும். சூரியனும் பகனும் நம் மண உறவினைப் பிணைப்புள்ளதாக்கட்டும்.''

புரோகிதர் மீண்டும் மணம் நடைபெறப் போவதை அறிவித்து மணமக்களின் மூன்று தலைமுறை முன்னோர்களையும் அவர்களுடைய கோத்திரங்களையும் மறுபடியும் கூறுவார். கூடியுள்ளவர்கள் மணமக்களை வாழ்த்துவர். மணமகளின் தந்தை, தான் தன் மகளை மணமகனுக்கு மணமுடித்துத் தர உடன்படுவதாகக் கூற, மணமகன் தான் அவளை ஏற்றுக் கொள்வதாகக் கூறுவான். மணமகளின் தந்தை மணமகன் அடிகளைப் பாலாலும், நீராலும் கழுவுவார். மணமகன் மணமகள் தந்தையின் அடிகளைக் கழுவுவான். மணமகள் தன் தந்தையின் மடியில் அமர, அவளுடைய தாய் அவள் பக்கத்தே நிற்பாள். அவளுடைய தந்தைமணமகனின் மூன்று தலைமுறை முன்னோர்களின் பெயரைக் கூறி, அவ்வழி வந்தவனுக்குத் தன் மகளைத் தரப்போவதாகக் கூறுவார். மணமகளின் கையினை மணமகன்கை மேல் வைத்து அவரும் அவர் மனைவியும் இணைத்த அவர்கள் கைகளின் மேல் நீரூற்றுவர். பின்வரும் சுலோகம் அப்போது திரும்பத் திரும்பச் சொல்லப்படும்:- ''நான் சமயஞ் சார்ந்த தகுதி பெற வேண்டி அ ணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கன்னியை உனக்குத் தருகிறேன்.'' மணமகன் மணமகள்

கையைப் பற்றிக்கொள்ள இருவருமாகப் புனித நெருப்பின் முன் அமர்வர். மணச் சடங்கின் இப்பகுதி 'தாரை' வார்த்தல் எனப் படும். துளு பிராமணர்கள் இதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரு கின்றனர். தென் கன்னடத்தைச் சேர்ந்த பிராமணரல்லாதா ரிடையே இதுவே மணச்சடங்கில் மணத்தை உறுதி செய்யும் சடங்காக அமைகின்றது. மணமகன் நெய்யினைப் புனித நெருப் பில் பலியாக ஊற்றியபின் தர்ப்பைப் புல்லின் சில குச்சிகளை நெருப்பிலிட்டுப் பின்வரும் சூத்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வான்:- "ஓ! தர்ப்பா, நீ அரசுக் கொப்பான வலிமை யையும் குருவின் இரு கையையும் தர வல்லவன். நான் என்றும் உன்னைப் பிரியாதிருப் பேனாகுக." அடுத்து மணமகளின் தந்தை "இதோ அர்க்கியத் தண்ணீர்" எனக் கூறி ஒரு பாத்திரத்தில் நீரினைத் தருவார், மணமகன் அதனைப் பின்வருமாறு கூறிப் பெற்றுக் கொள்வான்:- "இந்தத் தண்ணீர் என் பகைவரை அழிக்கட்டும். ஒளியும், ஆற் றலும் வலிமையும் வாழ்வும் புகழும் பெருமையும் பேரொளியும் அதிகாரமும் என்னுள் வாழ்வதாக." மறுபடியும் மணமகளின் தந்தை மணமகனின் அடிகளைக் கழுவுவார், மணமகன் அப் போது அவருக்குப் பின்வருமாறு கூறி வணக்கம் செய்வான்:- "ஓ! தண்ணீரே என்னைப் புகழோடும், பேரொளியோடும், பாலோடும் இணைத்திடுவாயாக. எல்லா உயிர்களும் என் மாட்டு அன்பு செய்வனவாகுக. என்னைக் கால்நடைகளுக்குத் தலைவனாக்கு. புகழ், வீரம், ஆற்றல் ஆகியன என்னுள்ளே நிலைக்கட்டும்." மணமகளின் தந்தை ஒரு பாத்திரத்திலிருந்து சிறிது தண்ணீரை மணமகன் கைமேல் ஊற்றுவார். அப்போது மணமகன்" என்றும் அழியாத தண்ணீரே நான் உன்னைக் கடலை நோக்கி அனுப்புகின்றேன். உனது பிறப்பிடத்திற்கே மீண்டும் திரும்புவாயாக. நான் என் புதல்வரைப் பெறுவதில் எத்தகைய இழப்பும் அடையாதவனாவேனாகுக. என்னுடைய உயிர்ச் சக்தி வீணே சிந்தாதிருக்கட்டும்." எனக் கூறுவான். தேன், வாழைப்பழம், நெய் ஆகியவற்றின் கலவையை மண மகளின் தந்தை மணமகனுக்கு "அயம் மதுபர்க்கோ" எனக் கூறியபடி தருவார். அதனைப் பெற்றுக் கொள்ளும் மணமகன், "தேன் கலந்தது என்பது என்ன? உணவை மகிழ்ந்துண்பதே,

தேனினைப் போன்றது. அத்தகைய தேனினும் சிறந்த தேனினைப் பெற்று நான், உணவைச் சுவைத்து உண்பவனா குக.'' எனக் கூறுவான். மும்முறை அக்கலவையைப் பெற்று உண்ணும் அவன் பின்வருமாறு கூறுவான்:- ''நான் உன்னை ஒளி, அதிர்ஷ்டம், புகழ், அதிகாரம், உணவை மகிழ்ந்துண்ணல் ஆகியவற்றுக்காக உண்கின்றேன்.'' பின் மணமகளின் தந்தை ''கௌர் (பசு) எனக் கூறியபடி ஒரு தேங்காயை மணமகனிடம் தருவார். மணமகன் பின்வருமாறு கூறியபடி அதனைப் பெற்றுக் கொள்வான்:- ''ஓ! பசுவே என் பாவங்களையும், என் மாமனா ரின் பாவங்களையும் அழிப்பாயாக.'' க்ருக்ய சூத்திரப்படி ஒரு பசுவைச் சமைப்பதற்காகவோ, பாதுகாப்பதற்காகவோ மணமகனுக்குத் தரப்படல் வேண்டும். அடுத்து ஒரு வாழைப் பழம் மணமகனுக்குத் தரப்படும். அவன் அதில் ஒரு பகுதியை உண்டபின் மீதியை மணமகளிடம் தருவான். மண மகள் நெற்குவியலின் மீதோ நெல்மூட்டையின் மீதோ அமர்ந் திருக்க மணமகன் பின்வருமாறு கூறுவான். ''ஓ! வருணா இவளுக்குச் செல்வத்தை அருள்வாயாக. இவளுக்கும் இவள் உடன்பிறந்தவர்களுக்கு மிடையே எத்தகைய மனக் கசப்பும் நேராதிருப்பதாக. ஓ! பிரகஸ்பதி,இவள் தன் கணவனை இழக்கா திருக்க அருள்வாயாக. ஓ! இந்திரா, இவள் இனப் பெருக்க முடையவளாக அருள்வாயாக. ஓ! சவீதா இவள் எல்லா வகை யிலும் மகிழ்வோடிருக்க அருள்வாயாக. ஓ! பெண்ணே, என் னிடத்துக் குளிர்ந்த பார்வையும் நட்பும் உடைய வளாயிரு. உன்னுடைய பார்வை உன் கணவனைக் கொல்லக் கூடியதாய் இல்லாமல் இருக்கட்டும். என் மாட்டும் என் உடன்பிறந்தார் மாட்டும் இரக்கம் உடையவளாயிரு.* நீ பிறங்கொளியுடனும் நல்ல புகழுடனும் விளங்குவாயாக. நெடிது வாழ்ந்து நிலைத் திருக்கும் குழந்தைகளைப் பெறுவாயாக.'' மணமக்கள் பின்னர் இருக்கையில் அமர மணமகன் தர்ப்பைப் புல்லின் ஒரு சோகை யினை எடுத்து மணமகளின் புருவங்களிடையே கொண்டு சென்றபின் அதனை அவளுக்குப் பின்புறம் எறிந்தபடி பின்

---

* வேதச் செய்யுளில் என் உடன்பிறந்தார் என்பதற்குப் பதிலாகப் பயன் படுத்தப்பட்டுள்ள சொல்லின் நேர் பொருள் உன் கணவர்கள் என்பதாகும்.

வருமாறு கூறுவான். "இந்தத் தர்ப்பையினால் நீ உன் மாட்டுக் கொண்டிருக்கக்கூடிய உன்னைக் கைம்பெண் ஆக்கக் கூடிய கெட்டதின் செல்வாக்கையெல்லாம் அகற்றிவிட்டேன்." (உடம்பில் உள்ள சில அடையாளங்களும் சுழிகளும் நலத்தைத் தருவனவாகவும், சில ஒரு பெண் வாழ்க்கைப் படும் குடும்பத்திற்குத் துன்பத்தைக் கொண்டு தருவதாகவும் நம்பப்படுகிறது. ஒரு பணக்கார இந்து ஒரு குதிரை வாங்க நினைத்தால் அதன் உடம்பில் சில நல்ல சுழிகள் இருக்கின்றனவா எனவும் பார்த்து, அதனைக் கொண்டே அந்தக் குதிரையின் குணத்தையும் இயல்பையும் கணிப்பான்.) மணமகன் அடுத்துப் பின்வருவனவற்றைத்திரும்பத்திரும்பச்சொல்வான்:-"இப்பொழுது அவர்கள் மனம் மகிழ வேண்டுமேயன்றி அழக்கூடாது. நம் இருவருக்கும் மகிழ்ச்சியைத் தரவே அவர்கள் நம்மிடையே இந்த உறவை ஏற்படுத்தியுள்ளனர். இந்த மகிழ்ச்சியின் காரணமாக நாம் இருவரும் இன்பத்தை அனுபவிக்கப் போகின்றோம். அதனால் அவர்கள் உள்ளம் மகிழ்ந்தவர்களாக இருக்கவேண்டும். இது எல்லோரும் கொண்டாடுவதற்குரிய ஒரு சமயமாகும்." நான்கு பிராமணர்கள் அடுத்துத் தண்ணீர் கொண்டு வர மணமகன் அதனைப் பின்வருமாறு கூறியபடி பெற்றுக் கொள்வான்:— "இந்தத் தண்ணீரின் கெட்ட இயல்புகள் அனைத்தும் நீங்கட்டும். இது பெருகட்டும். பிராமணர்கள் குளிக்கத் தண்ணீர் கொண்டு வருவார்களாக. அது இவளுக்கு நீண்ட வாழ்நாளையும் பிள்ளைகளையும் கொண்டு சேர்ப்பதாகட்டும்." ஒரு மூட்டை நெல்லோ ஒரு கூடை நிறைய நெல்லோ மணப் பந்தலுக்குக் கொண்டு வரப்படும். மணமகள் நெல்லின்மீது அமர்ந்தபின் தர்ப்பையாலான ஒரு மோதிர வளையம் அவள் தலைமீது வைக்கப்படும். மணமகன் பின் வருவனவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்வான்:- "சூரியனால் அருள் புரியப்பட்ட என் மாமியும் மைத்துனருமான நீங்கள் புனித நெருப்பைச் சுற்றி அமர்ந்து தர்ப்பையாலான இந்த மோதிரத்தைப் பாருங்கள்." பின் ஒரு நுகத்தடி கொண்டு வரப்பட்டு அதன் ஒரு முனை மணமகளின் தலையில் உள்ள தர்ப்பை மோதிரத்தின் மேலே இருக்கும்படியாக வைக்கப்படும். மணமகன் அப்போது, "ஓ! இந்திரா, வாழ்வில் செய்ததைப் போல நீரினை மூன்று துளை

களின் வழியே செலுத்தி நீ அப்கலாவை மணக்குமுன் அவளைத தூய்மைபடுத்தியதைப் போல இவளையும் புனிதப்படுத்தித் தூய்மையுடையவளாக்கு.'' எனக்கூறுவான். அப்கலா இந்திரனை மணந்து கொள்ள விரும்பிய அழகற்ற ஒருத்தியாவாள். தன் விருப்பம் கைகூட அவள் நெடுநாள் தவமிருந்து இந்திரனை நேரில் கண்டு தன் விருப்பத்தை நிறைவேற்றும்படி கேட்டாள். தன் தேரின் சக்கரங்களில் உள்ள துளைகளினூடே நீரினைச் செலுத்தி அவள் மீது அதனைத் தெளித்து அவளை அழகியாக மாற்றி இந்திரன் அவளை மணந்து கொண்டான். மண மகளின் தலையைத் தொட்டுக் கொண்டிருக்கும் நுகத்திலுள்ள துளை வழியே ஒரு பொன் நாணயத்தையோ, தாலியையோ, 'இந்தப் பொன் உனக்கு அருள் செய்வதாக அமையட்டும், நுகமும் நுகத்தினுள்ள துளையும் உனக்கு மகிழ்ச்சியைக் கொண்டு சேர்க்கட்டும். உன் உடலை என் உடலோடு பொருத்திக் கொள்ள நாம் அருள் பெற்றவர்களாவோமாக.'' எனக் கூறியபடியே மணமகன் இடுவான். அதன்பின் மணமகன் நுகத்தின்மீது பொன் நாணயத்தின் மீதும் நீரினைத் தெளித்த படி ''நீ சூரியனால் இந்தத் தூய்மையாக்கும் நீர் தெளிக்கப் படுவதால் தூய்மை பெற்றவளாவாயாக. இடிக்கும் மின்னலுக் கும் மூல காரணமான இந்த நீர் உனக்கு மகிழ்ச்சியைக் கொண்டு சேர்க்கட்டும். ஓ! பெண்ணே, இந்த நீர் உனக்கு உடல் நலத்தையும் நீண்ட வாழ்நாளையும் தரட்டும்'' எனக் கூறுவான். மணமகன் அதிக விலை தந்து வாங்கிய புதிய கூறைச் சேலையினை மணமகளுக்குத் தந்தபின் மணமகன், ''ஓ! இந்திரா, என் வாழ்த்துக்களைக் கேட்பாயாக. அவற்றை ஏற்று என் விருப்பங்களை நிறைவேற்று'' எனக் கூறு வான். மணமகள் மணமகனின் உடன் பிறந்தவள் உதவியுடன் அந்தப் புதிய சேலையை உடுத்தித் தன் தந்தையின் மடியில் அமர்வாள். மணமகன் தாலியினை எடுத்து மணமகள் கழுத்தில் கட்டி முடிச்சிட்டபடி, ''ஓ! பெண்ணே, சமயத்துறையில் மதிப்புப் பெற நான் உனக்குத் தாலி அணிவிக்கின்றேன்.'' எனக்கூறுவான். இது வேதத்திலுள்ள செய்யுளன்று. க்ருக்ய சூத்திரத்தில் இத் தாலி கட்டும் சடங்கு சேர்க்கப்பட வில்லை. கூடியுள்ள பிராமணர்கள் அனைவரும் மணமக்கள் தலைமீது அரிசியைத் தூவி வாழ்த்துவர்

தர்ப்பையாலான ஓர் இடைக்கச்சை மணமகளின் இடையைச் சுற்றிச் செலுத்தப்பட்டபின், "இந்தப் பெண் உடல்நலம், செல்வம் வலிமை, மக்கட்பேறு ஆகியவற்றினை விரும்பி அக்கினியைப் பார்க்கின்றாள். நான் அவள் நலத்தினை விரும்பி அவளைக் காட்டுகிறேன்" எனக் கூறுவான். மணமகன் பின் மணமகளின் கரம் பற்றியவனாகப் புனித நெருப்பினை நெருங்கியபின், "சூரியன் அக்கினியிடம் உன்னைச் செலுத்தட்டும். நீ அசுவினி பாலர்களிடம் அவ்வாறு நெருங்க அனுமதி பெறுவாய். என்னோடு என் இல்லம் அடைவாயாக. என் மனைவியாகவும் என் இல்லக் கிழத்தியாகவும் இருப்பாயாக. பலிகளைத்தருவதில் எனக்கு வழிகாட்டி உதவி புரிவாயாக." எனக் கூறுவான். புனித நெருப்பில் மணமகன் நெய் வார்த்தபின், "சோமன் உன் கணவனாக இருந்தான். காந்தர்வன் உன்னை அதன்பின் அறிவான். அக்கினி உன் மூன்றாவது கணவன். மனிதனுக்கு மகனாகப் பிறந்த நான் உன் நான்காவது கணவனாக இருக்கின்றேன். சோமன் உன்னைக் காந்தர்வனுக்குத் தர, காந்தர்வன் உன்னை அக்கினிக்குத் தர, அவன் உன்னைக் குலச் செழிப்போடும், செல்வத்தோடும் எனக்குத் தந்தான்." எனக் கூறுவான். மணமகன் மணமகள் வல மணிக்கட்டினைப் பற்றியவனாக அவள் விரல்களைச் சேர்த்து அழுத்தித் தன் கையினை மும்முறை அவளுடைய இணைந்த விரல்களின் மீது செலுத்துவான். இதுவே பாணிக்கிரகணம் என்று கூறப்படுகிறது. நம்பூத்திரி பிராமணர்களுக்கு மணச் சடங்குகளில் இது இன்றியமையாத சடங்காக அமைவதோடு இதுவே மணத்தை உறுதி செய்வதாகும். சில ஆண்டுகளுக்கு முன் கொச்சி மாவட்டத்தில், சாவக்குடிக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில், மணத்தை நடத்தும் புரோகிதர் தெரியாத்தனமாய் மணமகளின் கரத்தைப் பிடித்துக்காட்டினார். இதனால் மணமகன் அப்பெண்ணைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள மறுத்துவிடவே அந்தப் புரோகிதரே அவளை மணந்து கொள்ள வேண்டியதாகிவிட்டது. மணச்சடங்கின் அடுத்த நிகழ்ச்சி, சப்தபதி எனப்படும் ஏழடி எடுத்து வைத்தலாகும். இதுவே திருமணத்தை உறுதிப்படுத்தும் மிக முக்கியமான சடங்காகக் கருதப்படுகிறது. மணமகன் மணமகளின் இடப் பாதத்தை

ஏழுமுறை பின்வருமாறு கூறியபடி எடுத்து வைப்பான்:- "உயிராற்றல் தர ஓர் அடி வைப்பாய்; விட்டுணு உன் பின் வரட்டும். மகிழ்ச்சி ரசத்திற்காக இரண்டடி வைப்பாய், விட்டுணு உன் பின்வரட்டும். சொற்கள் காப்பாற்றப்பட மூன்றடி வைப்பாய், விட்டுணு உன் பின் வரட்டும். சுகத்தை நாடி நான்கடி வைப்பாய், விட்டுணு உன் பின் வரட்டும். கால் நடைகளுக்காக ஐந்தடி வைப்பாய், விட்டுணு உன் பின் வரட்டும். செல்வம் செழிக்க வேண்டி ஆறடி வைப்பாய், விட்டுணு உன் பின் வரட்டும். ஏழு பகுதியதான ஹோத்ரியாக* ஏழடி வைப்பாய், விட்டுணு உன் பின் வரட்டும. ஏழடி நடந்து நாம் வாழ்க்கைத் துணைவர்களானோம். நான் உன்னோடு நட்பினை உறுவேனாக. நான் உன் நட்பிலிருந்து நீங்காதவனாக இருப்பேனாக. நீ எப்போதும் என்னிடம் நட்பிலிருந்து நீங்காதவளாக நடப்பாயாக. நாம் இணைந்தவர்களாவோம். நல்ல மனத்தோடும் ஒருவர் பால் ஒருவர் அன்போடும் நாம ஒன்றாக எண்ணித் துணிவோம். நாம் ஒன்றாகவே வலிமையும் வளமும் பெற்றவர்களாக வளர்வோம். இப்போது நாம் இருவரும் மனம், செயல், விருப்பம் ஆகியவற்றில் ஒருவரானோம். நீ தான் ரிக், நான் சாமம்; நான் வானம், நீ பூமி; நான் விந்து, நீ அதைப் பெறுபவள்; நான் மனம்,. நாம் ஒன்றாகச் செல்வமும் குழந்தைகளும் பெற என்னை நன்றியோடு பின்பற்றி வருவாயாக. இனிய சொற்களைக் கூறுபவளே வருவாயாக." மணமகன் அதன்பின், பின்வருவனவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்லியபடி ஓமம் வளர்ப்பான்:- "நாங்கள் சோமனுக்கும் காந்தர்வனுக்கும், அக்கினிக்கும் பலி தருகின்றோம். இந்தச் சிறுமி இப்பொழுதுதான் தன் கன்னித் தன்மை கழிந்திருக்கின்றாள். அவளை அவள் தந்தையின் வீட்டை விட்டு வருமாறு செய்வாயாக. அவள் என்றும் தன் கணவன் வீட்டில் நிலைத்திருக்க அருள்வாயாக. உன் அருளால் அவள் நல்லதொரு மகனைப் பெறட்டும். அவளைப் பத்து பிள்ளைகள் பெற்றுக் கொள்ளச் செய்வாயாக. நான் அவளுடைய பதினொராவது பிள்ளையாக இருப்பேன். ஓ! அக்கினி, இவளுக்குப் பிள்ளைகளை அருள்

---

* பலிச் சடங்குகளின் போது தலைமையேற்பவரே ஹோத்ரி.

வாய். அவர்களை நீண்ட நாள் வாழச் செய்வாய். ஓ! வருணா, நான் உன்னிடமும் அதையே வேண்டுகிறேன். இந்தப் பெண் மலடி என்பதனால் ஏற்படுகின்ற மன வேதனையிலிருந்தும் காப் பாற்றப்படட்டும். கர்ஹபத்யாக்னியால் இவளுக்கு அருள்புரிவா யாக. அவளிடத்தே எண்ணிறந்த பிள்ளைகள் இருக்கட்டும். அவள் எண்ணிறந்த வாழும் குழந்தைகளின் தாயாக இருக்கட்டும். ஓ! பெண்ணே, உன் வீட்டில் இரவில் சாவின் துயரத்தால் ஏற்பட்ட அழுகுரல் என்றும் ஒலிக்காதிருப்பதாகுக. நீ உன் கணவனோடும் குழந்தைகளோடும் நீண்ட காலம் மகிழ்ச்சியாக வாழ்வாயாக. ஆகாயம் உனது முதுகைப் பாதுகாக்கட்டும். வாயு உன் தொடைகளுக்கு வலிமை சேர்க்கட்டும். அசுவினிகள் உன் மார்பகங்களை வலிமை உடையனவாக்கட்டும். சாவித்திரி பாலருந்தும் உன் குழந்தைகளுக்குக்காவலாயிருக்கட்டும்.அவர்கள் ஆடை அணியும் வரை அவர்களுக்குப் பிரகஸ்பதி காவலா யிருக்கட்டும். அதன்பின் அவர்கள் விஸ்வேதேவர்களால் பாது காக்கப்படட்டும். ஓ! வருணா, என்னை வலிமையுள்ளவனாக வும் உடல்நலமுள்ளவனாகவும் ஆக்கு. எங்கள் வாழ்நாளி லிருந்து ஆண்டுகளைக் கவர்ந்துகொண்டுவிடாதே. பலிதரும் அனைவரும் இதனையே உன்னிடம் வேண்டிக்கேட்பர். ஓ!எல்லா வற்றிலும் வீற்றிருக்கும் அக்கினியே, வருணனை அமைதியடை யச் செய். பலிகளை வாங்கிக் கொள்ளத் தீக்கொழுந்துகளாக எழுந்து எரியும் நீ எங்களுடன் நட்பாய் இரு. எங்கள் அருகே யிருந்து எங்களைக் காப்பாற்று. எங்கள் பலிகளை ஏற்று அதில் திருப்தியுறுவாயாக. எங்களை வளமுடையவர்களாக்கு. நாங்கள் எப்பொழுதும் உன்னையே நினைத்தவர்களாக உள்ளோம். எங்கள் பலிகளைப் பல்வேறு தேவர்களுக்கும் கொண்டு சேர்த்து எங்களுக்கு மருந்தினை வழங்கு.'' அதன்பின் மணமகள் ஒரு கல்லின் மீது ஏறி நிற்பாள். மணமகன் அப்போது பின்வரு மாறு கூறுவான்.- ஓ! பெண்ணே, இக்கல்லின் மீது ஏறு. உனக்குத் தீங்கு இழைக்க நினைப்பவர்களை அழிப்பாயாக உன் பகைவர்களை நீ வெற்றிக் கொள்வாயாக.'' வறுத்த நெல் லினைக் கொஞ்சம் புனித நெருப்பிலிட்டு மணமகன் பின் வரு பவைகளைத் திரும்பத் திரும்பக் கூறுவான்:-''ஓ! அக்கினி, இந்தப் பெண் நீண்ட வாழ்வு பெற வேண்டுமென்பதற்காக நான்

வறுத்த தானிய மணிகளை உனக்குத் தருகிறேன். ஓ! அக்கினி, என் மனைவியை அவள் குழந்தைகளோடு எனக்குத் தருவாயாக. நீ முன் காலத்தில் சூர்யாயியினை அவள் செல்வத்தோடும் பெற்றதைப் போலவே நானும் பெற வேண்டும். ஓ! அக்கினி, என் மனைவிக்குப் பிறங்கொளியும், நீண்ட வாழ்நாளும் அருள்வாயாக. ஓ! அக்கினி நாங்கள் எங்கள் பகைவர்களை வெற்றி கொள்ள உதவுவாயாக.'' மறுபடியும் மணமகள் கல்லின்மீது ஏறி நிற்க மணமகன், ''ஓ! பெண்ணே, இந்தக் கல்லின் மேல் ஏறி நில், நீயும் அதைப்போல் உறுதியாயிரு. உனக்குத் தீங்கு செய்பவர்களை நீ அழிப்பாயாக. உன்பகைவர்களை நீ வெற்றி கொள்.'' எனக் கூறுவான், இதை அடுத்து வறுத்த தானிய மணிகளைப் பின்வரும் வேண்டுகோளோடு அளிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்;- ''கன்னியர்கள் சூரியனிடமும் அக்கினியிடமும் தங்களுக்குக் கணவர்களைத் தரும்படி வேண்டினர். அவர்கள் விருப்பம் உடனடியாக நிறைவேற்றப்பட்டது. அத்தகைய அக்கினிஇப்பொழுது வறுத்த நெல்லினைப் பலியாகத் தந்து வழிபடப்படுகிறான். அவன் இந்த மணமகளை அவளுடைய தந்தை வீட்டைவிட்டு வருமாறு செய்யட்டும்.'' மூன்றாம் முறையாக மணமகள் கல்லின் மீது ஏறி நிற்க வறுத்த நெல்லினைப் பின்வரும் சூத்திரத்தைச் சொல்லி நெருப்பில் இடுவான்;- ''ஓ! அக்கினி, நீ தான் உயிரை வழங்குபவன், பலியைப் பெறுபவன். நெய்யினை இப்போது உனக்குப் பலியாகப் படைக்கின்றேன். துணைவர்களான எங்களை ஒன்று போன்ற சிந்தனை உடையவர்களாயிருக்க அருள்.'' பின் மணப் பெண்ணின் இடையைச் சுற்றியிருக்கும் தர்ப்பைக் கச்சை பின்வரும் செய்யுள் கூறி நீக்கப் பெறும்:– ''நான் உன்னை வருணனுடைய பிடியிலிருந்து விடுவிக்கிறேன். சூரியன் உன்னைக் கட்டிய நூலினை அவிழ்த்துக் கொண்டுள்ளேன்.'' கூடியிருப்பவர்கள் இதன்பின் கலைந்து செல்வர். மாலையில் பிராமணர்கள் மறுபடியும் வந்து கூட மணமகனும் மணமகளும் புனித நெருப்பின்முன் அமர்வர். மணமகன் வேத ரிக்குகள் பலவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்வான். அவர்கள் ஒரு வண்டியில் ஏறித் தங்கள் வீட்டுக்குச் செல்வதாகக் கருதப்பட்டு இச்சமயம் கூறப்படும் செய்யுட்கள் தேர், குதிரைகள், படகு ஆகியவற்றின்

தொடர்புடையனவாக இருக்கும். புனித நெருப்பில் நெய் வார்த்தபின், தன் உடன் பிறந்தவர்கள் யாரையும் இழக்காத ஓர் ஆண் குழந்தையை மணமகளின் மடியில் அமர்த்தி மண மகன் பின்வருமாறு கூறுவான்:- "பசுக்கள், குதிரைகள், ஆள்கள், செல்வம் ஆகியன இந்த வீட்டில் பெருகட்டும். தேவதை களுக்குப் பலம் தரும் சோமக்கொடி விண்மீன்களின் இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல இக்குழந்தை உன் மடியில் இருக்கட்டும்." அந்தக் குழந்தைக்கு ஒரு வாழைப் பழத்தைத் தந்து பின்வருமாறு சொல்வான்:- "ஓ! பழங்களே, நீங்கள் விதைகளை உண்டுபண்ணுகின்றீர்கள். உங்கள் அருளால் என் மனைவியும் கருக்களைத் தரிப்பாளாக." அதன் பின் மணமக்களுக்குத் துருவ நட்சத்திரத்தையும் அருந்ததி யையும் காட்டி அவைகளைப் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி வழிபடுவர்:- "ஏழு முனிவர்கள் தங்கள் மனைவிய ரான கார்த்திகைப் பெண்கள், அனைவரிலும் முற்பட்டவளாக விளங்கும்படியாக அருந்ததியைக் கற்பில் மேம்பட்டவளாகச் செய்துள்ளனர். அருந்ததியுடன் மற்ற ஆறு கார்த்திகைப் பெண்களும் சேர்ந்து சிறப்புற்றவர்களாகின்றனர். இவள் அந்த அருந்ததியைக் கண்டு வணங்கியதால் எட்டாவதாகச் சிறப்பிடம் பெறும்படியாக அந்த அருந்ததி இவள் மீது ஒளி சிந்தட்டும். துருவா! நிலைத்திருத்தல், நிலப்பாடுடைய தோற்றம் ஆகிய பண்புகளோடு நிலைத்திருத்தலின் உருவமாக என்றும் மற்ற எல்லா நட்சத்திரங்களையும் தூணாக இருந்து தாங்கி நிற்கும் நீ என்னை என் பகைவர்களிடமிருந்து காத்து என்றும் நிலைத் திருக்க அருள்வாயாக!"

மணமக்கள் அதன்பின் "ஸ்தாலிபாகச்" சடங்கினைச் செய்யப் புறப்படுவார்கள். அப்போது மணமகள் கொஞ்சம் சோறு சமைத்து மணமகனிடம் தர, அவன் அதனைப் பலி யாகப் புனிதத் தீயிலிடுவான். நடைமுறையில் இப்போது சோறு சமைக்கப்படுவதில்லை. சமைக்கப்பட்ட சோற்றில் சிறிதளவு எடுத்து வரப்பட்டுத் தீயிலிடப்படுகிறது. புரோகிதர் ஓர் அரசங் குச்சியினைத் தர்ப்பைகளால் அலங்கரித்து மணமக னிடம் தருவார். அதை அவன் கூரை மீது அல்லது வீட்டினுள் முளைப்பாலிகைத் தட்டுக்களின் அருகில் வைப்பான் (க்ருக்ய சூத்திரப்படி மணமக்கள் அந்த அரசங்குச்சி தங்களுக்கு

நடுவே இருக்க ஒரே பாயில் அமர்ந்திருக்க வேண்டும். இப்பொழுது பிராமணர்களுள், பல பிரிவினரில் இவ்வழக்கம் காணப்படவில்லை. மைசூரைச் சேர்ந்த கருநாடகர்களும், மண்டைய அய்யங்கார்களும், சிவாலி பிராமணர்களும் இதனை ஒத்த ஓர் சடங்கினை நடத்துகின்றனர். மண்டையர்களுள் திருமணச் சடங்குகளின் நான்காம் நாள் இரவு மணமக்கள் சிறிது நேரம் ஒரே பாயில் அமர்ந்திருக்கும் பழக்கம் உள்ளது. அவர்களிடையே அப்போது ஒரு குச்சி இருக்கும். 'பஜ மதமே' எனப்படும் சிவாலி பிராமணர்களின் பாய்க் கல்யாணம் இப் பழக்கத்தினைக் குறிப்பதாகலாம்.) திருமணச் சடங்குகளின் இரண்டாம், மூன்றாம் நாள்களில், காலையும் மாலையும் ஓமம் வளர்க்கப்பட்டு நலங்குச் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. இச் சடங்கின்போது மணமக்கள் துணி அல்லது பாய் விரிக்கப்பட்ட இரண்டு பலகைகளின் மேல் அமர்த்தப்படுவர். மணப்பந்தலில் பெண்கள் பெருங்கூட்டமாகத் திரண்டிருப்பர். மணமக்களின் முன் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள், சாந்து ஆகியன தட்டுக்களில் வைக்கப்பட்டிருக்கும். பெண்கள் இதற்காகவே தாங்கள் சிறுவயது முதல் கற்று வைத்துள்ள பாடல்களைப் பாடுவர். மணமகளும் மணமகன் சிறப்புக்களைப் புகழ்ந்து பாடுவாள். சுண்ணாம்பு சேர்த்துச் சிவப்பாக்கப்பட்டுள்ள மஞ்சள் கலவையில் கொஞ்சம் எடுத்துப் பாதங்களின் மீது கோடுகள் இழுப்பாள். (இதுவே நலங்கிடல்) இச்சடங்கு ஆரத்தி (சுண்ணாம்பு கலந்த மஞ்சள் நீரினை) சுற்றலோடும் கூடியுள்ள பெண்களுக்கு வெற்றிலை பாக்கு வழங்குவதோடும் முடிவுறும். நான்காம் நாள் மணமக்கள் கூடியுள்ள பிராமணர்களுக் கிடையே வந்து அமர்வர். வேதச் செய்யுட்கள் ஓதிய பின் மணமக்களை அவர்கள் வாழ்த்துவர். சுண்ணாம்பு சேர்க்கப் பட்டுச் சிவப்பாக்கப்பட்ட மஞ்சள் கலவையோடு நெய்யும் சேர்த்து மணமக்கள் தோளில் பூசுவதோடு, அவர்கள் நெற்றி யிலும் அதனால் திலகமிடுவர். இது பச்சைக் கல்யாணம் என வழங்கப்படுகின்றது. ஸ்மார்த்தர்கள் வைணவர்களான தமிழ்ப் பிராமணர்களிடையே இது பெருவழக்கமாக உள்ளது. தமிழ்ப் பிராமணர்கள் நான்காம் நாளன்று தாய் மாமனுக்குச் சிறப் பான இடம் தருகின்றனர். மணமக்களைத் தாய்மாமன்கள்

தங்கள் தோளில் தூக்கியவர்களாக, முழங்கும் இன்னிசை கீதத்திற்கேற்ப ஆடுவர். அப்பொழுது ஒருவரை ஒருவர் நெருங்கும்போது மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். அன்று இரவு தாய்மாமன் தன் செலவில் மணமக்கள் ஊர்வலம் செல்ல ஏற்பாடுகள் செய்வார். இதனால் இது அம்மான் கோலம் என வழங்கப்படுகின்றது. மணமகனை ஒரு சிறுவன் போல அலங்கரிப்பர். வேறொரு சிறுமி மணப்பெண் போல அலங்கரிக்கப்பட்டிருப்பாள். தெருக்களில் ஊர்வலமாக வந்தபின் வேடமிட்ட மணமகன் உண்மையான மணமகனோடு கோபமான குரலில் பேசுவான். ஒரு போலியான நாடகம் நடக்கும். உண்மையான மணமகன் போலி மணமகனின் குதிரைக்காரன் அல்லது குமஸ்தா போலக் கருதி அழைக்கப்படுவான். சில சமயம் அவனைத் திருடனாகப் பாவித்துப் போலி மணமகன் அவனுக்குத் தண்டனையும் தருவான். ஸ்ரீவைணவர்களிடையே பச்சை பூசும் சடங்கிற்குப்பின் மணமக்கள் மணமேடையில் தங்களுக்கிடையே ஒரு தேங்காயை உருட்டும் பழக்கம் உள்ளது. கூடியுள்ள பிராமணர்கள் இலட்சுமி தேவியின் அவதாரமாகிய ஆண்டாள் எனப் பெயர் கொண்ட வைணவப் பெண்மணி பாடியுள்ள பாடல்களை அப்போது ஓதுவர். இந்தப் பாடல்களில் அவள் தன் தோழியருக்குத் தான் வரித்துக் கொண்ட கடவுட் கணவனோடு கனவில் நடைபெற்றதாகக் கண்ட மண நிகழ்ச்சிகளையே விவரிக்கின்றாள். கொஞ்சம் தொகையோடு ஆண்டாளுக்கு என ஒதுக்கி வைக்கப்பட்ட வெற்றிலை பாக்குக் கூடியுள்ளவர்களுக்கு வழங்கப்படும். ஸ்ரீ சக்தி எனப் படும் இலட்சுமியைப்புகழ்ந்து பாடும் ஆண்டாளின் இப்பாடல்களை ஓதுவது நலத்தினைத் தரும் என நம்பப்படுவதால் இந் நிகழ்ச்சியின்போது பெருமளவில் கூட்டம் கூடியிருக்கக் காணலாம். குடும்பப் புரோகிதர் இந்த மண உறவு காரணமாக மணமக்களுக்கு உறவினர்களாகியுள்ளவர்களின் பெயர்களையும் கோத்திரங்களையும் உரக்கக் கூறுவர். ஒவ்வொருவரும் தங்கள் பெயர் கூறப்படும்போது மணமகனுக்கோ மணமகளுக்கோ ஒரு துணி அல்லது தொகையினை அன்பளிப்பாகத்தருவர். (தெலுங்கு, கர்நாடகப் பிராமணர்கள் நான்காம் ஐந்தாம் நாள்களில் பச்சைக் கல்யாணத்திற்குப் பதிலாக நாகவளி

எனப்படும் சடங்கினைச் செய்வர். சிவனும் பார்வதியுமாகக் கருதப்படும் இரு பாத்திரங்களை வைத்துச் சுற்றிலும் சதுர அமைப்பில் முப்பத்திரண்டு விளக்குகளை ஏற்றி வைப்பர். வெளுக்கப்படாத பருத்தி நூலினை மஞ்சள் நீரில் நனைத்து அந்தச் சதுரத்தைச் சுற்றிக் கொண்டு சென்று பந்தலில் கட்டி வைப்பர். மணமக்கள் முதலில் இந்தச் சதுரத்திற்கு வெளியே அமர்ந்து பூசை செய்து நூலினை அறுத்து அச்சதுரத்தினுள் சென்று அமர்வர். மணமகன் கறுப்புக் கண்ணாடிப் பாசி மணிகளால் ஆன தாலியினை மணமகள் கழுத்தில் முப்பத்து மூன்று கோடி தேவர்கள் என்று பாவிக்கப்பட்டுச் சதுரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சிறு பாத்திரங்களின் முன்னிலையில் அணிவிப்பான். அப்பாத்திரங்களின் அருகே அரிசியாலும் உப்பாலும் அமைக்கப்பட்ட இரண்டு யானை உருவங்கள் இருக்கும். அந்தப் பாத்திரங்களை மணமக்கள் ஒன்றாகச் சுற்றி வந்தபின் பிரிந்து போய் மணமகன் உப்பால் அமைக்கப்பட்ட யானையின் அருகிலும் மணமகள் அரிசியாலமைக்கப்பட்ட யானையின் அருகிலுமாக நிற்பர். அதன்பின் அவர்கள் அந்த இரண்டு உருவங்களினுடைய பண மதிப்பைப் பற்றிப் பேசுவர். அவர்களிடையே வாய்ச் சண்டை நிகழும். அவ்வாறு சண்டையிட்டபடியே மறுபடியும் பாத்திரங்களைச் சுற்றி வந்து மணமகன் அரிசியாலான யானை அருகிலும், மணமகள் உப்பாலான யானை அருகிலும் ஆக மாறி நிற்பர். அந்த உருவங்களைப் பற்றிய விலைத் தகராறு மறுபடியும் தொடங்கும். மணமக்கள் மீண்டுமொரு முறை பாத்திரங்களைச் சுற்றி வருவர். இச் சடங்கினை அடுத்து மணமக்கள் குடும்பம் நடத்துவதான ஒரு நையாண்டி நாடகம் நடைபெறும். மணமகளிடம் திருப்பதியிலிருந்து வாங்கி வந்த மரத்தாலான இரு மரப்பாச்சிகளைத் தந்து மணமகன் தாலி கட்டும்போது உடுத்தியிருந்த மஞ்சள் துணியால் ஒரு தொட்டில் கட்டும்படி கூறுவர். மணமக்கள் அன்றாட குடும்ப நிகழ்ச்சிகள் பற்றி உரையாடுவர். மணமகன், தான் தன் கடமைகளைச் செய்ய வெளியே செல்ல வேண்டுமெனவும், மணமகள் வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவளிடம் கூறுவான். அவள் குழந்தைகள் இருப்பதால் தன்னால் அது இயலாதெனவும், குழந்தை

களைக் கவனித்துக் கொள்வது அவன் பொறுப்பு எனவும் கூறு வாள். அவள் பொம்மைக் குழந்தைகளை அப்போது கூடியுள்ள வர்களுக்குக் காட்ட, இந்நிகழ்ச்சியின் வேடிக்கையில் அனைவரும் சிரித்து மகிழ்வர். மணமகளும், அவள் தாயும் இரண்டு காலி நாற்காலிகளின் அருகே நிற்க இத்திருமணத்தால் அவர்களுக்கு உறவினர்களான தம்பதியர்கள் வந்து அந்த நாற்காலிகளில் அமர்ந்து மணமகளுக்கு வெற்றிலைபாக்கும் மஞ்சளும் அன்பளிப் பாக வழங்குவர். மணநிகழ்ச்சிகளின் ஐந்தாம் நாள் பொழுது புலருமுன் மணமக்களை மணமேடையில் அமரச் செய்து கந்தர் வக் குச்சியினை பின்வரும் வார்த்தைகளைச் சொல்லியபடி அகற்றுவர்:- ''ஓ! விசுவாவசு கந்தர்வ, இந்தப் பெண்ணை என் மனைவியாக்கும்படி நான் உன்னை வேண்டுகிறேன். என்னோடு அவளைச் சேர்ப்பாயாக. அவளை விட்டு விட்டு வேறொருத் தியை நாடிச் செல்வாயாக,'' அதன்பின் மணமகன் ஓமம் வளர்ப் பான். மணமகள் தலைமீது ஒரு காசு வைக்கப்பட்டு அதன் மீது சிறிதளவு நெய் வைக்கப்படும். மணமகனை நோக்கியபடி அவள் பின்வருமாறு கூறுவாள்:- ''நெஞ்சில் நிறைந்த அன்போடு என் இதயத்தைப் புரிந்து கொண்ட உங்களை நான் நேசிக் கிறேன். தபசினால் நீங்கள் ஒளி படைத்தவராகத் திகழ்கின்றீர் கள். என்னைக் குழந்தையாலும், இந்த இல்லத்தைச் செல்வத் தாலும் நிரபபுங்கள். உங்களுக்கு ஒரு மகன் வேண்டும் என்ற ஆசையுள்ளது. உங்களை நீங்களே அவ்வாறு பிறப்பித்துக் கொள்ளுங்கள்.'' மணமகளை நோக்கியபடி மணமகன் அதன் பின் இவ்வாறு கூறுவான்:- ''நீ என் குழந்தையினைப் பெற்றெ டுக்க ஆவலோடும் அகவொளியோடும் இருப்பதை நான் காண் கிறேன், நீ இப்பொழுது இளமைப் பருவம் உடையவளாக உள் ளாய். ஆகவே நான் உன் மேல் இருக்கும்போது நீ என்னை அனுபவிப்பாயாக. அப்படியாக நீ உன்னையே நீ விரும்பும் மக னாகப் பெற்றுக் கொள்.'' மணமகளின் மார்பகங்களை அவன் தன் மோதிர விரலால் தொட்டுப் பின் தன் இதயத்தைத் தொட் டுக் கொண்டபடி பின்வருமாறு திரும்பத் திரும்பச் சொல்வான். ''விஸ்வே தேவர்கள் நம் இதயங்களை இணைக்கட்டும்; தண்ணீர் நம் இதயங்களை இணைக்கட்டும்; வாயுவும் பிரமனும் நம் இதயங்களை இணைக்கட்டும்; சரசுவதி நாம் ஒன்றாகப் புணரும்

சமயத்தில் பேசத் தக்க சொற்களை நமக்குக் கற்பிக்கட்டும்.'' மேலும் பல வேத ரிக்குகள் பின்வரும்படி ஒப்புவிக்கப்படும்:- ''ஓ பிராசாபதியே! நான் இச்செயலைச் செய்யும்போது எனக்கு அதற்கான ஆற்றலைத் தர நீ என் உடம்பின் உட்புகுவாயாக; விட்டுணுவோடும் பிற தெய்வங்களாகவும் பல வடிவங்களில் உள்ள தவஷ்திரியே நீயும் அவ்வாறே செய்வாயாக. உன் நண்பர்களான விசுவே தேவர்களுடன் இந்திரனே நீயும் அவ்வாறே செய்வாயாக. உங்கள் அருளால் நான் பல பிள்ளைகளைப் பெறுவேனாக. விட்டுணு உன் கருப்பையினைத் தயார்ப்படுத்தட்டும். தவஷ்திரி கருவில் குழந்தைக்கு உருவினைத் தரட்டும். பிரசாபதி விந்துவை வெளிப்படுத்தட்டும்; தாத்ரி நீ சூலினைத் தரிக்கச் செய்யட்டும். சினிவாளியே, சூலினைத் தருவாய்; சரசுவதியே, சூலினைத் தருவாய். தாமரைகளால் பொதியப்பட்டிருக்கும் இரண்டு அசுவினிகளும் உனக்குச் சூலினைத் தரட்டும். இரண்டு அசுவினிகளும் தங்கள் பொன்னாலான கலக்கும் குச்சிகளால் உண்டாக்கும் கருவினை நாம் உன் கருப்பையில் வந்து தங்குமாறு கேட்போம். நீ பத்து மாதங்கள் சென்றபின் அதனைப் பெற்றெடுப்பாயாக. உலகம் அக்கினியால் கருக்கொண்டிருப்பது போலவும், வானம் இந்திரனால் கருக்கொண்டிருப்பது போலவும், வாயு மண் உலகின் எல்லாப் பகுதிகளின கருப்பைகளிலும் நிறைந்திருப்பது போலவும் நான் உன் கருப்பையில் ஒரு கருவினை நிறைப்பேன். உன் கருப்பையைத் திறந்து விந்துவை ஏற்றுக் கொள்வாயாக. ஒரு கரு ஓர் ஆண் குழந்தையாக உன் கருப்பையில் வளர்ந்து பிறப்பிக்கப்படட்டும். தாய் அவனைப் பத்து மாதம் சுமக்கிறாள். அவன் குலத்தினில், அவன் சிறந்த பெருவீரனாகப் பிறக்கட்டும். ஓர் அம்பு அம்புறாத் துணியில் நுழைவதைப் போல ஓர் ஆண் கரு உன் கருப்பையை அடையட்டும். ஓர் ஆண்மகன் இங்கே உனக்குப் பத்து மாதங்களுக்குப் பின் பிள்ளையாகப் பிறக்கட்டும். பிரசாபதிக்குப் புனிதமான செயலை நான் உன்னிடம் செய்கின்றேன். ஒரு கருவானது உன் கருப்பையில் சென்று தங்கட்டும். எந்த உடற்குறையுமின்றி, எல்லா உறுப்புகளோடும், குருடின்றி, நொண்டியாக இல்லாமல், பிசாசுகளால் உறிஞ்சப்படாத, முழுமையானதாக ஒரு குழந்தை பிறக்கட்டும்.'' இதனை ஒப்பு

வித்தபின் கூடியுள்ள பிராமணர்கள், குழந்தைகள் உள்ளிட்ட உறவினர்கள் ஆகிய அனைவருக்கும் பழங்கள் வழங்கப்பட்டபின் திருமணச் சடங்கு முடிவுக்குக் கொண்டுவரப் பெறும். மணமகன் முதன்முறையாக இன்றே வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்வான். மணமக்களின் கையில் உள்ள கங்கணம் அவிழ்க்கப் படும். மணநாள் தொடங்கி நாளும் வழிபாடு செய்யப்பட்ட முளைப்பாலிகை ஊர்வலமாகக் குளத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு அதில் விடப்படும்.

மணச் சடங்குகளில் ஆண் பிள்ளை பிறக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கும் வேண்டுதல் அடிக்கடி இடம்பெற்றி ருக்கக் காணலாம். வடமொழி நூல்களில், புத்திரன் எனப்படும் மகன் ஒருவனைப் 'புத்'தென்ற நரகத்திலிருந்து மீட்பவன் எனக் கூறப்பட்டுள்ளது. இறந்து போன ஒரு தந்தையினுடைய ஆன் மாவின் நலம், அவன் மகன் செய்யும் சிரார்த்தம் எனப்படும் நினைவுச் சடங்கினாலேயே பேணப்படுகின்றது என்று பொது வாக நம்பப்படுகிறது. தான், தன் மனைவி, தன் பிள்ளை என மூவராக இருக்கும்போதுதான் ஒரு மனிதன் முழுமையுடையவ னாகின்றான் என மனு விதித்துள்ளார். "ஒரு தந்தை உயி ரோடுள்ள தன் மகனின் முகத்தைப் பார்க்கும்போது, அதனால் தன் கடன் நீங்கப் பெற்றவனாகி இறவாப் புகழ் பெறுகின்றான். ஒரு தந்தை தன் மகனால் பெறும் இன்பம் மற்ற எல்லா இன்பங் களையும் விட மேலானதாகும். ஒருவனுக்கு அவன் மனைவி நண்பனாவாள்; மகன் துணையாக இருப்பான்; மகன் உயர்ந்த மேலுலகத்தில் அவனுக்கு ஒளியாகத் திகழ்வான்." என ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. துறவு வேட்கை மிகுந்த பக்தி நெறிப்பட்ட ஒருவன் தான் மேற்கொள்ள வேண்டிய இல்லறக் கடமையிலிருந்து வழுவியதால் ஏற்பட்ட நிகழ்ச்சியினை விளக்கும் பின்வரும் கதை மோனியெர் வில்லியம் அவர்களால் கூறப் பட்டுள்ளது:- "கிரகஸ்தம் எனப்படும் இல்லற நெறியாகிய இரண்டாவது மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை நெறியைப் புறக்கணித்து அவன் நேரே மூன்றாவது மேற்கொள்வதற்குரிய துறவு நெறியை மேற்கொண்டு, பெண்களை விட்டு விலகிக் காட்டுக்குச் சென்றுவிட்டான். காட்டில் தியானத்தில் மூழ்கியவ னாகத் திரிந்து கொண்டிருந்த அவன் ஒருநாள் வியக்கத்தக்க

தான அரியதொரு காட்சியினைக் கண்டு திடுக்கிட்டான். அவன் தன் முன் ஆழ்ந்த முடிவே காணப்படாத குழியொன்று இருக்கக் கண்டான். அதன் விளிம்பில் புல்லாலான கயிற்றில் துயரத்தில் ஆழ்ந்தவர்களாகச் சிலர் குழியினுள் தொங்கிக் கொண்டிருந்தனர். அப்புல்லாலான கயிற்றை எலியொன்று அங்கும் இங்குமாகக் கொறித்துக் கொண்டிருந்தது. அவர்களுடைய வரலாற்றைக் கேட்ட அவன் அவர்கள் தன் மூதாதையர்களென அறிந்து அதிர்ச்சி உற்றான். அவர்கள் அவ்வாறு தொங்குவதற்கும், அடுத்து முடிவற்றதான அந்த குழியில் விழப் போவதற்கும் அவனே காரணம் எனக் கூறினர். அவன் உலக வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்று மனிதருக்குரிய கடமைகளை மேற்கொண்டு, தகுதி வாய்ந்த ஒருத்தியை மணந்து, ஒரு மகனைப் பெற்றால், அப்போது அவனே அந்த இக்கட்டிலிருந்து தங்களை விடுவிப்பவனாவான் என்று அவர்கள் அவனிடம் கூறினர்.'' இக்கதை மகாபாரதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஒருவன் மூன்றாவது மனைவியை மணக்கும்போது பிராமணர்களிடையே விசித்திரமான ஒரு போலி மணம் நடத்தப் படுகிறது. மூன்றாவது மணம் மங்கலமற்றதாகவும், அவ்வாறு மூன்றாவது மனைவியாக அமைபவள் விதவையாவாள் எனவும் நம்பப்படுகிறது. இந்தத் தீமையினைத் தவிர்க்க ஒருவன் எருக்கஞ் (*Calotropis gigantea*) செடியினை மணக்கிறான். அடுத்து நடைபெறும் உண்மை மணம் இதனால் நான்காவது மணமாக அமைந்துவிடுகிறது. மரபு முறைப்படி இம்மணம் நடைபெற வேண்டுமாயின் இது ஒரு ஞாயிறு அல்லது திங்கள் கிழமையில் ஹஸ்த நட்சத்திரத்தில் நடத்தப் பெற வேண்டும். மணமகனும், பிராமணப் புரோகிதரும் மூன்றாவது ஆளாக ஒரு பிராமணனும் சாதாரணமாக எங்கும் களையாக வளர்ந்து நிற்கும் எருக்கம் செடியிருக்கும் இடத்திற்குச் செல்வர். அச்செடிக்கு ஒரு துணியினையும், ஒருநூலினையும் அணிவித்து அலங்காரம் செய்த பின் அதனை மணமகன் சூரியனாகப் பாவித்துப் பின் வருமாறு அதனை நோக்கித் தன விருப்பத்தைக் கூறுவான்:- ''ஓ! மூன்று உலகங்களுக்கும் தலைவனே, ஓ! ஏழு குதிரைகளையுடையோனே, ஓ! சூரியனே, மூன்றாவது மணத்தால் வர இருக்கும் தீமையிலிருந்து காப்பாயாக.'' அதன்பின் அந்த எருக்கஞ்

செடியைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவான்:- "நீ தான் இந்த உலகில் தோன்றியுள்ள செடிகளில் எல்லாம் முற்படத் தோன்றியவன். மூன்றாவது முறையாக மணம் செய்து கொள்ளும் என்னைப் போன்றவர்களைக் காப்பதற்காகவே பிரமன் உன்னைப் படைத்துள்ளான். ஆகவே அருள்கூர்ந்து என் மனைவியாக ஆவாயாக." அவனோடு மூன்றாவது ஆளாகச் சென்றபிராமணன் இப்பொழுது அவனுடைய மாமனார் என்ற நிலையிலிருந்து அவனிடம் பின்வருமாறு கூறுவான்:-"ஆதித்தியனுடைய பேத்திக்குப் பேத்தியும், சாவினுடைய பேத்தியும், என் மகளுமான அர்க்க கன்னியை உனக்கு மணமுடித்துத் தருகிறேன்." ஓமம், தாலி கட்டுதல் முதலான வழக்கமான மண நிகழ்ச்சிக்குரிய எல்லாச் சடங்குகளையும் செய்து முடித்தபின் சில வேத வாக்கியங்களைக் கூறிய பிறகு அந்த எருக்கஞ் செடியை வெட்டி வீழ்த்துவர். 1903-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்த சென்னை கிறித்துவக் கல்லூரி இதழில் திரு ஏ. சீனிவாசன் இச்செடியைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:- "இச்செடி சூரியனுக்கு உரியதான 'அர்க்க' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. சூரியனுடைய தேர் வடக்கு நோக்கித் திரும்பும் போது ஒவ்வொரு இந்துவும் குளிக்குமுன் இதன் இலையொன்றை அந்நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் தலையில் வைத்துக் கொள்வர். இதனோடு மற்றவர்கள் அடையும் கேடுகளையெல்லாம் தன் தலையில் தாங்கிக் கொள்ளும் பலி ஆடாகவும் இச்செடி விளங்குகின்றது. ரோதநோயல் துன்புறுகின்றவர்கள் தலையில் வைக்கப்படும் எண்ணெயையும் நெய்யையும் பின் இதன்மீது மாற்றி வைத்தால் இச்செடி தான் கருகியழிந்து நோயுற்றவரைப், பாபர் தன்மகனைப் பிழைக்கவைத்தது போல்பிழைக்க வைக்கும் எனக் கூறப்படுகிறது. கவி காளிதாசர் இனியவளான சகுந்தலையை வருணிக்கும்போது காட்டில்வாழும் பறட்டைத் தலையர் ஒருவருக்குப்பிறந்த அவள் எருக்கஞ்செடியின்மீது வீசப்பட்டமல்லிகை மலர் மாலையினை ஒத்திருந்தாள் என வருணித்துள்ளார். ஒருவரைச் சபிக்கும்போது, 'உன் வீட்டில் எருக்கு நன்கு தழைக்கட்டும்' எனச் சபித்தல் உலக வழக்காகும். 'உன்னை எருக்கிலையால் நையப் புடைக்கவேண்டும்' எனக் கோபம் கொண்ட தாயர் தங்கள் குழந்தைகளை வைவது வழக்கம். அரை நூற்

றாண்டுக்கு முன்பு கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டவர்களைக் கழுதை மேல், அதன் பின்புறம் பார்க்கும்படியாக அமர்த்தித் தெருக்களின் வழியே செல்லவிடுவர். இவ்வாறு பொதுவில் அவமானப்படுத்தப்படுபவர்கள் தலையில் அவர்களை மேலும் அவமானத்திற்கு உள்ளாக்க வெறுக்கத் தக்க எருக்கிலை மாலையை அணிவிப்பர். (கூடா ஒழுக்கத்தில் ஈடுபடும் உப்பிலியப் பெண்கள் எருக்கம் பூமாலை அணிவிக்கப்பட்டு ஒரு கூடையில் மண்ணினைச் சுமந்தபடி ஊரைச் சுற்றி வரும்படி கூறப்படுகின்றனர்.) 'தேனீ எருக்கம் பூவில் தேன் குடிப்பதுண்டா?' என்ற தெலுங்குப் பழமொழி ஒன்றும் உள்ளது. இந்தச் செடிக்கு இது போல அவப் பெயர் ஏற்பட்டிருப்பதற்கான காரணம் என்னவென்பது தெரியவில்லை. வீணாகப் போவதையெல்லாம் இது விரும்புகின்றது என்பதால் இதன் தலையில் வேண்டாத வீண் பழிகளையெல்லாம் ஏற்றுகின்றனர். எனினும் இதற்கும் மேலாக மக்கள் இச்செடியினை வெறுக்க அவர்கள் மனத்தில் வேறொரு ஆழமான வெறுப்பு எண்ணமும் இருக்க வேண்டும். எருக்கம் பூவின் மொக்கினைச் சிதைப்பவன் பெருமை பெறுகிறான் என்ற கருத்தில் அமைந்த ஒரு தமிழ்ப் பழமொழியும் உள்ளது. யஜுர் வேதத்தினைப் பின்பற்றும் சில தெலுங்கு, கன்னடப் பிராமணர்கள் எருக்கஞ் செடியினைப் புனிதமானதாகக் கருதுகின்றனர். அவர்கள் மணச் சடங்குகளில் ஒன்றான நாந்தி சிரார்த்தம் எனப்படும் மூதாதையர் வழிபாட்டின் போது எருக்கம் இலைகளைப் பயன் படுத்துகின்றனர். இரண்டு மூன்று எருக்கம் இலைகளை வெற்றிலை பாக்கோடு சேர்த்து ஒரு துணியில் முடிந்து அதனை ஒரு குச்சியில் கட்டி அக்குச்சியினையே மூதாதையராகப் பாவித்து வழிபாடு நடத்துகின்றனர். சிலர் எருக்க இலைகளுக்குப் பதிலாகப் புங்க மரத்தின் இலைகளையும் பயன்படுத்துவர். ஆவணி மாதத்து அமாவாசைக்கு அடுத்த ஏழாம் நாள் வரும் இரத சப்தமி நாளன்று சமய நெறிப்பட்ட இந்து தன் தலையிலும் தோள்களிலும் எருக்கம் இலைகளை வைத்தபடி சூரியனை வழிபட்டவனாகக் குளிக்க வேண்டும் என்பது விதி. சாம வேதத்தைப் பின்பற்றும் பிராமணர்கள் ஆண்டுதோறும் நடத்தும் உபாகர்மம் சடங்கின்போது முனிவர்களையும் பித்ருக்க

ளையும் வழிபட எருக்கம் இலைகளையும் பூக்களையும் பயன் படுத்துகின்றனர். உபாகர்ம நாளன்று சாம வேதிகள் தங்கள் அறுபத்திரண்டு முனிவர்களையும் கடைசி மூன்று தலைமுறை முன்னோர்களையும் குறிக்கும் அறுபத்தைந்து களிமண் உருண் டைகளையும் எருக்கம் இலைமீதே வைப்பர். அவ்வழி பாட்டுக்கு உரியவர்களுக்கு எருக்கம் பூவையும், காரைச் செடியின் பழம், நாவல் பழம் ஆகியவற்றையும் படைப்பர். இதனோடு கூட முனிவர்களுக்கும் பித்துருகளுக்கும்தர்ப்பணமாக நீர், எள், அரிசி ஆகியனவற்றைத் தருவர். தர்ப்பணம் தருபவர் தன் கையினை நீரினுள் விடுமுன் தன் கைகளில் இரண்டு எருக்கம் இலைகள், எள், அரிசி ஆகியவற்றை வைத்துக் கொள்வார். எருக்கம் செடி யின் பால் தற்கொலை செய்து கொள்பவர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. தங்கலான் பறையர்களுள் ஓர் இளை ஞன் மணம் செய்து கொள்ளும் முன் இறந்து விடுவானாயின், கன்னி கழித்தல் என்னும் சடங்கினை அவனுக்காகச் செய்கின்ற னர். பிணத்தினைச் சிதையில் வைக்குமுன் அதற்கு எருக்கம் பூ மாலை அணிவித்துச் சாக்கடையிலிருந்து கொண்டு வந்த சோற்றுருண்டைகளைத் தலை, முழங்கால் முதலிய உடம்பின் பகுதிகளில் வைப்பர். சில இடங்களில் இச்சடங்கு தொடர்பாகப் போலியான மணப்பந்தலிட்டு அதனை எருக்கம் இலைகளால் வேய்வர். அத்தோடு பிணத்தின் கழுததிலும் எருக்கம் பூ மாலை அணிவிப்பர். ரம்பர் அல்லது கதலிக் கல்யாணம் எனக் கூறப் படுவதில் வாழை மரத்திற்குப் பதிலாக எருக்கஞ்செடியையும் பயன்படுத்துவர். இக்கல்யாணம் ஒரு குடும்பத்தில் மூத்தவ னாகப் பிறந்து மணம் புரிந்து கொள்ள இயலாமல் இருப்பவர் களுக்கு நடத்தப்படுவதாகும். மூத்தவன் மணம் புரிந்து கொள்ள விரும்பும் இளையவர்களுக்கு வழி செய்ய மூத்தவர்களுக்கு இத்தகைய மணம் நடத்தப்படுகின்றது.

தங்கள் முன்னோர் கண்டிப்புடன் பின்பற்றிய சில சடங்கு களை இன்று பல இந்துக்கள் விட்டுவிட்டனர். சாஸ்திர விதிப் படி மிக முக்கியமானதான நாள்தோறும் தரப்பட வேண்டிய பலிச் சடங்கினைக் கூடப் பெரும்பாலான பிராமணர்கள் புறக்கணித்து விட்டதோடு, இச்சடங்குகளில் ஓதப்பட வேண்டிய மந்திரங்களையும் மறந்து விட்டனர். ஆனால் சமய நெறிப்பட்ட

அல்லது அதிலிருந்து விலகிய எல்லாப் பிராமணர்களுமே சாவுச் சடங்குகளையும், நீத்தார் நினைவுச் சிரார்த்தங்களையும் புறக் கணித்துவிடத் துணிவதில்லை. ஒரு பிராமணப் பிச்சைக்காரன் இரக்கும்போது தன் தந்தைக்கோ தாய்க்கோ, சிரார்த்தம் செய்ய வேண்டும் என்றோ, தன் குழந்தைக்கு உபநயனச் சடங்கு நடத்துவிக்க வேண்டும் என்றோ சொல்லியே பெரும் பாலும் இரக்கிறான். இவ்வாறு இரப்பவர்கள் பெரும் பாலும் வெறுங்கையோடு போவதில்லை. மொனியர் வில்லியம்ஸ் நீத்தார் நினைவாகச் செய்யப்படும் சடங்கு பற்றிக் கூறியிருப் பதாவது:- "இடைவிடாது உரிய காலத்தில் செய்யப்பட வேண்டிய நீத்தார் நினைவுச் சடங்குகள் நலம் தருகின்ற மீற முடியாத கடமையாகக் கருதிச் செய்யப்படுவதாகும். இது ஒருவன் தன் முன்னோருக்குச் செலுத்துவதற்குரிய எளிய, புனிதமான கடனாகும். மரியாதை நிமித்தம் செலுத்தப்படும் கடனாக மட்டுமன்றி, இது அம்முன்னோர்களை ஆவி உலகில் வாழ வைக்கவும், மகிழச் செய்யவும், முன்னேற்றமடைய உதவவும் செய்யப் படுவதாகும். குறைந்தது மூன்று தலைமுறையைச் சேர்ந்த ஒருவனுடைய இறந்துபோன முன்னோர்கள் அவனால் போற்றிப் பேணப்பட வேண்டிய தெய்வத் தன்மைக்குரியவர் கள். நாள்தோறும் அவர்களுக்கான பலியினைக் கொடுத்து அவர்களை ஒருவன் சிறப்புச் செய்யத் தவறுவானாயின் அவன் வாழும் குடும்பத்தில் ஏதேனும் ஒரு தீச்செயல் தொடர்ந்து நிகழ்வது உறுதி. இந்துக்களின் ஈமச் சடங்கின் நோக்கம் உயிரானது அதுவிட்டுப் பிரிந்து போன பூத உடலுக்கும், அடுத்து அது எப்படியும் மேற்கொண்டு எடுத்தே ஆக வேண்டிய தாக இருக்கும் பூத உடலுக்கும் இடையே இருக்கும் ஒரு தனிப் பட்ட காலக்கட்டத்தில் அதனைப் போற்றிக் காத்து வருதலே யாம். அக்காலப் பகுதியில் அது மேற்கொண்டிருக்கும் உட லானது நுட்பமல்லாத மூலப் பொருள்களால் ஆனதெனினும் பூமியில் அதுகொண்டு வாழ்ந்த உடலைக் காட்டிலும நுட்ப மானது. அது தன்னை உலகளாவிய பேரான்மாவோடு கலந்து கொள்ள இயலாதபடி காக்கத் துணையாவது அழிக்க இயலாத அந்த நுண் உடம்பினைத் தவிர வேறேதுவுமில்லை. அதனைச் சிதை நெருப்புத்தீண்டி அழிக்க இயலாது என்பதோடு கூட அது

தங்கி வாழும் தற்காலிக சொர்க்கத்திலோ நரகத்திலோ அதற்குப் புலன் உணர்ச்சிகள் ஏதுமில்லை. பிரிந்து செல்லும் ஆன்மாக்கள் மீண்டும் இந்த உலகில் வந்து பூத உடம்பினைப் பெறும்வரை அவ்விரண்டிடங்களில் ஏதாவது ஒன்றில் சிறிது காலத்தைக் கழித்தேயாக வேண்டும்.''*

இறக்கும் தறுவாயிலிருக்கும் ஒரு பிராமணனை அவன் படுக்கையிலிருந்து தூக்கித் தரையில் கிடத்துவர். அந்த நாள் தனிஷ்ட பஞ்சமி போன்ற கெட்ட நாளாக இருக்குமானால் இறக்கும் தறுவாயில் உள்ள அவனை வீட்டு முற்றத்திலோ திண்ணையிலோ, வீட்டுக்கு வெளியேயோ கிடத்துவர். அப்போது வழிபாட்டுக்குரிய சில பாடல்களைச் சொல்லிப் பசுவைத் தானமாகக் 'கோதானம்' எனக் கொடுப்பது உண்டு. இவை உயிரானது உடலின் பல பாகங்களிலிருந்தும் துன்பமின்றி எளிதாகப் பிரிந்து செல்வதற்காகச் செய்யப்படும் செயல்களாம். ஒருவனுடைய தகுதிக்கு ஏற்ப உடம்பிலுள்ள ஒன்பது துவாரங்களில் ஏதாவது ஒன்றின் வழியாக ஆன்மா உடலை விட்டுப் பிரிந்துபோகும் எனக் கருதுகின்றனர். நல்ல மனிதனுடைய ஆன்மா மண்டை ஓட்டின் உச்சியில் இருக்கும் 'பிரஹ்மரந்தர' என்னும் துவாரம் வாயிலாகவும், கெட்டவன் ஒருவனுடைய ஆன்மா மலத்துவாரம் வாயிலாகவும் பிரிந்து போகும். இறந்தவுடன் உடம்பைக் குளிப்பாட்டி, நெற்றியில் சமயச் சின்னங்களை இட்டு, அதனைச் சுற்றிலும் அவன் மகன் அவலையும் வெற்றிலையையும் தூவுவான். ஒரு பிராமணன் எப்பொழுதும் தன் நெருப்பை உடன் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால் உடனே புனித நெருப்பும் கொளுத்தப்படும். இக்கட்டத்தில் சாவு கெட்ட நேரத்திலோ கெட்ட நாளிலோ நள்ளிரவிலோ நடந்திருக்குமானால் சில தூய்மைப்படுத்தும் சடங்குகள் நிகழ்த்தப்படும். அடுத்துக் கொஞ்சம் அரிசியினை ஒரு புதுப்பானையில் சமைப்பர். புதிய துணியொன்றும் பிணத்தின் மீது போர்த்தப்படும். பிணத்தினை எழுச்சிக் கொள்ளச் செய்யும் வகையில் சில மந்திரங்கள்

* இந்தியாவில் சமயச் சிந்தனையும் வாழ்வும். (Religious Thought and-Life in India)

கூறப்படும். பிணத்தைத் தூக்கிச் செல்வதற்குரிய நால்வருக்கு அவர்கள் அப்பணியினைச் செய்தவற்குரியவர்கள் என்பதற்கு அடையாளமாகத் தர்ப்பைப் புல் வழங்கப்படும். சடங்கினை நடத்தும் இறந்தவரின் மூத்த மகனும், அவன் உடன் பிறந்தவர்களும் முகம் மழித்துக் கொள்வர். மற்றச் சமயங்களில் உடன் பிறந்தவர்கள் அனைவரும் ஒரே நாளில் முகம் மழித்துக் கொள்ளக் கூடாது என்பது விதி. அவ்வாறு செய்வது கேட்டினைத் தருவதாகக் கருதப்படும். தந்தையோ தாயோ இறந்துபோன அன்றுதான் எல்லோரும் ஒரே நாளில் முகம் மழித்துக் கொள்வர். பிணத்தைப் பாடையில் வைக்கு முன் இறந்தவரின் மனைவியும், பெண் உறவினர்களும் அதனை மும்முறை சுற்றி வருவர். பெரும்பாலும் இச்சமயத்தில் கூடியுள்ள பெண்கள் அனைவரும் ஒரு சேர உரக்கக் கூக்குரலிட்டு அழுது ஒப்பாரிப் பாடல்களைப் பாடுவர்.* இறந்து போனவர் பெரிய மனிதராய் இருப்பின் இறந்த வீட்டில் அழுவதைத் தொழிலாகக் கொண்ட பயிற்சிப் பெற்ற பெண்கள் அழுவதற்காக அமர்த்தப்படுவர். கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சத்தியமங்கலத்திலுள்ள பிரஹசர்ணம் பிரிவைச் சேர்ந்த சில கைம்பெண்கள் இதுபோல அழுவதைத் தொழிலாகக் கொண்டவர்களென நான் கேள்விப்பட்டேன். ஒரு பெரியவர் இறந்தாரென்று கேள்விப்பட்டவுடன், அவர்கள், சாவு நேர்ந்த வீட்டிற்கு ஓடிச்சென்று இறந்து போனவரின் குடும்பத்தாரைத் தங்களைச் சிறு தொகைக்கு அழ அமர்த்திக் கொள்ளும்படி நச்சரிப்பர். இறந்தவரின் வீட்டிற்கும் சுடுகாட்டிற்கும் இடையேயுள்ள தூரம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பகுதியின் முடிவை அடைந்ததும் பிணம் தரையில் வைக்கப்பட்டு இறந்தவர் மகன்களும் அவர் உடன்பிறந்தோர் மகன்களும் பிணத்தை மந்திரங்களைச் சொல்லியபடி சுற்றி வருவர். அவர்கள் தங்கள் குடுமியை அவிழ்த்து ஒரு பகுதியைத் தொங்கவிட்டு எஞ்சியதைச்

---

* பார்க்க: தெர்ஸ்டனின் தென்னிந்திய இனத்தவர் பற்றிய விளக்கக் குறிப்புகள், 1906, பக் 229-37 (See: Thurston, Ethnographic Notes in Southern India, 1906, pp. 229-37)

சிறு முடிச்சாக இட்டுக் கொள்வர். அவர்கள் தொடர்ந்து தொடையைத் தட்டிக் கொண்டிருப்பர். (விளையாடும் சிறுவர்கள் தங்கள் குடுமியினை ஒரு பகுதி அவிழ்ந்து தொங்கும்படி விட்டாலோ தொடைகளைத் தட்டினாலோ அவர்களைப் பெரியவர்கள் திட்டுவார்கள். அதற்கு அச் செயல்கள் சாவுச் சடங்குகளோடு தொடர்பு கொண்டிருப்பதே காரணமாகும்.) கொஞ்சம் சோற்றினைப் பிணம் எடுத்துச் செல்லும் வழியில் பதி பலி (வழியில் படைப்பது) எனத் தீங்கு செய்யும் ஆவிகளையும் பூதங்களையும் திருப்திப் படுத்தத் தருவர். இதே சடங்குகளை மேலும் இரண்டு இடங்களில் வழியில் செய்ய வேண்டும். ஆனால் இன்று பிணத்தைச் சிதை அருகே மூன்று முறை இடம் மாற்றி வைத்துச் சுற்றி வருதலையும் பதிபலி தருதலையும் ஒரே முறைதான் செய்கின்றனர். சிதை இருக்கும் இடத்தைப் பிணம் அடைந்ததும், சடங்கினைச் செய்பவன் சிதை மீது நீர் தெளித்துக் காலணாவையும் அங்குப் போடுவான். அத்தொகை சிதை வைக்கப்பட்டுள்ள இடத்தை விலையாகப் பெற்றதற்கு அடையாளமாக அங்குப் போடப்படுகிறது. புனித நெருப்பினை ஏற்றியபின் பிணத்தின் வல உள்ளங்கையை ஒரு தங்கக் காசால் தொடுவர். உடலில் உள்ள ஒன்பது துவாரங்களிலும் நெய் தடவப்பட்டுப் பிணத்தின் மேலும், வாயிலும் அரிசி இடுவர். இறந்தவருடைய மகன் புனித நெருப்பிலிருந்து ஒரு கொள்ளிக் கட்டையினை எடுத்துச் சிதைக்குத் தீயிட்டபின் சூரியனை நோக்கிப் பார்ப்பான். பின் அவன் அடியில் உள்ள துளை வழியாகத் தண்ணீர் ஒழுகக் கூடிய தண்ணீர் நிறைந்த சட்டியைத் தன்னுடைய தோளில் சுமந்தபடி சிதையை மும்முறை வலம் வந்து, மூன்றாவது சுற்றின் போது அதனை வீசி எறிவான். பின் அவனும், இறந்து போனவருடைய உறவினர்கள் அனைவரும் கிழக்கு நோக்கி அமர்ந்து கொஞ்சம் தர்ப்பையை எடுத்து அதனை விரல் நகங்களால் சிறு துண்டுகளாக்கிக் காற்றில் வீசி எறிந்தபடி வேத வாக்கியங்களை உரக்க மெதுவாக ஓதுவார்கள். இவ்வாறு ஓதுவது இறந்தவர் மதிப்பிற்குரிய வயதானவராயின் சிறப்பாக நடைபெறும். கொள்ளி போட்டவன் அதன்பின் கொஞ்சம் தண்ணீரை ஒரு கல்லின் மீது ஊற்றிவிட்டுத் தன் மீதும் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்துக் கொள்வான். மற்ற

உறவினர்களும் இது போலவே செய்வர். பின்னர் அவர்கள் புரோகிதர் தாங்கியபடி நிற்கும் தர்ப்பையும் அத்திக் குச்சிகளையும் சேர்த்துக் கட்டப்பட்ட கட்டின் அடியே நுழைந்து வந்து ஒரு வினாடி சூரியனை நோக்கிப் பார்ப்பர். மறுபடியும் ஒரு முறை அவர்கள் தங்கள் மேல் தண்ணீர் தெளித்துக் கொண்டு ஒரு குளத்திற்குச் சென்று குளிப்பர். அவர்கள் வீட்டுக்குத் திரும்பியதும் நங்க (வெறும்மேனி) சிரார்த்தம், பாஷாணத் தாபனம் (கல் வைத்தல்) என்ற இரண்டு சடங்குகள் நடத்தப் படும். உடலை விட்டுப் பிரிந்து சென்ற ஆன்மா உடல் எரிக்கப் பட்டவுடன் ஆடையின்றி இருப்பதாகக் கருதுவர். அதற்கு ஆடை அணிவிக்கத் தண்ணீர், சோற்று உருண்டைகள், ஓர் துணி, விளக்கு, பணம் ஆகியன ஒரு பிராமணருக்குத் தரப்படும். இறந்து போனவரின் ஆன்மாவின் சார்பாளராக வீட்டில் ஒரு கல்லும், குளக்கரையில் ஒரு கல்லுமாக இரண்டு கற்கள் நடப் படும். பத்து நாள்களுக்குத் திலோதகம் எனப்படும் எள் கலந்த தண்ணீர், ஒரு சோற்று உருண்டை ஆகியன அக்கற்களுக்குப் பலியாகத் தரப்படும். சோற்று உருண்டை காகங்கள் தின்னும் படியாக விட்டுவிடப்படும். மொத்தம் தரப்படும் பலி எழு பத்தைந்தாக இருக்க வேண்டும். முதல் நாள் மூன்றாகத் தொடங்கிப், பிறகு ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இதனோடுகூட நாள்தோறும் மூனறு முறை காற்றில் உலரும் துணித் துண்டினை நீரில் நனைத்துக் கல்லினை ஈரப்படுத்தும் வசோதகம் எனப்படும் சடங்கும் செய்யப்பட வேண்டும். பிணத்தை எரித்த மறுநாள் உறவினர் கள் அனைவரும் சுடுகாட்டில் கூடுவர். இறந்தவரின் மகன் தணலை அணைத்தபின் சாம்பலினிடையேயிருந்து எலும்புத் துண்டுகளைச் சேகரிப்பான். இச்சடங்கு. சஞ்சயணம் (சேகரித் தல்) எனப்படும். அப்போது சமைத்த உணவு படைக்கப்படும். எலும்புகளை ஏதேனும் ஓர் புனித ஆற்றில் கொண்டுவிடுவர் அல்லது பூமியில் புதைப்பர். இறப்புக்குப் பின் பத்தாம் நாள் 'பிரபுதபலி' எனப்படும் சோற்றுப்பலி அளிக்கப்படும். இறந் தவர் ஆன்மா அன்று மிகுந்த பசியுடையதாக இருக்குமாதலால் பெருமளவில் சோறு சமைத்துப் படைக்கப்படும். சோற்றினை ஒரு வாழை இலையில் குவித்து எல்லா உறவினர்களும் அழுத

படியும், மார்பில் அடித்துக் கொண்டும் அந்த இலையைச் சுற்றி வருவர். பெரும்பாலும் பெண்களே இச்சடங்கில் பங்கு பெறுவர். ஆண்கள் அப்போது ஒரு புறமாக ஒதுங்கி நிற்பர். அச்சோறு குளத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இறந்தவரின் கைம்பெண் ஆடை அணிகள் அணிவிக்கப்பட்டு, அங்கு அழைத்துச் செல்லப் படுவாள். அச்சோறு குளத்திலிடப்படும். கைம்பெண் வயது மூத்தவளாக இருந்தால் அவள் தாலி அகற்றப்படும். அன்றே அவள் தலையும் மழிக்கப்படும். எல்லா உறவினர்களும் வந்து தன்னைப் பார்க்கும் இந்த நாளைக்குப் பின்னர் ஒரு கைம் பெண் நகைகளால் தன்னை அலங்கரித்துக் கொள்ள அனுமதி யில்லை. பங்காளிகள் அனைவரும் பத்தாம் நாள் வந்திருந்து தர்ப்பணம் தர வேண்டும். அதுவரை அவர்கள் தீட்டுக்குரியவர் களாவர். பிரபுதபலி தந்தபின் அனைவரும் குளிப்பர். ஓமம் வளர்க்கப்படும். புனித நெருப்பின் சாம்பலைக் கொஞ்சம் நெய் யில் கலந்து தீட்டுக் குரியவர்களின் தீட்டினைப் போக்க நெற்றி யில் அடையாளமாக வைப்பர், தீட்டுச் சமயத்தில் ஸ்ரீவைஷ்ண வர் நெற்றியில் வெள்ளை நாமம் மட்டுமே தரிப்பர். இடையே சிவப்புக் கோட்டினை இட்டுக் கொள்ளமாட்டார்கள். ஸ்மார்த் தர் நெற்றியில் எதுவுமே இட்டுக் கொள்ளமாட்டார். பத்தாம் நாள் சடங்கு தசாகம் எனப்படும். பதினொன்றாம் நாள் ஏகோதிஷ்டம் எனப்படும் சடங்கு நடத்தப் பெறும். இறந்து போனவருக்குப் பதிலாக அவருடைய பிரீதவாக ஒரு பிராமணரை உட்கார வைத்துச் சிரார்த்தச சடங்குகளுக்குப் பின் உணவளிப் பர். பெரும்பாலும் அவ்வாறு அமர்த்தப்படுவர் இறந்தவரின் உறவினராகவே இருப்பார். சில பிரிவினைச் சேர்ந்த பிராமணர் கள் உறவினரல்லாதவரை அழைத்து உண்ணச் செய்வதோடு அவருக்கு நல்ல தட்சணையும் தருவர். பன்னிரண்டாம் நாள் சபிந்திகரணம் (சபிந்த-பங்காளி) சடங்கு நடத்தப்படுகிறது. அது பெரும்பாலும் சிரார்த்த சடங்கினையே ஒத்திருக்கும். அச்சடங்கின் முடிவில் ஆறு சோற்று உருண்டைகள் மூன்று ஆண், மூதாதையர்களுக்கும் மூன்று பெண் மூதாதையர்களுக்கும் அளிக்கப்படும். உருண்டைகள் இடைவெளிவிட்டு இரண்டு வரிசைகளாக வைக்கப்படும். அவ்வரிசைகளுககிடையே சோற் றினை நீளமாக வைப்பர். அதனைத் தர்ப்பையால் மூன்று

கூறிட்டுச் சோற்றுருண்டைகளின் அருகே சேர்த்து வைப்பர். இது இறந்தவரை அவருடைய பித்ருக்களோடு சேர்ப்பதாகக் கருதப்படுகிறது. அவ்வாறு சேர்ப்பதற்குச் சற்றுமுன் ஒரு பசுவினை அன்பளிப்பாகத் தருவர். இப்பரிசு பிரிந்து போன ஆன்மா ஆறாகிய வைத்ரணியைச், சுலபாகக் கடக்க உதவுவதாக நம்பப்படுகிறது. சபிண்டிகரணம் ஒரு முக்கியமான சடங்காகும். இறந்து போனவருடைய சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்வதிலே தகராறு தோன்றுமானால் அதில் ஓர் உடன்பாடு எட்டும்வரை இச்சடங்கு நடத்தப்படுவதில்லை. உதாரணமாக மணமான ஒருவன் மக்கட்பேறு இல்லாமல் இறப்பானாகில் அவனுடைய உடன் பிறந்தவர்கள் அவன் பங்குக்குரிய சொத்துக்களைப் பற்றிய பங்கீடு பற்றி ஓர் உடன்பாட்டிற்கு வர மறுப்பார்களேயாயின் இறந்து போனவனுடைய மனைவி இச்சடங்கினைச் செய்ய அனுமதி மறுக்கலாம், சாஸ்திரங்களில் விதித்துள்ளபடி சபிண்டிகரணம், ஓராண்டு முழுதும் மாசத்திய சிரார்த்தங்களைச் செய்தபின், ஓராண்டுக்குப் பிறகே செய்வதற்குரியது. ஆனால் இப்பொழுது பன்னிரண்டாம் நாள் சபிண்டிகரணம் நடத்தப்படுவதற்குச் சற்று முன்பு சோடாசம் (பதினாறாவது) என்ற சடங்கு நடத்தப்படுகிறது. ஓராண்டு முடியும் முன் பன்னிரண்டு மாதாந்திர சிரார்த்தங்களும், நான்கு காலாண்டுக்குரிய சிரார்த்தங்களும் நடத்தப் பெறவேண்டும். இவற்றிற்குப் பதிலாக நடத்தப்படுகிற சோடாசம் சடங்கில் பதினாறு பிராமணர்களுக்குப் பணமும் பாத்திரங்களும் அன்பளிப்பாகத்தரப்படுகின்றன. பன்னிரண்டாம் நாள் விருந்து வைத்துக் குடும்ப வழிபாட்டினைச் சிறப்பாகச செய்வர். அதன் இறுதியில் வடமொழியில் வல்லவர்ஒருவர் இறந்துபோனவரைப் புகழ்ந்து சர்ம சுலோகம் எனப்படும் சுலோகத்தைப் புனைந்து அதனைப் பலமுறை சொல்வார். இறந்து ஓர் ஆண்டு முடியும் வரை மாதந்தோறும் குறிப்பிட்டபடி சிரார்த்தம் நடத்திவர வேண்டும். இது ஆண்டுதோறும் நடத்துவதற்குரிய சிரார்த்தத்தைப் போலவே செய்யப்படுவதற்குரியது. ஒருவர் கயாவுக்கு யாத்திரை செய்து திரும்பினால் அதன்பின் இம்மாதந்திரச் சடங்கிளை நிறுத்திவிடலாம். இச்சடங்கினைச் செய்யும் இறந்து போனவருடைய மூத்த மகனோ, பங்காளியோ, விட்டுணு

வையும், தேவதைகளையும், மூதாதையர்களையும் குறிக்கும் வகையில் மூன்று பிராமணர்களை அழைக்க வேண்டும். சில போது இரண்டு பிராமணர்களோடு நிறுத்திக் கொண்டு விட்டுணுவின் பிரதிநிதியாகச் சாலக்ராமக் கல்லினை வைத்துக் கொள்வர். நெருக்கடியான சமயங்களில் ஒரே பிராமணர் மட்டும் இருக்க மற்ற இருவருக்கும் சார்பாளனாகத் தர்ப்பையை வைத்துக் கொள்வர். புனித நெருப்பு மூட்டி அதில் நெய், சிறிது அரிசி, சோறு, காய்கறிகள் ஆகியவற்றை இடுவர். பிரா மணர்கள் அதன்பின் கால் அலம்பி வந்து உணவு கொள்வர். அவர்கள் உணவு உண்ண ஒதுக்கப்பட்ட இடத்தில் நுழையும் முன் கெட்ட ஆவிகளை எட்ட ஓட்டத் தண்ணீர், எள், அரிசி ஆகியன அவ்விடத்தில் தெளிக்கப்படும். அவர்கள் உண்டு முடித்தவுடன் வாயச பிண்டம் எனப்படும் காக்கைக்கான உணவு பித்ரு தேவதைகளான மூன்று தலைமுறை மூதாதையர்களுக்கு இடப்படும். காகங்கள் அந்த உணவை உண்ணவில்லையானால் அது வரப்போகும் தீமைக்கு அறிகுறியாகக் கருதப்படும். பிரா மணர்கள் வெற்றிலை பாக்கும், தங்கள் சேவைக்கான தட்சணை யாகத் தொகையும் பெற்றுச் செல்வர். ஒருமுறை என் உதவி யாளர், பழனி மலைகளின் இடையே உள்ள கொடைக்கானலில் அலுவல் காரணமாகத் தங்கியிருந்தவர், உயர்ந்த அந்த மலைப் பகுதியில் காகங்கள் இல்லாத காரணத்தால் தன் தந்தையின் சிரார்த்தத்தை முன்னிட்டு மலையிலிருந்து கீழே வரவேண்டி நேரிட்டது. அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் சிரார்த்தம் செய்ய வேண்டும் என்ற கட்டாயமில்லை. எனினும் இது மிகவும் முக்கியமான சடங்காகக் கருதப்படுவதோடு ஒருவன் அதனைச் செய்யாது விடுவானாயின் அவன் சாதி விலக்கம் பெறும் இடரினையும் அடைய நேரிடலாம்.

இறந்தவர்கள் தொடர்பாகச் செய்யப்படும் சடங்குகள் கருட புராணத்தை ஆதாரமாகக் கொண்டவை. அதில் கூறப் பட்டுள்ளபடி பத்து நாள்கள் தரப்படும் பலியானது ஆன்மாவின் உடல் வளர்ச்சிக்கு உதவுவதாகக் கூறப்படுகிறது. இது தொடர் பாக மொனியர் வில்லியம்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதி

யுள்ளார்:—* "முதல் நாள் இறந்தவரின் மூத்த மகனோ நெருங்கிய உறவினரோ படைக்கும் பிண்டம் இறந்தவரின் ஆன்மா தலையினைப் பெறும்படியாக அதற்குச் சக்தி ஊட்டுகிறது. இரண்டாம் நாள் படைக்கப்படும் பிண்டம் கழுத்தும், தோளும் பெற உதவுகிறது. மூன்றாம் நாள் இதயமும், நான்காம் நாள் முதுகும், ஐந்தாம் நாள் கொப்பூழும், ஆறாம் நாள் பிட்டமும் மறைத்து வைக்கும் பகுதிகளும், ஏழாம் நாள் தொடைகளும், எட்டாம் நாள் முழங்காலும், ஒன்பதாம் நாள் பாதங்களும் முறையே வளர அந்த அந்த நாள்களில் தரப்படும் பிண்டங்கள் உதவுகின்றன. பத்தாம் நாள் ஆன்மாவின் இடைப்பட்டதான உடல், பசி, தாகம் முதலான உணர்ச்சிகளை உணரும் வகையில் முழு வளர்ச்சியுறும். அதனால் மற்ற பிண்டங்கள் இதன் முன்னர் படைக்கப்படுகின்றன. பதினொன்றாம், பன்னிரண்டாம் நாள்களில் இடைப்பட்டதான உடல்பெற்ற ஆன்மா தன்னுடைய வருங்கால வாழ்வீடத்தை நோக்கிப் பயணத்தை மேற்கொள்ளப் போதுமான உடல் வலிமையைப் பெற வேண்டி வெறியோடு மிகுந்த உணவை உட்கொள்ளும். அதன் பின் இறந்த பதின்மூன்றாம் நாள் அது சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ அழைத்துச் செல்லப்படும். நரகம் செல்லும் ஆன்மாவாயின் அங்கே அது அனுபவிக்க இருக்கும் வேதனைகளைத் தாங்கிக் கொள்ளப் போதுமான வலிமை தரும் சத்துள்ள உணவு அதற்கு வேண்டியிருக்கும்.

இந்துக்களின் மனத்தில், சாவுக்குத் தெய்வமான எமன் பயங்கரமான கடவுளாகத் தோன்றுவான். அவன் பணியாளர்களான தூதுவர்கள் இறந்தவர்களின் உயிரை வதைக்கும் ஆற்றல பெற்றவர்கள். "ஒருவன் இறந்தவுடன், அவன் உடம்பு எரிக்கப்படும் வரை உயிரைக் கொண்டு செல்லத் தயாராகக் காத்திருக்கும் எம தூதுவர்கள் இறந்தவரின் உயிருக்குப் புலனாவார்கள். அந்த உயிர் மிக நுண்ணிதான மூலங்களின் துணையால் நுண்ணிதான உடலைப் பெருவிரலளவினதாகப் பெற்றிருக்கும் எனக் கூறுவர். அனல் தெறிக்கும் கண்களோடும், குத்திட்டு நிற்கும் மயிரோடும், கோரைப் பற்களுடனும், காக்கையையொத்த கறுத்த நிறத்

*முந்து நூல் (Op. cit.)

தோடும், பறவைகளின் கூருகிர் போன்ற நகங்களுடனும் அஞ் சத்தகும் தோற்றம் தரும் எம தூதர்கள் தங்கள் கையில் எம பாசமும், வளைதடியும் தாங்கியபடி இருப்பர். தங்களுடைய இந்தத் தோற்றம் போதாதென்று தாங்கள் கொண்டு செல்லும் உயிரிடம் இவர்கள் எமன் உலகில் அந்த உயிர் படப்போகும் யம வேதனைப் பற்றிக் கூறி மேலும் அச்சுறுத்துவர். அதன்பின் அவர்கள் தங்கள் கட்டில் அகப்பட்ட உயிரை எமனுலகத்திற் குரிய பாதையில் அழைத்துச் செல்வர். தர்ம நீதி கூறும் எமனுக்கு முன் அதனைக் கொண்டு நிறுத்துமுன் அவனுடைய கணக்க னாகிய சித்ரகுப்தனை அது காண நேரிடும். இந்த அலுவலர் எமன் அருகே திறந்ததொரு ஏட்டொடு நின்றபடி இருப்பான். இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுடைய கெட்ட, நல்ல செயல்களைப் பாவச் செயல்கள் எனவும் புண்ணியச் செயல்கள் எனவும் பாகுபாடு செய்து பாவ புண்ணியங்களைக் கணக்கிட்டு எது அதிகமாக எஞ்சியுள்ளது என அந்த உயிர் எமன் முன் கொண்டுவரப்படும்போது கூறுவதே அவனுடைய பணியாகும். எஞ்சியிருப்பது பாவமா புண்ணியமா எனக் கணக்கறிந்தே தீர்ப்பு வழங்கப்படும். ஒரு கொடியவனை எமனுடைய இரு தூதுவர்கள் வதைக்கும் பகுதிக்கு தள்ளிச் செல்லும் பாதையைப் பற்றிய விளக்கம் கருட புராணத்தில் முதலிரண்டு அத்தியா யங்களில் கூறப்பட்டுள்ளது. சிறியதாக உருவெடுத்துள்ள உயிரா னது செல்ல வேண்டிய பாதை 86,000 யோசனை தூரம் உள் ளது. அதில் நாளும் 200 யோசனை தூரம் செல்ல வேண்டும். செல்லும் வழியில் நிழல் தரும் மரங்களோ, ஓய்வுக்கான இடங் களோ, உணவோ, குடிக்க நீரோ கிடைக்காது. ஒரு சமயம் அங்குப் பன்னிரண்டு நடுப்பகல் நேரத்துச் சூரியனின்க ளின் வெப்பம் போன்ற வெப்பம் தகிக்கும்; அடுத்து உடனே எலும்பைத் துளைக்கும் கடுங்குளிர் வாட்டும்; உடம்பின் மெல் லிய தோலினை முட்கள் குத்தி வருத்தும்; மறு வினாடி சிங்கம், புலி, செந்நாய், நச்சுப் பாம்பு, தேள் ஆகியன தாக்கும். ஓரிடத் தில் வாள்களையே இலைகளாகக் கொண்ட மரங்கள் அடர்ந்த காடுகளின் வழியே செல்லவேண்டியிருக்கும்; மற்றொரு இடத் தில் அது முடிவற்ற ஆழ்ந்த பள்ளமாக இருக்கும். இன்னோர் இடத்தில மலை முகடுகளிலிருந்து செங்குத்தாக இறங்குவதா

யிருக்கும்; வேறொரிடத்தில் கத்தி முனைகளின் மேல் நடக்க வேண்டியதாகும்; அடுத்துக் கூரிய இரும்புக் கம்பிகளின்மேல் நடக்கவேண்டி இருக்கும். திடீரெனஎங்கும் இருள்மயமானதாகி முட்டிமோதிக் கொண்டு தடுமாற வேண்டியதாகும். அடுத்து வெறுக்கத்தக்கதும் அட்டைகள் நிறைந்ததுமான சேற்றிடையே பாதை புகும். பின் கொதிக்கும் மணல் வழியாக செல்லும்; அடுத்து கனன்று எரிகின்ற செந்தணலும், புகையும் பாதையின் போக்கைத் தடுக்கும்; இத்தகைய ஒவ்வொரு தடையையும் அது எவ்வளவு கடினமானதாயினும் தாண்டியே செல்ல வேண்டி வரும். திடீரென எரிகின்ற கரி, கல், குருதி, கொதிக்கும் நீர், துர்நாற்றம் பிடித்த நீர் ஆகியன மழையாக மேலே பொழியும். அடுத்து அச்சமூட்டுகின்ற பிளவுகளிடையேயும் களைப்பைத்தரும் சிகரங்களின் மேலேயும் செல்ல வேண்டி வரும். நீண்ட குகைகளும், நாற்றமுள்ள நீர் நிறைந்த ஏரிகளும் குறுக்கிடும்; பின்னர் நடுவழியில் வெறுக்கத்தக்க வைத்ரணி எனப்படும் ஒரு நூறு யோசனை அகலமுள்ள ஆழங்காண முடியாத ஆற்றினைத் தாண்ட வேண்டி வரும். அந்த ஆற்றில் இரத்தம், மலம், மயிர் எலும்பு ஆகியன நிறைந்திருப்பதோடு, பெரிய சுறாமீன்களும், முதலைகளும், கடல் இராக்கதர்களும் ஆங்காங்கே செறிந்திருக்க மேலேஅஞ்சத்தக்ககழுகுகளும், மற்றும் வெறுக்கத்தக்க கொத்தித் தின்னும் பறவைகளும் வட்டமிட்டபடியாக இருக்கும். ஆயிரக் கணக்கான தண்டனைகளுக்குஉள்ளான உயிர்கள் அந்தஆற்றின் கரைகளில், தாங்கள் மேலே செல்ல வேண்டிய வழியினைக் கண்டு நடுநடுங்கியவர்களாக நின்றிருப்பர். தீராத கொடுந் துயரம் வாட்ட அவர்கள் தங்கள் காலடியில் ஓடும் குருதியையே குடிப்பர். பின் தலை குப்புற்ற அந்த ஆற்றில் விழும் அவர்களை மோதிச்சாடும் அலைகள் மூழ்கடிக்கும். இறுதியாக நரகத்தின் மிக ஆழமான பகுதி வழியே வேகமாக நடத்திச் செல்லப் படுவர். எனினும் அந்த உயிர்களுக்கு அழிவு மட்டும் நேராது. உடன் தொடர்ந்து வரும் எம தூதுவர்கள் அவர்களை ஒரு புறமாக இழுத்துபலவகைச்சித்ரவதைகளுக்கும் உட்படுத்துவர். அவற்றின் முழு விவரங்களும் அடுத்தடுத்து வரும் கருட புராண அத்தியாயங்களில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.'' என உயிரின் இப்பயணம் குறித்து மோனியர் வில்லியம்ஸ் எழுதியுள்ளார்.

ஒரு பிராமணன் கடைப்பிடிக்க வேண்டிய அகன்னிகங்கள் எனப்படும் அன்றாட நெறிமுறைகள் பலவாம். இன்று சமயஞ் சார்ந்த வாழ்க்கையை முழுமையாக மேற்கொண்டுள்ள பிராமணர்கள் ஒரு சிலரே. இவர்களுள் பலரும் ஊர்ப்புறங்களி லேயே வாழ்கின்றனர். குளித்தல், சந்தி செய்தல், பிரம்ம யக்ஞம், தேவ பூசை அல்லது தேவ தரிசன, தர்ப்பணம், வைஸ்வ தேவச் சடங்கு, புராண, இதிகாசங்களைப் படித்தல் என்பன அன்றாடம் மேற்கொள்வதற்குரிய செயல்களாம். ஒவ்வொரு சமய நெறிப்பட்ட பிராமணனும் சூரியன் உதிக்க ஒன்றரை மணி நேரம் முன்னதாகப் பிரம்ம முகூர்த்தம் எனப்படும் அதிகாலையில் துயிலெழ வேண்டும். அவன் தன் பற்களை மாவிலை அல்லது கருவேல் அல்லது வேப்பங்குச்சியால் விளக்கித் தூய்மை செய்ய வேண்டும். பின்னர் ஆற்றிலோ குளத்திலோ முழங்காலளவு நீரில் நின்று பின்வருவனவற்றைக் கூறியபடி குளிக்கவேண்டும்:- "நான் காலையில் குளிப்பதாகிய என்னுடைய கடமையை இந்தப் புனித ஆற்றில் (கங்கை, சரசுவதி, யமுனை, கோதாவரி முதலானவை) கடவுளின் முன்னிலையிலும், மற்றப் பிராமணர்கள் முன்னிலையிலும் செய்யப் போகிறேன். என் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் பாவங்களும், நான் தீண்டியவைகளும் தீண்டாதவைகளும், அறிந்தவைகளும் அறியாதவைகளும், உண்டனவும் உண்ணாதனவும், குடித் தனவும், குடிக்காதனவும் ஆகிய அனைத்தும் இக்குளியலால் கழுவப்பட வேண்டி நான் குளிக்கின்றேன்." குளித்த பின் ஒரு ஈரத்துணியால் அவன் தன் உடம்பைத் துடைத்துக் கொண்ட பின், துவைத்து உலர்த்திய மடியான உடைகளை உடுக்க வேண்டும். மடி ஆடை என்பது துவைத்துப் பிழிந்து உலர்த்தப் பட்டு வேறு யாராலும் தொடப்படாத ஆடையாகும். அப்படி அவன் குளிக்குமுன் அதனை யாரேனும் தொட்டுவிட்டால் அது தீட்டுப் பட்டதாகி மடித் தன்மையை இழக்கும். அதற்குப் பதிலாகத் தீட்டுக்கு என்றும் உள்ளாகாததான பட்டாடையினை உடுக்கலாம். மடி உடையையோ, பட்டாடையினையோ காலை யில் செய்வதற்குரிய சடங்குகளை முடித்து உணவு உண்ணும் வரை அணிந்திருக்க வேண்டும். அதன்பின் அவன் தன் நெற்றியி லும், உடம்பிலும் தன் சமயப் பிரிவிற்கு உரியதான சமயச்

சின்னங்களைத் தரித்துச் சந்தியைச் செய்வான். சந்தி செய்வதான இது உபநயனச் சடங்கினை முடித்துக் கொண்ட ஒவ்வொரு பிராமணனும் தவறாது செய்ய வேண்டிய கடமையாகும். எனி னும் பெரும்பாலோர் இதனைக்கடைப்பிடிப்பதில்லை. சாஸ்திரம் விதித்துள்ளபடி காலையிலும் சந்தி செய்ய வேண்டும். எனினும் நடைமுறையில் நடுப்பகலில் ஒரு வழிபாடும் செய்யப்படுகிறது. சந்தியாவந்தனம் என்பதன் பொருள் பகலும் இரவும் சந் திக்கும் பொழுதில் இறைவனுக்கு நன்றி சொல்லுதலாகும். இச் சடங்கு தண்ணீரை வல உள்ளங்கையிலிருந்து உறிஞ்சும் 'ஆச மனம்' என்பதனோடு தொடங்கும், அச்சுதாய நமக, அனந்தாய நமக, கோவிந்தாய நமக என்பதனைத் திரும்பத் திரும்பச் சொல்லியபடி மும்முறை நீர் பருக வேண்டும். அதனை அடுத்து உடம்பின் பன்னிரண்டு உறுப்புகளையும் வலக்கை விரல்களால் பின்வருமாறு வரிசை முறைப்படி தொடுதல் வேண்டும்:-

கேசவ, நாராயண எனச் சொல்லியபடி இரண்டு கன்னங்களையும் பெருவிரலால் தொட வேண்டும்.

மாதேவ, கோவிந்த எனக் கூறியபடி இரண்டு கண் களையும் மோதிர விரலால் தொட வேண்டும்.

விட்டுணு, மதுசூதன எனக் கூறினபடி மூக்கின் இரண்டு பக்கங்களையும் சுட்டு விரலால் தொட வேண்டும்.

திருவிக்ரம, வாமன எனக் கூறியபடி இரண்டு காது களையும் கட்டை விரலால் தொட வேண்டும்.

ஸ்ரீதர, ரிசிகேச எனக் கூறியபடி இரண்டு தோள் களையும் நடு விரலால் தொட வேண்டும்.

பத்மனாப, தாமோதர எனக் கூறியபடி எல்லா விரல் களாலும் கொப்பூழையும் தலையையும் தொட வேண்டும்.

பிராமணர்கள் மேற்கொள்ளும் எல்லாச் சமயச் சடங்கு களிலும் முதற்கண் செய்யப்பட வேண்டியது ஆச்சமன எனப் படும் இதுவேயாகும். குளிக்கும் நீர், புற உடம்பைத் தூய்மை செய்வதைப் போல உறிஞ்சிக் குடிக்கும் நீர் உடம்பின் உள் உறுப்புகளைத் தூய்மையாக்குவதாகக் கருதப்படுகிறது.

ஆச்சமனச் சடங்கின் பின் பிராணாயாமம் எனப்படும் உயிர் மூச்சினை அடக்குதல் செய்யப்பட வேண்டும். இதில் காயத்திரி

சொல்லியபடி மூன்று வெவ்வேறு வகைகளில் மூச்சை அடக்குதல் நிகழ்த்தப்படுகிறது.

பூரகம் எனப்படுவது வல மூக்கை விரல்களால் அழுத்திய படி இட மூக்கால் மூச்சை உள்ளே இழுத்தல். பின் இட மூக்கை அழுத்தியபடி வல மூக்கால் மூச்சை உள்ளே இழுத்தல்.

கும்பகம் எனப்படுவது பெருவிரலாலும் அல்லது எல்லா விரல்களாலும் மூக்கின் இருதுளைகளையும் அழுத்தியபடி எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் மூச்சடக்கி இருத்தல்.

ரேசகம் எனப்படுவது வல மூக்கைப் பெருவிரலால் அழுத்தியபடி இட மூக்கால் மூச்சு விடுதல். பின் இட மூக்கைப் பெருவிரலால் அழுத்தியபடி வல மூக்கால் மூச்சு விடுதல்.

மூச்சை அடக்குதல் யோகப் பயிற்சியின் முதற்படியெனக் கூறப்படுகிறது. இது ஒருவன் தன் மனத்தை முழுமுதற்பொருளின் மீது நிலைக்கச் செய்ய உதவும் பயிற்சியாகும்.

அடுத்து சங்கல்பம் (உறுதியில் நிற்றல்) எனப்படும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. வல உள்ளங்கையினை இட கையின் மீது வைத்து இரு கைகளையும் வலத் தொடை மீது வைக்க வேண்டும். எல்லாச்சடங்குகளுமே சங்கல்பத்தோடேயே தொடங்கப்பட வேண்டும் சந்திச் சடங்கினுக்கான சங்கல்பம் வருமாறு:- "என்னைப் பிடித்துள்ள என் பாவங்கள் அனைத்தையும் போக்கிக் கொள்ளவும் நாராயணனாகிய முழுமுதற் பொருளின் கருணையைப் பெறவேண்டியும் நான் என் வழிபாட்டினைச் செய்கின்றேன்." இச் சடங்கு மேற்கொள்பவர் பின் தன் மீது தண்ணீரைத் தெளித்துக் கொண்டு பின்வருமாறு கூறுவார்:- "ஓ! தண்ணீரே, எல்லா நலங்களின் மூல காரணமே! எங்களுக்கு எங்கள் புலனகள் வலிமையுடன் வளர்ந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும்படியாகச் செயல்படத் தேவையான உணவைக் கொடு. குழந்தையிடம் பரிவுள்ள தாய் தன் மார்பிலிருந்து சுரக்கும் பாலைத் தன் குழந்தைகளுக்கு ஊட்டுவது போல மிக்க

அருளுடையதான உன்னுடைய இரசத்தினை எங்களுக்குக்கொடு. உன்னுள் நிரம்பி வழியும் எந்த இரசம் உன்னை மகிழ்ச்சியுடனிருக்கச்செய்கின்றதோ அந்த இரசத்தினைப் போதுமான அளவு எங்களுக்குக் கொடு. ஓ! தண்ணீரே, எங்களுக்குக் குழந்தைகளைத் தருவாயாக.'' பின் அவன் தன் உள்ளங்கையில் தண்ணீரை எடுத்துக் குடித்தபின், பின்வருமாறு கூறுவான்:- சூரியனும், சினமும், சினத்திற்கான தலைவர்களும் என்னை என் பாவங்களான அகங்காரம் ஆவேசம் ஆகியவற்றிலிருந்து காக்கட்டும். எண்ணம், சொல், செயல்களால் இரவில் நான் செய்த பாவங்கள் மனத்தால், சொல்லால், கரங்களால், பாதங்களால் நான் மேற்கொண்டவை, என் பசி காரணமாகவும், என் உணர்ச்சி காரணமாகவும் இரவில் என் உறுப்புக்கள் செய்த பாவங்கள் அனைத்தையும் விலகிக் கொண்டிருக்கும் இரவானது விலக்கிச் செல்லட்டும். உன்னுடைய அழியாத ஒளியில் ஓ! ஒளிக்கதிர்களை வீசும் சூரியனே, நான் என்னையும் என் பாவங்களையும் ஒப்படைக்கின்றேன்.'' மாலையில் செய்யப்படும் இச்சடங்கில் இவையே சூரியன் என்ற சொல்லுக்குப் பதிலாக அக்கினி என்ற சொல்லினைச் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. நடுப்பகலில் செய்யப்படும் வழிபாட்டில் பின்வருமாறு கூறப்படுகிறது:- ''தண்ணீர் மழையினைப் பொழிந்து இந்த உலகினைத் தூய்மைப்படுத்தட்டும். அவ்வாறு தூய்மைப்படுத்தப்பட்ட உலகம் நம்மைத் தூயவர்களாக்கட்டும். தண்ணீர் என் ஆத்ம குருவினைத் தூய்மைப் படுத்தட்டும். அவ்வாறு தூய்மை ஆக்கப்பட்ட குருவினால் போதிக்கப்படும் வேதம் என்னைத் தூய்மைப்படுத்தட்டும். மற்றவர்கள் உண்ணாது விட்ட எச்சில், நான் உண்டிருக்கக் கூடிய தூய்மையற்ற உணவு, தகுதியற்றவர்களிடமிருந்து நான் பரிசாகப் பெற்ற பொருள்கள் ஆகிய அனைத்தாலும் என்னைச் சேர்ந்த பாவங்களைக் கழுவித் தண்ணீர் என்னைத் தூய்மைப் படுத்தட்டும். இதற்காகப் புனிதப்படுத்தப்பட்ட இந்த நீரை. என்னைத் தூய்மைப்படுத்த நான் என் வாயால் உட்கொள்கிறேன்.'' மற்றுமொருமுறை, சடங்கைச் செய்பவன் தன் மீது தண்ணீரைத் தெளித்துக் கொண்டு பின்வருமாறு கூறுவான்:- ''நான் ததிகிராவன் என்றதெய்வத்தின் புகழைப் பாடுகின்றேன். அவன் வெற்றி கொள்பவனும், எங்கும் நிறைந்தவனும்,

வேகமாகச்செல்லக் கூடியவனும் ஆக உள்ளான். அவன் நம் வாய் களையும், உணர்வுகளையும் மணங்கமழச் செய்யட்டும். நம் வாழ்நாளை நீண்டதாகச் செய்யட்டும். ஓ! தண்ணீரே, எல்லா நலங்களுக்கும் மூல காரணமே எங்களுக்கு உணவைக் கொடு." என்பது போலக் கூறப்படும்.

இதுவரை நடத்தப்பட்ட சடங்குகள் யாவும் அகப் புறத் தூய்மைக்காக மேற்கொள்ளப்பட்டவை. அவற்றின் பயனாய் ஒருவன் சூரியன் ஒளிக்கோலத்தில் குடிகொண்டுள்ள இறைவனை வழிபடத் தகுதி உடையவனாவதோடு அர்க்கியம் எனக் கூறப் படும் பிராமணீய நெறிப்படி அவருக்குத் தன் பணிவினைக் கூறவும் தகுதியுடையவனாகின்றான். அர்க்கியம் எனப்படுவது தகுதிவாய்ந்த விருந்தினருக்குத் தரப்படும் தண்ணீராகும். காயத் திரியைத் திரும்பத் திரும்பச் சொல்லியபடி வழிபாடு நடத்துபவன் தன் பெருவிரல்களில் பூணூலைச் சுற்றியபடி, இரு உள்ளங் கைகளாலும் தண்ணீரைவாரிக் காற்றில் இரைப்பான்.காயத்திரி, வேதங்களின் சாரத்தைத் தனனகத்தே கொண்டுள்ள மிகச் சிறந்த பக்திப் பாடலாகும்.

இவற்றின் பின், வழிபாடு செய்பவன் ஓரிடத்தில் அமர்ந்து செபம் (மெல்லிய குரலில் வழிபாட்டுக்குரிய வாழ்த்துக்களைக் கூறுவது) செய்வான். திரும்பத் திரும்பக் கூறப்படும் காயத்திரி, காயத்திரி மூலம், வியாகிருதி, காயத்திரி சிரொமந்திரம் என்ற மூன்று பகுதிகளை உடையது. அது பின்வருமாறு செல்லும்:-

ஓம் பூஹூ: ஓம், புவஹ;
ஓம் சுவஹ: ஓம். மஹஹ:
ஓம் ஜனக; ஓம், தபஹ;
ஓம் சத்யம்.
ஓம் தத்சவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன ப்ரசோதயாத்
ஓம் ஜ்யோதிரஸோ அம்ருதம்
பிரம்ஹ, புஹர், புவஸ்வரோம்.

வியாக்ரிதிகள் பொதுவாக ஏழு உலகங்களையும் குறிப்ப தாகவே கொள்ளப்படுகின்றன. அவற்றின் முன் இணைந்

துள்ள பிரணவம் (ஓம்) இந்த உலகங்களெல்லாம் பரம்பொருளி லிருந்து தோன்றியவை என்பதனைக் குறிப்பதாம். மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரணவங்களின் பொருள் வருமாறு:— "ஏழு உலகங்கள் அனைத்தும் ஓம் என்ற எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரமத்தின் கட்புலனாகும் வடிவங்களாம். நாம் நம் உள்ளத்தில் சுடர் விடுகின்றன. நமக்கு வழி காட்டும் வணங்கத்தக்க பெருமானின் ஒளியை நினைக்கிறோம். அவன் நம் அறிவைச் சரியான வழியில் செலுத்துவானாக. தண்ணீர், ஒளிமற்றும் சுவையுள்ளவை (மரங்கள், மூலிகைகள், செடிகள் போன்றவை), கடவுளர்களின் அமுதம், மூவுலகங்கள், உண்மை யில் அனைத்தும் பிரபஞ்சத்தின் ஆன்மாவாக இருக்கின்ற பிரம் மமே உண்மையில் அனைத்தும்."

மறை ஆற்றலுடைய அசையான ஓம், இந்துக்கள் தங்கள் வாயால் கூறும் அனைத்திலும் புனிதமானது. இது பற்றி மொனியர் வில்லியம்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:- "அ, உ, ம் என்ற மூன்று எழுத்துகளாலான ஓம் - ஒரே பரப் பிரம்மத் தின் மூன்று வகைத் தோற்றங்களான பிரம்மா, விட்டுணு, சிவன் ஆகியவர்களைக் குறிப்பதால் சந்தி செய்யும்போது இடைவிடாது உச்சரிக்கப்படுகிறது. இந்த வாழ்த்தானது வேதங்களில் கூறப்பட்டுள்ள அனைத்திலும் மிகப் புனித மானது. கிறித்தவர்களின் இறைவனுக்கான வாழ்த்தினைப் (Lord's Prayer) போலவும், முகமதியர்களின் பாதிஹ்ஹ (Fatihah) அல்லது குரானின் முதல் அத்தியாயத்தைப் போலவும் இந்துக்களின் வழிபாட்டில் எல்லா வாழ்த்துக்களை விடவும் முதலிடம் பெறுவதற்குரியது."

வழிபாடாற்றுபவன் அடுத்துப் பின்வருமாறு கூறிக் காயத்திரி தேவதாக்களை வணங்கி வழிபட்டு அழைப்பான்:- "நம் எல்லா விருப்பங்களையும் நிறைவு செய்கின்ற காயத்திரி தேவதாவாகிய தெய்வப் பெண் என்றுமுள இறைவனை நமக்கு உணர்த்த வருவாளாக, எல்லா வேதங்களுக்கும் தாயான காயத்திரி, என்றும் நிலைத்ததான மெய்யுணர்வுகளை நமக்கு விளங்கச் செய்யட்டும். ஓ! காயத்திரி, நீயே ஆன்ம பலம் அனைத் திற்கும் மூலமாகத் திகழ்கின்றாய். என் பகைவர்களாகிய தீய

மனப்போக்குகளைத் தூர விரட்டும் சக்தி நீயே. நீ உறுதியான மனத்தைத் தந்து அதன் வழி உறுதியான உடலையும் தருகின்றாய். என் அறியாமை இருளை விரட்டுகின்ற கடவுளர்களின் ஒளி நீயே. நீயே என் இதயத்தில் தெய்வீக ஞான ஒளியினை ஒளிரச் செய்கின்றாய். நீயே எல்லாம். இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும், நிறைந்திருக்கின்ற நீ அன்றி வேறேதும் இல்லை. எல்லாப் பாவங்களையும் அழிக்கும் நிலைத்த உண்மை நீயே. அறிய முடியாததை எனக்கு அறிவித்த பிரணவம் நீயே. என் உதவிககு வருவாயாக. ஓ! காயத்திரி தேவி, என்னை அறிவுடையவன் ஆக்கு.'' இவ்வாறு காயத்திரியை அழைத்த பின் காயத்திரியை 108 அல்லது 128 முறை திரும்பத் திரும்பக் கூற வேண்டும். வழிபாடு செய்பவன் அடுத்துப் பின்வருமாறு கூறுவான்:- ''காயத்திரி தேவியானவள் பூமியில் நிலைத்துள்ள மேரு மலையின் மிக உயர்ந்த சிகரத்தில் வீற்றிருக்கின்றாள். ஓ! தெய்வப் பெண்ணே. உன்னை வணங்கி உன் அருளைப் பெற்றுள்ள பிராமணர்களிடம் விடைபெற்று உன் இருப்பிடத்தினை நலத்துடன் சென்று அடைவாயாக.'' சந்தி வழிபாடு காலையில் கிழக்கே உதிக்கும் சூரியனை நோக்கிச் சொல்லப்படும் பின்வரும் வாழ்த்தோடு நிறைவுறும்:- ''நாங்கள் போற்றத்தக்க புகழுடைய சூரியனின் புகழைப் பாடுகின்றோம். (மழையினைத் தந்து) அவன் எல்லா உயிர்களையும் இருத்தி வைக்கின்றான். அவன் புகழ் என்றும் அழியாதது; வியந்தபடி பாராட்டிப் புகழ்ந்து போற்றும் தகுதி வாயந்தது. சூரியன் மனிதர்களுடைய மனப் போக்கினைப் புரிந்து கொண்டவனாக அவர்களையெல்லாம் அவர்களுடைய பணிகளில் நிலைப்படுத்துகிறான. சூரியனே விண்ணையும, மண்ணையும் தாங்கி நிறுத்துகினறான். கண் இமைக்காது உலகதது உயிர்கள் அனைத்தையும், அவற்றின் செயல்களையும பார்ததபடி உள்ளான். அத்தகைய என்றும் உள்ள அவனுக்கு நாங்கள் நெய்யுடன் கலந்த எங்கள் பலியினைத் தருகின்றோம. ஓ! சூரியனே, எவன தனனுடைய தியாகத்தால் உனக்கு இத்தகைய பலியைத் தருகினறானோ. அவன் வளமும், செல்வமும் சிறக்கப் பெறட்டும். உன்னுடைய பாதுகாவலின் கீழ் வாழும் ஒருவன் எதிர்பாராத சாவின் வாயில் விழமாட்டான். அவனை யாராலும் அழிக்க இயலாது.

பாவங்கள் இங்கும் எங்கும் அவனைப் பற்றா.'' மாலையில் வருணனுக்கான பின்வரும் வாழ்த்து இதற்குப் பதிலாகக் கூறப்படும்:- ''ஓ! வருணா, என் இந்த வாழ்த்தைக் கேட்பாயாக. இன்று என்னிடம் அருளுடையவனாக இருப்பாயாக. உன் பாதுகாவலை வேண்டி நான் உன்னை நோக்கி அழுகின்றேன். உன்னை வாழ்த்திப் பாராட்டி நான் நீண்ட ஆயுளை வேண்டுகிறேன். உனக்குப் பலியினைத் தரும் தியாகியும் உன்னிடம் இதனையே வேண்டுகின்றான். ஆகையால் ஓ! வருணனே இதில் புறக்கணிப்பு ஏதும் காட்டாமல் என் வாழ்த்துக்களை உன் திருச்செவியில் ஏற்பாயாக. எங்கள் வாழ்வைப் பாதியில் வெட்டி அறுத்து விடாதே. ஓ! வருணனே, நாங்கள் நாளும் நாளும் உன்னுடைய விதிகளுக்குப் புறம்பாக நடந்தவைகளையெல்லாம் பொருட்படுத்தாது எங்கள் அத்து மீறல்களை மன்னிப்பாயாக. ஓ! வருணனே, தெய்வத் தன்மை வாய்ந்தவர்களிடம் மனிதராகிய நாங்கள் எத்தகைய குற்றம் இழைத்திருப்பினும் அறியாமையால் உனக்குச் செய்யவேண்டிய எத்தகைய பணிகளைப் புறக்கணித்திருந்தாலும் அந்தப் பாவங்களுக்காக எங்களை அழித்துவிடாதே. எங்கள் மீது எங்கள் பகைவர்கள் எத்தகைய பாவத்தைச் சுமத்தினாலும், காய் உருட்டும் சூதாடிகளைப் போல் நாங்கள் உண்மையில் எத்தகைய பாவங்கள் புரிந்திருப்பினும், நாங்கள் அறியாது எதனைச் செய்திருப்பினும், நீ அருள் கூர்ந்து அப்பாவங்களையெல்லாம் சிதறச் செயவ்ாய். அதனபின், ஓ! இறைவா, நாங்கள் உனக்கு அன்பர்களாவோம்.'' சந்தி வாழ்த்து அபிவாதன அல்லது போற்றுதலோடு முடிவுறும். இது மனம் தொடர்பான பகுதியில் முன்பே தரப்பட்டுள்ளது. காலைச்சந்தி வழிபாட்டுக்குப் பின் பிரம்ம யக்ஞம் எனப்படும் பரம் பொருள் வழிபாட்டினைப் புனித நூல்களில் கூறியுள்ளபடி செய்தல் வேண்டும். ரிக் வேதத்தின் முதல் பாகரம் விரிவாக ஒப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து யசுர், சாம, அதர்வண வேதங்களின் முதல் வார்த்தைகளும், நிருக்ட முதலியனவும் கூறப்படும்.

அடுத்துச் செய்தற்குரிய சடங்கு தர்ப்பணம் எனப்படும் தேவதாக்கள், முனிவர்கள், பித்ருக்களுக்குத் தண்ணீர் அளிப்ப

தாகும். பூணூலை இடத் தோளிலும் வலக் கையின் கீழும் இருக்கும்படியாக (உபவீத) அணிந்தபடி, தண்ணீரை வலக் கையில் எடுத்துத் தேவதைகளுக்காக விட வேண்டும். பின் பூணூலைக் கழுத்தணி போல் (நிவிதியாக) கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு வழிபடுவர் முனிவர்களுக்குத் தண்ணீர் விடு வார். இறுதியில் பூணூல் வலத் தோளில் (பிராசினா விதி) இருக்கப் பித்ருக்களுக்கு நீர் வார்க்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட எல்லாச் சடங்குகளும் ஒரு குடும் பத்தில் உள்ள எல்லா ஆண்களாலும் செய்யப்படவேண்டும். நாள்தோறும் செய்வதற்குரிய தேவதார்ச்சன எனப்படும் தேவதை பூசை மட்டும் குடும்பத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு உறுப்பினர் மட்டுமே செய்தற்குரியது. பக்தியுள்ள பிரா மணர்கள் சிவன், விட்டுணு ஆகிய இருவரையும் வழிபடுவர், அத்தெய்வங்களின் துணைவியரான பார்வதி, இலட்சுமி ஆகி யோரையும் வழிபடுவர். அவர்களுக்கு உருவங்கள், சாலக்ராமக் கற்கள், கல்லால் ஆன இலிங்கங்கள் ஆகியவற்றை வைத்து வழிபாட்டினை நடத்தலாம். பிராமணனுடைய இல்லத்தின ஒருமூலையோ தனி அறையோ கடவுள் வழிபாட்டிற்கென ஒதுக்கப்படும். சில குடும்பங்கள் தங்கள் தெய்வங்களை அல மாரியில் வைத்திருப்பர்.

ஸ்மார்த்தர்கள் தங்கள் குடும்ப வழிபாட்டில் கீழ்க்கண்டுள்ள வாறு ஐந்து கற்களைப் பயன்படுத்துகின்றனர்.

1. சாலக்ராமம் - விட்டுணுவின் மறு உருவாக இருப்பது.
2. பாண இலிங்கம் - சிவனின் சாரத்தைத் தாங்கிய வெள்ளைக்கல்.
3. சிவப்புக்கல் (ஜெஸ்பர்) - கணபதியின் மறு உருவாக இருப்பது.
4. தாதோடு கூடிய மண் சிறிது - பார்வதியின் மறு உரு வாக அல்லது சிவனையும் பார்வதியையும் குறிக்கும் இலிங்கம்.
5. ஒரு கூழாங்கல் அல்லது கண்ணாடிக்கல் - சூரியனாகப் பாவிக்கப்படுவது.

ஸ்மார்த்தர்கள் தங்கள் வழிபாட்டினைக் கணேசரை அழைத்துக் காக்கும்படியாக வேண்டிப் பின் தொடங்குவர். அடுத்து ஓர் நீர் நிறைந்த பாத்திரத்தினை வைத்துப் பின்வரும் வாழ்த்தினைக் கூறுவர்:- '' நீர் நிறைந்த இப் பாத்திரத்தின் வாயில் விட்டுணு தங்கியுள்ளார். இதன் அடியில் பிரமன் வதிகின்றான். எல்லாத் தாய்த் தெய்வங்களும் இதன் நடுவில் உறைகின்றன. ஓ! கங்கா, யமுனா, கோதாவரி, சரசுவதி, நர்மதா, சிந்து, காவேரி ஆகிய ஆறுகளே இந்தத் தண்ணீரில் வந்து எழுந்தருளுங்கள்.'' அதன்பின் சங்கினைப் பின்வருமாறு வழுத்துவார்:- ''ஓ! சங்கே, நீ கடலில் பிறந்தாய். விட்டுணுவால் கரத்தால் தாங்கப் படுகிறாய். நீ எல்லாத் தெய்வங்களாலும் வழிபடப்படுகிறாய். என் வந்தனையை ஏற்றுக்கொள்.'' அடுத்து மணியினைப் பினவருமாறு துதிப்பார்:-'' ஓ! மணியே, கடவுளரின் வருகைக்காக ஒலிப்பாயாக. உன் ஒலிகேட்டுப் பிசாசுகள் ஓடட்டும். கண்டா (மணி) என்ற கடவுளுக்கு என் வணக்கம். நான் நறுமணப் பொருள்கள், அரிசி, பூ ஆகியவற்றை மணிக்குச் செலுத்துவதற்கு உரிய வந்தனத்தோடு செலுத்துகின்றேன்.'' இவ்வாறு கூறி வழிபடுவர் தன் கைகளைத் தட்டியபின் மணியினை ஒலிப்பார். முன் தினம் வழிபாட்டின் போது இடப்பட்ட துளசி இலைகள், மலர்கள், சந்தனம் ஆகியன நீக்கப்பெறும். ''இந்து சமயத்தில் துளசி மிகவும் புனிதமான செடியாகக் கருதப்படுகிறது. இந்தியா முழுவதும் ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் இதன் காரணமாகத் துளசி வளர்க்கப்படுகின்றது. அதனை வளர்ப்பவர்களுக்கு வரும் இடர்களிலிருந்து அது அவர்களைக் காப்பதோடு, மேல் உலகிற்குச் செல்லவும் வழிகாட்டுகிறது என்று இந்து சமயக் கவிஞர்கள் அதனைப் பற்றிக் கூறியுள்ளனர். பிராமணர்கள் அதனை விட்டுணுவிற்கும் கிருட்டிணனுக்கும் உரிய புனிதப் பொருளாகக் கருதுகின்றனர். கிருட்டிணனுடைய மனத்திற்கினியளான துளசி என்பவளின் மறு உருவமே இது எனக் கதை வழங்குகின்றது. இதற்காகவே ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் பானையிலோ மேலே குழியினையுடைய பிருந்தாவனம் எனப்படும் துளசி மாடத்திலோ இது வளர்க்கப்படுகின்றது. நாளும்



கண்திருஷ்டி படுவதைத் தடுப்பதற்கான கைவிரல்
அடையாளங்களோடு கூடிய பிராமணன் இல்லம்



உடுபி மடத்தில் விறகுப்போர்

இதற்கு நீர்வார்த்துக் குடும்பத்தினர் எல்லோரும் இதனை வழிபடுவர். நல்ல சூழல் இருக்குமாயின் இது ஓரளவு பெரிதாக வளர்ந்து இந்துக்கள் கழுத்தில் அணியும் மணிமாலைகள் செய்ய ஏற்ற கட்டையினையும் தருகின்றது. இம் மணிமாலையை வைத்தே அவர்கள் தாங்கள் வழிபடும் தெய்வத்தின் நாமத்தை உச்சரித்த எண்ணிக்கைகளைக் கணக்கிடுவர்.''* பதினேழாம் நூற்றாண்டில் வின்செென்ஜொ மரியா† இது பற்றிக் கூறியுள்ளதாவது:- "எல்லா இந்துக்களும் நம்முடைய பசிலிகொஜெண்டைல் செடியினைப் போன்றதொரு செடியினை வழிபடுகின்றனர். ஆனால் அது அதிக வெறுப்பூட்டும் மணம் தருவதாக உள்ளது.......... ஒவ்வொருவரும் தங்கள் வீட்டின் முன் ஒரு மேடையினை இட்டு அதற்கு நல்ல உயரமான சுவரெழுப்பி, அதன் நடுவே சிறு மண்டபம் போன்ற அமைப்பினை உருவாக்கி, அதில் இச்செடியை வளர்க்கின்றனர். நாள்தோறும அவர்கள் தங்கள் வழிபாட்டுப் பாடல்களை அதனமுன் ஒப்பித்துக் கீழே விழுந்து வணங்கித் தண்ணீர் முதலியன தெளிக்கின்றனர். இதனைக் குளிக்கும் இடங்களிலும், கோயில்களைச் சார்ந்த பூந்தோட்டங்களிலும் மிகுதியாக வளர்க்கின்றனர்.'' துளசியைப் பற்றியதாக வழங்கும் கதை பத்ம புராணத்துள் கூறப்பட்டுள்ளது.‡ சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வெளிவந்த மின்னல் கடலில் சென்று கலந்தபோது அச்சேர்க்கையில் ஒரு சிறுவன் பிறந்தான், பிரமதேவன் அவனைப் பிடித்து சலந்தர் எனப் பெயரிட்டதோடு சிவனைத் தவிர வேறு யாருடைய கையாலும் அவனுக்கு அழிவில்லை என்ற வரத்தையும் கொடுத்தான். சலந்தரன் வலிமை வாய்ந்தவனாக, நெடிது வளர்ந்து, உலகில் உள்ள எல்லா அரசர்களையும் வென்று, உரிய பருவம் வந்ததும் கல்னெமி என்ற அரக்கனின் மகளான பிருந்தா (அல்லது

---

* வாட், இந்தியப் பொருள்களின் விவர அகராதி, (Watt, Dict. Economic Products of India.)

† Viaggio all Indian Orientali, 1672.

‡ பார்க்க: துளசிச் செடி பற்றிய குறிப்பு, பம்பாய் மானிடவியல் சங்க இதழ் தொகுதி-8, பகுதி-1, 1907. (*See:* Note on the Tsiul Plant, Journ, Anthrop. Soc. Bombay, VIII, I, 1907.)

விருந்தா) என்பவளையும் மணந்துகொண்டான். பிரம்ம தேவனின் மகனான நாரதமுனி சிவனிடம் சென்று அவருக்குச் சலந்தர் மேல் வெறுப்பு உண்டாகும்படியாகக் கோள் மூட்டினார். சிவனும் சலந்தரும் கைலாச மலைச் சரிவுகளில் போரிட்டனர். சிவனாலும் சலந்தரை வெல்ல இயலவில்லை. சலந்தரன் மனைவி கற்புடையவளாயிருக்கும்வரை சிவனாலும் அவனை வெல்ல இயலாது என்பதால் விட்டுணு அவளோடும், அவள் கணவனோடும் வாழ்ந்து அவர்கள் இரகசியத்தை அறிந்து அவளுடைய வீழ்ச்சிக்கு வழி கண்டார். ஒரு நாள் சலந்தரைப் பிரிந்த துயரால் வருந்திய அவள் தன் தோட்டத்தைவிட்டு அப்பால் உள்ள வெட்டவெளியில் நடந்து சென்றபோது, இரு அரக்கர்கள் அவளைக் கண்டு துரத்தத் தொடங்கினர். அந்த அரக்கர்கள் துரத்தி வர அஞ்சி ஓடிய அவள் ஒரு முனிவரை எதிர்ப்பட்டு அவர் காலடியில் விழுந்து தனக்கு அபயம் தரும்படி வேண்டினாள். அந்த முனிவர் தன் தவ வலிமையால் அந்த அரக்கர்களை எரித்துச் சாம்பலாக்கினார். பிருந்தா அவரிடம் தன் கணவனைப் பற்றிய செய்தியினைக் கேட்டாள். உடனே, இரண்டு மனிதக் குரங்குகள் அவள் முன் சலந்தரனது தலை, கரங்கள், பாதங்கள் ஆகியவற்றைக் கொண்டு போட்டன. பிருந்தா அவன் இறந்துவிட்டான் எனக்கருதி மீண்டும் அவனுக்கு உயிர்தரும்படி அந்த முனிவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அந்த முனிவர் தன்னால் இயன்றதைச் செய்வதாகக் கூறினார். வினாடியில் அந்த முனிவரும் சலந்தரின் பிணமும் மாயமாய் மறைந்துவிட சலந்தரன் அவள் முன் நின்றான். அவள் உடனே அவன் கரங்களில் அகப்பட அவர்கள் இருவரும் ஒருவர் அணைப்பில் ஒருவர் மகிழ்ந்தனர். சில நாள்களுக்குப்பின், அவள் தன்னோடு வாழ்ந்து கொண்டிருப்பவன் அவள் கணவன் அல்லன் என்றும், அவன் தன் கணவன் உருவத்தில் வந்துள்ள விட்டுணு என்றும் தெரிந்துகொண்டாள். அவள் விட்டுணுவை அவருடைய பின் வரப் போகின்ற அவதாரத்தில் அவருடைய மனைவியை முன்பு தன்னை அச்சுறுத்தித் துரத்திய இரு அரக்கர்களும் தூக்கிச் செல்வார்கள் என்றும், அவர் அப்போது அவளை மீட்க, சலந்தரின் தலை, அடிகள், கைகள் ஆகியவற்றைக் கொண்டு வந்த குரங்குகளின உதவியை

நாடித் திரிய வேண்டும் என்றும் சபித்துவிட்டு எரியும் நெருப்பில் விழுந்து உயிர் துறந்தாள். பிருந்தா தன் கற்பினை இழந்த காரணத்தால் சலந்தரனும் சிவனுடைய இடியேறு போன்ற தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழந்தான். அதன்பின் கடவுளர்கள் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டுச் சிவனுக்கு மாலை அணி வித்தனர். அரக்கர்கள் நரகத்திற்குத் துரத்தப்பட்டனர். உலகில் மக்கள் மீண்டும் கடவுளர்களின் ஆட்சிக்குக் கீழ் வந்தனர். ஆனால் விட்டுணு மட்டும் பிருந்தாவின் அரண்மனையிலிருந்து திரும்பவில்லை. அவரைத் தேடிச் சென்றவர்கள் பிருந்தா இறந்ததனால் துக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அவர்,அவளுடைய சாம் பலிலே விழுந்து புரண்டு கொண்டிருக்கக் கண்டனர். பிருந்தா வின் அழகினை மதிப்பிழக்கச் செய்கின்ற வகையில் பார்வதி அவளுடைய சாம்பலில் மூன்று விதைகளை ஊன்றினாள். அவை மூன்றும் முளைத்து வளர்ந்து துளசி, அவலி, மாலதிச் செடிக ளாக வளர்ந்தன. அவை வளர வளர, விட்டுணு பிருந்தாவின் மேல் வைத்த மயக்கம் தெளியலானார். ஆகவே, அவர் அச் செடிகளை மிகவும் விரும்பினார். அவற்றுள் துளசிச் செடி பிருந்தாவையே உரித்து வைத்திருப்பது போல் அழகாகக் காட்சி தருவதாகக் கூறி அதனிடம் மிகுந்த அன்பு செலுத்தலானார். விட்டுணுவின் ஏழாவது அவதாரத்தில் பிருந்தாவை அச்சுறுத் திய அரக்கர்கள் இராவணனாகவும், அவன் தம்பி கும்பகர்ணனா கவும் பிறந்து சீதையை இலங்கைக்குத் தூக்கிச் சென்றனர். அவளை மீட்க இராமன் சலந்தரின் தலை முதலியவற்றைக் கொண்டு வந்த குரங்குகளின் அவதாரமான அனுமனுடையவும், அவனைச் சார்ந்த வீரர்களுடையவும் உதவியை நாட வேண்டிய தாயிற்று. ஆனால் விட்டுணுவின் எட்டாவது கிருட்டின அவதாரத்தில் இத்துளசிச் செடி இராதாவின் உருவில் வந்து துவாரகையின் வீரனும் மகிழ்ச்சியில் திளைப்பவனும் ஆகிய கண்ணனை மணந்து கொண்டது.

வழிபாட்டின்போது செய்யப்படும் சோடசொபசாரம் எனப்படும் பதினாறு வழிபாடுகளும் கீழ்க்காணும் வரிசை முறைப்படி செய்யப்படுகின்றன:-

1. ஆவஹனம் அல்லது தெய்வங்களை அழைத்து எழுந்தருளச் செய்தல்.

2. ஆசனம் அல்லது இருக்கை அளித்தல்.

3. பாத்யா அல்லது அடிகளை அலம்பத் தண்ணீர் விடல்.

4. அர்க்கியம் அல்லது தண்ணீரோ அரிசியோ பலியாகத் தரப்படல்.

5. ஆசமனம் அல்லது பருக நீர் தரல்.

6. ஸ்நானம் அல்லது குளிக்கச் செய்தல்.

7. வஸ்திரம் அல்லது துளசி இலைகளை ஆடையாக்கல்.

8. உபவஸ்திரம் அல்லது துளசி இலைகளை மேலாடையாக்கல்.

9. கந்தம் அல்லது சந்தனம் பூசுதல்.

10. புஷ்பம் அல்லது மலர்மாலை அணிவித்தல்.

11. 12. தூபமும் தீபமும் அல்லது நறும்புகையும் நல்லொளியும் காட்டல்.

13. நைவேத்தியம் அல்லது அமுது படைத்தல்.

14. பிரதட்சணம் அல்லது சுற்றிவருதல்.

15. மந்திர புஷ்பம் அல்லது மலரால் அர்ச்சனை செய்தல்.

16. நமஸ்காரம் அல்லது விழுந்து வணங்குதல்.

மேலே கூறிய ஐந்து கற்களையும் சங்கினால் நீர் ஊற்றிக் குளிப்பாட்டும்போது புருட சூக்தம் அல்லது ரிக் வேதப் பக்திப் பாடல்கள் ஓதப்படும். அது பின்வருமாறு செல்லும் இயல்புடையது:- "புருடனுக்குப் பல்லாயிரம் தலைகள் உள்ளன. பல்லாயிரம் கைகள் உள்ளன. பல்லாயிரம் கண்கள் உள்ளன. பல்லாயிரம் பாதங்கள் உள்ளன. உலகை எல்லாப் பக்கங்களிலும் தழுவியபடி உள்ள அவன் இந்தப் பத்து விரல்களிலும்

எழுந்தருளியுள்ளான். புருடனே முழுமையான இந்தப் பிரபஞ்சமாக விளங்குகின்றான். எல்லாமாயிருந்தவனும் எல்லாமாயிருக்கப் போகின்றவனும் அவனே. அவனே அழியாத் தன்மைக்கும் இறைவனாக உள்ளான். ஏனெனில் உணவால் அவன் விரிவடைகின்றான். இதுவே அவனது பெருமையாகும். இப்பெருமைக்கும் பெரியவன் புருடன். உலகில் நிலவும் அனைத்தும் அவனில் கால்பங்கு அளவினவே. ஆகாயத்தில் என்றும் அழியாதவைகளாக உள்ளனவே அவனில் எஞ்சிய முக்கால் பங்காக உள்ளன. அம் முக்கால் பங்கினோடும் புருடன் மேலே எழுந்தருளியுள்ளான். அவனில் கால் பங்கும் கீழே தோற்றுவிக்கப்படுகிறது. அவன் அதன்பின் எங்கும் உள்ள உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் யாவற்றிலும் கலந்தவன் ஆனான். அவனிடமிருந்து விராட்டும், விராட்டிலிருந்து அவனும் பிறந்தனர். பிறந்தவுடன் அவன் பூமியைக் கடந்தவனாக முன்னும் பின்னும் வளர்ந்தான். கடவுளர்கள் புருடனைப் பலியாகக் கொடுத்த போது, இளவேனில் அப்பலிக்கு நெய்யாக அமைந்தது; கோடை எரியும் நெருப்பானது; கார் பலி நீரானது. பலிதரப்பட்டவனான இந்தப் புருடன் முதலில் பிறந்தான். அவனை அவர்கள் பலிக்குரிய புல்லில் அமர்த்தினர். கடவுளர்களும், சத்தியர்களும், முனிவர்களும் அதனை அவனோடு பலியாகத் தந்தனர். இந்த உலகளாவிய பலியில் இருந்துதான் தயிரும், நெய்யும் தோற்றுவிக்கப்பட்டன. புருடனாகிய அவன் வாயுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கத் தக்கனவான வீட்டு விலங்குகளையும் காட்டு விலங்குகளையும் படைத்தான். அந்த உலகளாவிய பலியிலிருந்தே ரிக், சாமன், மெத்ரெக்கள், யசுர் எனப்படும் தோத்திரங்கள் தோற்றம் கொண்டன. அதிலிருந்தே குதிரைகளும், இரண்டு வரிசைப் பற்களுடைய அனைத்து விலங்குகளும், பசுக்களும், ஆடுகளும், மறிகளும் தோற்றுவிக்கப்பட்டன. புருடனை அவர்கள் பங்கிட்டபோது எத்தனைப் பகுதிகளாக அவனை வழங்கினர்? அவன் வாய் எது? அவன் கைகள் எவை? எவை அவன் தொடைகளாகவும், பாதங்களாகவும் கூறப்பட்டன? பிராமணனே அவனுடைய வாய்; இராஜன்ய அவனுடைய கரங்களானான்; வைசியன் அவனுடைய தொடைகள்; சூத்திரன் அவனுடைய பாதங்களிலிருந்து

வெளிப்பட்டான். அவன் ஆன்மாவிலிருந்து நிலவும், கண்களி லிருந்து கதிரவனும், வாயிலிருந்து இந்திரனும், நெருப்பும், மூச்சிலிருந்து வாயுவும் தோற்றுவிக்கப்பட்டார்கள். அவன் கொப்பூழிலிருந்து வெளி பிறந்தது. அவன் தலையிலிருந்து ஆகாயம் எழுந்தது. அவன் அடிகளிலிருந்து பூமி பிறந்தது. அவன் காதுகளிலிருந்து நாற்றிசைகளும் ஏற்பட்டன, இப்படியாக அவை உலகங்களாக உருக்கொண்டன. கடவுளர்கள் தங்கள் பலியின் போது புருடனை ஒரு பலியுயிராய்க் கட்டியிட்ட போது, ஏழு மரத்துண்டுகள் அவனைச் சுற்றிலும் நெருப்புக் காக வைக்கப்பட்டன. அந்த மரத்துண்டுகளைக் காட்டி லும் மும்மடங்கு எரிபொருள் பயன்படுத்தப்பட்டது. பலியிட்ட போதுதெய்வங்கள் பலியையே வணங்கின. இவையே முதலாவ தான சடங்குகள். இந்தப் பெரும் உயிர்கள் தொன்மையான சாத்தியாக்கள் வாழும் வீட்டுலகை அடைந்தன."

பிரமசரணம் பிரிவினைச் சேர்ந்த ஸ்மார்த்தர்கள் மற்றத் தமிழ் பேசும் பிராமணர்களை விட மிகுந்த சைவப் பற்றுடை யவர்களாக உள்ளனர். வழிபாட்டின்போது இவர்கள் கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து கொள்ளுவதோடு அதனாலான ஒரு இலிங்கத்தையும் தங்கள் தலையில் வைத்துக் கொள்கின்றனர். உருத்திராட்சம் தோன்றிய வரலாறு பற்றிப் பின்வரும் கதை வழங்குகின்றது. சிவன் அல்லது காலாக்கினி உருத்திரன் திரிபுர சம்காரத்தில் ஈடுபட்டபொழுது தன் மூன்றாவதான நெற்றிக் கண்ணை விழித்ததால் அசுரர்கள் எடுத்திருந்த வடிவான அம் முப்புரங்களும் எரிந்தன. அந்தக் கண்ணிலிருந்து ஒரு திரவம் பூமியில் வடிந்தது. அதிலிருந்து முளைத்து வந்ததே உருத்தி ராட்சமரம். உருத்திராட்சம் என்ற பெயரைச் சொல்லுவதே பத்துப் பசுக்களைப் பிராமணர்களுக்குத் தானம் செய்ததற்குச் சமமான புண்ணியத்தைத் தரவல்லது. உருத்திராட்சத்தின் மதிப்பு அதிலிருக்கும் பட்டைகளின் (முகங்கள் என்று சொல்லு வார்கள்) எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடும். அது பொதுவாக ஐந்து பட்டைகளைக் கொண்டதாகவே இருக்கும். ஆறுபட்டைகளைக் கொண்டவை மிகச் சிறந்தவையாகக் கருதப் படுகின்றன. இரண்டு முகங்களைக் கொண்ட கௌரி சங்கர் என அழைக்கப்படும் உருத்திராட்சம் தனி மதிப்பு வாய்ந்தது.

தீட்சிதர் பிராமணர்களும் பண்டார சந்நிதிகளாக உயர்ந்த பதவியை எட்டியவர்களும் தங்கத்திடையே பதிக்கப்பட்ட இரண்டு முகமுடைய உருத்திராட்சத்தை அணிவர். உருத்திராட் சோபநிஷத் எனப் பெயர் பெற்ற ஏட்டில் நல்ல உருத்திராட் சத்தைத் தண்ணீரில் உறைத்தால் அது அத்தண்ணீரை மஞ்சள் நிறம் உடையதாக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. மாத்துவர்களும் ஸ்மார்த்தர்களைப் போலவே வழிபாடு செய்கின்றனர். ஆனால் அவர்கள் வழிபடும் பொருட்கள் சாலக்ராமக் கல்லும், அனுமன், ஆதிசேஷன் ஆகியோர் உருவங்களுமே ஆகும். ஆதிசேஷன், இலட்சுமி, அனுமான் ஆகியோருக்குப் படைக்கப்படும் உண வினை யாரும் உண்பதில்லை. அதனை எறிந்து விடுகின்றனர். மாத்துவர்கள் தங்கள் ஞான குருவுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகின்றனர். வழிபாடு செய்பவன் முதலில் அவரை வழிபட்டே வழிபாட்டைத் தொடங்குவான். சிலர் தங்கள குருவின் ச்மாதியின் அடையாளமாகச் சாலக்ராமக் கல்லோடு கூடிய பிருந்தாவனத்தை அமைத்து வைத்துள்ளனர். தேவதைகளுக்குப் பூசை செய்து முடித்த பின் அந்தப் பிருந்தாவனத்தையும் வழி படுவர். ஸ்ரீ வைணவர்கள் சாலக்ராமக் கல்லை மட்டுமே வைத்து வீட்டில் வழிபாடு நிகழ்த்துவர். மாத்துவர்களைப் போலவே இவர்களும் தங்கள் ஆச்சாரியரை வழிபடுவதில் மிகக் கருத்தாக இருப்பர். அவருடைய அருளின்றிப் பேரின்பம் அடையமுடியாது என்பது இவர்கள் நம்பிக்கை. ஆகவே ஸ்ரீ வைணவர்கள் சமாஸ் ரண்யம் சடங்கையும் இன்றியமையாதது என வற்புறுத்தவர். சந்தி வழிபாட்டினையும் பிரம்ம யக்ஞத்தையும் செய்து முடித்த பின் இவர்கள் குருவினை வழிபடுவர். சமயப் பற்றுடைய வைணவர்கள் எல்லோரும் தங்கள் ஆச்சாரியரின் திருவடிகள் பதிக்கப் பெற்ற பட்டுத் துணி, சந்தனத்தில் பதிக்கப்பட்ட விட்டுணுவின் அபய ஹஸ்தம் (கை அடையாளம்), பவித்திரம் எனப்படும் சில பட்டு நூல்கள் சேர்த்துக் கட்டிய கழுத்தணி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆழ்வார் திருநகரியில் இருக்கும் புளியமரத்தின் சில பட்டைகள் ஆகியவற்றைத் தங்களு டன் வைத்திருப்பர். வழிபாடு செய்பவன் தன் தலையில் அந்தப் பட்டுத் துணியினைப் போட்டுக்கொண்டு, பவித்திரத்தைக் கழுத்தில் அணிந்து கொள்வதோடு, கிடைக்குமேல் தாமரை

விதைகளாலான கழுத்தணியையும் அணிந்து கொள்வான். அபய ஹஸ்தத்தைத் தன் கண்களில் ஒற்றி வழிபாடு செய்தபின் தன் ஆச்சாரியரைப் போற்றும் வாழ்த்துக்களைக் கூறுவான். அதன் பின் தேவதார்ச்சனை மேற்கொண்டு, முன்பு கூறியுள்ள பதினாறு உபசாரங்களையும் செய்வான். சாலக்ராமக் கல்லைக் குளிப்பாட்டியபின் புருட சூக்தம் சொல்லப்படும்.

நாள்தோறும் செய்யப்படும் வழிபாடு எல்லாத் தேவதைகளுக்கும் பலி கொடுத்த பின் முடிவுறும். இது சமைத்த சோற்றினைப் படைப்பதாகும். சிலர், இவ்வாறு சோறு படைப்பதைச் சோறு சமைக்கும்போது நம்மை அறியாது சிறு உயிர்கள் கொல்லப்பட்டுவிடுவதால வரும் பாவத்தைப் போக்குதற்குரிய பிராயச்சித்தமாகக் கருதுகின்றனர்.

ஆடவர்கள் பெண்களோடு ஒருங்கு அமராமல் தனித்தே உண்பர். ஆல், பலாசு, மந்தாரை ஆகியவற்றின் இலைகளைத் தைத்தோ வாழையிலையையோ சோறு உண்ணும் கலமாகப் பயன்படுத்துவர். ஸ்மார்த்தர்களும், மாத்துவர்களும் முதலில் இலையில் காய்கறிகளைப் பரிமாறுவர். ஸ்ரீவைணவர்கள் – அதிலும் வடகலைப் பிரிவைச் சேர்ந்தவர் - முதலில் சோற்றையே பரிமாறுவர். உண்ணத் தொடங்குமுன் சாலக்ராமக் கல்லைக் குளிப்பாட்டிய தீர்த்தத்தில் கொஞ்சம் உண்பவர்களின் உள்ளங்கைகளில் விடப்படும். உண்பவர்கள் அனைவரும் ஒரு சேர, அமர்தொபஸ்தரநமசி' எனக் கூறியபடி அதனைப் பருகுவர். அதன்பின் சில மந்திரங்களைக் கூறிச் சிலவாய்ச் சோற்றினை விழுங்குவர். அப்போது கூறப்படுபவை:- "பிரணாயஸ்வாஹ, உதயண்யஸ்வாஹ, சோமண்யஸ்வாஹ" முதலியனவாம். உண்டு முடித்தபின் எல்லோருக்கும் தண்ணீர் வழங்கப்படும். அதனை அவர்கள், "அமர்தாபிதாநமசீ" எனக் கூறிப் பருகுவர். பின்னர் அனைவரும் ஒரு சேர எழுவர்.

முன்பு பல முறை குறிக்கப்பட்ட சாலக்ராமக் கல்லினைப் பற்றிய பின்வரும் சுவையான விவரங்களை இங்குக் கொடுக்கலாம் எனக் கருதுகிறேன்:– "சாலக்ராமக் கற்கள் மண்ணில் புதையுண்டு மரபிழந்து போன நத்தைகளின ஓடுகளே. அவை

திட்சிதர் பிரிவுப் பிராமணன்



மாத்வ பிராமணன்

நேபாளத்தில் உள்ள பெரிய மலைகளில் தோன்றி மலைப் பள்ளத்தாக்கின் வழியே ஓடிவந்து சாலக்ராமி என்ற ஊரருகில் கங்கையோடு கலக்கும் கண்டகி ஆற்றுப் படுகைகளிலேயே பெரும்பாலும் காணக்கிடைக்கின்றன. இந்த ஊர் காசிக்கு நெடுந்தொலைவினது என்று கூறமுடியாது. அவை தோற்றத்தில் பளபளக்கும் சிறிய கூழாங் கற்களையே ஒத்திருக்கும். அவை பெரும்பாலும் வட்ட வடிவமாகவோ, நீள் வடிவமாகவோ நடுவில் ஒரு துளையுடன் இருக்கக் காணலாம். அவற்றில் காணப்படும் சில அடையாளங்களைப் பற்றிப் பின்னர் தெரிவிப்பேன். அவற்றினிடையே தங்கம் அல்லது நிமளைப் படிவுகள் இருக்கக் காணலாம். சாலக்ராம என்ற வடமொழிச் சொல் விட்டுணுவின் சக்கராயுதத்தைக் குறிக்கும் சர சக்ர என்ற சொல்லும், கல் எனப் பொருள்படும் க்ரவ என்ற சொல்லும் புணர்ந்து அமைந்த சொல்லாகும். விட்டுணுவின் சக்கரம் இக்கற்களில் மெல்லிய கோடுகளாக வட்டவடிவில் அமைந்திருக்கும். அவை விட்டுணுவின் விருப்பப்படி படைப்புக் கடவுளாகிய பிரம்மனால் அவ்வாறு படைக்கப்பட்டதாக நம்பப் படுகிறது. பிரம்மன் ஒரு புழுவாக மாறி இக்கற்களில் வதனங்கள் எனப்படும் துளைகளை இடுவதோடு, இக் கற்களுக்கு இந்தப் பெயரைத் தரும் சக்கர உருவிலான கோடுகளையும் ஏற்படுத்துகிறான். இக்கோடுகள் அமைவதற்கான காரணம் பற்றி ஒரு விசித்திரமான கதை வழங்குகின்றது. முன்னொரு காலத்தில் தனக்கு ஒப்பாக யாரையும் கூற முடியாத பேரழகியான ஒரு நாட்டிய மங்கை இருந்தாள. அவளுக்குத் தகுதியான துணைவன் எங்கும் அகப்படவிலலை. தன் அழகால் தனக்கு ஏற்பட்ட துயருக்கு வருந்தியவளாக அவள் தூரத்தே உள்ள இமயமலைகளிடையே மறைந்து வாழ்ந்தவளாகத் தன் வாழ்நாள்களை வழிபாட்டில் செலவழித்து வந்தாள். இறுதியாக விட்டுணு அவள் முன் தோன்றி அவளுக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். அவள், அவரிடம், படைப்புக் கடவுளாகிய பிரமன் தன்னை இத்தனை அழகியாகப் படைத்துவிட்டுத் தனக்கு ஏற்ற எல்லா அழகுகளும் நிரம்பப் பெற்ற ஒருவனை ஏன் படைக்கவில்லை எனப் பணிவோடு கேட்டாள். அதன்பின் அவள் விட்டுணுவை நிமிர்ந்து பார்த்துத் தன்னை முத்தம்

இடும்படி வேண்டினாள். அவள் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஒரு நாட்டியக்காரியாக இருந்த காரணத்தால் விட்டுணுவால் அவள் வேண்டுகோளை நிறைவேற்ற இயலவில்லை. எனினும் அவர் தன் ஆற்றலால் அவளை மறுபிறவியில் இமாலயத்தில் கண்டகி என்ற பெயருடைய ஆறாகப் படைப்பதாகவும், தான் அந்த ஆற்றில் என்றும் சாலக்ராமக் கல்லாக அவளைவிட்டு நீங்காது அவளுடைய கணவனாக இருக்கப் போவதாகவும் உறுதி கூறினார். அதன்பின் கண்டகி ஆறு இமயத்தில் தோன்றி ஓடியது. அதில் சாலக்ராமக் கற்கள் காணப்படலாயின. சாலக்ராமக் கல்லினால் விளையும் நன்மை பற்றி மற்றுமொரு பழங்கதை வழங்குகின்றது. சத்திரிய குலத்தைச் சேர்ந்த ஏழைச் சிறுவன் ஒருவன் ஆற்றங்கரையில் விளையாடிக்கொண்டிருந்தபோது ஒரு சாலக்ராமக் கல்லினைக் கண்டெடுத்தான். அவன் தான் அதனைக் கையில் வைத்திருக்கும்போதோ, வாயில் அடக்கியிருக்கும்போதோ, உடன் வைத்திருக்கும்போதோ மிகுந்த அதிர்ஷ்டம் உடையவனாகக் கோலி விளையாட்டிலும் மற்ற விளையாட்டுக்களிலும் தானே வெற்றி பெறுவதை உணர்ந்தான், அவன் தான் ஈடுபட்ட எல்லாச் செயல்களிலும் பெரும் வெற்றி கண்டு இறுதியில் ஓர் அரசனாக உயர்ந்தான். இறுதியில் விட்டுணுவே நேரில் வந்து அவனை ஒரு மேகத்தில் ஏற்றி அழைத்துச் சென்றார். தெய்வத் தன்மையுடையதான கண்டகி ஆறு நேபாள மன்னரின் ஆட்சி எல்லைக்குள்ளேயே உள்ளது. அதன் இரு கரைகளும் நன்கு பாதுகாக்கப்படுவதோடு அதில் இந்தப் புனிதக் கற்கள் மிகுதியும் கண்டெடுக்கப்படும். நான்கு இடங்களிலும் அவ்வாறு கற்கள் எடுக்கும் உரிமை ஏலத்தில் விடப்படுகின்றன. ஏல விதிகள் பலவற்றுள்ளும் முக்கியமானது கண்டெடுக்கப்படுவனவற்றுள் உண்மையான சாலக்ராமக் கற்கள் அரசருக்குத் தரப்பட வேண்டும் என்பதாகும். அவ்வாறு தரப்படுபவை பின்னர் பரிசோதிக்கப்பட்டு உண்மையான கற்களை அரசர் தம்மிடம் வைத்துக்கொண்டு மற்றவற்றை ஏலம் எடுத்தவரிடமே திருப்பி விடுவர். உண்மையான சாலக்ராமக் கற்களைக் கண்டுபிடிப்பதற்கான முதற்சோதனை எளிமையானது. பின்னர் அக் கற்களுக்கு அமைந்திருக்கும் இயற்கைக்கும் மேம்பட்டதான ஆற்றல்கள் கடினமான பரிசோதனைகளின்

மூலம் கணிக்கப்படும். ஒவ்வொரு கல்லும் – பரிசோதனைகளின் மூலம் கணிக்கப்படும் ஒவ்வொரு கல்லும் – கண்டெடுக்கப்பட்டவுடன் அதன் நாற்புறமும் சிறு சுத்தியால் தட்டிப் பார்க்கப் படும். சில சமயங்களில் விரல்களால் தட்டிப் பார்த்தலும் உண்டு. இவ்வாறு செய்தால் புழுதுளைத்தமையால் உண்டான துளையை அடைத்துக்கொண்டிருக்கும் மெல்லிய பொடி உதிர்ந்துவிடத் துளை புலனாகும். மதிப்பு வாய்ந்த சாலக்ராமக் கற்களில் இத் துளைகளைத் தங்கமோ,வேறு அரிய மணிக்கற்களோ அடைத்துக் கொண்டிருக்கும். சக்கரத்தையும் துளையையும் பெற்றுள்ள உண்மையான சாலக்ராம கற்களைப் போல நிறம், அமைப்பு, உருவம் ஆகியவற்றில் தோற்றம் தரும் கறுப்புக் கூழாங்கற்களும் மலைப் பக்கத்து ஆறுகள் பலவற்றிலும் காணப்படுகின்றன. அவை சக்கரமும் துளையும் பெற்றிருப்பதில்லை. பைர ்களும் பண்டாரங்களும் இவற்றைச் சேகரித்துப் போலியான துளைகளை அவற்றில் இடுவதோடு சிலேட்டுக் குச்சியால் பொய்யான சக்கரங்களைப் படியெடுத்து,கூழாங்கற்களில் ஒட்டிவிடுவர்.இந்த ஏமாற்று மிக நுட்பமாகச் செய்யப்படுவதால் அக்கற்களைப் பல ஆண்டுகள் தொடர்ந்து நீராட்டிப் பூசையில் வைத்து வழிபட்டு வந்தபின்னரே அவற்றில் வரையப்பட்டு ஒட்டப்பட்ட சக்கர உருவங்கள் அழிந்து உண்மை வெளிப்படுகின்றது. பதினெட்டு வகையான உண்மையான சாலக்ராமக் கற்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அவற்றின் விலை மதிப்பு அவற்றின் அமைப்பையும் அவற்றின் மீது காணப்படும் அடையாளங் களையும் பொறுத்து வேறுபடும். பல சோதனைகளுக்குப் பின் ஒரு சாலக்ராமத்தினை இலட்சம் உரூவா விலை கொடுத் தாலும்கூடப் பெற முடியாமல் போகலாம். ஒரு கல் அதிர்ஷ்ட மானது என அறியப்பட்டுவிட்டால் எவ்வளவு தொகை கொடுத் தாலும் அதனை வைத்திருப்பவர் அதனை விற்க முன்வர மாட்டார். விலை மதிப்புமிக்க சாலக்ராமங்களின் மூன்று வகை வடிவங்கள் விட்டுணு சாலக்ராமம், இலக்குமி நரசிம்ம சாலக்ராமம், மட்சய மூர்த்தி சாலக்ராமம் என அழைக்கப்படு கின்றன. இவற்றுள் முதலாவதில் சக்கர அமைப்பு மாலை வடிவனதாக இருப்பதோடு சங்கு, கதை, பத்மம் போன்ற விட்டுணுவிற்குரியனவான அடையாளங்களும் பெற்றிருக்கும்.

இரண்டாவதான இலக்குமி நரசிம்ம சாலக்ராமத்தில் துளையின் இடப் பக்கம் இரண்டு சக்கரங்கள் காணப்படுவதோடு புள்ளிகள் அல்லது கறைகள் மேற்பரப்பெங்கும் நிறைந்து காணப்படும். இக் கல்லினை உரிய முறையில் வழிபடுவர்கள் வாழ்வில் வளமும் நீண்ட ஆயுளும் பெறுவர். மட்சயமூர்த்தி எனப்படும் மூன்றாவது கல் மீன் அமைப்பினை உடைய நீண்ட தட்டை வடிவமானது. அதில் இருக்கும் துளை அதற்கு மீனைப் போன்ற பொலிவைத் தரும். அதில் துளையின் உள்ளும் புறமுமாக இரண்டு சக்கரங்கள் காணப்படும். அதன் மேல் அடிபுதை செருப்பு வடிவில் புள்ளிகளும் காணப்படும். இதிலும் நான்கு ஐந்து வகைப்பட்ட கற்கள் உள்ளன. இவையும் முறையாக வழிபடுபவர்களுக்குக் குறையாத செல்வ வளம் தர வல்லன. துளை இல்லாத ஒருவகைச் சாலக்ராமம் உக்ர சாலக்ராமம் என உள்ளது. இது இரண்டு சக்கரங்களோடு வட்ட வடிவமாக இருக்கும். இதனை வைத்துக் கொள்வது ஆபத்தானது. இதனை எரிச்சல்படும் சாலக்ராமம் எனக்கூறுவர். இதனை வைத்திருப் பவர்கள் போதுமான ஆர்வங்காட்டி வழிபடவில்லையாயின் அது அப்புறக்கணிப்பினைப் பொறுத்துக் கொள்ளாது. அதனை வைத்திருப்பவர்களைச் சீரழித்துவிடும். ஒரு சாலக்ராமத்தைப் பெற்றவுடன் முதலில் செய்ய வேண்டியது அது அதிர்ஷ்டக்கல்லா என்பதனைக் கண்டறிய வேண்டும். ஒருவருக்கு அதிர்ஷ்டக் கல்லாக இருப்பது மற்றொருவருக்கு அழிவைத் தரும் கல்லாக அமைந்துவிடலாம். இதற்கான சோதனைகள் பல திறத்தன. பெரும்பாலானவர்கள் மேற்கொள்ளும் சோதனை வருமாறு:- ஒரு சாலக்ராமக் கல்லினை அதற்குச் சமமான எடையுடைய அரிசியோடு ஓர் இரவு முழுவதும் ஒன்றாக வைத்திருந்து, மறுநாள் காலையில் அந்த அரிசியை நிறுத்துப் பார்க்கும்போது அது எடையில் கூடியிருக்குமானால் அது அதிர்ஷ்டக் கல்லாகும். (எனக்குத் தகவல் தந்தவர் சில சமயங்களில் அரிசியினுடைய எடை இரண்டு மடங்காகக் கூட ஆகி விடும் எனக் கூறினார்.) அப்போது அக்கல்லை வைத்திருப்பவர் அதனைத் தனக்கு அதிர்ஷ்டம் தருவதாகக் கருதி எந்த விலைவரினும் விட்டுப் பிரியாது வைத்து வழிபடவேண்டும். இதற்கு மாறாக இரவில் கல்லோடு வைக்கப்பட்ட அரிசியின் அளவு கூடாது அப்படியே

இருந்தாலோ குறைந்துவிட்டிருந்தாலோ அது கேடு வருவதின் அறிகுறியாகும். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அதனை வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். அதனை வாங்க யாரும் முன்வர வில்லை எனினும் அதனை அருகில் உள்ள கோயிலுக்கோ, மடத்துக்கோ அன்பளிப்பாகக் கொடுத்துவிடலாம். மடத்திலிருக்கும் குருக்கள் அத்தெய்வத்தின் கோபத்தை நாளும் பழமும் பூவும் படைத்து எப்படித் தணிப்பது என்பதனை அறிந்தவர்களாவர். வலிமையைக் காட்டியோ ஏமாற்றியோ ஒருவன் பெறும் சாலக்ராமம் என்றும் நல்ல அதிர்ஷ்டத்தைக் கொண்டுவராது. பிராமணன் ஒருவன் முக மதியனான ஓர் இறைச்சி வணிகனிடமிருந்து ஒரு சாலக்ராமக் கல்லைத் திருடியதாகவும், அப்போதிருந்து அவன் தொட்டது எதுவும்துலங்காததால் அச்செயலுக்குப் பின்னர் வருந்தி இரங்கும் படியாக அவன் நொடித்துப் போய்த் தன் வாழ்வை முடித்துக் கொண்டதாகவும் ஒரு கதையுண்டு. வழிபாடு செய்யப்படாமல் சாலக்ராமக் கல்லை வைத்திருப்பது துரதிருஷ்டதையே கொண்டுவரும் என்று இந்துக்கள் நம்புகின்றனர். பிராமணர் களே சாலக்ராமக் கற்களை வழிபாடு செய்ய உரிமை உடை யவர்களாகையால் இந்துக்களைத் தவிர வேறு யாரும் இதனை வைத்துக் கொள்ளமுடியாது. சமய நெறிப்பட்ட பிராமணர்கள் குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு சாலக்ராமக் கற்கள் வரை வைத்திருக்க வேண்டியிருக்கும். இவை முறையாக வழிபாடு செய் யப்பட்டுத் தண்ணீரால் குளிப்பாட்டப்பட்டு, அத்தண்ணீரைத் தீர்த்தமாகக் குடிக்க வேண்டும். சமைத்த உணவும் பிற உணவுப் பண்டங்களும் நாளும் படைக்கப்பட வேண்டும். இதனைச் செய்து வநதால், வாழ்வில் எல்லாத் துறைகளிலும் வேகமாக வளர்ச்சியும் வெற்றியும் வீட்டில் உள்ளவர்கள் வாய்க்கப் பெறுவார்கள். வழிபாட்டில் குறை ஏற்பட்டால் கேடும் இழிவும் அக்குடும்பத்தைச் சீரழிக்கும்.''*

சில கோயில்களில் மூல விக்கிரகங்கள் (கருவறையில் உள்ளவை) சாலக்ராமக் கற்களாலான மாலையால் அலங்கரிக்கப்

* சென்னை மெயில் நாளிதழ், 1906. (Madras Mail, 1906.)

பட்டிருக்கும். உதாரணமாகத் திருப்பதியில் உள்ள கடவுள் அவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கூறலாம்.

யேலும் பர்னலும்* சாலக்ராமக்கல் தொடர்பாகப் பின் வரும் நிகழ்ச்சியினை விவரித்துள்ளனர்:- ''1883-ஆம் ஆண்டு மே மாதத்தில் கல்கத்தாவில் இந்துக்கள் எல்லோரும் பரபரப்பு அடைந்தவர்களாகத் தங்கள் உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படை யாகக் காட்டிக் கொள்ளக் காரணமான சாலக்ராமம் தொடர் பானதொரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு குடும்பத் தகராறு தொடர் பாக உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் குடும்பத் தெய்வ மாக இருந்த ஒரு சாலக்ராமக் கல்லின் அடையாளம் தொடர் பாகப் பிரச்சினை தோன்றியது. இருபக்கத்து வழக்குரைஞர் களும் அந்தக் கல் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். நீதிபதியான திரு மாரீஸ் இது பற்றியதான முழு விவரங்களையும் கேட்டு அறி யும் வரை தன் முடிவைக் கூறத் தயங்கினார். இரு தரப்பினை யும் சேர்ந்த இந்துக்களான வழக்குரைஞர்கள் அவ்வாறு அக் கல்லினைக் கொண்டுவரத் தடையேதும் இல்லை என்றனர். வழக்கு மன்றத்து மொழிபெயர்ப்பாளரான உயர் சாதிப் பிராமணர் வழக்கு மன்றத்தில் நாரால் ஆன தரை விரிப்புப் போடப்பட்டிருப்பதால் அதனை வழக்கு மன்றத்தினுள் கொண்டு வருதல் முறையாகாது எனவும், என்றாலும் அதனை வழக்கு மன்றத்தின் முன்னேயுள்ள நடையில் வைத்து ஆராய எத்தகைய தடையும் இல்லை எனவும் கூறினார். அதுபோலவே அக்கல் அங்குக் கொண்டுவரப்பட்டு ஆராயப்பட்டது. இது இந் தியக் குடிகளுக்கு ஐரோப்பியர்களையும் குற்றவியல் தொடர் பாக விசாரிக்க உரிமை தரும் 'இல்பெர்ட் பில்' (Ilbert Bill) எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியபடி இருந்த சமயத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியாகும். அச் சமயம் 'இல்பெர்ட் பில்' சட்ட வரைவுக்கு எதிர்ப்புக் காட்டுபவர்களின் அணியிலிருந்த நடுவர் திரு மாரீஸ் பற்றி இந்திய இதழ்களில் பல கண்டனங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அது தொடர்பாக வங்காள

---

* ஹாப்சன் – ஜாப்சன். (Hobson - Jobson.)

மொழி நாளிதழ் ஒன்றின் ஆசிரியரும், நன்கு கற்றவரும், முன்பு மதிப்பிற்குரியதான ஆட்சித்துறை அதிகாரியும், கொஞ்சமும் கண்ணோட்டமின்றி கிளர்ச்சியூட்டும் வகையில் கண்டனக் கட்டுரைகள் எழுதியவருமான ஒருவருக்கு வழக்கு மன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக வழக்கு மன்றத்திற்கு வரும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவர் வழக்கு மன்றத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதோடு தன் போக்கில் பின் வாங்கினார் என்றாலும், இரண்டு மாதம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டார்.''

சடங்குகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக முன்பு கூறப் பட்ட புனிதச் சங்கானது காஸ்ட்ரொபாட் இப்பி (*Turbinella rapa*) என்ற கடல் நத்தை வகையின் மேலோடாகும். தென இந்தியாவில் தூத்துக்குடிக்கு அருகே முததுக் குளிக்கப் படும் கடலைச் சார்ந்த பகுதிகளிலிருந்து கடலில் மூழ்கு பவர்களால் கடலிலிருந்து இவை எடுக்கப்படுகின்றன. எருதுகளின் முகத்திலும் கழுத்திலும் கட்டித் தொங்க விடப் பட்டிருக்கும் அச்சங்கு வகையினையே இந்துக்கள் பூசைகளில் குளிப்பாட்டப் பயனபடுத்துகின்றனர். கோயில்களில் இன்னிசை முழக்கவும் பயன்படுத்தப்படும் இதனை அறுத்து தோள்வளை, கைவளை முதலிய அணிகளையும செய்கின்றனர். பதினாறாம் நூற்றாண்டில் கார்சிய (*Garcia*) இதுபற்றி எழுதியிருப்ப தாவது:- ''இச் சங்கு வங்காளத்து வணிகப் பொருள்களில் ஒன்றாகும். முன்பு இது இப்போதிருப்பதை விடவும் மிகுந்த இலாபம் தந்து வந்தது. ...... வங்காளத்தில் நல்ல உயர்குடிப் பிறந்த எந்தக் கன்னியினையும் அவள் கையில் சங்கு வளையல் அணிவிக்காமல் ஒருவன் தன் வசப்படுத்திக் கொள்ள இயலாது என்ற பழக்கம் இருந்து வந்தது. பட்டாணியர்களின் வருகைக் குப் பின் இப்பழககம் மிகக் குறைந்து வருகின்றது.'' காப்டன் சி.ஆர்.டே. எழுதுவதாவது:-* ''சங்கு இசைக் கருவியாக இடம் பெற்றிருப்பதோடு ஒவ்வொரு கோயிலிலும் காணப்படுகிறது.

---

* தென்னிந்திய, தக்காண இசையும் இசைக் கருவிகளும், *1891*. (Music and Musical Instruments of Southern India and the Deccam, 1891.)

சமயச் சடங்குகளின்போதும், தெய்வங்கள் ஊர்வலங்களாக வரும்போது அவற்றின் முன்னும் சங்கு முழக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் தாசரிகள் எனப்படும் கோயில் பணியாளர்கள் சங்கினை ஊதும் சமயப்பணியை மேற்கொண்டு உள்ளனர். சங்கில் எந்தப் பண்ணினையும் எழுப்ப இயலாது எனினும், உதடுகளின் உதவியால் ஒலி ஏற்றத் தாழ்வுகளைச் செய்ய இயலும். அதனுடைய மென்மையான இசை அசைவுகளில் ஒரு தனித்த நயம் இருக்கவே செய்கின்றது. சந்தத்தொடு பொருந்திய பக்க இசையாகக் கோயில் சடங்குகளில் அது ஒலிக்கப்படும் போதோ தாளவின்யாசத்தில் ஒத்திசைக்கும் போதோ உள்ளத்தைத் தொடும் இசையினை அது வெளிப்படுத்தவே செய்கிறது.'' 1734-இல் சென்னையைச் சேர்ந்த இரு இந்தியர்கள் சிந்தாதரிப் பேட்டை என்ற நகரத்தை அமைப்பதற்காக ஆன செலவு பற்றியது தொடர்பான மனுவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-* ''சங்குகளை உரிய சடங்குகளோடு புதைத்து அடித்தளம் அமைப்பதற்கான செலவுத் தொகை.'' இலங்கையில் யாழ்ப்பாணக் கரையில் எடுக்கப்பட்ட வலம்புரிச் சங்கு ஒன்று உருவா 700-இற்கு விற்கப்பட்டது. இத்தகைய வலம்புரிச் சங்குகள் சிலபோது இலட்சம் உருவா வரை விலைபோனதாகக் கூறப்படுகிறது. வலம்புரிச் சங்கு மிகவும் மதிப்புடையதென்றும் அது எப்பொழுதும் அதன் எடையளவு தங்கத்திற்கு விலைபோகும் என்றும் 1813–இல் மில்பர்ன் எழுதியுள்ளார். பால்டெயஸ், கருடன் விரைந்து பிரமனிடம் சென்று கிருட்டிண பகவானுக்காக வலம்புரிச் சங்கினைக் கொண்டு வந்த கதையினைக் கூறியுள்ளார். சாளுக்கியர், பாண்டியர் ஆகிய தென்னிந்திய அரச மரபினர் காசுகளில் சங்கு முத்திரை பொறிக்கப் பெற்றிருந்தது. இன்று திருவாங்கூர் மன்னர் காசுகளில் அந்த முத்திரை பொறிக்கப்படுகிறது.

கோயில் வழிபாடுகள் அனைத்தும் ஆகம நெறிப்படியே நடைபெறுகின்றன. பிராமணர்கள் சிவனையும் விட்டுணுவையும் மட்டுமே வழிபடுகின்றவர்களாகையால் அத்தெய்வங்களுக்கான கோயில்களுக்கே இவர்கள் அடிக்கடி செல்வர். கோயிலில்

* கீழ்த்திசை வணிகம். (Oriental Commerce.)

ஒரியப் பிராமணன்



கொங்கணிப் பிராமணன்

உள்ள தெய்வ உருவை வழிபடும் நடைமுறைக் கடமைகள் அனைத்தையும் சிவன் கோயில்களில் குருக்களும், திருமால் கோயில்களில் பஞ்சராத்ர அல்லது வைகானச அர்ச்சகர்களுமே மேற்கொள்கின்றனர். கடவுளுக்குப் படைப்பதற்கு உரிய உணவைப் பரிசாரகர் எனப்படும் பிராமணர்களே சமைக்கின்றனர். வழிபாட்டின்போது அத்தியாபகர் எனப்படும் பிராமணர்கள் வேதங்களை ஒப்பிக்கின்றனர். திருவாய்மொழி அல்லது தேவாரத்திலிருந்து சில பாடல்கள் பாடப்படுகின்றன. திருவாய்மொழியினைப் பிராமணர்களே திருமால் கோயில்களில் ஓதுவர். தேவாரத்தை ஓதுவார்கள் சிவன் கோயிலில் ஓதுவர். குறிப்பிடத்தக்க கோயில்களில் இரண்டு தெய்வ உருவங்கள் இருக்கும். ஒன்று கல்லால் ஆன மூலவர் சிலை. மற்றொன்று உலோகத்தால் ஆன உற்சவர் சிலை. முன்னது கருப்பக்கிரகத்தில் நிலையாகப் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கப் பின்னது ஊர்வலங்களில் தூக்கிச் செல்வதற்கு உரியது. திருமால் கோயில்களில் உள்ள மூல விக்கிரகங்கள் பொதுவாகமனித உருவில் நின்ற கோலத்திலே இருக்கும். அரங்கநாதர், பத்மநாபர், கோவிந்தராசர் ஆகிய திருமால் கோலங்கள் ஆதிசேடன் மீது கிடந்த கோலத்தில் இருக்கும். கருப்பக்கிரகத்தில் மூலவர்களாகப் பெரும்பாலும் பெருமாள், சீதேவி, பூதேவி ஆகிய மூன்று சிலைகள் இருக்கும். இராமர் கோயில்களில் பூதேவிக்குப் பதிலாக இலக்குமணர் இடம் பெற்றிருப்பார். சீதேவி, பூதேவி ஆகியோர் உற்சவ மூர்த்தங்கள் திருமால் உற்சவ மூர்த்தியோடு ஊர்வலத்தில் இடம் பெறுவர். பெரிய அமைப்புடைய கோயில்களில் கோயில் எல்லையில் உள்ள தாயார் அல்லது நாச்சியார் கர்ப்பக்கிரகத்தில் இலக்குமியின் மூலவிக்கிரகமும் இடம் பெற்றிருக்கும். அக்கோயில்களில் ஆழ்வார்களுக்கும், தேசிகர், மணவாள மாமுனிகள் போன்ற ஆச்சாரியர்களுக்கும் தனிக்கோயில்கள் இருக்கும். சமயச் சின்னங்கள் மூலவர், உற்சவர் ஆகிய சிலைகளின் நெற்றியில் இடப்பட்டிருக்கும். சிவன் கோயில்களில் இருக்கும் மூல விக்கிரகம் இலிங்கம் ஆகும். சிவன் கோயில்களில் கருப்பக்கிரகத்தில் ஒரே ஒரு விளக்கு மட்டுமே மெல்லிய ஒளியோடு எரிந்து கொண்டிருக்கும். இதனாலேயே "சிவன் கோயிலில் எரியும் மெல்லிய விளக்கைப் போல," அல்லது "சிவன் கோயில்

விளக்கைப் போல்'' என்று கூறும் வழக்கும் உள்ளது. சிவன் கோயில் உற்சவர் சிலைகளான சிவன், பார்வதி ஆகியன மனித உருவில் இருக்கும். முக்கியமான சிவன் கோயில்களில், திருமால் கோயில்களில் இலக்குமிக்குத் தனிக் கோயில் இருப்பதைப் போலவே பார்வதிக்கும் தனிக் கோயில் இருக்கும். கோயில் எல்லையில் கணபதி, சுப்பிரமணியர் ஆகியோருக்கும் சிறப்பான நாயன்மார்களுக்கும் தனிக் கோயில்கள் இருக்கும்.

நாள்தோறும் நிகழ்த்தப்படுகின்ற சாதாரண வழிபாடுகளில் கோயிலில் நடைபெறும் வழிபாட்டிற்கும் வீட்டில் செய்யப்படும் வழிபாட்டிற்கும் அதிக வேறுபாடு இல்லை. கோயில்களில் ஒவ்வொரு வழிபாட்டுக்குரிய நிகழ்ச்சியும் சற்றுப் பெரிய அளவில் செய்யப்படுவதோடு முன்பு சொன்ன பதினாறு உபசாரங்களுடன் சில ஆகம அல்லது தந்திரச் சடங்குகளும் உடன் செய்யப்படுகின்றன. தற்பொழுது அதிலும் சிறப்பாகத் திருமால் கோயில்களில் பஞ்சராத்ர, வைகானச என்ற இரண்டு வழிபாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. வீட்டு வழிபாட்டு நெறிமுறையினை ஒத்ததான முன்னதனைச் செய்ய யாரேனும் ஒரு பிராமணன் கோவில் அர்ச்சகராக இருக்கலாம். பின்னதனை வைகானசப் பிரிவைச் சேர்ந்த அர்ச்சகர்களே நிகழ்த்தற்குரியர்.

எல்லாப் பெரிய கோயில்களுக்கும் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளன. சில கோயில்கள் அரசிடமிருந்து ஆண்டுதோறும் 'தஸ்திக்' எனப்படும் பொருள் உதவியினைப் பெறுகின்றன. கோயில்களின் நடைமுறைச் செயலாட்சி தக்கார் பொறுப்பில் உள்ளது. கோயிலைச் சார்ந்த நிதியனைத்தும் அவர்கள் முழுப் பொறுப்பில் இருக்கும். அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், அத்யாபகர்கள் ஆகியோரும் துப்புரவாளர்கள், பூத்தொடுப்போர், இசைவாணர்கள், நாட்டியப் பெண்கள் ஆகிய பிராமணரல்லாத பணியாளர்களும் தக்காரின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களே. இவர்கள் கோயிலில் ஆற்றும் பணிக்கான ஊதியம் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பொருள்களாகவும் வழங்கப்படுகின்றது. இறைவனுக்கு நாள்தோறும் படைக்கப்படும் திருவமுது கோயில் பணியாளர்களுக்குப் பங்கிட்டுத்

தரப்படுகின்றது. சாதாரண நாள்களில் அர்ச்சகர்கள் செய்யும் திருவமுதும் வழிபாட்டுக்குக் கோயிலுக்கு வருபவர்கள் கொண்டுவரும் பழங்கள் முதலியனவும் மூலவருக்கே படைக்கப் படுகின்றன. திருவிழாச் சமயங்களின் அவை உற்சவருக்குப் படைக்கப்படுகின்றன.

திருமால் கோயில்களில் வழிபாட்டுக்கு மலர்களும், துளசியும் பயன்படுத்தப்படுகின்றன. சிவன் கோயில்களில் துளசிக்குப் பதிலாக வில்வம் பயன்படுத்தப்படுகிறது. வழி பாட்டின்முடிவில் கோயில்களைப் பொறுத்து அர்ச்சகர்கள் கூடியிருப்பவர்களுக்குத் தீர்த்தம், துளசி அல்லது வில்வம், விபூதி ஆகியனவற்றை வழங்குவர். பெருமாள் கோயில்களில் தீர்த்தம் வழங்கியவுடன் அர்ச்சகர் கூடியிருப்பவர்களுக்குத் திரு மாலின் திருவடி பதிக்கப்பட்ட சதாரி எனப்படும் சடகோபம் வைத்து வாழ்த்துவார். இது உட்குலிந்த ஒரு கின்ணமாகும். திருமணம் ஆன ஆண்களாயின் முதலில் தலையிலும பின் வலத் தோளிலும் மீண்டும் தலையிலும் சதாரி கவிழ்க்கப்படும். திருமணம் ஆகாதவர்களுக்கும் பெண்களுக்கும் இதனைத் தலையில் மட்டும் கவிழ்த்துவர். இக் கிண்ணம் எப்பொழுதும் கருவறையில் மூலவர் அருகிலேயே வைக்கப்பட்டிருக்கும். திரு விழா நாள்களில் அது உற்சவரோடு ஊர்வலத்தில் உடன் எடுத்துச் செல்லப்படும். தீபாவளி, வைகுண்ட ஏகாதசி, துவாதசி முதலிய திருவிழா நாள்களில் கோயிலில் உள்ள உற்சவர் ஊர் அல்லது நகரின் தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் படுவார். இவ்வாறு ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும் சிலை, கல்லால் ஆனது அன்று. இடம்விட்டு எடுத்துச் செல்லக் கூடிய உலோகத்தாலான உற்சவர் சிலையே ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது. கோயிலில் இந்த உற்சவர் சிலை மூலவர் சிலைக்கு முன்னர் வைக்கப்பட்டிருக்கும். பெரும் பாலான முக்கியமான கோயில்களில் ஆண்டுதோறும் நடை பெறும் பிரமோற்சவம் எனப்படும் திருவிழா பத்து நாள்கள் நடக்கும். இந்தத் திருவிழாவின் போது ஒவ்வாரு நாள் இரவும் உற்சவர், களிமண், மரம் அல்லது உலோகத்தாலான கருடன், குதிரை, யானை, காளை, அனுமான், மயில், யாளி ஆகிய வாகனங்களில் ஒன்றில் வைத்துப் பிராமணர்கள் வேதமும்

தமிழ் நாலாயிரப் பிரபந்தமும் ஓதியவர்களாக உடன்வர ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுவார். மேற்கூறிய வாகனங்களுள் கருடனும் அனுமனும் திருமாலுக்குரியவை. நந்தியும் புலியும் சிவனுக்குரியவை. மற்றவை இருவருக்கும் உரியவை. மே மாதத்தில் ஆண்டுதோறும் வரதராசர் திருவிழா நடைபெறும். அவ்விழாவின் பத்து நாள்களில் ஒரு நாள் உற்சவர் முறையாகத் திருக்கல்யாணம் செய்விக்கப்பட்டுப் பெரிய அளவில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட தேரில் ஏற்றி வைத்து முக்கிய தெருக்களில் அத்தேர் இழுத்துச் செல்லப்படும். இத்தேரில் ஆபாசமாகச் செதுக்கப்பட்ட பல உருவங்கள் பொருத்தப்பட்டிருக்கும். கண்ணேறு படுவதைத் தடுத்தலே இவை இடம் பெறுவதன் நோக்கமாகும். பிராமணர்களோடு வேறு பல சாதியினரும் கோயில் வழிபாட்டில் பங்கு கொள்கின்றனர். சிவனுக்கும் திருமாலுக்கும் உரிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் கூட வழிபடப்படுகின்றனர். சிறிய தெய்வங்களான மாரியம்மன், முனீசுவரன், கொடமணித்தையா போன்றவற்றைப் பிராமணர்கள் அடியோடு ஒதுக்கிவிடுவதில்லை. மாத்துவர் போதித்த துவைதக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றுள்ள தென் கன்னட மாவட்டத்தில் உள்ள உடுப்பியில், பிராமணர்கள் அடிக்கடி பரவர்களுக்கும் நல்கெயர்களுக்கும் உரிய பூதங்களுக்கு நேர்ந்து கொள்கின்றனர். மிக அண்மையில் பழமை நெறியில் நிலைநிற்கும் உடுப்பி மடத்தைச் சார்ந்த குரு ஒருவரின்கீழ்ப் பணியாற்றும் சிவாலி பிராமணர் ஒருவர் பஞ்ஜுர்லி என்ற பூதத்தின் கோயிலில் விழாக் (நேம) கொண்டாடினார். நல்கெ பூத ஆட்டக்காரர்கள் அவர் இலலத்திற்கு வரவழைக்கப்பட்டுப் பூத ஆட்டங்கள் அவர் இல்லத்தின் வாசலில் நிகழ்த்தப்பட்டன. சென்னை அருகே உள்ள பெரியபாளையததிலிருக்கும் மாரியம்மன் கோயில் இலைத் திருவிழாவில் பிராமண ஆண்களும் பெண்களும் வேப்பிலைக் கொத்துக்களை அணிந்தபடி கோயிலை வலம்வரக் காணலாம்.

இனி, நான் தென் இந்தியாவில் காணப்படும் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பிராமணர்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றேன். இவர்களுள் தமிழ்ப் பிராமணர்கள் அல்லது திராவிடர் என்ற பிரிவினைச் சேர்ந்தவர்களே தென் மாவட்டங்

களில் மிகுதியாகக் காணப்படுபவர்கள். அவர்கள் பின்வருமாறு பல பிரிவினர்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்:-

I. ஸ்மார்த்தர்

1. வடமர்
2. கேசிகள்
3. பிரகசரணம்
4. வாத்திமர் (அ) மத்திமா
5. அஷ்டசகஸ்ரம்
6. தீட்சிதர்
7. சோழியர்
8. முக்காணி
9. காணியாளர்
10. சங்கேதி
11. பிரதமசாகை
12. குருக்கள்

II. வைணவர்கள்

அ. வடகலைப் பிரிவினர்

1. ஸ்ரீ வைணவர்
2. வைகானசர்
3. பஞ்சராத்ரர்
4. ஹெப்பர்

ஆ. தென்கலைப்பிரிவினர்

1. ஸ்ரீ வைணவர்
2. வைகானசர்
3. பஞ்சராத்ரர்
4. ஹெப்பர்
5. மண்டயர்

1 ஸ்மார்த்தர்

1. **வடமர்:-** இவர்கள் மற்றப் பிரிவினர் அனைவரையும் விடத் தாங்கள் உயர்ந்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். எனினும் குருக்கள், பிரதமசாகைகள் ஆகிய இரு பிரிவினரைத் தவிர மற்றப் பிரிவினர் அனைவரோடும் இவர்கள் ஒன்றாக இருந்து உண்பர். சில இடங்களில் பிரதமசாகைகளோடு கூடச் சேர்ந்து உண்ணும் பழக்கம் உள்ளது. வடமர்களிடையே காணப்படும் உட்பிரிவுகள் வருமாறு:-

அ. சோழ தேசத்தார்

ஆ. வட தேசத்தார்

இ. சவயார் (அ) சபையார்

ஈ. இஞ்சி

உ. தும்ம குண்ட திராவிடர்

இவர்கள் அனைவரும் சந்தனத்தால் தங்கள் சமய அடையாளத்தை ஊர்த்தவ புண்டரமாக நேர் கோடுகளாகவோ வட்ட வடிவமாகவோ இடுபவர்களாவர். குறுக்காகப் பெரும்பாலும் சமயச் சின்னம் தரிக்கும் பழக்கம் இவர்களிடமில்லை. இவர்கள் சிவனையும் திருமாலையும் வழிபடுவதோடு திருமால் தொடர்பான புராணங்களைப் படிப்பர். சில வடமர்கள் வைணவர்களுக்குரிய நாமத்தைத் தரிப்பர். இவர்கள் கீத்து நாமக்காரர் என்று அழைக்கப்படுவர். இவர்களும் ஸ்மார்த்தர் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுபவர்களே. ''வடமம் முற்றி வைஷ்ணவம்'' என்ற பொது வழக்கு ஒன்றும் உள்ளது. வடமரே பக்குவப்படும்போது வைணவர்களாகின்றனர் என்ற கருத்துப்பட இது வழங்குகின்றது. இதுவும் உண்மையேயாம். ஊர்த்தவபுரண்ட அடையாளமிடும் ஸ்மார்த்தர் பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ள ஸ்மார்த்தர் குடும்பங்கள் சில, ஸ்ரீ வைணவர் குடும்பங்கள் சிலவற்றில் சாவு நேரும்போது தாங்களும் தீட்டுக்குள்ளானதாகக் கருதுகின்றனர். இவ்வாறு செய்தல் இந்த ஸ்ரீவைணவர்கள் அண்மையில் வைணவம் தழுவிய வடமர்களே என்பதனாலேயேயாம்.

2. கேசிகள்:- கேசிகள் அல்லது இரணிய கேசிகள் (வெள்ளிக்கம்பி போன்ற தலைமுடியினர்) எனச் சிலபோது அழைக்கப்படும் இவர்கள் வடமர்களோடு பெரிதும் ஒற்றுமை உடையவர்கள். அகமணக்கட்டுப்பாடுள்ள பிரிவினரான இவர்கள் பழமையில் பற்றும் சமயநெறியில் ஆழ்ந்த பிடிப்பும் உள்ளவர்கள். இவர்கள் இரணிய கேசிகள் என அழைக்கப்படுவதற்குக் காரணம் இரணியகேசி ஆக்கிய க்ருக்ய சூத்திரங்களை இவர்கள் பின்பற்றுவதாலேயாம். தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில், இவர்கள் அனைவரும் சத்திய சாடா என்ற ஒரு முன்னோர் பெயரில் அமைக்கப்பட்ட ஒரேசூத்திரத்தைப் பின்பற்றுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

3. பிரகசரணம் (பெரும் பிரிவு):- பிரகசரணத்தார் வடமர்களைவிட மிகுந்த சைவ ஈடுபாடும், சமய நெறிப் பற்றும் உடையவர்கள். இவர்கள் தங்கள் சமயச் சின்னமாக விபூதியை

யும் சந்தனத்தையும் படுகிடைக்கோடுகளாக அணிபவர்கள் சத்தியமங்கலம் பிரகசர்ணம் பிரிவினர் மட்டும் வைணவ சமயச் சின்னமான நாமத்தை அணிகின்றனர். எப்பொழுதும் இவர்கள் இவ்வாறு அணியவில்லையாயினும் திருப்பதி வெங்கடரமண சாமிக்குச் சிறப்பானதான புரட்டாசி மாதத்திலாவது இவ்வாறு செய்வர். மிகுந்த சமயப் பிடிப்புள்ள பிரகசர்ண பிரிவினைச சேர்ந்தவர்க்ள் ஓர் உருத்திராட்சக் கொட்டையையோ உருத் திராட்ச மாலையையோ அணிவர். சிலர் உருத்திராட்சரங்களால் ஆன சிவலிங்கத்தை வழிபாட்டின் போது தலையில் வைத்துக் கொள்வர். இவர்கள் பொதுவாக ஐந்து தெய்வங்களை வழி படுவர். அவை இலிங்க வடிவிலான சிவன், ஸ்படிகலிங்கம், திரு மால், கணேசர், ஈசுவரர் என்பனவாம். பிரகசர்ணம் பிரிவைச சார்ந்த பெண்களை அவர்கள் சேலை அணிவதிலிருந்தே பிரித்து அறிந்துகொள்ளலாம்.இவர்கள் பாதங்களைத் தொடும்படியாகத் தாழ்வாகச் சேலையணியாமல் முழங்காலுக்குச் சற்றுக் கீழாக இருக்கும்படியாக அணிவர். பிரகசர்ணத்தார் பின்வரும் உட் பிரிவினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

அ. கண்டர மாணிக்கம்
ஆ. மிளகனூர்
இ. மாங்குடி
ஈ. பழமனேரி (அ) பலவனேரி
உ. முசநாடு
ஊ. கொல்லத்தூர்
எ. மருதஞ்சேரி
ஏ. சத்தியமங்கலம்
ஐ. புதூர் திராவிடர்

தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- "மிளகனூர் பிரகசரணம் பிரிவினருக்கே உரியதான ஒரு சடங்கு மணச்சடங்கு நிகழும் நாளுக்கு முந்திய தினம் நிகழும் சடங்காகும். இச்சடங்கில் மணமான நான்கு பெண்களுக்கும், ஒரு கைம்பெண்ணுக்கும், ஒரு மணமாகாத ஆணுக்கும் விருந்து வைக்கப்படும். இது அட்ரிசய பெண்டுகள் (கண்ணுக்கு புலனாகாத பெண்கள்) சடங்கு என அழைககப் படுகின்றது. முன்பு இப்பிரிவைச் சேர்ந்த நான்கு பெண்கள் தங்களுடைய மாமியார்கள் இழைத்த கொடுமை தாங்காமல்,

இப்பிரிவைச் சபித்த சாபத்திற்குப் பிராயச்சித்தமாகச் செய்யப் படுவது இச்சடங்கு, ஒரு விதவைக்கு விருந்தளித்தபின் அவர்கள் மாயமாக மறைந்து விடுவதாக நம்பப்படுகிறது.''

4. வாத்திமர்:- தஞ்சாவூர் மாவட்டத்தில் பெருமளவின ராகக் காணப்படும் வாத்திமர் அல்லது மத்திமர் பற்றித் தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:- ''வாத்திமர் மூன்று சிறு உட்பிரிவினராக உள்ளனர். அவர்களுள் 'பதினெட்டு ஊர் வாத்திமர்' ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் அண்மைக்காலம்வரை தஞ்சை மாவட்டத்திலுள்ள பதினெட்டு ஊர்களில் மட்டுமே வாழ்வதாகக் கூறிக் கொண்டிருந்தனர். இது உண்மையும் ஆகலாம். இவர்களுக்கு என்று தனிப்பட்ட சில நடைமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாக விளக்கலாம். பொதுவாக வட்டிக்குப் பணம்தரும் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர்கள் அதன் காரணமாக அண்டை அயலாரிடத்து நல்லுறவு கொண்டவர்களாக இருப்பதில்லை. சுற்றிலும் இருப்பவர்கள் இவர்கள் நல்ல குணங்களைப் பாராமல் இவர்களுடைய குற்றங்குறைகளையே பாராட்டுவர். (வடமர்கள் எப்பொழுதும் செலவழிப்பதில் சிக்கனமாக இருப்பவர்களென் றும், வாத்திமர்கள் ஒற்றுமையாக இருப்பவர்கள் என்றும் பொருள்படும்படியான ஒரு பழமொழியும் உள்ளது.) தங்களிடம் கடன்பட்டுள்ளவர்களிடம் மிகவும் கண்டிப்புக்காட்டுபவர்கள் எனவும், தங்கள் குடும்பச் செலவில்கூடக் கஞ்சத்தனமாகவே இருப்பவர் என்றும் இவர்களைப் பற்றிக் குறை கூறுவதுண்டு. இரண்டாவதான குறைக்கு ஆதாரமாகப் பிராமணர்கள் பொது வாகப் பயன்படுத்தும் பருப்பைக்கூட இவர்கள் பயன்படுத்துவ தில்லை என்பதனையும், இரவில் சூடான உணவிற்குப் பதிலாகப் பழையதையே உண்பர் என்பதனையும் காட்டுவர். இவர்கள் குடும்பத்தில் பெண்களும் ஆண்களைப் போலவே பாய்பின்னுதல், மோர் விற்றல், தனியாக வட்டிக்குக் கடன் கொடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுப் பணம் சேர்ப்பதோடு ஆண்களைப் போலவே கருமிகளாகவும் இருப்பர். எனினும் இவர்களிடம் பல நல்ல பண்புகளும் உள்ளன. பெரிய வைபவங்

உருத்திராட்சமணிகளாலான அங்கியோடு காட்சிதரும் தெலுங்குப் பிராமணன்

சிவபூசை செய்யும் ஸ்மார்த்த பிராமணன் (பிரமசரணம் பிரிவு)

கொண்டுள்ளவர்களையும், பணக்கார உறவினர்களையும் ஒன்று போலவே பாவித்து விருந்து உபசரிக்கும் பண்பினர் இவர்கள். அத்தகைய ஏழைகள் குறை கூற இடமின்றி அவர்கள் தகுதிக்கு மேலாகவே மதிக்கப்படுவர். மண நிகழ்ச்சிகளின்போது தாராள மாகச் செலவு செய்யும் இவர்கள், அத்தொகையின் அளவு எவ் வளவு ஆயினும் அதனைப் பந்தலுக்கு இவ்வளவு, சாப்பாட் டுக்கு இவ்வளவு என்பது போல வரையறை செய்து கொண்டு விடுவர். திருமணச் சீர், வரதட்சணை பற்றி வழவழ என்று பேசாமல் தங்கள் பிரிவில் முன்பே முடிவு செய்து வைத்துள்ள அளவிலே அனைத்தையும் செய்து முடிப்பர். இப்பிரிவில் மணமகனைத் தேடி அதிகம் அலையவேண்டியதில்லை. பிற பிரிவினரைவிட இப்பிரிவில ஆண்கள் விரைவிலேயே மணம் புரிந்து கொள்ளுகின்ற வழக்கமே இதற்கான காரணமாகும். இவர்கள் தங்கள் பிரிவிற்குள் நல்ல கட்டுப்பாட்டினை உடையவர் களாக உள்ளனர். கடன் வாங்கிய ஒருவன் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் அச்செய்தி எல்லோருக்கும் அறிவிக்கப் பட்டுவிடும். இப்பிரிவினர் எவரும் அதன்பின் அவனுக்குக் கடன் தர முன்வர மாட்டார்கள். எல்லோரும் பொதுவில் பணம் போட்டு ஊரில விளக்குகள் வைக்கவும், பொதுச் சுகாதார ஒழுங்குகளைப் பேணவும், மேலும் பலவழிகளிலும் பொது நலம் பேணவும் ஒற்றுமை மனப்பான்மையுடன் செயல்படுவர். அண்மைக் காலம் வரை இவர்கள் ஆங்கிலக் கல்வியில் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. இந்தப் பொது விதிக்கு விலக்காக விளங்குபவர் வாத்திமர் பிரிவின் வழிவந்த சர் எ. சேஷய்ய சாத்திரியாரவார்.

வாத்திமர்களின் உட்பிரிவுகள் வருமாறு:-

1. பதினெட்டுக் கிராமத்தார்
2. உடையாளூர்
3. நன்னிலம்
4. இராதாமங்கலம் (சிலர் கருத்துப்படி இது தனி உட்பிரி

வாகக் கொள்ளப் படுவதில்லை. பதினெட்டுக் கிராமத்தாருள் அடக்கப்படுகிறது.)

5. அஷ்டசகஸ்ரம் (எண்ணாயிரம்):- இப்பிரிவினர் பிரக சரணம், வடமர் ஆகிய பிரிவினரைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் பிரகசரணத்தார்களைப் போலவே வடமர்களைக காட்டிலும் சைவத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். இப்பிரிவினைச் சார்ந்த பெண்கள் மிக்க நாகரிக நயத்தொடு சேலை அணிவர். சேலையின் கீழ்க் கரையைக் கணுக்காலை மறைக்கும்படியாகத் தொங்கவிடுவர்.

அஷ்டசகஸ்ரத்தாரின் உட்பிரிவுகள் வருமாறு:-

அ. அத்தியூர்

ஆ. அறிவபடெ

இ. நந்திவாடி

ஈ. சட்குலம் (ஆறு குடும்பங்கள்)

இவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதால், இவர்களுடைய உட்பிரிவுகள் அகமணக்கூட்டுப்பாடுடையவை யாயினும் அவற்றிடையே அவ்வப்போது மண உறவுகள் நிகழவே செய்கின்றன.

6. தீட்சிதர்:- இப்பிரிவினரின் மற்றுமொரு பெயர் தில்லை மூவாயிரவர் என்பதாகும். காசியிலிருந்து மூவாயிரம் பேர புறப்பட்டதாகவும், அவாகள் சிதம்பரத்தை அடைந்தபோது அதில ஒருவர் குறைந்ததாகவும், இதனால் குழப்பம் அடைந்த இவர்களிடம் சிவன், காணாமல் போன ஒருவன் தானே எனக் கூறி இவர்களை அமைதி கொள்ளச் செய்ததாகவும் ஒரு கதை வழங்குகின்றது. தீட்சிதர்கள் சுமார் ஒரு நூறு குடும்பங் களைக் கொண்ட சிறு பிரிவினரே. மேற்குக் கடற்கரைப் பக்கத்து நாயர்களைப் போலவும், நம்பூத்ரிகளைப் போலவும் இப்பிரிவு ஆண்கள் தலைமயிரினை முன் குடுமியாக இட்டுக் கட்டிக கொள்கின்றனர். இவர்கள் தங்கள் சிறுமிகளைப் பிற பிரிவுப் பிராமணர்களுக்கு மணம் செய்து தருவதில்லை. மேலும் இவர்கள் தங்கள் பெண்களைச் சிதம்பரம் எல்லை யைத் தாண்டிச் செல்ல அனுமதிப்பதில்லை. அதனாலேயே

''தில்லையில் பிறந்தவள் எல்லை தாண்டாள்'' என்ற பழமொழியும் வழங்குகின்றது. சிதம்பரம் நடராசர் கோயிலில் குருக்களாகப் பணியாற்றும் இவர்கள் தங்களுக்குள் முறை வைத்துக் கொண்டு பணியாற்றுகின்றனர். ஆண்கள் சிறுவர்களாக இருக்கும்போதே மணம் முடித்துக் கொள்கின்றனர். மணம் செய்து கொள்ள ஐந்து வயதுக்கு மேற்பட்ட பெண்கள் கிடைப்பது அருமை. ஆண்கள் சிறுவயதிலேயே மணப்பதற்கான காரணம் கோயில் நடைமுறை நிருவாகத்தில் மணமானவர்கள் மட்டுமே பங்குகொள்ள உரிமை வழங்கப்பட்டிருப்பதேயாகும். மணமானவர்கள் கோயில் வருவாயில் தங்களுக்கென ஒரு பங்கும் பெற உரிமை பெறுகின்றனர். வருவாயில் பெரும்பகுதி பாவாடம் எனப்படும் பலகையில் குவிக்கப்பட்டுள்ள இறைவனுக்குப் படைக்கப்பட்ட சோற்றின் பங்காகும். ஒவ்வொரு தீட்சிதரும் தங்களுக்கெனச் சில குறிப்பிட்ட வாடிக்கையாளர்களைப் பிடித்து வைத்திருப்பர். அவர்களுள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களே குறிப்பிடத்தக்கவர்கள். வாடிக்கையாளர்கள் கோயிலுக்கு வரும் சமயத்தில் அவர்களைத் தங்கள் வீட்டில் தங்க வைத்து வேண்டிய உதவிகளைச் செய்வர். திரு டபிள்யூ. பிரான்சிஸ் தென் ஆர்க்காடு மாவட்ட விவரக்குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறார்:- ''சிதம்பரம் கோயிலின் குறிப்பிடத்தக்க கூறு அதன் அன்றாட நடைமுறை மேலாண்மையேயாகும். அதற்கெனத் தனியே நிலமோ அறக்கட்டளையோ 'தஸ்திக்'கோ கிடையாது. அது அந்த நகரத்தில் வாழும் தனித்த இயல்பினரான பிராமணர்களுடைய சொத்தாக உள்ளது. இவர்கள் பிராமணர்களான பிற கோயில் குருக்களைவிடவும் மரியாதைக்கு உரியவர்களாகக் கருதப்படுவதோடு தீட்சிதர்கள் (படைப்பவர்கள்) என அழைக்கப்படுகின்றனர். தங்களுக்குள்ளாகவே மண உறவு கொள்ளும் இவர்கள் மலபாரைச் சேர்ந்த நாயர்களையும், தியர்களையும் தோற்றத்தில் ஒத்துள்ளனர். தலை மயிரைக் குடுமியாக முன் நெற்றியில் விழுமாறு உச்சியில் முடிந்து கொள்வர். இவர்கள் கோயிலில் செய்யும் வழிபாடு தொடர்பான சடங்குகள் வேறு பிற கோயில்களில் நடைபெறும் வழிபாடுகளைப் போல அமையாது, வீடுகளில் நடைபெறும் வழிபாட்டினையே ஒத்து

இருக்கும். விதிமுறைப்படி மணமான எல்லா ஆண்களுக்கும் கோயில் நடைமுறை மேலாண்மையில் பங்கு பெற உரிமை இருப்பதோடு கோயில் வருவாயில் தங்கள் பங்கினையும் பெற உரிமை உடையவர்கள். தற்பொழுது கோயில் வருவாய் 250 பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தென் மாவட்டங்களில் உதவி கேட்டும், தாங்கள் கோயிற் பணியினை மேற்கொள்வதாகவும் கூறிச் சுற்றுப் பயணம் மேற்கொள்வர். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட சில வாடிக்கையாளர்கள் உளர். அவர்களிடமிருந்து பெறும் உதவிக்குப் பதிலாகச் சிதம்பரம் திரும்பியவுடன் வாடிக்கையாளரின் பெயரில் கோயிலில் வழிபாடு செய்து, அவர்களுக்கு அவ்வப்போது விபூதி அனுப்புவதோடு திருவிழாக்களின்போது வந்து தங்கிச் செல்லுமாறு அழைப்பும் அனுப்புவர். எப்போதும் இருபது தீட்சிதர்கள் கோயில் பணிகளில் ஈடுபட்டவர்களாக இருப்பர். சிறுவர்களையும், மனைவியரை இழந்தவர்களையும் தவிர தீட்சிதர் பிரிவைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் முறை வைத்து, தொடர்ந்து இருபது நாள்கள் கோயில் பணிகளைச் செய்வர். இம்முறை வைப்பு ஒவ்வொருவருக்கும் எல்லாக் கோயில்களிலும் பணி வாய்ப்பு ஏற்படும்படியாக மாறிமாறி அமையும். இருபது பேரும் நால்வர் கொண்ட ஐந்து குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் ஐந்து கோயில்களிலும் நான்கு நாள்கள் பூசை செய்வதோடு, இரவில் அங்கேயே படுத்து உறங்கவும் செய்வர். அந்த நாள்களில் அந்தக் கோயில்களில் படைக்கப்படும் சோற்றுக்கும் அவர்களே உரிமையுடையவர்கள். பெரிய அளவில் கோயிலுக்கு ஒருவர் அளிக்கும் படையலான சோற்றினை எல்லாத் தீட்சிதர்களும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். கோயில்களில் படைக்கப்படும் வேறு பலிப் பொருள்களின் உரிமை இருபது நாள்களுக்கு ஒருமுறை தீட்சிதர்கள் கூட்டத்தில் ஏலத்தில் விடப்படும். யாரேனும் ஒரு தீட்சிதர் அவற்றை ஏலத்தில் எடுப்பார். அவ்வப்போது நடைபெறும் இக்கூட்டங்கள் தேவசபையில் கூடும். கூட்டத்தின்போது ஒரு பண்டாரம் நடராசர் கோயிலிலிருந்து ஒரு விளக்கினைக் கொண்டு வந்து கூட்டம் நடைபெறும் இடத்தில் வைப்பான். (கோயில் மேலாண்மையை நடத்துவதில் எல்லாத்தீட்சிதர்களுக்கும் சமஉரிமை உண்டு என்ற

கோட்பாட்டிலிருந்து விலகும் நிலை ஒப்புக்காகக்கூட நிகழ்வதை விரும்பாதவர்கள் இவர்கள்.) எனவே, விளக்கை எடுத்து வரும் அந்தப் பண்டாரமே தலைவனாக இருந்து கூட்டத்தை நடத்தி வைப்பான். அனைவரும் அவன் வாயிலாகவே தங்கள் விருப்பத்தை வெளியிடுவர்.'' தீட்சிதர் பிரிவினர் செருக்கு மிக்கவர்கள். எந்தச் சங்கராச்சாரியாரையும் அவர்கள் தங்களுடைய குருவாக ஏற்றுக் கொள்வதில்லை. சிவனே தங்களில் ஒருவன் ஆகையால் தங்களையும் சிவனுக்குச் சமமாகப் பாவித்துக் கொள்கின்றனர். சங்கராச்சாரியார் ஒருவர் கோயிலுக்கு வருகை தந்தால் மற்றக் கோயில்களில் அவருக்கு மரியாதை காட்டும் வகையில் தட்டிலிருந்து அவர்கள் தாங்களே விபூதி எடுத்துக் கொள்ள அனுமதிப்பதுபோல இங்கு அனுமதிக்கப் படுவதில்லை. தீட்சிதர்கள் பெரும்பாலோர் யசுர் வேதிகளே. ஒரு சிலர் ரிக் வேதத்தையும் பின்பற்றுகின்றனர். ஒரு பெண் பூப் படைவாளாயின், அவள் தீட்டுத் தீரக் குளித்தபின் ஊர்வலமாக ஒவ்வொரு தீட்சிதர் வீட்டிற்கும் செல்வாள். அவளுக்குப் பரிசுகள் வழங்குவர்.

7. சோழியர்:– சோழியர் பின்வரும் பிரிவினராகப் பிரிக்கப் பட்டுள்ளனர்:–

அ. திருக்கட்டியூர்	ஈ. புத்தாலூர்
ஆ. மாடலூர்	உ. செங்கணூரர்
இ. விசலூர்	ஊ. ஆவுடையார் கோயில்

சோழியர்களைப் பற்றித் திரு சி. இராமச்சந்திர ஐயர் பின் வருமாறு எழுதுகின்றார்*:- ''தஞ்சாவூர் மாவட்டம் திருவானைக்காவலில இருக்கும் சோழியர் முதல் உட்பிரிவினராகவும் கடவுள் பணியில் ஈடுபட்டுள்ள தனிக் கூட்டத்தாராகவும்

* உயர்நீதி மன்றம், அரசப் பேரவை ஆகியவை இந்து மணச்சட்டங்களும் மணத்தின்பின் ஏற்படும் கடமை தவறுதலும் பற்றி வழங்கியுள்ள தீர்ப்புகளின் தொகுப்பு. சென்னை, *1891*.

(Collection of the Decisions of High Court and Privy-Council on the Hindu Law of marriage and the Effect of Apostacy after marriage. Madras, 1891.)

உள்ளனர். கோயிலில் உள்ள இறைவனுக்குப் பூசை செய்பர்கள் பிரதமசாகைகள் எனப்படும் அர்ச்சகராவர். சமைக்கும் பணியிலும் பிற தாழ்ந்த பணிகளிலும் ஈடுபட்டு உள்ளவர்கள் ஆரிய நம்பி என்றழைக்கப்படுகின்றனர். ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் உற்சவரை அலங்கரிப்பவர்கள் தெருனப்புத்தன் எனப்படுவர். மூலவரை அலங்கரிக்கும் உரிமை அர்ச்சகர்களுக்கு மட்டுமே உண்டு. அவர்கள் பண்டிட் எனவும் அழைக்கப்படுவர். நெறி முறைப்படி சோழிய பிராமணர்கள் முன்குடுமி வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் சிலர் மற்றப் பிராமணர்களைப் போலவே பின்குடுமி வைத்துக் கொள்கின்றனர். இப்பிரிவைச் சேர்ந்த வைதீகப் பற்றுமிக்கவர்களும் அர்ச்சகர்களும் தனித்த உச்சரிப்புடன் கூடிய செம்மையானதாக இல்லாத தமிழையே பேசுகின்றனர். இவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. சிறுவர்கள் அவர்களுடைய பெற்றோரால் கோயில் பணிகளில் பழக்கப்படுகின்றனர். அவ்வாறு பயிற்சி பெறும்போதே சிறு தொகை ஊதியமாகப் பெறவும் அச்சிறுவர்கள் உரிமை உடையவர் ஆகின்றனர். இவர்களிடையே வடமொழியோ தமிழோ கற்றுத் தேர்ந்தவர்கள் ஒருவரும் இல்லை. அர்ச்சகர்கள் முறைவைத்துக் கொண்டு பூசை செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வயது வந்த பின்னர் குருவானவர் அர்ச்சகராக ஆவதற்குரிய உபதேசம் செய்து வைக்கின்றார். சிதம்பரத்திலுள்ள தீட்சிதர்களிடையே காணப்படுவதைப் போன்ற குழந்தை மணம் இவர்களிடையே பெருவழக்கினதாக இல்லை. மற்ற ஸ்மார்த்த பிராமணர்களோடு இவர்கள் உடன் உண்பர். ஆனால் அவர்களோடு மண உறவு கொள்வதில்லை. இப்பிரிவில் பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 300 பேரே உள்ளனர். இவர்களுக்கும் பிற சோழிய பிராமணர்களுக்கும் இடையே மண உறவு நிகழ்வது இல்லை. ஆவுடையார்கோயில் என்ற பெயருடைய பிரிவினரும் அப்பெயருடைய கோயிலில் கோயிற் பணியினையே மேற்கொண்டுள்ளனர். மற்றப் பிரிவினைச் சார்ந்த சோழியர்கள் விருத்தாசலம் வட்டத்திலுள்ள விசிஷ்டக் குடியிலும், விழுப்புரம் வட்டத்திலுள்ள வெம்மணியத்தூரிலும், கும்பகோணம் வட்டத்திலுள்ள விசலூரிலும் காணப்

படுகின்றனர்." சோழியர்களைப் பற்றி 1904-ஆம் ஆண்டு சென்னை மெயில் நாளிதழில் வெளியாகி உள்ள கட்டுரை ஒன்றில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:- "சோழியர்கள் மிகுந்த அறிவு நுட்பம் வாய்ந்தவர்கள். அதே சமயம் தங்களுக்குத் தொல்லை தருபவர்களைப் பழிவாங்கும் பண்புடையவர்கள். சந்திரகுப்தனின் அமைச்சனும் இந்திய மக்கியவெல்லி எனக் கருதப்படுபவனுமான சாணக்கியன் இப்பிரிவைச் சேர்ந்தவனாகவே கருதப்படுகின்றான். ஏழாம் நூற்றாண்டினதான முக்தராட்சசம் என்ற வடமொழி நாடகத்தில் நந்தன் குடும்பத்தின் மீது அவன் கொண்ட தீராப் பகையும் அக்குடும்பத்தவர்களை ஒவ்வொருவராக அவன் எப்படி வேரறுத்தான் என்பனவும் சித்திரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய ஒரு பண்புடையவன் பரம்பரையில் வந்தவர்கள் என்ற காரணத்தாலோ விளக்க இயலாத வேறு காரணங்களாலோ தற்காலத்திலும் சோழியர்கள் பழிவாங்கும் பண்புடையவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். இதனை இவர்களைப் பற்றி வழங்கும், 'ஒரு சோழியனை நாங்கள் படத்தில் கூடச் சந்திக்க விரும்பவில்லை' என்ற பழமொழியும் உறுதிப்படுத்தும்." "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்ற மற்றொரு பழமொழி இவர்கள் மற்றவர்களுக்குத் தொல்லை தருவதில் முனைந்து நிற்பவர்கள் என்பதனைத் தெளிவுபடுத்துவதாகும்.

8. முக்காணி:- முக்காணியர் கொச்சி, திருவாங்கூர் பகுதிகளைச் சேர்ந்த ஸ்மார்த்தர்கள்.

9. காணியாளர்:- காணியாளர் பற்றித் திரு இராமச்சந்திர ஐயர் பின்வருமாறு எழுதுகின்றார்:- "காணியாளர்கள் ஸ்மார்த்தர் பிரிவில் ஒரு தனிப்பட்ட உட்பிரிவினர். இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் ஸ்மார்த்தர்களின் பிற பிரிவினரோடு மண உறவு வைத்துக் கொள்வதில்லை. எனினும் மற்றவர்களோடு உடன் உண்பர். இவர்களுள் பலர் பிறப்பினால் ஸ்மார்த்தர்களாக இருப்பினும் வைணவப் பிராமணர்களைப் போல நெற்றியில் சமயச் சின்னம் தரித்துத்

திருவரங்கத்திலுள்ள பெரிய கோயிலில் சமையல்காரர்களாகவும் குற்றேவல் செய்கின்றவர்களாகவும் பணிபுரிகின்றனர். இவர்கள் வீட்டுப் பெண்களும் வைணவர் வீட்டுப் பெண்களைப்போல் ஆடை தரிப்பதோடு தோற்றத்தில் வைணவப் பிரிவுப் பெண்கள் போலவே காட்சி தருவர். கோயிலில் இவர்கள் சமைக்கும் சோற்றையும் பணியார வகைகளையும் புனிதமானதாகக் கடவுளுக்குப் படைத்து அதனை வைணவப் பிராமணர்கள் உண்டாலும் இக்காணியாளர்களை வைணவப் பிராமணர்கள் தங்கள் வீட்டில் உண்ண அனுமதிப்பதில்லை.

10. சங்கேதி:- சங்கேதியர் மைசூர் மாவட்டத்திலேயே காணப்படுகின்றனர். இவர்கள் கன்னடம் கலந்த கொச்சைத் தமிழைப் பேசுகின்றனர். 1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில் இவர்களைப் பற்றித் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "மைசூர், ஹசன் மாவட்டங்களிலேயே பெரும்பாலும் இவர்கள் காணப்படுகின்றனர். காடூர், சிமோகா ஆகிய இரு ஊர்களிலும் இவர்கள் குடியிருப்புக்கள் உள்ளன. இவர்களுள் பலர் தங்களைத் திராவிடர் எனப் பதிந்துள்ளமையே இவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாக உள்ளமைக்கான காரணமாகலாம். இனம் பற்றியதான முடிவினைக் காண உதவுவது பேசும் மொழியே என்ற நோக்கில் பார்ப்போமானால், சங்கேதிகள் பேசும் தமிழ், பிற இனத்தார் பேசும் கன்னடங் கலந்த தமிழை விடவும் மிகுந்த கன்னடக் கலப்பு உடையதாயிருப்பினும் இவர்களையும் தமிழர்கள் எனக் கொள்ளத் தடையேதும் இல்லை. அடுத்துள்ள தமிழ்நாட்டிலிருந்து முதன்முதல் மைசூர் பகுதிகளில் இவர்கள் குடியேறியவர்கள் ஆதல் வேண்டும். சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் காஞ்சிப் பகுதியிலிருந்து அக்கால அரசியல்நிலைமை காரணமாகச் சுமார் 1000 ஸ்மார்த்தர் குடும்பங்கள் குடிபெயர்ந்துள்ளனர். அவர்கள் இரு பெரும் குழுக்களாக மைசூர் நோக்கி வந்துள்ளனர். வழியில் கொள்ளைக்காரர்களின் தாக்குதலுக்கு உள்ளானபோதிலும் பெருங்கூட்டமாக வந்த 700 குடும்பத்தினர் தங்கள் முயற்சியில் தளராது வழி நடந்து ஹஸனுக்கு அருகில் உள்ள கௌசிக என்ற ஊரில் குடி அமர்ந்தனர். அப்போதிருந்து இவர்கள் கௌசிக சங்கேதியர் என அழைக்கப்

படுகின்றனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் 300 குடும்பங்கள் அடங்கிய மற்றுமொரு குழு ஹன்சூர் வட்டத்திலுள்ள பெட்டதபுரத்தில் தங்கினர். இவர்கள் பெட்டதபுர சங்கேதிகள் என வழங்கப்படுகின்றனர். இவ்விரு குழுவினரின் பழக்க வழக்கங்கள் ஒரே தன்மையன. கௌசிக சங்கேதிகள் சிலபோது பெட்டதபுரப் பிரிவினுள் இருந்து பெண் கொள்வதுண்டு. அவ்வாறு மணம் செய்துகொள்ளப்பட்டவள் தன் கணவன் இல்லம் சேர்ந்தபின், தன் பெற்றோர் உடனும் உறவினர்களுடனுமான தொடர்பினை உடன் உண்ணுதல் உட்பட முற்றுமாக இழந்து விடுகிறாள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற குடகு கலவரங்களின்போது சங்கேதியர்கள் பிரிவைச் சேர்ந்த பல இளம் பெண்களைக் குடகர்கள் கைப்பற்றிச் சென்றனர். அவர்களுள் சிலர் பின்னர் மீட்கப் பட்டனர். அவ்வாறு மீட்கப் பட்டவர்களின் வழிவந்தவர்கள் இன்றும் மேற்கத்திய சங்கேதியர் அல்லது ஹரியங்கலர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களும், இன்னொரு உட்பிரிவினராக, பட்டணகரெ சங்கேதியர்களும் இருபது குடும்பங்களுக்கு உட்பட்டவராகவே உள்ளனர். சங்கேதியர் மிகுந்த பழமைப் பற்றுக்கும், கடின உழைப்பிற்கும் பெயர்போன பிராமணர்கள். வேதங்களைக் கற்றுக் காப்பாற்றுவதோடு அதே சமயத்தில் உலகியலிலும் செயல்திறம் உடையவர்களாகத் தங்கள் தோட்டங்களில் பயிர்த்தொழில் புரியும் இருதிறத்துத் தகைமைகளும் ஒருங்கே பெற்றுள்ளமைக்கு முன்மாதிரியாக இவர்களையே கூறுவர். ஏரினைப் பிடித்து வயலில் உழுவதைச் செய்வதில்லையெனினும் பிராமண சமுதாயத்தில் தங்கள் கைகளையும் செயற்பாடு உடையதாக வைத்திருக்கும் ஒரே பிரிவினர் இவர்களே.

11. பிரதமசாகையர்:– இவர்கள் வெள்ளை யசுர் வேதத்தைப் பின்பற்றுபவர்களாகையால் சுக்ல யசுர் வேதிகள் என அழைக்கப்படுகின்றனர். வெள்ளை யசுர், யசுர் வேதத்தில் முதல் பதினைந்து சாகைகளாக அமைந்துள்ளது. இதனாலேயே இது பிரதமசாகை என அழைக்கப்படுகிறது. பிரதமசாகையர் காத்யாயன சூத்திரத்தைப் பின்பற்றுவதால் காத்யாயனர், வாசு சனேயர், மத்யண்டனர் எனவும் சில சமயங்களில்



பத்மனாப சுவாமி

அழைக்கப்படுகின்றனர். இறுதி இரண்டு பெயர்களும் அவர்களுடைய பிரவர மற்றும் கோத்ர முனிவர்களிடையேயும் காணப்படுகின்றன. பல மொழி பேசும் மக்கட் பிரிவினருள்ளும் பிரதமசாகையர் காணப்படுகின்றனர். ஸ்மார்த்தர், ஆந்திரர், வைணவர் ஆகியவரிடையே இவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கருநாடக பிரதமசாகையரைக் கருநாடகப் பிரிவினரான மற்றப் பிராமணர்கள் தாழ்ந்தவராகக் கருதுவதில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரதமசாகையர் மத்யானப் பறையர் எனக் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது. அம் மாவட்ட விவரக் குறிப்பில் பின்வரும் பழைய கதையொன்று பதியப்பட்டுள்ளது:- "திருவலூர்த் தெய்வத்தைக், கோயில்திருமூலத்துப் பூசாரி அவரைச் சிறப்பிக்கத் தரப்படும் பலியின் போது அங்கு எழுந்தருளும்படி இறைஞ்சி வேண்டிக் கொண்டான். அந்தத் தெய்வமும் அவன் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தது. ஆனால், தான் அங்கு அவர்கள் ஏற்புடையதாகக் கருதாததொரு வடிவிலேயே எழுந்தருளப் போவதாக எச்சரிக்கையும் செய்தது. அத்தெய்வம் நான்கு வேதங்களும் நான்கு நாய்களாகப் பின்தொடரத் தோளில் மாட்டிறைச்சி தொங்க ஒரு பறையனுடைய கோலத்தில் அங்கே தோன்றி தன்னோடு வந்த நாய்களோடு வேள்வியில் பங்கும் ஏற்றது. வேள்விக்காகக் கூடியிருந்த பிராமணர்கள் அனைவரும் அங்கிருந்து ஓடிவிட்டனர். இதனால் சினமுற்ற தெய்வம் அவர்களை நாளும் நண்பகல் நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் பறையர்களாக ஆகும்படியாகச் சாபமிட்டது. நண்பகல் பறையர் என்ற பிரிவைச் சார்ந்த பிராமணர்கள் பல மாவட்டங்களிலும் உள்ளனர். நன்னிலத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள சேதணிபுரத்தில் அவர்கள் குடியிருப்பு ஒன்று உள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் நண்பகல் பறையர் என்போர் இறைவனால் இவ்வாறு சாபத்திற்கு உள்ளானவர் பரம்பரையில் வந்தவர்கள் என நம்பப்படுகிறது. அவர்கள் தங்கள் தூய்மைக்கேட்டின் காரணமாக நாளும் நண்பகல் நேரத்தில் ஒன்றரை மணி நேரம் வீட்டிற்கு வெளியே தங்கியிருந்து அதன்பின் குளித்து அதற்குப் பரிகாரம் செய்தவர்களாக மீண்டும் வீட்டினுள் நுழைவர். இவ்வாறு செய்பவர்கள்

மிகவும் மதிக்கப்படுகின்றனர். ஒரு சிலரே இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வாறு தங்கள் தூய்மைக் கேட்டினைப் போக்கக் கழுவாய் தேடிக் கொள்ளாதவர்களுடன் சமயப்பிடிப்புள்ளவர் உடன் உண்பதில்லை. இவர்கள் தங்களைப் பிரதமசாகையர் என அழைத்துக் கொள்கின்றனர்.'' இவ்வாறு இவர்கள் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்படுவதற்கான காரணமாகப் பல கதைகள் வழங்குகின்றன. இது தொடர்பாக, திரு இராமச்சந்திர ஐயர் தரும் கதை வருமாறு:— "யக்ஞவல்கியர் வைசம்பாயனரின் முக்கிய சீடராவார். தன் மாணவர்களோடு யாத்திரை சென்று திரும்பிய யக்ஞவல்கியர் தன் குருவிடம் யசுர் வேதமே மிக உயர்ந்ததென்றும், அதனைப் பரப்பத் தானும் தன் மாணவர்களுமே தகுதி வாய்ந்தவர்கள் என்றும் கூறினார். அவருடைய இந்தக் கூற்றினால் சினங்கொண்ட வைசம்பாயனர், அவ்வாறு அவர் கூறுவது பிராமணர்களுக்கு இழுக்காகும் எனக் கூறி இக் குற்றத்திற்குக் கழுவாய் தேடிக் கொள்ள சில தவநெறிகளை மேற்கொள்ளுமாறு கூறினார். யக்ஞவல்கியர் தானும் தன் மாணவர்களும் பல நற்செயல்களையும் சமயச் சடங்குகளையும் செய்திருப்பதாகவும், தொடர்ந்து அத்தகைய செயல்களைச் செய்ய இருப்பதாகவும், தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றம் கண்டுகொளளப்படாமல் புறக்கணிக்கத் தக்கதான அறபமானது என்றும் கூறினார். வைசம்பாயனர் தான் கற்றுத் தந்த வேதத்தைத் திரும்பத் தரும்படி யக்ஞவல்கியரிடம் கேட்டார். உடனே அவர் அதனை வெளியே விட்டெறிந்தார். அவ்வாறு வெளியே விட்டெறியப்பட்டது நெருப்புத் தணல்கள்போல் கனன்றன. அங்கிருந்த வைசம்பாயனரின் மாணவர்கள் நெருப்பைத் தின்னும் தித்திரிப்பறவைகளாக மாறி அவற்றை விழுங்கினர். அதன் காரணமாகவே இதனைத் தைத்திரீய சாகையெனவும் கிடீசனயசுர் எனவும் வழங்குகின்றனர். அதன்பின் யக்ஞவல்கியர் தன் குரு அறியாதபடி சூரினியனிடம் சென்று, அவனை வாழ்த்தித் தனக்கு வேதத்தைக் கற்றுத்தரும்படி கேட்டுக்கொண்டார். அதனை ஏற்றுச் சூரியன் ஒரு குதிரை உருக்கொண்டு அவருக்கு யசுர் வேதத்தைக் கற்றுத்தந்தான். அதுவே தற்போது யசுர் வேதத்தின் முதல் பதினைந்து சாகைகளாக உள்ளன. அதனை, அதன்பின் அவர்

தன் மாணவர்களான கண்வர், மார்யந்தினார், வஜசனேயர் ஆகியோருக்குக் கற்றுத் தந்தார். வராக புராணத்திலிருந்து, வைசம்பாயனர் சூரியன் சொல்லித் தந்த ரிக் வேதம் இழிந்ததாகக் கருதப்பட வேண்டுமெனவும், அதனைக் கற்கும் பிராமணர்கள் சண்டாளர்களாகக் கடவர் எனவும் சாபமிட்டதாகவும் தெரிய வருகின்றது.'' இந்த வரலாற்றின் பிறிதொரு வடிவமாகப் பின்வரும் கதை வழங்கி வருகின்றது. வைசம்பாயனர் நாள் தோறும் அரசவைக்குச் சென்று அரசனிடம் அட்சதை தந்து அவனை வாழ்த்தி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவரால் அரசவைக்குச் செல்ல முடியாது போயிற்று. அவர் அட்சதையைத் தன் சீடரான யக்ஞவல்கியரிடம் தந்து அதனை அரசரிடம் தந்து வருமாறு கூறினார். அதன்படி அரசன் அரண்மனைக்குச் சென்ற யக்ஞவல்கியர் அங்கு அரசனைக் காணாததால் தன்னுடைய பொறுமையற்ற இயல்புக்கேற்ப அட்சதையை அரசனுடைய அரியணையில் வைத்துவிட்டுத் திரும்பி விட்டார். அரண்மனைக்குத் திரும்பிய அரசன், தன் அரியணை பொன்னாக மாறிவிட்டிருப்பதையும் அதனைச்சுற்றிலும் சில செடிகள் முளைத்திருப்பதையும் கண்டான். இது பற்றி விளக்கம் கேட்டறிந்த அவன் இதற்கான காரணம் யக்ஞவல்கியர் விட்டுச் சென்ற சக்தி வாய்ந்த அட்சதையே எனத் தெரிந்தபின், வைசம்பாயனருக்கு அவருடைய சீடரான யக்ஞவல்கியர் மூலமாகவே அட்சதையைத் தொடர்ந்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொண்டு செய்தி அனுப்பினான். இதற்கு யக்ஞவல்கியர் மறுக்கவே அவரை அவருடைய குரு தன்னிடம் கற்றுக் கொண்ட வேதத்தைக் கக்கும்படி கேட்டார். உடனே அதனை அவர் கக்கிவிட்டுச் சூரியனிடம் சென்று அவனிடமிருந்து வேதங்களைக் கற்றுக் கொண்டார். சூரியன் ஓரிடத்தில் இல்லாமல் தொடர்ந்து இடம் பெயர்ந்தபடி இருப்பதால் வேதங்களைப் பிழையின்றியும் சரியான உச்சரிப்போடும் கற்றுக்கொள்ள அவரால் இயலவில்லை. பின் அவர் தன குரு வைசம்பாயனரிடம் திரும்பிய போது அவர் யக்ஞவல்கியரைச் சண்டாளனாகும்படி சபித்தார். இச்சாபம் பின்னர் சூரியன் தலையிட்டதன் பேரில் மாற்றிக் கொள்ளப்பட்டது.

12. குருக்கள்:– குருக்கள் அனைவரும் போதாயன சூத்திரத்

ளைதப் பின்பற்றுபவர்களே. கோயிலில் அர்ச்சகர்களாக உள்ள இவர்களை மற்றப் பிராமணர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதுவ தோடு இவர்களோடு உடன் உண்பதும் இல்லை. கோயில்களில் கூட இறைவனுக்குப் படைக்கும் உணவின மீது குருக்கள் தண் ணீரைத் தெளிக்கின்றாரே அன்றி அதனைத் தொடுவது இல்லை. இவர்கள் மற்றப் பிராமணர்களோடு சேர்ந்து ஒரே குடியிருப்பில் வாழ்வதும் இல்லை. அக்ரகாரங்களில் எதிலும் குருக்கள் வாழும் வீடு இருக்காது. மற்றப் பிராமணர்களின் குடியிருப்புக்களுக்கும் குருக்களின் வீட்டிற்கும் இடையே ஒரு சந்தாவது இருக்க வேண் டும் என்பதாகப் பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த விதி இன்று கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுவது இல்லை. சீர்காழி யில் பிராமணர்களும் குருக்களும் ஒரே தெருவில் குடியிருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். குருக்களிடையே பின்வரும் உட்பிரிவுகள் காணப்படுகின்றன.

1. திருவாலங்காடு
2. காஞ்சிவரம்
3. திருக்கழுக்குன்றம்

திருவாலங்காட்டுப் பிரிவினைச் சேர்ந்த குருக்கள் தங்கள் உடம்பில் தலை, நெற்றி, கழுத்து, மார்பு, கொப்பூழ், முழங்கால், வயிற்றின் இரு பக்கங்கள், முதுகு, ஒவ்வொரு கையிலும் மூன்றிடங்கள் எனப் பதினாறு இடங்களில் விபூதி பூசிக்கொள்கின்றனர். மற்ற இரு பிரிவினரும் தலை, நெற்றி, கழுத்து, மார்பு, முழங்கால்கள், கைகள் ஆகிய எட்டிடங்களில் மட்டுமே விபூதி பூசிக்கொள்கின்றனர். கோயிலில் அர்ச்சகர் களாகப் பணிபுரிய விரும்பும் குருக்கள் பல நிலைகளில் அதற் குரிய தீட்சை பெற வேண்டும். (பார்க்க: பண்டாரம்.) இவர்கள் ஸ்மார்த்தர்களைவிடச் சைவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட வர்கள். சங்கராச்சாரியார்களுடைய சீடர்களாக இவர்கள் தங் களைக் கருதுவது இல்லை. சமயநெறியில் பிடிப்புள்ளவர்களும், கோயில் அர்ச்சகர்களாக உள்ளவர்களும் பண்டாரங்களுடைய பிணத்தையும், பிராமணரல்லாதார் பிணத்தையும் பார்க்கக் கூடாது என்பது விதி. அவ்வாறு பார்ப்பது தங்களுக்குப் பாவத்தைச் சேர்ப்பதாகவும் தங்களைத் தீட்டுப்படச் செய்து

கோயில் வழிபாட்டுக்கு உரியவர்களல்லாதவர்களாகவும் செய்வதாகவும் இவர்கள் கருதுகின்றார்கள்.

II வைணவர்கள்:-

வைணவர்கள் அல்லது வைணவர்களான மாத்துவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட ஸ்ரீ வைணவர்கள் எனத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள் அனைவரும் தங்களைத் தனித்த பிரிவினராகக் கருதினாலும் ஸ்மார்த்தர்களாக இருந்து வைணவத்தைத் தழுவியவர்களே. தெலுங்கு ஸ்மார்த்தர்களாயிருந்து வைணவத்தைத் தழுவியவர்கள் ஆந்திர வைணவர்கள் எனப்படுகின்றனர். இவர்கள் தமிழ் வைணவர்களோடு கலக்காமல் தெலுங்கர்களுக்குரிய சில பழக்கங்களை விடாது கடைப்பிடித்து வருகின்றனர். வைணவர்களிடையே தென்கலை, வடகலை என இரண்டு தனித்த பிரிவுகள் உள்ளன. இவர்கள் தங்கள் நெற்றியில இடும் நாமத்தைக்கொண்டு பிரிவினை எளிதில் அறியலாம். வடகலையார் U வடிவிலும், தென்கலையார் Y வடிவிலும் நாமம் தரிப்பர். வெள்ளை நாமம் திருமண் எனப்படும் பீங்கான் செய்யும் மென்மையான வெள்ளைக் களிமண்ணால் இடப்படுகின்றது. நடுவினதான சிவப்புக் கோடு மஞ்சளினைக் கார அமிலத்தால் சிவப்பாக்கி இடப்படுகின்றது. சமய நெறியில் மரபு வழுவாதவர்கள் சிவப்புக்குப்பதிலாக மஞ்சளினையே நடுக்கோடாக இடப் பயன்படுத்துவர். மரபில் அழுந்திய ஸ்ரீ வைணவர்கள் தனித்தவர்களாக இருப்பதோடு தாங்கள் ஸ்மார்த்தர்களைப்போலத் தனித்ததொரு பிராமண சாதியாராக விளங்குவதாகக் கூறுவர். இராமானுசரின் போதனைகளுக்குப் பின்னரே வைணவர்கள் ஸ்மார்த்தர்களிலிருந்து தனித்துப் பிரிந்தனர். இவர்களின் எண்ணிக்கை பின்னர் வடமர்கள் பலர் சேர்ந்த காரணத்தால் அளவில் மிகுந்தது. தங்கள் கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்மார்த்தர்களின் குடும்பத்தில் சாவு நிகழ்ந்தால் தீட்டினைமேற்கொள்ளும் வைணவக் குடும்பங்கள் சில உள்ளன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வளவனூர், சவலை, பெரங்கியூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வைணவர்கள் அண்மையில் வைணவச் சமயத்தைத் தழுவியவர்கள் என்பதால் மரபில் அழுந்திய வைணவர்களால் தாழ்ந்தவர்களாகக் கருதப் படுகின்றனர். ஸ்மார்த்தர்கள் வைணவம் தழுவியதற்குச் சிறந்த

சான்றாக இருப்பவர்கள் வைணவர்களாகிவிட்ட தும்மங்குண்ட திராவிடர்களாவர். இவர்கள் இன்றும் ஸ்மார்த்தர் குடும்பங் களிலிருந்து பெண் எடுக்கின்றனர். ஆனால் ஸ்மார்த்தர்களுக்குப் பெண் தருவது இல்லை. எல்லா வைணவர்களும் உபநய னத்திற்குப் பின் வைணவ நெறிக்குரிய தீட்சை பெறும் சடங்கை மேற்கொண்டே ஆகவேண்டும். அப்போது இவர்கள் வலத் தோளில் சக்கரமும், இடத் தோளில் சங்கும் பொறிக்கப் படும். வைகானசரும், பஞ்சராத்ரரும் இவ்வாறு அடையாளம் பொறிப்பது தேவை இல்லை எனக் கருதுகின்றனர். தீக்கை தரும் சடங்கினை (சமாஸ்ரயணம்) பெரும்பாலும் ஒரு மடத்தின் தலைவரே நடத்தி வைப்பார். தீக்கை பெறுபவருடைய குடும் பத்தைச் சேர்ந்த பெரியவரும் இச்சடங்கைச் சில சமயங்களில் நடத்தி வைப்பதும் உண்டு. அத்தகைய குடும்பங்கள் ஸ்வயம் ஆசாரிய புருஷ குடும்பங்கள் என அழைக்கப்படுகின்றன.

வடகலையாருக்கு இரண்டு மடங்கள் உள்ளன. இவற்றுள் திருவள்ளூரிலிருந்த அகோபில மடம் தன் தலைமையிடத்தைக் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நரசிம்மபுரத்திற்கு மாற்றிக் கொண்டது. பரகாலசாமி மடம் மைசூர் மாநிலத்தில் உள்ளது. தென்கலையாருக்குச் செங்கல்பட்டு மாவட்டத்தில் வானமா மலையிலும், ஸ்ரீ பெரும்புதூரிலும், தென் ஆர்க்காடு மாவட்டத் தில் திருக்கோயிலூரிலுமாக மூன்று மடங்கள் உள்ளன. இவை முறையே தோதாத்ரி, எதிராசசீயர், எம்பெருமானார் மடங்கள் என அழைக்கப்படுகின்றன, வடகலையாருக்கும் தென்கலை யாருக்கும் கோயில் வழிபாட்டு முறைகளில் உள்ள பல வேறு பாடுகள் அவர்களிடையே பல பூசல்களைத் தோற்றுவித்துள்ளன. கோயில் திருவிழாக்கள் தொடர்பான ஊர்வலங்களின்போது வடகலையாரும் தென்கலையாரும் ஊர்வலமாகச் செல்லும் தெய் வத்தின் முன்னும் பின்னும் வடமொழி வேதங்களையும் தமிழ்ப் பிரபந்தங்களையும் பாடியபடி செல்வர். இவ்வாறு பாடத் தொடங்குமுன் சில சுலோகங்கள் சொல்லப்படும். அவற்றுள் ஒன்றில் வடகலையார் 'ராமானுச தயா பாத்ரம்' என்ற தொட ரைக் கூறுவர். தென்கலையார் 'ஸ்ரீசைலேச தயா பாத்ரம்' என்ற தொடரைக் கூறுவர். இதன் காரணமாக இருகுழுக்களுக்கிடையே யும் பூசல் மூளும். இந்த இரு பிரிவினருக்கிடையே உள்ள

முக்கிய வேறுபாடுகள் 1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பின்வருமாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது:–

''தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் இடையேயுள்ள கருத்து வேறுபாட்டுக்குக் காரணமான கோட்பாடுகள் 18.

அவற்றுள் பின்வரும் முக்கியமான சில கோட்பாடுகள் அடிப்படையானவை.-

1. விட்டுணுவின் துணைவியான இலக்குமி அவரோடு கூட எங்கும் வியாபித்திருப்பவளும் எல்லையற்றவளும் ஆக உள்ளவளா.

2. இலக்குமி மட்டுமே மோட்சத்திற்கு வழிசெய்பவளா அல்லது விட்டுணுவோடு சேர்ந்து அப்பேற்றினை அவள் அருள்வாளா அல்லது அவளே பேரின்ப வீடாவாளா.

3. நல்லவர்களும் அருள்பெற்றவர்களும் அவரவர் தகுதிக்கேற்பப் பலபடி நிலைகளிலான மோட்சத்தை அடைகின்றனரா அல்லது எல்லோருக்கும் ஒரேபடித்தான மோட்சம்தானா.

4. பரபத்தி எனப்படும் ஆன்மா இறைவனிடம் சரணாகதியடைதல் ஒருமுறை செய்வதற்கு உரியதா அல்லது ஆன்மாவின ஒவ்வொரு செயலின் போதும் செய்வதற்குரியதா.

5. பரபத்தி எல்லோரும் மேற்கொள்வதறகுரியதா அல்லது அதற்கென்றே பக்குவமும் பயிற்சியும் பெற்றவர்களுக்கே உரியதா.

6. ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவுள்ளும் எங்கும் வியாபித்துள்ள பரம்பொருள் உட்புகுந்து பிரிகக இயலாத படி ஊடுருவி நிற்கின்றாரா இல்லையா.

7. கடவுளின கருணை காரணங் கருதிக் காட்டப்படுவதா அல்லது இயல்பாகவே வெளிப்படுகினறதா.

8. கடவுளின் கருணைத திறம் ஆன்மாவின் இயல்பான குற்றங்களை மட்டும் மன்னிக்கக் கூடியதா அல்லது கடமை வழுவி இன்பத்தில் ஆழும் ஆன்மாவையும் கடைத்தேற்றுவதா.

9. கருமமும் ஞானமும் அவையே ஒருவனுக்கு வீடு பேற்றினைத் தருவனவா அல்லது அவற்றின் துணையால் பக்தி நெறியில் சேர்ந்துதான் வீடு பேற்றினைப் பெற வேண்டுமா.

10. மற்றச் சாதியாரிடையே உள்ள நல்லவைகளை அவர்களுடைய சமுதாயத் தகுதி நிலைக்கேற்பச் சகித்துக் கொள்ள வேண்டுமா அல்லது சாதிகளிடையே உள்ள வேறுபாடுகளைக் கருதாது போற்றப்பட வேண்டுமா.

11. பரபத்தி நெறிப்பட்டவர்கள் உடல் தொடர்பான கருமங்களினை முழுவதுமாக விட்டுவிடுதல் வேண்டுமா அல்லது தொடர்ந்து மேற்கொள்ளலாமா.

வடகலையாருக்கும் தென்கலையாருக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் திரு வி. என். நரசிம்ம அய்யங்கார் அவர்களால் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:—* தென்கலைப் பிரிவினர் படைப்புத் தொழிலில் விட்டுணுவோடு இலக்குமிக்கும் ஒரு பங்கு உண்டு என்பதனை மறுப்பதோடு அவளையும் ஓர் உயிராகவே சாதாரணமாகக் கருதுவர்; தங்கள் வழிபாட்டின் போது மணியினை அடிப்பது இல்லை; ஒருவரை ஒருவர் காணும்போதும், தங்கள் கடவுளை வழிபடும்போதும் ஒருமுறை தான் வணங்குவர்; மறைபொருளனவான தமிழ்ப் பாசுரங்களை வடமொழி மந்திரங்களுக்கும் வாழ்த்துக்களுக்கும் பதிலாகப் பயன்படுத்துவர்; சிரார்த்தச் சடங்கினை உலகியல் நடப்புக்கு ஏற்றதாக மாற்றம் செய்து கொண்டுள்ளதோடு கூடக் கைம்பெண்களின் தலையினை மழிக்கும் வழக்கினை மேற்கொள்வதில்லை; விதவைகள் தங்கள் தலையினை மழித்துக் கொள்ள வேண்டியது இல்லை என்ற தங்கள் கருத்தினை நிலைநாட்டத் தென்கலை ஸ்ரீவைணவர்கள் பின்வரும் மேற்கோள்களை முக்கியமான நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுவர்:-

கைம்பெண்கள் துன்பத்திற்கும் கேட்டிற்கும் ஆட்படும் சூழ்நிலையில்கூட மழித்தலையும், இனிப்புக்களை உண்பதையும், வெற்றிலை பாக்குப் போடுவதையும், மலர் சூடுவதையும்,

*இந்தியத் தொல்லியல் இதழ், III, 1874. (Ind. Ant. III, 1874.)

புணர்ச்சியையும், ஆண்களோடு பேசுவதையும், நகைகள் அணிவதையும் தவிர்க்க வேண்டும் (சாய்டில்யஹ்).

ஒருத்தி மணம் ஆகாதவளாயினும், கைம்பெண்ணாயினும் தன் தலை மயிரினை மழித்துக் கொள்வாளாகில் ரௌரவம் என்ற நரகத்தில் சென்று வீழ்வாள். கணவன் இறந்தானாகில் அவனுடைய மனைவி அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைத் தலையை மழித்துக் கொள்ளாமலேயே செய்தல் வேண்டும். ஒருத்தி எக்காரணம் கொண்டும் எப்பொழுதும் மழித்துக் கொள்ளுதல் கூடாது (சம்புஹக்).

ஒருத்தி மணம் ஆகாதவளாயினும், கைம்பெண்ணாயினும் தன் தலையை மழித்துக் கொள்வாளாகில் ரௌரவம் எனப் படும் நரகில் ஒரு கோடி கல்ப காலம் கிடத்தல் வேண்டும். தெரியாத்தனமாக ஒரு கைம்பெண் தன் தலையை மழித்துக் கொள்வாளாகில் தன் மூதாதையர்களின் ஆவிகளின் வாயின் உள்ளும் புறமும் மயிர் வளரச் செய்கின்றவள ஆவாள். சுருதிகளிலோ ஸ்மிருதிகளிலோ சொல்லப்பட்டிருக்கின்ற சடங்கினை அவள் தன் தலையை மழித்துக் கொண்டவளாகச் செய்வாள் ஆயின் அவள் ஒரு சண்டாளியாகவே பிறப்பாள் (மனு).

தன் ஆன்மாவின் வீடு பேற்றினையே குறிக்கோளாக உடைய பத்தி நெறிப்பட்ட ஒருத்தி, தலையில் முடியோடு இருப்பதால் பாவம் ஏதும் இல்லை. அவள் தலையை மழிப்பாளாயின் நரகில் சேர்வது உறுதி. ஒரு வைணவக் கைம்பெண் எப்பொழுதும் தலையை மழித்தல் கூடாது. அவள் அவ்வாறு அறியாமையால் செய்து கொள்வாளாயின் அவள் முகம் பார்க்கப்பட உரியது அன்று (விரித்த மனு காகேஸ்வர சம்ஹிதையில்).

ஒருவன் ஒரு பிரம்சாரி இரவலனைக் கச்செகி (கால்களிடையே விட்டுப் பின்னால் சொருகப்பட்ட பஞ்ச கச்சம்) உடன் பார்த்தாலும், ஓர் இல்லறத்தானைக் கச்செகியின்றிக் கண்டாலும், ஒரு கைம்பெண்ணைத் தலையில் மயிரின்றிக் கண்டாலும் தன் ஆடைகளுடனேகூட உடனே நீரில் குதிக்கக் கடவன் (ஆனந்த சம்ஹிதா).

வைணவச் சமயத்தைச் சார்ந்த கைம்பெண்கள் இந்த உலகத்தில் வாழும்வரை தலையில் மயிர் உடையவர்களாய் இருத்தல்

மிகவும் தகுதி வாய்ந்த செயலாகக் கருதப்படுகிறது (ஹயக்ரீவ சம்ஹிதா).

சென்னை மாநிலத்திலுள்ள வைணவர்களின் இரு பிரிவு களைப் பற்றியும் சி. இ. கென்னட் பாதிரியார் பின்வருமாறு எழுதுகிறார்:- "இரு பிரிவினரும் வடமொழி நூல்களையே ஆதாரமாகக் கொண்டிருப்பினும் வடகலையார் தென்கலை யாரைக் காட்டிலும் அவற்றை மிகுதியும் பயன்படுத்துகின்றனர். முன்னவர் ஆண்களின் ஆற்றலைப் போன்றதாகவே பெண்களின் ஆற்றலையும் மதிக்கின்றனர். சைவர்களின் கோட்பாட்டிற்கு உரியதான சக்தி தத்துவத்திற்கொப்பானதாகப் பேராற்ற லுக்கும் இச்சைக்கும் காரணமான தெனப்பெண்மையின் ஆற்றலைக் கொள்ளவில்லையெனினும் பரம்பொருளின் பெண் மைப் பண்புகளான கருணையும் இரக்கமும் அதற்குரியனவாகக் கொள்கின்றனர்.தென்கலையார் பெண்மையின் ஆற்றலை உடன் கொள்ளாமல் ஆன்மாவின் வீடுபேற்றினுக்குத் தொடர்பில்லா வகையில் அதன் உதவி வேண்டுமெனக் கருதுகின்றனர். இவ்விரு பிரிவினரிடையே காணப்படும் வியப்பிற்குரிய வேறுபாடு மனித ஆன்மாவின் விடுதலை பற்றியதாகும். இது பற்றிய இவர்களது கருத்துவேறுபாடு ஐரோப்பாவில் நிலவுகின்ற ஜினிவா நகரத்தில் வாழ்ந்த சமயச் சீர்திருத்தவாதியான கால்வின் நிறுவிய கொள் கையைப் பின்பற்றுவோருக்கும், ஆலந்து நாட்டை சேர்ந்த சீர் திருத்தக் கிளைச் சமயத்தவராகிய ஆர்மீனியஸின் கொள்கை யைப் பின்பறறுவோருக்கும் இடையே காணப்படும் வேறுபாடு களின் மறுபடி எடுப்புப் போன்றதாக உள்ளது. வடகலையைச் சேர்ந்தவர்கள் வீடுபேற்றினை அடைவதில் மனிதனுடைய விருப் பமும் உடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டுமென்பர். ஆனால் தென்கலையாரோ அது பரம்பொருளின் தடையில்லாக் கருணையின் காரணமாகத் தானே சித்திக்கும் என்பர். இதற்கு அவர்கள் எடுத்துக்காட்டும் ஒப்புமைகள தனித்தன்மையதான இந்தியப் பண்புடையவனவாக உளளன. வடகலையார் மர்கட நியாயம் எனக் கூறப்படும் குரங்கின் இயல்பினை ஒப்புமையாகக் கூறுவர். குரங்கின குட்டி தன் தாயினை விடாது கட்டிப் பிடித்திருபபதைப் போன்றது ஆன்மாவானது இறைவனி டம் கொண்டுளள பற்று என இவர்கள் ஒப்புமை காட்டுவர்.

தென்கலையார் மார்சாலநியாயம் என்ற கோட்பாட்டினை ஒப்புமையாகக் காட்டுவர். ஒரு பூனைக்குட்டியை அதன் தாய் எப்படி அது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கட்டாய மாகப் பாதுகாப்பான இடத்திற்குக் கவ்விச் செல்லுமோ அது போன்றது பரம்பொருள் ஆன்மாவிடம் காட்டும் கருணை என ஒப்புமை கூறுவர்.

மறைந்த மேஜர் எம். டபிள்யூ. கார் அவர்கள் தன்னுடைய தெலுங்கு, வடமொழிப் பழமொழித் தொகுப்புக்களில் பின் வருவனவற்றையும் உடன் இணைத்துள்ளார்:-

''குரங்கும் அதன் குட்டியும போல; குரங்கின் குட்டி அதன் தாயினை இறுகப் பற்றியிருப்பதைப் போல மனிதன் பரம் பொருளின் கருணையை வேண்டி அவரை இறுகப் பற்றியுள் ளான்.'' இதுவே வடகலையார் கோட்பாடு.

''பூனையும் அதன் குட்டியும் போல; வலிமை வாய்ந்த ஒன்று வலிமையற்ற ஒன்றினைத் தூக்கிச் சென்று காப்பாற்று வதை ஒப்பது கடவுளின் தடையற்ற பெருங்கருணைத் திறம்.'' இது தென்கலையார் கோட்பாடு.

''ஐயத்திற்கு இடமானதான ஒப்புமை காட்டி வாதிடும் இவர் களின் இந்தக் கோட்பாடுகளைவிட்டுவிட்டு இவர்களை அன்றாட நடைமுறையில் வேறுபடுத்திப் பெரும் பூசலுக்கு உள்ளாக்கி வழக்கு மன்றம் நாடும் அளவில் கருத்து வேறுபாடுடைய தாக இருக்கும் ஒன்றினைப் பற்றிக் கூறுகின்றேன். இது நெற்றி யில் இடும் சமயச் சின்னமான நாமம் தொடர்பானது. இரு பிரி வினரும் விட்டுணுவின் முக்கவர் சூல அடையாளத்தை நடுவில் மஞ்சள் அல்லது சிவப்புக் கோடாகவும். வெண் திருமண்ணால் இரு புறக்கோடுகளாகவும் இட்டுக் கொள்கின்றனர். ஆனால் வடகலைப் பிரிவினர் நடுக்கோட்டினை மூக்கெல்லை வரையே இழுக்கின்றனர். தென்கலையார் அதனை மூக்கின் மேலும் சற்று நீட்டி இழுக்கின்றனர். இரு சாராரும் தங்கள் நாமம் இடும் முறைதான் சரியானதென வாதிடுகின்றனர். கோயிலில் உள்ள சிலைகளில் இந்த அடையாளம் எப்படித் தீட்டப்

பட்டுள்ளது என்ற ஒரே ஆதாரத்தை வைத்தே இக்கருத்து வேறுபாட்டுக்கு முடிவு கூற முடியும். இதுவரை இதனைக் கண்டு கூறுவது இயலாததாகிவிட்டது. இந்தக் கருத்து வேறு பாடு தலையெடுத்த இடமான காஞ்சிவரத்திலேயே ஒன்றுக் கொன்று முரண்பட்டதான நம்பிக்கைக்கு உரியதல்லாத சாட்சி யங்கள் வழக்கு மன்றத்தின் முன் கொண்டு வந்து காட்டப் பட்டுள்ளன.''

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த ஹெப்பர், மண்டயர் என்ற இரு பிரிவினருள்ளும் முன்னவரே எண்ணிக்கையில் மிகுதியான வர். எண்ணிக்கையில குறைநதவரான பின்னவர்கள் மண்ட யம், மேல்கோட்டைப் பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றனர். இவர்களுள் சில குடும்பத்தவர் சென்னையில் குடியேறி வணிகர் களாகவும், கணக்கர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் தொழில் புரிந்து வருகின்றனர்.

மண்டயர்கள் தாங்கள் திருப்பதிக்கு அருகே உள்ள பகுதியிலிருந்து மைசூரில குடிபுகுந்ததாகக் கூறுகின்றனர். ஹெப்பர், மண்டயர் ஆகிய இரு பிரிவினரும் தமிழே பேசு கின்றனர் எனினும் இவர்களுடைய மணச் சடங்குகளில் கருநாடகத்திற்கே உரிய சில கூறுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வைணவச் சோழியர்கள் சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர் களாகவே கருதப்படுகின்றனர். வைணவச் சோழியர்களுக்கும் ஸ்மார்த்தர்களுக்குமிடையே மண உறவுகள் நிகழ்கின்றன. வைகானசர்களும் பஞ்சராத்ரர்களும் கோயில்களில் அர்ச்சகர் கள். இவ்விரு பிரிவினரும் தீட்சிதர் எனற பட்டப் பெயரைத் தரிக்கின்றனர். சிலபோது அவர்கள் நம்பி என அழைக்கப் பட்டாலும் இப்பட்டம் சாதானி கோயில் பணியாளர்களைக் குறிக்கவே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

மலபாரில் குடியேறியுள்ள தமிழ்ப் பிராமணர்களாகிய பட்டர் பிராமணர்களைப் பற்றி இங்குக் குறிப்பிட வேண்டும். பட்டர் என்ற பெயர் வடசொல்லான பட்டா (bhatta) என்பதிலி ருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. மலபார் மாவட்ட விவரக் குறிப் பில் பட்டர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

"பட்டர்கள் கிழக்குக் கடற்கரைப் பகுதி சார்ந்த பிராமணர்களிலிருந்து தங்களை வேறுபடுத்தும் எத்தகைய தனிப் பண்புகளையும் பெற்றிருக்கவில்லை. அவர்களைப் போன்றே இவர்களும் வணிகத்தில் ஈடுபட்டிருப்பதோடுகூட அலுவலகப் பணி, வழக்கறிஞர் தொழில், பிற அறிவு சார்ந்த பணிகள் ஆகியவற்றில் பெரும் அளவில் பணியாற்றி வருகின்றனர். விதிவிலக்காக உள்ள ஒரு பிரிவினரான சோழிய அல்லது ஆர்யபட்டர் எனப்படுவோர் தங்கள் குடுமியினைக் கிழக்குக் கடற்கரைப் பக்கத்தவர்களைப் போலப் பின்னால் முடிந்து கொள்கின்றனர். மலபார் சாதியாரைப் போலக் குடுமியை உச்சியில் முடிந்து முன் நெற்றியில் விழுமாறு வீடுவதில்லை. இவர்களும் கிழக்குக் கடற்கரையாரைப் போலத் தங்களுக்கே உரிய தனித் தெருக்களிலோ, ஊர்களிலோ வாழ்கின்றனர். பாலக்காடு வட்டத்திலுள்ள சில பட்டர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் பெரும் நிலக்கிழார்களாக இல்லை. தங்கள் உலகியல் நடைமுறைக்கு உதவுகின்ற புதிய கல்விமுறை வசதிகளை இவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர். பட்டர்களும், பெரும் அளவிலான எம்பிரான்திரிகளும் நாயர் சாதிப் பெண்களுடன் 'சம்பந்தம்' வைத்துக் கொள்ளும் உறவு முறையைப் பின்பற்றுகின்றனர். ஆனால் பிற வகுப்புப் பிராமணர்களுடன் சம்பநதம் வைத்துக்கொள்வது நம்பூத்ரிகளோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதைப்போல மதிப்புடையதாகக் கருதப்படுவதில்லை. நம்பூத்ரிகள் அருகியவர்களாகக் காணப்படும் பாலக்காடு வட்டம் இதற்கு விதிவிலக்கானதாக உள்ளது. இவ்வட்டம் தவிர வேறு இடங்களில் இவர்கள் உயர்குடியினரான பெண்களைத் துணைவர்களாகக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை."

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் ஆரியபட்டர்கள் தொடர்பாகப் பதியப்பட்டுள்ளவை வருமாறு:- "ஆரிய பட்டர் என்ற சொல் உயர்ந்த பிராமணர் எனப் பொருள்படுவது. ஆனால் சமூகத்தில் உண்மையில் அவர்கள் நிலை அப்படிப்பட்டதாக இல்லை. ஆரியபட்டர்களின் தொன்மையான வாழ்விடம் எனக் கருதப்படும் இராமேசுவரத்தில் இவர்கள் இன்று தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். தயக்கமின்றிச்

சூத்திரர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்வதும், தாங்களே முன் வந்து அர்ச்சகர் பொறுப்புக்களை வகிப்பதும் இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. இன்று மலபாரில் இவர்கள் சிறு அளவினராகக் காணப்பட்டபோதிலும் ஒரு காலத்தில் இவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்திருந்த தாகத் தெரிகின்றது. உயர்சாதியைச் சேர்ந்த பிரிவினரும் புற மணக்கட்டுப்பாடுடையவருமான மலபார் சத்திரியர் பிரிவின ருக்குப் பிராமண சாதியைச் சேர்ந்த கணவர்கள் பெரிய அளவில் தேவைப்பட்டார்கள். ஆனால் பிராமணர்களின் உயர்ந்த நெறியதான ஆன்மீக ஈடுபாட்டின் காரணமாக மலபார் பிராமணர்கள் கிரிஹஸ்தர்களாகவோ ஸ்நாதர்களாகவோ (தங்கள் வாழ்க்கையைக் கல்வியிலும், சமயச் சடங்குகள் செய் விப்பதிலும் ஈடுபடுத்திக் கொண்ட இல்லறம் மேற்கொள்ளாத துறவிகள்) இருப்பதால் தேவைக்கேற்பக் கணவன்மார்கள் கிடைக்கவில்லை. கோலத்து நாட்டு அரச குடும்பத்தினருக்கும் பெருஞ்செல்லூர் கிராமத்துப் பிராமணர்களுக்கும் இடையே ஏற் பட்ட கருத்துவேறுபாடு காரணமாக இத்தேவை மேலும் அதி கரித்துக் கன்னட, துளு பிராமணர்களைக் கோயிற் பணிகளுக் காவும் குடும்பச் சடங்குகளை நடத்துவதற்காவும் வரவழைத் துக் குடியமர்த்த வேண்டியதாயிற்று. கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து ஆரியபட்டர் என்போர் மலபாருக்குள் நுழைந்த தான முதல் குடியேற்றம் சரங்கனூர் அரசர்களின் விருப்பப்படி மேலே விளக்கப்பட்ட சூழ்நிலையில் நிகழ்ந்தது ஆகலாம். இந்தியத் தீபகற்பம் முழுதும் பிராமணர்கள் பெற்றிருந்ததான உயரிய நிலை தாழ்வடையத் தொடங்கி அவர்கள் பிழைப்புக்குப் போராட வேண்டியதான ஒரு நிலைமை உருவானது. நம்பூத் ரிகள் முதலில் மீண்டும் உயர்குடும்பங்களில் கணவர்களாகவும் அடுத்துத் தனக்கு ஒரு தொகை கொடுக்கும் குடும்பங்களில் தாலி கட்டுச் சடங்கினைச் செய்து கொள்ளவும் முற்பட்டு ஆரிய பட்டர்களை வெளியேற்றினர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட ஆரிய பட்டர்கள் நாயர்களின் உரிமையான உயர் குடும்பங்களில் தாலி கட்டு மணம் செய்து கொள்ளும் வழக்கினைத் தாங்கள் மேற்கொள்ளலாயினர். திருவாங்கூரில் உள்ள கருநாகப்பள்ளி வட்டத்தில் இரண்டு குடும்பங்கள் மட்டுமே உள்ளன. மலையாள

மொழியினையே இவர்கள் வீட்டில் பேசுகின்றனர். உடைமுதலிய பழக்க வழக்கங்களில் இவர்கள் மலையாளத்துப் பிராமணர்களி லிருந்து வேறுபடுத்த இயலாதவர்களாக உள்ளனர். ஆண்கள் மலபாரில் முடிந்த அளவு உயர்சாதிப் பிராமணக் குடும்பங்களில் பெண் கொள்கின்றனர். எனினும் அது போத்தி பிரிவினை விட உயர்ந்ததாக அமைவதில்லை. இவ்வாறு இவர்களால் மணந்து கொள்ளப்பட்ட பெண்கள் இத்தொடர்பு காரணமாகச் சமூக நிலையில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். ஆரியபட்டர் ஒருவருடைய மகளை மலபாரில பிராமண சாதியினைச் சேர்ந்த வர்களுக்கு மணமுடிப்பது என்பது இயலாததொன்று. அவள் மதுரை அல்லது திருநெல்வேலி மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு நிலைத்து வாழும் ஆரியபட்டர் குடும்பங் களில் அவர்களுக்குரிய சடங்கு நெறிப்படி மணம் செய்து கொடுக்கப்படுகிறாள். மணநிகழ்ச்சிக்கு முன்பு பெண்ணின் உடை தமிழர்கள் உடையினைப் போல மாற்றம் பெறுகின்றது."

III. ஆந்திரர்:-

தெலுங்கு பேசும் பிராமணர்கள் அனைவரும் ஆந்திரர். இவர்கள் தங்கள் மணம், சாவுத் தொடர்பான சடங்கு கள், பெண்களின் உடை, சமயச் சின்னம் தரித்தல் ஆகியவற்றில் தமிழ்ப்பிராமணர்களிலிருந்து வேறுபட்டவர்களாக உள்ளனர். தெலுங்குப் பிராமணப் பெண்கள் சேலையினைக் கால்களுக்கு நடுவே செலுத்தாமல் அணிவதோடு முந்தானைத் தலைப்பை இடத் தோளினைச் சுற்றி இடுவர். இவர்கள் சமயச் சின்னமாக நெற்றியில் விபூதியால் மூனறு படுகிடைக் கோடுகளை இழுத் துக் கொள்வர் அல்லது சந்தனக் கலவையால் ஒரு கோடு மட்டும் தீட்டிக் கொள்வர். அக்கோட்டின் நடுவே அக்சிந்தலு பொட்டு எனப்படும் கறுப்பு வட்டப் பொட்டுத தரிப்பர். இவர் கள் தாலி வட்டமான தங்கத் தகட்டாலானது. அதனை நூலில் கோத்து இரு பக்கமும் கறுப்புப் பாசி, கண்ணாடிப் பாசி மணிகளையும் சேர்த்துக் கோத்துக் கட்டிக் கொள்வர். நாக வளிப் பொட்டு எனபபடும் இரண்டாவது பொட்டு நாகவளி நாளன்று மணமகள் கழுத்தில் கட்டப்படும். மணமகன் விரதச் சடங்கில் ஈடுபட்டிருக்கும் சமயம் மணமகள் கௌரி பூசை யினைச் செய்வாள். நெல் அல்லது சோளம் நிரப்பப்பட்ட புதிய

தொரு கூடையில் அமர்ந்திருப்பாள். மணமகன் காசியாத்திரையிலிருந்து திரும்பியதும் மணமகனும், மணமகளும் மணமேடையில் எதிரெதிரே அமர்வர். அவர்களுக்கிடையே ஒரு திரை தொங்கவிடப்பட்டிருக்கும். மணமகன் மணமகள் கழுத்தில் பொட்டினை அணிவிப்பதற்குச் சற்று முன்பு திரையினை விலக்குவர். மணச்சடங்கின்போது மணமக்கள் மஞ்சள் நீரில் தோய்த்த ஆடையினையே நாகவளி நாள்வரை அணிவர். தமிழ்ப் பிராமணர்களுள் மணமகன் மஞ்சள் நீரில் தோய்த்த ஆடையினை அணிந்திருக்க மணமகள் பட்டாடை புனைந்திருப்பாள். பொட்டுக் கட்டி முடித்தவுடன் மணமக்கள் ஒருவர் மீது ஒருவர் அரிசியினைத் தூவிக் கொள்வர். கூடியிருப்பவர்களும் மணமக்கள் மீது அரிசியினைத் தூவுவர். இது தலம்பிரலு என்று வழங்கப்படும்.

தெலுங்குப் பிராமணர் பிரிவினர் மிகுந்த மூட நம்பிக்கைகள் உடையவர்களாக உள்ளனர். அவர்கள் வீட்டுப் பெண்கள் மிகப் பெரிய அளவில் பல விரதங்களை மேற்கொள்வர். தெலுங்கு, கன்னடப் பெண்கள் - அவர்கள் பிராமணராயினும் பிராமணரல்லாதவராயினும் - மேற்கொள்ளும் விரதங்கள் பற்றி நெல்லூர் மாவட்ட விவரக் குறிப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. இவர்கள் வழிபடும் முக்கிய தெய்வம் கௌரி. அவளைச் சிறப்பிக்கக் கீழே தரப்பட்டுள்ள பல சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. இச்சடங்குகள் இந்துப் பெண்களின் நம்பிக்கைகள், அச்சங்கள், ஆசைகள், பின்வரும் தீமையின் முன் உணர்வு, விருப்பங்கள் பற்றிய எண்ணங்களைத் தெளிவாக அறிவிப்பனவாக உள்ளன. பின்வரும் சடங்குகள் நிச்சயதார்த்தத்திற்குப் பின்னும் மணத்திறகு முன்னும் பெண்களால் நிகழ்த்தப்படுகின்றன:-

அட்லதட்டி:- முழு நிலவுக்குப் பின் மூன்றாம் நாள் பொழுது புலருமுன உணவு கொள்ள வேண்டும். பிற்பகல் வழிபாடு நிகழ்த்திப் பூசை முடித்தபின் பத்துச் சுமங்கலிகளுக்குப் பத்துப் பணியாரங்கள் வழங்க வேண்டும். இளைஞனான ஒத்துப் போகும் கணவனைப் பெறுவதே இவ்வழிபாட்டின் நோக்கம்.

உப்பு:- இனிய நீண்ட மணவாழ்க்கை அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டு முடிவின்போது ஒரு சுமங்கலிக்குப்

பானையில் விளிம்புவரை நிறைந்திருக்கும் படியாக உப்பினை வழங்குதல்.

அக்சயபந்தர்:- கைம்மை என்ற பேராபத்தைத் தவிர்க்கும் நோக்கத்தோடு ஆண்டின் இறுதியில் ஒரு சுமங்கலிக்குப் பானை நிறைய மஞ்சளை வழங்கிடுதல்.

உதயகுங்குமம்:- சூரியன் உதிக்கும் முன்பு ஐந்து சுமங்கலிகளின் நெற்றியில் குங்குமம் இடுதல். தன்னுடைய நெற்றியில் எப்பொழுதும் குங்குமம் திகழும்படியாகத் தான் விதவையாகும் ஆபத்தைத் தவிர்க்கும் நோக்கத்தோடு நடத்தப்படும் சடங்கு இது.

படிகருகுடுமுலு:- ஆண்டுக்கு ஒருமுறை பதினான்கு பணியாரங்களைப் பதினாறு ஆண்டுகள் தொடர்ந்து ஒரு சுமங்கலிக்குக் கொடுத்தல். இது செல்வம் மிகப் பெறச் செய்யப்படும் சடங்கு.

கார்த்திக கௌரி தேவி:- கண்ணுக்கு ஒளியூட்டப் பூசப்படுகின்ற கண் மை உராய்க்கும் அஞ்சனக் கல்லை ஒரு சுமங்கலிக்குக் காட்டித் தலையில் மஞ்சள் தோய்த்த அட்சதையை வைத்துக் கொள்ளுதல். கண்ணொளி கெட்ட உறவினர் மீண்டும் நல்ல பார்வை பெறுதலே இச்சடங்கின் நோக்கம்.

கண்டநொமி:- அரும் எனப்படும் காராக்கருணைக் கிழங்கை ஓராண்டு முழுதும் உண்ணாது விலக்கி வைத்தல். மற்றும் ஒரு சுமங்கலிக்கு வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆன கண்டத்தைக் கழுத்தில் அணியத் தருதல். இந்நோன்பினைச் செய்பவர்கள் கண்ணீர்த் துளி சிந்தி அழ வேண்டி வராது என்பதே இதனை நிகழ்த்துவதின் நோக்கம்.

கும்மடி கௌரி தேவி:- ஆண்டு முடிவில் ஒரு சுமங்கலிக்குக் காலையில ஒரு பூசணிக்காயும், மாலையில் ஒரு பூசணிக்காயும் வழங்குதல். அவள் உண்ணும் வேளையில் வெள்ளியாலான ஒரு பூசணி உருவம், கழுத்தில் அணியத் தங்கத்தாலான பூசணி

உருவமும் கூடத் தரப்படவேண்டும். மண வாழ்க்கை நெடிது நடைபெற இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

கண்டல கௌரி தேவி:- கணவனுக்கு எதிர்பாராது நிகழும் விபத்துக்களைத் தவிர்க்க இருபத்தைந்து வகைப் பொருட்களைச் சுமங்கலிகளுக்கு வழங்குதல். இவ்வாறு வழங்குவதை ஒவ்வொரு சுமங்கலிக்கும் ஐந்து பொருட்கள் என வழங்க வேண்டும்.

சித்திப்பொட்டு:- செல்வம் சேர ஐந்து சுமங்கலிகளின் நெற்றியில் அதிகாலையில் குங்குமம் இடும் சடங்கு.

இசல்ல சுக்கா:- மோர், மஞ்சள், குங்குமம், சந்தனம் ஆகியவற்றின் கலவைகளை வீட்டின் நுழைவாயில் கதவின் நிலையில் பூசுதல். இதுவும் செல்வம் சேரவே செய்யப்படும் சடங்கு.

தவிட நவொமி:- எக்காரணம் கொண்டும் தவிட்டைத் தொடாமல் இருத்தல். இதுவும் நீண்ட மண வாழ்க்கைக்கு உதவும்.

நித்ய சுருங்கரம்:- அழியாத அழகைப் பெறும் காரணத்திற்காக ஒரு சுமங்கலிக்குப் பாக்கு தந்து அவள் நெற்றியில் குங்குமம் இடுதல்.

நல்லபுசல கௌரி தேவி:- கைம்மைப்பேறு அடையாது தவிர்க்க நூறு கறுப்புப் பாசி மணியையும் ஒரு தங்கப் பாசி மணியையும் ஒரு சுமங்கலிக்கு வழங்குதல்.

மொச்செட்டி பத்மம்: ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபட்டு நான்கு சுமங்கலிகளின் நெற்றியில் முதல் ஆண்டு பொட்டிடுதல். எட்டுச் சுமங்கலிகளின் நெற்றியில் இரண்டாம் ஆண்டு பொட்டிடுதல். இப்படியே ஆண்டுக்கு நான்கு பேராகச் சேர்த்துக் கொண்டு 27 ஆண்டுகள் பொட்டிட்டு வருதல். 27 ஆண்டுகள் 27 நட்சத்திரங்களின் எண்ணோடு ஒப்புமை உடையது. இச்சடங்கை செய்யும்போது பேசாது இருத்தல் வேண்டும். இதன் நோக்கம் என்றும் குறையாத செல்வ வளம் பெறுதல்.

மொகமுடா செல்லு:- சடங்கு நிகழ்த்துபவள் ஒரு பித்தளைப்

பாத்திரத்தில் நாளும் பதின்மூன்று முறை முகம் அலம்பி ஒரு சுமங்கலிக்குச் சிறிது அரிசி, ஒரு முத்து, ஒரு பவளம் ஆகிய வற்றை அளித்தல்.

உண்தரல்லடத்தெ:- முழு நிலா நாளுக்குப் பின் பதின்மூன் றாம்நாள் பொழுது புலருமுன் உணவு உண்ணும் சிறுமி பிற் பகல் கௌரியை வழிபடுவாள். வழிபாட்டின் இறுதியில் தெய் வத்தை அனுப்பி வைக்கும்போது, அச்சிறுமி தலைக்கு ஐந்து பணியாரங்கள் வீதம் ஐந்து பெண்களுக்கு வழங்குவாள். இதன் நோக்கம் வருங்காலக் கணவன் தன்னிடம் ஆசையுடைய வனாய் இருக்கச் செய்தலாகும்.

வர லட்சுமி:- இம்மையிலும் மறுமையிலும் நலம் பெறவும், செல்வமும் வீட்டின்பமும் பெறவும் இலட்சுமி தேவியை வழி படுதல்.

வவில்ல கௌரி தேவி:- தன்னுடைய வருங்காலத் தலைவ னுக்கு ஏற்படும் எல்லா விதமான ஆபத்துக்களில் இருந்தும் அவனைக்காக்க ஆவணி மாதத்துக்கு நான்கு செவ்வாய்க் கிழமைகளிலும் கௌரி பூசை செய்து கடலைப் பருப்பினை மணமான பெண்களுக்கு வழங்கவேண்டும்.

சாவித்ரி கௌரி தேவி:- சூரியன் மகரத்தில் புகும் மகாசங்க ராந்தி நாளிலிருந்து ஒன்பது நாள்களுக்கு ஒன்பது வேறுவேறு பொருட்களை வழங்குதல். இச்சடங்கும் கணவனுடைய அன்பினைப் பெறுவதற்காகச் செய்யப்படுவது.

தசத்திக்குடி மங்கள வாரம்:- ஓராண்டு முழுதும் செவ்வாய்க் கிழமைகளில் முந்தின நாள் சமைத்த பழைய சோறு தவிர வேறு எதனையும் உட்கொள்ளாது, தன்னைத் தானே வருத்திக் கொள்ளும் விரதமாகும். ஒரு சுமங்கலிக்கும் இதே சோற்றினை அந்த நாள்களில் வழங்க வேண்டும்.

திருமண வயதை அடைந்த பெண்கள் மேற்கொள்ளும் சடங்குகள் சில வருமாறு:-

பிரபட்ச ஆதிவாரம்:- குழந்தைகள் பிறக்க வேண்டும் என்ற

நோக்கத்தோடு மணமான தம்பதியரை ஞாயிற்றுக்கிழமையில் வழிபட்டு அன்று ஒரு வேளை மட்டும் உணவு கொள்ளுதல்.

அபடலேணி ஆதிவாரம்:- ஞாயிறுதோறும் ஒரு வேளை மட்டும் உண்டு, ஐந்து சுமங்கலிகளுக்கு ஐந்து பணியாரங்களை ஒரு தட்டில் அரிசி, இரவிக்கைத்துணி முதலியவற்றோடு வழங்குதல். இது செல்வம் சேர்வதற்காக மேற்கொள்ளப்படும் சடங்கு.

ஆதிவாரம்:- ஓர் ஆண்டு முழுவதும் ஓர் உணவுப் பொருளை முழுவதுமாக விலக்கல்; அடுத்த ஆண்டில் அதனோடு இன்னொரு உணவுப் பொருளையும் விலக்கல். இப்படியாக ஐந்து பொருட்களை ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து விலக்கல்.இதனோடு ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு வேளை மட்டும் உணவு கொள்ள வேண்டும். மேலும் தெய்வத்தின் வழிப்பாட்டை முடித்துக் கொள்ளும்போது பிராமணர்களுக்கு ஆடைகளை அன்பளிப்பாக வழங்கல். இச்சடங்கின் நோக்கம் இறந்த பிறகும் கணவனோடு ஒன்று சேர்வதற்காக எனத் தெரிகின்றது.

சப்பிட்டி ஆதிவாரம்:- குழந்தைகள் நெடுநாள்வரை வாழ வேண்டி ஓர் ஆண்டு முழுவதும் ஞாயிற்றுக் கிழமைகளில் உப்பு சேர்த்துக் கொள்ளாமல் உண்ணுதல்.

உடையபத்மம்:- ஓராண்டு முழுதும் நாளும் குளித்துப் புனிதத் துளசி மாடத்தின் அருகே அரிசி மாவால் தாமரையினைக் கோலத்தில் வரைதல். இச்சடங்கின் நோக்கம் இறந்த கணவனோடு மறு பிறவியில் ஒன்றாக இணைதல்.

கிருஷ்ண துளசி:- கைம்பெண்ணாதலைத் தவிர்ப்பதற்காக இச்சடங்கினை மேற்கொள்பவர்கள் பதின்மூன்று இணை பணியாரங்களை ஒரு தங்கக் குவளையில் வைத்து ஒரு பிராமணருக்கு வழங்குவர்.

கார்த்திக சாலிமிதி:- சர்க்கரைப் பாகில் அரிசி மாவினைக் கலந்து மூன்றாண்டுகள் தரும் சடங்கு இது. முதலாம் ஆண்டில் ஒன்றரை சேர் அரிசியும், இரண்டாம் ஆண்டில் இரண்டரை சேர் அரிசியும், மூன்றாம் ஆண்டில் இருபத்தாறு சேர் அரிசியும்

வழங்கப்பட வேண்டும். இறந்த குழந்தைகள் மறு பிறவியில் ஒன்று சேர வேண்டி இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.

கைலாச கௌரி தேவி:- ஒன்றரை வீசை மஞ்சளை வேறு யாருடைய உதவியும் இல்லாமல், இடையே யாரோடும் பேசாமல் தூளாக இடித்து அதனை 101 சுமங்கலிப் பெண்களுக்கு வழங்க வேண்டும். இது கைம்பெண்ணாவதைத் தவிர்க்க நிகழ்த்தும் சடங்காகும்.

தைரிய லட்சுமி:- கண்ணீர் விட்டுக் கலங்காமல் இருக்க வேண்டி சுமங்கலிகள் மாய விளக்கினை ஒரு சவரன் எடையுள்ள திரி போட்டுக் கால்வீசை நெய் வார்த்து ஏற்றுவர்.

தனபாலறு:- ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பிராமணருக்கு வெவ்வேறு வகைத் தானியங்களை வழங்குதல். மாதவிடாய் விலக்கின்போது ஏற்படும் ஒழுக்கின் பாவத்தைப் போக்க இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.

நதிகேசுடு:- ஐந்து சேர் அளவுள்ள ஒன்பது வகைத் தானியங்களை வழங்குதல். அவை வீட்டிலேயே உணவாகத் தயாரிக்கப்பட்டு உண்ணப்பட வேண்டும். இது செல்வம் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் சடங்காகும்.

நித்யதான்யமு:- கைம்மைப் பேற்றினைத் தவிர்ப்பதற்காக நாளும் ஒரு பிடி தான்யத்தை ஒரு பிராமணருக்கு வழங்குதல்.

பாலல கௌரி தேவி:- நல்ல உடல் வளமுள்ள குழந்தைகளைப் பெறவேண்டிப் பதினாறு பல்வேறு வகைப்பட்ட பழங்களை மணமான பெண்ணொருத்திக்கு வழங்கும் சடங்காகும்.

பாமிடிபூவுலு:- கைம்மைப் பேற்றினைத் தவிர்க்கவும், கணவன் மீது செல்வாக்கு உடையவர்களாக இருக்கவும் பெண்கள் மணம் செய்து கொண்ட புதிதில் சிலகாலம் தொடர்ந்து நாளும் பதின்மூன்று மலர்களை வழிபட்டு, அதன் பின் ஒரு பிராமணருக்குப் பதின்மூன்று மலர்களின் அடையாள

மாகப் பொன்னால் ஆன மலர்களை வட்டவடிவமான காசின் மேல் வைக்கப்பட்ட இலிங்கத்துடன் தரவேண்டும்.

முப்பத்தி மூன்று பூர்ணமலு:- கைம்மைபேற்றினைத் தவிர்க்க முப்பத்தி மூன்று முழு நிலாக்களின் போது பணியாரங்கள் படைக்கவேண்டும். முதல் முழுநிலாவின் போது ஒரு பணியாரமும் இரண்டாம் முழுநிலாவின்போது இரண்டு பணியாரங்களும் என்ற முறையில் முப்பத்தி மூன்று பணியாரங்களை உண்ண வேண்டும்.

முடுகர்தெலு:- செல்வ வளம் பெறப் பெண்கள் எழுநூறு பருத்தித் திரிகளை எண்ணெயில் நனைத்து மூன்று முழுநிலா விழாக்களின்போது ஏற்றுவர். சங்கராந்தி, சிவராத்திரிகளிலும் இவை ஏற்றப்படும்.

மக கௌரி தேவி:- மாசி மாதத்தில் (மக மாதம்) கைம்மைப் பேற்றினைத் தவிர்க்கக் கௌரி தேவி வழிபடப்படுவாள்.

விட்டுணுகண்ட:- மேலே கூறிய அதே காரணத்திற்காகப் பதின்மூன்று இணை பணியாரங்களை ஒரு புதிய பானையில் வைத்து மணமான பெண்களுக்குத் தரவேண்டும்.

விட்டுணு விதிய:- மாத விலக்கின் போது ஏற்படும் ஒழுக்கின் காரணமான பாவத்தைப் போக்க அமாவாசைக்கு அடுத்த இரண்டாம் நாள் உப்பின்றி உணவு உட்கொள்ளப்படும்.

சோகமுவேனி சோமவாரம்:- சாகக் கொடுத்த குழந்தைகளை மீண்டும் பெற ஒவ்வொரு திங்கட்கிழமையும் உப்பில்லாமல் உணவு கொள்ளுதல்.

சித்ரகுப்துலு:- எதிர்கால நலங்கருதிப் பன்னிரண்டு திரியிட்டு விளக்கேற்றி வழிபாடு செய்தல்.

சுக்ரவாரம்:- செல்வம் பெறவேண்டும் என்பதற்காகப் பெண்கள் சிலபோது வெள்ளிக்கிழமைகளில் ஒரு வேளை

மட்டும் உணவு கொள்வர். வழிபாட்டின் முடிவில் திருமணமான ஐந்து பெண்களையும் அப்போது உண்பிப்பர்.

சௌபாக்கியதட்டெ:- கைம்மைப் பேற்றைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படும் மற்றுமொரு சடங்கு. அமாவாசைக்கு அடுத்த மூன்றாம் நாள் யாருடைய உதவியும் இன்றி வாய் பேசாது ஒன்றே கால் வீசை மஞ்சளைப் பதின் மூன்று சுமங்கலிப் பெண்களுக்கு வழங்குதல்.

சிஸரப்தி துவாதசி:- வருங்கால இன்பங் கருதி விட்டுணுவிற்கு உரியதான வழிபாட்டு நாளில் உண்ணா நோன்பு மேற்கொள்ளுதல்.

சினுகு:- புதிதாக அறுவடை செய்த சோளத்துடன் அரிசி மாவு, பால் ஆகியவற்றைக் கலந்து உண்ணுதல். இப்பிறவியில் கைம்மைப் பேற்றைத் தவிர்க்கவும், மறுபிறவியில் இன்பம் பெருகவும் செய்யப்படும் சடங்கு இது.

அடிக்கடி தங்கள் குழந்தைகளைச் சாகக் கொடுக்கும் பெண்கள் பின்வரும் இரு சடங்குகளையும் குழந்தைகள் இப்பிறவியில் நிலைக்கவும் அடுத்த பிறவியில் உடன் சேரவும் செய்வர்.

குண்டெல்லா அமாவாசை (hare's new moon):- பதின்மூன்று மாதங்கள் பதின்மூன்று வேறுவேறு பொருட்களை அமாவாசை நாள்களில் மணமான ஒரு பெண்ணுக்கு வழங்குதல்.

கதுபுக்கடலானி கௌரிதேவி:- பதின்மூன்று இணை பணியாரங்களைப் பதின்மூன்று சுமங்கலிகளுக்கு வழங்குதல்.

மாதவிடாய் ஒழுக்கு நின்ற பிறகு அவை நிகழ்ந்த காலத்தில் ஏற்பட்ட பாவங்களுக்குப் பரிகாரமாகப் பின்வரும் சடங்குகள் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன:-

அன்னமு முட்டானி ஆதிவாரம்:- வள்ளி முதலான கிழங்கு வகைகளை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் உண்டு வருதல். சிலபோது அதற்கு மேலும் நீண்டகாலம் தொடர்நது உண்பர்.

ருஷி பஞ்சமி:- பாத்ரபத மாதத்தின் (புரட்டாசி) ஐந்தாம் நாள் ஐந்து காரை (Canthium parviflorum) இலைகளைத் தின்று ஒரு கை நெய் குடித்தல் வேண்டும்.

கோமயானி:- ஓராண்டுக் காலம் தொடர்ந்து காலையில் மூன்று பசுஞ்சாண உருண்டைகளைத் தின்று வரவேண்டும்.

லட்சவட்டுலு:- இலட்சதீபம் ஏற்றி வழிபாடு செய்தல்.

லட்சுமிவரபு ஏகாதசி:- வியாழக்கிழமைகளில் ஏகாதசி திதி வரும் நாளிலிருந்து உண்ணா நோன்பிருந்து, துளசிச் செடியினைப் பதினொரு நாள்களுக்கு வழிபடுதல் வேண்டும்.

மார்க்கசீர லட்சுமி வாரம்:- குடும்பத் தலைவி மார்க்கசிர (மார்கழி) மாதத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் செல்வத் திற்குத் தேவதையான இலட்சுமியின் அருளை வேண்டி வழிபாடு செய்வதையே தன் கடமையாக மேற்கொள்ளுதல்.

சோமிசோமவாரம்:- திங்கட்கிழமையில் அமாவாசை வரும் போதெல்லாம் செய்யப்படும் சிறப்பு வழிபாடு. அந்நாளில் 360 பொருட்களில் ஏதேனும் இரண்டு மூன்று பொருட்களை வழங் குதல். இது பாவங்களுக்குப் பரிகாரமாகவும் வருங்காலத்தில் இன்பம் பெருகவுமாகச் செய்யப்படுவது.

குழந்தைப் பேற்றால் பெறுதற்குரிய இன்பங்கள் வாய்க்கப் பெறாதபடி இயற்கை வஞ்சனை செய்துவிட்ட பெண்கள் அப் பேற்றினை வேண்டிச் செய்யப்படும் சடங்குகள் பலவாம். அவற்றுள் ஒன்று பின்வருவது:-

அஸ்வதபிரதட்சணம்:- ஊர்ப்புறங்களில் வேப்பமரமும் அரச மரமும் ஒன்றை ஒன்று தழுவியபடி வளர்ந்திருக்கக் காணலாம். நெடுங்காலம் தொடர்ந்து, நாளும் ஒரு பெண் பலமுறை இம் மரங்களைச் சுற்றிவருவதே இச்சடங்காகும்.

தெலுங்குப் பிராமணர்களிடையே காணப்படும் உட்பிரிவுகள் வருமாறு:-

அ. வைதிகி

1. முரிகி நாடு
2. தெலகன்யம்
3. வெல நாடு
4. கசல் நாடு
5. கர்ண கம்மலு
6. வேகி நாடு
7. கோனெசீமை
8. ஆரம திராவிடர்
9. ஆராத்தியர்
10. பிரதமசாகை

ஆ. நியோகி

1. ஆறுவேள
2. நந்தவரிகுலு
3. கம்மலு
4. பெசலவயாலு
5. பிராங்கநாடு

இ. தம்பல

ஈ. குடியேறியவர் (Immigrants)

1. புதூர் திராவிடர்
2. தும்மகுண்ட திராவிடர்

மேலே கூறப்பட்ட பிரிவினர் அனைவருமே அகமணக் கட்டுப்பாடுடைய கூட்டத்தார். தமிழ்ப் பிராமணர்களான குருக்கள் பிரிவினருக்குச் சமமான தம்பலர் தவிர மற்றப்பிரிவினர் அனைவரும் ஒருவரோடு ஒருவர் உடன் உண்பர். வைதிகிகள் நியோகிகளைவிட உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். முன்னவர் மீசை வளர்ப்பதில்லை. பின்னவர் மீசை வளர்க்கின்றனர். சிராரர்த்தச் சடங்கின்போது நியோகிகள் முன்னோர்களின் பிரதிநிதிப் பிராமணர்களாக உண்ண அமர்வதில்லை. இதற்காக வைதிகி பிராமணர்களையே அமர்த்துகின்றனர். கிருட்டிணா மாவட்டத்திலுள்ள நந்திகம வட்டத்தில் வழக்கில் உள்ளதைப் போலச் சில இடங்களில் நியோகிகள் பிராமணர் என்ற பெயரால் அழைக்கப்படுவதில்லை. வைதிகிகளே அவ்வாறு

அழைக்கப்படுகின்றனர். நியோகிகளிடமே பிராமணர்கள் பற்றிக் குறித்துக் கேட்டால் அவர்கள் வைதிகிகளையே சுட்டிக் காட்டுவர்.

வெலநாடு, முரிகி நாடு, வேகி நாடு ஆகியன நிலப்பகுதிகளின் பெயரால் அமைந்த பிரிவுகள் எனத் தெரிகின்றது. பிராமணரல்லாத சாதியாரிடையேயும் இத்தகைய பெயர்கள் காணப்படுகின்றன. ஆராத்தியர்பற்றித் தனிக் கட்டுரை உள்ளது. (பார்க்க:ஆராத்தியர்) கர்ண கம்மர் பிரிவினருள்ளே ஓகோடி கொள்ளேடு போன்ற சில உட்பிரிவுகள் உள்ளன. அனைத்துப் பிரிவினரும் ரிக் சாகையைச் சேர்ந்தவர்களே. தெலகன்யம் பிரிவில் சிலர் ரிக் வேதத்தையும், மற்றவர் வெள்ளை யசுர், கறுப்பு யசுர் வேதத்தையும் பின்பற்றுகின்றனர். நந்தவரிகுலு பிரிவினர் அனைவரும் ரிக் வேதிகளே. தேவாங்கர்களுக்குரிய தெய்வமான சௌடேசுவரியை இவர்கள் தங்கள் காப்புத் தெய்வமாகக் கருதுகின்றனர். நந்த வரிகுலு பிராமணர் ஒருவர் தேவாங்கர் கோயிலுக்குப் போவாரானால் அங்குள்ள பூசாரி அவரை மிகுந்த மரியாதையோடு நடத்துவதோடுகூடத் தற்காலிகமாகத் தனது பொறுப்பினை அவரிடம் ஒப்படைத்து விடுவார். நந்தவரிகுலு பிராமணர்களே தேவாங்கர்களுக்குக் குருவாகவும் உள்ளனர்.

தெலுங்குப் பிராமணர்களிடையே காணப்படும் தனிப்பட்ட சிறப்பு, பிராமணர் அல்லாத தெலுங்குச் சாதியாரிடையே காணப்படுவது போன்ற இல்லப் பெயர்களை இவர்களும் பெற்றிருப்பதுதான். அப்பெயர்களுள் சில வருமாறு:- கோட்டை, லங்கை, புச்சா (*Citrullus Colocynthis*) சிந்தா (புளி), காகி (காக்கை) நியோகிகளின் இல்லப் பெயர்கள் சிலபோது ராசு என்ற பின் இணைப்பினைப் பெற்றதாக இருக்கும்.

IV கருநாடகர்:-

கருநாடகர் அல்லது கன்னடம் பேசும் பிராமணர்களின் உட்பிரிவுகள் பின்வருமாறு:-

அ. ஸ்மார்த்தர்.

1. அறுவத்து வொக்காலு
2. படகநாடு

3. ஹொசல் நாடு
4. ஹொசனிகெ (அல்லது) வைசானிகெ
5. கம்மெ (பொப்ரு, கர்ண, மற்றும் உல்சா)
6. சீர்நாடு
7. மாரகர்

ஆ. மாத்வர்

1. அறுவேல
2. அறுவத்து வொக்காலு
3. படகநாடு
4. பெண்ணத்தூரர்
5. பிரதமசாகை
6. ஹைடெரபதி

கருநாடகப் பிராமணர்கள் சடங்குகளை மேற்கொள்வதில் பெரிதும் ஆந்திரப் பிராமணர்களின் நெறியையே பின்பற்று கின்றனர். அவர்களைப் போலவே இவர்களும் விரதங்களுக்குச் சிறப்புத் தருகின்றனர். மாத்வ கருநாடகர்கள் கருநாடக அல்லது ஆந்திர ஸ்மார்த்தப் பிரிவினின்றும் அண்மையில் மாத்வர்களாக மாறியவர்கள். பெண்ணத்தூரர் பிரிவினர் மாத்வர்களாக மாறிய தமிழ்ப் பிராமணர்களாகக் கருதப்படு கின்றனர். இவர்கள் தமிழ்ப் பிராமணர்களுக்கே உரிய சில பழக்க வழக்கங்களை விடாது பின்பற்றி வருகின்றனர். இவர் கள் மணமானதற்கான அடையாளச் சின்னமாகப் பொட்டினை அணியாது தமிழ்த் தாலியையே அணிகின்றனர். ஒரே பிரி வினைச் சேர்ந்த ஸ்மார்த்தர்களுக்கும் மாத்வர்களுக்குமிடையே மண உறவுகள் சாதாரணமாக நிகழ்கின்றன. சமய மரபு வழுவாத மாத்வர்களைத் தவிர மற்றவர்கள் கருநாடக ஆந்திர ஸ்மார்த்தர்களோடு ஒருங்கிணைந்து உண்பர்.

திரு லெபிஸ் ரைஸ் மாரகர்களைப் பற்றிப் பின்வருமாறு

விவரித்துள்ளார்:-* இவர்கள் தங்களைப் பிராமணர்கள் எனக் கூறிக்கொண்டாலும் யாரும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் இந்துக் கடவுளர்களான மும்மூர்த்திகளை வழிபட்டாலும் பெரும்பாலனவர்கள் வைணவர்களாக இருப்பதோடு நெற்றியில் முப்பட்டையான நாமமும் தரிக்கின்றனர். இவர்கள் தங்களை ஹலெ கன்னடிகர் என்றோ, ஹலெ கருநாடகர் என்றோ அழைத்துக் கொள்கின்றனர். மாரக† என்று அழைக்கப்படுதலை இழிவாகக் கருதும் இவர்கள், அவ்வாறு மற்றவர்கள் தங்களை அழைத்தலை விரும்புவதில்லை. இதன் காரணமாகவே கணக்கெடுப்புப் பதிவில் இவர்களில் பலர் தங்களை வேறு பிரிவினைச் சேர்ந்த பிராமணராகப் பதிந்துள்ளனர். சிருங்கேரி மடத்தின் தலைவரான சங்கராச்சாரியார் ஒருவரின் சீடரின் வழிவந்தவர்கள் என இவர்களைப் பற்றிக் கூறப்படுவதோடு இவர்களுடைய முனனோர்கள் பிராமணர்கள் சாதியிலிருந்து விலக்கப்பட்டதற்கான பின்வரும் வரலாற்றுக் கதை ஒன்றும் வழங்குகின்றது. ஒருநாள் சங்கராச்சாரியார் தன்னுடைய சீடர்களைச் சோதிப்பதற்காக அவர்கள் முன்னிலையில் கள்ளினைப் பருகினார். அவருடைய சீடர்களும் குருவினைப் பின்பற்றி நடப்பது பாவமாகாது எனக் கருதித் தாராளமாகக் கள்ளினைக் குடித்தனர். அடுத்து ஒரு கசாப்புக் கடையைக் கடக்கும்போது சங்கராச்சாரியார் அங்கே இரத்தலை மேற்கொண்டார். அந்தக் கசாப்புக் கடைக்காரனிடம் இறைச்சியைத் தவிர ஈவதற்கு வேறு எதுவும் இல்லாததால் அவன் இட்ட இறைச்சியையே குருவும் சீடர்களும் உண்டனர். இந்து சாஸ்திரப்படி மதுவையும் மாமிசத்தையும் உண்ட பாவத்தைப் போக்கக்கூடிய சக்தி உலைக்களத்தில் உருக்கிய நிலையில் உள்ள இரும்புக்கு மட்டுமே உண்டு. எனவே, சங்கராச்சாரியார் ஒரு கொல்லன் உலைக்களத்திற்குச் சென்று அவனிடம் பழுக்கக்

---

* மைசூர் மற்றும் குடகு விவரக் குறிப்பு, 1877. (Mysore and Coorg Gazetteer, 1877.)

† மாரகர் என்ற பெயர் மா என்ற எதிர்மறை அடை அர்க என்ற சூரியனைக் குறிக்கும் சொல்லுக்கு முன் அமைந்து பிராமணர்கள் வழக்கமாக வழிபடும் சூரியனை வழிபடாதவர்கள் என்ற பொருளைத் தருவதாகக் கருதப்படுகிறது.

காய்ச்சிய சிறு இரும்புத் துண்டு ஒன்றை இரந்து பெற்று விழுங்கிப் புனிதரானார். அவருடைய சீடர்களால் அவரைப் பின்பற்றியவர்களாகக் காய்ச்சிய இரும்பை விழுங்க இயலவில்லை. எனவே, விலக்கப்பட்ட மது மாமிசங்களை உண்ட பாவத்தை மன்னித்து, அவரைப் பின்பற்றியவர்களாகவே இருக்க வேண்டினர். சங்கராச்சாரியார் அவர்கள் பாவத்தினை மன்னிக்க மறுத்து அவர்களை மற்ற ஆறு பிரிவுப் பிராமணர்களோடு ஒன்றாயிருக்கத் தகுதியற்றவர்கள் எனச் சபித்தார். இச்சாதியார் தங்களை மீண்டும் பிராமணர்களாகச் சேர்த்துக் கொள்ள அரும்பாடுபட்டனர். இவர்களுள் சிலர் அண்மையில் பரகாலசாமியின் சீடர்களாகி உள்ளனர். இவர்கள் மேற்கொண்டுள்ள முக்கிய தொழில் உழவும் கிராமக் கணக்கர்களாக அரசுப்பணி பார்த்தலும் ஆகும்.'' 1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில், ''இந்தப் பிரிவைச் சேர்ந்த அறிவு நுட்பம் வாய்ந்த பெரிய மனிதர்கள் சிலர் இதே கதையினை வேறு வடிவினதாக மாற்றிக் கூறுவர். திவான் பூர்ணய்யாவின் காலத்திலோ அதற்குச் சற்று முன்போ இந்தச் சிறு பிரிவினைச் சேர்ந்த ஒருவர் அரசில் உயர்பதவி வகித்த போது சிறிதும் கண்ணோட்டம் இன்றி மக்களைக் கொடுந்தண்டனைக்கு உள்ளாக்கியதால் மாரகத்தினைச் செய்யும் கிரகம் எப்படி அஞ்சப்படுகிறதோ அது போல அவரிடம் அச்சம் பாராட்டியதால் அவரை மாரகர் என அழைக்கலாயினர். மாரகன் என்பது கொடுமைக்கு ஆட்படுத்துபவன், அழிப்பவன் எனப் பொருள்படும். செவ்வாய்க் கிரகம் சில நட்சத்திரக் கால்களில் இருக்கும்போது மக்களுக்கு மிகுந்த தீங்கினைச் செய்யும் எனச் சோதிட நெறியில் நம்பிக்கை உடையவர்கள் கூறுவர். இப்பிரிவினர் தங்கள் பழக்கவழக்கங்கள், சமயஒழுக்கம், அதன் தொடர்பான சடங்குகள் ஆகியவற்றில் முழுக்க முழுக்கப் பிராமணர்களின் நெறியினைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளனர். எனினும் இவர்கள் பிராமணர் சமூக அமைப்பிலிருந்து முற்றும் தனித்தவர்களாகவே உள்ளனர். 1871-இல் கணக்கெடுக்கப்பட்டதிலிருந்து ஹலே கன்னடியர் தங்களைப் பிராமணர் பிரிவைச் சேர்ந்தவர்களாகப் பதிந்து கொள்ள பெரும் முயற்சி செய்து வருகின்றனர். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு சிருங்கேரி மடம், ஸ்மார்த்த பிரிவினைச்

சேர்ந்த இவர்களின் பொருட்டு இவர்களைப் பிராமணர்களாக ஏற்று ஸ்ரீமுகம் (சமயத் தலைவர் ஆணை) ஒன்றினை வெளியிட்டது. மைசூரிலுள்ள பரகால மடத்திலிருந்தும் அதன்பின் மூன்று ஆண்டுகள் கழித்து அதே போன்ற ஆணை அப் பிரிவினருள் இருக்கும் ஸ்ரீவைணவத்தைச் சார்ந்தவர்களின் பொருட்டுப் பெறப்பட்டது. 1881 கணக்கெடுப்பிற்குச் சிறிது காலம் சென்ற பின் உள்ளாட்சி அரசுத்துறை இவர்களை அரசுப் பதிவுகளில் பிராமணர் எனப் பதிய வேண்டும் என ஆணை பிறப்பித்தது.''

மாத்வ பிராமணர்கள் தங்கள் மணச் சடங்கினை மணமக்களின் மூதாதையர் வழிபாட்டுடன் தொடங்குவர். மணமக்களை வாழ்த்தும்படி அவர்களை வேண்டுவதோடு மண நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை உடனிருக்கவும் கேட்டுக் கொள்வர். மூதாதையரின் அடையாளமாக ஒருஇரவிக்கையையும், ஒரு வேட்டியையும் ஒரு குச்சியில் முடிந்து, சாலக்ராமக் கல்லும் குடும்ப வழிபாட்டுத் தெய்வங்களும் உள்ள பெட்டியின் அருகே வைப்பர். இவ்வாறு மூதாதையர்கள் அழைக்கப்பட்டு இருத்தப்படுவதால் சமய மரபில் அழுத்தமான பற்றுடைய வைதிகப் பிராமணர்கள் மணம் நடைபெறும் இல்லங்களில் உண்ண மறுப்பர். மணமகனை அவனுடைய வருங்கால மாமனார் மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்லும்போது அங்குக் கூடியுள்ள அனைவரும் அவன் மீது அரிசியினைத் தூவுவர். மணநாளின் இரண்டாம் நாள் ரங்க விருட்ச (வரைதல்) எனப்படும் ஒரு தனித்த சடங்கு நடத்தப்படும். பூப்பந்து விளையாட்டான நலங்கிற்குப் பின் மணமகன் மணமகளின் வலக் கரத்தைப் பற்றி மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவையில் அக்கரத்தினை முக்கிச் சுண்ணாம்பு பூசப்பட்ட வெள்ளைச் சுவரில் அவள் கரத்தால் வாழை மரம் ஒன்றினை வரைவான். சுவரில் முன்பே மணமான ஒருத்தி வாழை மரத்தின் வரைவு வடிவம் ஒன்றை வரைந்து வைத்திருப்பாள். இவ்வாறு வரைதல் தொடர்ந்து மூன்று நாள்கள் நிகழும். முதலில் அடி மரம் மட்டுமே வரையப்படும். மூன்றாம் நாள் மாலையில் வாழைப் பூவினை வரைந்து படம் நிறைவு செய்யப்படும். மூன்றாம் நாள் இரவு மணமகனுக்கு அவன் மாமியார் இனிப்புக்

களும் பிற பலகாரங்களும் படைப்பாள். அப்போது மணமகன் அவள் கைகளிலிருந்து அப்பலகாரங்கள் இருக்கும் பாத்திரத்தைப் பிடுங்கிக் கொள்வான். தனக்கு எது பிடிக்குமோ அதனை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவைகளை அந்த அறையில் வாரி இறைப்பான். இதனால் ஏற்படும் தீட்டினைத் திருமணத்திற்காக மணமகன் வீட்டார் அமர்த்திய சமையல்காரன் பசுஞ்சாணி கரைத்த நீரினைத் தெளித்துப் போக்குவான். அதன்பின் மணமகன் கையலம்பிக்கொண்டு தெய்வங்களுக்கு அருகே வைக்கப் பட்டிருக்கும் வெள்ளிப் பாத்திரம் ஒன்றினைக் கள்ளத்தனமாகத் தன்னுடன் எடுத்து மறைத்துக் கொண்டு தன் இல்லம் திரும்புவான். இந்தப் பாத்திரத்தோடு தண்ணீர் இறைக்கும் கயிறு ஒன்றையும் மாவிடிக்கும் கல் ஒன்றையும் அவன் திருடிச் செல்ல வேண்டும் என விதி உள்ளதெனினும் நடைமுறையில் அவன் பாத்திரத்தை மட்டுமே எடுத்துச் செல்வான். அவனைச் சேர்ந்தவர்கள் மற்ற இரண்டு பொருட்களையும் கேட்டுப் பெற்றுத் தங்களுடன் எடுத்துச் செல்வர்.

சமயச் சடங்கு தொடர்பாக முத்திரை தரித்துக் கொள்ளுதல் வைணவர்களிடையேயும் மாத்வர்களிடையேயும் மட்டுமேகாணப் படுகின்றது. ஸ்ரீவைணவபிராமணர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையேனும் இத்தொல்லையினை ஏற்றுக் கொள்ளவேண்டும். மாத்வர்கள் தங்கள் குருவினைக் கண்டு தரிசிக்கச் செல்லும் போதெல்லாம் இதற்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளவேண்டும். மாத்வ ஆச்சாரியரையோ மாத்வர் மடத்தையோ பின்பற்றியவர்களாக உள்ள பிற சாதிகளைச் சேர்ந்த வைணவர்களும் இவ்வாறு முத்திரை இட்டுக் கொள்ளத் தங்கள் குருவிடம் தங்களை ஒப்புவிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றச் சாதியார் விருப்பம் இருக்குமானால் இச்சடங்கை மேற்கொள்ளலாம். பிராமணர்களைப் போல அவர்களுக்கு இது கட்டாயம் இல்லை. ஸ்ரீவைணவர்களும், குடும்பத்தில் மூத்தவரும், சந்நியாசிகளும் மடத்தலைவர்களும் இவ்வாறு முத்திரை இடும் உரிமை பெற்றவர்கள். ஆண், பெண் அனைவருக்குமே இச்சடங்கு உரியது. ஆண்கள் உபநயனத்தின் பின்னும், பெண்கள் மணம் செய்து கொண்ட பின்னும் இச்சடங்கினை மேற்கொள்ள வேண்டும்.

முத்திரையிட்டுக் கொள்ளும் சீடர்கள் புனித நீராடித் தங்கள் தெய்வத்தை வழிபட்டப்பின் ஆச்சாரியரின் இல்லத்திற்கோ மடத்திற்கோ செல்வர். அங்கு அவர்களுக்குத் தீட்சை அளிக்கப்பட்டு வலத் தோளில் சங்கும், இடத் தோளில் சக்கரமும் பொறிக்கப்படும். தீட்சை அளிப்பது மூல மந்திரமான நமோ நாராயணா என்பதனைத் தணிந்த குரலில் சீடரின் காதில் சொல்லுவதாகும். இதனோடு புனித அட்சரமான ஓம் என்பதும், பிரம்ம ரகசியத்திலிருந்து சில மந்திரங்களும் உபதேசிக்கப் பெறுவர். இவ்வாறு உபதேசம் பெறாதவன் பிராமணர்கள் நிகழ்த்தும் சடங்குகளில் பங்குபெறத் தகுதியற்றவனாகக் கருதப்படுகின்றான். சமய மரபு வழுவாத, தீட்சை பெறாதவனுடைய நெருங்கிய உறவினர்கள் கூட அவன் சமைத்த உணவினையோ, தொட்ட உணவினையோ உண்ண மாட்டார்கள். மாத்வர்கள் பற்றி மொனியர் வில்லியம்ஸ் பின்வருமாறு எழுதுகின்றார்:-* மாத்வர்கள் வாழ்நாள் முழுதும் தங்கள் தெய்வத்தின் அடையாளச் சின்னத்தைத் தங்கள் உடலின் மேல் பெற்றவர்களாக இருப்பது அவர்களுடைய கடமையாகும் என உறுதியாக நம்புகின்றார்கள். அழியாத, புலனாகும்படியான அந்தப் புறச் சின்னத்தினில் அவன் வீற்றிருக்கக் காண்பது அவன் வாயிலாக வீடு பேற்றுக்கு வழி செய்யும் என்றும் நம்புகின்றனர். 'பிரமனே தன்னுடைய வலத் தோளில் சக்கரத்தையும் இடத் தோளில் சங்கினையும் பொறித்துக் கொண்டவனாக உள்ளான்.' "நான் தஞ்சாவூரில் இருந்தபோது மாத்வரின் வழிவந்தவர்களில் ஒருவர் முத்திரையிடும் சடங்கினை நிகழ்த்துவதற்காக அங்கு வருகை தந்திருந்தார். நாள் முழுவதும் அவர் தன் சீடர்களுக்கு முத்திரையிட்டவராக அதற்குரிய கட்டணமாக முத்திரையிட்டுக் கொள்பவர்களின் தகுதிக்கேற்ப அவர்களிடமிருந்து தொகை வசூலித்துக் கொண்டிருந்தார்." மாத்வர்கள் முத்திரை இட்டுக் கொள்ளச் செல்வதற்குரிய நான்கு மடங்கள் உள்ளன, வயசரய்ய, சுமதேந்திர, முலபாகல் என்பன மைசூரிலும் உத்தராச என்பது தென் கன்னடத்திலுமாக இடம் பெற்றுள்ளன. உத்தராச

---

*இந்து சமயமும் பிராமண நெறியும். (Brhamanism and Hinduism.)

மடத்தைச் சேர்ந்த ஆண்களுக்கும், உபநயனம் செய்து கொண்ட சிறுவர்களுக்கும் ஐந்து இடங்களில் முத்திரை பொறிக்கப்படும். வலத் தோள், வல மார்பு, கொப்பூழுக்கு மேல் என மூன்றிடங்களில் சக்கரமும், இட மார்பு, இடத் தோள் ஆகியவற்றில் சங்கும் பொறிக்கப்படும். பெண்களும் சிறுமியரும் திருமணத்திற்குப் பின் வல முன்கையில் சக்கரமும் இட முன் கையில் சங்கும் பொறிக்கப் பெறுவர். கைம்பெண்களுக்கு ஆண்களுக்குப் பொறிக்கப்படுவதைப் போலவே தோளில் சங்கு சக்கரம் பொறிக்கப்படும். மூன்று மடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வலத் தோளில் சக்கரமும் இடத் தோளில் சங்கும் பொறிக்கப் படுதலே பொதுவான வழக்கமாகும். இவ்வாறு முத்திரை இடப்படுவது இடைப்பட்ட காலத்தில் செய்த பாவங்களைப் போக்கும் என நம்பப்படுகிறது. அதனால் தங்கள் குருவினைக் காணும்போதெல்லாம் இவர்கள் மறுபடியும் மறுபடியும் முத்திரை இட்டுக் கொள்வர். மாத்வர்களிடையே இச்சடங்கினைச் செய்வதற்குரிய ஆண்டு வரையறை ஏதும் இல்லை. குருவின் வருகையின்போது கைக்குழந்தையாயினும், பத்துநாள் தீட்டு கழிந்திருக்குமாயின் அதற்கும் முத்திரை பொறிக்கப்படும். சிறுவர்களுக்கு உபநயனத்தின் முன்னும், சிறுமியருக்கு மணத்திற்கு முன்பும் கொப்பூழின் மேற்பகுதியில் வயிற்றில் சக்கரம் பொறிக்கப்படும். செம்பு அல்லது பித்தளையாலான முத்திரைகளை முத்திரையிடப் பழுக்கக் காய்ச்சுவதில்லை. பெரியவர்களுக்குத் தோளில் அழுத்தமான கறுப்புத் தழும்பினை ஏற்படுத்தும்படியாக அவை சூடேற்றப்படும். குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஓர் அடையாளம் புலப்படும்படியான அளவே அவை சூடேற்றப்படும். சில சமயங்களில் முத்திரையிட்டுக் கொள்வது மிக வலி தருமோ என அஞ்சுபவர்கள் அவற்றைச் சூடேற்றும் பணியாளர்களுக்குக் கையூட்டுத் தருவதும் உண்டு. பொதுவாக குரு முத்திரை இடப்படுபவர்களின் இயல்புக்கு ஏற்ப அவற்றைச் சூடேற்றும்படியாக மேற்பார்த்துக் கொள்வார். தன் சீடர் நல்ல வலிமையும் உடற்கட்டும் வாய்ந்தவராயின் முத்திரைகள் நன்கு சூடேற்றப்படும். சீடர் நோஞ்சானாக இருப்பின் முத்திரையிடுவதற்கு முன்பு முத்திரைகளைச் சிறிது ஆறப் போடுவார். குழந்தைகளுக்கு முத்திரை

இடுவதற்கு முன் அவற்றை முதலில் ஒரு ஈரத்துணியில் பதித்துச் சூடாற்றி அதன் பின்னரே முத்திரை இடுவார். சில மடாதிபதிகள் தங்களுக்கு மன நிறைவு அளிக்கும்படியாகக் காணிக்கை செலுத்தாதவர்களைப் பழிவாங்கும் மனப்பான்மை யுடன் மிக வெப்பம் உடைய முத்திரைகளைப் பதிப்பர் எனக் கூறப்படுகிறது. ஸ்ரீவைணவர்கள் பிரிவினரிடையே முத்திரை இடுவதற்கான கட்டணம் பற்றிய வரையறை ஏதும் இல்லை ஆனால் மாத்வர்கள் ஒரு மாதத்திலிருந்து மூன்று மாதம் வரையான வருமானத்தைச் செலுத்தவேண்டும் என எதிர்பார்க் கப்படுகின்றது. அவ்வாறு கட்டணம் செலுத்தத் தவறுபவர் ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லிச் சாதி விலக்கம் செய்யப் படுவார்கள். முத்திரை பொறிக்கப்படும் தோலின் பகுதி சுமாராக ஒரு வார காலத்தில் உரிந்து விழுந்து விடும். அவ்விடத்தில் அதன்பின் காணப்படுவதான தெளிவற்ற முத்திரை அடையாளம் சில மாதங்களில் மறைந்துவிடலாம் அல்லது வாழ்நாள் முழுதும் நிலைத்து இருக்கவும் செய்யலாம். மாத்வர்கள் வெள்ளை நாமத்தால் நாளும் உடம்பின் பல பகுதிகளிலும் பல முத்திரைகளைப் பொறித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பொறித்துக் கொள்ளப்படும் முத்திரைகள் சங்கு, சக்கரம், கதை, பத்மம், நாராயண என வழங்கப் படும். கொப்பூழுக்கு மேற்பகுதியில் வயிற்றில் மூன்று சக்கரங் களும், வலப் புறத்தில் இரண்டும், வல மார்பில் முலைக் காம்பிற்கு மேல் இரண்டும், வலக் கரத்தில் இரண்டும், வல நெற்றிப் பொட்டில் ஒன்றும், இட மார்பில் ஒன்றும், இடக் கரத்தில் ஒன்றுமாகச் சக்கர முத்திரைகளைப் பதித்துக் கொள்ள வேண்டும். வல மார்பில் இரண்டும். இடக் கரத்தில் இரண் டும், இட நெற்றிப் பொட்டில் ஒன்றுமாகச் சங்கு முத்திரை களைப் பதித்துக் கொள்ளவேண்டும். கதை முத்திரையை வலக் கரத்தில் இரண்டும். மார்பில் இரண்டும், முன் நெற்றியில் ஒன்றுமாகப் பதிக்க வேண்டும். இடக் கையில் இரண்டும், இட மார்பில் இரண்டும் எனப் பத்ம முத்திரை இட்டுக் கொள்ள வேண்டும். நாராயண முத்திரையை மற்ற முத்திரைகள் இடப்பட்ட எல்லா இடங்களிலும் இட்டுக் கொள்ளவேண்டும். சிலபோது காலையில் குளித்தவுடன் இந்த முத்திரைகள்

அனைத்தையும் இட்டுக் கொள்ளுதல் இயலாது போய்விடலாம். அதுபோன்ற சமயங்களில் ஐந்து முத்திரைகளையும் ஒருங்கே கொண்ட ஒரு முத்திரை அடையாளத்தை மட்டும் பதித்துக் கொண்டால் போதுமானது. நெருக்கடியான நேரங்கள் நேரும்போது சக்கர முத்திரைமட்டும் போதுமானது எனச் சிலர் கருதுகின்றனர்.

மாத்வர்கள் அனுமனை முக்கிய 'பிராண தேவரு' எனக் கூறிச் சிறப்பாகப் பத்தி சிரத்தையுடன் வழிபடுவர்.

V. துளு:-

துளு பேசும் பிராமணர்கள் தங்கள் பழக்கவழக்கங்களில் கருநாடகப் பிராமணர்களையே பெரிதும் ஒத்துள்ளனர். இவர்களின் உட்பிரிவுகள் வருமாறு:-

1. சிவாலி
2. கோட
3. கண்டாவர
4. ஹவிக் (அல்லது) ஹைக்கா
5. பஞ்சகிராமி
6. கோடிஸ்வர்

திரு எச்.எ. ஸ்டுவர்ட் துளு பிராமணர்களைப் பற்றிய பின்வரும் சுவையான தகவல்களைத் தென் கன்னட மாவட்ட விவரக் குறிப்பில் தந்துள்ளார்:- "துளு பிராமணர்களின் வரலாற்றுக் குறிப்புகள் அனைத்தும் மலபார், கன்னடம் (அல்லது) கேரளம், துளுவம், ஹைக்க ஆகிய பகுதிகளின் தோற்றத்திற்குக் காரணமானவராகப் பரசுராமரையே குறிப்பிடுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையின் உயர்ந்த முடி ஒன்றின் மீது நின்று, தனது போர்க் கோடரியைக் கடலில் நெடுந்தொலைவு முடிந்த அளவு பலங்கொண்ட மட்டும் வீசி எறிந்து, கடலிலிருந்து நிலப் பகுதியினை மீட்டார்" என்பது அவ்வரலாற்றுக் குறிப்புகள் கூறும் செய்தியாகும். துளு வரலாற்று மரபுப்படி அகிக்ஷேத்திரத்திலிருந்து அவ்வப்போது தன்னிடம் வந்து செல்லும் பிராமணர்களோடு பூசலிட்டுக் கொண்டபின் தான் புதிதாகக் கடலிலிருந்து மீட்ட நிலப்பகுதியில் குடியேற்றப் பரசுராமர் புதிய பிராமணர்களை ஏற்பாடு செய்தார். மீனவர்களின் வலையிலிருந்து கயிற்றினை எடுத்து அதனைக் கொண்டு பல பூணூல்

களைத் திரித்து அவற்றையே மீனவர்களுக்குப் பூணூலாக அணிவித்து அவர்களைப் பிராமணர்களாக்கிய பரசுராமர் அவர்களிடம் அவர்களுக்கு ஏதேனும் தொல்லை வருமானால் தன்னை அழைத்தால் உதவ வருவதாகக் கூறி மலைப்பகுதிகளுக்குத் தவம் செய்யச் சென்றுவிட்டார். சிறிது காலம் சென்ற பின் எத்தகைய துன்பங்களும் நேரவில்லையாயினும் பரசுராமர் தங்களை மறவாமல் இருக்கின்றாரா என அறிந்து கொள்ளும் ஆவலினால் அவரை அவர்கள் அழைத்தனர். அழைப்பினைக் கேட்ட உடனே அங்கு வந்து தோன்றிய அவர் தன்னை அப்படிக் கேவலப்படுத்தியமைக்காக அவர்கள் மீண்டும் அவர்களுடைய சூத்திரர் நிலையினையே அடையும்படியாகச் சபித்தார். அதன் பிறகு அப்பகுதியில் கடம்ப மரபைச் சேர்ந்த மயூரவர்மன் அகிக்ஷேத்திரத்திலிருந்து துளு பிராமணர்களைக் குடியேற்றும்வரை அங்குப் பிராமணர்கள் யாரும் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. இக்கதை வரலாற்றின் மற்றொரு வடிவம் பின்வருமாறு கூறுகின்றது. பரசுராமர் கடலில் இருந்து மீட்ட நிலத்தை நாக மற்றும் மச்சி பிராமணர்களுக்கு அளித்தார். உண்மையான பிராமணர்களல்லாத இவர்களை ஹொலையர்கள் (பறையர்) அப்பகுதியிலிருந்து துரத்தி விட்டனர். மயூரவர்மன் துளு பிராமணர்களை அங்குக் குடியேற்றும் வரை ஹொலையர்களே அப்பகுதியைத் தங்களுக்கு உரியதாகக் கொண்டிருந்தனர். எல்லா வரலாறுகளும் இன்று அங்கு வாழும் துளு பிராமணர்களை அப்பகுதியில் குடியேற்றியவன் மயூரவர்மன் என ஒரு படித்தாக உரைக்கின்றன. ஆனால் அவர்கள் அப்பகுதியில் நிலைத்து வாழத் தலைப்பட்டது எவ்வாறு என்பதனை விளக்குவதில் வெவ்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. ஒரு கூற்றுப்படி கொரகர் (பறையர்) தலைவனான ஹபாசிக என்பவன் மயூரவர்மனை அப்பகுதியை விட்டுத் துரத்தியதாகவும், அவனை மயூரவர்மனின் மகனோ மருமகனோ ஆன கோகர்ணத்தைச் சேர்ந்த லோகாதித்யன் அங்கிருந்து துரத்திவிட்டு அகிக்ஷேத்திரத்திலிருந்து கொண்டு வந்த பிராமணர்களை முப்பத்தி மூன்று கிராமங்களில் குடியேற்றியதாகவும் கூறுகின்றது. இன்னொரு விளக்கப்படி மயூரவர்மனே அப்பகுதியின்மீது படையெடுத்து அதுவரை பரசுராம

ரால் பிராமணராக்கப்பட்ட பறையருக்கும் மீனவருக்கும் உரிய தாய் இருந்த நிலத்தை மீட்டான் எனக் கூறுகின்றது. இரண்டாவதாக ஒரு வழக்கு வரலாறு மயூரவர்மனையும் அவன் அகி க்ஷேத்திரத்திலிருந்து அழைத்து வந்த பிராமணர்களையும் ஹொலையர் தலைவனான நந்தன் விரட்டினான் எனவும் அவனுடைய மகனான சந்திரசயனன் ஒரு கோயிலில் நாட்டியக் காரியாக இருந்த தன் தாயாரிடமிருந்து பிராமணர்களை மதிக்கக் கற்றுக் கொண்டான். அவன் அவர்களிடம் கொண்ட மதிப்பின் காரணமாக அவர்களைத் திரும்ப அழைத்துத் தன் ஆட்சிப் பொறுப்பு அனைத்தையும் அவர்களிடம் ஒப்படைத்ததோடு மட்டுமன்றித் தன் நாட்டு மக்களையும் அடிமைகள் நிலைக்கு ஆளாக்கிவிட்டான். மூன்றாவதான ஒரு வழக்கு சந்திரசயனனை ஹொலைய அரசனின் மகன் எனக் கூறாது மயூரவர்மன் மகன் எனவும் ஹொலையரை வெற்றி கொண்டவன் எனவும் கூறும். லோகாதித்யன், ஹபாசிகன், சந்திரசயனன் ஆகியோர் பற்றி அறிந்து கொள்ள உதவும் வேறு சான்றுகள் எவையும் இல்லை. ஆனால் கல்வெட்டுக்கள் மயூரவர்மனே வட கன்னடத்தில் பனவாசியில் கதம்பர் குலத்தைத் தோற்றுவித்தவன் எனக் கூறுகின்றன. இவனது ஆட்சிக்காலத்தைக் கி.பி. 750 என வரையறுப்பர். கி. பி. 750-இல் ஆட்சியில் இருந்த மயூரவர்மன் பிராமணர்களை மேற்குக் கடற்கரைப் பகுதிக்குக் குடியேற்றினான் என மலபாரிலும், கன்னடத்திலும் வழங்கும் வழக்கு உண்மையானதே என்பதனை மலபார் பெருமாள் கி.பி. 774-இல் கிறித்தவர்களுக்கு அளித்த பட்டயத்தில் பிராமணர்களும் மேல் ஒப்பம் இட்டனர் என்பதும் ஆனால் கி.பி. 700-இல் யூதர்களுக்கு வழங்கிய பட்டயத்தில் அவர்கள் மேல் ஒப்பம் இடவில்லை என்பதும் உறுதிப்படுத்துகின்றன. இப்பிராமணர்கள் கோதாவரிக் கரையிலுள்ள அகிக்ஷேத்திரத்திலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் எனக் கூறப்படுகிறது. ஆனால் பனவாசியைச் சேர்ந்த கடம்பன் ஒருவன் எவ்வகையில் கோதாவரிக் கரையோடு தொடர்புடையவனானான் என்பதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வழியில்லை. வடகன்னட மாவட்ட விவரக் குறிப்பில் அகிக்ஷேத்திர என்பது ஹைகா என்பதின் வடமொழிவடிவமே என்ற கருத்துப்படச் சொல்லப்பட்டிருப்பதும்

உண்மையானதாகலாம். பிராமணர்கள் கோகர்ணத்திலிருந்து லோகாதியத்யனால் அழைத்து வரப்பட்டனர் என்ற வழக்கு வரலாறும் உள்ளது. கோகர்ணம் வடகன்னடத்தின் வடகோடியில் உள்ளது. வடகன்னடத்தில் உள்ள சுண்டாவைச் சேர்ந்த ஹொன்னலி மடம் பற்றிய அவ்விடத்தில் வரலாற்றில் கோகர்ணம் அகிக்ஷேத்திரம் என்றே கூறப்பட்டுள்ளது. கோகர்ணம் மிகப் பழங்காலந்தொட்டே பிராமணர்கள் குடியிருப்பாய் இருந்ததென நம்பப்படுகின்றது. வடக்கில் முகமதியர்கள் படையெடுப்பினை அடுத்து அங்கு மேலும் பிராமணர்கள் பலர் குடியேறினவர்களாதல் வேண்டும்.

இன்று துளு பிராமணர் எனத் தங்களை வழக்கமாகக் கூறிக் கொள்ளும் வகுப்பார் சிவாலி பிராமணர்களே. இவர்கள் தலைமை இடம் உடுப்பி ஆகும். இவர்கள் மாவட்டத்தின் தென்பகுதியில் மிகுந்த எண்ணிக்கையினராகக் காணப்படுகின்றனர். கோடர், கோட்டேஷ்வர், ஹைகா அல்லது ஹவிக பிராமணர் என்பன எல்லாம் இவர்களின் உட்பிரிவுகளே. இப்பிரிவுகளிடையே காணப்படும் வேறுபாடுகள் இவர்கள் கன்னட மாவட்டத்தில் குடியேறிய பிறகு தோன்றியவையே. சித்த நதியின் வடக்கே வாழும் மக்களைப் போல இன்று இவர்கள் கன்னட மொழியையே பேசி வந்தாலும் இவர்களுடைய சமய நூல்கள் இன்றும் மலையாள எழுத்தில் துளு மொழியிலேயே எழுதப்பட்டு வருகின்றன. மிகப் பிற்பட்ட காலத்தில் மலபாரில் குடியேறிய துளு பிராமணர்கள் எம்பிரான்திரியர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் நம்பூத்ரிகளோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக உள்ளனர். இவர்களைப் பற்றிய வழக்கும் மயூரவர்மன் காலத்ததான தொன்மையுடையதாய் உள்ளது. தென் பகுதியினையோ மலையாளம் பேசப்படும் மாவட்டப் பகுதியையோ சேர்ந்த சிவாலி, ஹவிக பிராமண குடும்பத்தினர் சிலர் மலையாள மொழியினைப் பேசுவதோடு மலபார் அல்லது நம்பூத்ரி பிராமணர்களுக்குரிய பழக்கவழக்கங்களையும் மேற்கொண்டுள்ளனர். மயூரவர்மன் பிராமணர்களைக் குடியேற்றியதாகக் கூறப்படும் முப்பத்திரண்டு ஊர்களில் பல இன்றும் பிராமணீயம் நிலைத்துள்ள முக்கிய இடங்களாக உள்ளன.

சிவாலி அல்லது உடுப்பி, கோடா, கோட்டேஷ்வர் என்ற ஊர்கள் அப்பிரிவினரின் தலைமை இடங்களாகவும் துளு பிராமணர் களின் உட்பிரிவுகளின் பெயர்களாகவும் விளங்குகின்றன. மயூர வர்மனால் இவர்கள் இங்குக் குடியேற்றப்பட்டபோது இவர்கள் பட்டாச்சாரியரைப் பின்பற்றும் நெறியினராக இருந்தனர். ஆனால் விரைவில் இவர்கள் மலையாளத்தைச் சேர்ந்த வேதாந்தி யான சங்கராச்சாரியாரின் கோட்பாடுகளைப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். சங்கராச்சாரியார் மலபாரிலுள்ள கொடுங் கோளூரில் எட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் பிராமணர்கள் குடியேறியபின் தோன்றிய வராகக் கருதப்படுகிறார். சங்கராச்சாரியார் அத்வைதக் கோட் பாட்டினைப் பரப்பியவர். உலகில் வாழும் அனைத்து உயிர் களும் பரம்பொருளிலிருந்து வேறானவை அல்ல என்பதும் உலகியலைத் துறந்து ஆன்ம இன்பத்தில் மூழ்குபவர்கள் இறுதி யில் பரம்பொருளோடு இரண்டறக் கலத்தல் கூடும் என்பதுவுமே அக்கோட்பாட்டின் மையக் கருத்தின் சுருக்கம் எனலாம். இக் கோட்பாடு பொது மக்கள் அனைவரும் புரிந்து பின்பற்ற ஏற்ற எளிமையுடையதன்று. ஆகையால் சாதாரண அறிவினரான மக்களுக்காக அவர்கள் மனத்தைச் செலுத்தி இறை நெறி யினைச் சிந்திக்கச் சிவன், பார்வதி ஆகியோருடைய பல்வேறு தோற்றங்களின் உருவான சிறு தெய்வங்களின் வழிபாட்டிற்கும் அவர் வழிவகுத்துத் தந்துள்ளார். மேலும், இதனுள், பிராம ணர்கள் மேற்குக் கடற்கரையில் குடியேறுவதற்கு முன்பு திராவிடர்களால் வழிபட்டு வரப்பட்ட பூதங்களின் வழிபாட் டிற்கும் இடம் தந்து, மேற்குக் கடற்கரைப் பகுதியில் எல்லா வகுப்பாரிடையேயும் இந்து சமயம் பரவவும் வழிவகுத்துள்ளார். பண்டர், பில்லவர் முதலிய பிற வகுப்பாரின் சமய மாற்றம் மிக முற்பட்டதான காலத்திலேயே நிகழ்ந்து விட்டது என்ப தனைத் தென்கன்னடத்தைச் சேர்ந்த பெரும்பாலான துளு பிரா மணர்கள் வைணவ சமயச் சீர்திருத்தக்காரரான பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாத்வாச்சாரியாரின் நெறிகளைப் பின் பற்றியவர்களாக இருக்கவும், இம்மாவட்டத்தைச் சேர்ந்த பிராமணர்களல்லாத இந்துக்கள் இன்றளவும் சைவர்களாகவே இருப்பது கொண்டும் தெளியலாம். உடுப்பி வட்டத்தின் எல்லை

யில் அமைந்துள்ள மைசூரில் உள்ள சிருங்கேரி மடத்தினை நிறுவியவர் சங்கராச்சாரியாரே. தென் கன்னடத்தைச் சேர்ந்த தொடர்ந்து ஸ்மார்த்தர்களாக இருந்துவரும் துளு பிராமணர் களின் குருவாக விளங்குபவர் அம்மடத்தைச் சேர்ந்த தலைவரே ஆவார். மாத்வாச்சாரியார் சுமார் கி. பி. 1199-இல் உடுப்பிக்கு அருகேயுள்ள கல்யாண்பூரில் பிறந்ததாகக் கருதப்படுகிறது. அனைத்து உயிர்களும் இறுதியில் பரம் பொருளில் இணையும் என்ற வைணவர் கோட்பாட்டிற்கும், சங்கராச்சாரியாரின் அத்வைத கோட்பாட்டிற்கும் மாறு பட்டதாகத் துவைதம் என்ற கோட்பாட்டினைக் கண்டவர் இவர். மாத்வாச்சாரியாரின் கொள்கைப்படி வீடு பேறாகிய பேரின்பத்தினை அடைய உலகியல் இன்பங்களைத் துறப்ப தோடுகூட மன மொழி மெய்களில் ஒழுக்கம் உடையவர் களாகவும் நடத்தல் வேண்டும். மாத்வாச்சாரியார் சிறந்ததான ஒழுக்க நெறியினை வற்புறுத்தியுள்ளார். இவருடைய இந்த வற்புறுத்தலுக்குக் கல்யாண்பூர் பகுதியில் வாழ்ந்தவர்களான ஏழாம் நூற்றாண்டில் காஸ்மோஸ் இண்டிகோ பெலுஸ்டஸ் குறித்துள்ள கிறித்துவ சமுதாயத்தவர்களின் செல்வாக்கு காரணம் ஆகலாம் எனக் கற்றறிந்த இந்துக்கள் சிலர் கருது கின்றனர். மாத்வாச்சாரியார் விட்டுணு வழிபாட்டைச் சிவ வழிபாட்டைவிட உயர்ந்ததாகக் கூறியிருப்பினும் தென் கன்னடத்தில் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையே கசப்பு உணர்வு ஏதும் இல்லை. சங்கர நாராயணன் எனச் சிவனையும் விட்டுணுவையும் ஒருங்கே வழிபடும் கோயில்கள் பல அம்மாவட்டத்தில் உள்ளன. மாத்வாச்சாரியார் திராவிடர்கள் தொடக்கத்திலிருந்து வழிபட்டுவந்த ஆவிகள், சிவன் மனைவியான பார்வதியின் அவதாரங்கள் என்பதனை மறுத்து அவற்றை ஆவித் தொடர்புடைய சிறு தெய்வங்களெனக் கூறி அவற்றின் வழிபாட்டிற்கும் வழி வகுத்துள்ளார்.

சிவாலி பிராமணர்கள்:- இன்று துளு மொழி பேசும் பிராமணர்களில் மிகப் பெரும்பாலோர் மாத்வாச்சாரியாரின் நெறியைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளனர். சிலர் ஸ்மார்த்தர் களாகவே தொடர்ந்து இருந்து வருகின்றனர். மிகச் சிலர் பாகவத

சம்பிரதாயம் எனப்படும் நெறியினைப் பின்பற்றுபவர்களாகச் சிவனையும் விட்டுணுவையும் சமமாகப்பாவிக்கின்றனர். இவர்கள் இன்று பொதுவாகச் சிவாலி பிராமணர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தலைமையிடம் மாத்வாச்சாரியாரின் பிறப்பிடத்திற்கு அருகேயுள்ள உடுப்பி அல்லது சிவாலியாகும். இங்கு மாத்வாச்சாரியார் கொஞ்ச காலம் தங்கிக் கருத்து வேறுபாட்டிற்கு உரியதான முப்பத்தேழு நூல்களை இயற்றினார் எனவும், அதன்பின் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் எனவும் கூறுவர். உடுப்பியில் உள்ள கிருஷ்ணன் கோயிலை நிறுவியவரும் அவரே. துளுவக் கடற்கரையில் கரைதட்டி உடைந்த ஒரு கப்பலில் இருந்து அவருக்குத் தெய்வாதீனமாகக் கிடைத்த அர்ச்சுனன் செய்ததான கண்ணன் சிலையை அங்கு நிறுவி உள்ளார். வேதவியாசர் அவருக்குத் தந்த மூன்று சாலக்ராமங்களில் ஒன்றினையும் அங்கு வைத்துள்ளார். உடுப்பி தவிர வேறு எட்டு இடங்களிலும் அவர் மடங்களை நிறுவி அவற்றை நடத்திவரத் தலைவர்களையும் நியமித்துள்ளார். (சொத்தே-கிருஷ்ணாப்பூர், சீரூர், காணூர், பெஜாவர், அடமார், பலமார், புத்திகெ என்பன அந்த எட்டு மடங்களின் பெயராம்.) அவை இன்றுவரை உள்ளன. இவற்றின் தலைவர்கள் உடுப்பியில் உள்ள கிருஷ்ணன் கோயில் தலைமையை ஆளுக்கு இரண்டாண்டுகள் என முறை வைத்து மாற்றி மாற்றிப் பொறுப்பேற்று நடத்தி வருவர். அப்பொறுப்பு வகிக்காத எஞ்சிய பதினான்கு ஆண்டுகள் கன்னட மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தாங்கள் பொறுப்பு ஏற்கும் இரண்டாண்டுகளுக்குக் கிருஷ்ணன் கோயில் நிருவாகத்திற்குத் தேவையான பொருளை அப்பிரிவினைச் சேர்ந்தோரிடமிருந்து வரி விதிப்பின் மூலமாகத் திரட்டுவர். பொறுப்பு ஏற்பவர்கள் அச்சமயத்தில் வழிபாட்டுக்கான செலவுகளோடுகூட அங்கு வருகை தரும் எல்லாப் பிராமணர்களுக்கும் உணவு அளிக்கும் செலவினையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அம்மடத்திற்குச் சென்ற திரு வால்ஹவுஸ்* அதனைப் பற்றி விவரித்திருக்கும் பின்வரும் விவரங்கள் அம்

---

* பிரேசர் இதழ், மே, 1875. (Fraser's Magazine, May, 1875.)

மடத்தின் கட்டிடங்களில் ஒன்று எத்தகைய அமைப்புடையதாக இருந்தது என்பதனைத் தெளிவு படுத்துவதாகும். 'இக் கட்டிடம் இரண்டு மாடிகளை உடையது. நான்கு பக்கங் களையுடைய பகுதியதான இதனைச்சுற்றி, வேயப்பட்ட வளைவிடம் அமைந்துள்ளது. அகன்ற முன்வாயிலினைக் கடந்து சென்றால் அழகிய மரவேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய தூண்கள் நிறுத்தப்பட்டுள்ள பரந்த கூடத்தினைச் சென்று சேரலாம். இக்கூடத்தின் மேற்கூரையும் மரத்தால் இணைக் கப்பட்டதே. கோமான்களின் மாளிகை போல ரோசாப்பூ வடிவினதாக உருவமைக்கப்பட்ட அது அழகிய மரவேலைப் பாடுகள் கொண்டதாகத் திகழ்கின்றது. இதனுள் எண்ணிலடங் காத அறைகள், ஜன்னல் இல்லாத ஒதுக்கமான அறை களைக் கொண்ட நடைகள், தியானத்திற்கும் கற்பதற்குமான கூடங்கள், எல்லாவகைத் தேவைகளையும் நிறைவு செய்யும் பொருட்கள் நிறைந்து வழியும் பொருட் சேம அறைகள், தான்யக் கிடங்குகள். அகன்ற வெளியே துருத்திக் கொண்டி ருக்கும் கண்ணாடிக்குப் பதிலாகத் துளையிடப்பட்ட பலகைகள் பொருத்தப்பட்ட ஜன்னல்களோடு கூடிய அலங்கார வேலைப் பாடுகள் கொண்ட மாடி அறைகள், நாற்கூடத்தின் நடுவே கிணறு, அதனருகே சிறு கோயில், அதன் புழைக்கடையில் ஆடு முதல் ஆனை வரையான எல்லா வகைக் கால்நடைகளையும் கொண்ட கொட்டில் ஆகிய இவைகள் எல்லாம் அடங்கியிருக்கக் காணலாம். தேவையான அனைத்தும் இங்கே சேகரிக்கப் பட்டுள்ளன. இந்த மடத்தின் வெளியே புனிதப்பயணம் வந்தவர் கள், ஏழைகளான பக்தர்கள், தங்கள் நாள்பிச்சைக்காகக் காத் திருக்கும் பிச்சைக்காரர்கள், இடையறாது தானியங்களோடும், காய்கறிகளோடும் வந்து கொண்டிருக்கும் கிராமத்தார்கள் ஆகியவர்களைக் காணலாம். கிருஷ்ணன் கோயில் தலைவராக ஒருவரை அடுத்து இன்னொருவர் பொறுப்பு ஏற்கும் நிகழ்ச்சி யான பரியாய என்ற திருவிழாவின்போது உடுப்பி முழுக்க மாத்வர்களின் கூட்டம் நிறைந்து காணப்படும். அப்போது மாவட்டம் முழுவதிலிருந்து மட்டுமல்லாமல் மைசூர் போன்ற தூரத்திலுள்ள பகுதிகளிலிருந்தும் மாத்வர்கள் வந்து கூடுவர். (1907-இல் நான் அங்கு சென்றிருந்தபோது கோயில் காரியங்

களுக்காகச் சேகரித்துக் கோயில் மைதானத்தில் குவிக்கப் பட்டிருந்த பேரளவினதான விறகுப் போரினைக் கண்டேன். அது என்னை மிகவும் கவர்ந்தது.)

உடுப்பியில் நடைபெற்றதான ஒரு திருவிழா வினைத் திரு வால் ஹவுஸ் நேரில் பார்த்து எழுதிய விவரம் வருமாறு* :- 'சுமா ராக நள்ளிரவு நேரத்தில் முகில்களற்ற வானத்தில் நிலவு உயர எழுந்து ஒளி செய்தபடி இருக்கையில் கிருஷ்ணனுடைய சிலை யினைப் புனிதமானதாகப் பாவிக்கப்பட்டு, கைகளால் அங்கும் இங்கும் தூக்குவதற்கு உரியதல்லாத ஒன்றன்று; அதனுடைய மறுபிரதியாக உள்ளதை நான்கு பிராமணர்கள் தூக்கி வந்து ஒரு மேடையில் அழகிய மேற்கட்டியின்கீழ் அமைக்கப்பட்ட அகன்ற இருவள்ளங்களின் குறுக்கே வைத்தனர். சதுர வடிவமான அந்தச் சிறுகுளத்தைச் சுற்றி மூன்று வரிசைகளில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சிறு தீப்பந்தங்கள் அங்கும் இங்குமாக எரிந்து கொண்டிருக்க வாணவேடிக்கைகள் இடைவிடாது நடந்துகொண்டிருந்தன. கண் கூசும்படியாக ஒளி விளக்குகள் ஏற்றப்பட்ட அந்த வள்ளத்தை, ஒத்திசையா ஆவார இசை இசைக்கவும், பிராமணர்கள் வெள்ளி விசிறிகளால் கிருஷ்ணன் சிலைக்கு விசிறியபடி இருக்கவும், உரத்த வாழ்த்தொலிகள் முழங்கவும், அங்கும் இங்குமாக அந்தச் சிறு குளத்தில் சுற்றி சுற்றிக் தள்ளினர். அதன்பின் அச்சிலை பளபளக்கும் வெள் ளிப் பல்லக்கில் வைத்துக் கோயிலுக்கு வெளியே கொண்டு வரப்பட்டுக் கொடிகளாலும், தோரணங்களாலும், மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட அதனை ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்குரிய தேரில் அணிமணிகளால் அலங்கரிக் கப்பட்ட பீடத்தில் கர ஆரவார ஒலியினிடையே ஏற்றிவைக்கப் பட்டு – இந்துக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வது இந்த ஒரு சமயத்தில்தான் என்று தோன்றுகின்றது – மட அதிபர், பிரா மணர்கள் குழுவாக முன செல்ல, தீப்பந்தங்கள் உடன வர, ஆர வார இசை முழங்க மெல்ல மூன்று வரிசை விளக்குகள் எரியும் இடையிடையே மேடைகள் அமைக்கப்பட்டுள்ள சதுக்கத்தில்

---

* முந்து நூல். (Loc. Cit.)

ஆயிரக் கணக்கான பக்தர்களால் இழுத்துச் செல்லப்பட்டது. நடுவழியில் தேரினை இழுத்தல் நிறுத்தப்பட்டபின் வாண வேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டதோடு விட்டுணு சக்கரங்கள் சுழலவிடப்பட்டுப் பூக்கலயங்கள் எரியவிடப்பட்டன. பாதை யின குறுக்கே இரண்டு வரிசைகளில் கற்பூரமும் திரிகளும் வைக்கப்பட்டு அவை பிரகாசமாக எரியவிடப்பட்டன. அதன் பின் தேர், கோயில் வாயிலினை அடைய தெய்வத்தின் ஊர்வலம் ஒரு முடிவுக்கு வந்தது.' சிவாலிகளின் மற்றுமொரு புகழ்பெற்ற கோயில் குடகின் எல்லையில் மலை அடிவாரத்தில உள்ள சுப்பிரமணியர் கோயிலாகும். இங்கும் மாத்வாச்சாரியர் வேதவியாசர் கொடுத்த சாலக்ராமக் கற்களில் ஒன்றை வைத் துள்ளார். இக்கோயில் சிவனுக்குரியதாக இருப்பதால் இது அவர் காலத்திற்கு முன்பிருந்தே இருக்கும் கோயிலாகும். இதனோடு கூட, இந்த மாவட்டத்தில், பாம்பு வழிபாட்டிற் குரிய ஒரு முக்கிய நிலையமாகவும் இக்கோயில் விளங்குகின்றது'

''சிவாலி பிராமணர்கள் பலரும் நல்ல நிறமும் அழகிய உடற்கூறுகள் அமையப் பெற்ற உடல் வாகும் கொண்டவர்க ளாக உள்ளனர். இவர்களில் பலர் நிலவுடைமையாளர்கள். நிலங்களில் குத்தகைதாரர்களை வைத்தோ கூலியாட்களை அமர்த்தியோ பயிரிடுகின்றனர். பெரிய நிலப்பரப்புக்கு உரிமையுடைய பல செல்வக் குடும்பங்களும் இவர்களிடையே உள்ளன. எனினும் இவர்களில் பலர் வானவியல், சோதிடம், தாந்திரிகம், புரோகிதம், கோயில் வழிபாடு, இரத்தல் தொழில் ஆகியவற்றையும் மேற்கொண்டிருக்கக் காணலாம். ஆங்கிலக் கல்வியைக் கற்றுக் கொள்வதில் பின் தங்கியவர்களாக உள்ள இவர்கள் அரசின் உயர் பதவிகளில் பெரும் எண்ணிக்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் அண்மையில் சிலர் அரசுப்பணியில் முன்னேற்றம் கண்டுள்ளனர். பலர் சிற்றூர் களில் கணக்கர்களாகவும், பள்ளி ஆசிரியர்களாகவும் பணிபுரி கின்றனர். மற்ற வகுப்பாரிடையே காணப்படுவதைப் போலவே பெண்கள் ஆண்களைவிட நல்ல நிறம் வாய்க்கப் பெற்றுள்ளனர். பெண்கள் ஆண்களைவிடக் குறைந்த கல்வியறிவுடைய வர்களே. குடும்ப நடைமுறையிலும் சமயச் சடங்குகளிலும்

இவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்கள் எனக் கூறப்படுகிறது. முன்பக்கம் பாதங்களைத் தொடும்படியாகவும், பின்பக்கம் அதனினும் சற்றே மேலே தொங்கும் படியாகவும் இவர்கள் சேலை உடுத்துவர். சமயச் சடங்குகளின்போது சேலையின் ஒரு முனையினைக் கால்களிடையே செலுத்தி இடையினைச் சுற்றியுள்ள மடிப்பின் உள்ளே சொருகுவர். கன்னடத்தைச் சேர்ந்த பிற பிராமணப் பெண்களைப் போலவே இவர்களும் மணமிக்க மலர்களை விருப்பத்தோடு கூந்தலில் சூடிக் கொள்கின்றனர். சீத நதிக்கு வடபால் உள்ளவர்கள் தவிர மற்றச் சிவாலி பிராமணர்கள் துளு மொழியே பேசுகின்றனர். சீத நதிக்கு வடக்கே மலைப் பகுதியில் பல நூற்றாண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலுள்ள கன்னடியர்களுடன் கொண்ட தொடர்பு காரணமாக அப்பகுதியில் அனைத்துப் பிரிவினரும் கன்னட மொழியே பேசுகின்றனர். இவர்களின் சமய நூல்கள் வடமொழியிலேயே உள்ளன. சீத நதிக்கு வடக்கே இருப்பவர்களின் சமய நூல்கள் பழைய துளு மொழியில் மலையாள எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் இல்லங்கள் பளிச்செனத் தூய்மையாக முன்பக்கம் திண்ணைகளையும் துளசி மாடத்தோடு கூடிய வாசலிடத்தையும் பெற்றனவாக இருக்கும். பழமையான சில குடும்பங்களுக்குரிய வீடுகள் உண்மையிலேயே பெரும் பரப்பினவாகப் போதுமான கட்டிடங்களுடன் நடுவில் திறந்த முற்றத்தை உடையனவாக உள்ளன. ஆண்களும் கைம்பெண்களும் நாளும் காலை உணவிற்கு முன் தலை குளிப்பர். மணமான பெண்கள் தலையில் தண்ணீர் விட்டுக் கொள்வது மங்கலமற்றதாகக் கருதப்படுவதால் உடலுக்கு மட்டும் குளிப்பர். கோயில்களிலும் சமய நிலையங்களிலும் பணிபுரியும் ஆண்கள் மாலையிலும் குளிப்பர். மதுவையும் மாமிசத்தையும் இவர்கள் தொடாததோடுகூட வெங்காயம், பூண்டு காளான் போன்றவற்றையும் விலக்குவர். மணம், சாவு, உபநயனம் முதலிய நிகழ்ச்சிகளின்போது வைக்கப்படும் விருந்துகளில் எல்லாப் பிரிவு திராவிட பிராமணர்களும் பங்கு பெறுவர். சிவாலிகளிடையே 252 கோத்திரப் பிரிவுகள் உள்ளன. பின்வரும் கோத்திரப் பெயர்கள் இனமரபுச் சின்னங்களிலிருந்து தோன்றியனவாகத் தெரிகின்றன".

குதிரேத்தாய	(குதிரையைச் சார்ந்த என்பது பொருள்)
தாளித்தாய	(பனைமரம் சார்ந்த)
மானோலித்தாய	(இது ஒரு காய்கறி வகை)
சுண்ணத்தாய	(சுண்ணாம்பு சார்ந்த)
கலமபித்தாய	(ஒரு வகைப் பாத்திரம்)
நெல்லித்தாய	(நெல்லிக்காய் சார்ந்த)
கோளி	(ஆலமரம்)
ஆனை	(யானை)

''இப்பெயர்கள் உடுப்பியைச் சார்ந்த எட்டு மடங்களில் ஒன்றில் குருவாக இருப்பவரிடமிருந்து கேட்டறியப்பட்டவை. அவர் இப்பெயர்கள் இன்று எவ்வகையிலும் இன மரபுச் சின்னங்களின் அடையாளங்களாக இல்லை எனக் கூறினார். பெண்கள் பருவம் அடையும் முன் மணம் செய்விக்கப்படுகின்றனர். இப்போது ஐந்து வயதிலிருந்து பதினொரு வயதுக்குள்ளாக அவர்கள் மணம் நிகழ்கின்றது. ஆண்கள் பதினைந்திலிருந்து இருபத்தைந்து வயதுக்குள்ளாக மணம் செய்து கொள்கின்றனர். ஒருவன் தாய்மாமன் மகளைச் சாதகப் பொருத்தம் பார்க்காமலேயே மணந்துகொள்ளலாம். மணச் சடங்கின்போது மணமகனின் உடன்பிறந்தவள், அவனிடமிருந்து. அவனுக்கு ஒரு மகள் பிறந்தால் அவளைத் தன் மகனுக்கு மணம் செய்துக் கொடுப்பதாக வாக்குறுதி பெறுவது வழக்கில் உள்ளது. கைம்பெண்கள் அணிகள் ஏதும் அணிந்து கொள்ளாமல், வெள்ளை அல்லது சிவப்புச் சேலை தரிப்பர். அவர்கள் மங்கல நிகழ்ச்சிகளிலோ திருவிழாக்களிலோ கலந்து கொள்ளுதல் கூடாது. அண்மைக் காலத்தில் கைம்பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு அவர்கள் சில உரிமைகள் பெற்றுள்ளனர். இன்று இளம் கைம்பெண்கள் தங்கள் தலைமுடியை மழிக்காமல் வளர்க்கவும், ஒரு சில அணிகளை அணியவும் அனுமதிக்கப்படுகின்றனர். மலையாள மொழி பேசப்படுகின்ற காசர்கோடு வட்டத்தில் வாழும் சில சிவாலி பிராமணர்கள் மலையாளப் பிராமணர்களின் பழக்கவழக்கங்களையே மேற்கொள்கின்றனர். இவர்களிடையே வயது வருவதற்குள்ளாக மணம் செய்விக்கப்படாத பெண்களைச் சாதிவிலக்கம் செய்யும் பழக்கம் இல்லை''

"கோடேசுவரர் பிராமணர்கள் மிகச் சிறுபான்மையரே. இப்பெயர் கொண்டாப்பூரிலுள்ள கோடேசுவரின் பெயராகும். இவர்கள் அவ்வட்டத்தில் வாழும் மற்றவர்களைப் போலக் கன்னடம் பேசுவது தவிரப் பிற எல்லாவகையிலும் சிவாலி பிராமணர்களையே ஒத்துள்ளனர்."

"ஹவீக, ஹவீக்க அல்லது ஹைக்க என்ற பிரிவினரான பிராமணர்கள் மயூரவர்மனால் குடியேற்றப்பட்ட ஹைகா என வழங்கும் நிலப்பகுதியில் மட்டும் வாழ்பவர்கள். இப்பகுதி வடகன்னடத்தில் தென் பகுதியையும் தென் கன்னடத்தில் வடகோடிப் பகுதியையும் உள்ளடக்கியதாகும். இவர்கள் சிவாலிகளைப் போல மாத்வாச்சாரியின் நெறியினைப் பின்பற்றாமல் சங்கராச்சாரியாரின் நெறிப்பட்டவர்களாகவே தொடர்ந்து இருந்து வருகின்றனர் இவர்கள் தற்போது கன்னடம் பேசினாலும் இவர்களுடைய சமய நூல்களும், குடும்ப ஆவணங்களும் துளு மொழியில் மலையாள வரிவடிவத்திலேயே எழுதப்பட்டு வருகின்றன. இவ்விரு பிரிவினரும் ஒரே குலமரபினை உடையவராயினும் அவர்கள் இன்று வேறுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். இவ்விரு பிரிவினரும் உடன் உண்ணும் பழக்கம் உடையவர்களாயினும் தங்களுக்குள்ளே மண உறவுவைத்துக் கொள்வதில்லை. ஹைவீக்க பிராமணர்கள் பலர் தென் கன்னடம் முழுவதும் கமுகந்தோப்பு வளர்ப்பதில் – இதில் இவர்கள் நல்ல திறமைசாலிகள் - ஈடுபட்டவர்களாகச் சிதறுண்டு வாழ்ந்து வருகின்றனர். காசர்கோடு வட்டத்தில் விட்டல் பகுதியில் நல்ல வசதியுள்ள சில குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அங்கு இவர்கள் கமுகந்தோப்பில் விளைவிக்கும பாக்கு கொண்டாப்பூர் வட்டத்தில் பள்ளத்தாக்குக்கு மேற்பகுதியில் உள்ள தோப்புகளில் விளையும் பாக்குக்கு அடுத்த தரம உடையதாக மதிக்கப்படுகிறது. ஹைவீக்க பிராமணர்கள் தலைமுறை தலமுறையாக அடர்ந்த நிழலான தோப்புகளிடையே வாழ்ந்து வருகின்ற காரணத்தால் மேற்குக் கடற்கரைப் பகுதி சார்ந்த பிராமணர்களைவிட நல்ல நிறம் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். இந்த நிறச் சிறப்பு பெண்களிடையே மேலும் சிறப்பாகப் புலனாகின்றது. இவர்கள் சிவாலி பிராமணப் பெண்களின் பழக்க வழக்கங்களையே மேற்கொண்டுள்ளனர். எனினும்

தோட்டங்களைப் பராமரிப்பதில் தனிக் கவனம் செலுத்தும் ஆர்வம் உடையவர்களாக உள்ளனர். எப்பொழுதும் இவர்கள் கால்களுக்கிடையே சேலை நுனியைச் செலுத்திப் பின்னால் சொருகிக் கொள்வதில்லை. ஹவீக்க பிரிவுக் கைம்பெண்கள் மற்றப் பல பிரிவினரைக் காட்டிலும் அதிக உரிமை பெற்றவர்களாக உள்ளனர். மலையாள மொழி வழங்கும் காசர்கோடு பகுதியில் வாழும் சில ஹவீக்க பிராமணர்கள் அப்பகுதியில் வாழும் சிவாலி பிராமணர்களைப் போலவே மலையாளத்துப் பிராமணர்களின் மொழியினையும் பழக்கவழக்கங்களையும் மேற்கொண்டுள்ளனர்.''

"கோட பிராமணர்கள் உடுப்பி வட்டத்தின் வடபகுதியில் உள்ள கோட என்ற ஊரின் பெயரினை ஒட்டி இவ்வாறு பெற்றுள்ளனர். ஹவீக்கர்களைப் போலவே இவர்களும் சங்கராச்சாரியார் நெறிப்பட்ட ஸ்மார்த்தர்களாகவே இருந்து வருகின்றனர். ஆனால் இவர்களுக்கும் சிவாலி பிராமணர்களுக்கும் இடையே ஹவீக்கர்களுக்கும் சிவாலியர்களுக்குமிடையே போல அதிக வேறுபாடு இல்லை ஆகையால் இவ்விரு பிரிவினரிடையேயும் அவ்வப்போது மண உறவுகள் நிகழ்கின்றன. கொண்டாப்பூர் வட்டத்திலும், உடுப்பி வட்டத்தின் வடபகுதிகளிலும் கோட பிராமணர் மற்ற பகுதிகளில் சிவாலி பிராமணர் வகிக்கும் சமூகப் படிநிலையை ஒத்த தகுதியைப் பெற்றுத் திகழ்கின்றனர்''.

''இம்மாவட்டத்தில் மிகச் சிலராக உள்ள சக்லரபுரியார் ஹவீக்கர்களிடையே இருந்து கருத்துவேறுபாடு காரணமாகப் பிரிந்து சென்றவர்களே. சிலகாலம் முன்புவரை இராமச்சந்திராபுரம் மடத்தினைச் சார்ந்திருந்த இவர்கள் தற்போது வட தென் கன்னட மாவட்டங்களின் எல்லையில் உள்ள சக்லாபுரி மடத்தைச் சார்ந்து விட்டனர். ஹவீக்கர்களைப் போலவே இவர்களும் கன்னடம் பேசுபவர்களே.''

"கண்டாவரர்கள் கொண்டாப்பூர் மாவட்டத்திலுள்ள கண்டாவர் ஊரின் பெயரைப் பெற்றுள்ளனர். இவர்கள் பொதுவாக உடுபாக்கள் என அழைக்கப்படுவர். இவர்கள் விஸ்வமித்ர என்ற ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

எனவே இவர்கள் தங்கள் சாதிக்குள் மண உறவு கொள்ளாமல் சிவாலி பிராமணர்களிடமிருந்து பெண் கொள்ளவும் கொடுக்கவும் செய்கின்றனர். உண்மையில் இவர்கள் சிவாலி பிராமணர்கள் வழிவந்தவர்களே. இவர்கள் ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு கண்டாவரில் சென்று குடியேறியவர்களாவர். அன்னு உடுப குடும்பத்தின் தலைவனே – அன்னு உடுப இக்குடும்ப மூதாதையரில் ஒருவன்-இப்பிரிவின் சாதித் தலைவனாக உள்ளான். அவனே சாதி வழக்குகள் தொடர்பான எல்லாப் பஞ்சாயத்துக்களையும் தலைமை தாங்கி நடத்துபவன். இச்சாதியாரின் பட்டப்பெயர் உடப அல்லது உட்ப என்பதாகும்.''

தென் கன்னட மாவட்டப் பிராமணர்கள் பற்றித் திரு டி. இராகவையா ஒரு குறிப்பில்* கூறியுள்ளதாவது:-''கைகளைப் பயன்படுத்தி உழைப்பதற்குக் கிழக்குக் கடற்கரையைச் சார்ந்த பிராமணர்களிடையே நிலவும் உள்ளுணர்ச்சிப் பாங்கினதான எதிர்ப்பு உணர்வும், அதன் தொடர்பாக இந்த நாட்டில் காட்டப்படுகின்ற வெறுப்பு உணர்வும், ஒரு சமயக் கோட்பாடாக ஒரு பிராமணன் தன் கைகளால் சொந்தமாகப் பயிர்த் தொழில் செய்வானாகில் அவன் கை நெருப்பு அவன் தொடும் எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும் என உருவாகியுள்ள நம்பிக்கையும் தென கன்னடத்தில் முற்றுமாக மறைந்துவிட்டன. அம்மாவட்டத்தின் ஊர்ப்புறங்களில் அதிலும் சிறப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகளில் பிராமணர்கள் வயலை வெட்டிக்கொண்டிருப்பதையோ உழுது கொண்டிருப்பதையோ பரம்பு அடித்துக்கொண்டிருப்பதையோ வாய்க்கால் அல்லது வரப்பு வெட்டிக் கொண்டிருப்பதையோ, ஓடையின் குறுக்கே அணையை உயர்த்தியபடி இருப்பதையோ அல்லது இது போன்ற பயிர்த்தொழில் தொடர்பான பல நூறு பணிகளில் ஏதாவது ஒன்றில் உடல் உழைப்பில் ஈடுபட்டிருப்பதையோ எங்கும் சாதாரணமாகக் காணலாம். பிராமணப் பெண்கள் தழை உரத்திற்காகச் செடிகளை வெட்டிக் கொண்டும், குப்பைகளைச் சேகரித்துக் கொண்டும், வயலுக்கோ

* இந்தியன் ரெவின்யு, VII, 1906. (Indian Review, VII, 1906.)

தங்கள் தோட்ட மரங்களுக்கோ எருவிடச் சுமந்து சென்று கொண்டும் இருப்பார்கள். பிராமணச் சிறுவர் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஆடு மாடுகளை மேய்க்கும் பணியில் ஈடுபட்டவராக இருப்பர். இது ஹவீக்க பிரிவுப் பிராமணர்களைப் பொறுத்தமட்டும் நூற்றுக்கு நூறு எங்கும் காணக்கூடியதாகும். அதனாலேயே ஒரு ஹவீக்கைத் தவிர வேறு எவனாலும் ஒரு கமுகந்தோப்பை உண்டாக்க முடியாத என்ற பழமொழியும் வழக்கில் உள்ளது. பரந்துபட்ட கமுகந்தோப்புக்கள் முழுவதும் இம்மாவட்டத்தில் ஹவிக் பிராமணர்கள் உடைமையாகவோ அல்லது பம்பாயைச் சேர்ந்த மராட்டா பிராமணர்கள் உடைமையாகவோ இருப்பது அனைவரும் அறிந்ததோர் உண்மையாகும். இந்தத் தோப்புக்களை இப்பிராமணர்கள் காத்து வருவதோடு புதிய இத்தகைய தோப்புகளையும் ஹொலையர் சிலர் உதவியுடனோ அல்லது தாங்களாகவே தனித்து உழைத்தோ உருவாக்கிக் கொண்டுள்ளனர்."

VI. ஒரியர்:

கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரிய பிராமணர்கள் பஞ்சகௌடர் பிரிவில் உட்கல உட்பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும் பஞ்ச திராவிடர் பிரிவினருக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. பஞ்சதிராவிடப் பிரிவைச் சேர்ந்த பெண்களுள் யாரும் கோஷா முறையைப் பின்பற்றுவதில்லை. ஒரிய பிராமணப் பெண்கள் கோஷாவாகத் தனித்து வாழ்கின்றனர். சிலபோது தண்ணீர் எடுத்துவர அவர்கள் வெளியே போவது உண்டு. அவ்வாறு செல்லும்போது வழியில் ஆடவர்கள் எதிரே வர நேரிட்டால், இவர்கள் சாலை ஓரமாகப் போய் அவ்வாறு வருகின்றவர்களுக்கு முதுகைக் காட்டியபடி நிற்பார்கள். விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில், "ஒரிய பிராமணர்கள் மயில், கடமான், இரலைமான், புறா, காட்டுப் பன்றி, மீன் ஆகியவற்றின் இறைச்சியை உண்பர்" எனக் குறிக்கப்பட்டுள்ளது. திருவிழாக்களின்போது சமைக்கப்படும் சிறப்பான உணவு வகைகளுள் மீன் ஒன்றாக இடம் பெற்றாக வேண்டும். பொதுவாக ஒரிய பிராமணர்கள் கௌடொக்களிடமிருந்து அதிலும் சிறப்பாக, சுல்லோ கௌடொக்களிடமிருந்தும் சில சமயங்களில் குடியர் மற்றும் ஒடியர் பிரிவி

னரிடமிருந்தும் தண்ணீர் வாங்கிக் குடிப்பர். திராவிட பிராமணர்களால் தொடப்பட்ட தண்ணீரை இவர்கள் தீட்டுப்பட்டதாகக் கருதுவர். இவர்கள் திராவிட பிராமணர்களை கொம்ம (கர்மா என்பதன் சிதைந்த வடிவம்) பிராமணர் என்று அழைப்பர். ஒரிய பிராமணர்கள் முன்பே கூறப்பட்ட மடி ஆடை பற்றித் திராவிட பிராமணர்களைவிட மிகக் கருத்தாக இருப்பர். மடி ஆடையாக உடுக்கும் துணியை எக்காரணம் கொண்டும் வண்ணானிடம் வெளுக்கத் தரமாட்டார்கள். மேலும் காலைக் கடன்களைக் கழிக்கச் செல்லும் சமயங்களில் அந்த ஆடையை அவர்கள் அணிவதில்லை. அதனை அவிழ்த்து வைத்து, வேறு ஆடை அணிந்து சென்று,திரும்ப வந்து குளித்த பின்பே மீண்டும் மடி ஆடையை உடுத்துவர். திராவிட பிராமணர்களிடையே சாதாரணமானதாக வழக்கில் உள்ள தாய் மாமன் மகளை மணந்துகொள்ளும் பழக்கம் ஒரியர்களால் புனிதமற்ற அடாத செயலாகக் கருதப்படுகிறது. ஒரு ஒரிய பிராமணனை இறைச்சித் தின்பவன் எனக் குறை கூறினால் அவன் உடனே அது மாதுல கன்னியை மணம் செய்து கொள்வதைவிடக் கேவலமானதன்று எனப் பதிலடி கொடுப்பான். இவர்களிடையே தாலியோ பொட்டோ கட்டும் பழக்கம் இல்லை. மண நிகழ்ச்சிகளில் பாணிக்கிரகணம் எனப்படும் மணமகளின் கைப்பற்றுதல், சப்த பதி எனப்படும் ஏழடி வைத்தல் ஆகிய சடங்குகளையே முக்கியமானவையாகக் கருதுகின்றனர். ஒரிய பிராமணர்களிடையே ஸ்மார்த்தர், வைணவர் என்ற இரு பிரிவினரும் உள்ளனர். பின்னவர் பரமார்த்திகளாகச் சைதன்யர் நெறியினையே மேற்கொண்டுள்ளனர். பூரி ஜகன்னாதரை இவர்கள் பெரிதும் போற்றி மதிக்கின்றனர். இவர்கள் எப்பொழுதும் பூரி ஜகன்னாதர் கோயில் பிரசாதத்தை உடன் எடுத்துச் செல்வர். இவர்கள் பின்வரும் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளனர்.

1. சாந்டொ (சாமந்தர்-தலைவர்)
2. தானுவர் (கொடை பெறுபவர்)
3. பாதியர் (வேதம் கற்றுக் கொள்பவர்)

4. சாருவர் (சாரு-சேப்பங்கிழங்கு)

5. ஹொலுவர் (ஹொலொ-நுகத்தடி)

6. போதிரியர் (கங்கைக் கரையிலுள்ள போத்திரிய அக்ர காரத்தார்)

7. பாருவர் (சிறிய கடற்கரைத் துறைமுகம்)

8. டௌலியர் (கோயிற் பணி செய்வோர்)

9. கொட்டோகியர் (கோட்டைகளில் சமீன்களின் பணி யாளராய் வாழ்வோர்)

10. சாஹி (கடன் கொடுப்பவர்)

11. ஜாதுவர் (காடு)

12. சொடெய்பால்யர் (தெய்வநெறி நில்லாதவர்)

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் பின்வருமாறு பதியப்பட்டுள்ளது:-"சாந்டொக்கள் தங்களை மற்றப்பிரிவினரை விட உயர்ந்தவர்கள் எனக் கருதுகின்றனர். இவர்கள் பிற பிரிவினருக்குப் புரோகிதம் செய்வதில்லை. மற்றப் பிரிவினர் தங் களுக்குள் ஒருவருக்கு ஒருவர் புரோகிதம் செய்வர். தங்கள் பிரிவினைச் சார்ந்த பெண்களின் நடத்தையிலும் இவர்கள் மிகுந்த கண்டிப்பாக இருப்பர். தானுவர் இரந்தே வாழ்க்கை நடத்துகின்றனர். பணக்காரர்களின் சாவுச் சடங்கின்போது இவ்வாறு இரத்தலைச் சிறப்பாக மேற்கொள்வர். தானுவரும் பாதியரும் வேதம் அறிந்தவர்கள். சமீன்தாரர்களுக்கும், உயர் சாதிச் சூத்திரர்களுக்கும் இவர்கள் புரோகிதர்களாக உள்ளனர். சாருவர் வள்ளிக் கிழங்கு பயிரிடுகின்றனர். ஹொலுவர் இதற் கும் ஒருபடி மேலே சென்று பயிர்த் தொழிலிலேயே முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.பிராமணர்கள் இதுபோலப் பயிர்த்தொழிலில் ஈடுபடுவதால் புழுபூச்சுகள் இறக்க நேரிடுகின்றன. ஆகையால் மனு இதில் நேரிடையாக ஈடுபடுவது கூடாது என விதித்துள் ளார். சில சாருவர்கள் புரோகிதராகத் தொழில் செய்யத் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் ஹொலுவர் எவருக்கும் இத்தகைய தகுதி இல்லை. 1891 கணக்கெடுப்பில் மாநிலத்திலேயே பிராம

ணர்களுள் ஹொலுவர்களே குறைந்த கல்வி அறிவுடைய பிரிவினராகப் பதியப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒரு சிலரே ஒவ்வொரு பிராமணரும் தவறாது செய்வதற்குரிய சந்தியையும் தர்ப்பணத்தையும் செய்கின்றனர். எனினும் அவர்கள் தூய்மை உடையவர்களாகக் கருதப்படுவதுடன் சமீன்தார் களிடம் சமையல்காரர்களாகவும் உள்ளனர். ஆறாவது பிரிவினரான போதிரியர் பற்றி ஒரு விசித்திரமான கதை வழங்குகின்றது. போதிரி என்றால் அம்பட்டன் எனப் பொருள் படும். இப்பிரிவினரின் மூதாதையரான ஒருவன் ஓர் அம்பட்டன் எனக் கூறப்படுகிறான். பூரியில் சாந்டோ சிறுவர்களோடு ஒருங்கு வளர்க்கப்பட்ட அவன் வேதங்களையும் சாத்திரங் களையும் மிகுதியும் கற்றுத்தேர்ந்தவனாக இருந்தான். பூரியை விட்டு அவன் பூணூல் அணிந்தவனாக, பிராமணனைப் போல ஜெய்ப்பூரில் சென்று குடிபுகுந்ததோடு ஒரு பிராமணப் பெண் ணையும் மணந்து குழந்தைகளையும் பெற்றுக்கொண்டான். அவன் குழந்தைகளும் பின்னர் பிராமணர்களிடையே மணம் செய்து கொண்டனர். இறுதியில் அவனைப் பற்றிய உண்மை அறியப்பட்டு அவன் மீண்டும் பூரிக்கு அழைத்துச் செல்லப்பட, அங்கே அவன் தற்கொலை செய்து கொண்டான். பிராமணர்கள் அவனை அடக்கம் செய்த புதை குழியின் மேல் துளசிச் செடி முளைக்குமானால் அவன் பிள்ளைகளைப் பிராமணர் களாக ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்கள். அவன் புதை குழியின்மேல துளசிக்குப் பதிலாகப் புகையிலைச் செடியே முளைத்தது. எனவே அவன் வழி வந்தவர்கள் பிராமண அம்பட்டர்கள் அல்லது போதிரிகளாகக் கருதப்பட்டனர். கர்ணம், கௌடொ, மகந்தி சாதியார் கூட இவர்களிடம் தண்ணீர் கேட்டுப் பெற்றுக் குடிப்பதில்லை. இவர்கள் புகையிலையும் வள்ளிக் கிழங்கும் பயிரிடுவதோடு கோயில் களிலும் பூசாரிகளாகவும் பணியாற்றுகின்றனர். தீட்டுக்குரிய வர்கள் அல்லாத கீழ்ச்சாதியாருக்குப் புரோகிதமும் செய்கின் றனர். எஞ்சியுள்ள ஆறு பிரிவுகளில் பாருவர் மட்டுமே மற்றச் சாதியாருக்குப் புரோகிதம் செய்கின்றனர். இதனையும் அவர்கள் சூத்திரர்களுள் கீழ்ச்சாதியினருக்கே செய்கின்றனர். சொடெய் பால்யரைத் தவிர மற்றப் பிரிவினர் அனைவரும் சந்தியும்

தர்ப்பணமும் செய்கின்றார்கள். அவர்களின் தொழில்கள் மட்டும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன. பாருவர் கோயில்களில் பூசாரிகளாக இருப்பதோடு மருத்துவர்களாகவும் செயல்படுகின்றனர். டௌலியர் பூசாரிகளாகப் பணியாற்றுவதோடு சமீன்தார்களின் இல்லங்களில் குற்றேவலர்களாகவும் வள்ளிக் கிழங்கு பயிரிடுவோராகவும், அன்றாடம் கூலி பெறும் தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர். கொட்டொகியர் சமீன்தார் இல்லங்களில் பணியாளர்களாக உள்ளனர். சாஹூக்கள் பட்டு, கூலம் முதலானவற்றை வணிகம் செய்வதோடு வட்டிக் கடைகளும் நடத்துகின்றனர். ஜாதுவர்கள் மலைத் தோட்டங்களில் பயிர்த்தொழில் செய்வதோடு பொதி மாடுகளின் துணையோடு வணிகமும் செய்கின்றனர். இறுதிப் பிரிவினரான சொடெய்பால்யர் சமீன்தார்களின் குற்றேவலர்களாக இருப்பதோடு நாள் கூலிக்காரர்களாகவும் உள்ளனர்.''

VII. சாரஸ்வத்துகளும் கொங்கணியர்களும்:-

இவ்விரு பிரிவினரும் கௌட பிரிவினைச் சேர்ந்த கொங்கணி மொழிபேசுவோர். கொங்கணி பேசுபவர்கள் பழைய வடமொழி நூல்களில் அடிக்கடி கூறப்படுகின்ற சரசுவதி ஆற்றங்கரையில் முதலில் வாழ்ந்து வந்தவர்களாவர்.இந்த ஆறு காலப்போக்கில் இராசபுதனத்துக்கு வடக்கே உள்ள பாலைவனத்தில் மறைந்து அழிந்துவிட்டது. இவர்களால் மீன் உணவை ஒதுக்கி வாழ முடியாதாகையால் மற்றப் பிராமணர்கள் இவர்களைத் தாழ்ந்தவர்களாகவே கருதுகின்றனர். கௌட சாரஸ்வத கொங்கணஸ்தர் என்பதே தங்களுடைய சாதியின் முழுப் பெயராகக் கொங்கணர்களால் தரப்படுகிறது. தென் கன்னடத்தில் காணப்படும் கொங்கணர் அனைவரும் ரிக் வேதிகளே. சிவாலி பிராமணர்களைப் போல இவர்களிடையேயும் புறமணக்கட்டுப்பாடுடைய பல குலப் பிரிவுகள் உள்ளன. அவற்றை இவர்கள் தங்கள் பெயருக்குப் பின் பட்டப்பெயர்களாகச் சேர்த்துக் கொள்கின்றனர். பிரபு என்பது ஒரு குலப்பிரிவின் பெயர். கிருஷ்ணப்பிரபு என்பது ஒருவரின் பெயர். கொங்கணிகளில் பெரும்பாலோர் மாத்வர்கள். திருப்பதியில் உள்ள வெங்கடரமணரே இவர்கள் வழிபடும் தெய்வம். தென் கன்னடத்தில் உள்ள இவர்களின்

கோயில்கள் அத்தெய்வத்திற்குரியனவே. மற்றப் பிராமணர்கள் கொங்கணிகளின் கோயில்களுக்குச் செல்வதில்லை. பிராமண ரல்லாதார் அக்கோயில்களுக்குச் செல்வர். கொங்கணிகளின் கோயில்களில் வெங்கடரமணரின் சிலையினை வைத்து வழிபடா மல் அத்தெய்வத்தின் உருவம் பதிக்கப்பட்ட வெள்ளித் தகட் டினை வைத்து வழிபடுவது குறிப்பிடத்தக்கதொரு தனித்தன்மை யுடையதாகும். மஞ்சேசுவர், முல்கி, கார்கல் ஆகிய மூன்று இடங்களில் உள்ள கோயில்களும் சிறப்பு வாய்ந்தவை. இக் கோயில்களைச் சார்ந்தே தர்சனர் எனப்படும் தெய்வம் ஏறப் பெறும் பிராமணர்கள் உள்ளனர். முல்கி கோயிலைச் சேர்ந்த தர்சனர் நாளும் காலையில் பதினொரு மணியளவில் கோயி லுக்கு வருகின்றனர். வழிபாட்டுக்குப் பின் அவருக்குத் தீர்த்தம் வழங்கப்படுகின்றது. அதனைக் குடித்தபின் கையில் தெய்வத் திற்குப் படைக்கப்பட்ட பிரசாதத்துடன் அவர் வெளியே வருகின்றார். அப்பொழுது தொடங்கி சுமார் பத்து மணித்துளி நேரம் அவர் உடம்பு சிலிர்த்தவராக நடுங்குகின் றார். பின்னர் சிலிர்ப்பு மெல்லக் குறைகின்றது. அவர் கைகளில் பிரம்பும் நீளக் கத்தரிக்கப்பட்ட மான் தோலும் தரப்படுகின்றன. அதனால் அவர் தன் முதுகிலும், புறங் களிலும், தலையிலும் தன்னையே விளாசிக் கொள்கின்றார். மீண்டும் அவருக்குத் தீர்த்தம் கொடுக்கப்படுகிறது. அதனைக் குடித்தபின் அவர் நடுக்கம் முதுவதுமாக நின்றுபோய்விடு கின்றது. கோயிலுக்கு வந்திருப்பவர்கள் அப்போது அவரிடம் கேள்விகள் கேட்பர். அவர் அவற்றிற்கு கொங்கணியில் பதிலிறுப்பார். அதனை மொழி பெயர்த்துச் சொல்வர். தான் செய்யவேண்டியதை நன்கு புரிந்து வைத்துக் கொண்டுள்ள அவர், மக்களை வெங்கடரமணசாமிக்குத் தங்கள் சக்திக்குத் தக்கபடி பொன்னும் பொருளும் தரும்படி கூறுவார். மங்களூரில் வணிகம் செய்து வந்த ஒரு குசராத்திக்காரர் 1907-இல் இக் கோயிலுக்கு வந்து கருவுற்று இருக்கும் தன் மனைவியின் நிலை பற்றி வாக்குச் சொல்லும்படி கேட்டார். தர்சனர் அவள் நல்லபடியாக ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாளெனக் கூறியதோடு அவரிடம் இதுபோல நடந்தேறினால் அவரு டைய மனைவியின் எடைக்குச் சமமாக வெள்ளியினைக்

கோயிலுக்குத் தரவேண்டும் என்ற உறுதி மொழியினையும் பெற்றுக் கொண்டார். அந்த வாக்குப் பலிக்கவே அந்த வணிகர் ஐயாயிரம் ரூபாய் மதிப்புடைய வெள்ளி, வெல்ல உருண்டை, பேரீச்சை ஆகியவற்றை உரிய எடைக்குச் சமமாகக் கோயிலுக்குத் தந்துள்ளார். மல்லேசுவரர் கோயில் தர்சனர் ஊமை தர்சனராக உள்ளார், அவர் வாக்குக் கூறாமல் கேள்வி களுக்கு விடையினைச் சைகைகளால் கூறுவார். கொங்கணி களின் நாகவளி மணச்சடங்கின்போது மணமக்களும் பெண்டி ரும் சேர்ந்து அரிசியாலோ கோதுமை மாவாலோ எட்டுப் பாம்புகள் அமைப்பர். சிவனையும் பார்வதியையும் குறிக்கும் பானை அருகே ஒரு கண்ணாடி வைக்கப்படும். நாகவளிச் சதுரத்தின் அருகே தரையில் மாவினால் எட்டு யானைகளையும் எட்டுப் பைரவர்களையும் வரைவர்.

1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பில் கொங்கணிகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- ''பஞ்ச கௌடக் களின் ஓர் உட்பிரிவான சரஸ்வட் பிரிவினைச் சேர்ந்தவர்கள் கொங்கணிகள். இவர்களுடைய நல்ல உடற்கட்டும், அழக மைந்த உடற்கூறுகளும், நல்லநிறமும் இவர்களை ஆரியர்களோடு தொடர்புடைய இனத்தவர்களாகக் கருத இடந்தருகின்றன. இவர்கள் பிரிவின் பெயர் இப்பிரிவின் குருவான சரஸ்வதவின் பெயரிலிருந்து அமைந்ததாகும். பீகாரில் இன்று திர்கொட் என வழங்கப்படும் திரிகோட்டபுரமே இவர்களின் தொன்மையான வாழ்விடமென்று கூறப்படுகிறது. வழக்குக் கதைப்படி பரசுராமர் பத்துக் குடும்பங்களைக் கோமண்டாக என வழங்கிய தற்போதைய கோவாவையும், பஞ்சரகோசியையும், குசஸ்தாலியையும் சுற்றியுள்ள ஊர்களில் குடி அமர்த்தினார் எனக் கூறப்படுகின்றது. கோவாவினை விசய நகரத்தார் கைப்பற்றியபோது இவர்கள் அந்த மரபின் அரசர்களின் ஆதரவைப் பெற்றனர். கோவாவைப் போர்ச்சுகீசியர் கைப் பற்றிய கால் நூற்றாண்டுகள் வரை போர்ச்சுகீசியக் கவர்னர் களின் ஆட்சியில் எத்தகைய தொல்லைகளும் இன்றி இவர்கள் வாழ்ந்துவந்தனர். அக்காலக்கட்டத்தில் இவர்கள் ஐரோப்பியப் பணப்பண்டங்களின் வணிகத்தில் ஈடுபட்டு நல்ல ஊதியம்

ஈட்டினர். போர்ச்சுகீசியர்கள், முரண் சமயத்தவர்களை ஒடுக்கத் தண்ட உயர்முறைமன்றம் அமைத்துப் பிற சமயத் தவர்களைத் தண்டிக்கத் தொடங்கியவுடன் இவர்கள் தாங்களாகவே கோவாவை விட்டு வெளியேறினர். சிலர் மதமாற்றத்திற்கு உட்படப் பலரும் வடக்கிலும் தெற்கிலுமாக இடம் பெயர்ந்து செல்வாராயினர். தெற்கு நோக்கி வந்தவர்கள் கன்னடத்திலும் கள்ளிக்கோட்டையிலும் தங்கினார்கள். கள்ளிக் கோட்டை சாமோரின் அரசர் இவர்களை ஏற்றுப் பேணாத நிலை யில் அவர்கள் மேலும் தெற்கே சென்று கொச்சி, திருவாங் கூர் அரசர்களின் ஆதரவில் தங்கிப் பெருகலாயினர். கிறித்தவர் களாக மதம் மாறியவர்கள் முதலில் வெளியேறியவர்களைப் பின்பற்றி வெளியேறி மாநிலத்தின் வணிகச் சிறப்புடைய மையங்களில் தங்கிச் செம்புத் தட்டராகத் தொழில் செய்து செப்புப் பாத்திரங்களில் நல்ல ஊதியம் பெற்று வருகின்றனர். கோவாவில் இருந்து குடிபெயர்ந்த பிராமணர்கள் கொங்கணத் திலிருந்து வந்தவர்களாதலால் கொங்கணிகள் என அழைக்கப்படு கின்றனர்.தொடக்கத்தில் சைவர்களாக இருந்த இவர்கள் இன்று மாத்வாச்சாரியரின்நெறியைப் பின்பற்றும்தீவிரவைணவர்களாக உள்ளனர். இவர்கள் என்றும் மற்றத் தென்னிந்தியப் பிராமணர் களோடு சமமானவர்களாகக் கருதப்பட்டதில்லை. இவர் களோடு மற்றப் பிராமணர்கள் உண்பதோ மண உறவு கொள் வதோ இல்லை. கொச்சியில் இவர்களுள் பெரும்பாலோர் வணிகர்களாகவே உள்ளனர். இவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுவதற்கு இவர்கள் செய்யும் தொழிலே அடிப்படைக் காரணம் எனலாம். இவர்கள் திருமலை தேவஸ்தானம் என அழைக்கப்படும் தங்களுக்குரிய தனிக்கோயில்களைக் கொண்டுள் ளனர். மலையாளிகளுக்குரிய இந்துக் கோயில்களின் கருவறை சார்ந்த மண்டபத்தில் இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களும் இதனால் இப்பகுதி கடற்கரைக்கு உரியவர்களான இந்துக்களைத் தங்கள் கோயில்களின் கருவறை சார்ந்த அறை யில் அனுமதிப்பதில்லை. எனினும் நம்பூதிரிகள் மட்டும் கோயில் களின் கருவறைகளுக்குள் கூட அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள் சாதியினைச் சேர்ந்த வழக்குகளைச் சாதிக் குருக் களான மஞ்சேஸ்வரம் அல்லது பாசரோரில் இருக்கும் காசி மடச்

சாமியாரே தீர்த்து வைப்பார். அவரை இவர்கள் மிகவும் மதிப்பதோடு சமயம், சமூகம் தொடர்பானவை பற்றி அவர் கூறும் முடிவுகளை இறுதியானவையாக ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களுடைய கோயில்களுள் சில மிகுதியான நிலங்களைச் சொத்தாக பெற்றுள்ளன.

கொச்சியில் உள்ள இவர்களின் கோயில்தான் மாநிலத்திலேயே அதிக செல்வவளமுடைய கோயில். இக்கோயில்களின் நடைமுறை நிர்வாகம் கொங்கணி யோகாக்களால் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் மேற்பார்க்கப்படுகின்றது. நாயர்களும் அவர்களுக்கு உயர்த்த சாதியினரும் இவர்களைத் தொடுவதில்லை. இவர்கள் வீட்டுப் பெண்கள் கிழக்குக் கடற்கரைப் பக்கப் பிராமணர்களைப் போல சாயம் தோய்த்த சேலையைப் பயன்படுத்தினாலும் சேலையை உடுத்தும் விதமும் அணிகளை அணியும் முறையும் இவர்களை மற்றப் பிராமணப் பெண்களிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறிய உதவுகின்றன. இவர்களிடையே செல்வ வளமுடைய வணிகர்களும் நிலக்கிழார்களும் உள்ளனர். பிரபு, பாய், செனாய், கினி, மல்லன், வாத்யார் என்பன இவர்களுக்குரிய மிகுதியும் வழக்கில் உள்ள பட்டப் பெயர்களாகும்.

குடிபெயர்ந்து வந்தவர்களான வேறு பல வகுப்பாரைப் பற்றியும் இறுதியாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. இவர்களுள் தேசஸ்தர் எனப்படும் மராத்தி பேசும் பிராமணர்கள், ஸ்மார்த்தர்கள், மாத்வ கருநாடகர்கள் ஆகியோருடைய பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளதோடு அவர்களோடு மண உறவும் செய்து கொள்கின்றனர். தேசஸ்தர்களின் மணச் சடங்கில் குறிப்பிடத்தக்க சிறப்பான கூறு அம்பாபவானி அல்லது துளஜபவானி வழிபாடாகும். அப்போது கொண்டல இசைவாணர்கள் பவானியினைப் புகழ்ந்து இசைபாடுவர். சித்பவன் பிராமணர்கள் மராத்தியும் கொங்கணியும் பேசுகின்றனர். தென் கன்னடத்தில் இவர்கள் ஹவீக்க பிராமணர்களைப் போல கமுகந் தோப்புகளின் உரிமையாளர்களாக உள்ளனர். தென் கன்னடத்தில் காணப்படும் கராடி பிராமணர்கள் பம்பாய் மாநிலத்தில்

உள்ள கராடியிலிருந்து தெற்கு நோக்கிக் குடிபெயர்ந்து வந்தவர்களாவர். பரசுராமர் ஒட்டகங்களின் எலும்புகளிலிருந்து இவர்களை உண்டாக்கியதாக ஒரு கதை வழங்குகின்றது.

பிராமணி - Brāhmani

அம்பலவாசியரில் ஒரு பிரிவினர் (பார்க்க : உண்ணி)

பிரகஸ்பதி வராத்தர் - Brishaspati Vārada

பிரகஸ்பதிக்குரிய வியாழக்கிழமையில் தங்கள் தெய்வத்தை வழிபடுபவர் எனப் பொருள்படும் குருபர்களின் ஓர் உட்பிரிவினர்.

பிரிஞ்சாரி - Brinjāri

லம்பாடிகளுக்குரிய மற்றுமொரு பெயர்.

புடுபுடுக்கே - Budubudike

புடுபுடுக்கே அல்லது புடுபுடுக்கலர் எனப்படுவோர் பற்றி மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பின்வருமாறு விளக்கம் தரப்பட்டுள்ளது:- "மராத்தியரான இவர்கள் நாடோடிகளாகத் திரியும் பிச்சைக்காரர்களாகவும் குறி கூறுவோராகவும் உள்ளனர். பறவைகள், பூச்சிகள் ஆகியவற்றைக் கேட்டுத் தாங்கள் குறி கூறுவதாக நடிப்பார்கள். மைசூரின் எல்லா மாவட்டங்களிலும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். இருபுறமும் வார் போர்த்தப்பட்ட உடுக்கையினை அதன் முனையில் முடிச்சிடப்பட்டுத் தொங்கும் கயிற்றினைக் கொண்டு அடித்து ஒலி எழுப்புவர். அதை அடிப்பவர் சாமார்த்தியமாக விரைந்து பக்கங்களை மாற்றி அடிக்கும் போது பறவைகளின் அதிரொலிப் பாடலை ஒத்த ஓசை அந்த உடுக்கையிலிருந்து வெளிப்படும். காலை நேரத்திலேயே இவ்வாறு வீடுகளின் முன் நின்று உடுக்கையினை அடிப்பர். ஏமாற்றுக்காரனான குறி கூறுபவன் அதிர்குரலில் அதிகாலையில் பாடும் பறவைகளின் ஒலியிலிருந்து அவன் தான் குறி

கூறும் வீட்டுக்காரர்களினுடைய வருங்காலத்தைக் கேட்டு ணர்ந்து கூறுவதாக நடிப்பான். இவர்களுள் பெரும்பாலோர் அனுமனை வழிபடுபவர்கள்.'' புடுபுடுக்கை என்ற இப்பெயர் காலங்காட்டும் கண்ணாடிக் குவளையின் வடிவிலான உடுக் கையின் பெயரிலிருந்து வந்ததாகும்.

புடுபுடுக்கைக்காரர் பற்றி அண்மையில் (1907 ஆம் ஆண்டு) சென்னை மெயில் நாளிதழில் வெளியான பின்வரும் கட்டு ரைக்கு நான் நன்றியுடையவனாவேன்:- "சில இறகுகள் சொருகப்பட்ட இரு நிறங்களைக் கொண்ட தலைபபாகை, கந்தலான கால் சட்டை, தொள தொளவென இருக்கும் முழங் கால் வரை வெட்டப்பட்ட மேல்சட்டை, தோளில் தொங்கும் பெரிய கைப்பை ஆகியவையே புடுபுடுக்கைக்காரன் மேற் கொண்டு வரும் கோலம் ஆகும். கிடைக்குமானால் சிறுத்தை யின் தோல் ஒன்றினையும் தன் தகுதியை உயர்த்திக் கொள்ள முதுகுப் பக்கத்தில் தொங்கவிட்டுக் கொள்வான். இட முன் கையில் பலவகையான கந்தல் துணிகளைத் தொங்க விட்டுக் கொண்டிருப்பான். மொத்தத்தில் அவன் தோற்றம் கற்பனை யில் மட்டுமே காணக்கூடியதான கதம்பக் காட்சியாக இருக்கும். பறவைகள் பறக்கும் விதத்தையும், குரல் கொடுக்கும் இயல்பை யும் கொண்டு மனிதர்களின் எதிர்காலத்தை இவன் கணித்துக் கூறவல்லவன் எனப் பொதுவாக நம்பப்படுகிறது. அவன் கூறும் வருங்காலக் கணிப்பு அவன் வேகமாக ஒப்பிக்கும் பாட்டுப் போன்ற கூற்றில் உட்பொருள் அடங்கியதாக இருக் கும். அவன் ஒப்பிக்கும் கூற்று பெரிதும் ஒரே படித்தான தாகக் காட்டுப் பறவைகளின் பாட்டொலியின் ஓசையினின்றும் தொகுக்கப்பட்டதாகக் கருதக் கூடிய கருத்துக்கள் கொண்டி ருக்கும். அவன் எந்த வீட்டின் முன் நின்று தன் கணிப்பைச் சொல்கின்றானோ அந்த வீட்டுக்காரருக்கு மன அமைதி, செல்வ வளம், அழகிய ஆண்மகப்பேறு, தாமரை மலர் போன்ற கண்களை உடைய மனைவி, வேலையில் அல்லது செய்யும் தொழிலில் உயர்வு, பல்லாயிரம் குணநலங்கள் ஒருங்கு நிறைந்த நல்லியல்பு, எதிரிகளை வேரறுக்கும் திறன் ஆகிய நன்மைகள் எல்லாம் வரப் போவதாகக் கூறுவான், எதிர்பாராதவகையில்

எதிர்பாராத இடத்திலிருந்து எதிர்பாராத மகிழ்ச்சி தரும் செய்தி வரப் போவதாக ஆசை மூட்டித் துணிதரும்படி வேண்டுவான். அவன் கேட்டபடி துணி கிடைக்குமானால் மகிழ்ந்தவனாகச் செல்வான். இல்லையேல் மனம் தளராமல் பொறுமையோடு மறுநாளும் அடுத்துவரும் நாள்களிலும் அதே வீட்டின் முன் தோன்றித் தன் கணிப்புகளை ஒப்பிப்பான். இவனுடைய இந்த நச்சரிப்பினைத் தாங்க முடியாதவராக அந்த வீட்டுக்காரர் அவனுக்கு ஒரு துணியைக் கொடுத்தே ஆக வேண்டிவரும். அவனுக்குப் புடுபுடுக்கை எனப் பெயரினைத் தந்த அவன் வைத்திருக்கும் சிறு உடுக்கை விசித்திரமானதே. உருவத்தில் அது மிகச்சிறிய நாழிகை அளக்கப் பயன்படும் கண்ணாடிக் குவளையை ஒத்திருக்கும். அதன் நடுவில் நுனியில் முடிச்சிடப்பட்ட ஒருகயிறு கட்டப்பட்டிருக்கும் அதுவே தோலில் இருபுறமும் மோதி ஒலி எழுப்புகின்றது. அதனுடைய தோற்றம் பற்றிய புராண மரபொடுபட்ட கதை ஒன்று வழங்குகின்றது. இக்கதையினால் புடுபுடுக்கை பெருமிதமடைவதோடு அதனை அவன் தன் தொழிலுக்குத் தகுதியைத் தருவதான உரிமையாகவும் கருதுகின்றான். அக்கதையின்படி முதன்முதல் இவ்உலகில் தோன்றிய புடுபுடுக்கல உலகப் படைப்பில் இறுதியாகப் படைக்கப்பட்டவனாக இருந்துவிட்டான். அவன் பிறந்த சமயம் அல்லது உருக்கொண்டு வந்த நேரத்தில் உலகில் மற்ற இனமக்கள் தோன்றி வாழ்க்கைப் போராட்டத்தில் முனைந்து இறங்கி விட்டிருந்தனர். உலகின் படைப்பு முழுமை பெற்றதாகிவிடவே புடுபுடுக்கல உலகின் முழுமையான இயக்கத்திற்குத் தேவையில்லாத ஒருவனாக இருந்தான். இந்தக் குழப்பம் காரணமாக அவன் தன் தெய்வமான அம்பா பவானியிடம் முறையிட்டுக் கொள்ளவே, இவன்மேல் இரக்கம் கொண்ட அவள், தன் கணவன் பரமசிவனுடைய உடுக்கையை அவனிடம் தந்து 'என் மகனே, இதைத் தவிர உனக்கு வேறு எதுவும் இல்லை. இதை வைத்து இரந்து வாழ்வாயாக. உனக்கு நல்ல வளமான வாழ்வு கிட்டும்' என ; வாழ்த்தினாள். பிச்சைக்காரர்களுக்குள்ளே புடுபுடுக்கலர் உயர்ந்த நிலையினனாகத் தன்னைக் கருதுகின்றான். வழக்கமாக இரப்பவர்களுக்கு இடப்படும் ஒரு பிடி அரிசியினை இவன் ஏற்றுக் கொள்வதில்லை. கிழிந்ததோ, பழையதோ,

நல்லதோ, கெட்டதோ, ஆவதோ, ஆகாததோ எப்படிப்பட்ட தாயினும் தனக்குத் துணிதான் வேண்டும் என அவன் கேட்பான். அவ்வாறு கேட்பதை அவன் அப்படியே எப்பொழுதும் பெற்று விடுவதில்லை. புத்திசாலியான அவன் பழைய கந்தல் துணி விற்பனை செய்யப்படும்போது ஒரு பிடி அரிசியின் மதிப்பைவிட மிகுதியான மதிப்பினை ஈட்டித்தரும் என்பதனை அறிவான். எப்பொழுதும் நாடோடியாகத் திரியும் அவன் பருவ நிலைக் கேற்பத் தன் பயணத் திட்டத்தை அமைத்துக் கொள்வான். ஊர்ப் புறங்களுக்கு அறுவடைப் பருவம் முடிந்த பின் செல்வதே அவன் மேற்கொண்டுள்ள வழக்கம். அச்சமயத்திலேயே ஊர்பக்கங்களில் வாழும் மக்கள் மன மகிழ்ந்தவர்களாக தனக்கு நல்ல சன்மானம் வழங்குவர் என்பது இவனுக்குத் தெரியும். இம் மாநிலத்தின் எந்தப் பகுதியில் இவன் சுற்றிக் கொண்டிருந்தாலும் தசராப் பண்டிகைநெருங்கும் சமயத்தில்வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலூரை நோக்கி நடையைக் கட்டத் தொடங்கிவிடுவான். அவ்வூரில் அப்போது இவர்கள் இனத்துக்குரிய தெய்வமான அம்பா பாவனியின் ஆண்டு விழாக் கொண்டாட்டம் நிகழும்.''

காஞ்சிவரத்தில் உள்ள பதிவின்படி புடுபுடுக்கைச் சாதியாருக்குரிய அடையாள முத்திரை முத்துச் சிப்பியாகும்.* புடுபுடுக்கேயைக் குறிப்பதற்கான ஓரியச் சொல் டுபடுப (Dubaduba) என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் குறிக்கப் பட்டுள்ளது.

புஜ்ஜினிகியோரு – Bujjinigiyoru (jewel box)

கங்கதிகார வக்கலிகரின் ஓர் உட்பிரிவு.

புக்க - Bukka

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில், ''புக்கர் பலிசர்களின் உட்பிரிவினர். மஞ்சள், குங்குமம், சீப்பு ஆகியன விற்கும்

---

* ஜே. எஸ். எப். மெக்கன்சி, இந். தொல். IV 1875. (J.S.F. Machenzie, Ind. Ant. IV, 1875.)

இவர்கள் முதலில் கோமட்டிகளாக இருந்தவர்கள்" எனக் கூறப்பட்டுள்ளது. ஊர்ஊராகச் சென்று மஞ்சள், அபினி முதலியவற்றை இவர்கள் விற்பர் என ஜெ. கெயின் பாதிரியார் கூறியுள்ளார். கதை வழக்குப்படிக் கன்யகம்மா நெருப்புக் குண்டத்தில் விழுந்த சமயம் இவர்கள் அவளைப் பின்பற்றி நெருப்புக் குண்டத்தில் விழாமல் அவளுக்குப் புக்கபொடி (See: Komāti) மஞ்சள், குங்குமம் முதலியன தந்தனர். இதனால் அவள் நன்றி மறவாத கோமட்டிகளிலிருந்து இவர்கள் தனித்துப் பிரிந்தவர்களாகத் தனக்கு இவர்கள் கொடுத்த அந்த பொருள்களையே விற்றுப் பிழைக்குமாறு கட்டளை இட்டாள். (பார்க்க: கோமட்டி)

பூரகாம் - Būragām

காலிங்கி (Kalingi) களின் ஓர் உட்பிரிவு.

புர்க்கெர் - Burger

நீலகிரியில் வாழும் படகரைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொல். ஈழத்தில் புர்க்கெர் என்ற இச்சொல் இந்தியாவில் வழங்கும் ஆங்கிலோ இந்தியர் என்ற சொல்லுக்கு ஒப்பானதான பொருளில் வழங்கப்படுகின்றது.

பர்மியர்: Burmese

பர்மாவில் அரசு மருத்துவப் பணியில் அமர்த்தப்படுவதற்காகச் சில பர்மியர்கள் சென்னையில் மருத்துவ மாணவர்களாகப் பயிற்சி பெற்று வருகின்றனர். 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில் கோலார் தங்க வயலில் ஒரே ஒரு பர்மியன் பணியில் இருந்ததாகப் பதியப்பட்டுள்ளது. 1886 - இல் பர்மா ஆங்கில ஆட்சியின் கீழ் வந்த நாள் தொடங்கி சென்னை மாநிலத்திலிருந்து பேரளவில் மக்கள் அங்கு சென்று குடியேறியுள்ளனர். பின்வரும் பட்டியல் 1901 முதல் 1905 வரை பர்மாவிற்குக் கப்பலேறிச் சென்றவர்களின் விவரத்தைத் தெரிவிக்கும்:-

1901	... *84,329*
1902	... *80,916*
1903	... *1,00,645*
1904	... *1,27,622*
1905	... *1,24,363*

புசம் - Busam (grain)

தான்யம் எனப் பொருள்படும் இது தேவாங்கர்களின் புற மணக் கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

புசி - Busi (dirt)

தூசி எனப் பொருள்படும் இது முத்ராசர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பயகர - Byagara

பயகர மற்றும் பேகர (**Begara**) என்பன ஹொலையர்களுக்கான வேறு பெயர்கள்.

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

முதல் தொகுதி

முடிந்தது

சொல்லடைவு

தமிழ் — ஆங்கிலம்

அக்சண்டலர்	Akshaṇtala	26
அக்ரகாரத்தார்	Agrahārekala	23
அக்னி	Agni	22
அகசர்	Agasa	20
அகட்டு சர்ண	Akattu Sharna	25
அகத்தியர்	Agastya	22
அகத்துள்ளவர்	Akattualavar	26
அகமதி	Ahmedi	23
அகமுடையார்	Agamudaiyan	7
அகர்வால்	Agarwāl	20
அகரு அல்லது அவரு	Agaru	20
அகிர்	Ahir	23
அஙகாரகுடு (செவ்வாய்க் கிரகம்)	Angārakudu	60
அச்சரப்பாக்கம் செட்டி	Acharapākam Chetti	2
அச்சன்	Achan	1
அச்சுத் தாலி	Acchu Tāli	1
அச்சுவார்	Acchuvāru	1
அச்சுவேளாளர்	Acchu Vellāla	1
அசிலி	Asili	80
அசுவம்	Asvo (horse)	80
அஞ்சு நாள்	Anju Nāl (five days)	60
அஞ்ஜ	Anja	60
அட்டிக் கஙகணம்	Attikankana (Cotton marriage thread)	81
அடகரர் அல்லது ஹடகரர்	Atagara or Hatagara	80
அடபடவா	Adapadava (Man of Wallet)	2
அடவி	Adavi	3

அடவியர்	Adaviyar	3
அடாகு	Addāku (Bauhinia racemosa)	3
அடாபு சிங்கர்	Addapu Singa	3
அடிக்குண்ணன்	Atikunnan	81
அடிகள்	Adikal (slaves and servants)	4
அடிச்சன்	Adichchan	4
அடிமிட்டம்	Adimittam	5
அடியான்	Adiyān	6
அடியோடி	Adiyōdi	6
அடுத்தோன்	Aduttōn	7
அண்டலவர்	Antalavar	61
அண்டே (பானை)	Andē	56
அண்டே ரவுத்தர்	Andēraut	56
அண்ணா	Anna (brother)	60
அண்ணாவி	Annāvi	61
அத்தி	Āththi (Ficus glomerata)	80
அதிகாரி	Adhigāri	3
அந்தர்சனம்	Antarjanam	61
அந்தரர் (பந்தல்)	Andara	56
அந்தராளர்	Antarāla	61
அப்பா	Appa	64
அபிசேகர்	Abhishēka	1
அபொட்டர்	Apoto	64
அம்பட்டர்	Ambattan	40
அம்பட்டர் (திருவாங்கரைச் சேர்ந்த)	Ambattans of Travancore	51
அம்பலக்காரர்	Ambalakkāran	32
அம்பலவாசி	Ambalavāsi	36
அம்பிகா	Ambiga	55
அம்போசல (தாமரை)	Ambojala	55
அம்மா	Amma	55
அம்முக்குவன்	Ammukkuvan	55
அமராவதியவாரு	Amarāvatiyavaru	32
அய்யரகுலர்	Aiyarakula	24

அய்யனார்	Aiyanar	24
அய்யா	Aiya	23
அய்வது குலத்தவரு	Aivattukuladavaru	23
அயோத்தியர்	Ayōdhya (Oudh)	82
அர்ச்சகர்	Archaka	72
அர்ளி	Arli	75
அர்ஸ் அல்லது ராசபிண்டே	Arasu or Rājapinde	70
அரகலர்	Arakala	69
அரச்சினர்	Arashina	70
அரணை	Arane	70
அரதி	Arati	71
அரநாடன்	Arnādan	69
அரயன்	Arayan	72
அரவன்	Aravan	72
அரவா	Arava	71
அரிகலர்	Arigala	75
அரிசி	Arisi	75
அருவர்	Aruva	76
அரெ	Are (Bauhinia racemosa)	74
அரேபியர்	Arab	64
அல்லம்	Allam	31
அல்லிக்குலம்	Allikulam	31
அலகி	Alagi	26
அலிகெ	Alige (Druam)	31
அவரு	Avaru	81
அவிசர்	Avisa (Sesbania grandiflora)	82
அவிரி	Aviri (Indigofera tinctoria)	81
ஆலவன்	Alvan	26
அளிய	Alia	30
அளிய சந்தானம்	Aliya Santanam	31
அறிகுறவன்	Arikuravan	75
அறுத்துக் கட்டாதார்	Aruththukattātha	76
அறுபத்திநாலு தலைக்கட்டு	Arupattanālu Taleikatt	76

அறுபது கட்சியர்	Arupathu Katchi	76
அன்சு (ஓரம்)	Anchu	55
அன்னம்	Annam (cooked rice)	61
அனசா (இணைப்புப் பூண்)	Anasa	55
அனபர் கொள்ளு	Anapa	55
அனுப்பர்	Annupan	62
அனுமல	Anumala (Dolichos Lablab)	62
அனுலோம	Anuloma	61
அஸ்டலோகி	Astalohi	79
அஸ்டாச்சரத்தார்	Ashtākshari	79
அஸ்திக் குறிச்சி	Ashtikurisri	80
ஆகாசம்	Akasam	25
ஆகுலர்	Akula	26
ஆச்சாரி	Āchāri	2
ஆசாடியர்	Āsādi	78
ஆசாரி	Āsāri	78
ஆசான்	Āsan (teacher)	78
ஆசுபாணி	Āsupāni	80
ஆடபாபா	Ādapāpa	2
ஆடும்பாத்திரம்	Atumpātram	81
ஆண்டி	Andi	56
ஆண்டினியர்	Andinia	59
ஆண்டுரார்	Andurān	59
ஆத்தங்கரை	Attangarai (river bank)	81
ஆத்தா	Ātta (mother)	81
ஆத்ரேயர்	Ātreya	81
ஆதி	Ādi (Primative or original)	4
ஆதிசைவர்	Ādisaivar	5
ஆதித்திய வாரத்தர்	Āditya Vārada	6
ஆயர்	Ayar (Cow-herd)	82
ஆரத்தி	Arathi	71
ஆரம்புகட்டி	Arambukatti	69
ஆராத்தியர்	Āradhya	64
ஆரி	Ari	74

ஆரி	Āri	75
ஆரியர்	Āriyar	75
ஆரியர்	Ārya	78
ஆரியூர்	Āriyur	75
ஆரீ	Ārē	72
ஆருத்ரா	Arudra (lady-bird)	75
ஆல்பினோ	Albino	27
ஆல	Ala	26
ஆவு	Avu (snake)	82
ஆவுலர்	Avula (cow)	82
ஆழ்வார்	Alvar	31
ஆழாதி	Azhāti	82
ஆன்வல்லூர்	Aunvallur (Possessors of Cattle)	81
ஆனை	Anē (elephant)	60
ஐந்நூற்றான்	Anjuttān (men of the five hundred)	60
பக்ட	Bakta	286
பக்டர்	Bakta	172
பகடர்	(Bagada)	165
பகுசாகரர்	(Bahusāgara)	167
பங்கா	Banka (gum)	191
பங்காரு முக்கரர்	Bangēru Mugkara (gold nose ornament)	190
பசரி	Basari (fig tree)	225
பசவி	Basavi	225
பசிறுவோகரு	Basruvogaru (basru belly)	225
பஞ்சாரியர்	Banjāri	191
பட்கலி	Bhatkali	287
பட்டா	Bhatta	287
பட்ராசு	Bhatrazu	287
பட்லு	Batlu (cub)	226
படகர்	Badaga	82
படகி	Badagi	160

பண்ட	Banda	189
பண்டர்	Bant	191
பண்டாரி	Bandāri (Dodondaca viscosa)	189
பண்டாரி	Bhandāri	286
பண்டி	Bandi (cart)	190
பண்டெ	Bhande	286
பண்ணக்காரர்	Bannagara (a painter)	191
பண்ணான்	Bannān	191
பணசிகர்	Banajika (vanik, tradesman)	189
பணியர்	Baniya	190
பதோயி	Badhōyi	160
பயகர	Bayagara	505
பர்தேசக்கார்	Bardēshkar (people of twelve countries)	222
பர்மியர்	Burmese	504
பர்ரெல்லு	Barrellu (buffaloes)	224
பரத்துவாஜர்	Bharadwaja	286
பல்லி	Balli (Lizard)	188
பல்லெம்	Ballem (spear)	188
பலநொள்ளு	Balanollu	173
பலிசர்	Balija	173
பவுரி	Bauri	226
பளேக்காரர்	Balēgara (bangle man)	173
பன்னி அல்லது வன்னி	Banni or Vanni (Prosopis spicigera)	191
பாக்	Bhāg (tiger)	286
பாகவதட்டுலு	Bhāgavatulu	286
பாகுடர்	Bākuta	173
பாசந்திரியர்	Bājantri	172
பாசலர்	Bāsala	224

பாசவ கோல்லர்	Bāsava Golla	225
பாசிய கொராஞு	Basiya Korona	225
பாடியா	Bhātia	286
பாண்டேகாரர்	Bāndēkāra	190
பாத்தாளர்	Baththālar	225
பாயிபுவொ	Bhāyipuo	296
பாரங் சோதிய	Bārang Jhodia	222
பாரிகி	Bāriki	223
பாரிகெ	Bārike	224
பாலசந்தோசர்	Balasantōsha	173
பாலு	Bālu (bear)	188
பாலொலிகர்	Bālolika	188
பாவாஜி	Bāvāji	226
பாவுரியர்	Bāvuri	226
பானை	Bāna (big Pot)	189
பிங்கியர்	Bingi	306
பிடாரு	Bidāru (wanderers)	307
பிண்தொல்லு	Bindhollu (brass water - pot)	322
பிந்தாணி	Bindhani (workman)	306
பிரகஸ்பதி வராத்தர்	Brishaspati Vārada	500
பிராமணர்	Brāhman	342
பிராமணி	Brāhmani	500
பிரிஞ்சாரி	Brinjāri	500
பில்பத்ரி	Bilpathri (beal: Aegle Marmelos)	306
பில்லவர்	Billava	312
பில்வ	Bilva (Jackal)	322
பிள்ளை கவு	Billai kavu (cat eaters)	312
பிளிமக்காரர்	Bilimagga	307
பிஜு	Binu (Roll of wollen thread)	322
பிஸ்வாலொ	Biswalo	324
பிஸ்ஸொயி	Bissoyi	323
பீமர்	Bhima	296
பீஜம்	Bijan (seed)	306

புக்க	Bukka	503
புசம்	Busam (grain)	505
புசி	Busi (dirt)	505
புடுபுடுக்கே	Budubudikē	500
புர்க்கெர்	Burger	504
புரி	Bhuri	306
புஜ்ஜினிகியோரு	Bujjinigiyoru (jewel box)	503
பூதியன்னய	Bhūtiannaya (ashes)	307
பூமஞ்சி	Bhūmanchi (good earth)	304
பூமி தொம்பிதி	Bhūmi Dhompthi	304
பூமியர்	(Bhūmia)	305
பூமி ராசுலு	Bhūmi Rāzulu (kings of the earth)	305
பூரகாம்	Būragām	504
பூ ராசு	Bhū (earth) Rāzu	304
பூ வைசியர்	Bhū Vaisya (earth vaisya)	304
பெங்கிரி	Bengri (frog)	270
பெட்ட	Betta (hill)	285
பெண்டே	Bende (Hibiscus esculcntus)	270
பெண்ணெய்	Benne (butter)	271
பெரலைக் கொடுவர்	Beralakoduva	272
பெரிகெ	Berike	280
பெல்லத்தன்னய	Bēllathannaya (Jaggery)	269
பெல்லபு	Bellapu (Jaggery: palm-sugar)	268
பெல்லரா	Bellara	268
பெல்லாளர்	Ballāla or Bellāla	188
பெள்ளி	Belli	269
பெள்ளே	Bellē (White)	269
பெனயிட்டொ	Benayito	270
பெனிசெ	Benise (flint	

	stone)	271
பெனியர்	Benia	270
பெஸ்தர்	Bestha	280
பெஜ்ஜோ	Bejjo	268
பேகரர்	Bēgara	268
பேடர்	Bēdar	268
பேடர் அல்லது போயர்	Bēdar or Bōya	232
பேபாரி	Bēpāri	271
பேரி செட்டி	Beri Chetti	272
பேலதர்	Bēlata (Feronia elephantum - wood-apple)	268
பேவினர்	Bevina	285
பேளு	Bēlu (Feronica elephantum)	269
பேஸ்யா	Bēsyā (a prostitute)	285
பேஹரர்	Bēhara	268
பைசியர்	Baisa	172
பைத்த கம்மரவர்	Baita Kammara	172
பைத்தியர்	Baidya	168
பைதியோர்	Boidyo	327
பைநேடு	Bainēdu	168
பைய்பாரி	Boipāri	327
பைராகியர்	Bairāgi	168
பைஷ்ணபோ	Boishnobo	327
பொக்குல	Boggula (charcoal)	326
பொக்ஷர்	Boksha	327
பொகொரர்	Bohora	326
பொங்கர்	Bonka	331
பொசந்தியர்	Bosantia	336
பொன்ஜோ	Bhonjo	304
பொட்டதர்	Bottada	338
பொட்டுக் கட்டோரு	Bottu Kattōru (those who tie the bottu)	341
பொடொ	Bodo (big)	325

பொண்ட	Bonda	329
பொத்து	Boddu (navel)	325
பொந்தாரியர்	Bhondāri	296
பொந்தியர்	Bondia	329
பொந்திலியர்	Bondili	329
பொந்துக்கர்	Bonthuk	331
பொம்படை	Bombadi (a fish)	329
பொம்மலி	Bommali	329
பொம்மை	Bomma (a doll)	329
பொலாசி	Bolāsi	328
பொலிய	Bholia (wild dog)	296
பொலொடியர்	Bolodia	328
பொனிய	Bonia	331
போகம்	Bōgam	325
போகர்லு	Bōgarlu	326
போகாரர்	Bōgāra	325
போச்சு	Bochchu (hairs)	324
போட தாசரி	Bōda Dāsari (bald-headed medicant)	324
போத	Boda	324
போயர் (பார்க்க: போடர்)	Bōya (See: Bēdar)	342
போயன்	Bōyan	342
போயி (பார்க்க: பெஸ்தர்)	Bōyi (See: Bestha)	342
போரி	Boori (cake)	336
போவி	Bōvi	342

சொல்லடைவு

ஆங்கிலம் — தமிழ்

Abhishēka	அபிசேகர்	1
Acchu Tāli	அச்சுத் தாலி	1
Acchuvāru	அச்சுவார்	1
Acchu Vellāla	அச்சுவேளாளர்	1
Achan	அச்சன்	1
Acharapākam Chetti	அச்சரப்பாக்கம் செட்டி	2
Āchāri	ஆச்சாரி	2
Adapadava (Man of Wallet)	அடபடவா	2
Ādapāpa	ஆடபாபா	2
Adavi	அடவி	3
Adaviyar	அடவியர்	3
Addāku (Bauhinia racemosa)	அடாகு	3
Addapu Singa	அடாபு சிங்கர்	3
Adhigāri	அதிகாரி	3
Ādi (Primative or original)	ஆதி	4
Adichchan	அடிச்சன்	4
Adikal (slaves and servants)	அடிகள்	4
Adimittam	அடிமிட்டம்	5
Ādisaivar	ஆதிசைவர்	5
Āditya Vārada	ஆதித்திய வாரத்தர்	6
Adiyān	அடியான்	6
Adiyōdi	அடியோடி	6
Aduttōn	அடுத்தோன்	7
Agamudaiyan	அகமுடையார்	7
Agaru	அகரு அல்லது அவரு	20
Agarwāl	அகர்வால்	20
Agasa	அகசர்	20

Agastya	அகத்தியர்	22
Agni	அக்னி	22
Agrahārekala	அக்ரகாரத்தார்	23
Ahir	அகிர்	23
Ahmedi	அகமது	23
Aivattukuladavaru	அய்வது குலத்தவரு	23
Aiya	அய்யா	23
Aiyanar	அய்யனார்	24
Aiyarakula	அய்யரகுலர்	24
Akasam	ஆகாசம்	25
Akattu Sharna	அகட்டு சர்ன	25
Akattualavar	அகத்துள்ளவர்	26
Akshantala	அக்சண்டலர்	26
Akula	ஆகுலர்	26
Ala	ஆல	26
Alagi	அலகி	26
Alvan	அளவன்	26
Albino	ஆல்பினோ	27
Alia	அளிய	30
Alige (Druam)	அலிகெ	31
Aliya Santanam	அளிய சந்தானம்	31
Allam	அல்லம்	31
Allikulam	அல்லிக்குலம்	31
Alvar	ஆழ்வார்	31
Amarāvatiyavaru	அமராவதியவாரு	32
Ambalakkāran	அம்பலக்காரர்	32
Ambalavāsi	அம்பலவாசி	36
Ambattan	அம்பட்டர்	40
Ambattans of Travancore	அம்பட்டர் (திருவாங்கூரைச் சேர்ந்த)	51
Ambiga	அம்பிகா	55
Ambojala	அம்போசல (தாமரை)	55
Amma	அம்மா	55
Ammukkuvan	அம்முக்குவன்	55
Anapa	அனபர் (கொள்ளு)	55
Anasa	அனசா (கிளைப்புப் பூண்)	55
Anchu	அன்சு (ஓரம்)	55

Andara	அந்தரர் (பந்தல்)	56
Andē	அண்டே (பானை)	56
Andēraut	அண்டே ரவுத்தர்	56
Andi	ஆண்டி	56
Andinia	ஆண்டினியர்	59
Andurān	ஆண்டுரார்	59
Anē (elephant)	ஆனை	60
Angārakudu	அங்காரகுடு (செவ்வாய்க் கிரகம்)	60
Anja	அஞ்ஜ	60
Anju Nāl (five days)	அஞ்சு நாள்	60
Anjuttān (men of the five hundred)	ஐந்நூற்றான்	60
Anna (brother)	அண்ணா	60
Annam (cooked rice)	அன்னம்	61
Annāvi	அண்ணாவி	61
Antalavar	அண்டலவர்	61
Antarāla	அந்தராளர்	61
Antarjanam	அந்தர்சனம்	61
Anuloma	அனுலோம	61
Anumala (Dolichos Lablab)	அனுமல	62
Annupan	அனுப்பர்	62
Apoto	அபொட்டர்	64
Appa	அப்பா	64
Arab	அரேபியர்	64
Aradhya	ஆராத்தியர்	64
Arakala	அரகலர்	69
Arambukatti	ஆரம்புகட்டி	69
Arnādan	அரநாடன்	69
Arane	அரணை	70
Arashina	அரச்சினர்	70
Arasu or Rājapinde	அர்ஸ் அல்லது ராசபிண்டே	70
Ārathi	ஆரத்தி	71
Arati	அரதி	71
Arava	அரவா	71
Aravan	அரவன்	72

Arayan	அரயன்	72
A̱rchaka	அர்ச்சகர்	72
Ārē	ஆரி	72
Are (Bauhinia racemosa)	அரெ	74
A̱ri	ஆரி	74
Āri	ஆரி	75
Arigala	அரிகலர்	75
Arikuravan	அறிகிறவன்	75
A̱risi	அரிசி	75
Āriyar	ஆரியர்	75
Ariyur	ஆரியூர்	75
Arli	அர்ளி	75
Arudra (lady-bird)	ஆருத்ரா	75
Arupathu Katchi	அறுபது கட்சியர்	76
Arupattanālu Taleikatt	அறுபத்திநாலு தலைக்கட்டு	76
Aruththukattātha	அறுத்துக் கட்டாதார்	76
A̱ruva	அருவர்	76
A̱rya	ஆரியர்	78
Āsādi	ஆசாடியர்	78
Āsan (teacher)	ஆசான்	78
Āsāri	ஆசாரி	78
Ashtākshari	அஸ்டாச்சரத்தார்	79
Astalohi	அஸ்டலோகி	79
Ashtikurisri	அஸ்திக் குறிச்சி	80
A̱sili	அசிலி	80
Āsupāni	ஆசுபாணி	80
Asvo (horse)	அசுவம்	80
A̱tagara or Hatagara	அடகரர் அல்லது ஹடகரர்	80
Aththi (Ficus glomerata)	அத்தி	80
A̱tikunnan	அடிக்குண்ணன்	81
A̱treya	ஆத்ரேயர்	81
Ātta (mother)	ஆத்தா	81
Āttangarai (river bank)	ஆத்தங்கரை	81

Attikankana (Cotton marriage thread)	அட்டிக் கங்கணம்	81
Atumpātram	ஆடும்பாத்திரம்	81
Aunvallur (Possessors of Cattle)	ஆன்வல்லூர்	81
Avaru	அவரு	81
Aviri (Indigofera tinctoria)	அவிரி	81
Avisa (Sesbania grandiflora)	அவிசர்	82
Avu (snake)	ஆவு	82
Āvula (cow)	ஆவுலர்	82
Ayar (Cow-herd)	ஆயர்	82
Ayōdhya (Oudh)	அயோத்தியர்	82
Āzhāti	ஆழாதி	82
Badaga	படகர்	82
Badagi	படகி	160
Badhōyi	பதோயி	160
(Bagada)	பகடர்	165
(Bahusāgara)	பகுசாகரர்	167
Baidya	பைத்தியர்	168
Bainēdu	பைநேடு	168
Bairāgi	பைராகியர்	168
Baisa	பைசியர்	172
Baita Kammara	பைத்த கம்மரவர்	172
Bājantri	பாசந்திரியர்	172
Bakta	பக்டர்	172
Bākuta	பாகுடர்	173
Balanollu	பலநொள்ளு	173
Balasantōsha	பாலசந்தோசர்	173
Balēgara (bangle man)	பளேக்காரர்	173
Balija	பலிசர்	173
Ballāla or Bellāla	பெல்லாளர்	188
Ballem (spear)	பல்லெம்	188
Balli (Lizard)	பல்லி	188

Bālolika	பாலொலிகர்	188
Bālu (bear)	பாலு	188
Bāna (big Pot)	பானை	189
Banajika (vanik, tradesman)	பணசிகர்	189
Banda	பண்ட	189
Bandāri (Dodondaca viscosa)	பண்டாரி	189
Bāndēkāra	பாண்டேகாரர்	190
Bandi (cart)	பண்டி	190
Bangēru Mugkara (gold nose ornament)	பங்காரு முக்கரர்	190
Baniya	பனியர்	190
Banjāri	பஞ்சாரியர்	191
Banka (gum)	பங்கா	191
Bannagara (a painter)	பண்ணக்காரர்	191
Bannān	பண்ணான்	191
Banni or Vanni (Prosopis spicigera)	பன்னி அல்லது வன்னி	191
Bant	பண்டர்	191
Bārang Jhodia	பாரங் சோதிய	222
Bardēshkar (people of twelve countries)	பர்தேசக்கார்	222
Bāriki	பாரிகி	223
Bārike	பாரிகெ	224
Barrellu (buffaloes)	பர்ரெல்லு	224
Bāsala	பாசலர்	224
Basari (fig tree)	பசரி	225
Bāsava Golla	பாசவ கோல்லர்	225
Basavi	பசவி	225
Basiya Korona	பாசிய கொரானு	225
Basruvogaru (basru belly)	பசிறுவோதரு	225
Baththālar	பாத்தாளர்	225
Batlu (cub)	பட்லு	226
Bauri	பவுரி	226

Bāvāji	பாவாஜி	226
Bāvuri	பாவுரியர்	226
Bēdar or Bōya	பேடர் அல்லது போயர்	232
Bēdar	பேடர்	268
Bēgara	பேகரர்	268
Bēhara	பேஹரர்	268
Bejjo	பெஜ்ஜொ	268
Bēlata (Feronia elephantum - wood-apple)	பேலதர்	268
Bellapu (Jaggery: palm-sugar)	பெல்லபு	268
Bellara	பெல்லரா	268
Bēllathannaya (Jaggery)	பெல்லத்தன்னய	269
Bellē (White)	பெள்ளே	269
Belli	பெள்ளி	269
Bēlu (Feronica elephantum)	பேளு	269
Benayito	பெனயிட்டொ	270
Bende (Hibiscus esculentus)	பெண்டே	270
Bengri (frog)	பெங்கிரி	270
Benia	பெனியர்	270
Benise (flint stone)	பெனிசெ	271
Benne (butter)	பெண்ணெய்	271
Bēpāri	பேபாரி	271
Beralakoduva	பெரலைக் கொடுவர்	272
Beri Chetti	பேரி செட்டி	272
Berike	பெரிகெ	280
Bestha	பெஸ்தர்	280
Bēsyā (a prostitute)	பேஸ்யா	285
Betta (hill)	பெட்ட	285
Bevina	பேவினர்	285
Bhāg (tiger)	பாக்	286
Bhāgavatulu	பாகவதட்டுலு	286
Bakta	பக்ட	286

Bhandāri	பண்டாரி	286
Bhānde	பண்டெ	286
Bharadwāja	பரத்துவாஜர்	286
Bhātia	பாடியா	286
Bhatta	பட்டா	287
Bhatkali	பட்கலி	287
Bhatrazu	பட்ராசு	287
Bhāyipuo	பாயிபுவொ	296
Bhima	பீமர்	296
Bholia (wild dog)	பொலிய	296
Bhondāri	பொந்தாரியர்	296
Bhonjo	பொன்ஜொ	304
Bhūmanchi (good earth)	பூமஞ்சி	304
Bhū (earth) Razu	பூ ராசு	304
Bhū Vaisya (earth vaisya)	பூ வைசியர்	304
Bhūmi Dhompthi	பூமி தொம்பிதி	304
Bhūmi Razulu (kings of the earth)	பூமி ராசுலு	305
(Bhūmia)	பூமியர்	305
Bhuri	புரி	306
Bijan (seed)	பீஜம்	306
Bilpathri (beal: Aegie Marmelos)	பில்பத்ரி	306
Bindhani (workman)	பிந்தானி	306
Bingi	பிங்கியர்	306
Bhūtiannaya (ashes)	பூதியன்னய	307
Bidāru (wanderers)	பிடாரு	307
Bilimagga	பிளிமக்காரர்	307
Billai kavu (cat eaters)	பிள்ளை கவு	312
Billava	பில்லவர்	312
Bilva (Jackal)	பில்வ	322
Bindhollu (brass water - pot)	பிண்டொல்லு	322
Binu (Roll of	பினு	

wollen thread)		322
Bissoyi	பிஸ்ஸொயி	323
Biswalo	பிஸ்வாலொ	324
Bochchu (hairs)	போச்சு	324
Boda	போத	324
Bōda Dāsari (bald-headed medicant)	போட தாசரி	324
Boddu (navel)	பொத்து	325
Bodo (big)	பொடொ	325
Bōgam	போகம்	325
Bōgāra	போகாரர்	325
Bōgarlu	போகர்லு	326
Boggula (charcoal)	பொக்குல	326
Bohora	பொகொரர்	326
Boidyo	பைதியொர்	327
Boipāri	பைய்பாரி	327
Boishnobo	பைஷ்ணபொ	327
Boksha	பொக்ஷர்	327
Bolāsi	பொலாசி	328
Bolodia	பொலொடியர்	328
Bombadi (a fish)	பொம்படை	329
Bomma (a doll)	பொம்மை	329
Bommali	பொம்மலி	329
Bonda	பொண்ட	329
Bondia	பொந்தியர்	329
Bondili	பொந்திலியர்	329
Bonia	பொனிய	331
Bonka	பொங்கர்	331
Bonthuk	பொந்துக்கர்	331
Boori (cake)	போரி	336
Bosantia	பொசந்தியர்	336
Bottada	பொட்டதர்	338
Bottu Kattōru (those who tie the bottu)	பொட்டுக் கட்டோரு	341
Bōvi	போவி	342

Bōya (See:Bedar)	போயர் (பார்க்க: போடர்)	342
Bōyan	போயன்	342
Bōyi (See: Bestha)	போயி (பார்க்க: பெஸ்தர்)	342
Brāhman	பிராமணர்	342
Brāhmani	பிராமணி	500
Brishaspati Vārada	பிரகஸ்பதி வராத்தர்	500
Brinjāri	பிரிஞ்சாரி	500
Budubudikē	புடுபுடுக்கே	500
Bujjinigiyōru (jewel box)	புஜ்ஜினிகியோரு	503
Bukka	புக்க	503
Būragām	பூரகாம்	504
Burger	புர்க்கெர்	504
Burmese	பர்மியர்	504
Busam (grain)	புசம்	505
Busi (dirt)	புசி	505
Bayagara	பயகர	505

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005
அண்மைவெளியீடுகள்

காஞ்சி கோயில்கள்	90.00
பார்புகழும் பால்சங்கு	40.00
தன்வந்திரி வைத்தியக்கும்மி	50.00
தஞ்சைக் கூத்து மரபுகள்	50.00
தஞ்சைமராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி - 3	100.00
வீட்டு மருத்துவம்	44.00
தொண்டைமான் செப்பேடுகள்	70.00
தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு	120.00
சாந்தாதி அசுவமகம்	240.00
அறிவியல் களஞ்சியம் தொகுதி - 14	700.00
தமிழில் சொல்லாக்கம்	130.00
பழவேற்காடு 1816 இல் (மெக்கன்சியின் சுவடி - பதிப்பாய்வு)	125.00
தமிழ்நாவல்களில் உளச் சித்திரிப்பு	130.00
தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் தொகுதி - 2	160.00
தமிழக அறிவியல் வரலாறு	60.00
இசைத்தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி - 1	60.00
உலக நாடுகளில் தமிழர் பண்பாடு	50.00
108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடுகளும் அமைவுகளும்	50.00
பாவேந்தரின் மொழியுணர்வும் மொழிநடையும்	35.00
தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை	140.00

தொடர்பு முகவரி :
இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)
தஞ்சாவூர் - 613. 001. தொ. பே. 04362 - 274581